அந்த ஏழை பங்காளர் எந்த முறையிலே தன்னுடைய வாழ்க்கையை நடத்தினார்கள் என்பதை நான் கூறுவதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஜூலைத் திங்கள் 15-ந் தேதி 1903-ல் விருதுநகரிலே தோன்றினார்கள். விருதுநகரிலுள்ள நாடார் வித்தியாலயா ஹைஸ்கூலிலே கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள். 1920-லே விடுதலை இயக்கத்திலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்கள். அதற்குப் பிற்பாடு இந்த நாட்டின் விடுதலை இயக்கத்திலே தொடர்ந்து, தீவிரமாகப் பங்கேற்று பணியாற்றினார்களென்பது நாடறிந்த உண்மை 25 ஆண்டுகாலமாக இந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்திலே தீவிரமாகப் பங்குகொண்டு 3,000 நாட்களுக்கு மேலாகச் சிறைச்சாலையிலே வாடி வதங்கியிருக்கிறார்கள் அன்புத் தலைவர் காமராஜர்.

அது மட்டுமல்ல, 1940 முதல் 1953 வரை, தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகச் சீரோடும் சிறப்போடும் பணியாற்றி வந்தார்கள். முதல் தடவையாக 1954 ஏப்ரலிலே அவர்கள், முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அன்றிருந்த அரசியல் சூழ்நிலையிலே, திறனோடும் ஆற்றலோடும் தமிழக முதலமைச்சராகத் தொடர்ந்து பணியாற்றினார்கள். அவருடைய ஆட்சி தொடர்ந்து சிறப்பாக இந்த நாட்டிலே விளங்கியது. அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் ஒர்க்கிங் கமிட்டி மெம்பராக அல்லது அழைப்பாளராகத் தொடர்ந்து இதுகாறும் இருந்து கொண்டிருந்தார்கள் என்பது நாடறிந்த உண்மை.

1937-லே அவர்கள் விருதுநகரிலேயிருந்து மெட்ராஸ் லெஜிஸ்லேடிவ் அசெம்பிளிக்கு எதிர்ப்பின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள், அதேமாதிரி, விருதுநகர் முனிசிபல் கவுன்சிலின் தலைவராக எதிர்ப்பின்றி 1941-லே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிற்பாடு 1944-லே மெட்ராஸ் லெஜிஸ்லேடிவ் அசெம்பிளியில் அங்கத்தின

ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 1946-லே அவர்கள் கான்ஸ்டிட்டுவண்ட் அசெம்பிளிக்கு மெம்பராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

அதற்குப் பிற்பாடு 1951-லே பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார்கள். 1951-லே பாராளுமன்ற உறுப்பினராக இருந்த நேரத்திலே அதனைத் தொடர்ந்து முதலமைச்சராவதற்காகத் தன்னுடைய பொறுப்பினை இராஜினாமாச் செய்தார்கள். 1954-லே மறுமுறையும் அசெம்பிளி தேர்தலிலே வெற்றி பெற்று, 1957-லும், 1962-லும் அவர்கள் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டு முதலமைச்சராக இருந்தார்கள். ஒன்பது வருஷகாலமாக அவர்கள் தமிழ் நாட்டின் முதலமைச்சராகத் தொடர்ந்து பணியாற்றினார்கள் என்று சொன்னால் தமிழ் மக்கள் அவர்பால் காட்டிய அன்பும், ஆதரவும், பற்றும், பாசமும் அதற்கு ஒரு சான்றாக இருந்தது என்று சொன்னால், அது மிகையாகாது. அதிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டு வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய காலம் காமராஜர் காலம் என்று சொன்னால் அது மிகையாகாது என்று கருதுகிறேன்.

அவர்கள் நல்ல ஆட்சியும் ஏழைகளின் முன்னேற்றத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்கள். அவர் மேட்டுக் குடியிலே தோன்றியவர் அல்ல; சாதாரணக் குடும்பத்திலே தோன்றி, பட்டப் படிப்பு இல்லாத சாதாரண மனிதராக இருந்தார். உழைப்பினால் உயர்ந்த உத்தமர். அதிலும் குறிப்பாகப் பிற்பட்டோர் சமூகத்திலிருந்து வந்து தமிழ் நாட்டினுடைய முதலமைச்சராக இருந்திருக்கிறார் அந்தக் காலத்திலே என்று சொன்னால், அவருடைய உழைப்பு எவ்வளவு சிறப்பாக இருந்தது என்பது நன்கு விளங்கும்—அதனை நான் எடுத்துக் கூறத் தேவையில்லை. பொது வாழ்க்கையிலே அவர்கள் காட்டிய நெறிமுறைகள் எல்லாம் எப்படியிருந்தன வென்பதை நாமெல்லோரும் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். காந்தீயப் பாதையிலே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த ஒரு மாமேதை அவர் என்பதை நாமெல்லோரும் உணர்ந்திருக்கிறோம். காந்தீயம்தான் அவர்களின் வாழ்க்கை வேதமாக இருந்தது. நேருஜி அவர்கள் அவருடைய அரசியல் ஆசானாக இருந்திருக்கிறார் என்று கருது



கிறேன். ஜனநாயக சோஷலிசத்தை இந்த நாட்டிலே கொண்டு வந்து, ஏழ்மையை அகற்றுவதற்கும், பிற்பட்டோர் முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்த தலைவர் காமராஜர் ஆவார்கள்.

அவர், 1967-லே தோல்வி கண்டார்கள். 1967-லே தோல்வி கண்ட நேரத்திலே அவர் துவண்டுவிடவில்லை. தான் பதவியில் இல்லாமலிருந்தாலும் இந்த நாட்டு மக்களுக்குச் சேவை செய்ய முடியும் என்ற வகையிலே அரிய சேவையினை அவர்கள் செய்து காட்டினார்கள். அதற்குப் பிற்பாடு 1969-லே பாராளுமன்றத்திற்கு நாகர்கோவிலில் இடைத் தேர்தல் வந்தது. அதிலே அவர் வெற்றி வாகை சூடினார். பிறகு, 1971-லும் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த ஸ்தாபனக் காங்கிரஸை வழிநடத்திச் சென்றார்கள்.

நாட்டிலேயிருக்கிற பல்வேறு பிரச்னைகளுக்கெல்லாம் அவர்கள் நல்ல தீர்வினைக் காட்டி வந்தார்கள். குறிப்பாக, இந்திய அரசியலிலே நேருஜிக்குப் பிறகு யார் என்ற கேள்வி எழுந்த நேரத்திலே அதற்கு ஒரு நல்ல முடிவினைக் காட்டித் தந்த பெருமை காமராஜரைச் சாரும் என்று கருதுகிறேன். 1966-67-லே இன்று பிரதம அமைச்சராக இருக்கிற திருமதி இந்திரா காந்தி அவர்களைப் பிரதமராக்கியதும் அவருடைய பொறுப்பு என்பதை நாமெல்லோரும் உணர்ந்திருக்கின்றோம்.

அரசியலிலே நல்ல தூய்மையான வழியினைக் காட்டி நல்ல பாதையிலே நடத்திச் சென்று, அரசியலுக்கு ஒரு இலக்கணமாக இருந்தார். அவர் ஒரு நல்ல சித்தாந்தமாக வாழ்ந்தார். அவர், வாழ்நாள் பூராவும் பொதுமக்களுக்காக வாழ்ந்தார். அந்தப் பொது வாழ்க்கையினை நாமெல்லோரும் நிறைவுபடுத்துவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்றே கருதுகிறேன்.

நமது மதிப்பிற்குரிய தலைவர் அவர்கள் 9 வருஷ காலமாக, தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தார். அவருடைய உருவப் படத்தினை இந்தச் சட்டமன்றத்திலே வைக்க நம்முடைய தமிழ் நாட்டு அரசாங்கம், அதிலும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வேண்டிய ஏற்பாட்டினைச் செய்வார்கள் என்று நான் கருதுகிறேன். தமிழ் நாட்டு அரசாங்கம் அவருக்குச் செய்த மரியாதையையும், கிண்டியிலே அவருக்கு நினைவாலயம் எழுப்ப

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1975 அக்டோபர் 22

இருப்பதையும், நான் மனப்பூர்வமாக ஆதரித்துப் பாராட்டுகிறேன். அத்தகைய பெரிய மனிதருக்கு நீங்கள் காட்டிய எல்லா அன்பிற்கும் நாங்களெல்லோரும் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சியின் ஊழியர்களான எங்களை நல்ல முறையிலே வழிநடத்திச் சென்ற பெருமை காமராஜரைச் சாரும். அவருடைய பாதையிலே இனியும் நடந்து செல்வோம் என்ற உறுதியைச் சொல்லி, அந்தத் தலைவருக்கு அஞ்சலி செலுத்தும் முகத்தான், எங்களுடைய கருத்துக்களைக் கூறி, விரைவிலே அவருடைய உருவப் படத்தினை இந்தச் சட்டமன்றத்திலே வைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டு நான் விடை பெறுகிறேன். வணக்கம்.

* **திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி**: பேரவைத் தலைவரவர்களே, நம்மிடையே இங்கு பணியாற்றி, அமைச்சராகயிருந்து மறைந்து விட்ட நமது பேரன்பிற்குரிய மாண்புமிகு என். வி. என். அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு இந்த அவைமுன் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தின்மீது எங்கள் கட்சியினுடைய சார்பிலே எங்களுடைய அனுதாபத்தையும் இங்கே தெரிவித்துக் கொள்வதற்காக, இங்கே சில வார்த்தைகள் சொல்ல நான் விரும்புகிறேன். அவர் அந்தக் கட்சியிலே சேர்ந்து, அந்தக் கட்சியின் சார்பிலே அரசாங்கத்திலே பதவியிலே அமர்வதற்கு முன்னாலிருந்த காலந்தொட்டு, அவருடன் அவ்வப்பொழுது பேசவும் பழகுவதற்கும் கிடைத்த வாய்ப்பினை அரிய வாய்ப்பாக நான் கருதுகிறேன். அவர் எந்தக் கொள்கைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டாரோ அந்தக் கொள்கையிலே முழு ஈடுபாடும் உறுதியும் கொண்டு சற்றும் சலனம் இல்லாத அளவிலே அவர் தன்னுடைய வாழ்நாளின் ஆரம்ப கட்டத்திலிருந்து கடைசிவரை செயலாற்றி வந்தார் என்பதை நாமெல்லோரும் இந்தச் சந்தர்ப்பத்திலே மறந்துவிடமுடியாது. எந்தக் கொள்கைக்காக அவர் தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டாரோ அந்தக் கொள்கையைப் பரப்புவதற்காக அவர்கள் அல்லும் பகலும் பாடுபட்டார். அந்தக் காலத்திலே அவர் தன்னுடைய சொந்த வசதிகளை எப்பொழுதும் நினைத்துப் பார்ப்பதில்லை. அவர்கள்



1975 அக்டோபர் 22] [திரு சௌடி. எஸ். சுந்தரபாரதி]

(முற்பகல் 10-30)

சொந்த நலன்களுக்காகச் செய்ய வேண்டிய கடமைகளைக்கூட நேரங்களிலே, காலங்களிலே செய்துகொள்வதில்லை; காலத்திலே அருந்தவேண்டிய உணவைக்கூட மறந்து கொள்கைகளைப் பரப்புவதிலே மிகுந்த தீவிரத்தைக் காட்டிவந்தார்கள். அதன் காரணமாகவும், அவர்கள் எந்தக் கொள்கைகளைப் பரப்பிவந்தார்களோ அந்தக் கொள்கைகளை நிறைவேற்றுவதிலேயே தன்னுடைய வாழ்க்கையையே அர்ப்பணித்துக்கொண்டதன் காரணமாகவும் தன்னுடைய உயிரையே அர்ப்பணித்த ஒருவர்; அப்படிப்பட்டவர் நம்மிடையேயிருந்து மறைந்து இருக்கிறார்கள்; எந்தக் கொள்கைகளுக்காக தன்னை ஈடுபடுத்திக்கொண்டு தன்னுடைய வாழ்க்கையையே அதிலே அர்ப்பணித்துக்கொண்டாரோ— அந்தக் கொள்கைகள், லட்சியங்கள் நமக்கு எல்லாம் ஏற்புடையதாக இருந்தாலும்சரி, இல்லாவிட்டாலும்சரி — அந்த லட்சிய வாழ்க்கைக்கு அந்த லட்சியவாதியின் மறைவுக்கு என்னுடைய கட்சியின் சார்பாக அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் ஒல்லியாக இருந்தாலும் உறுதியாக இருந்தார். அவருடைய சொற்கள் மற்றவர்களுடைய மனதைப் புண்படுத்தாமல் இருந்தன, எவ்வாறு அவர் தான் கொண்டிருந்த கருத்துக்களிலே ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார்கள், அந்தக் கொள்கைகளிலே தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்கள் என்பதையெல்லாம் அவருடைய வாழ்க்கை நமக்குக் காட்டுகிறது. அவர் கொண்டிருந்த லட்சியங்களுக்கு, அவர் கொண்டிருந்த கொள்கைகளுக்கு அவர் ஒரு பெரிய கேடயம்போல் விளங்கி வந்தார் என்பதையும் நாம் அறிவோம். அவர் வாழ்க்கையிலே கடைப்பிடித்துவந்த எளிய முறை நாம் எல்லோரும் பின்பற்றவேண்டிய முறை அவருடைய எளிய வாழ்க்கைக்கும் தியாகத் தன்மைக்கும் என்னுடைய கட்சியின் சார்பிலே அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மறைந்துவிட்ட காமராஜர் அவர்களுடைய நினைவுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு அவையின் முன்னவர் கொண்டுவந்திருக்கின்ற தீர்மானத்தின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். தமிழ் நாட்டில் மட்டுமல்ல, அகில இந்தியாவெங்கும்கூட எங்கள் கட்சிக்கும் அவருடைய

[திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி] [1975 அக்டோபர் 22

கொள்கைகளுக்கும் நிறைய கருத்து வேறுபாடுகள் இருந்தன என்பது யாவரும் அறிந்த விஷயம். அதே நேரத்திலே அவர் தன் வாழ்நாளின் ஆரம்ப கட்டத்திலே இந்த தேசத்திற்காக, தேசத்தின் விடுதலைக்காக உண்மையாகப் பாடுபட்டு சிறை சென்றதற்காக— அப்படித் தொண்டாற்றுகின்ற தொண்டாற்றிய எந்தத் தலைவனுக்கும் தொண்டனுக்கும் எங்கள் கட்சி வணக்கத்தையும் அஞ்சலியையும் செலுத்தும் என்பதால்—அந்த அளவிலே ஆரம்ப காலத்திலே உண்மையாக அவர் தேச விடுதலைக்காகப் பாடுபட்டு சிறை சென்றார் என்பதற்காக என்னுடைய அஞ்சலியை இணைத்துக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை நான் முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, அவை முன்னவர் இங்கே கொண்டுவந்திருக்கின்ற இரங்கற் தீர்மானங்களை ஆதரித்து இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன்.

மறைந்த மாண்புமிகு அமைச்சர் திரு. என். வி. என். அவர்கள் நீண்ட காலமாகத் தன்னைப் பொதுவாழ்க்கையிலே ஈடுபடுத்திக் கொண்டவர்கள். அவர்களுடைய பொதுவாழ்க்கை தேசிய இயக்கத்திலே ஆரம்பித்துப் பின்னல் திராவிடர் கழகத்திலே சேர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்து அவர்கள் கொண்டிருந்த கொள்கைகளை இறுதிவரையிலும் பரப்புவதற்கு அரும்பாடுபட்டவர், எடுத்த எடுப்பிலேயே தலைவராக வந்தவரல்ல. உழைப்பின் மூலமாகத் தன்னுடைய கொள்கைகளைப் பரப்புவதற்கும் தன்னுடைய ஸ்தாபனத்தைக் கட்டுவதற்கும் அவர் செய்த தியாகம் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டிலே உள்ளவர்களுக்கும் தெரியும். அந்த அளவிற்குத் தன்னுடைய நலனைப் பாராமல் தன்னுடைய குடும்பத்தின் நலனைப் பாராமல் இரவு பகலாக உழைத்த ஒருவர். கடைசியாக அமைச்சர் பதவி போன்ற பெரும்பதவியிலே இருந்தாலும்கூட ஆரம்ப காலம்தொட்டே எளிமையாக அமைதியாக வாழ்ந்த தலைவர்களில் ஒருவர். அப்படிப்பட்டவருடைய இழப்பு இந்தச் சபைக்கு, நம் எல்லோருக்கும் பெரிய இழப்பாகும் என்ற அளவிலே அவருடைய குடும்பத்தினருக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1975 அக்டோபர் 22] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

அடுத்து மறைந்த தலைவர் காமராஜ் அவர்கள் தமிழகத்திலே மட்டுமல்ல, பாரதத்திற்கே அரும்பெரும் தலைவராக விளங்கினார். அவர்களுடைய வாழ்க்கை சிறிய தொண்டனாக — கிராமத்திலே சிறிய தொண்டனாக இருந்து — ஆரம்பித்து தன்னுடைய சேவையின் காரணமாக கொள்கை உறுதிப்பாட்டின் காரணமாக இந்த நாட்டிலே உயர்ந்த பதவியாகிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக பொறுப்பையேற்றுக்கொண்டு மிகச் சிறப்பான முறையில் அந்தப் பதவிக்கே பெருமைதரக்கூடிய விதத்திலே அவர்கள் நடந்துகொண்டார்கள் என்பதை நாம் அறிவோம். பல்வேறு சமயங்களிலே அரசியலிலே ஏற்பட்ட போதும் சிக்கல்களை சர்வதேச தலைவர்கள் எல்லாம் இந்திய நாட்டின் அரசியல் நிலைமை என்ன ஆகுமோ என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்திலே அந்தச் சிக்கல்களையெல்லாம் சீரிய முறையிலே தன்னுடைய ஆழ்ந்த அறிவின் மூலமாகவும் அனுபவத்தின் மூலமாகவும் தீர்த்து வைத்திருக்கிறார்கள். முன்னால் பேசிய தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் இன்றைய பிரதமரை அன்றைக்கே எந்தவிதமான சிரமமும் சிக்கலும் சங்கடமும் இல்லாமல் பிரதமராக ஆக்குவதற்கு திரு. காமராஜ் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி பெரும் பயன் அளித்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். அன்றைய தினம் அவர் தீர்க்கதரிசனத்தோடு அப்படிப்பட்ட முடிவை எடுக்கா திருமதி இந்திரா காந்தி அவர்களை பிரதமராக ஆக்கியிராவிட்டால் இந்தியாவினுடைய வரலாறே வேறு விதமாக இருந்திருக்கும். அந்த அளவிற்கு எதிர்காலத்தையும் எண்ணிப் பார்க்க தீர்க்கதரிசனத்தோடு அவர்கள் பெருந்தொண்டாற்றியிருக்கிறார்கள்.

அவர் எப்படிப்பட்ட பெரிய பதவியில் இருந்தாலும்கூட எளிமையை விட்டுக்கொடுத்தது கிடையாது. காந்திய நெறியிலே நின்று எளிய வாழ்க்கை வாழ்ந்து கீழ்நிலையிலே உள்ள மக்களைப் பற்றியே எப்போதும் சிந்தித்துக்கொண்டிருந்தார். அவருடைய சேவையின் காரணமாக ஏழை எளிய மக்கள் எத்தனையோ பலன்களைப் பெற்றிருக்கிறார்கள். கடைசி நேரத்திலேயும் அவர் நாட்டைப் பற்றியும் நாட்டு மக்களைப் பற்றியும் கவலை கொண்டிருந்தார்கள் என்பதையெல்லாம் நாம் அறிவோம். அவருடைய

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1975 அக்டோபர் 22

இழப்பு, நாட்டு மக்களுக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு பெரிய இழப்பாகும் என்பதைக் கூறி அன்னாருடைய இழப்பை ஈடுகட்டக்கூடிய வகையிலே பொது வாழ்க்கையிலே அவர் எப்படி சேவா உணர்ச்சியோடு சுயநலமற்ற தன்மையிலே வாழ்ந்து வந்தார்களோ அப்படி நாம் வாழ்வதற்கு முயற்சிக்க வேண்டும். அவருடைய வாழ்க்கை இந்த நாட்டிலே உள்ளவர்கள் அனைவருக்கும் எடுத்துக் காட்டாக இருக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது.

அண்மையிலே நான் ஒரு செய்தியைக்கூடக் கேள்விப் பட்டேன். அவர், தன்னுடைய உறவினர்களுக்கு—அவருடைய சகோதரி, சகோதரி பையன் ஏழையாகவே இருந்து வந்தார்கள்—தனிச் சலுகை காட்டியதில்லை, ஒரு முறை அவருடைய சகோதரி பையன் அவரிடம் வந்து தனக்கு வேலை வாங்கித் தரவேண்டுமென்று கேட்டபோது, வேலைதேடித் தரும் ஸ்தாபனம் இருக்கிறது, அங்கே போய் பதிவு செய்து வை, அவர்கள் வேலை வாங்கிக் கொடுப்பார்கள் என்று சொன்னதாகக் கேள்விப்பட்டேன். அந்த அளவிற்கு தனக்காகவோ அல்லது தன்னுடைய உறவினர் களுக்காகவோ வேண்டியவர்களுக்காகவோ தன்னுடைய பதவி யைப் பயன்படுத்தி எந்தவிதமான உதவியையும் செய்யாதவராக அவர் வாழ்ந்து வந்தார். அவையெல்லாம் பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள நமக்கும் மற்ற அனைவருக்கு எடுத்துக்காட்டு. அந்த வழியைப் பின்பற்றவேண்டுமென்று கூறி என் உரையை முடிக் கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இரண்டு இரங்கல் தீர்மானங்களையும், அதையொட்டி அவை முன்னவர் அவர்கள் மறைந்த இரண்டு பெரியவர்களையும் பற்றிக் கூறிய கருத்துக்களையும் நான் ஆதரித்து முஸ்லீம் லீக் சார்பாக என்னுடைய இரங்கலையும், கட்சியின் இரங்கலையும் முன்னவர் அவர்களுடைய இரங்கல் தீர்மானத்தோடு இணைத்து ஒருசில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன்.



1975 அக்டோபர் 22] [திரு. எம். ஏ. லத்தீப்]

மறைந்த நம்முடைய பழம்பெரும் தலைவர் என். வி. என். அவர்கள் இந்த நாட்டினுடைய விடுதலைக்காகப் பாடுபட்ட பெரும் தலைவர்களிலே ஒருவராக இருந்தார்கள். எந்தெந்தச் சூழ்நிலையிலே, எந்தெந்த வகையிலே அவர்களுடைய சேவை தேவைப்பட்டதோ அந்த நேரங்களில் எல்லாம் அவ்வப்போது அவர்கள் காலத்திற்கேற்ற வகையில் தம்முடைய சேவைகளை நாட்டுக்குத் தந்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி இன்றைக்கு நாடு நன்றாக அறிந்திருக்கிறது.

வெள்ளையனுடைய ஆட்சி இந்திய உபகண்டத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த காலத்தில் தேசத்தினுடைய விடுதலைக்காக தம்முடைய கருத்தையும், உழைப்பையும் ஒட்டுமொத்தமாக நல்கும் வகையில் அன்றைக்கு தேச விடுதலை இயக்கத்தினுடைய ஒருமுகமாக இருந்து, காங்கிரஸ் கட்சியினுடைய தொண்டனாக, தீவிர ஊழியனாக திரு. என். வி. என். அவர்கள் பெரிய பங்கினை விடுதலை இயக்கத்திற்காக, நாட்டினுடைய விடுதலைக்காக செலுத்தி யிருக்கிறார்கள் என்பதை இங்கே எல்லோரும் சுட்டிக் காட்டினார்கள்.

அதே நேரத்தில் தேசம் விடுதலை பெற்றால் மட்டும் போதாது, தேசத்தில் வாழ்கின்ற மக்கள் பொருளாதார, சமூக, இன அடிப்படையில் விடுதலை பெறவேண்டுமென்ற நிலை ஏற்பட்ட போது அவை முன்னவர் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியதைப் போல் 1938-ல் இந்தி மொழி ஆதிக்கத்தைத் தமிழ் நாட்டில் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது இந்தி மொழி ஆதிக்கத்தை ஒழித்து, தமிழினத்தினுடைய தன்மானத்தையும், தமிழ் மொழியின் தனித் தன்மையும் காப்பாற்ற மறைந்த மாமேதை என். வி. என். அவர்கள் மிகத் தீவிரமாக ஈடுபட்டு தமிழினத்தினுடைய தன்மானத்திற்காக உழைத்தார்கள் என்பதை இன்றைக்கு நாடு மறந்து விடுவதற்கில்லை.

அதே நேரத்தில், சமுதாயத்தில் பல்லாண்டுகளாக, நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக புரையோடி விட்டிருந்த சில தவறான எண்ணங்கள்—குறிப்பிட்ட சில மனிதர்கள் தாழ்ந்தவர்கள்,

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 அக்டோபர் 22

சிலர் உயர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் சமுதாயத்தில் இருந்த சில பாகுபாடுகள்—இவைகளை எல்லாம் ஒழித்தால்தான் உண்மையிலேயே நாடு சுதந்திரத்தைக் காண முடியும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்டவர்களாக அன்று ஏற்படுத்தப் பட்டிருந்த சுயமரியாதை இயக்கத்தில் வெகு தீவிரமாக ஈடுபட்டு, நாட்டிலே சமூக சீர்திருத்தம் ஏற்பட வேண்டும், சமுதாய அமைப்பில் சில மாறுதல்கள் ஏற்பட வேண்டும், சமுதாய மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதற்காக தீவிரமாகப் பெரும் தொண்டுகளை ஆற்றினார்கள் மறைந்த மாமேதை என். வி. என். அவர்கள்.

அதே போன்று தந்தை பெரியார் அவர்கள் சமுதாய சீர்திருத்தங்களுக்காகக் கடைப்பிடித்த நடைமுறைகளை அவரோடு மிக நெருங்கியவராகப் பழகி அவருடைய சிரிய தொண்டர்களில் ஒருவராக இருந்த மானமிகு மறைந்த என். வி. என். அவர்கள் அரும்பெரும் தொண்டுகளை ஆற்றி யிருக்கிறார்கள். பிறகு பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சகாப்தத்தில், சமுதாயத்தில் ஏற்பட வேண்டிய பெரும் மாறுதல்களை, மறுமலர்ச்சியை நாம் தீவிரப்படுத்த வேண்டுமென்று எண்ணிய காலத்தில் அவருடைய தளபதிகளிலே ஒருவராக, முன்னணி ஊழியர்களில் ஒருவராக, எத்தகைய ஊதியத்தையும் எதிர்பாராமல், இன்னல்கள், கஷ்டங்கள், நஷ்டங்களை அனுபவித்து, குடும்பத்தை வெகுவாகக் கவனிக்காமல் எளிய முறையில், பணிவையே தன்னுடைய ஆயுதமாக, துணிவையே தன்னுடைய ஆயுதமாக வைத்து நீண்ட காலத்திற்கு அண்ணா அவர்களுடைய சிறந்த, மதிப்பிற்குரிய, மரியாதைக்குரிய, நம்பிக்கைக்குரிய ஒரு சகோதரராக, சகாவாகத் திகழ்ந்தார்கள் நம்முடைய மறைந்த என். வி. என். அவர்கள்.

மிக எளிய முறையில் வாழ்க்கையைத் தொடங்கிய அவர் பிறகு அமைச்சராக உயர்வு பெற்றார். அமைச்சர் என்ற முறையிலும் அவர்கள் சீரிய முறையில், எளிமையான முறையில் அதே நேரத்தில் படாடோபம் இல்லாமல் ஆற்றிய தொண்டு இன்றும் பசுமையாக இருக்கிறது. அது அனைவர் எண்ணங்களிலும் நிலைத்து இருக்கும். மாபெரும் மக்கள் தலைவர், மறைந்த மாமேதை என். வி. என். அவர்கள் இன்றைக்கு நம்மிடையே



1975 அக்டோபர் 22] [திரு. எம். ஏ. லத்தீப்]

இல்லாவிட்டாலும் அவர்கள் எந்தக் கட்சிக்காக வாழ்ந்தார்களோ அந்தக் கட்சியை ஏற்று நடத்துகின்ற அவருடைய சகாக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் என்னுடைய ஆறுதலைத் தெரிவித்துக் கொள்வதோடு மறைந்த அந்தப் பெருந்தகைக்கு என்னுடைய மரியாதையைச் செலுத்துகிறேன். அவருடைய குடும்பத்தாருக்கும், அவரை இழந்து தவிக்கின்ற சக அமைச்சர் களுக்கும், கட்சிக்காரர்களுக்கும், தமிழக மக்களுக்கும் முஸ்லீம் லீக் சார்பாக இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வி. என். அவர்கள் மறைந்த பிறகு, அடுத்த சட்ட மன்றம் கூடும்போது திரு. என். வி. என். அவர்களுக்கு மட்டும் தான் இரங்கல் தீர்மானம் வரும் என்று நாம் எல்லாம் நினைத்தோம். ஆனால் திரு. என். வி. என். மறைந்த பிறகு நம்மால் பெரிதும் மதிக்கப்படுகிற, தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல், பாரத நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம், அனைத்து மாநிலங்களிலும் பெருந்தலைவர் காமராஜர் என்றும், வட புலத்தில் காலா காந்தி காமராஜ் என்றும், காந்தியையும் காமராஜையும் ஒப்பிட்டுப் பேசப்படக்கூடிய மிகப் பெரும் தேசியத் தியாகி என்று பாராட்டப்படக்கூடிய மாபெரும் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் எதிர்பாராத வகையில்—இன்றைக்கு இரங்கல் தீர்மானம் கொண்டுவரும் அளவுக்கு திடீரென்று நம்மை விட்டுப் பிரிந்து விட்டிருப்பது நம்மையெல்லாம் மீளாத் துயரத்தில் ஆழ்த்தி யிருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறோம். இங்கு பேசிய தலைவர்கள் இதனை மிகத் தீவிரமாக, தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், எப்படி என். வி. என். அவர்கள் சமுதாய சீர்திருத்தத்திற்காகப் பாடுபட்டார்களோ, அதே அளவுக்கு அவர்கள் தமிழகத்திலே மட்டுமல்லாமல் தேசிய அளவிலும் பாடுபட்ட பெருந்தலைவர் ஆவார்கள்.

அவர்களிடம் தமிழ்ப் பற்றைக் கண்டோம். தேசியத்தின் உயர்வான எண்ணங்களைக் கண்டோம். யாருடைய தலைமையில் இந்த தேசத்தினுடைய விடுதலைக்காகப் போராடினோமோ, யாரை இந்த தேசத்தினுடைய பிதாவாக ஏற்றுக்கொண்டு நாம் போற்றுகிறோமோ அந்த தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகளுடைய குணங்கள், கொள்கைகள் அனைத்தையும்

[1975 அக்டோபர் 22 [திரு. எம். ஏ. லத்தீப்]

கடைப்பிடித்து வாழ வேண்டுமென்ற சீரிய பண்பை, பாங்கினை காமராஜர், அவர்களிடத்தில் கண்டோம். காந்தியத்தின் விளக்கமாகத் தமிழகத்தில் வாழ்ந்து, காந்தியம் மறந்து வருகிற மற்ற மாநிலங்களுக்கெல்லாம் கூட இங்கிருந்து ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்த பெருந்தலைவர் அருள் ஜோதியாக விளங்கினார் என்று சொன்னால் அது மிகையாகாது.

அவர்கள் இந்திய தேசத்தினுடைய விடுதலைக்காக மட்டுமல்லாமல் தமிழ் மொழியின் உயர்வுக்காகவும், தமிழகத்தின் பெருமைக்காகவும், தமிழனின் பெருமைகள், சிறப்புக்கள், வரலாறு, பாரம்பரியம் காப்பாற்றப்பட வேண்டுமென்பதற்காகவும் மறைந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அவ்வப்போது தமிழ் நாட்டில் தோன்றிய தலைவர்கள் தமிழினத்திற்காகக் குரல் எழுப்பிய நேரத்தில், தமிழின மொழி உயர்வுக்காக நடவடிக்கைகளை மேற்கொண்ட நேரத்தில் எல்லாம் தேசியத் தலைவராகத் திகழ்ந்த காமராஜர் அவர்கள் தமிழினத்திற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை எல்லாம் மனப் பூர்வமாக ஆதரிக்கக்கூடிய மனப் பக்குவத்தைப் பெற்றுத் திகழ்ந்தார்கள் என்று சொன்னால் அதை இன்றும் யாரும் மறுக்க முடியாது.

தாழ்த்தப்பட்ட சமுதாயம், அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமுதாயம் உயர்வு பெற வேண்டும், சமூக அடிப்படையில் இழைக்கப்படுகிற அநீதி அகற்றப்பட வேண்டும் என்ற உரிமைக் குரலை எழுப்பிய மாபெரும் தலைவர் மறைந்த மாமேதை காமராஜர் அவர்கள் ஆவார்கள். அவர்கள் தமிழ் மக்களுக்காக, தமிழ்த் தரணிக்காக வாழ்ந்தார்கள் என்று சொல்லுவதில் பெருமைப் படுகிறோம். தன்னுடைய குடும்பத்தைப் பற்றி நினைக்காமல், இந்திய சமுதாயத்தை, குறிப்பாக தமிழினத்தைக் குடும்பமாக நினைத்து இந்த நாட்டில் இருக்கும் பட்டிதொட்டிகளில் எல்லாம், மாவட்டங்களில் எல்லாம், சற்றேறக்குறைய தன்னுடைய கால் படாத இடமே இல்லை என்ற அளவுக்கு தேசத்தினுடைய, தமிழகத்தினுடைய பெருமைக்காக, உயர்வுக்காகப் பாடுபட்டவர் மாபெரும் தலைவர் மறைந்த காமராஜர் அவர்கள். அவர்கள் எளிமையாக வாழ்ந்தார்கள். ஒன்பது ஆண்டுக் காலமாக அவர்கள் முதல் அமைச்சராக இருந்தார்கள். பிறகு இந்திய தேசிய காங்கிரஸினுடைய தலைவராக ஏற்றம் பெற்று



1975 அக்டோபர் 22] [திரு. எம். ஏ. லத்தீப்]

இந்த நாட்டின் முழுப் பொறுப்பையும் வகிக்கின்ற, மேலதிகாரத்தில் இருக்கிற தலைமை அமைச்சர் பதவிக்கு யார் இருக்க வேண்டும் என்ற இக்கட்டான நேரங்களில் எல்லாம் அவர்களது சீரிய ஆலோசனைகளின்பேரில், அவர்கள் தம்மிடமுள்ள அடக்கத்தின் காரணமாக பல சாரார்களையும் ஒன்றுபடுத்தி தலைமை அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்து நாட்டில் அமைதியான ஆட்சி அமைவதற்கு வழிகோலியவர்கள் மறைந்த மாமேதை காமராஜ் அவர்களாவார்கள்.

அவர்கள் ஏழ்மையாக வாழ்ந்தார்கள், ஏழைகளுடைய நலன்களுக்காக வாழ்ந்தார்கள், ஏழையாகவே மடிந்து விட்டார்கள். நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சி அனுதாபக் கூட்டத்தில் எடுத்துச் சொல்லியது போல் காமராஜ் அவர்கள் ஏழைகளுக்காகப் பேசினார்கள் என்று சொல்வதைவிட ஏழைகள் காமராஜ் அவர்கள் வாயிலாகப் பேசினார்கள் என்று சொல்வதுதான் பொருத்தம் என்று அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்துக்கு இலக்கணம் வகுக்கிற அளவிற்குத்தான் காமராஜ் அவர்களின் வாழ்க்கை அமைந்திருந்தது.

அவர்களுடைய இறுதிக் காலத்தில் அவர்கள் விரும்பியது இந்த நாட்டில் ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதுதான். ஜனநாயகத்திற்கு என்னென்ன இலக்கணங்கள் இருக்கின்றனவோ அந்த இலக்கணங்களையெல்லாம் ஒருங்கே பெற்றதொரு ஃப்ரீ டெமாக்ரஸி என்று சொல்லக்கூடிய, எந்தவிதமான ஒரு கட்டுப்பாட்டுக்கும் உள்ளாக்கப்படாத, ஆனால் அதே நேரத்தில் ஜனநாயகம் ஒப்புக்கொள்ளக்கூடிய கட்டுப்பாடுகளுக்கு மட்டும் உள்ளாக்கப்படுகிற ஒரு சிறந்த, சீரிய ஜனநாயகம் அமைய வேண்டும் என்று தான் காமராஜ் அவர்கள் விரும்பினார்கள். காமராஜ் அவர்கள் ஒரு ஜனநாயக வித்தகர், ஏழ்மையின் தோற்றம். சமுதாய சீர்திருத்த எண்ணங்களுக்கு அவர்களது வாழ்க்கை ஒரு இலக்கணமாகத் திகழ்ந்தது. ஒரு இலக்கியமாகத் திகழ்ந்தது. மறைந்த தந்தை பெரியார் அவர்கள் காமராஜ் அவர்களை பச்சைத் தமிழர் என்று சொன்னார் என்று சொன்னால் தமிழர்களுடைய வாழ்க்கைக்கு இலக்கணமாக இருக்கிற வகையில் அவர்களுடைய வாழ்க்கை அமைந்திருந்தது.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 அக்டோபர் 22

மறைந்த பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் இன்று நம்மிடையே இல்லாவிட்டாலும் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துச் சொல்லியதுபோல் காமராஜ் அவர்களுடைய பூத உடல் மறைந்தாலும் அவர்களுடைய கருத்துக்கள் நாட்டில் நிலவி இருக்கின்றன. அவர்களுடைய பொறுப்பு மிக்க நல்லெண்ணங்கள் நாட்டில் நிலவி இருக்கின்றன. அவர்களது ஆட்சியில் சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் கூறிய பல கருத்துக்களும் நாட்டில் நிலவி இருக்கின்றன. அவர்களது ஆட்சியில் செய்த பல சீர்திருத்தங்களும், மறுமலர்ச்சி ஏற்படுத்திய பல திருப்பங்களும் இன்றும் நாட்டில் நிலவி இருக்கின்றன.

காமராஜ் அவர்களுக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்த வேண்டும், அவர்களது நினைவு பசுமையாக இருக்க வேண்டும் என்பதற்காக யாரும் கேட்காமலேயே நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முன்வந்து விரைவிலே நல்ல பல திட்டங்களை—அவர்களுடைய நினைவு பசுமையாக இருக்க வேண்டும் என்பதற்காக தமிழக அரசு எடுத்துக்கொண்டமைக்காக நான் தமிழக அரசுக்கு என் கட்சி சார்பாக பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், நினைவுச் சின்னங்கள் எத்தகைய நினைவுச் சின்னங்களாக இருந்தாலும் சரி காமராஜ் அவர்களுக்கு இருக்க வேண்டிய ஒரே நினைவுச் சின்னம்—அவர்களால் கட்டிக்காப்பாற்றப்பட்டது ஸ்தாபன காங்கிரஸ் என்பதை அவர்களது கட்சியைச் சார்ந்தவர்களும் உணர்ந்திருப்பார்கள். ஆகவே, ஸ்தாபன காங்கிரஸ்காரர்கள் அந்தக் கட்சியைக் காப்பாற்றுகிற வாயிலாக காமராஜ் அவர்களுக்கு சிறந்த ஒரு நினைவுச் சின்னமாக ஏற்படுத்தித் தருவார்கள் என்பதில் எங்களுக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

அதேநேரத்தில் நான் ஒன்றைக் கூறிக்கொள்வேன். காமராஜ் அவர்கள் இந்தியா பூராவிற்கும் தலைவராக விளங்கினார்கள். இந்திய மாநிலங்கள் அனைத்துக்கும் அவர்கள் தலைவராக விளங்கினார்கள், அவர்களுடைய நினைவை பசுமையாக்கும் வகையில் நான் ஒன்றை இந்த அவையின் வாயிலாக வேண்டிக்



1975 அக்டோபர் 22] [திரு. எம். ஏ. லத்தீப்]

கொள்கிறேன். டெல்லியில் மக்கள் சாலை என்ற ஒரு சாலை இருக்கிறது. அதை 'ஜன்பத்' என்று சொல்வார்கள். 'ஜன்பத்' என்ற சாலை மக்கள் சாலை என்று சொல்லப்படுகிறது. மக்கள் சாலை என்று சொல்லப்படுகிற அந்த 'ஜன்பத்', மக்கள் தலைவராக விளங்கிய மக்கள் தலைவராக வாழ்ந்த காமராஜ் அவர்களின் பெயரால் 'காமராஜ் சாலை', 'காமராஜ் மார்க்' என்று அது மாற்றப்பட—டெல்லியிலும் கூட காமராஜ் அவர்களுக்கு நிலையானதொரு நினைவுச் சின்னம் நிலைநாட்டப்படுவதற்கு—டெல்லி அரசு நடவடிக்கை எடுக்கும் வகையில் தமிழக அரசு சார்பாக பரிந்துரை ஒன்றை டெல்லி அரசுக்கு அனுப்பினால் டெல்லி மாநகராட்சி சார்பாக அதைச் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று கூறி இந்த இரண்டு தலைவர்களும் மறைந்திருப்பது தமிழ் நாட்டுக்கு மாபெரும் நஷ்டம், இந்திய நாட்டுக்கு மாபெரும் துயரம், அதே நேரத்தில் ஜனநாயகத்திற்கு ஒரு மாபெரும் சோதனை. அந்தச் சோதனையை நாம் வெல்வதில்தான், அந்தச் சோதனைகளில் நாம் வெற்றி பெறுவதுதான் நாமெல்லாம் அந்தப் பெரும் தலைவர்களுக்கு செய்யும் மரியாதைக்கு உண்மையான விளக்கமாக இருக்கும் என்று கூறி மறைந்த அவர்களுக்கு பிரார்த்தனை செலுத்தி, என். வி. என். அவர்கள் குடும்பத்தினருக்கு என் அனுதாபங்களைத் தெரிவித்து மறைந்த மாமேதை காமராஜ் அவர்களின் உற்றார், உறவினர் நண்பர்களுக்கெல்லாம் என் அனுதாபத்தை முஸ்லீம் லீக் சார்பாக செலுத்தி என் இரங்கல் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, On behalf of the Swatantra Party I associate myself with the condolence resolution brought by the Hon. Leader of the House regarding the demise of Thiru N. V. Natarajan, Minister in the Tamil Nadu Cabinet and the great selfless of our Nation Thiru K. Kamaraj.

Just now all the party leaders were telling about the great leaders and how Thiru N. V. Natarajan was a man of simplicity. I came to understand from his party people that in the beginning of 1940 he was the only man who used to go to villages and tell about party activities to the villagers. He was the man who attracted the village masses to his party. He was a great man and

[Thiru B. Venkataswamy] [1975 அக்டோபர் 22

at the same time a very simple man. His loss is irreparable and on behalf of the Swatantra Party I offer my condolences to the members of the bereaved family.

Regarding our great selfless leader Thiru K. Kamaraj I can say that he was a symbol of simplicity. He was of a hard-working nature. He sacrificed his life for the sake of the downtrodden. He was a very straighforward man. He had held offices continuously for 30 years. I came to understand that in 1937 he was elected President of the Tamil Nadu Congress Committee and M.L.A. from Virudunagar constituency. Till 1967, for 30 years, he was holding offices. He won the great confidence of the people because of his selfless and sacrificing nature. He worked all along for the welfare of the people of Tamil Nadu.

Our friend Thiru R. Ponnappa Nadar, leader of Congress (O) party here, had requested that a portrait of Thiru K. Kamaraj should be unveiled in this Assembly Chamber. I hope the Hon. Chief Minister will accede to it because he has already agreed to erect a great memorial for Thiru Kamaraj in Guindy. So I hope he will agree to this also.

I want to stress one point in regard to the life which Kamaraj led in his last days. I came to understand that he was living with great feeling and with a sense of humility. Whenever anybody used to go to his house, he used to talk about national welfare and conditions prevailing in the Nation. He talked of national welfare with great feelings. I hope that those people who follow his foot-steps would see that his sense of humility is followed and emulated and his feelings for the welfare of the Nation are fulfilled. On behalf of the Swatantra Party I fully endorse the feelings expressed by the Hon. Leader of the House and other party leaders. Thank you, Sir.

(முற்பகல் 11-00)

திரு. கே. டி. கே. தங்கமணி: சபாநாயகர் அவர்களே, சபைக்கு முன்னால் வந்து இருக்கக்கூடிய இரண்டு இரங்கல் தீர்மானங்களையும் ஆதரித்து எங்கள் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகின்றேன்.



1975 அக்டோபர் 22] [திரு. கே. டி. கே. தங்கமணி]

மறைந்த என். வி. நடராசன் அவர்கள் அச்சுத் தொழிலாளியாக இருந்த காலத்தில் அச்சுத் தொழிலாளர்கள் சங்கத்தை அமைப்பதிலும், அந்தத் தொழிலாளர்கள் சங்கத்தில் தீவிரமாகப் பணியாற்றியவர்களில் ஒருவராக இருந்தார் என்பதும், அந்த ஞாபகத்தை இன்றுகூட அச்சுத் தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவராக இருக்கக்கூடிய திரு. ஏ. எஸ். கே. அவர்கள் பெருமையோடு எடுத்துச் சொல்லி வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிற்சங்கவாதியாக இருந்து, அரசியல்வாதியாக வரக் கூடியவர்களிடத்தில் சில பண்புகள் உண்டு என்பதை நாம் என். வி. நடராசன் அவர்கள் மூலமாகக் கண்கூடாகப் பார்க்க முடிந்தது. பல கட்சிகளையெல்லாம் சேர்த்து ஒரு இயக்கமாக அதை அமைத்து, அதில் எல்லோரையும் அணைத்துக் கொண்டு போகக் கூடிய விதத்தில் நடந்து கொண்டார்கள். தட்சிணப் பிரதேச எதிர்ப்பு இயக்கம் நடந்த காலத்தில் அதன் கன்வீனராக என்.வி.என். அவர்கள் இருந்தார்கள். அநேகமாக, எல்லாக் கட்சியினரும் அவருடைய தலைமையை ஏற்றுக்கொண்டு அந்த இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தினார்கள் என்பதை இங்கே இருக்கக்கூடிய பல உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

அவர் தொழிலாளர் நல அமைச்சராக இருந்த நேரத்தில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடந்தபோது, நான் தொழிலாளர் நல அமைச்சரே அல்லாமல் முதலாளிகள் நல அமைச்சர் அல்ல, என்னைப் பொறுத்தவரையில் தொழிலாளர்கள் பக்கம் தான் நிற்பேன் என்று சொல்லி, அன்று அந்த அமைப்பில் எத்தகைய உதவிகளைச் செய்யமுடியுமோ அதைச் செய்து இருக்கிறார்கள்.

எளிமையான வாழ்க்கையை நடத்தியவர்கள் என்ற முறையில், தான் அமைச்சர் என்ற அகம்பாவம் இல்லாத முறையில் வாழ்ந்த என்.வி.என். அவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தாருக்கும் என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 22

காமராஜர் அவர்களைப் பற்றி பேசுவது என்று சொன்னால், ஒரு தனி புத்தகமே எழுதி விடலாம். அவர் மறைந்த உடனே எங்களுடைய கட்சியின் பொதுச் செயலாளர் ராஜேஸ்வர ராவ் அவர்கள் வெளியிட்ட செய்தியை நான் இந்த இடத்தில் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன்.

"Kamaraj was a consistent anti-Imperialist. Throughout his life he stood for National unity. His sincerity and simplicity are unquestioned".

என்று சொன்னார்கள். இதைவிட விரிவான அளவுக்கு, யாருக்கும் அபிப்பிராய பேதம் ஏற்படாமல் இருக்கக்கூடிய செய்தி இருக்கும் என்று நான் கருதவில்லை.

அவர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தார் என்று சொன்னால், கடைசி வரையிலும் அவர்—அது எந்த ஏகாதிபத்தியமாக இருந்தாலும், அந்த ஏகாதிபத்தியத்தோடு ஏதாவது உறவு கொண்டு இருக்கிறார்களா என்றால், அவர் அதை விரும்பவில்லை. காரணம் அவர் ஆரம்ப வாழ்க்கை அப்படிப்பட்டதாகும்.

பாரதியார் அவர்கள் சொன்ன மாதிரி,

"இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்,

சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே."

பல ஏகாதிபத்தியங்களின் எதிர்ப்பும், நாட்டுப் பற்றும் அவரிடத்தில் சிறந்து இருந்தன.

'பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே'

இது கிட்டத்தட்ட சங்கராச்சாரியார் கருத்தாகும். அதைத் தெளிவாக பாரதியார் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் எடுத்துக்காட்ட இருந்தார்கள் என்று நான் கருதுகிறேன்.

அவருடைய வாழ்க்கையைப் பொறுத்தவரையில், முதன் முதலாக காங்கிரஸ் கட்சியில் இருந்த முற்போக்கு இளைஞர்கள், அல்லது முற்போக்குத் தலைவர்கள் திருவாளர்கள் முத்து



1975 அக்டோபர் 22] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ராமலிங்கத் தேவர், பி. இராமமூர்த்தி, ஜீவானந்தம், சீனிவாச ராவ் போன்றவர்களின் முயற்சியால் தான் அவர்கள் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தொடர்ந்து அவர் காங்கிரஸ் கட்சியில் பல பதவிகளை ஏற்று இருந்தாலும் கூட, யாரால் வந்தோம் என்பதை அவர் மறந்தது கிடையாது. ஞாபகம் பலருக்கு இருக்கலாம், அவர் சத்தியமூர்த்தியை தன்னுடைய அரசியல் குருவாக பாவித்து வந்தார்கள். முதலமைச்சராகப் பதவி ஏற்ற நேரத்தில், சத்தியமூர்த்தி மறைந்து விட்டு இருந்தாலும், அவருடைய வீட்டிற்குச் சென்று அவருடைய துணைவியாரின் வாழ்த்துக்களைப் பெற்றார்கள் என்பது பத்திரிகையில் வந்த செய்தியாகும். பலரும் அதைப் பெருமையோடு எடுத்துச் சொன்னார்கள்.

இறுதியில், காமராஜர் இன்று காலமாகிவிட்டாலும் கூட, பலரும் அவருக்கு ஏதாவது ஒரு நினைவாலயம் வைக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். தெளிவாக எதைச் செய்யவேண்டுமென்று பேசவில்லை. அதைச் சிறந்த முறையில் செய்யவேண்டும், சிறந்த முறையில் இருக்கவேண்டும். ஏன் ஒரு நகரமே அவர் பெயரில் இருக்கக்கூடாதா? புதிய நகரம் உருவாகக் கூடாதா? இப்படி பல விஷயங்கள் எல்லாம் இருக்கின்றன. எங்கள் கட்சியின் சார்பாக நான் சொல்லவிரும்புவது, அவர் மரணம் அடைந்த நேரத்தில்.

Both the State Government and the Central Government rose to the occasion.

அது உண்மையிலேயே தமிழ் நாட்டு மக்களும், இந்திய மக்களும் பாராட்டக் கூடிய ஒரு விஷயம் என்பதை மட்டும் நான் இந்த இடத்தில் தெரிவித்துக்கொண்டு, இங்கே அவைமுன் வந்திருக்கக் கூடிய இரண்டு இரங்கல் தீர்மானங்களையும் ஆதரித்து அமர்கிறேன்.

*திரு. மணலி சி. கந்தசாமி: பேரவைத் தலைவரவர்களே. சபையின் முன்னவர் பிரேரேபித்து இருக்கக்கூடிய இரண்டு இரங்கல் தீர்மானங்கள் மீதும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மறைந்த மாண்புமிகு என்.வி.என். அவர்கள் உருவத்திலும் தொண்டன், உள்ளத்திலும் தொண்டன் என்று சொல்லக்கூடிய விதத்தில் அவர் வாழ்நாள் பூராவும் தொண்டு என்ற தன்மையின்

[திரு. மணலி சி. கந்தசாமி] [1975 அக்டோபர் 22

தூயகொடியின் கீழ் வாழ்ந்து காட்டினார்கள். எளிமையான தோற்றம், இன்முகம் காட்டிப் பேசும் சுபாவம், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பது, தான் சார்ந்து இருக்கும் கட்சிக்கு விஸ்வாசம், கட்சித் தலைவருக்கு விஸ்வாசமாகத் தொண்டாற்றுவது என்ற முறையில் கடைசி வரையில், கடைசி மூச்சு உள்ள வரையில் அவர் தொண்டாற்றி இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

சட்டமன்றத்தில் அவர் எளிமையாக அமர்ந்து இருந்தார். அவருக்கு இட்ட வேலையை மிகத்திறமையோடு செய்தார் என்பதை நாம் கண்ணால் கண்டு இருக்கிறோம். அத்தகைய பெரியவர் பல்வேறு துறைகளில் தொழிலாளியாக இருந்து, மாண்புமிகு அமைச்சராக வந்த போதிலும் கூட, அவர்களுடைய நிலையிலிருந்து எந்தவிதமான மாற்றமும் இல்லாத வகையில் அவர்களுடைய வாழ்க்கையை எளிமையாக வாழ்ந்து காட்டினார்கள்.

அவர்கள் இறுதியாக மரணத்தை எதிர்த்து பெரிய போராட்டத்தை நடத்தி, பல நாட்கள் வேதனைப் பட்டு, இறந்தார்கள் என்பதை நாம் எல்லாம் மிகுந்த வருத்தத்தோடு கவனித்துக் கொண்டு வந்தோம். அவருடைய குடும்பத்தாருக்கு என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிற அதே நேரத்தில், அரசு அந்தக் குடும்பத்தை, அவர்களுடைய குடும்பமாக பாவித்து பராமரிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு, அவை முன்னவர் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

அடுத்தபடியாக, மாபெரும் தலைவர் காமராஜர் அவர்கள் இந்திய அரசியலில் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக ஒரு மகோன்னத புருஷராக, மகா புருஷராக விளங்கினார்கள் என்பதை யாரும் மறக்க முடியாது. அவர் விரல் அசைத்தால் பாரதம் அசையும். அவர் ஒரு விரல் ஆட்டினால் பல மந்திரிகள் அவருக்கு ஏவல் செய்யும் விதத்தில் ஒரு மகோன்னத புருஷராக அவர் இந்திய அரங்கில் வாழ்ந்து காட்டினார்கள். நேருவின் அந்தரங்க நண்பர், நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்ற முறையில் நேரு அவர்கள், அவருக்குப் பிறகு காங்கிரஸ் தலைவராக வேண்டுமென்று அவர்களை வேண்டினார்கள். தென்னாட்டவருக்கு எளிதாக அந்தப் பெரும்பதவி



1975 அக்டோபர் 22] [திரு. மணலி கந்தசாமி]

கிடைக்காது என்று இருந்த நிலையில், அவருக்குக் கிடைக்கும்படி செய்யக்கூடிய விதத்தில், அவர் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு பெரிய அளவுக்குப் பணியாற்றி இருக்கிறார்கள்.

அவர், பிரதம மந்திரியை—கட்சித் தலைவர்—தேர்ந்தெடுக்கும் நேரத்தில்கூட மிகச் சாதுர்யமாக—'கான்சன்சஸ்'—என்று சொல்லக்கூடிய அடிப்படையில் அங்கத்தினர்களுடன் பேசி, அவர்களுடைய பொதுக்கருத்து இது தான் என்று சொல்லி, திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களை தேசத்தின் பிரதமராக எவ்வித சிக்கலும் இன்றி தேர்ந்தெடுத்தது அவரது அரசியல் மேதைத்தனத்தை வெளிப்படுத்தக்கூடியதாக இருக்கிறது.

அதற்கடுத்தாற்போல், காங்கிரஸ் கட்சியின் பெரிய பதவியில் இருந்து கொண்டும், ஸ்தாபனத்தில் பெரிய பதவிகளில் இருந்து கொண்டும். அதே சமயத்தில் மந்திரி சபையில் இருந்து கொண்டும், சிலர் வேலைக்கு குந்தகமாக இருந்து கொண்டிருந்த நேரத்தில், 'காமராஜ் திட்டம்' என்ற ஒரு திட்டத்தின்கீழ் பல மந்திரிகளை விழ்த்தி விட்டு, அவர்களை கட்சிப் பொறுப்பேற்கச் செய்யக்கூடிய நேரத்தில், அவருக்கு இருந்த பெரிய பதவி, 'இன்டக்ரேடட் மெட்ராஸ் ஸ்டேட்' முதலமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்து விட்டு, காங்கிரஸ் கட்சியின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, டெல்லி மாநகரத்திற்குச் சென்று பணியாற்றினார் என்ற சரித்திரத்தை எல்லாம் தமிழர்கள் ஒரு நாளும் மறக்க மாட்டார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஒவ்வொரு நடவடிக்கையிலும் தான் ஒரு தமிழன் என்று சொல்லக் கூடிய உணர்வு மேலிட்டு இருந்தார்கள். தமிழ்நாடு வாழவேண்டும், தமிழ் மக்கள் வாழ வேண்டும், தமிழ் மொழி வாழ வேண்டும் என்ற மூன்றையும் சேர்த்துப் பார்க்கக்கூடிய விதத்தில், பாரதியார் கூறியது போல், "வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய வாழியவே" என்ற அளவில் அவர்கள் வாழ்ந்து காட்டினார்கள். எத்தகைய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாக இருந்தாலும், அதை எதிர்ப்பதற்கு தமிழருக்கு என்று ஒரு தனி பாங்கு உண்டு, பண்பு உண்டு, இன ஒற்றுமை உண்டு என்ற முறையில் காரியங்களை ஆற்றி வந்தார்கள். அவருடைய மறைவு தமிழ் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு. சாதாரணமாக இதைப் பூர்த்தி செய்து விட முடியாது. அவர் இறந்து விட்ட போதிலும் கூட தமிழர்கள்

காலம் உள்ள வரையில் அவர்களுக்கு என்றென்றும் அஞ்சலி செலுத்தி, அவர்களை ஒரு நாளும் மறக்காது இருப்பார்கள். அவர்கள் என்றென்றும் தமிழர்கள் மத்தியில் சிரஞ்சீவியாக வாழ்வார்கள். அவர்கள் நாமம் என்றென்றும் வாழ்க என்று புகழ் அஞ்சலி செலுத்துகிறேன்.

அது மட்டுமல்லாமல், அன்றையதினம் தகனக் கிரியை எந்த அளவுக்கு அவருடைய பெருமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது என்பதை நாம் அறிவோம். ஏற்கெனவே அவர் முதலமைச்சராக இருந்து ஆற்றிய பணிகள், இந்திய அரசியலிலே அவர் பெற்றிருந்த பங்கு போன்ற காரியங்களை எண்ணி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம் மறைந்த தலைவர் காமராஜர் அவர்களை எல்லாவிதத்திலும் கௌரவித்திடும் தகனக் கிரியைக்கு மிகச் சிறப்பான பொறுப்பேற்றார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது ஒரு பொறுப்பு. முதலமைச்சராக இருக்கக்கூடிய ஒருவர் இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்பட்டுவிடுகின்றபோது அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்றவாறு, அவர்களுடைய பெருமைகளை எடுத்துக்காட்டுகின்ற வகையில், அவர்களுக்கு மரியாதை காட்டுகின்ற வகையில், அதை ஒரு கடமையாகக் கருதி செய்தாரே தவிர இதில் வேறொன்றும் இல்லை. அதை நாடு புரிந்துகொண்டிருக்கிறது. அதே நேரத்தில் திருமதி இந்திராகாந்தி அம்மையாரும் தன்னுடைய கடமையை உணர்ந்து டில்லி மாநகரிலிருந்து பறந்து வந்து தகனக்கிரியையில் கலந்துகொண்டதை இந்திய மக்கள் மறந்துவிட மாட்டார்கள்.

இந்திய அரசியல் வானத்திலே பெரும் பொறுப்புகளை ஏற்று, பல வியத்தகு காரியங்களைப் புரிந்து திடீரென்று மறைந்துவிட்டது ஒரு திடுக்கிடும் சம்பவமாகும். அதனால் அவர் யாரிடமும் தம்முடைய உள்ளக் கிடக்கையைச் சொல்ல முடியவில்லை; தன்னுடைய மன நிலையை எடுத்துரைக்க முடியவில்லை. அதைப் போலவே திடீரென்று அவர் மறைந்துவிட்டது சிக்கல்களுக்கு இடமில்லாமல் செய்துவிட்டது என்பதையும் சொல்ல வேண்டும். அவரைப் புரிந்துகொள்ளக் கூடியவர்கள்—நிச்சயம் அவர்கள் கட்டிய ஸ்தாபன காங்கிரஸ் கட்சி ஊழியர்கள், திரு. பொன்னப்ப நாடார் போன்றவர்களே அவரைப்பற்றி நன்கு தெரிந்திருக்க





முடியும். அவர்களுக்குத்தான் அவர் எந்த வழியில் செல்ல விரும்பினார் என்பது தெரியும். இதிலே மற்றவர்கள் தலையிட்டு சிக்கல் ஏற்பட வழியில்லை. அவர் கட்டிய காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு இந்த நம்பிக்கையைத் தெரிவித்து, அவரை இழந்து வாடும் மக்களுக்கு எங்களது அனுதாபத்தைத் தெரிவித்து, மறைந்த தலைவருக்கு புகழஞ்சலி செலுத்துகிறோம்.

* திருமதி சத்தியவாணிமுத்து: சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இங்கே அவை முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இரு இரங்கல் தீர்மானங்களுக்கும் எங்களது வருந்தத்தக்க ஆதரவையும் தரவேண்டிய சூழ்நிலை வந்திருப்பது குறித்து நான் வருந்துகிறேன்.

மறைந்த அமைச்சர் என்.வி.என் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு பெரும் தூணாக இருந்தார்கள். அவரது இழப்பு அந்தக் கழகத்திற்கு பேரிழப்பாகும். சுயமரியாதை இயக்க காலத்திலே இருந்து—அண்ணாவால் உருவாக்கப்பட்ட ஆட்சியில் அமைச்சராக இருந்து—மறைகின்ற வரையிலும் அந்த இலட்சியங்களுக்காகவே அவர் வாழ்ந்தார். அவர்களுடன் 30 ஆண்டு காலத்திற்கு மேலாக கழகப் பணியில் சென்னையில் நித்தம் நித்தம் சந்தித்து செயலாற்ற வேண்டிய சூழ்நிலை எனக்கு இருந்தது. நான் இன்றைக்கு அந்தக் கழகத்திலே இருந்து வேறுபட்டு நின்றாலும் அவரது மறைவால் என்னுடைய உடன் பிறப்பு ஒருவர் மறைந்துவிட்டால் ஏற்படுகிற மன வேதனையை நான் அடைகிறேன்.

இந்த இயக்கத்திலே எங்களை ஈடுபடுத்திக்கொண்ட நாங்கள், ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள் சுயமரியாதை இயக்கக் கருத்துக்கள் மூலமாக மேம்பாடு அடைவார்கள் என்பதற்காக எந்தவிதமான பிரதிபலனும் கருதாமல் உழைத்துவந்தோம். அதிலே மதிப்புக்குரிய என்.வி.என் அவர்கள் மிகச் சிறந்த ஆற்றலைப்பெற்று பணி செய்பவர் ஆவார்கள். இயக்கத்திற்கு சட்டதிட்டம் என்றால் அவர் கை படாத சட்டத்திட்டம் உருவாகவில்லை; இயக்கம் நடத்துகிற மாநாடுகள் என்றால் அவர் இருந்து நடத்தாத மாநாடுகள் இல்லை; இயக்கம் நடத்துகிற போராட்டங்கள் என்றால் அவர் கலந்துகொள்ளாத போராட்டங்கள் இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் இன்று உயிரோடு இருந்

[திருமதி சத்தியவாணிமுத்து] [1975 அக்டோபர் 22

திருப்பார்களானால் அவர்கள் நம் அனைவரையும் விட மிகவும் வருந்தி கண்ணீர் சிந்துவார்கள். காரணம் என்.வி.என். அவர்கள் அண்ணாவுக்கு வலது கரமாக இருந்து கழகப்பணி ஆற்றினார்கள்.

கழகத்தில் தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் ஏற்படுகிற விருப்பு, வெறுப்பு எதுவாக இருந்தாலும் அதற்கு இடையிலே என்.வி.என். அவர்கள்தான். சிக்கிக்கொள்வார்கள். தலைவர்களின் கோபத்திற்கும் அவர்தான் ஆளாக்கப்படுவார்; தொண்டர்களின் கோபத்திற்கும் அவர்தான் ஆளாக்கப்படுவார். அந்த அளவுக்கு அவர் பொறுப்போடு இருந்து கழகப்பணி ஆற்றியதால் கழகம் வெற்றிபெற வாய்ப்புகள் இருந்தன. அதைச் சொல்வதன் மூலம் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1938-ம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அவர் மட்டுமல்லாமல் அவருடைய துணைவியார்கூட பெற்ற குழந்தையுடன் சிறைச்சாலை சென்றார். பெண்கள் அரசியலிலே தங்களை அர்ப்பணித்துக்கொள்வது, அதுவும் போராட்டங்களிலே கலந்துகொள்வது, கழகத்தைச் சேர்ந்த பெண்கள் போராட்டங்களிலே கலந்துகொள்வது என்ற கருத்து மதிப்பிற் குறைந்ததாகக் கருதிய. அந்த நேரத்தில் 1938-லேயே என். வி. என். அவர்கள் தமது துணைவியாரை சிறைச்சாலைக்கு அனுப்பினார்கள் கைக் குழந்தையுடன் அதற்குப் பிறகு அரசியல் சூழ்நிலை தம் துணைவியார் போராட்டங்களில் ஈடுபட இடம் தராமல் இருந்திருக்கலாம். ஆனால் அவர் குடும்பத்தோடு தன்னை கழகப் பணிகளுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்ற அளவுக்கு 1938-லேயே அர்ப்பணித்துக்காட்டினார். அவர் எப்படிப் பட்ட உணர்வுகளைக் கொண்டிருந்தார், எத்தகைய கொள்கைப் பிடிப்பை மேற்கொண்டிருந்தார் என்பதை அரசியல்வாதிகள் உணர்ந்தாக வேண்டும். அவருடைய வாழ்க்கை அரசியல்வாதிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டான வாழ்க்கை; எளிய வாழ்க்கை, சாதாரண வாழ்க்கை; எந்தவிதமான பிரதிபலனும் கருதாமல் வாழ்ந்த வாழ்க்கை; அனைவர் மத்தியிலும் இடம் பெறக்கூடிய வாழ்க்கை; தன்னுடைய கொள்கையில் உறுதியாக இருந்தார். அவர் தொண்டனாக இருந்த போதிலும் அமைச்சராக இருந்த போதிலும் ஒரேமாதிரியான வாழ்க்கைதான் வாழ்ந்தார்.



1975 அக்டோபர் 22] [திருமதி சத்தியவாணிமுத்து]

நான் அமைச்சரவையிலே இடம் பெற்றிருந்தபோது அவருக்கு அருகிலே இருந்தேன். அப்போது நடைபெற்ற ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அவர் அருகிலே அமர்ந்திருக்கும்போது சில நேரங்களில் அலுவல் காரணமாக 'நான் மேலே அலுவலகத்திற்குச் சென்று வருகிறேன்' என்று சொல்வதற்குப் பதிலாக சுருக்கமாக 'மேலே செல்கிறேன்' என்பார். அப்போது பக்கத்திலே உட்காரும் அமைச்சர் சண்முகம் அவர்கள் வேடிக்கையாகச் சொல்வார்கள்—அப்போது வேடிக்கையாக இருந்தது; இப்போது வேதனையாக இருக்கிறது—ஏன் இவ்வளவு சீக்கிரம் மேலே போகிறீர்கள் என்று. இவை எல்லாம் நெருங்கிய பழக்கத்தினால் ஏற்படுகிற துன்ப எண்ணங்கள். அதை மறந்துவிட்டு, அவர் எந்த இலட்சியங்களுக்காகப் பாடுபட்டாரோ அதை, அவர் இல்லாமல் மறைந்துபோய் விட்டாலும், நிறைவேற்றி வைக்கப் பாடுபடுவதுதான் இந்த நேரத்திலே அவருக்குத் தெரிவிக்கின்ற மரியாதைக்குரிய காரியங்கள் ஆகும்; அண்ணாவுக்கும் நீங்கள் செய்யக்கூடிய காரியமாகும்.

அடுத்து, இந்திய நாட்டின் பெரும் தலைவர் மதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு ஆற்றிய அரும்பணிகளுக்காக நாம் அனைவரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். பல தலைவர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட மக்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு துன்பங்கள், துயரங்கள் ஏற்படும்போதெல்லாம் மதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு துணை, துணையாக நின்றிருக்கிறார்கள் என்பதை தமிழக அரசியலில் அனைவரும் கண்ட உண்மையாகும்

1957-ம் ஆண்டில் நான் இந்தச் சட்டமன்றத்தின் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தபோது இனக் கலவரம் ஏற்பட்டபோது அவர் எடுத்த முடிவு தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சாதகமாகத்தான் இருந்ததே தவிர மற்றவர்களுக்காக அல்ல. அதைப்போலவே பேரறிஞர் அண்ணா அவர்களும் கீழ்வெண்மணியிலே நடைபெற்ற சம்பவத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் பக்கத்திலேதான் இருந்தார்கள். இப்படிப்பட்ட தலைவர்கள் எல்லாம் இன்றைக்கு மறைந்துவிட்டார்கள். முதலிலே பேசிய அண்ணா திராவிட

முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எட்மண்ட் அவர்கள் கூறியதைப்போல பேரறிஞர் அண்ணா அவர்களின் இழப்பு, அதற்குப் பின்னாலே இராஜாஜி அவர்களின் இழப்பு, அதற்குப் பின்னாலே காயிதே மில்லத் அவர்களின் இழப்பு, அதற்குப் பின்னாலே தந்தை பெரியார் அவர்களின் இழப்பு, இப்போது காமராஜ் அவர்களின் இழப்பு—இப்படி ஒவ்வொருவராக பெரும் தலைவர்களை எல்லாம் நல்ல தலைவர்களை எல்லாம் தமிழகம் இழந்துவிட்ட நிலையில் எந்தெந்தக் கொள்கைகளை அவர்கள் வலியுறுத்தி வந்தார்களோ அந்தக் கொள்கைகளுக்காகப் பாடுபடுவதுதான் நம்முடைய தலையாய கடமை என்பதை உணர்ந்தாக வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றைக்கும் காமராஜ் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர் ஆட்சியிலே பல்வேறு நற்பணிகளை தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செய்திருக்கிறார்.

நான் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தை அமைப்பதற்கு முன்னாலே அவரைச் சார்ந்து, அவரது அறிவுரையைக் கேட்டபோது அவர் இந்தக் கழகம் வேண்டாம் என்று சொல்லவில்லை. அவர் எனது கருத்துக்களை ஏற்றுக்கொண்டார்கள். நான் ஏற்றுக்கொண்டிருக்கிற முயற்சி வெல்ல வேண்டுமென்று வாழ்த்துத் தெரிவித்ததோடு சில அறிவுரைகளைச் சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒரு இயக்கம் தேவை என்பதை ஒப்புக்கொண்டு பேசினார்கள். அப்பேர்ப்பட்ட மாபெரும் தலைவரை நாம் இழந்துவிட்டிருப்பது நம்முடைய நாட்டிற்கே பேரிழப்பாகும்.

இங்கே பல தலைவர்கள் அவருக்கு நினைவுச் சின்னம் வைப்பதைப்பற்றிச் சொன்னார்கள். தமிழக அரசு அவருக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதைப்பற்றி—பலபேர் சொன்னார்கள் என்பதற்காக நான் சொல்லவில்லை—முன்பே சிந்தாதரிப்பேட்டையில் நான் பேசிய அவரது அனுதாபக் கூட்டத்தில் சொன்னேன். அவருக்கு ஒரு நல்ல நினைவுச் சின்னம் வைக்க—முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் திரு. லத்தீப் அவர்கள் டெல்லியில் உள்ள ஜன்பத் சாலைக்கு காமராஜர் சாலை என்று பெயர் வைக்கப்படவேண்டும் என்று சொன்னார்கள். திரு. காமராஜர் இந்த மண்ணிலே பிறந்து, இந்த மண்ணிலே வாழ்கின்ற மக்களுக்காக தம்மையே அர்ப்பணித்துக் கொண்ட தியாகச் செம்மல். ஆகவே, அவர் பிறந்த விருதுநகரின்





பெயரையே காமராஜர் நகர் என்று பெயர் வைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு எழுதியிருப்பாரானால் அவர் பெயர் நிற்கும். ஊருக்கு ஊர், கிராமத்திற்கு கிராமம் நினைவுச் சின்னம் வைக்கப்பட்டாலும் கூட இதுபோல விருது நகரின் பெயரையே காமராஜர் நகர் என்று மாற்றிடுவது என்றைக்கும் நிலைத்து நிற்கும், சிறப்பான நினைவுச் சின்னமாக அமையும் என்கிற கருத்தில்தான் நான் இதனைச் சொல்கிறேனே தவிர, தமிழ்நாட்டு மக்கள் அவருக்கு நினைவுச் சின்னம் வைப்பதன் மூலம் தான் அவர் பெயர் நிலைக்கும் என்கிற நிலையில்லை. அப்பேர்ப்பட்ட மாபெரும் தலைவரை, தியாகச் செம்மலை தமிழகம் இழந்துவிட்டிருக்கிறது.

அவர் வெறும் பேச்சுக்காக தமிழர் என்று இல்லை. நடை, உடை பாவனைகள் அனைத்திலும் அவர் தூய தமிழராகவே இருந்தார். அவர் ருஷ்ய நாட்டிற்குச் சென்றபோது கூட வேட்டியும், சட்டையும் அணிந்துகொண்டு அந்தக் குளிர் நாட்டிற்குச் சென்றாரே தவிர பூட்டும், சூட்டும் போட்டுக்கொண்டு சென்றாரில்லை. அவர் எந்த இடத்திற்குச் சென்றாலும் எந்த உயர் பதவியில் இருந்தாலும் தமக்கென்று ஒரு கொள்கை—தமக்கென்று ஒரு நடையுடைபாவனை வைத்துக்கொண்டு ஒரு தனி வழியே அமைத்துக் கொண்டு வாழ்ந்து காட்டினார்கள். அரசியல்வாதிகள் அவரிடம் இருந்து கற்கவேண்டிய வழிகள் ஏராளம். ஏழைகளுக்குத் துணைவராக, பாமர மக்களுக்குத் துணைவராக, பாட்டாளி மக்கள் அத்தனை பேர்களுக்கும் துணைவராக அவர் ஆட்சியில் இருந்தபோது ஆற்றிய பணிகளையும், ஆட்சியில் இல்லாது வெளியில் இருந்து ஆற்றி வந்த பணிகளையும் யாரும் மறந்து விடுவதற்கில்லை.

நான் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அவரது மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு மறைந்த இரு தலைவர்களது குடும்பத்தினர்களுக்கும் எங்கள் கட்சியின் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்து, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கின்றேன்.

**திரு. இ. எஸ். தியாகராசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்துள்ள இரங்கல் தீர்மானங்களை ஆதரித்து தமிழரசுக் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என்.வி.என். அவர்கள் தமிழகத்தில் தோன்றி, இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பல தியாகங்களைச் செய்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்காக இடையறாது தொண்டாற்றி, அரசியலில் தம் வாழ்நாள் பூராவையும் அர்ப்பணித்துக்கொண்டு, நாட்டு மக்களுக்காக தொண்டாற்றிய ஒரு பெரும் தியாகி என்பதை நான் இந்த நேரத்தில் ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. என்.வி.என். இல்லாத திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகளோ, பொதுக் கூட்டங்களோ இருந்திராது. அந்த அளவுக்கு அவர் தம்மை அந்தக் கட்சியோடு கூட இணைத்துக்கொண்டு அதன் வளர்ச்சிக்கே தம்மை அர்ப்பணித்து கொண்டிருந்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் கடந்த 6 ஆண்டு காலமாக தமிழகத்தின் அமைச்சரவையில் ஒரு அமைச்சராக இருந்து—அவரிடம் எந்தப் பொறுப்பை ஒப்படைத்தாலும், அந்தப் பொறுப்பினை மிகத் திறமையாக நடத்தி, தமிழகத்து மக்களின் உள்ளத்தில் நிலையான இடத்தைப் பெற்றுவிட்டார்கள். அவரது மறைவு நாட்டிற்குப் பேரிழப்பாகும். தமிழரசுக் கட்சியின் சார்பாக அவரது குடும்பத்தார்களுக்கு நான் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் நம்மையெல்லாம் ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு, மறைந்துவிட்ட, மாபெரும் தலைவராகப் போற்றப்படுகிற திரு. காமராஜ் அவர்கள் மறைவு குறித்து நாடே வருந்துகிறது. அவர் 2—10—1975 ஆம் நாள் அன்று நம்மைவிட்டு மறைந்து விட்டார்கள்.

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் தமிழ்நாட்டில் தோன்றி உலகமே போற்றக்கூடிய அளவுக்கு ஏழை எளிய மக்களுக்காக தம் வாழ்நாளையே அர்ப்பணித்துக் கொண்டார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் நினைவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர் ஒன்பது ஆண்டுகாலம் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தார். ஏழை எளியவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்பதற்காக தம் வாழ்வையே அர்ப்பணித்துக்கொண்டு அரும்பெரும் தொண்டாற்றினார் என்பதை நான் இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் இம்மண்ணில் வாழ்ந்த 72 ஆண்டுகளில் 10 ஆண்டுக்காலம் சிறையிலேயே வாழ்ந்திருக்



கிறார்கள். அத்தகைய உயர்ந்த தியாக வாழ்க்கையில் தொண்டுள்ளத்தோடு சிறந்து விளங்கினார்கள். அந்தப் பெருமகனாரின் நினைவுக்கு நாம் அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அந்தப் பெருந்தலைவரின் பாதம் படாத இடமே தமிழகத்தில் இருக்காது. அவர் நுழையாத கிராமங்களே இருக்காது. ஏழை எளியவர்கள் தம் வாழ்வை எப்படி எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதை அவர் போகும் இடங்களில் எல்லாம் வற்புறுத்திச் சொல்வார். அவரது மறைவு இந்தியத் துணைக் கண்டத்திற்கே பேரிழப்பாகும். அன்னாரைப் பிரிந்து வருந்துகின்ற அத்துணை பேர்களுக்கும் தமிழரசுக் கட்சியின் சார்பில் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த பெருந்தலைவருக்கு மரியாதை தெரிவித்து, அவரது நினைவுக்கு என்றும் அழியாச் சின்னமாக விளங்கும் வகையில் தமிழக அரசு மகாத்மா நினைவு மண்டபத்தையொட்டியே அவருக்கோர் அருமையான நினைவாலயம் அமைக்க, எடுத்துக் கொண்ட முயற்சிக்கு தமிழக அரசுக்கு நன்றி செலுத்தி விடை பெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவை முன்னவர் முன்மொழிந்தவாறு, இரண்டு பேரிழப்புகளைத் தாங்கிக் கொண்டு, இரங்கல் தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மூலமாக நமக்கு நாமே ஆறுதல் கூறிக்கொள்ள, இந்த மாமன்றத்தில் சில கருத்துக்களை அனைத்துக் கட்சியின் சார்பிலும் எடுத்து வைத்திருக்கின்றோம்.

மறைந்தவர் இருவரும் உழைப்பின் உருவங்கள்; தியாகச் செம்மல்கள்; கடந்த கால சம்பவங்களையும், கருத்துமாறுபாடுகளையும், கடுமையான விமர்சனங்களையும் கழுவக்கூடிய ஆற்றல் பெற்றது கண்ணீர் ஒன்றுதான். அந்தக் கண்ணீரைக் காணிக்கையாக ஆக்குவதன் மூலம், மறைந்த இரண்டு பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதோடு மாத்திரம் அமையாமல், அவர்கள் விட்டுச் சென்றிருக்கிற நற்பண்புகளை மேற்கொண்டு, தொடர்ந்து கொள்கை உறுதியோடு லட்சியப் பயணத்தை நடத்த வேண்டுமென்ற குறிக்கோளை மேற்கொள்ளவும் இந்த இரங்கல் தீர்மானம் நிகழ்ச்சி பயன்படும், பயன்பட வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்பு

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 அக்டோபர் 22

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இரணியலில் அரசினர் உயர்நிலைப்பள்ளியொன்று ஏற்கெனவே இருக்கிறது. அதிலே ஆறு முதல் 11 வகுப்புகள் வரையிலும் இருக்கின்றன. அதிலே 1,066 மாணவர்கள் படித்து வருகிறார்கள். மாணவியர்கள் 657 பேர்கள் படித்து வருகிறார்கள். ஆகவே, தனியாக பெண்கள் உயர்நிலைப்பள்ளி வைக்க எண்ணிக்கை போதுமா என்றால் போதும். பக்கத்திலே 3-வது மைலிலே எல்.எம்.எஸ். உதவிபெறும் பள்ளி ஒன்று இருக்கிறது, அதிலே





எழுநூற்றுச் சில்லரை பேர்கள் பயின்று வருகிறார்கள். ஆகவே, ஆயிரத்து சில்லரை மாணவர்கள் பயின்று வருகிறார்கள். தனியார் துறையிலே அங்கே பெண்களுக்கு என்று தனியாக ஒரு பள்ளி தொடங்கவேண்டுமென்றால் அதற்காக என்று ஐந்து ஏக்கர் நிலமும் அதற்காகப் போடப்படுகின்ற நிபந்தனைகளை நிறைவேற்றுகின்ற தன்மையும் இருக்குமானால் பெண்கள் பள்ளி வைப்பதற்கான நடவடிக்கையை அரசு கவனத்தில் கொள்ளலாம்.

### *Medicinal Chemistry Research Centre.*

* 6. *Q*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that Medicinal Chemistry Research Centre is functioning in the State; and

(*b*) whether there is any proposal under consideration to open such centres in all districts?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. என். கே. பழனிசாமி: இதுவரையில் நடத்திய ஆராய்ச்சியின் பயன் என்ன? என்ன என்ன விஷயங்கள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன? இதை ஜில்லாக்களுக்கும் விஸ்தரிப்பதன் மூலமாக அங்கேயும் சௌகரியங்கள் ஏற்படு மல்லவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மெடிசினல் கெமிஸ்ட்ரி என்ற மருத்துவம் குறித்த இரசாயன ஆராய்ச்சித் துறை செயல்பட்டு வருகிறது. திறமைபெற்றவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள் சென்னையிலே இரண்டு மூன்று கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், மாநிலக் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர், பொது மருத்துவ மனைக் கல்லூரியைச் சேர்ந்த இரண்டு பேராசிரியர்கள் இவர்கள் இணைந்து சென்னை பொது மருத்துவ மனைக் கல்லூரியில் இந்த ஆராய்ச்சியை நடத்தி வருகிறார்கள். தனி அமைப்பாக இந்த ஆராய்ச்சியை நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, பரவலாக நடத்தப்படக் கூடிய ஒன்று அல்ல இது. இந்த நடத்துவதற்கு அதிகத் தேர்ச்சி பெற்றவர்கள் தேவை. இந்த ஆராய்ச்சியின் பலன்கள் மருத்துவக்

கண்டுபிடிப்புகளுக்குப் பயன்படும். அதுவும் முழு அளவுக்கு நடத்துவதற்கான வாய்ப்பும் வசதியும் இல்லை. ஏற்படுத்தப் பட்டிருக்கிற அமைப்பின்மூலம் கிடைக்கின்ற பலன்கள், உண்மைகள் வேண்டுமானால் மருத்துவத் துறையின் வாயிலாகப் பரவக்கூடும்.

### சேலம் மாவட்ட மருத்துவ மனையில் சிறப்புப் பிரிவுகள்

*7 வினா—திரு. கி. ஜெயராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட அரசினர் மருத்துவ மனையில் Intensive Coronary Care Unit, Cancer Treatment Care Unit போன்ற சிறப்புப் பிரிவுகளைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சேலம் மாவட்ட மருத்துவ மனையில் Intensive Coronary Care Unit தொடங்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆனால் Cancer Treatment Care Unit தொடங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

### *Metropolitan Land Bank.*

*8 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether the Seminar on Metropolitan Development Planning at its meeting around January 1975 have decided to recommend to the State Government to open a Metropolitan Land Bank; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) சென்னையில் 1975 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 6, 7-ஆம் நாட்களில் சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம், சென்னை-செங்கற்பட்டு வட்டார வளர்ச்சித் திட்டம் ஆகியவை குறித்து நடைபெற்ற கருத்தரங்கில் பல பரிந்துரைகள் வழங்கப் பட்டன. பெருமளவில் நிலத்தைக் கையகப்படுத்துதல், அந்நிலத்தை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை நிறைவேற்றும் பொருட்டு நில மேம்பாட்டு வங்கி ஒன்றை ஏற்படுத்த சென்னை





பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திடம் ரூபாய் ஐந்து கோடி அடிப்படை மூலதனமாக முதற்கண் வைத்திட வேண்டுமென்பது இதில் செய்யப்பட்ட பரிவுரைகளில் ஒன்றாகும். இதுகுறித்து திட்டவட்டமான செயற்குறிப்பு எதுவும் சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திடமிருந்து அரசுக்கு இதுவரை வந்து சேரவில்லை.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister when this scheme of opening a Metropolitan Land Bank will be implemented ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அதற்கான அடிப்படையான ஆலோசனைகளே நடைபெறவில்லை. ஒரு கருத்தரங்கில் பேசப்பட்ட, சொல்லப்பட்ட ஆலோசனைதான் அது. ஆனால் இந்த வங்கி ஏற்படுத்தப்படாவிட்டாலும், எங்கெங்கு பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்கு வாய்ப்பிருக்கிறதோ அவற்றின் தனித்தனி வளர்ச்சிக்கு, மணலி, எண்ணூர் போன்ற இடங்களில், இப்படி எங்கெங்கு ஏற்படுத்தப்படுகிறதோ அந்த இடங்களில் லேண்ட் அக்விசிஷன் எந்த அளவிற்குச் செய்ய வேண்டுமோ அந்த அளவிற்குச் செய்வதற்கான நிதியைப் பெறுவதற்கு இந்தப் பெருநகர் வளர்ச்சி மன்றம் முயற்சிக்கிறது.

### வீரக்கல்புதூர் நீர் வழங்கு திட்டம்

*9 வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தாலுக்கா பி. என். பட்டி வீரக்கல்புதூர் குடிநீர் வழங்கு திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மேட்டூர் தாலுக்கா பி. என். பட்டி வீரக்கல்புதூர் குடிநீர் வழங்கு திட்டத்திற்கு அரசு ஜனவரி 1975-ல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. வருகிற 1976-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் அமுலுக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டிருக்கிறது.

[1975 அக்டோபர் 23

## கடல் அரிப்புத் தடுப்பு

*10 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகை பகுதியில் கடல் அரிப்பைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நாகை பகுதியில் வெள்ளையாறு கடலுடன் கலக்கும் இடத்தில் (மைல் 99/4—260) இடது கரையைச் சார்ந்து இருக்கும் குடிசைப் பகுதியை ஆற்று வெள்ளத்திலிருந்தும் கடலரிப்பிலிருந்தும் பாதுகாக்க தடுப்புச் சுவர் ஒன்று இரண்டரை லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது.

**திரு. அ. தேவேந்திரன்:** தலைவரவர்களே, நானும், நாகை சட்டமன்ற உறுப்பினரும் நம்பியார் குப்பம், கீச்சாங்குப்பம் போன்ற நாகை கடற்கரைப் பகுதிகளுக்குப் போயிருந்தோம். அங்கே சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் இரண்டு பர்லாங் வரையில் கடல் வந்திருக்கிறது. நாம் புதிய பூம்புகாரை உண்டாக்கியிருக்கிறோம். டச்சுக்காரர்களின் கோட்டையை ரிப்பேர் செய்து இப்பொழுது காத்து வருகிறோம். அந்தப் பகுதியிலேயும் இரண்டு பர்லாங் தூரத்திற்கு கடல் அரித்து உள்ளே வந்திருக்கிறது. அவைகளைக் காப்பாற்றும் வகையில் ஏதேனும் துரிதமாகச் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நாகை பகுதியில் வெள்ளையாறு கடலுடன் கலக்கும் இடத்தில் வெள்ளத்திலிருந்தும் கடலரிப்பிலிருந்தும் பாதுகாக்க வேண்டுமென்ற நிலைமையிருக்கிறது என்ற தகவல் அரசுக்குக் கிடைத்தவுடனேயே, அங்கே இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் தடுப்புச் சுவர் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது. அங்கத்தினர் குறிப்பிடும் இடத்தைப் பற்றிப் பரிசீலிக்கலாம். பூம்புகாரைப் பற்றிக் கேட்டார்கள். அதுபற்றி அடுத்த கேள்வியில் வருகிறது. அப்பொழுது அதைப் பற்றிப் பதில் சொல்கிறேன்.



1975 அக்டோபர் 23]

*11 வினா—திரு. டி. வி. சம்பத்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடியிலிருந்து பூம்புகார் வரை கடல் அரிப்புக்காக தடுப்புச் சுவர் படுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) தற்பொழுது இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

இதைத் தொடர்ந்து ஒன்றை நான் தெரிவித்து விடுகிறேன். பூம்புகார் பற்றிய இந்தக் கேள்வி போடப்பட்ட நேரத்தில் இந்த விடை அளிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது சமீபத்தில் முதலமைச்சரவர்கள்கூட பூம்புகாருக்குச் சென்று பார்த்துவிட்டு வந்தார்கள். நானும் சென்றிருந்தேன். கடலரிப்பு அதிகமாக இருக்கிறது என்று அறிந்த முதலமைச்சரவர்கள் அரசு அதிகாரிகளைக் கூப்பிட்டு அதை எந்த அளவிற்குப் போக்க முடியுமோ அந்த அளவிற்கு தடுப்புச் சுவருக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. இராசமாணிக்கம்:** தலைவரவர்களே, இந்தக் கடல் அரிப்பினால் ஏழை மீனவர்களுக்கு இல்லங்கள் இல்லாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அங்கே தடுப்புச் சுவர் கட்ட வேண்டியது மிகவும் அவசியம். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, பூம்புகாரைப் பொறுத்தவரையிலும் ஏழை மீனவர்கள் குடிசைகளில் வாழவில்லை. அங்கேயுள்ள மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாகப்பட்டினத்தில் தடுப்புச் சுவர் கட்டப்பட்டு வருகிறது, நான் ஏற்கனவே குறிப்பிட்ட இடத்தில். அங்கத்தினருக்கு இதுபற்றி வேறு ஏதேனும் குறைபாடு இருந்தால் அதுபற்றி எழுதி அனுப்பினால் விசாரிக்கச் சொல்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, பூம்புகார் போன்ற இடங்களிலே மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தோம். கொடியம்பாளையத்திலேயிருந்து கோடிக்கரை வரையிலேயும் தடுப்புச் சுவர் கட்டவில்லை என்றால் எத்தனை கோடி ரூபாய் செலவழித்து வீடுகள் கட்டினாலும் அவை வீணாகிவிடும். குறிப்பாக, திருமுல்லைவாசல் பகுதியிலே ஒவ்வொரு தேர்தலிலும் வாக்குறுதி கொடுக்கப்படுகிறது. பெரும்பான்மையான முஸ்லீம் சமுதாயத்தினர் இதே குறையைச் சொல்லி வருகிறார்கள். இதைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, என்னிடத்திலே இருக்கிற தகவல்படி கடலரிப்பு அதிகமாக இருப்பதாகத் தகவல் இல்லை. அதிகாரிகள் குறிப்பிட்டிருக்கின்ற புள்ளிவிவரங்களின்படி கடல் அலைகள் அதிகமாக இருந்தால் தண்ணீர் உள்ளே வருவதும் வெளியே செல்வதுமாக இருக்கிறது. காற்று, புயல் அடிக்கும்பொழுது கொஞ்சம் அதிகமாக வருகிறது. இப்படி கடல் தண்ணீர் வருகிறதே தவிர வேறொன்றும் இல்லை. கடல் அரிப்பு கன்னியாகுமரி மாவட்டத்திலே சில பகுதிகளிலே இருக்கிறது. அவைகளுக்குத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு 351 இலட்சம் ரூபாய்க்கான திட்டத்தை மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி நிதி கேட்டோம். இதுவரையில் அதற்கே பதில் இல்லை. மேற்கொண்டு கேட்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, பண்டைய காவிரிப் பூம்பட்டினம் கடலில் மூழ்கிவிட்டது என்று சங்க இலக்கியத்தில் குறிப்பிடுவார்கள். ஆனால் இப்பொழுது கழக அரசு, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் புதிய பூம்புகாரை சிறப்பாக உருவாக்கியிருக்கிறார்கள். இருந்தாலும், இப்பொழுது ஏற்கனவே இருந்த கண்ணகி சிலை வரையில் கடலரிப்பு மிகத் துரிதமாக, நான்கைந்து ஆண்டுக் காலத்திற்குள்ளாக மிகவும் வேகமாக அங்கே கடலரித்து கண்ணகி சிலையையே கடல் கொள்ளக் கூடிய அளவிற்கு உண்மையிலேயே நிலைமை இருக்கிறது. இந்த நிலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல தட்வைகள் நேரிலேயே கண்டு வருகிறார்கள். எனவே, பொதுப்பணித் துறையின் மூலம்





விரைந்து ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கி கண்ணகி சிலையையும், இந்த புதிய பூம்புகாரையும் காப்பாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இப்பொழுது உருவாக்கப்பட்டுள்ள புதிய பூம்புகார் கலைக்கூடம் போன்றவைகளையும், நெடுங்கல் மன்றம், இலஞ்சி மன்றம் போன்றவைகளையும் காப்பாற்றுவதற்கும் கடல் அரிப்பிலிருந்து கண்ணகி சிலையைக் காப்பாற்றுவதற்கும் அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் ஒரு தடுப்புச் சுவர் அமைப்பதற்கே கூட 10 இலட்சம், 15 இலட்சம் ஆகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

அந்தக் கலைக்கூடங்களைப் பற்றி மட்டுமல்லாமல் மாண்புமிகு உறுப்பினர்கள் கடலரிப்பிலிருந்து மீனவர்களுடைய குடிசைகளைக் காப்பாற்றவும் அந்தத் தடுப்புச் சுவர் அமைய வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். மீனவர்களுடைய குடிசைகளை நல்ல கெட்டியான வீடுகளாக மாற்றியமைக்க அரசு திட்டம் தயாரித்து, முதல் கட்டமாக ஐயாயிரம் வீடுகள் என்று தொடங்கியிருக்கிறோம். அப்படி அந்த வீடுகள் கட்டப்படும் நோத்தில் மிக நெருங்கிய அளவில் கடலோரத்தில் கட்டப்படாமல் கொஞ்சம் தொலைவிலே கட்டுவதற்கு ஆங்காங்குள்ள மக்கள் பிரதிநிதிகளும், மீனவ நண்பர்களும் ஒத்துழைத்தால் இப்பொழுது [illegible] அந்த கடலரிப்பிலிருந்து ஓரளவிற்குக் காப்பாற்ற [illegible] இல்லாவிட்டால் அந்த வீடுகள் கட்டுவதற்கு ஆகும் செலவைவிட அதிகச் செலவு கடலரிப்பைத் தடுப்பதற்கு ஆகும். பொருளாதார ரீதியில் இதை ஆராய்ந்து செயல்படுத்த வேண்டும். இவையனைத்தும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

61717

**திரு. மா. வே. நாராயணசாமி:** தலைவரவர்களே, இந்தக் கடலரிப்பால் சென்னை மாநகரத்திலே இராயபுரம் கடலோரப் பகுதியிலும், குறிப்பாக திருவொற்றியூர் [illegible] அருகில் அடிக்கடி பாதிக்கப்பட்டிருக்கின்றன. [illegible] அரசு ஏதாவது ஆராய்ந்து தனித் திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தனியாகக் கேள்வி போட்டால் பதில் சேகரித்து அளிக்கிறேன்.

### *Lime stone deposits.*

*12 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to exploit the limestone in Ariyalur in Tiruchirappalli district for utilisation in Salem Steel Plant; and

(b) if so, the details of the same?

***மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:*** (அ) & (இ) ஆம். உருக்கு ஆலைகளின் பயனுக்கு ஏற்ற உருக்குத் தயாரிப்புக்கான தரமுள்ள சுண்ணாம்புக்கல், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூர் வட்டத்திலுள்ள அரியலூர் செந்துறை வட்டாரங்களிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கிடைப்பதாகத் தொழில்—வணிகத் துறை அலுவலகத்தில் புவியியல் பிரிவு மேற்கொண்ட ஆய்விலிருந்து தெரிய வருகிறது. சேலம் உருக்காலைக்குத் தேவைப்படும் உயரிய தரமுள்ள சுண்ணாம்புக்கல் படிவங்கள் கிடைப்பதைக் கண்டறிய அப்பகுதிகளில் விரிவான சுரங்க ஆய்வையும் துளையிடும் பணியையும் நடத்துவதென்று கருதப்பட்டுள்ளது.

* ***13 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்:*** மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுகா, சிவந்திபுரம் ஊராட்சிப் பகுதியில் உள்ள புறம்போக்கு நிலங்களில் சுண்ணாம்புக்கல், குண்டுக்கல், கல்பாளங்கள் ஆகியவை அதிக அளவில் கிடைக்கின்றன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

***மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:*** (அ) ஆம்.

(இ) அம்பாசமுத்திரம் வட்டம், சிவந்திபுரம் கிராமத்தில் சுண்ணாம்புப் படிக்கல் கிடைப்பது பற்றி விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. சிவந்திபுரம் கிராமத்திற்கு வடக்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் சுண்ணாம்புக்கல் படிமக்கீரல் ஏறக்குறைய 10 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஓடுவது தெரிகிறது.



அக்கீரல் தொடர்ச்சியாக இல்லாமல் வெவ்வேறு அகலங்களில் பரவியுள்ளது. இக்கீரலின் பெரும்பகுதியில் கறுப்பு மைக்கா (Biotite) மாங்கனீஸ் மைக்கா (Phologophite) மைக்கா ஏனைய கால்ஷியம் சிலிகேட் போன்ற தூய்மையற்ற கலப்படப் படிமங்களே அடங்கியுள்ளன. சுண்ணாம்புக்கல் படிம இருப்பு முழுவதும் சுமார் 20 லட்சம் முதல் 30 லட்சம் டன் வரை இருக்கும் என்று தெரிகிறது. அதில் சிமிட்டித் தயாரிப்புக்குரிய சுண்ணாம்புக்கல் படிமப் பகுதி மிகவும் குறைவானதே. இப்படிமம் தரம் குறைவாக உள்ளதையும் சிமிட்டித் தயாரிப்புக்குரிய படிமப் பகுதி குறைவாக இருப்பதையும் கருத்திற்கொண்டு பார்த்தால் சுண்ணாம்புக்கல்லை அடிப்படையாகக் கொண்ட எந்தத் தொழிலுக்கும் உறுதுணையாக இச் சுண்ணாம்புக்கல் படிமம் அமையாது; ஆதாயம் தர வல்லதாகவு மிருக்காது.

(முற்பகல் 9.30)

***திரு. என். கே. பழனிசாமி:*** சேலம் உருக்காலைக்குத் தேவையான சுண்ணாம்புக் கற்களை எடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? எந்த அளவுக்குச் சுண்ணாம்புக் கல் கிடைக்கிறது? அதை எடுக்க எவ்வளவு செலவாகிறது?

***மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:*** 46 மிலியன் டன் சுண்ணாம்புப் படிமங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஒன்பது மிலியன் டன் சுண்ணாம்புக் கற்கள் இரும்புத் தாது, உருக்குத் தொழிலுக்குப் பயன்படுத்த ஏற்றவாறு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சேலம் உருக்காலைக்குத் தேவையான இந்தச் சுண்ணாம்புக் கல்லைப் பற்றி விரிவாக ஆராய வேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. விரிவான திட்டத்தைத் தயாரிக்க சேலம் உருக்காலை ஆலோசனைப் பொறியாளர் அரியலூரிலிருந்து 400 டன் சுண்ணாம்புக் கல் கேட்டிருக்கிறார். அதைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

***திரு. ச. சங்குமுத்து தேவர்:*** சிவந்திபுரம் பகுதியில் புறம்போக்கு நிலங்களில் சுண்ணாம்புக் கல் கிடைப்பது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கல் பாளங்களும் கிடைக்கின்றன. இவற்றை எடுப்பதன் மூலம் கிடைக்கக்கூடிய வருமானங்கள் யாருக்குப் போகிறது?

[1975 அக்டோபர் 23

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றி விவரம் என்னிடத்தில் இல்லை. இப்போது கிடைக்கும் சுண்ணாம்புக்கல் தரமுள்ளதாக இல்லை. அது உருக்குத் தொழிலுக்குப் பயன்படுமா என்பது ஆராயப்பட்டு வருகிறது.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** அந்த வருமானம் ஒன்று அரசுக்குக் கிடைக்க வேண்டும் அல்லது ஊராட்சிக்குக் கிடைக்க வேண்டும். இந்த நிலங்களுக்குச் சம்பந்தம் இல்லாதவர்கள் எல்லாம் அதை எடுத்துச் செல்லுகிறார்கள். இந்தப் பகுதிகள் எல்லாம் இனாம் கிராமங்களாக இருக்கின்றன. புறம்போக்கு நிலத்தில் எடுப்பதன் மூலம் கிடைக்கக்கூடிய வருமானம் ஊராட்சிக்குக் கிடைக்க வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கல் குவாரி, சுண்ணாம்பு குவாரி, மண் குவாரி ஆகியவற்றுக்கெல்லாம் லைசென்ஸ் வாங்க வேண்டும். அதற்கான கட்டணத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் வசூலிப்பார். மாண்புமிகு உறுப்பினர் கவனம் இனாம் பகுதியைப் பற்றியே இருக்கிறது. அதைப்பற்றி விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதி அனுப்பினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

## பால்பேரிங் தொழிற்சாலை

*14 வினா—**திரு. கே. ரங்கநாதன் :** மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில், அரசுத் துறையில், பால்பேரிங் தொழிற்சாலை ஒன்று நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை. ஆனால் தருமபுரி மாவட்டம் ஓசூர் அருகில் கூட்டுத் துறையில் பால்பேரிங் தொழிற்சாலை ஒன்று நிறுவும் திட்டம் உள்ளது.

(இ) "ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட்" என்னும் கூட்டுத் துறை நிறுவனம் ஏற்படுத்தும் இந்தத் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் பலவகை பேரிங்குகள் தயாரிக்கும் திறனுள்ளதாக இருக்கும்.



1975 அக்டோபர் 23]

**திரு. கே. ரங்கநாதன் :** இந்தியாவிலேயே மோட்டார் பம்ப் செட்டுகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அதிகமான அளவில் கோவை மாவட்டத்தில் இருக்கின்றன. அவற்றுக்கு முக்கியமாக 'பால் பேரிங்' தேவைப்படுகிறது. அதை உத்தேசித்து கோவை மாவட்டத்தில் அந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தருமபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டம். பின்தங்கிய மாவட்டத்தில் தொழிற்சாலையை ஆரம்பிப்பதானால் அதற்கு மத்திய சர்க்கார் சப்சிடி கிடைக்கிறது. அதன் காரணமாக தருமபுரி மாவட்டம் ஹோசூரில் இந்தத் தொழிற்சாலை உருவாக்கப்பட இருக்கிறது. 'சிப்காட்' உதவியும் இதற்குக் கிடைக்கிறது. இந்தத் திட்டத்தின் மதிப்பு 10 கோடி ரூபாய். 1977 ஆம் ஆண்டு உற்பத்தி துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** நம்முடைய மாநிலத்திலே ஏற்கனவே பல சிறு சிறு தொழில்கள் அமைந்திருக்கின்றன. இன்னும் பல சிறு தொழில்களைத் துவங்க வாய்ப்புகள் இருக்கின்றன. மூலப் பொருள்கள் கிடைக்கின்றன. இது பற்றிய விவரங்கள் தெரியாததால், . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'பால் பேரிங்' தொழிற்சாலை பற்றிக் கேளுங்கள். பொதுவாகக் கேட்காதீர்கள். பாலிசிக்குள் போகாதீர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். நாம் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு தொழில் கருத்தரங்குகள் நடத்துகிறோம். எந்தெந்த மாவட்டத்தில் என்னென்ன மூலப் பொருள்கள் கிடைக்கின்றன, என்னென்ன தொழில்களை ஆரம்பிக்கலாம் என்ற விவரங்கள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதிலே அக்கறை கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. அந்த மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய மூலப் பொருளைக் கொண்டு தொழிலை ஆரம்பிக்க முயற்சிக்க வேண்டும். மற்றவர்களையும் தூண்ட வேண்டும்.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : தருமபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட இருக்கும் தொழிற்சாலையில் எவ்வளவு தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும்? அது எந்த நிலையில் இப்போது இருக்கிறது? அது எப்போது முடிவுறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 500 பேருக்கு இதனால் வேலை கிடைக்கலாம் என்ற விவரம் இருக்கிறது.

விவசாய அதிகாரிகள் குழு வருகை

*15 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974 ஆம் ஆண்டு, ஆகஸ்ட், செப்டம்பர் மாத அளவில், பல நாட்டு விவசாய அதிகாரிகள் குழு தமிழகத்திற்கு வருகை தந்ததா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஓர் விவர அறிக்கை* அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

*16. Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that a British Team had visited villages in Chingleput district on 7th October 1974 to study the Agricultural Production Programme ; and

(b) if so, the details thereof?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : A statement ** is placed on the Table of the House.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பல நாட்டு விவசாய அதிகாரிகள் நம்முடைய விவசாயப் பகுதியைப் பார்த்துவிட்டு கருத்து ஏதேனும் தெரிவித்திருக்கிறார்களா? நம்முடைய விவசாய முன்னேற்றத்திற்கு உதவி செய்யும் வகையில் விருப்பம் தெரிவித்திருக்கிறார்களா?

* 225-226 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

** 226-228 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அ





மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வெளிநாட்டிலிருந்து வருகிற வேளாண்மை விஞ்ஞானிகள் குறிப்பாக விஸ்தரிப்பு வேலையைப் பற்றிக் கேட்கிறார்கள். எக்ஸ்டென்ஷன் ஒர்க் எவ்வாறு செய்யப்படுகிறது என்பதைப் பற்றிக் கேட்டறிந்து சென்றிருக்கிறார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்த இரண்டு குழுக்களிலே மிகத் தேர்ச்சி பெற்றவர்கள் கலந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. எந்தத் திட்டத்தின் அடிப்படையில் அவர்கள் வந்தார்கள், பார்த்தார்கள், பாராட்டிவிட்டு சென்றார்கள் என்று மட்டுமே இதிலே இருக்கிறது. நுண்ணறிவு படைத்தவர்கள் பார்த்துவிட்டு பாராட்டிவிட்டு மட்டும் சென்றார்களா அல்லது யோசனைகளையும் தெரிவித்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : குறிப்பாக வேளாண்மை விஞ்ஞானிகள், புதிது புதிதாகக் கண்டு பிடிக்கப்படுகிற நுட்பங்கள் விவசாயிகளுக்கு எவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றித்தான் கேட்டார்கள். அவர்கள் நாட்டில் அவர்கள் எவ்வாறு செய்கிறார்கள் என்பதையும் தெரிவித்தார்கள். ஈரான் நாட்டிலிருந்து வந்தவர், அங்கெல்லாம் மாதிரிப் பண்ணைகள் வைத்து—திரு. மாரிமுத்து அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள்—விவசாயிகளை அதற்கு அழைத்துச் சென்று காட்டுவதாகச் சொன்னார்கள். இங்கே விஸ்தரிப்பு அதிகாரிகள் மூலமாக பிளாக்குக்கு இரண்டு பேர், நான்கு பேர் என்று போட்டு அவர்கள் மூலம் விவசாயிகள் புதிய முறைகளை அறிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவற்றை எல்லாம் அவர்கள் பார்த்து இங்கே தீவிரமான முறையில் செயல்படுகிறது என்று கருத்துந் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. என். கே. பழனிசாமி: ராயல் காலேஜ் ஆஃப் டிபென்ஸ் ஸ்டடிஸ் என்று இருக்கிறது. விவசாயத்திற்கும் ராயல் காலேஜ் ஆப் டிபென்ஸ் ஸ்டடிசுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? அவர்கள் இங்கிருக்கும் விவசாயக் கல்லூரியைப் பற்றி ஆராய்ந்து ஏதேனும் பரிந்துரைகள் செய்தார்களா? அல்லது இங்கிருக்கும் விஷயங்களை அவர்கள் எழுதிக் கொண்டு போய் அவர்களுடைய நாட்டிலே போய்ச் சொன்னார்களா?

[1975 அக்டோபர் 23

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ராயல் காலேஜ் ஆப் டிபென்ஸ் ஸ்டடிஸ் என்பதிலே வேளாண்மையும் அடங்கியிருக்கிறது என்று சொன்னார்கள்.

**திரு. சோ. அழகர்சாமி:** பல நாட்டு விவசாய அதிகாரிகள் வந்து சுற்றிப் பார்த்திருக்கிறார்கள். குறிப்பாக, ஜப்பான் போன்ற நாடுகளைவிட சராசரி உற்பத்தி இங்கு குறைவாக இருப்பதைப் பார்க்கிறோம். அதற்கு அவர்கள் சொல்லும் காரணங்களில் சிறு சிறு உடைமைகள் அதிகமாக இருந்தால் உற்பத்தி பெருகும், இங்கு பெரிய பெரிய நிலவுடைமையாளர்களாக இருப்பதால் உற்பத்தி பெருக்கம் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்திருக்கும் அறிக்கையில் நீங்கள் சொல்லுவது இருக்கிறதா?

**திரு. சோ. அழகர்சாமி:** தூதுகோஷ்டி வந்து இதைப் பற்றி என்ன கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சராசரி உற்பத்தியைப் பற்றி அவர்கள் குறை சொல்லவில்லை. பொதுவாக, தமிழ்நாட்டில் நெல் உற்பத்தியைப் பற்றிச் சொல்லுகிறபோது சராசரி ஏக்கர் ஒன்றுக்கு 20 குவின்டால் உற்பத்தியாவதை அவர்கள் பாராட்டினார்களே தவிர அதற்கு எதிர்ப்புச் சொல்லவில்லை. நவீன முறைகள் எவ்வாறு கையாளப்படுகின்றன, விஸ்தரிப்புப் பணிகள் எவ்வாறு நடக்கின்றன என்பதைப் பற்றித்தான் அவர்கள் கவனம் செலுத்தினார்கள்.

**திரு. அ. ஆறுமுகம்:** பிரிட்டிஷ் குழு நம்முடைய நாட்டு விவசாய முறைகளைப்பற்றி பாராட்டிய நோக்கில் நம்முடைய நாட்டு விவசாய முறைகளுக்கும் வெளிநாட்டு விவசாய முறைகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைப் பற்றி கருத்துத் தெரிவித்தார்களா? அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** பிரிட்டிஷ் குழு என்பதிலே பல நாடுகள் அடங்கியுள்ளன. நம்முடைய நாட்டிலே விளைகின்ற பொருள்கள் பல வெளிநாடுகளிலே விளைவதில்லை. இங்கிலாந்தில் நெல் விளைவதில்லை. அவர்கள் குறிப்பாக நெல் விளைச்சல் எப்படி நடக்கிறது என்று பார்த்தார்கள். ஆராய்ச்சி



1975 அக்டோபர் 23]

மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற புதிய முறைகளை விவசாயிகள் எவ்வாறு அறிந்து செயற்படுத்துகிறார்கள் என்பதைப் பற்றித் தான் குறிப்பாக அவர்கள் பார்வையிட்டார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து அங்கிருந்து வந்த நிபுணர் மாடல் பார்ம்ஸ் அங்கு வைத்திருப்பதாகவும் அதே முறையை இங்கே கையாள வசதியிருக்கிறதா என்று தெரிந்து கொள்ள ஆசைப்பட்டதாகத் தெரிவித்தார்கள். அந்த வகையில் இங்கே மாவட்டத்திற்கு ஒரு மாடல் பார்ம் ஆரம்பிப்பதற்கான திட்டமுண்டா? அரசுப் பண்ணை ஆரம்பித்திருக்கிறார்களே. அவற்றை மாடல் பார்ம்ஸ் ஆக மாற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அரசுப் பண்ணையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு மாதிரிப் பண்ணையை, மாடல் பார்ம்ஸை, நடத்தலாம் என்று முதல் அமைச்சர் அவர்கள் யோசனை சொல்லியிருக்கிறார்கள். அதை வேளாண்மைத் துறை ஆராய்ந்து பார்த்து கூடியவரையில் அதை நடைமுறைப்படுத்த எண்ணம் இருக்கிறது.

## விவசாயிகளுக்குப் பரிசுத் திட்டம்

* 17 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சோளம், கம்பு, கேழ்வரகு முதலிய புஞ்சை தானியங்களை அதிகமாக உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு சிறப்பு பரிசுத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஆம்.

**திரு. வை. பாலசுந்தரம்:** கழக ஆட்சிக்குப் பிறகுதான் பசுமைப் புரட்சி என்று பல புதுமைகளைச் செய்து கருணை, காவிரி, காஞ்சி போன்ற பெயர்களை நெல்மணிகளுக்கு வைத்து ஒரு சிறப்பை உருவாக்கியது. அதேபோல் புன்செய் தானியங்களான சோளம், கம்பு போன்ற தானியங்களுக்கும் இப்படிப் பட்ட பெயர்களை வைத்து விவசாயிகளை அரசு உற்சாகப் படுத்துமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நான் ஏற்கனவே சொன்னபடி இது பெயர் வைப்பதல்ல. இது பரிசு. வேளாண்மை செம்மல் என்பது பட்டம். அது தவிர பணம் ஏறத்தாழ இரண்டாயிரம் ரூபாய் அளவிற்குக் கொடுத்து வருகிறோம். எந்த ஒரு விவசாயி அதிகப்படியான விளைச்சலைக் காண்பிக்கிறார்களோ அவர்களை உற்சாகப்படுத்துகிற வகையில், ஊக்கப்படுத்துகிற வகையில் நாம் பரிசு கொடுத்து வருகிறோம். அது நெல் என்ற வகையில் மிகச் சிறப்பாக எல்லா மாவட்டங்களிலும் நன்கு நடந்து வருகிறது. அதேபோல் புன்செய் தானியங்களுக்கும் இவ்வாறு பரிசு கொடுக்கலாமா என்ற திட்டத்தை இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதைச் செய்யலாம் என்று கருதுகிறோம்.

Thiru B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister whether there is any scheme for giving prizes to persons growing horticultural crops in the State?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சோளம், கம்பு, கேழ்வரகு பற்றிய கேள்வி இது. அவர்கள் பழவகைகள், கிழங்கு வகைகள் பற்றிக் கேட்கிறார்கள். தனிக் கேள்வி வேண்டும்.

திரு. எஸ். வடிவேல்: புன்செய் தானியங்கள் மட்டுமல்ல, நன்செய் தானியங்களில் கூட தஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடியில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வியில் அது வராது.

*Housing Board Unit in Kanyakumari district.*

*18 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Housing Board Sub-Division Office for Kanyakumari district is not functioning within Kanyakumari district; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தின் பணிகளை மேற்கொள்ளும் உட்கோட்ட அலுவலகம் கன்னியாகுமரி மாவட்டத்திற்குள் அமைக்கப்படவில்லை. திருநெல்வேலி மாவட்டத்தில்





அமைந்திருக்கும் உட்கோட்ட அலுவலகம் கன்னியாகுமரி திருநெல்வேலி ஆகிய இரண்டு மாவட்டங்களையும் அதன் அதிகார வரம்பிற்குள் கொண்டுள்ளது.

(இ) உட்கோட்ட அலுவலகங்கள் வேலைப் பளுவின் அடிப்படையில்தான் அமைக்கப்படுகிறது; மாவட்டவாரியாக அல்ல.

திரு. என். டென்னிஸ்: அங்கே சப் டிவிஷன் ஆபீஸ் இல்லாத காரணத்தால் வேலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, தீவிரமாக அது செயல்படவில்லை. எனவே, அங்கு ஒரு சப் டிவிஷன் ஆபீஸ் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: சப்டிவிஷன் ஆபீஸ் என்றால் இது ரெகுலர் ஆபீஸ் மாதிரியல்ல. எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்யப்படுகிறதோ அதைப் பொறுத்துத்தான் சப் டிவிஷன் ஆபீஸ் என்று வருகிறது. இருபது லட்சம் ரூபாய் வரவு செலவு இருந்தால்தான் அதற்கு சப் டிவிஷன் ஆபீஸ் அமைக்கப்படும். மாவட்டத்திற்கு ஒரு சப் டிவிஷன் ஆபீஸ் என்று கிடையாது. நம் மாநிலத்தில் இருப்பது மூன்று சர்கிள்தான். இப்போது அங்கு நடந்து கொண்டிருக்கிற வேலை மூன்று லட்சம் ரூபாய் அளவிற்கு திட்டமிட்டு 64 வீடுகள் கட்டுகிற வேலைகள் நடக்கின்றன. அதற்கான சப் டிவிஷன் திருநெல்வேலியில் இருக்கிறது.

*Tamil Nadu-Karnataka bus services*

* 19. *Q.*—Thiru B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state whether any negotiations are going on between Tamil Nadu Government and Karnataka Government on the running of buses on inter-State routes in these States?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஆம்.

Thiru B. VENKATASWAMY: Sir, for persons who want to go to Bangalort from Hosur and other places of the State, there is no inter-State bus connection between Tamil Nadu and Karnataka, and consequently they are suffering. So, may I request the Government to run a shuttle service consisting of at least half a dozen buses from Hosur to Bangalore so that the people in Tamil Nadu can easily reach Bangalore? Also, people

[1975 அக்டோபர் 23

living in Denkanikottah, Anchetti, Sulagiri, Krishnagiri and other places are suffering for want of this service. So, may I request the Government to start an inter-State Bus service from the said places to Bangalore?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** கர்நாடக மாநிலத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் 12—6—1975-ல் ஏற்பட்டிருக்கிறது. அதன்படி மேற்கொண்டு அதிகப்படியான வழித்தடங்கள் போடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஹோசூர் வழி பெங்களூருக்கு பஸ் இல்லை என்பது உறுப்பினர் அவர்களின் எண்ணம். நிறைய பஸ்கள் ஹோசூர் வழி பெங்களூருக்குப் போக ஏற்பாடு நடைபெற்றிருக்கிறது.

(திரு. கே. கந்தசாமி எழுந்திருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி, தமிழ்நாடு-கர்நாடக மாநிலங்களுக்கிடையே பேருந்துப் பணி பற்றியது. அதையொட்டி கேள்விகள் கேளுங்கள்.

**திரு. கே. கந்தசாமி:** கர்நாடக மாநிலத்திற்கும் நம் மாநிலத்திற்கும் இடையே பஸ் விடுவது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்துவது பாராட்டுக்குரியது. ஆனால் நம்முடைய மாநிலத்தில் நாகர்கோவில், கன்னியாகுமரி போன்ற. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த மாதிரிக் கேள்வியை நீங்கள் கேட்டால் எல்லோரும் அப்படிக் கேட்பார்கள்.

**திரு. கே. கந்தசாமி:** நான் கேட்பது, ப்ராப்பர் மெயின்டெனன்ஸ் இல்லாததால் ரிப்பேர்ஸ் ஏற்படுகின்றன. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லாம் அப்படிக் கேட்டால் எப்படி? கேள்வியை ஜெனரலைஸ் செய்யக்கூடாது நீங்கள் அப்படிக் கேட்டால் எல்லோரும் அப்படிக் கேட்பார்கள்.

**திரு. நா. காசிராமன்:** கர்நாடக மாநிலத்திற்கும் தமிழ் நாட்டுக்கும் இடையே இரண்டு மாநிலங்களையும் இணைக்கக்கூடிய வகையிலே பஸ் சர்வீஸ் நடத்துவது குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பேச்சுவார்த்தைகள் நல்லமுறையில் முடிவு பெறுமானால் அப்படிக் கொடுக்கப்படும் வழித்தடங்கள் எல்லாம் தமிழ் நாட்டு அரசுக்குச் சொந்தமான கார்ப்பரேஷன்களுக்குக் கொடுக்கப்பட அரசாங்கம் முடிவு செய்யுமா?



1975 அக்டோபர் 23]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இரண்டு மாநிலங்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று, 1,250 வழித்தடங்களிலிருந்து 1,800 ஆக அதிகரிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கான ஒப்பந்தங்கள் இரு அரசுகள் சார்பாக பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இவை பூராவையும் அநேகமாக அரசின் சார்பிலுள்ள கார்ப்பரேஷன்கள்தான் ஓட்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. பரந்தாமன்:** கர்நாடக அரசு கர்நாடகத்தில் இருக்கிற தனியார் பஸ் நிறுவனங்களுக்கு பங்களூரிலிருந்து சென்னை வருவதற்கு சில பஸ் பெர்மிட்களை வழங்கினார்கள் என்றும் அந்த பெர்மிட்களுக்கு தமிழக அரசு என்டார்ஸ்மென்ட் தரவேண்டும் என்று கேட்டார்கள் என்றும் தெரிய வருகிறது. அதற்கான என்டார்ஸ்மென்டை தமிழ்நாடு அரசு தந்திருக்கிறதா? அப்படியென்றால் அதற்குச் சமமான எண்ணிக்கை உள்ள பஸ்களை அரசாங்கமோ அல்லது தமிழ்நாட்டில் இருக்கிற தனியார் பஸ் நிறுவனங்களோ விடுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. செ. அரங்கநாயகம்:** கர்நாடக மாநிலத்திற்கும் தமிழ் நாட்டுக்கும் இடையே உள்ள பஸ் போக்குவரத்து பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கோவைக்கும் பங்களூருக்கும் இடையே போதுமான அளவிற்கு பஸ்கள் இல்லை என்ற காரணத்தால் அதற்கு ஏதாவது வாய்ப்புகள் இருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** கோவைக்கும் பங்களூருக்கும் இடையே பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதை அதிகரிக்கும் வாய்ப்பு இருக்கிறது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** கடலூருக்கும் பங்களூருக்கும் இடையே ஏற்கனவே அரசின் பஸ் போய் வந்தது. அது இப்போது நின்றுவிட்டது. கடலூரிலிருந்து பங்களூருக்கு சென்று வந்த பஸ் இப்போது செல்வது நின்றுவிட்டது. எனவே, அதை மீண்டும் விடுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா? அப்படி விடும்போது புதிதாக அறிவித்திருக்கிறார்களே சென்னைக்கும் கோவைக்குமிடையே குளு குளு பஸ் என்று, அதே போல் அங்கும் விடுவதற்கு வசதி செய்து தர அமைச்சர் அவர்கள்

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பங்களூருக்கும் பாண்டிச்சேரிக்கும் ஏற்கனவே மூன்று பஸ்கள் போய்க் கொண்டிருந்தன. அதை ஆறாக அதிகரிக்க ஏற்பாடாகியிருக்கிறது. பங்களூர்-பாண்டிச்சேரி போகும் பஸ் ஹோசூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, கடலூர் வழியாகப் போக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப்: கர்நாடகத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே பஸ் சர்வீஸ் என்றில்லாமல், லாரிப் போக்குவரத்தில் கூட சில ஒப்பந்தங்கள் ஏற்படாத காரணத்தால் அவர்கள் சிரமப்படுவதாகத் தெரிகிறது. அப்படி லாரிப் போக்குவரத்துக்கு ஏதாவது ஒப்பந்தங்கள் இருக்கின்றனவா? அப்படி இல்லை என்றால் அதைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இது பஸ்கள் பற்றிய கேள்வி.

### *Bus shelters in Madras.*

* 20. *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the Pallavan Transport Corporation proposes to remodel bus shelters in the City of Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) 1974 ஜூலை திங்களில் சென்னை மாநகரில் 322 பெருந்து நிழற்குடைகளை (Bus shelters) சென்னை மாநகராட்சியிடமிருந்து பல்லவன் போக்குவரத்துக் கழகம் மேற்கொண்டது. இந்த நிழற்குடைகளைச் சீரமைக்கவும் இவை தவிர ஒரே தர வடிவமைப்புடைய புதிய நிழற்குடைகளை அமைக்கவும் பல்லவன் போக்குவரத்துக் கழகம் திட்டமிட்டுள்ளது. ஏற்கெனவேயுள்ள நிழற்குடைகளைச் சீரமைக்கும் பணி 1975-76-ல் முடிவடையும் என்று கருதப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும்? இது அல்லாமல், பஸ் ஷெல்டர்ஸ் இல்லாத இடங்களில் கட்டுவதற்கு சர்க்காரிடம் திட்டம் உண்டா?





மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இதற்குத் தனித்தனியாக செலவுக் கணக்குப் போட்டு, இன்னும் அதற்கான குறிப்புகள் என்னிடத்தில் வரவில்லை. தற்போது 20 நிழற்குடைகளை நாம் செப்பனிட்டு இருக்கிறோம். நிழற்குடைகளுக்கு முன்னாலே உள்ள பகுதிகளை விளம்பரத்திற்கு விடலாமா என்பதை பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஆலோசித்துக் கொண்டு இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, நகரத்தில் பல ஷெல்டர்கள் பல கம்பெனிகளால், பல ஸ்தாபனங்களால் விளம்பரத்திற்காகக் கட்டி இருக்கிறார்கள். கார்ப்பரேஷன் போட்ட ஷெல்டர்களை மாத்திரம் எடுத்துக் கொள்கிறீர்களா அல்லது எல்லா நிழற் குடைகளையும் எடுத்துக்கொள்ளப் போகிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: 322 நிழற்குடைகளை சென்னை மாநகராட்சியிடமிருந்து எடுத்துக்கொண்டு இருக்கிறோம். மற்றவற்றை எடுக்கவில்லை.

### *Hostels for working women.*

* 21 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state:

(*a*) whether any financial assistance from Central Government had been secured during the calendar year 1973 for (i) expansion and (ii) construction of Working Women's Hostels in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (அ) ஆம்.

(இ) பணிபுரியும் மகளிர் தங்குவதற்கான விடுதிக் கட்டிடம் ஒன்று கட்டுவதற்காக சென்னை (மத்திய) கில்டு ஆஃப் சர்விஸ் சங்கத்திற்கு இந்திய அரசு 1973 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ரூ. 1,23,900 மானியமாக அளிக்க அனுமதி வழங்கி இருக்கிறது.

THIRU B. VENKATASWAMY: Many women working in some Government offices are suffering a lot. May I know whether there is any proposal to construct "Working Women's Hostels" nearer to their working institutions?

[1975 அக்டோபர் 23

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** பேரவைத் தலைவரவர்களே, கனம் உறுப்பினர் சொல்கிற யோசனை ஏற்கக் கூடிய யோசனைதான் என்றாலும், இப்போது அரசுத் துறையின் மேற்பார்வையில் சென்னையில் மட்டுமே நடைபெறுகிறது. அது மட்டுமல்லாமல், தமிழகத்தில் பொதுவாக சென்னையில், சென்னை சேவா சதனம், இந்திய மகளிர் சங்கம், கிருஸ்துவ மகளிர் சங்கம், மதுரை கில்ட் ஆப் சர்வீஸ், காஞ்சிபுரம் இந்திய மகளிர் சங்கம், சேலம், கோயம்புத்தூர் சேவா நிலையம் என்றும் தனியார் நடத்துவதற்கு இந்திய அரசாங்கத்தின் உதவி பெற்று இப்போது நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் இதுபோன்ற தனியார் துறையினர் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு மாநில அரசு இந்திய அரசுக்குப் பரிந்துரை செய்து புதிய நிலையங்களை ஏற்படுத்தலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Schools for Blind.*

* 22 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state the number of schools for the blind getting assistance from the Government in Kanyakumari district ?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** இல்லை.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இரணியபுரம் என்ற இடத்தில் ஒரு குருடர் பள்ளி இருக்கிறது. அதற்குக் கட்டிடம் இருக்கிறது, போதுமான மாணவர்கள் இருக்கிறார்கள், போதுமான ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அப்படியிருந்தும், அந்தப் பள்ளிக்கு இதுவரையிலும் அங்கீகாரம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, அந்தக் குருடர் பள்ளிக்கு அங்கீகாரம் கொடுத்து, அதற்கு அரசு போதுமான கிராண்ட் முதலியவற்றைக் கொடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவரவர்களே, தமிழக முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் பரிசாக இப்போது நாட்டிலுள்ள கண்ணற்றோர், விழியற்றோர்களுக்கு என்று நான்கு புதிய பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அப்படி திறக்கப்பட்டிருக்கிற பள்ளிகளில் ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோயிலில் செயல்பட்டு வருகின்றது. உறுப்பினர் கூறியபடி, அரசு உதவி கோரி தனியார் துறை விண்ணப்பித்தால் அதுபற்றியும் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1975 அக்டோபர் 23]

*Sales Tax on X-ray films.*

* 23. Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(a) whether the President of the Tamil Nadu Branch of the Indian Radiological Association has made a request to the State Government on 19th July 1974 to exempt X-ray films from the levy of Sales Tax ; and

(b) if so, the action taken thereon ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவரவர்களே, சாதாரண ஏழை எளிய மக்கள் இந்த எக்ஸ்-ரே பிலிமிற்கு விற்பனை வரி அதிகமாக இருப்பதால் மிகுந்த கஷ்டப்படுகிறார்கள். குறைந்த வருமானம் உள்ளவர்கள் எக்ஸ்-ரே எடுக்கும் நேரங்களில் கஷ்டப்படுகிறார்கள் என்ற காரணத்தினால், அதற்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, அதற்கு ஒரு முனை வரிதான் போடப்பட்டு இருக்கிறது. கம்பெனியிலிருந்து வாங்கும்போது வரி விதிக்கப்படுகிறது. குறைந்த வருமானம் உள்ள நோயாளிகளுக்குப் பயன்படுகிற வகையில் தான் வரிவிலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது.

**உதகை அரசு பால் பண்ணை**

*24 வினா.—திரு. கு. அ. பொம்மன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகை நகரத்திலுள்ள அரசு பால்பண்ணையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** ஆம்.

*Kodaikanal-Palani ropeway.*

* 25. Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(a) whether it is a fact that a rope way will be laid to link Kodaikanal with Palani; and

(b) if so, the details thereof ?

[1975 அக்டோபர் 23

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் நிர்வாகம் பழனி திருக் கோயிலையும் கொடைக்கானல் குறிஞ்சியாண்டவர் திருக் கோயிலையும் வான் கயிற்றூர்தி வழி இணைப்பது குறித்து பரிசீலித்து வருகிறது.

(இ) இத்திட்டம் சம்பந்தமான விவரங்கள் ஆய்விலுள்ளன.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவரவர்களே, ஆரம்பப் பரிசிலனையில் கிட்டத்தட்ட பழனியிலிருந்து கொடைக்கானல் செல்வதற்கு 40 மைல் சுற்றிப்போக வேண்டியிருக்கிறது, ரோப்-வே மூலம் சென்றால் 16 மைல் தான் ஆகிறது என்றும் சொல்லப் பட்டது. ஆகவே, அதை அமல்படுத்தினால் கொடைக்கானலை டூரிஸ்ட் சென்டராக ஆக்குவதற்கும், கோவிலுக்கு அதிகமான வரு மானம் வருவதற்கும் ஏதுவாக இருக்கும். அந்தக் கோவிலுக்கும் அதிகமான பணம் இருக்கிறது. சர்க்காருக்கும் அதிக வருமானம் வர வழி இருக்கிறது. பொதுமக்களுக்கும் சௌகர்யம் செய்து கொடுத்தமாதிரி இருக்கும். ஆகவே, அதை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, ரோடு வழியாக செல்லவேண்டுமானால் 40 மைல் தூரம் செல்ல வேண்டி இருக்கிறது. ரோப்-வே மூலம் சென்றால் 16 மைல் தூரம்தான் இருக்கிறது. இது குறித்து பல ரோப்-வே கம்பெனிகளோடு தொடர்பு கொண்டோம். அவர்கள் அதைப்பற்றி ஆராய்ந்து ஒரு சிறிய குறிப்பு கொடுத்துள்ளார்கள். அதற்கு சுமார் உத்தேச செலவு ரூ. 10 கோடியாகும் என்று சொல்கிறார்கள். இரண்டு மணி நேரத்தில் 400 பயணிகள் அதிலே செல்லலாம் என்றும், பொருள் களைக் கூட அந்த ரோப்-வே மூலமாக அனுப்பலாம் என்றும் தகவல் கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் மேற்கொண்டு அதுபற்றி ஆராய்ந்து வெகு விரைவில் முடிவு எடுத்தால், அரசாங்கம் அது குறித்து பரிசீலனை செய்யும்

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்த ரோப்-வே வியாபார நோக்கத்தோடு ஆரம்பிக்கப்படுகிறதா, அல்லது பக்தர்களை அழைத்துச் செல்ல ஆரம்பிக்கப்படுகிறதா, எந்த அடிப்படையில் எச்.ஆர். அன்டு சி.இ. இதில் வருகிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?



1975 அக்டோபர் 23]

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இரண்டு நோக்கங்களும் நிறைவேறும்.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சென்டிரல் டூரிஸ்ட் டிபார்ட்மென்டிடம் நாம் அதிக மான தொகை கேட்டால் கிடைக்கும், ஏனெனில் கொடைக்கானலை ஒரு பெரிய டூரிஸ்ட் சென்டராக ஆக்கவேண்டுமென்று மத்திய அரசிடத்தில் ஒரு திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, நமக்கு ஆகும் செலவில் பெரும் பகுதியை மத்திய சர்க்காரிடத்தி லிருந்து நாம் வாங்கிவிடலாம். இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை பணம் கேட்டு இருக்கிறதா ? இல்லையென்றால், இனிமேலாவது அதைச் செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, இந்தத் திட்டம் இறுதியாக முடிவு செய்யப்பட்ட பிறகு மாண்புமிகு உறுப் பினர் சொல்லிய யோசனையைக் கருத்தில் கொண்டு உதவி கேட்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 4. அறிவிப்புகள்.

### (அ) அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் மற்ற அலுவல் *களை எடுத்துக்கொள்வதற்கு முன், பேரவையின் 55-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் குறித்து பேரவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ம

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் ...ளுக் கண்ட தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள் : ...டு வரு

"This House expresses its want of confidence, in t... பேச்சு headed by Hon. Thiru M. Karunanidhi." க்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்க... நேரத்தில் யில் இல்லாததால், அதை எடுத்துக்கொள்வதற்கு இ... ம்பந்தமாக தெரிவித்துக்கொள்கிறேன். டி, ...லை றயதினம்

**(ஆ) அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, கே. டி. கே. தங்கமணி ஆகியோர் கீழ்க்கண்ட தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிறார்கள்.

"இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டுள்ள அவசர நிலைப் பிரகடனத்திற்குப் பிறகு மத்திய அரசு அறிவித்துள்ள 20 அம்ச திட்டத்தை சரிவர இந்த அரசு அமல்படுத்தத் தவறியதால் தமிழ்நாடு அமைச்சரவை மீது இப்பேரவை தனது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது."

பேரவையின் விதி 55(2)-ன்படி, தீர்மானம் ஒப்புக் கொள்ளத்தக்கதாக இருக்குமாயின், அதைப் பேரவைக்கு நான் படித்துக்காட்டி, இத்தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறியவேண்டும். இத்தீர்மானம் விதிகளுக்குட்பட்டு இருப்பதால், இத்தீர்மானத்தை நான் பேரவைக்குப் படித்துக் காட்டினேன். இப்போது பேரவை இத்தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

அதாவது, திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, கே. டி. கே. தங்கமணி ஆகியோர் தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

இதற்கு அனுமதி வழங்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் இடங்களில் எழுந்து நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(32 உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

**...ண்புமிகு பேரவைத் தலைவர் :** 32 மாண்புமிகு உறுப்பினர்கள் நிற்பதால் இத்தீர்மானத்திற்கு பேரவை அனுமதி ...க்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு...**

**நோக்...** 

அழை... தீர்மானத்தை என்றையதினம் விவாதத்திற்கு எடுத்துக் எச். ஆ... என்பது பற்றி இன்று கூடும் அலுவல் ஆய்வுக் குழுவில் அவர்... ...க்கப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.



(முற்பகல் 10-00)

**5. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்**

(அ) தீபாவளிக்குமுன் போனஸ் பிரச்னையை தீர்க்கத் தவறியதும், தொழிலாளர் பாதிப்பும், அவர்கள் வேலை நிறுத்தம் செய்ய இருப்பதும் குறித்து.

(முற்பகல் 10.00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. அழகர்சாமி அவர்களும்,

"Failure to settle bouus concerning textile and other industrial workers in the State payable before Deepavali and the threatened token strike on 24th October 1975".

என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டும் என்றும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஏ. சுப்பிரமணியம், திரு. என். குமாரசாமி இவர்கள், "தீபாவளிக்குச் சில நாட்களே இருப்பதாலும், கோவை மாவட்ட அனைத்துத் தொழிலாளர்களின் போனஸ் பிரச்சனை தீர்க்கப்படாமல், ஏறத்தாழ அறுபதாயிரம் தொழிலாளர்கள் அதனால் பாதிக்கப்பட்டு, அதனால் பதட்டம் அடைந்துள்ள கடுமையான நிலைமை குறித்து" என்னும் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றினைக் கொடுத்து, இது பற்றி விவாதிக்கவேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். இது எப்படி அவசர முக்கியத்துவமானது என்று சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், போனஸ் கொடுப்பதில் பல முறைகளைக் கையாண்டாலும், பெருவாரியான தொழிற்சாலைகளில் தீபாவளியையொட்டித்தான் வருடாந்திர போனஸ் கொடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக, கோவை மற்றும் மதுரை போன்ற நகரங்களில் உள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கும் மற்றும் சென்னையில் உள்ள பல்வேறு தொழிற்சாலைகளில் உள்ளவர்களுக்கெல்லாம் இந்த நேரத்தில்தான் போனஸ் கொடுக்கப்பட்டு வருகின்றது. இப்படிப் போனஸ் கொடுப்பது சம்பந்தமான பேச்சு வார்த்தைகளெல்லாம் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. இப்படிப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் தான் மத்தியப் பேரரசின் ஒரு அவசரச் சட்டம் இது சம்பந்தமாக வந்திருக்கின்றது. இச்சட்டத்தைக் காரணமாகக் காட்டி, ஆலை முதலாளிகள் மற்றும் தொழிலதிபர்கள் எல்லாம் இன்றையதினம் போனஸ் கொடுக்க மறுத்துக்கொண்டு வருகின்றார்கள்.

*[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 23*

இது மாத்திரம் அல்லாமல், குறிப்பாக, மதுரை போன்ற இடங்களிலே சென்ற ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்குமாக ஏற்கெனவே மே மாதம் ஒப்பந்தம் செய்துகொண்டபடி ரூ. 60 லட்சம் ஏற்கெனவே தொழிலாளர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள். பாக்கியுள்ள ரூ. 60 லட்சத்தை இந்த மாதம் கொடுப்பதற்குப் பதிலாக, அந்தத் தொகையை கொடுக்க மறுக்கின்றார்கள். கோவையில் சென்ற ஆண்டு போனஸுக்கு அட்வான்ஸ் கொடுத்ததைக் குறிப்பிட்டு, 'இப்போது அதையும் நாங்கள் பிடித்துவிடுவோம்' என்று சொல்லும் அளவிற்கு நிலைமை வந்திருக்கின்றது என்றால், தொழிலாளர்கள் மத்தியிலே மிகவும் ஒரு ஆத்திரமான நிலைமை நியாயமாகவே வந்திருக்கின்றது என்று சொல்லலாம். சாதாரணமாக இந்த மாதத்தில்தான் அவர்களுக்கு போனஸ் தொகையைக் கொடுப்பது வழக்கம். கொடுக்காமல் இப்படியெல்லாம் நிலைமைகள் உருவாகும்போது அவர்கள் தங்கள் ஆத்திரத்தினைத் தெரிவிக்கும் முறையில் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்று அறிவித்திருப்பதை நான் பத்திரிகைகளில் பார்த்தேன். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகளில் அரசு உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியமாகும். ஏற்கெனவே எடுத்துக்கொண்டுள்ள ஒப்பந்தங்களை முறையாக அமுல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்திய சட்டங்களுக்கு அது விரோதமாக இருந்தால், அது ஏதாவது முதலாளிகள் வரிகளாக கொடுக்க வேண்டியிருக்குமே தவிர எந்த விதத்திலும் தொழிலாளர்களைப் பாதிக்கக்கூடியதாக இருக்க முடியாது. எனவே, இதிலே மாநில அரசு முறையாகத் தலையிட்டு, தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய தொகைகள் அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதிலே நடவடிக்கை எடுக்க அரசு தவறி விட்டது என்ற காரணத்தினால்தான் இது மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயம் என்று கருதி, குறிப்பாக தமிழகத்தில் உள்ள பெரும் தொழிலாளர்கள் இந்த நிலைமையினால் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதனால், அவையை ஒத்திவைத்து இது பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **திரு. ஏ. சுப்பிரமணியம்:** பேரவைத் தலைவரவர்களே, சாதாரணமாக ஆண்டு தோறும் ஆகஸ்டு, செப்டம்பர் மற்றும் அக்டோபர் திங்களில் எல்லாத் தொழில் நிறுவனங்களிலுமே போனஸ் பிரச்சனை என்பது ஒரு பெரும் பிரச்சனையாக



*1975 அக்டோபர் 23] [திரு. வ. சுப்பிரமணியம்]*

உருவெடுக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். குறிப்பாக, கோவை மாவட்டத்தினைப் பொறுத்த மட்டில், போனஸ் சட்டத்திற்கும் அப்பால் ஒரு கொள்கை உருவாக்கப்பட்டு, இருதரப்பினராலும் அது ஒப்புக்கொள்ளப்பட்டு கடந்த 15 ஆண்டுகாலமாக அதிலே ஒரு உடன்பாடு ஏற்பட்டு, சற்று அதிகமான போனஸ் தொகையையே அவர்கள் பெற்று வந்திருக்கின்றார்கள். குறிப்பாக, அந்த மாவட்டத்திலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குப் பொருந்தும். கடந்த 1973-ம் ஆண்டிலே பஞ்சாலைகளுக்கு அபரிமிதமான இலாபம் கிடைத்தபோதிலும், அவர்களே எதிர்பாராத அளவிற்கு அபரிமிதமான லாபம் வந்த போதிலும்கூட, தொழிலாளர்களுக்கு அதற்கு ஏற்றவாறு போனஸ் கொடுக்க முன்வராமல் ஆலை அதிபர்கள் சண்டித்தனம் செய்ததன் விளைவாக, கோவை மாவட்டத் தொழிலாளர்களிடையிலே தொழில் அமைதி கெட்டுப் போய் பல்வேறுவிதமான நிகழ்ச்சிகளுக்குப் பின்னர், இறுதியில் தீபாவளிக்கு முன்நாள்தான் அவர்களுக்குப் போனஸ் கொடுக்க முன்வந்தார்கள். இது சென்ற ஆண்டின் நிலைமை.

இந்த ஆண்டில் போனஸ் சம்பந்தமான கோரிக்கைகளைத் தொழிற்சங்கங்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பே எழுப்பியும்கூட, சென்ற ஆண்டில் கொடுக்கப்பட்ட அதே பெர்ஸெண்டேஜ் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தும்கூட ஆலை முதலாளிகள் பேச்சு வார்த்தைகளுக்குத் தயாராக இல்லை. சென்ற ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டும் கூடுதலாக போனஸ் கொடுத்த இதே முதலாளிகள், பிற மாநிலங்களிலே உள்ள முதலாளிகள் தங்களைக் குறை சொல்லிவிடக்கூடாதே என்பதற்காகவே 'அடுத்த ஆண்டு இது பற்றிப் பேசி முடிவெடுக்க வேண்டும்' என்று ஒரு ஸேஃப்டி க்ளாஸ் போட்டுக்கொண்டார்கள் என்பதும் எல்லோருக்கும் தெரியும். அப்படியிருந்தும், அந்த இரண்டாண்டுகள் குறித்து முடிவு ஏற்படாமல் முடிவான இந்த ஆண்டு போனஸ் தொகையைப் பற்றிப் பேசத் தயாராக இல்லை என்று சண்டித்தனம் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

சென்ற ஆண்டைப் பொறுத்த மட்டில், பத்து சதவிகிதம் கூடுதலாக அவர்களுக்குக் கிடைத்தது. இந்த ஆண்டு ஏப்ரல் திங்களில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களும் இதுபற்றிப் பேசி முடிவெடுப்பார்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால் அவர்களால் முடிவு எதுவும் அறிவிக்கப்

[திரு. வ. சுப்பிரமணியம்] [1975 அக்டோபர் 23

படவில்லை. அவர்களுடைய முடிவு அறிவிக்கப்படாத நிலையில்
இவர்களும் பேச்சுவார்த்தைகளுக்கு வர மறுக்கின்றார்கள். இதிலே
அவசரமாகத் தலையிட்டு ஏதாவது முடிவு காணவேண்டும்.
இன்றைக்குத் தேதி 23 ஆகிறது. தீபாவளிக்கு இன்னும் ஒரு
வாரகாலம்தான் இருக்கின்றது. போனஸ் பிரச்சனையில்
கோவைத் தொழிலாளர்கள் மிகுந்த பதட்டமடைந்து இருக்கின்
றார்கள். "சென்ற ஆண்டு நடந்ததைப்போல நடக்கக்கூடாது,
உடனடியாக இது பேசித் தீர்க்கப்பட வேண்டும்" என்று தொழி
லாளர்கள் கேட்டுக்கொண்டும்கூட இதுவரையில் நடவடிக்கை
எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

போனஸ் சம்பந்தமாக இப்போது அவசரச் சட்டம் என்று
வந்திருக்கின்றது. இந்த அவசரச் சட்டம், ஏற்கெனவே தொழி
லாளர்களுக்கு உள்ள உரிமைகளைப் பறிக்கின்றது. இந்த நிலையில்
அவசரச் சட்டத்தைச் சாக்காக வைத்து மதுரை கோட்ஸ் மில்
லானது ஏற்கெனவே செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களுக்கு
அவசரச் சட்டங்களிலே பாதுகாப்பிருந்தும்—20 சதவிகிதத்திற்கு
உட்பட்டிருந்தால், போனஸ் சட்டத்திற்கு மாறுபட்டதாக இருந்
தாலும் ஒப்பந்தம் என்று இருந்தால் அது கொடுக்கப்பட வேண்டும்
என்று தான் இருக்கின்றது—அப்படியெல்லாம் இருந்தும் அவசரச்
சட்டத்தினைக்காட்டி ஏற்கெனவே கொடுத்த பணத்தைக்கூட
பிடிக்க முயற்சிக்கின்றார்கள் அங்கே. இந்த மாதிரி தான்தோன்றித்
தனமாக முதலாளிகள் நடந்து கொள்ளுகின்றார்கள், அதிலும்
இந்த நேரத்தில்.

ஆகவே, இந்த நிலைமையில் அரசாங்கம் இதிலே அவசர
உணர்ச்சியோடு தலையிட்டு இதைத் தீர்ப்பதற்கு வழிவகை காண
வேண்டும். அந்த முறையில் சபையின் நிகழ்ச்சிகளை ஒத்தி
வைத்து இதை எடுத்துக்கொண்டால் மேலும் பலனுள்ள பல்வேறு
கருத்துக்களைச் சொல்ல முடியும் என்ற அடிப்படையில், தலைவரவர்
களே, கூட்டத்தினை ஒத்திவைத்து இதை விவாதிப்பதற்கு நீங்கள்
அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, மாண்புமிகு
உறுப்பினர்கள் தங்கமணி அவர்களும், திரு. சுப்பிரமணியம் அவர்
களும் போனஸ் பிரச்சனைபற்றி இங்கே சில கருத்துக்களைச்
சொல்லியிருக்கின்றார்கள். தமது கருத்துக்கள் பற்றி எடுத்துச்



1975 அக்டோபர் 23] [திரு. க. இராசாராம்]

சொல்லும்போது திரு. சுப்பிரமணியம் அவர்கள் சென்ற ஆண்டில்
நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பற்றிக் குறிப்பிட்டு, அது
முதலமைச்சர் அவர்கள் முடிவெடுக்க வேண்டிய கட்டத்தில் இருப்
பதாகக் குறிப்பிட்டார்கள். இதுபற்றித் தொழில் அதிபர்களும்
சந்தித்துப் பேசினார்கள். அவர்களுடைய கருத்துக்களையெல்லாம்
கேட்டு, முதலமைச்சர் அவர்கள் இதற்கான தீர்ப்பினை அளிக்கும்
வரையில், தொழிலதிபர்கள் தாங்கள் கொடுக்க இருக்கும் தொகை
பற்றி அறிவிக்கக்கூடாது என்ற அறிவிப்பு அரசின் சார்பிலே
அவர்களுக்கெல்லாம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்பதனை நான்
இந்த மாமன்றத்தின் மூலம் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத்
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

இப்போது வந்துள்ள அவசர காலச் சட்டம் பற்றி என்னைவிட
மாண்புமிகு சுப்பிரமணியம் அவர்களுக்கு நன்கு தெரியும்.
அண்மையில்கூட அவர் டெல்லிக்குச் சென்று வந்தார். நான்
சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், இந்த அவசரகாலச் சட்டங்
களுக்கும் நமக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. இப்படிப்
பட்ட சட்டங்களை மத்திய அரசு போடுகின்றது. நமது அரசின்
கொள்கை, திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கை என்ன
என்று கேட்டால், மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. என். வி.
நடராசன் அவர்கள் இது பற்றி ஏற்கெனவே நமது நிலையை
ஐதராபாத் மகாநாட்டில் விளக்கி, அந்த நிலையை மத்திய அரசு
ஒப்புக்கொண்டதுபற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்
களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன். அதுதான் எங்களுடைய
கொள்கை. வந்துள்ள அவசரகாலச் சட்டங்களை நடைமுறைப்
படுத்த வேண்டிய சூழ்நிலையில்தான் நாங்கள் இருக்கின்றோம்.
இந்த இந்த முறையில்தான் நடந்து கொள்ள வேண்டும் என்று
அறிவிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில், இதற்கு
மேல் நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை என்பதையும் நான் தெரி
வித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

இந்த அவசரகாலச் சட்டங்களை மாற்றுவதற்கான நடவடிக்கை
களை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தினையும்
மாண்புமிகு அங்கத்தினர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். மாண்பு
மிகு அங்கத்தினர்கள் இரண்டுபேரும் டெல்லிக்கு மிகவும் வேண்டி
யவர்கள். அவர்கள் தங்கள் கருத்துக்களை அங்கே சொல்லி,

[திரு. க. இராசாராம்] [1975 அக்டோபர் 23

இந்த அவசரகாலச் சட்டங்களை மாற்றிவிடுவார்களானால் அந்த சூழ்நிலைக் கேற்ற நடவடிக்கைகளை அரசு எடுப்பதற்குத் தயாராக இருக்கின்றது என்பதை மட்டும் தெரிவித்து, இந்த இரண்டு பிரேரணைகளுக்காகச் சபையின் நடவடிக்கைகளைத் தள்ளி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று விளக்கிக்கூறி அமருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுவதனால் இவ்விரு தீர்மானங்களுக்கும் அனுமதி அளிக்க மறுக்கின்றேன்.

**(ஆ) நான்கு சதவிகித போனஸ் வழங்குவது குறித்த அவசரச் சட்டத்தின் மூலம் தொழிலாளரிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து,

"The Ordinance of the Central Government relating to 4 per cent bonus to the industrial workers, curbing their right to get more bonus from high profit-making industrial sectors, has highly affected the normal life of the working class in the country and created restlessness amidst them and is likely to affect public peace and tranquillity."

என்ற பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை திரு. கே. கந்தசாமி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையை ஒத்திவைத்து விவாதிக்கக் கூடிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றிச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி :** பேரவைத் தலைவரவர்களே, இன்று மத்திய அரசு கொண்டுவந்திருக்கிற அவசரப் பிரகடனத்தின் மூலம் 4 சதவிகிதம் போனஸ் தொழிலாளர்களுக்குக் கொடுத்தால் போதும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர்களுடைய விளக்கத்திற்குப் பின்னால் அமைச்சரவர்கள் விளக்கம் தந்தார்கள் என்றாலும் இதிலே இன்னொரு முறையிலே அரசு தலையிட வேண்டுமென்ற வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். இந்த அவசரப் பிரகடனத்தின் மூலம் பல தொழில் நிறுவனங்கள் அதிக லாபம், கொழுத்த லாபம் அடைந்து இருந்தாலும்கூட, தொழிலாளர்களுக்கு



1975 அக்டோபர் 23] [திரு. கே. கந்தசாமி]

ஏற்கெனவே சென்ற ஆண்டு கொடுத்த போனஸைவிட அதிகம் கொடுக்கத் தகுதி பெற்றிருந்தாலும் கூட நியாயமான போனஸ் கொடுக்க மறுக்கிறார்கள். காரணம், இந்த அவசரப் பிரகடனம் மூலம் அவர்களுக்குக் கணிசமான பாதுகாப்பு ஏற்பட்டிருக்கிறது. தொழிற்சங்கப் பிரதிநிதிகள் முதலாளிகளைச் சந்தித்து போனஸ் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று சொன்னால் '4 சத விகிதம் போனஸ் பெற்றுக் கொள்ளுங்கள் என்று போர்டு வைத்திருக்கிறோமே, அதைப்பார்த்துவிட்டு போக வேண்டியதுதானே, இங்கே ஏன் வருகிறீர்கள்' என்று சொல்கிறார்கள். அவசரப் பிரகடனம் அவர்களுக்கு ஒரு கேடயம் போல் அமைந்திருக்கிறது. அவசரப் பிரகடனத்தை மத்திய அரசு பிறப்பித்திருந்தாலும் மக்களுடைய நலனைக் கருதி, இந்த அவசரப் பிரகடனத்தை எதிர்க்கவில்லை என்ற நிலையில் முதலாளிகளோடு பேச்சு வார்த்தை நடத்தித் தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படாமல் செய்யலாம். 4 சதவிகிதம் போனஸ் கொடுக்க வேண்டும் என்ற அவசரப் பிரகடனத்தின் மூலம் தொழிலாளர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பிரகடனம் முதலாளிகளுக்குச் சாதகமாக அமைந்திருக்கிறது. ஆகவே, இதை எதிர்க்கிறோம் என்ற நிலை இல்லாவிட்டாலும் மாநில அரசு தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, உகந்த முறையிலே தொழில் நிறுவனங்களில் தலையிட்டு, Moral or legal advice or Persuasion என்ற முறையிலே ஆலோசனை கூறி, 'நீங்கள் இந்த அளவு லாபம் அடைந்திருக்கிறீர்கள், அதனால் இந்த அளவுக்கு போனஸ் கொடுங்கள்' என்று கேட்கலாம். அவசரப் பிரகடனம் முதலாளிகளுக்குச் சாதகமாக இருந்தாலும், தொழில் நிறுவனங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கிறது என்றாலும் எதிர்காலத்தில் ஏதாவது தகராறு ஏற்பட்டால் இந்த அரசு தான் உங்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்று கூறி, முதலாளிகளை ஓரளவு நிர்ப்பந்தப்படுத்தி, லாபத்தில் நியாயமான பங்கை போனஸாகக் கொடுங்கள் என்ற அறிவுரையை வழங்கினால், மாண்புமிகு அமைச்சரவர்கள் இதில் தலையிட்டால் நிச்சயம் பலன் கிடைக்கும் என்று கருதுகிறேன்.

என்னைப் போன்றவர்கள் பேசும்போது மதுரை ஹார்வி மில்ஸ், கோட்ஸ் மில்ஸ் போன்ற நிறுவனங்களில் 66 லட்சம் ரூபாய் இந்த வருஷம் போனஸ் தருகிறோம் என்று 'அக்ரிமென்ட்' போட்டிருந்தும்கூட இப்போது கொடுக்க மறுக்கிறார்கள். அதைப்

போலவே பசுமலை மகாலட்சுமி மில்ஸ் அதிக லாபம் அடைந்திருந்தும் 4 சத விகிதம் தான் போனஸ் தருவதாகச் சொல்கிறார்கள். அதைப்போலவே திருநகர் விசாலாட்சி மில்ஸ் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்படித் தனித் தனியாக ஒவ்வொன்றைப் பற்றியும் சொல்லிக்கொண்டே போனால் தமிழ் நாட்டில் இருக்கிற ஒவ்வொரு மில் பற்றிய விவரங்களையும் சேகரித்துச் சொல்லவேண்டிவரும். அந்த விவரத்திற்குள் நீங்கள் செல்ல வேண்டாம்.

**திரு கே. கந்தசாமி** : கோவை பற்றி விளக்கம் சொன்னார்கள். அதைப்போல மதுரையிலும் இருக்கிறது. அதிகமான போனஸ் கொடுக்கும் தகுதி இருந்தும், நியாயத்தின் அடிப்படையில் கொடுக்கவேண்டிய கடமை இருந்தும் இந்த அவசரப் பிரகடனத்தினால் 4 சதவிகிதம்தான் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். ஆகவே, தமிழ்நாடு அரசும், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதில் தலையிட்டு, இந்த அவசரப் பிரகடனத்தை எதிர்க்கிறோம் என்ற நிலை இல்லாவிட்டாலும் உகந்த முறையிலே ஆலோசனைகள் வழங்கி, தொழிலாளர்களுக்கு நியாயமான போனஸைப் பெற்றுத் தரவேண்டும். டில்லிதான் இதுபற்றி முடிவு செய்ய வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். டில்லிதான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது என்றிருந்தாலும், நாளை ஏதாவது ஆபத்து வந்தால் அல்லது தகராறு வந்தால் இங்கே இருக்கிற ஆலைகளுக்கு நாங்கள்தான் பாதுகாப்புத் தரவேண்டும் என்று சொல்லி, தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டும். இதுபற்றி மற்ற உறுப்பினர்கள் கருத்தையும் அறிய, விரிவாக விவாதம் நடத்த சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்** : நான் ஏற்கெனவே இதற்கான பதிலைத் தெரிவித்திருக்கிறேன். இந்தச் சட்டம் வந்த பிறகு தொழிலதிபர்கள் உடனடியாக இந்தச் சட்டத்தை வெகுவாகப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது உண்மை. அதிலே நான் அதிகமாகத் தலையிடவில்லை. இந்தச் சட்டம் பாராளுமன்றத்திலே வந்த பின்னால் ஏற்படுகின்ற இடையூறுகளை எடுத்துக்காட்டலாம். ஆனால் திருத்தங்கள் செய்யவேண்டியது அவர்கள்தான். தற்போதுள்ள இந்தச் சட்டப் பாதுகாப்புத் தொழிலதிபர்களுக்குச் சாதகமாக



இருக்கிறது. நாம் இதிலிருந்து விலகிப்போய்விடுவது என்பது முடியாத ஒன்றாக இருக்கிறது. எனவே, இதுபற்றி மேலும் விவாதிக்க வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து, அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுவதனால், இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

### (4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) மதுரைப் பல்கலைக் கழகப் பேரவைக்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மதுரைப் பல்கலைக் கழகப் பேரவையில் (செனட்) இச்சட்டப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு. கா. காளிமுத்து, (2) திரு. பொ. பத்மநாபன், (3) திரு. மு. சுருளிவேல் (4) திரு. கே. கந்தசாமி ஆகியோரின் பதவிக்காலம் 18—8—1975 ஆம் நாளுடன் முடிந்து விட்டதால், பல்கலைக் கழகப் பேரவையில் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்குத் தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மதுரைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி பகுதிவாரி அடிப்படையில் (ப்ரொப்போர்ஷனல் ரெப்ரசென்டேஷன்) இத்தேர்வு நடைபெறுவதில்லை.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 29—10—1975, புதன்கிழமை காலை 11 மணிக்குள் சட்டப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 29—10—75, புதன்கிழமை மாலை 3 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 30—10—75 வியாழக்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது நான்கு இடங்களுக்கு மேற்படுமாயின் 31—10—1975 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே, சென்னை கோட்டையிலிருக்கும் உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(6) அரசினர் தீர்மானம்

விதி 23-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 'தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 23-ஐத் தளர்த்தி, இப் பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்' என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(4) அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஈ) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, 1975 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு.

8. நடைமுறைக் கேள்வி.

அவசரச் சட்டத்திற்கு (ஆர்டினன்ஸ்) மறுப்பு தெரிவித்தல் குறித்து.

THIRU K. T. K. TANGAMANI : Before this Bill which is seeking to convert the Ordinance into a Bill, is taken up, I want to say a few words. I have given notice of a Motion.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே சட்ட முன்வடிவு மூவ் ஆகட்டும். நீங்கள் பின்னாலே சொல்லுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், ரூல் 142



மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 142-ன்படி 3 நாள் நோட்டீஸ் இருக்க வேண்டும். நீங்கள் இன்றுதான் கொடுத்திருக்கிறீர்கள். நம்முடைய விதியில்

"Within six weeks from the re-assembly of the Legislature, any member may, after giving three clear days' notice to the Secretary, move a motion disapproving the Ordinance . . ."

என்று இருக்கிறது. நீங்கள் கொடுத்திருப்பதில் இது வரவில்லை. இந்தத் திருத்தம் விவாதத்திற்கு வரும்போது நீங்கள் எதிர்த்துப் பேசலாம் ; நீங்கள் எதிர்த்து வாக்களிக்கும் வாய்ப்பு இருக்கிறது.

THIRU K. T. K. TANGAMANI : Supposing I give notice of such a Motion today for disapproving the Ordinance and if the Bill is going to be taken up, I thought the Speaker will be in a position to ask them to take it up after two days. Ordinance is separate. I am asking for disapproval of the very formulation of the Ordinance.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நமக்கு அஜண்டா வந்து விட்டது. அதன்படி நடத்திக் கொண்டிருக்கிறோம். நீங்கள் ஏதாவது திருத்தம் கொடுப்பதாக இருந்தால் '3 க்ளியர் டேஸ் நோட்டீஸ் வேண்டும்' என்று இருக்கிறது. அது இல்லை. இரண்டாவதாக, நீங்கள் இதை எதிர்க்கிறீர்கள் என்றால் 'பில்' வாக்கெடுப்புக்கு வரும்போது எதிர்த்து ஓட்டளிக்க வாய்ப்பு இருக்கிறது. அப்போது எதிர்த்து ஓட்டளிக்கலாம்.

THIRU K. T. K. TANGAMANI : It is not the Bill. That is one thing. I can oppose the Bill on the basis of its merit. What I am going to say now is, the Ordinance making power should not be used so loosely for such things. The Ordinance-making power has to be used on certain important points.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆர்டினன்ஸ் இஷ்யூ செய்யும் அதிகாரம் நம்மிடத்தில் இல்லை. கவர்னர் இஷ்யூ பண்ணுகிறார். நம் அவை இல்லை. நாம் கவர்னர் அவர்கள் கொடுத்த ஆர்டினன்ஸைச் சட்டமாக ஆக்குகிறோம்.

THIRU K. T. K. TANGAMANI : With your permission, may I read Rule 142 of the Tamil Nadu Assembly Rules ? The Rule says, "within six weeks from the re-assembly of the Legislature, any member may, after giving three clear days' notice to the Secretary, move a motion disapproving the Ordinance and if such a motion is passed it shall be forwarded to the Council with a message for its agreement." Now there are two tasks before the House. One is, the Government

[Thiru K. T. K. Tangamani] [1975 அக்டோபர் 23

may or may not bring it in the form of a Bill within six weeks from the re-assembly of the Legislature and the other is the opportunity given to the Members to express their opinion on the Ordinance.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* நான் சொல்வது அது இல்லை. ஆர்டினன்ஸ் இப்போது இல்லை. ஆர்டினன்ஸ் இப்போது 'பில்' வடிவிலே அவைக்கு வந்திருக்கிறது. ஆர்டினன்ஸை டிஸ்அப்ரூவ் பண்ணுவதைப் போல இந்த 'பில்'லை எதிர்த்து வாக்களிக்கலாம்.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* That position is there நான் கிளாரிபிகேஷன் என்ன கேட்கிறேன் என்றால் ஆர்டினன்ஸ் கவர்னர் அவர்கள் போட்டார்கள். போட்ட பிறகு அடுத்த சட்டசபைக்குள் 6 வாரத்திற்குள்ளே இந்த ஆர்டினன்ஸ் மசோதாவாக வந்து நிறைவேற்றப்பட வேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலே அரசாங்கம் லாப்ஸ் ஆகட்டும் என்று சொல்லிச் சட்டமாக்காமல் செய்து விடலாம். அதைக் கட்டுப்படுத்த முடியாது. பில் கொண்டு வராமல் போனால் லாப்ஸ் ஆகிவிடும் என்பது சர்க்காரிடம் இருக்கிற பொறுப்பு. உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் உரிமைகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆர்டினன்ஸ் நிறைவேற்றப்பட்டு, அமலாகிற ஆர்டினன்ஸ் பற்றிக் கொண்டு வந்தது சரிதானா இல்லையா என்பதைப்பற்றிக் கருத்துச் சொல்வதற்காகத்தான் இந்த புரோவிஷனை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். இது சட்டசபை உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டுமென்ற முறையில் வந்திருக்கிறது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* ஆர்டினன்ஸைப் பற்றி நான் முன்னே சொன்னது போல சர்க்கார் தரப்பிலே பில் கொண்டு வரவில்லையென்ற நிலை இல்லை. பில் வந்திருக்கிறது.

THIRU K. T. K. TANGAMANI : I am only making a submission. There are two points. ஆர்டினன்ஸைப் பொறுத்த வரையிலே சட்டசபை ப்ரோரோக் ஆவதால் ஆர்டினன்ஸ் உருவத்தில் கொண்டு வருகிறார்கள். அது எல்லோரையும் கட்டுப்படுத்துகிறது. பிறகு அரசாங்கத்தைப் பொறுத்து என்ன செய்யலாம் என்றால் இந்த ஆர்டினன்ஸைத் தொடர வேண்டிய அவசியமில்லையென்றால் சட்டசபை கூடிய பிறகு ஆர்டினன்ஸ் லாப்ஸ் ஆகக்கூடிய முறையில் மசோதா கொண்டு வராமல் இருக்கலாம். அப்படிக் கொண்டு வருகிறபோதும்கூட இந்த ஆர்டினன்ஸில் சில திருத்தங்கள் கொண்டு வரலாம். இந்த கிளாஸ் அப்படி. 'The Ordinance is hereby repealed'. இந்தச் சபையில் ஆர்டினன்ஸ் வரக்கூடிய காலத்தில் ஆர்டினன்ஸ் வரக் காரணம் என்ன, ஆப்



1975 அக்டோபர் 23] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஜக்ட்ஸ் என்ன, என்று விளக்குகிற அளவிற்கு தமிழ் நாட்டில் செய்துகொண்டு வருகிறோம். இது அரசாங்கத்தைப் பொறுத்து. எங்களைப் பொறுத்த வரையிலே ஆர்டினன்ஸ் சிலவற்றை நிறைவேற்றினாலும் இந்த மாதிரி ஆர்டினன்ஸ் இடைக்காலத்தில் தேவையில்லை. ஜனங்களுக்கு விரோதமான ஆர்டினன்ஸ் என்று கருதப்படுமானால் அதைச் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் இந்த ஆர்டினன்ஸ் வரவேண்டுமென்று சொல்வதை ஏற்றுக் கொண்டால் இந்த ஆர்டினன்ஸ் சட்டமாவதைத் தடுப்பதை கை விட்டு விட்டவர்களாக ஆவோம். அதற்காக நான் சொல்கிறேன். I am only trying to explain that Rule 142 gives powers both to the Government and to the Members. இந்தக் காரணத்திற்காகத்தான் சொல்கிறேன். உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம். பில் வரும்போது பேசலாம். பேசுகிறபோது டிஸ்அப்ரூவல் கொடுத்திருக்கிறேன் என்று கிளாரிஃபை பண்ண வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார் :* தலைவரவர்களே, உயர்திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் இந்த ஆர்டினன்ஸை டிஸ்அப்ரூவல் செய்யவேண்டுமென்று மோஷன் கொடுத்திருக்கிறார்கள். இதிலே நான் ஒரு கருத்தைக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். சாதாரணமாக ஆர்டினன்ஸ் சட்டசபை ப்ரோரோக் ஆகிற நேரத்தில் கவர்னர் பெருமான் அவர்கள் பாஸ் ஆக்குவது வழக்கமாக இருக்கிறது. கவர்னர் பெருமான் ஆர்டினன்ஸ் பிறப்பிக்க வேண்டுமென்றால் அமைச்சரவையினுடைய ஆலோசனையின்படி, தீர்மானத்தின்படி ஆர்டினன்ஸ் பிறப்பிக்க வேண்டும். அதுவும் இன்றி அரசியல் அமைப்புச் சட்டம் 213 இலே கூறுகிற ஷரத்துப்படி பிரெஸிடெண்ட் அவர்களுடைய அனுமதி பெற்றாகவேண்டுமென்று இருக்கிறது. 213 இலே 'provided that the Governor shall not without instructions from the President promulgate any such ordinance, if ...........'
இப்படிப் பல்வேறு தொகுப்புகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இன்றையதினம் இந்த ஆர்டினன்ஸ் சட்டமாகவேண்டுமென்று தீர்மானம் சட்டசபையிலே வருகிறது. இது சம்பந்தமாகத் தீர்மானம் கொடுக்கவேண்டுமானால் 3 நாட்கள் நோட்டீஸ் வேண்டுமென்று விதி 142-லே இருந்தாலும் நோட்டீஸை வெய்வ் செய்வதற்கு இந்த மன்றத்திற்கும், தங்களுக்கும் உரிமை உண்டு என்று கருதுகிறேன். ஆதலால் இந்த நோட்டீஸ் பிரச்சனையை

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1975 அக்டோபர் 23

எடுத்துக் கூறாமல் இதைப்பற்றி விவாதிப்பதற்குப் போதிய அவகாசம் கொடுத்தால் பொருத்தமாக இருக்கும். இன்றையதினம் இல்லாது இரண்டு தினங்களுக்குப் பிற்பாடு எடுத்துக் கொள்ளலாம் என இந்த மன்றமும் தாங்களும் முடிவு செய்தால் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். சட்டப் பிரச்சனை, இது ஒரு குறுக்கீடு என்று நினைக்காமல் இந்த ஆர்டினன்ஸ் மீது ஒவ்வொரு உறுப்பினரும் என்ன கருத்துக்களைக் கூற வேண்டுமோ அந்தக் கருத்துக்களை கூறுவதற்கு உரிமை கொடுக்க வேண்டுமென்ற ஆலோசனையைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, உயர்திரு தங்கமணி அவர்கள் எடுத்துச் சொன்னது 'பொருத்தமான ஆல். ஆர்டினன்ஸ், அவசர சட்டம் சட்ட சபை இல்லாத காலத்திலே மக்களின் நன்மைக்காகக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக அவசரச் சட்டத்தை ஆயுதமாக வைத்திருக்கிறோம். இந்த அவசரச் சட்டம் சட்டசபைக்கு வந்து இது நியாயமான முறையில் கொண்டு வரப்பட்டதா இல்லையா என்பதை ஆலோசிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கவேண்டும். இது 6 மாதத்திற்குள்ளே மசோதாவாக ஆக வேண்டுமென்று திட்டம் வைத்திருக்கிறோம். இன்றைக்குக் கொண்டு வரும்படியான மசோதா 20 கோடியை 30 கோடியாக ஆக்குவதற்கு. எந்த அவசரக் காரியத்திற்கு என்று, என்ன அவசர நிலைமை ஏற்பட்டு விட்டது என்பதை உட்கார்ந்து ஆராய்ந்து பார்க்கும்போது அவர்களுடைய ஊதாரித் தனத்தை, நிர்வாகத்தின் அனாவசியச் செலவை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி அவர்கள் சட்டப் பிரச்சனையைக் கொண்டு வந்திருக்கிறார். . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஊதாரித்தனம் என்ற வார்த்தை பொருத்தமான வார்த்தையல்ல. பிறகு ஒவ்வொருவரும் அதேமாதிரி பரிமாறிக் கொள்ள ஆரம்பித்தால் சங்கடமாகிவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது திரு. தங்கமணி அவர்கள் எழுப்பியது ஆர்டினன்ஸை டிஸ்அப்ரூவ் பண்ண வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்பது தான். ஆர்டினன்ஸ் கொண்டு வந்தது நியாயமா என்று அதைப்பற்றிப் பேசுவது முறையல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, On a point of order, extravagance in English means 'Oothari- thanam' in Tamil. The Hon. Chief Minister says that it is unparliamentary.



1975 அக்டோபர் 23]

I would like to have a ruling on that. சொற்களை ஆளுகிற முறையையொட்டிப் பார்த்தால் ஊதாரித்தனம் என்று சொல்கிற வார்த்தை நல்ல வார்த்தை. எக்ஸ்ட்ராவகன்ஸ் பார்லிமெண்டரி வார்த்தைதான் எனக்குத் தெரிந்தவரை எக்ஸ்ட்ராவகன்ஸ் என்றால் ஊதாரித்தனம். If there is any other word in Tamil, I may be informed so that I can stand corrected.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, தமிழ் தெரிந்திருந்தால் தேவையற்ற செலவு அல்லது வரம்பற்ற செலவு என்று சொல்லலாம். அம்மையார் சொன்ன சொல் சரியான சொல் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி அவர்கள் ஒரு நிலைமையைச் சொன்னார்கள். ஆர்டினன்ஸ் வருகிறது. அதை அரசாங்கமே லாப்ஸ் ஆக்கிவிடலாம் என்று சொன்னார்கள். அப்படி அரசாங்கம் ஆர்டினன்ஸைச் சட்டமாக மாற்றுவதற்கு மசோதா கொண்டு வராத நிலைமை இருக்கிற நேரத்தில் நம்முடைய தங்கமணி டிஸ்அப்ரூவ் பண்ணுவதற்கு ஒரு தீர்மானம் கொண்டு வருவது முறை தான். ஆனால் அரசாங்கம் இதைச் சட்டமாக ஆக்கவேண்டுமென்று மசோதா கொண்டு வரும்போது ஆர்டினன்ஸை டிஸ்அப்ரூவ் பண்ண தீர்மானம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

அவர் சொன்னதில் அடங்கியிருக்கிற பொருள், நீங்கள் சட்ட முன்வடிவை ஏற்றுக் கொள்ளக் கூடாது, அவசரச் சட்டத்தை டிஸ்அப்ரூவ் பண்ணவேண்டுமென்ற தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்' என்பதுதான். இந்த மசோதா விவாதத்திற்கு வரப் போகிறது. இதிலே உறுப்பினர்களுக்கு வாக்களிக்க உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்போது மசோதாவை எதிர்த்து வாக்களிக்கலாம். ஆகவே ஆர்டினன்ஸை டிஸ்அப்ரூவ் பண்ண வேண்டிய தேவை இப்போது எழவில்லை.

'A Resolution seeking to disapprove an Ordinance cannot bar the progress of a Government Bill which seeks to replace that ordinance and such a resolution becomes infractuous after the Ordinance has been withdrawn'.

ஆகவே தங்கமணி அவர்களுடைய டிஸ்அப்ரூவ் பண்ணவேண்டுமென்று கோருகிற தீர்மானத்திற்குத் தேவை இல்லை என்று கருதுகிறேன்.

[1975 அக்டோபர் 23

## 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

### (அ) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே,

"1975 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவை * அறிமுகம் செய்து, அது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என முன்மொழிகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவரவர்களே, இதில் பேசலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்த வரையிலே 20 கோடி ரூபாய் என்பது 30 கோடி ரூபாயாக கன்டின்ஜன்ஸி ஃபண்டிலே அந்த அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இம்மாதிரியான ஒரு மசோதா சென்ற சட்டசபை கூட்டத்திலே வந்திருக்கிறது. அப்போது நாங்கள் கூட இங்கே கடுமையாக அந்த மசோதாவை எதிர்த்துப் பல குறைபாடுகளை இங்கே அவையில் எடுத்துரைத்தோம். ஆனால் அந்த நேரத்தில்

(முற்பகல் 10 30)

அன்றைய அமைச்சர் தந்திருக்கக்கூடிய விடை என்னவென்றால் எதிர்பாராத வகையில் செலவுகள் ஏறுகின்றன. பல நல்ல காரியங்களைச் செய்யவேண்டும். நல்ல காரியங்கள் செய்வதை இந்த உறுப்பினர்கள் தடுக்கிறார்களா என்ற கேள்வியை எழுப்பினார்கள்.

எந்த நல்ல காரியம் செய்வதாக இருந்தாலும் அதைத் தடுத்து நிறுத்த நாங்கள் இங்கு வரவில்லை. செய்கின்ற காரியங்கள் முறையாக நடக்க வேண்டும் என்பதுதான் எங்கள் எண்ணம். அதற்காகத்தான் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள்கூட, ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்கள். கன்டின்ஜன்ஸி பண்டு 20 கோடி ரூபாய் இருக்கிறதே. அது எப்படிச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இருபது கோடியும் செலவழிக்கப்பட்டு விட்டதா, 19.9 கோடி செலவழிக்கப்பட்டிருக்கிறதா, எதற்காக எல்லாம் அந்தப் பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது, இப்போது 30 கோடி ரூபாயாக உயர்த்த என்னென்ன திடீர்ச் செலவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்கிற விவரம் கொடுத்திருந்தால் நல்லது. இதைப்

* 20—10—1975-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



போல உறுப்பினர்களுக்கு ஒரு குறிப்பே கொடுக்கவேண்டுமென்று முன்பே நான் சொன்னேன். அதைப்போல ஒரு நோட்டை சட்டசபையில் சர்குலேட் செய்தால் பயன் உள்ளதாக இருக்கும் என்று முன்பு தெரிவித்ததற்கு அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் நாங்கள் அப்படிக் கொடுக்கிறோம் என்று வாக்குறுதி தந்தார்கள். வாக்குறுதி வாக்குறுதியாக இருக்கிறதே தவிர, இப்போது திரும்ப 20 கோடியை 30 கோடியாக உயர்த்திக்கொள்ள மசோதா வருகிற போதுகூட அதுபோன்ற குறிப்பு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

வறட்சிப்பணிகளுக்காக என்று இப்போது சொல்லப்படுகிறது. வறட்சிப் பணிகள் எப்படியெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. அது சரியான முறையில் செலவு செய்யப்பட்டிருக்கிறதா என்று ஆராயக்கூட மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தராமல் 20 கோடியை 30 கோடியாக உயர்த்திக்கொள்ள முன்வந்திருப்பது உறுப்பினர்களுக்கு ஃபிஸ்கல் கண்டிரோல்கூட இருக்க வாய்ப்பு இல்லை. நாங்கள் நல்ல காரியங்கள் செய்வதற்கு இடையூறாக நிற்கவில்லை. செய்ய வேண்டிய காரியங்கள் சரியான முறையில் செய்யப்படுகின்றனவா என்பதைக் கவனித்துக்கொள்வதுதான் எங்கள் கடமை. 20 கோடியை 30 கோடியாக உயர்த்துவதற்கு அந்த இருபது கோடி எந்த எந்தவகையில் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்கிற குறிப்புகளே கூட, அதைப்பற்றி விவாதிப்பதற்கு வாய்ப்பே கூட அளிக்கப்படாத காரணத்தினால் இந்த மசோதாவை நான் எதிர்த்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இந்த அவசரச் சட்டம் கொண்டுவந்திருப்பதே சரியல்ல என்ற கருத்தை வலியுறுத்துவதற்காகத்தான் உங்கள் மத்தியில் சில கருத்துக்களைச் சொன்னேன். இப்போது அவசரச் சட்டம் மசோதாவாக வந்திருப்பது உண்மையில் தேவையில்லை என்று சொல்வதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. இந்த அரசு ஏற்பட்டதற்குப் பின்னால், 2 ஆண்டுகள்கூட ஆகவில்லை, இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் கன்டின்ஜன்ஸி பண்டை 10 கோடியில் இருந்து 20 கோடியாக உயர்த்தினோம். 10 கோடியை 20 கோடியாக ஆக்கிக் கொள்வதற்கு என்ன என்ன காரணங்கள் சொல்லப்பட்டனவோ அதே காரணங்கள்தான் இப்போது 20 கோடியை 30 கோடியாக உயர்த்துவதற்கும் சொல்லப்பட்டிருக்கின்றன.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 23

அரசியல் சட்டம் இப்போது சட்டமன்றம் கூடிச் சில குறிப்பிட்ட கொள்கையின் பேரில் வோட்டுக்களைப் பெற்று நிதி ஒதுக்கிக் கொண்ட பிறகும் அதிகமான எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டு விடக்கூடும். அந்தமாதிரியான செலவுக்கு அரசாங்கத்திற்கு கன்டின்ஜன்ஸி பண்டு என்று தனியாக ஒரு நிதி ஒதுக்கம் இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறது. 6,000 கோடிக்கு மேல் வருமானமுள்ள மத்திய அரசுக்கே கூட கன்டின்ஜன்ஸி பண்டு என்பது 100 கோடி ரூபாய்தான். தவறுதலாக ஏதாவது இருந்தால் என்னைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கேரளம், ஆந்திரம், கர்நாடகம் எல்லாம் நம்மோடு சேர்ந்திருந்த போது கூட நம் மாநிலத்திற்கு கன்டின்ஜன்ஸி பண்டு என்று ஒதுக்கப்பட்டது ஒரு கோடி ரூபாய் தான். அவை எல்லாம் நம் மாநிலத்தில் இருந்து பிரிந்த பிறகு நமக்கு 75 லட்சம் ஒதுக்க வேண்டுமென்று அப்போது நிதி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் 1954-ல் கேட்டுக் கொண்டபோது கூட, எவ்வளவு விழிப்புடன் உறுப்பினர்கள் அதைப்பற்றி அப்போது வாதிட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் தெரியும். அரசுக்கு கன்டின்ஜன்ஸி என்று வருவது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வரக்கூடுமே தவிர தொடர்ந்து ஒவ்வொரு வருஷமும் வர முடியாது.

சட்டமன்றம் கூடுவதற்கு முன்பாக—மே மாதம் 2 ஆம் தேதி அந்தக் காலத்தில் என்ன அவசரம் இருந்ததோ அதற்கு மேலே ஒன்றும் வரவில்லை. மே மாதம் 2 ஆம் தேதியே வறட்சிக்கு பணம் செலவழிக்கப்பட்டதைப்பற்றி விவாதித்திருக்கிறோம். அதுபற்றிப் பலவிதமான வாதப்பிரதிவாதங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. மத்திய அரசு பணம் இருக்கிறது. இங்கே வசூல் பண்ணினது வேறு. இன்றைக்கும் அதே காரணங்களைச் சொல்லி 20 கோடியை 30 கோடியாக உயர்த்த முன்வருவது
to put it mildly, it is insulting the intelligence of the House
இது என்ன முறையோ எங்களுக்குத் தெரியவில்லை.

1962 ஆம் வருஷத்தில் மாநில மொத்த வருமானமே 60 கோடிக்கு இருந்தது என்றால் இன்றைக்கு 30 கோடியை கன்டின்ஜன்ஸி பண்டுக்காக ஒதுக்கக் கோரியிருப்பது எந்தமாதிரியான முறைப்படியும் சரியல்ல.

1954 ஆம் வருடத்தில் இந்த மசோதாவைக் கொண்டுவந்த போது அதை நிறைவேற்றித்தரவேண்டும் என்பதற்கு திரு. சுப்பிரமணியம் அவர்கள் சுருக்கமாகப் பேசியிருக்கிறார்கள். அதை



1975 அக்டோபர் 23] [திரு. கே. டி. கே. தங்கமணி]

சபையின் கவனத்திற்குக் கொண்டு வருவது உதவியாக இருக்கும் என்ற காரணத்தினால் தங்கள் அனுமதியோடு அதனைப் படிக்க விரும்புகிறேன்.

"As the hon. Members are aware, the Government cannot draw money from the Consolidated Fund except under the authority of the Legislature. It is only for that purpose, after we vote the various Grants, we pass, what is known as the Appropriation Bill, giving authority to the Government to draw money from the Consolidated Fund of the State. But, apart from the Budget proposals, for which sanction is granted by the Legislature, the Government may have to undertake new schemes which have not been contemplated at the time of making the Budget proposals and those cases have to come up before this House again by way of Supplementary Demands. Before we get authority from the Legislature, it is necessary to incur some expenditure. For that purpose, we constitute what is known as the Contingency Fund. From that Fund, the Governor is authorised to advance money to the Government for being utilised on New Services. Later on, when the Legislature sanctions the expenditure and votes the Grant, this money is put back into the Contingency Fund so that the Contingency Fund, at the end of the year, will remain at the same figure. We had the Contingency Fund Act of 1950 with reference to the State as a whole, providing one crore of rupees for this Fund. After the separation of the Andhra State, the balance left over is only about forty or fifty lakhs of rupees which will go back to the Consolidated Fund. That is why a new Bill with reference to our residuary Madras State has been brought forward, and it is proposed that a sum of Rs. 75 lakhs may be constituted as the Contingency Fund."

என்று அதனுடைய நோக்கத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சில புதிய திட்டங்கள் போட்டிருக்கிறோம். பத்து கோடிக்குப் புதிய பிளாண்டு அமைக்க வேண்டியிருப்பதால் இதுபோலக் கோர வேண்டியிருக்கிறது என்று சொன்னால் புரிந்துகொள்ள முடியும். அதைப் பாராட்டலாம், அப்படி இருப்பதாகவும் தெரியவில்லை.

முன்பு என்ன காரணங்களைச் சொன்னார்களோ அதே காரணங்களை இப்போதும் சொல்கிறார்கள். வறட்சிப்பணி பற்றி முன்பே சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக என்று இப்போது 20 கோடியை 30 கோடியாக ஆக்கவேண்டுமென்று சொல்வது திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்களே, அதுபோல்
It is nothing but extravagance சாதாரணமாக, வரவுக்கு மீறி

நாம் செலவழிக்கிறோம் என்கிற மாதிரிதான் இருக்கிறது. வரவு-செலவு கணக்கிலே எவ்வளவு செலவழிக்கலாம் என்பதற்கெல்லாம் ஒதுக்கிவிட்டோம். பிறகு எப்படி, எவ்வளவு செலவழிக்கலாம் என்பதற்கு சப்ளிமென்ட்டரி பட்ஜெட் வரும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதையும் மீறி, எதிர்பாரா செலவு என்று ஏற்கனவே கேட்டதற்கு மேல், மேன்மேலும் புதிதாக செலவழிக்கிறோம் என்று சொன்னால், அதனை நிர்வாகத்தின் முறை சரியல்ல என்றுதான் நான் சொல்லமுடியும். அந்த முறையிலே வருஷத்திற்கொருமுறை கன்டின்ஜன்ஸி ஃபண்டைக் கூட்டவேண்டுமென்று மசோதா கொண்டு வருவதும் இடையிலே; சட்டமன்றம் நடைபெறாமலிருக்கிற நேரத்திலே ஆர்டினன்ஸ் கொண்டு வருவதும் சரியல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.

The very purpose for which the Contingency Fund has been created, is sought to be defeated.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கன்டின்ஜென்ஸி ஃபண்டை ரூ. 20 கோடியிலிருந்து ரூ. 30 கோடியாக உயர்த்துவதற்காகக் கொண்டு வந்திருக்கிற அவசரச் சட்டத்தை, சட்டமாக்குவதற்காகக் கொண்டு வந்திருக்கிற மசோதாவைக் குறித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

1965-லே ரூ. 5 கோடியாக இருந்தது, 1975-லே ரூ. 30 கோடி அளவுக்குத் தேவைப்படுகிறது என்று பார்க்கும்போது என்னென்ன நிர்வாக அவசரச் செலவுகளுக்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பது புரியவருகிறது. குறிப்பாக, மே மாதத்திற்குப் பின்னால் இப்படிப்பட்ட அவசர நிலைமை, இக்கட்டான நிலைமை ஏற்பட்டு, ஜூலையில் ரூ. 20 கோடியை ரூ. 30 கோடியாக ஆக்க என்ன சூழ்நிலை வந்தது என்று அவர்கள் குறிப்பிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். டிராவுட் கண்டிஷனுக்கு ரூ. 20 கோடியை ரூ. 30 கோடி ஆக்குகிறோம் என்றால், மே மாதத்திற்குப் பின்னால் ஜூலைக்குள் பஞ்சம் வந்துவிடவில்லை. இந்தப் பஞ்சம் சென்ற ஆண்டே பெரிய உருவெடுத்தது என்பதைப் பார்க்கும்போது, இதுவரை சென்னை நகரம் அனுபவிக்காத கஷ்டங்களை எல்லாம், இவர்கள் அனுபவிக்க வைத்தார்கள். காரணம், பஞ்சம் கடுமையாக வந்தது மாத்திரமல்ல, நமக்கு நிர்வாகத்திலே பஞ்சம் ஏற்பட்டு, இதை எப்படி எப்படிச் சமாளிக்க வேண்டுமென்ற





திறமையில்லாத காரணத்தாலே, பஞ்சம் அவ்வளவு கடுமையாகக் காட்சியளித்ததே தவிர, பஞ்சம் அவர்களைத் திடீரென்று தாக்கி, அதனால் தான் ரூ. 20 கோடியை ரூ. 30 கோடியாக உயர்த்தி, இந்த நிலைமைக்குப் போனது என்றால், அதை நம்மால் ஒத்துக்கொள்ள முடியாது.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இவர்கள் தங்களுடைய வரவு-செலவுத் திட்டத்திலே வருவாயைக் குறைத்தும் செலவை அதிகமாக்கியும் மிக சமார்த்தியமாகக் காட்டியிருக்கிறார்கள். the report of the Comptroller and Auditor-General of India. அதைப் படித்தாலே போதும், சில வகைகளிலே, ஒவ்வொன்றும் 43 சத விகிதம் என்ற அளவுக்குக்கூட அதிகமாக வந்திருக்கிறது. ஒரு இனத்தில் 1650 சத விகிதம் கூட ஸ்டேட் எக்ஸைஸ் டியூட்டி இன்கிரீஸ் ஆகியிருக்கிறது. அப்படியென்றால் அவர்களுக்கு வரவு செலவுத் திட்டத்தில் என்ன கன்ட்ரோல் இருக்கிறது என்பது புரிகிறது. சாதாரணமாக வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடுவதைவிட, 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம் வரை மாறுபடும், உயரும் அல்லது குறையும். இந்த ரிப்போர்ட்டைப் பார்த்தால். Stamp Duty, State Excise Duty, Forest and Agriculture — இவைகளில் 1560 சதவிகிதம், 43 சதவிகிதம், 17 சதவிகிதம் என்ற அளவில் இவர்களுடைய கையில் அடங்காத அளவிலே வரவு அதிகமாகி இருக்கிறதென்றால், இவர்கள் பட்ஜெட்டை, ஒழுங்கான முறையிலே, சரியான முறையிலே தமிழகத்திற்குத் தருகிறார்களா என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

அது மாத்திரமல்லாமல், இன்றைக்கு ரூ. 30 கோடியை அவசரச் செலவுகளுக்கு இன்கிரீஸ் செய்வதைப் பார்க்கும்போது, இங்கே வரவு-செலவு திட்டப்படி நடப்பது கிடையாது என்பது தெரிய வருகிறது. இரண்டு மூன்று மாதத்திற்கு ஒரு முறை சப்ளிமென்டரி பட்ஜெட்டைக் கொண்டு வருகிறார்கள். நியூ சர்வீஸ் என்று, அவசரமாக அதற்கும் தனியாக பணம் ஒதுக்கிக்கொள்கிறார்கள், சப்ளிமென்ட்டரி பட்ஜெட்டின் மூலமாகவும் வருஷத்திற்கு 4 முறை வாங்கிக் கொள்கிறார்கள். "அவசர வேலைகளை முடிக்கப் பணம் தேவைப்படுகிறது, இவைகளை எல்லாம் எங்களுடைய வரவு-செலவு திட்டத்திலே சேர்க்கத் தவறிவிட்டோம், அடுத்து வந்த 4, 5 சப்ளிமென்ட்டரி பட்ஜெட்டுகளிலே கூட சேர்க்கத் தவறிவிட்டோம், இவற்றையெல்லாம் எதிர்நோக்க அப்பொழுது தவறிவிட்டோம்,

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 அக்டோபர் 23

அப்பொழுது சமாளிக்கத் தவறிவிட்டோம். எங்களுக்கு அவசரமாகப் பணம் தேவைப்படுகிறது" என்று சொன்னால் அப்பொழுது அதை ஒத்துக்கொள்ளலாம்.

ரூ. 20 கோடியை, ரூ. 30 கோடியாக்குவதற்கு எந்த அளவிலே பஞ்ச நிவாரண வேலை நடக்கிறது, மக்களைச் சென்றடைந்திருக்கிறது தொட்டது என்பதைப் பார்ப்பதற்கு நேரடியாகச் சென்றேன், செங்கல்பட்டு ஜில்லாவிலே, மதுராந்தகம் தாலுகாவிலே எல்லாம் சென்று பார்த்தேன். குடிப்பதற்குக் கூடத் தண்ணீரில்லாமல் மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். கிணற்று நீருக்குக் கூட வழியில்லாமல் கஷ்டப்பட்டார்கள். கிணற்றுத் தண்ணீர் மஞ்சளாக மாறி இருந்ததைப் பார்த்தேன். அவ்வளவு கஷ்டப்பட்டார்கள் மக்கள். உங்களுடைய பஞ்ச நிவாரண வேலை அவர்களைத் தொடவே இல்லை. உங்கள் பஞ்ச நிவாரண வேலை ஒழுங்காக நடக்கிறதா, இல்லையா என்று நானே சென்று பார்த்த போதுதான். . .

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, மதிப்பிற்குரிய மத்திய நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் பஞ்ச நிவாரண வேலைகளையெல்லாம் பார்த்துவிட்டு வந்தபிறகு, நிருபர்களிடம் சொன்னார்கள், நான் பஞ்ச நிவாரண வேலைகளையெல்லாம் பார்த்துவிட்டு வந்தேன், வேலைகள் பரவலாக நன்றாக நடக்கின்றன, என்று. ஆனால், அவருடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர், பஞ்ச நிவாரண வேலைகளைக் குற்றம் சொல்வது போல் தெரிகிறது. அது நியாயமா என்று கேட்கவிரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அவர் மத்திய நிதியமைச்சர். ஆகவே அவருக்கு வேலைகள் செய்திருக்கிற இடங்களை, எங்கெங்கு செய்திருக்கிறீர்களோ, அவற்றைக் காட்டியிருப்பார்கள். நான் சாதாரண அங்கத்தினர். ஆகவே, உண்மை நிலையை நேரில் போய் பார்த்து, என்ன என்ன நடக்கிறது என்று தெரிந்துகொண்டேன். மத்திய-மாநில அமைச்சர்களாக இருந்தால் அதிகாரிகள் எங்கெங்கு வேலைகள் நடக்கின்றனவோ அங்குதான் அழைத்துச் சென்று பிரமாதமாகச் செய்தோம் என்று காட்டுவார்கள். அவர்களும் அவற்றைப் பார்த்துவிட்டு, பிரமாதம் என்று சொல்வார்கள். உண்மையிலே பாதிக்கப்பட்டவர்களை அந்தப் பஞ்ச நிவாரண வேலை தொடவே இல்லை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பஞ்ச நிவாரணத்தைப்பற்றிப் பிறகு பேசிக்கொள்ளலாம். இது கண்டிஜென்ஸி ஃபண்டில் தொகையை உயர்த்துவதுபற்றி. அதைப்பற்றிப் பேசுங்கள்.



1975 அக்டோபர் 23]

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, the reason given in the Statement of Objects and Reasons appended to the Bill is that the Government have to incur considerable expenditure towards drought relief operations. Have they really given relief to the people affected by drought ?

சென்னையிலே, தலைநகரத்திலே 3 நாளைக்கு ஒரு முறை குழாயிலே தண்ணீர் விட்டார்கள். எந்தக் காலத்திலே, தலைநகரத்திலே 3 நாளைக்கு ஒருமுறை தண்ணீர் விடப்பட்டது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையெல்லாம் பிறகு அப்ரோபிரியேஷன் பில்லிலே பேசிக்கொள்ளலாம். சப்ளிமெண்ட்டரி பட்ஜெட் வரும்போது என்னென்ன பணிகள் என்பதுபற்றிப் பேசிக்கொள்ளலாம். இப்பொழுது, தொகையை உயர்த்துவதுபற்றி மட்டும் பேசுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அவசர வேலையென்றால், தலைநகரத்தில் நடந்திருக்கவேண்டும். சென்னையிலே, தலைநகரத்திலே, அவசர வேலையை ஒழுங்காகச் செய்யவில்லை. எங்கிருந்தோ, செயற்கை மழை பெய்யவைப்பதற்காக ஆட்களை அழைத்து வந்தீர்கள். அதற்காக ரூ. 15 இலட்சம் செலவழித்தீர்கள். அதனால் மழை வந்ததா என்பது கேள்விக்குரியது. இவ்வாறு தொகையை உயர்த்தி, தங்களுடைய செலவுகளுக்காகப் பயன்படுத்துகிற ஒரு சூழ்நிலையிருந்தால் அது அவசூறானதே. இந்தத் தொகையை உயர்த்த உடனடியாக ஆர்டினன்ஸ் வேண்டுமா? இடையிலே நெருக்கடி ஏற்பட்டு, பொதுமக்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டு, அந்தப் பொதுமக்களுடைய கஷ்டத்தைத் தீர்க்க வேண்டுமென்பதற்காகச் சட்டசபையில்லாவிட்டாலும் பரவாயில்லை. மக்கள் அவதிப்படக்கூடாது; உடனடியாகச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று அவசரச் சட்டம் கொண்டுவருவது வழக்கம். நிலமில்லாத ஏழைகளுக்கு நிலமளிப்பதில் தகராறு? தொழிலாளர் தகராறு? வீக்கர் செக்ஷன்ஸுக்கு நன்மை செய்வதில் தகராறு? அந்த மாதிரி நேரங்களில் அவசரச் சட்டம் கொண்டு வருவது வழக்கம். நீங்கள் உங்கள் செலவுகளை அதிகரிக்க, பஞ்ச நிவாரண வேலைகளுக்கு மேலே விளம்பரத்திற்குச் செலவழிக்க இதனை உயர்த்துகிறீர்களென்றால், அதை . . . (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, எதிர்பாராத செலவுகளுக்காக ஒரு குறிப்பிட்ட தொகையைச் சட்டத்தின் மூலமாக ஒதுக்கி, புதிய திட்டங்களை மேற்கொள்ளும்போது, சட்ட

[திரு. செ. மாதவன்] [1975 அக்டோபர் 23

மன்றம் கூடுவதற்கு முன்னாலே பணம் பெற்று செலவழிக்கின்ற ஒரு வாய்ப்பைத் தருகின்ற அதிகாரம்தான் இது. அது அரசியலமைப்புச் சட்டத்திலே நமக்குக் கொடுத்திருக்கிற அதிகாரம். அந்த அதிகாரப்படி நாம் ஒரு சட்டத்தை உருவாக்கி, இந்த அதிகாரத்தின் மூலமாக அதிகத் தொகையைப் பெறுவதற்கு வாய்ப்பைத் தேடிக் கொண்டிருக்கிறோம்.

இங்கே திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் அவசரச் சட்டத்தைப் பற்றி ரொம்ப நல்லமுறையிலே விமர்சித்து, இப்படியெல்லாம் அவசரச் சட்டம் கொண்டு வந்தது நியாயம்தானா என்று கேட்டார்கள். திருமதி அனந்தநாயகி அவர்களும் சேர்ந்து கேட்டார்கள். ஆகவே, அதிலே மகிழ்ச்சி. அவசரச் சட்டம் கூடாது என்று அவர்கள் வாதாடியது பொருத்தம் என்றே கருதுகிறேன். நாம் கொண்டு வந்திருக்கிற அவசரச் சட்டம் நாட்டுக்கு, மக்களுக்கு நன்மை தராதா என்பதைப்பற்றிப் புள்ளிவிவரங்களையெல்லாம் பார்த்ததற்குப் பின்னால், சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று சொல்லவிரும்புகிறேன். இது புதுமையான ஒரு முறையல்ல என்பதை மட்டும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இதுபோன்று அதிகப் பணம் கோருவது நியாயமா என்பதைப் பற்றி முன்னாள் நிதியமைச்சர் அவர்கள் கூறிய கருத்தை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் நல்ல மனதோடு இங்கே நினைவு படுத்தினார்கள். அதுவே நல்ல பதிலாக அமைந்தது என்பது நமக்குப் புரிகிறது.

1954-லே ரூ. 75 இலட்சத்திலே தொடங்கிய இந்த நிதி கொஞ்சம் கொஞ்சமாக, ரூ. 1½ கோடி, ரூ. 5 கோடி, ரூ. 10 கோடி, ரூ. 20 கோடியாக வளர்ந்திருக்கிறது. இந்த ஒன்றே எல்லோரும் இந்த முறையை ஏற்றுக்கொண்டு நடைமுறையிலே கொண்டு வந்தார்கள் என்பதற்கு ஒரு சான்றாகும். இப்படியெல்லாம் அடிக்கடி மாற்றுகிறீர்களே, உங்களுக்கு விவரம் தெரியவில்லையா, நிதிநிலைமையெல்லாம் தெரியவில்லையா என்று ரொம்பக் கடுமையாகக் கேட்டார்கள். திருமதி அனந்தநாயகி அவர்கள் 1955-ம் ஆண்டு, 1965-ம் ஆண்டு சட்டத்தைப்பற்றிக் கேட்டார்களா என்று யாரும் சந்தேகம் கொள்ளக் கூடாது, நாங்கள் அப்படிச் சந்தேகப்படவில்லை. அதிகப் பணம் ஒதுக்க வேண்டும் என்பதுதான் இதி. எல்லாம் முறைப்படி கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அரசாங்கமும் இதைச் செய்திருக்கிறது என்பதை மட்டும் நான் நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன்.



1975 அக்டோபர் 23] [திரு. செ. மாதவன்]

இடைகாலத்திலே ஏற்படுகிற புதிய திட்டங்களுக்கு சப்ளிமென்டரி பட்ஜெட் கொண்டு வருகிறார்களா என்று கேட்டார்கள். அது தான் இது. சப்ளிமென்டரி பட்ஜெட்டுக்குத் தேவையான பணத்தை நாம் கேட்கும்போது, நியூ சர்வீஸுக்கு அப்பொழுது பணம் இல்லாத காரணத்தாலேதான், கன்டின்ஜென்ஸி ஃபண்டிலேயிருந்து பணத்தையெடுக்கிறோம். அதற்குப் பின்னாலே இந்த மன்றம் ஒப்புதல் தந்தபிறகு, எடுக்கப்பட்ட பணம் பின்னாலே அங்கே போய்ச்சேருகிறது. எதிர்பாராச் செலவு நிதியிலிருக்கிற பணம் அப்படியே இருக்கிறது. அது அரசியல் சட்டத்திலே வகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு முறை என்றுமட்டும் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்ன செலவு செய்தீர்கள், எப்படிச் செலவு செய்தீர்கள் நீங்கள், நாங்கள் போய்ப் பார்த்த இடமெல்லாம் பஞ்சம் இருந்தது என்று அவர்கள் கேட்டார்கள். ஆகவே பஞ்ச நிவாரணத்திற்காக ஒதுக்கிறோம் என்று புரிந்துகொண்டு அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: Sir, I take strong objection to such an insinuation புரிந்துகொள்கிற சக்தி என்ன மந்திரியினுடைய மொத்த சக்தியா? மற்றவர்களுக்கு எல்லாம் அந்த சக்தி இல்லையா? அதுதான் பில்லிலேயே கொடுத்திருக்கிறீர்களே டிராவுட் ரிலிப் என்று, அதைப்புரிந்துகொள்ளக்கூட முடியாத மக்குகளா நாங்கள்? புரிந்துகொண்டுதான் பேசுகிறோம், ஆகவே அந்த அளவிற்கு எதிர்க்கட்சிகளைக் குறைவாக எடைபோடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அங்கத்தினர்கள் பேசும்போது அப்படிப்பட்ட சொற்களையெல்லாம் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. 'மக்குகளா' என்றெல்லாம் கேட்பது முறையல்ல.

மாண்புமிகு திரு செ. மாதவன்: அவர்களை மக்கு என்று நான் ஒரு காலும் சொல்லமாட்டேன். அம்மையார் அவர்களே ஒரு வார்த்தையைப் பயன்படுத்தினார்கள், அப்படிப் பயன்படுத்திவிட்டு அவர்களே பஞ்ச நிவாரணத்திற்கா என்று கேட்டார்கள். அவர்களுடைய அறிவாற்றலை நான் குறைத்து மதிப்பிடவில்லை. அவர்கள் பேசியபோது மத்திய நிதி அமைச்சர் வந்து பார்த்துவிட்டுப் பாராட்டினாரே என்று கேட்டவுடன் அவர்கள் காட்டிய இடங்களைத் தான் பார்த்திருப்பார்கள், எல்லா விவரங்களையும் தெரிந்து கொண்டு பாராட்டியிருக்கமாட்டார்கள் என்றார்கள். நாங்கள்

[திரு. செ. மாதவன்] [1975 அக்டோபர் 23

குறிப்பிட்ட இடங்களைத்தான் காட்டினோம் என்று சொன்னார்கள். அவ்வளவு மோசமான நிதியமைச்சர் என்று அவர்களை நாங்கள் எடைபோடமாட்டோம். அவர் அதிக நாட்கள் நிதியமைச்சராக இருந்தவர், மாநிலத்திலே உள்ள பல இடங்களுக்குச் சென்று பார்த்திருக்கிறார்கள். அவர்களுக்கு கட்சிக்காரர்களே அதையெல்லாம் காட்டவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள், ஒருவேளை அங்கத்தினர் அவர்கள் சென்னை நகரத்திலே இருக்கிற உறுப்பினர் என்ற முறையிலே காட்டியிருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். மத்திய ஆட்சியிலே உள்ள பல அமைச்சர்கள் இங்கே வந்து பாராட்டியதை எல்லாம் நாடு நன்றாக அறியும். இது போன்ற முக்கியமான செலவுகள் எதற்காக ஏற்படுகின்றன என்பதைப் பார்க்கவேண்டும். அம்மையார் அவர்கள் ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். அந்த வார்த்தையைச் சொல்வதற்கு எனக்குச் சங்கடமாக இருக்கிறது. என்ன என்ன செலவுகள் என்பதைப் பார்த்துவிட்டு அவர்கள் சொன்ன அந்த வார்த்தை பொருத்தமா என்பதை அவர்களே சொல்லவேண்டும்.

பஞ்ச நிவாரணத்திற்காக 6 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவழித்து இருக்கிறோம். கிராமங்களிலே உள்ள விவசாயிகள் அல்லல்படுகிறார்கள், அவர்களுக்குக் கடன் கொடுக்கவேண்டும், கூட்டுறவுச் சங்கங்களிலே அவர்கள் ஏற்கனவே வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்கமுடியாத நிலைமை இருக்கிறது, அதை வசூலிக்கவேண்டுமென்ற நிலைமையில் மேலும் கடன் அவர்களுக்குக் கொடுக்கமுடியாத நிலைமை இருந்தது. ஏழை எளிய விவசாயிகளை அல்லல்பட விடக் கூடாது என்ற முறையிலேதான் தக்காவிக் கடன் என்ற முறையிலே எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் மக்களும் கேட்டுக்கொண்ட ஒரு கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு ஒரு கோடி ரூபாயை ஒதுக்கினோம்.

சென்னை மாநகரத்திலே தண்ணீர் பஞ்சம், நூறு ஆண்டுகளாகச் சந்திக்காத பஞ்சத்தைத் தமிழ்நாடு சந்தித்தது, அதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். டெல்லியிலிருந்து இங்கே வந்த அமைச்சர்களே ஒத்துக்கொள்கிறார்கள், புள்ளிவிவரங்களைக் கொடுக்கும் நிபுணர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். இதற்கு யார் காரணம் என்பதைக் குற்றச்சாட்டாகச் சொல்கிறார்கள். அந்தப் பஞ்சத்தைப் போக்குவதற்காக 96 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். ஏழை எளிய நெசவாளர்களுக்குத் தொடர்ந்து நன்மைகள்



1975 அக்டோபர் 23] [திரு. செ. மாதவன்]

களுக்குச் செய்வதற்கு இந்த அரசாங்கம் தயக்கம் காட்டியதே கிடையாது. ஏற்கனவே அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் கடன் கொடுக்க இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்தது. அதற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கடனை ரத்துசெய்த சரித்திரம் இந்த நாட்டிற்குத் தெரியும்.

சுதந்திரம் கிடைத்து இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னால் மத்திய ஆட்சியிலே இப்போதுதான் ஏதோ ஒரு திட்டம் அவர்களுக்காகக் கொண்டுவரப்படுவதைப் பார்க்கிறோம். ஆனால் நாம் இந்த அல்லல்படுகிற நெசவாளர்களுக்கு நிதி ஒதுக்கவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று அந்த முறையில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்க முடிவுசெய்தது அரசாங்கம்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அரிசன மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்கின்ற முறையில் ஒரு வாரியத்தை உருவாக்கி தமிழ்நாட்டில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், அரிசனமக்கள் வீடுகளைப் பெறுகின்ற முறையில் நாம் திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம், அதற்காக மூன்றே கால் கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

அதுபோல் சென்னை நகரத்தில் குடிசைப் பகுதிகளில் எல்லாம் மாடிவீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். இதையெல்லாம் வெளி மாநிலங்களிலிருந்து வருகின்ற அமைச்சர்கள்—அண்டை மாநிலங்களிலே யார் யார் ஆட்சி செய்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும்—இதையெல்லாம் பார்த்து மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள். எங்கள் மாநிலங்களிலும் இப்படிச் செய்யப்போகிறோம் என்று பாராட்டிய காட்சியைப் பார்த்தோம். அதற்காக 25 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இப்படி வெளியிலே இருந்து வந்தவர்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள் ஆனால் இங்கே இருக்கிறவர்களுக்கு மனம் வரவில்லை, அவர்கள் பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை, திட்டாமல் இருந்தால் போதும். இப்படிப் பல புதிய திட்டங்களை நாம் அதிகச் செலவில் நிறைவேற்றியிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் கன்டின்ஜன்ஸி பண்டிலிருந்து அதிகமாகச் செலவழிக்கப்படுகிறது. இப்போது அதற்கு 30 கோடி ஒதுக்குகிறோம் என்றால் 30 கோடியையும் செலவழிக்கிறோம் என்பதல்ல, 10 கோடி செலவழிக்கலாம், உடனே சப்ளிமெண்டரி பட்ஜெட் வந்தவுடனே அந்தப் பணத்தை வாங்கி திரும்பி அதிலே போடுவோம். முப்பது கோடியையும் செலவழிக்கப் போகிறார்கள் என்று நினைக்கத் தேவையில்லை.

[திரு. செ. மாதவன்] [1975 அக்டோபர் 23

ஆகவே, இது தமிழ்நாட்டின் நன்மைக்காக, இங்கேயுள்ள மக்களின் நன்மைக்காகச் செய்யப்படுகின்ற நிதிநிலையில் உதவக் கூடிய சட்டம். 1969 ஆம் ஆண்டில் நம் மாநிலத்தின் மொத்த வரவு செலவு 359 கோடி ரூபாயாக இருந்தது, இன்றைக்கு 621 கோடி ரூபாயாக மாறியிருக்கிறது. அதனுடைய ரேஷியோவை வைத்துப் பார்த்தால்கூட மொத்தம் மாநிலத்திலே செலவழித்தது 2.8 சத விகிதமாக இருந்தது 4.2 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. மொத்தமாக பட்ஜெட் போடுவதற்கும் எதிர்பாராத செலவுகளுக்கும் உள்ள விகிதாச்சாரத்தைப் பார்த்தால் 4 சதவிகிதம்தான் இருக்கிறது என்பதைப் பார்த்தால் இதிலே ஆட்சேபிப்பதற்கு ஒன்றும் இல்லை என்பது தெரியும். இந்த அவசரச் சட்டம் நாட்டு மக்களுக்காகக் கொண்டுவரப்பட்ட அவசரச் சட்டம் என்று சொல்லி, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் படவேண்டும்".

**தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.**



## (ஆ) தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு வழக்கமான குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சட்டமன்றப் பேரவை தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு வழக்கமான குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவை * அறிமுகம் செய்து, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என நான் முன் மொழிகிறேன்.

குற்றப் பரம்பரை பழங்குடிகள் சட்ட விசாரணைக் குழுவின் பரிவுரைகளை அடிப்படையாகக் கொண்டு வழக்கமாக குற்றம் புரிவோர் குறித்த அனைத்திந்திய சட்ட முன்வடிவு மாதிரி ஒன்றை நடுவண் அரசு தயாரித்துள்ளது. வழக்கமாகக் குற்றம் புரிவோர்கள் குறித்த வழக்குகளைக் கையாளுவதில் இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான நடைமுறை இருக்கும் வண்ணம் மாநிலச் சட்டமாக மேற்கொள்ளப்பட இந்த மாதிரிச் சட்ட முன்வடிவு கருத்தில் கொள்ளப்படலாம் என நடுவண் அரசு மாநில அரசை கேட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வழக்கமாக குற்றம் புரிபவர்களுக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்தல் குறித்த தமிழ் நாடு 1948 ஆம் ஆண்டு சட்டம் (தமிழ் நாடு சட்டம் 6/1948) இம்மாநிலத்தில் இப்போது செயலில் இருந்து வருகிறது. இது ஒரு அடங்கல் சட்டமாகும். இதில், மாதிரிச் சட்ட முன்வடிவின் முக்கிய விதித் துறைகள் அடங்கியுள்ளன. எனவே, வழக்கமாகக் குற்றம் புரிபவர்களுக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்தல் குறித்த தமிழ் நாடு 1948 ஆம் ஆண்டுச் சட்டத்தைத் திருத்துவதன் வாயிலாக இம்மாநிலத்திலுள்ள நிலைமைகளுக்குப் பொருத்தமானவையும் மாதிரிச் சட்ட முன்வடிவில் இருப்பவையுமான விதித் துறைகளைச் சேர்த்துக் கொள்வது போதுமானதாகும் என்றும் இதற்காக, தமிழ் நாடு சட்டத்திற்குப் பதிலாக புதிதாக வேறு ஒரு சட்டத்தை கொண்டுவரத் தேவையில்லை என்றும் அரசு முடிவு செய்துள்ள இச்சூழலில்தான்

* 16—10—1975-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. செ. மாதவன்] [1975 அக்டோபர் 23

வழக்கமாகக் குற்றம் புரிபவர்களுக்கு சில கட்டுப்பாடுகளை விதித்தல் குறித்த தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு (திருத்த) சட்ட முன்வடிவு பரிசீலனை செய்யப்படுவதற்காகச் சட்டமன்றப் பேரவையில் இப்போது வைக்கப்படுகிறது.

இதனை ஏற்று நிறைவேற்றுமாறு இப்பேரவையை வேண்டுகிறேன்.

(முற்பகல் 11-00)

Dr. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, I rise to oppose this Bill for the following reasons. In the Statement of Objects and Reasons appended to the Bill, it has been stated—

'The Government of India have sent a Model Bill in respect of handling of habitual offenders for adoption in the States so that there may be uniformity in the same, throughout India.'

In other words, this Bill has been brought forwarded with the specific purpose of bringing about uniformity in the concerned Acts in all the States. But unfortunately the Government have sought to see that only certain sections of the Act are amended and a few new sections are added to this Bill. This is totally unnecessary. By changing a few sections, and adding a few sections the Government will not be able to bring uniformity in all the Acts in the States. Instead of that, I would have been happy if the Government had sought to wait for sometime to see that a uniform legislation was enacted throughout the country.

Secondly, I want to refer to certain sections like section 231 relating to counterfeiting coin, section 232 counterfeiting Indian coin, section 233-making or selling instrument for counterfeiting coin and section 234-making or selling instrument for counterfeiting Indian coin. The offences mentioned in these sections are major offences. Some of these offences would also come under MISA. In other words, this particular legislation will give rise to a lot of confusion in the lower courts, High Court and even in the Supreme Court because the Government will not be able to find out whether they will come under MISA or under this Bill.

If the cases are registered under MISA they cannot be brought immediately into court. The sections and rules of the MISA are entirely different. Rules framed under the present Act are entirely different. In other words, there will be so much of confusion and the prosecution when they launch the cases, will not know as to what



1975 அக்டோபர் 23] [Dr. H. V. Hande]

exactly they have to argue before the Court. The lawyers also will be in an ambiguous position and the judiciary also will be put in a very embarrassing position. All these things will arise by this unfortunate piece of legislation. I would not like to dilate on this further. I hope the Hon. Minister would see the weightage in my arguments and he would see to it that this Bill is withdrawn. Once he is convinced that there are sufficient reasons, he might refer this to a Select Committee or withdraw this Bill and wait for a uniform legislation being brought forward so that there will not be this confusion. Sections of MISA and the sections under this Act are entirely different.

I hope that the arguments I had advanced are sufficient enough to persuade the Hon. Minister to withdraw this Bill. I strongly plead that this Bill may be either referred to a Select Committee for further consideration or the present Bill may be withdrawn.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு இந்த வழக்கமான குற்றவாளிகளைத் தண்டிக்கும் ஒரு சட்டத்தைத் திருத்தத்தின் மூலமாக இங்கே கொண்டு வந்திருக்கிறது இந்த அரசு. அந்த ஸ்டேட்மெண்ட் ஆஃப் ஆப்ஜெக்டிலேயே கூறியிருக்கிறார்கள், மத்திய அரசு ஒரு மாதிரி மசோதாவைத் தயாரித்து அகில இந்தியாவிலேயும் ஒரு ஒற்றுமையாகச் சட்டம் இருக்க வேண்டும், ஒரே மாதிரியான சட்டம் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அனுப்பியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தை அப்படியே ஏற்பதிலே இந்த அரசாங்கத்திற்கு என்ன கஷ்டம் இருக்கிறது? ஏற்கனவே, 48-லே இயற்றிய ஒரு சட்டம் தமிழகத்திலே இருந்தாலும், அகில இந்தியாவிலேயும் ஒரேமாதிரியான ஷரத்துக்களைக் கொண்ட மசோதா இருந்தால் சாலச் சிறந்ததாக இருக்கும், இந்தக் குற்றவாளிகளைக் கண்டிக்கவும், கண்டுபிடிக்கவும் ஏற்றதாக இருக்கும் என்று அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அரசு அனுப்பிவிட்டது என்ற ஒரே காரணத்திற்காக, "இல்லை இல்லை, நாங்கள் அதை ஏற்க மாட்டோம், எங்களிடத்திலே ஏற்கனவே ஒரு சட்டம் இருக்கிறது. அதைத்தான் நாங்கள் திருத்துவோம்" என்று சொல்வதைப் பார்க்கும்பொழுது இது ஏதோ காழ்ப்புணர்ச்சியிலே செய்யப்படுவதைப் போன்று இருக்கிறதே தவிர, சட்டத்தை அமல் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இல்லையோ என்ற சந்தேகம்தான் தோன்றுகிறது.

இங்கேயுள்ள சமுதாய விரோதக் குற்றங்களான, கள்ள நோட்டு அச்சடிப்பது, இன்னும் மற்ற சமுதாய விரோதக் குற்றங்களைச் செய்வது என்பதைப்பற்றி கேட்டலாக் செய்திருக்கிறோம். இந்தச் சமுதாய விரோதக் குற்றங்கள் சில ஆண்டுகளாகவே தமிழ் நாட்டிலே நடைபெறுகின்றன என்பது செய்தித்தாள்களிலே யிருந்து புரிந்திருக்க முடியும். கள்ள நோட்டுகள் அச்சடிப்பது என்பதை அவ்வப்பொழுது செய்தித்தாள்களிலே பார்க்கிறோம். இரண்டு ரூபாய் நோட்டு, 10 ரூபாய் நோட்டு, 100 ரூபாய் நோட்டு என்று கள்ள நோட்டுக்களை அச்சடிப்பது என்பது ஒரு பெரிய கலையாகவே இருப்பதை, தமிழ்நாட்டிலே இருப்பதை அப்பொழுதைக்கப்பொழுது செய்தித்தாள்களின் மூலமாகப் பார்க்கிறோம்.

இதற்கெல்லாம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்ற காரணத்தினாலேதான் இந்தச் சமுதாய விரோதக் குற்றங்களை நீடிக்க விடக்கூடாது என்பதால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று சட்டங்கள் பிறப்பிக்கப்படுகின்றன. அந்த வகையிலே அகில இந்திய அடிப்படையிலே கொண்டு வந்துள்ள மசோதாவை அப்படியே ஏற்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்பதைத் தயவு செய்து அரசு விளக்க வேண்டும். இவர்கள் கொண்டு வந்த அமெண்மெண்ட், almost half of the Act has to be amended என்று 9 கிளாஸ் வரையிலே போகிறது. அதை ஒட்டுப் போட்டு இந்தச் சட்டமாக மாற்றி, எந்த எந்தத் திருத்தங்களை இப்பொழுது கொண்டு வந்திருக்கிறோம் என்று கஷ்டப்படுத்துவதைக் காட்டிலும்,

A comprehensive Bill which has been sent as a model Bill by the Centre be very easily adopted by the State.

இதிலே என்ன சங்கடம் இருக்கிறது? ஒரிஜினலிடி வேண்டுமென்று, 20 அம்சத் திட்டத்தில் 15 அம்சங்களை நிறைவேற்றி விட்டோம் என்று ஒரிஜினலாகப் பேசுகிறோமே அதைப்போல இதிலும் ஒரிஜினலிடி என்று, அந்தப் பழைய சட்டத்தைத் திருத்துவோமே தவிர மாடல் பில்லை ஏற்க மாட்டோம் என்று கூறுவது,





Is it with any ulterior motive ?

Is it for confrontation with the Centre ?

Is it in good faith ?

என்பதை கனம் அமைச்சரவர்கள் தயவு செய்து இந்தச் சபைக்கு விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்த பில்லில் இதைவிட நல்ல சாராம்சங்கள் இருந்தால் அதை அமல் நடத்துவதற்கு ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். ஆனால் இது எந்த அளவிற்கு இன்றைக்கு நடக்கும் குற்றங்களுக்கு பொருந்தி வரும் என்பதைப் பார்க்க வேண்டும். சமுதாயத்தில் நடக்கக்கூடிய குற்றங்கள் 1866 ஆம் வருஷத்திலே கிரிமினல் புரொசீஜர் கோட் சட்டம் இயற்றப்பட்டது. அந்தக் காலத்திலேயும் இருக்கிறது. ஆனால் இப்பொழுது அந்தக் குற்றங்களில் பலமுறைகளில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஒரே குற்றத்தை மூன்று தடவைகள் செய்தால் 'ஹேபிசுவல் அஃபெண்டர்' என்று சொல்லி யிருக்கிறது. 'ஹேபிசுவல் அஃபெண்டர்'களைக் கண்காணிக்க வேண்டும். இதுதான் இந்த மசோதாவின் அடிப்படையான நோக்கம்.

இந்தச் சமுதாயத்தில் ஏற்படும் குற்றத்தைத் தடுப்பதற்காக இந்த மசோதா இருக்கும் காலத்தில், இந்த மசோதா 1860 ஆம் வருஷத்திலே வெள்ளைக்காரன் காலத்திலே ஏற்பட்டது. அன்றைக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கான அவசரமும் அவசியமும் என்னவென்றால் லா அண்ட் ஆர்டர்தான். மற்றவர்கள் சமுதாயத்தில் எப்படிப் போனாலும் பரவாயில்லை, ஆனால் சண்டை கூடாது என்ற அடிப்படையை வைத்துத்தான் வெள்ளைக்காரன் காலத்தில் அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இன்றைக்கு 115 வருஷங்கள் கழித்து இந்தச் சட்டத்தைப் பார்க்கும் நேரத்திலும் அதே முறையில்தான் இருக்கிறது, மாற்றம் இல்லை. மத்திய அரசு மாடல் சட்டத்தைக் கொண்டு வந்தது, மாநில அரசும் கொண்டு வருகிறது. இந்த 100 வருஷங்களில் எவ்வளவோ முறையில் குற்றங்கள் மாறியிருக்கின்றன.

"கவுண்டர் ஃபீட்" சேர்க்கப்பட்டிருக்கிறது. இதை மூன்று தடவைகள் செய்தால் 'ஹேபிசுவல் அஃபெண்டர்' என்று சொல்வது சரியாக இருக்கிறதா என்று புரியவில்லை. ஒரு தடவை

செய்தாலே 7 வருஷங்கள் போடுகிறோம், அது குறைவா? 3 தடவைகள் செய்தால் 'ஹேபிசுவல் அஃபெண்டர்' என்று சொல்லப்படுகிறது. ஐ. பி. சி. ஏற்கனவே இருக்கிறது. அந்தச் சட்டத்திலேயே தண்டனை கொடுக்க முடியும். இதை ஹேபிசுவல் அஃபெண்டர் என்று சொல்ல முடியுமா என்று தெரியவில்லை.

இதிலுள்ள நல்ல அம்சம் என்னவென்றால், இதில் 'பிராஸ்டிட்யூஷன்' சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஃபுட் அடல்ட்ரேஷன் என்று, நான்கில் ஒரு பங்கு என்று அடல்ட் செய்து விற்கப்படுகிறது. இதனால் ஜனங்களுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது; இதனால் பல ஜனங்கள் சாகிறார்கள், ஜனங்களது ஹெல்த் பாதிக்கப்படுகிறது. எனவே, இதை ஏன் சேர்க்கக் கூடாது? இதையும் கொண்டு வர வேண்டும்.

அடுத்து ஸ்மக்லிங். எத்தனை தடவைகள் செய்தாலும் இம்மாதிரி கள்ளக்கடத்தல் செய்தால் அவர்கள் இதில் கொண்டு வரப்படவில்லை. ஏன் அவர்களையும் இதில் கொண்டு வரக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, சீட்டிங். அதுவும் இதில் சேர்க்கப்படவில்லை. பணத்தை ஏமாற்றிப் பிடுங்குவதையும் இதில் கொண்டுவர வேண்டும். அப்பொழுதுதான் சரியாக இருக்கும். White colour offences இப்பொழுது ஜாஸ்தியாக இருக்கிறது. நம் நாட்டிலே மட்டுமல்லாமல் எல்லா நாடுகளிலும் இருக்கிறது. அதற்குத் தகுந்த மாதிரி இந்த மசோதா அமையவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

அடுத்து, 'சிட் கம்பெனிகள்'. 12 சதவிகிதம், 13 சதவிகிதம் நஷ்ட ஈடு கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அவர்கள் கடன் கொடுக்கும் நேரத்தில் மொத்தமாக 200 ரூபாய் வட்டி என்று 20 சதவிகிதம், 25 சதவிகிதம் எடுத்துக் கொள்கிறார்கள். இதெல்லாம் சீட்டிங்தான். எனவே, இந்த சீட்டு கம்பெனிகளையும் இதில் சேர்க்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் சமுதாயத்தைப் பாதுகாக்க முடியும். சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமை. அதற்காகச் சட்டம் செய்ய வேண்டியது அவசியம். இம்மாதிரிக் குற்றங்களைத் தடுத்தால்தான் சமுதாயத்திலுள்ள குற்றங்களைத் தடுக்க முடியும், சமுதாயத்தை முன்னேற்ற முடியும். இதையெல்லாம் விட்டுவிட்டு பழைய காலத்தில், 1860 ஆம் வருஷத்தில் வெள்ளைக்காரன் இயற்றிய





சட்டத்தையே நீடித்துக் கொண்டு வருவது சரியாகத் தெரியவில்லை. அவர்கள் கொண்டு வந்ததன் நோக்கம் நிர்வாகத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்றுதான், சமுதாயத்தைப் பாதுகாப்பதற்காக அவர்கள் கொண்டு வரவில்லை. அந்த முறையில் இப்பொழுது தேவையான மாற்றங்களைக் கொண்டு வந்து, இதையெல்லாம் சேர்த்தால்தான் பிரயோசனமாக இருக்கும். இல்லாவிட்டால் இதனால் பிரயோசனம் இல்லை. ஆகவே, நான் கொடுத்திருக்கக் கூடிய திருத்தத்தை ஏற்று அதற்குத் தகுந்தவாறு மசோதாவை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இந்தப் புதிய சட்டத் திருத்தத்தின் மூலமாக சில குற்றங்களைச் செய்பவர்கள் எதிர்காலத்திலே அப்படிப்பட்ட குற்றத்தைத் தொடர்ந்து செய்யாமல் தடுப்பதற்கு வழிவகைகளைச் செய்கிற நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக புதிய குற்றங்கள் என்னவென்று சொல்லவில்லை. 'மிசா' சட்டத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்ட குற்றங்களை ஒருவர் தொடர்ந்து செய்வாரேயானால் எதிர்காலத்திலே அதைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதிகமான அளவுக்கு குற்றங்களைச் சேர்க்க வேண்டுமென்ற யோசனை ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

மத்திய அரசாங்கம் சொன்னதை ஏற்றுக்கொள்ள என்ன தயக்கம், மத்திய அரசாங்கத்தை எதிர்க்கிறார்களா, கன்ஃப்ரான்டேஷனா என்றெல்லாம் கேட்டார்கள். அவர்களுக்கு எப்போதும் இதே ஆசை. டில்லியோடு சண்டை போட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்பது நம்முடைய எண்ணம் அல்ல. 1954 ஆம் ஆண்டு மத்திய ஆட்சி இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதை 1975 இல் படித்துப் பார்த்து, டில்லி ஆட்சி நல்லது சொன்னால் கேட்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் இது இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. 1954 இல் இருந்து அன்றைக்கு இருந்த ஆட்சிக்குத் துணையாக அம்மையார் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் இதைச் செய்யவில்லை. இப்போது டில்லியை எதிர்க்கிறீர்களே என்று கேட்கிறார்கள். இதைத்தான், மாண்புமிகு அங்கத்தினர்கள்

சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய அரசு நல்ல நோக்கத்தோடு கூறுகின்ற எதையும் நிறைவேற்றத் தயங்குவதில்லை. 1954 ஆம் ஆண்டில் மத்திய ஆட்சி அனுப்பியதைப் படித்துப் பார்த்து, அது தேவை என்று உணர்ந்த காரணத்தால் இப்போது புதிதாகக் கொண்டு வந்திருக்கிறோம். இதிலே தவறு இல்லை என்று கருதுகிறேன். இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு, வழக்கமான குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

**தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.**

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, **நிறைவேற்றப்பட்டன.**

**பிரிவு 8.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 8 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRU N. K. PALANISAMY : Sir, I move the following amendment standing in my name.

"In Chapter XII of the Schedule I, add the following at the end :

461. Food adulteration
462. Cheating
463. Corruption
464. Hoarding
465. Smuggling"

The amendment was duly seconded.





**திரு. என். கே. பழனிசாமி** : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய காலத்தில் புதிய குற்றங்களை எல்லாம் சேர்க்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொண்டார்கள். அந்த மாதிரி குற்றங்களுக்கும் தண்டனை வழங்க வரையறை செய்ய வேண்டும். சர்க்காரே ஒரு திருத்தம் கொண்டு வந்தாலும் சரி. அடல்ட்ரேஷன், சீட்டிங், ஹோர்டிங், ஸ்மக்லிங் போன்ற குற்றங்களைச் செய்பவர்களுக்கும் தண்டனை வழங்கக் கூடிய முறையில் இந்த மசோதாவைக் கொண்டு வரவேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : திரு. பழனிசாமி அவர்கள் சொன்னது போல் அந்தக் குற்றங்களுக்கெல்லாம் தண்டனை வழங்கக்கூடிய வகையில் மத்திய அரசு அனுப்பிய மாடல் பில்லில் இருக்கிறதா? இருந்தும் அதை விட்டு விட்டு இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : ஏற்கனவே விளக்கினேன். அகில இந்தியாவிலும் ஒரேமாதிரி இருக்க வேண்டுமென்று ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். அதிலே இவை எல்லாம் இல்லை. மீண்டும் இதைப் பற்றி மத்திய அரசாங்கம் பரிசீலிக்குமானால் நாம் அதைப் பற்றிச் சிந்திக்கலாம்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 8 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் **பட்டது.**

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு வழக்கமான குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று கோருகிறேன்.

**தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.**

## (இ) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு, நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவை * அறிமுகம் செய்து அது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

பொது இடத்தில் கூட்டம் அல்லது ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள் மின்சார விளக்குகளுக்கு ஏற்பாடு செய்வதுடன் பெட்ரோமாக்ஸ் விளக்குகள் மூலம் போதுமான ஒளி வசதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறைச் சட்டமும், தமிழ்நாடு 1889 ஆம் ஆண்டு நகரத் தொல்லைகள் சட்டமும் வரையறுக்கவில்லை. கூட்டம் அல்லது ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்பவர்கள் பொது மக்களின் பாதுகாப்பு குறித்தும், அசம்பாவிதம் ஏதும் நடப்பதைத் தவிர்க்கவும் மின்சார விளக்குகளுடன் போதிய அளவு பெட்ரோமாக்ஸ் விளக்குகளுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டியது அவர்களது பொறுப்பாகும் என்று மேற்படி சட்டங்களில் திட்டவட்டமான விதித்துறை செய்வது அவசியமாகும். மேற்சொன்னவற்றுக்கு வகை செய்ய புதிய பகுதி ஒன்றை, அதாவது, தமிழ்நாடு 1889 ஆம் ஆண்டு நகரத் தொல்லைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவில் (13) பகுதியாகக் கொண்டு வரக் கருதப்பட்டுள்ளது. இதேப் போன்ற விதித் துறையை 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறைச் சட்டத்தில் கொண்டு வருவதற்காக அச்சட்டத்தின் 71 ஆவது பிரிவு திருத்தப்பட்டு சென்னை நகரக் காவல் துறை (திருத்த) சட்டம், 1975 வடிவத்தில் தமிழ்நாடு சட்டம் 17/75 ஆக அமலுக்குக் கொண்டு வரப்பட்டது.

இப் பிரேரணையை ஏற்று, நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

---

* 16—10—75 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



THIRU A. SUBRAMANIAM : Sir, I move—

"That the Tamil Nadu Towns Nuisances (Amendment) Bill 1975 be circulated for eliciting public opinion."

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I second the amendment.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பார்க்கும்போது அரசு ஒரு முடிவுக்கு வந்து விட்டதோ என்று தோன்றுகிறது. பொதுக் கூட்டங்கள், பொது நிகழ்ச்சிகள் நடத்துகின்றபோது மின்சாரம் தடைப்படுமானால் சிக்கல் வந்து விடக்கூடாது என்பதற்காக பெட்ரோமாக்ஸ் லைட் வாங்கி வைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இனிமேல் பொதுக் கூட்டங்களுக்குக் கூட 3 மணி நேரம் தடையின்றி, தட்டியின்றி மின்சாரம் கொடுக்க முடியாது என்ற முடிவுக்கு இந்த அரசு வந்துவிட்டதோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. அப்படியே வந்தாலும் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்கிறவர்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பெட்ரோமாக்ஸ் லைட் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுவதற்கு ஒரு சட்டம் கொண்டு வருவது மிகப் புதுமையாக இருக்கிறது. இனிமேல் பொதுக் கூட்டங்களுக்கு இவ்வளவு சுவரொட்டிகள் ஒட்ட வேண்டும், இந்தமாதிரி விளம்பரம் செய்ய வேண்டும், இந்தமாதிரி தோரணங்கள் கட்ட வேண்டுமென்றெல்லாம் கூட சட்டம் கொண்டு வந்து விடுவார்களோ என்று தோன்றுகிறது. தேவையில்லாத சமாசாரத்திற்கு இப்படி ஏன் ஒரு மசோதாவைக் கொண்டு வருகிறார்கள் என்று புரியவில்லை. எனக்கே அனுபவம் உண்டு. கூட்டம் நடக்கும்போது திடீரென்று மின்சாரம் இருக்காது. ஃப்யூஸ் கட்டையைப் பிடுங்கிக் கொண்டு போய் விடுவார்கள். லைன் மேனைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து ஃப்யூஸ் கட்டை போடப்படும்.

இந்தமாதிரி நிகழ்ச்சிகள் என்னுடைய பகுதியிலே நடைபெறுகின்றன. இந்தச் சட்டம் வந்துவிட்டால் இன்னும் நிலைமை என்னவாகும் என்று சொல்ல முடியாது. பெட்ரோமாக்ஸ் லைட் கொண்டு வரவில்லை என்றோ, இரண்டு விளக்குகள் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு லைட்தான் வைத்திருக்கிறாய் என்றோ கூறி கூட்டம் நடத்தக்கூடாது என்று சொல்லுவார்களா? ஒன்றும்

புரியவில்லை. துக்ளக் தர்பார் என்று கேள்விப்படுகிறோம், அதுபோல் இருக்கிறது. பெட்ரோமாக்ஸ் லைட் இல்லாமல் கூட்டம் நடத்தக்கூடாது என்று சட்டம் கொண்டு வருவதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த மசோதாவை அரசு கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறைந்த பட்சம் இதைப் பொதுமக்கள் கருத்தை அறிய விட்டு, அவர்கள் கருத்தை அறிந்த பிறகு மசோதாவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதுமாதிரி இது ஒரு தேவை இல்லாத சட்டம் என்றுதான் நான் கருதுகிறேன். எதற்காக இது கொண்டு வரப்பட்டது, அரசின் எண்ணம் என்ன என்று என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை அவர்கள் எதிர்க்கட்சி என்று கருதுகிற அந்தக் கட்சியின் சார்பாக ஏராளமான கூட்டங்கள் நடைபெறுகின்றன, அந்தக் கூட்டங்களை எப்படியாவது நிறுத்திவிட வேண்டும், ஏதாவது ஒரு சாக்கைச் சொல்லி அவற்றை நிறுத்திவிட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறதோ, என்னவோ தெரியவில்லை. ஒருவேளை அதுவாகத்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஏனெனில் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி இப்படிப்பட்ட கூட்டங்களைத் தடுப்பது சுலபம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டமாக இருந்தால் பெட்ரோமாக்ஸ் லைட் இல்லை, ஆகவே லைசென்ஸ் கிடையாது என்று கூறலாம். அல்லது ஒருவர் பேசிக் கொண்டிருக்கும்போது பெட்ரோமாக்ஸ் லைட் அணைந்துவிட்டது என்றால் அதை ஒரு சாக்காக வைத்து பெட்ரோமாக்ஸ் லைட் அணைந்துவிட்டது என்று சொல்லி கூட்டம் நடப்பதைத் தடுக்கலாம். அந்தவகையில்தான் இந்தச் சட்டத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பதாகத் தெரிகிறது, அதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டிய ஒரு துர்பாக்கியகரமான நிலைமையில் இந்த நேரத்தில், இந்தக் கட்டத்தில் இந்தச் சட்டம் வந்திருக்கிறது.

எவ்வளவோ மின்சார வெட்டு இருந்தபோதுகூட இப்படிக் கொண்டுவரப்படவில்லை. திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதுமாதிரி மின்சார இலாகாவே தன்னம்பிக்கை இழந்து



விட்டதோ என்று நினைக்கக்கூடிய விதத்தில் மறைமுகமாக இந்தச் சட்டம் மின்சார இலாகாவை தாக்குகிறமாதிரிக்கூட இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. மின்சார வெட்டு அதிகமாக இருந்தபோதுகூட இப்படிப்பட்டதொரு சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் எண்ணவில்லை. அப்படியிருக்க திடீரென்று இந்த ஞானோதயம் ஏற்பட்டது எதற்காக என்று பார்க்க வேண்டும். எனவே, இந்தச் சட்டத்தை கைவிட வேண்டும் என்பதில் சந்தேகமே கிடையாது. நான் இதை கடுமையாக எதிர்க்கிறேன். போலீஸ் துறைக்கு எவ்வளவோ டிஸ்க்ரிஷனரி பவர்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. குற்றம் அல்லது ஒரு தவறு நடந்தால் எவ்வளவு மாதங்கள் சிறைத் தண்டனை அல்லது எவ்வளவு ரூபாய் அபராதம் என்று 'ஒய்டு டிஸ்க்ரிஷனரி பவர்ஸ்' போலீஸ் துறைக்கு கொடுக்கப்பட்டிருப்பது எதிர்க்கட்சிகளை பழி வாங்குவதற்கு இதைப் பயன்படுத்தக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அந்த அளவிற்கு டிஸ்க்ரீஷனரி பவர்ஸ் கொடுக்கப் பட்டிருக்கிறது, எதை வேண்டுமானாலும் செய்யலாம். எவ்வளவு பைன் என்று இல்லை. பைன் போட வேண்டுமென்று சொல்லவில்லை. இந்த மசோதாவை அறவே கைவிட வேண்டும் என்று சொல்கிறேன். வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன், எதிர்க்கட்சியினர் மீது பழி வாங்க வேண்டும் என்பதற்காக, எதிர்க்கட்சிகளின் கூட்டங்களை நிறுத்த வேண்டும் என்பதற்காக அந்த ஒரே காரணத்தின் அடிப்படையில் கொண்டுவரப் பட்டிருக்கிறது இந்த மசோதா. இதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். உங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது இந்த அவையில். அதை வைத்துக்கொண்டு நீங்கள் பேசலாம். நான் சொல்வதில் நியாயம் இருக்கிறது என்ற அடிப்படையில் இதைக் கைவிட வேண்டும் என்று சொல்லி, முடித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, எதிர்க் கட்சிகளுக்கு என்னென்ன வகைகளில் இன்னல்களை ஏற்படுத்தலாமோ அந்த வகைகளில் சின்ன வகையிலும் கூட ஏற்படுத்த வேண்டும் என்ற "பெருந்தன்மையோடு" கொண்டுவரப் பட்டிருக்கிற மசோதா இது என்று என்றால் புரிந்துகொள்ள முடிகிறது. எதிர்க்கட்சிகளை பழிவாங்க வேண்டும் என்ற பெருந்தன்மையோடு இன்று இந்த ஆட்சியில் பல நிகழ்ச்சிகள் நடப்பது எங்களுக்குத் தெரியும். ஜனநாயகத்தில் கூட்டம்

லைட் போடுவது என்பது ஒரு சாதாரண கருவி. கூட்டம் போடுவதற்குக் கூட இனிமேல் பெட்ரோமாக்ஸ் லைட் கொண்டுவர வேண்டும் என்று சொல்லக்கூடிய அளவில் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வருவதைப் பார்க்கும்போது இவ்வளவு மைன்யூட் டீட்டெய்ல்ஸ்க்கு என்ன அவசியம் என்று புரியவில்லை.

உங்கள் ஆட்சியில் திடீர் திடீரென்று விளக்குகள் அணைந்து போவதைப் பார்க்கிறோம். மின்னல்மாதிரி மறைந்துவிடுகிறது. இப்படியிருந்தும் தமிழ்நாட்டில் எந்தவிதமான அசம்பாவித சம்பவங்களும் நடந்தது கிடையாது. அந்த அளவிற்கு மக்கள் அநாகரிகமாக மாறவில்லை. அப்படி ஒருவேளை மாறவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களோ என்னவோ தெரியவில்லை. இந்தத் திருத்தத்திலிருந்து உங்களுக்கு மின்சார இலாகாவின் மீது நம்பிக்கை இல்லை என்றாகிறது. 'எபிஷியன்ஸி ஆப் யுவர் எலக்ட்ரிஸிட்டி ஸிஸ்டம்' பற்றி தமிழ்நாட்டு மக்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள். சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது திடீரென்று விளக்குகள் அணைந்து போய்விடுகின்றன. மங்களகரமான காரியங்கள் நடக்கும்போது அமங்களகரமாக மின்னொளி மறைந்துவிடுகிறது.

எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்கள் சொன்னது மாதிரி எதிர்க்கட்சிக் கூட்டங்கள் என்றால் முன்கூட்டியே திட்டம் போட்டு ப்யூஸ் கட்டையை எடுத்துவிட்டு அரிக்கன் லைட் வைத்துக் கொண்டு கூட்டங்கள் நடத்துவதை நாங்கள் அனுபவித்து இருக்கிறோம். கூடவே பாட்டரி மைக்கை எடுத்துக்கொண்டு போய் பேசுகிறோம். நீங்கள் ஏதோ எங்களுக்குச் சொல்லித் தருவதுமாதிரி காஸ் லைட்டை எடுத்துக்கொண்டு போங்கள் என்று சொல்கிறீர்கள். காஸ் லைட்டை எடுத்துக்கொண்டு போவது என்றால் மதுரையில் காஸ் லைட்ஸ் கிடைப்பது கஷ்டம். கல்யாணம் என்றால் ஒரு காஸ் லைட்காரன் கூட கிடைக்கமாட்டான். அல்லது நீங்கள் மாவட்ட மாநாடு என்று போட்டுவிட்டால், அத்தனை காஸ் லைட்களையும் எடுத்துக்கொண்டு போய்விட்டால் நாங்கள் கூட்டம் போட முடியாத நிலை ஏற்பட்டுவிடும். பெரிய அளவில் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து மாவட்ட மாநாடு என்று சொல்லி ஊரில் இருக்கிற எலக்ட்ரிஸிட்டி எல்லாவற்றையும் செலவழித்துக்கொண்டு வருகிறீர்கள். லட்சக்கணக்கான மக்கள்





திரண்டு வருகிறார்கள் என்று சொல்லி குறைந்தது ஐயாயிரம் காஸ் லைட்களாவது வேண்டும் என்று சொல்லி, எல்லா காஸ் லைட்களையும் எடுத்துக்கொண்டு போய்விட்டால் நாங்கள் எப்படி காஸ் லைட்களை வைத்துக்கொண்டு கூட்டம் போடுவது?

இப்போது காஸ் லைட்களை வைத்துக்கொண்டுதான் கூட்டம் போட வேண்டும் என்று திருத்தம் கொண்டு வந்திருக்கிறீர்கள். இனி கொஞ்சநாளில் ஆப்பிள் மேடை, மலர் கிரீடம் இருந்தால்தான் கூட்டம் கூட்டலாம் என்கிற அளவிற்கு திருத்தம் வந்தாலும் வரலாம். எலக்ட்ரிசிட்டி ஒழுங்காகக் கொடுக்க நீங்கள் தயாராக இருக்க வேண்டும். மூன்று மணி நேரம் கூட எலக்ட்ரிசிட்டி கொடுக்க உங்களுக்கு திராணி கிடையாது. மூன்று மணி நேரம் கூட மின்சாரம் கொடுக்க முடியவில்லை என்றால் உங்கள் ஸிஸ்டத்திற்கு என்ன பெருமை ஏற்படும்?

இன்று உங்கள் ஆட்சியில் பல கடைகளில் மெழுகுவர்த்தி எரிகிறது. முழு நேரம் எலக்ட்ரிசிட்டி கொடுக்க முடியாமல் கடைக்காரர்கள் காண்டில்களை தேடிக்கொண்டு போகிறார்கள். மின்சாரம் எந்த நேரத்தில் வரும் எந்த நேரத்தில் போகும் என்பது சந்தேகமாகத்தான் இருக்கிறது. மறுநாள் ஸன்ரைஸின் போதுதான் ரிப்பேராகும். இப்போதே மெழுகுவர்த்தி கல்ச்சருக்கு அனுப்பியாகிவிட்டது. பின்னால் தீப்பந்தம் வைத்து கூட்டம் நடத்தினால் பப்ளிக் சேப்டி என்னாவது? தீப்பந்தம் வைத்துக் கூட்டம் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ரெப்பட்டிஷன் வேண்டாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த மசோதா தேவையில்லை. இதை நான் எதிர்க்கிறேன், இந்த மசோதாவைக் கொண்டு வந்து சட்டசபையின் நேரத்தை வீணாக்குவது நியாயமா என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அவைமுன் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை நான் வன்மையாக எதிர்க்கிறேன் என்று முதலிலேயே தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1975 அக்டோபர் 23

இதற்கு முன்னால் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டத்தின் மூலம் இரவு பத்து மணிக்கு மேல் பொதுக் கூட்டங்கள் நடத்தக்கூடாது என்றதொரு சட்டத்தின் மூலமாக எங்கள் கட்சியைச் சேர்ந்த பல்வேறு பொதுக் கூட்டங்களை நடத்தியவர்கள் ரூ. 50, ரூ. 100 என்றளவிற்கு அபராதம் விதிக்கப்பட்டு, இன்றையதினம் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். அங்கு பார்க்கும்போது 10-05 அல்லது 10-10 மணியாகியிருக்கிறது என்று சொல்கிறார்கள். இன்று கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதா அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் கூட்டங்களை அடக்குவதற்காக, நசுக்குவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதா என்பதை நான் முதலில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அடிப்படையில் நான் இதை எதிர்க்கிறேன். இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதாவில்,

"Whoever organises any assembly, meeting or procession between sunset and sunrise without providing sufficient petromax lights in addition to electric lights,"

என்றிருக்கிறது. போதுமான அளவிற்கு பெட்ரோமாக்ஸ் லைட்ஸ் வைத்திருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர எவ்வளவு பெட்ரோமாக்ஸ் லைட்ஸ் தேவை அல்லது அதிகபட்சம் எவ்வளவு வைக்க வேண்டும் என்று எங்குமே இல்லாத முறையில் ஒரு சட்டத்தை அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். நூறு பெட்ரோமாக்ஸ் லைட்ஸ் வைத்தாலும் கூட எந்த ஒரு நிகழ்ச்சியையும், கூட்டத்தையும் தடுக்கக்கூடிய அளவிற்கு இந்த மசோதா விளக்கம் இல்லாமல், தெளிவு இல்லாமல் இருக்கிறது என்ற குறைபாட்டைச் சொல்கிறேன்.

அடுத்து, இன்று கட்சிக் கூட்டங்கள் நடைபெறுகிறபோது எலக்ட்ரிசிட்டி பெய்ல்யூர் காரணமாக கூட்டங்களை ரத்து செய்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. எலக்ட்ரிசிட்டி பெய்ல்யூர் காரணமாக கூட்டம் ரத்து செய்யப்படுகிறபோது மக்கள் ஒரு கட்டுப்பாட்டுடன் இருக்கிற காரணத்தால் எந்தவிதமான குழப்பமும் இல்லாமல் கூட்டம் கலைகிறது



1975 அக்டோபர் 23] [திரு. செ. அரங்கநாயகம்]

தமிழ் நாட்டில் இதுபோன்றதொரு நிலை ஏற்பட்டுவிட்டது, இன்ன ஊரில் அல்லது இந்த இடத்தில் இப்படிப்பட்ட சங்கடகரமான ஒரு நிலை பொது மக்களுக்கு ஏற்பட்டது, ஆகவே இந்த மசோதா தேவை என்று அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லவில்லை.

கட்சிக் கூட்டங்கள் தவிர வேறு பல்வேறு நிகழ்ச்சிகள் நாட்டில் நடைபெறுகின்றன. பழனி, திருச்செந்தூர், சிதம்பரம் போன்ற இடங்களை எடுத்துக்கொண்டால் அங்கு திருவிழாக்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், லட்சக்கணக்கான மக்கள் அங்கு கூடுகிறார்கள். அவர்களுடைய நிலை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் இதில் விளக்கவில்லை.

[முற்பகல் 11.30]

ஆகவே, இவற்றைப் பரிசீலித்துப் பார்க்கிறபோது, நடைமுறைக்கு ஒத்து வராது, அதே நேரத்தில், எதிர்க்கட்சிகளைப் பழி வாங்கும் மசோதாவாக இருக்கிறது என்ற காரணத்தினால் இந்த மசோதாவை வன்மையாக எதிர்க்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** துணைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டில் நடைபெறுகிற நிகழ்ச்சிகள் பொதுக் கூட்டங்கள் மட்டுமல்ல. பொது மக்கள் கூடுகிற நிகழ்ச்சிகள், ஊர்வலங்கள் போன்றவற்றில் போதுமான பாதுகாப்பு இருக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு ஏற்கனவே சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்திலே மின்சார விளக்குகளோடு, பெட்ரோமாக்ஸ் விளக்கும் இருக்க வேண்டும். அது நல்ல முறையில் மக்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இதற்கு இவ்வளவு ஆட்சேபனை இருக்கும் என்று நான் முதலில் எண்ணிப் பார்க்கவில்லை.

என்னால் இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். பிறகு தூக்ளக் ஆட்சி என்று வர்ணித்தார்கள். அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். பேசுவதைத் தடுப்பது, எழுதுவதைத் தடுப்பது, பேசுவதைப் பத்திரிகையில் போடுவதைத் தடுப்பது, எதிர்க் கட்சிக்காரர்களைக் காரணம் சொல்லாமல் கைது செய்வது,

[திரு. செ. மாதவன்] [1975 அக்டோபர் 23

எதிர்க்கட்சிக்காரர்கள் கூட்டம் போட்டு இந்த அரசாங்கத்தைக் குறை சொல்லி மக்களை மாற்றி விடுவார்களோ என்று பயந்து அந்த ஜனநாயகத்தை பறிமுதல் செய்வது என்பது எல்லாம் தவறு என்று சுப்பிரமணியம் சொன்னார்கள். நான் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். அதிலே ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. இந்தச் சட்டத்திலே அந்த நோக்கம் இருப்பதாக நான் ஊகித்துக் கூடப் பார்க்கவில்லை. இது எல்லோருக்கும் பொருந்துகிற சட்டம். எதிர்க்கட்சிக்காரர்களுக்கு என்று மட்டும் கிடையாது.

இங்கே பேசிய உறுப்பினர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் கூட்டம் போட்டால் மின்சாரம் தடை செய்யப்படும், ஆகவே, பெட்ரோமாக்ஸ் லைட் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சட்டம் கொண்டு வந்திருப்பதாகச் சொன்னார்கள். எனக்கு இப்போது தான் புரிகிறது. எதிர்க்கட்சிக்காரர்களிடத்தில் நல்ல அன்போடு தான் இதை நாங்கள் கொண்டு வந்து இருக்கிறோம். எதிர்க்கட்சிக்காரர்கள் மேடை போட்டுப் பேசுகிறபோது மின்சாரத் தட்டுப்பாடு வந்தாலும், கூட்டம் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இதை நாங்கள் கொண்டு வந்து இருக்கிறோம். எங்கள் ஆட்சியைப் பொறுத்த வரையில், எதிர்க்கட்சிக்காரர்கள் நன்றாகப் பேச வேண்டும். அவர்கள் எந்த விதத்தில் பேசுகிறார்கள் என்பதை மக்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். அந்த அடிப்படையில்தான் நாங்கள் செயல்பட்டு வருகிறோம். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேச்சுக்கே இடம் கிடையாது. பொது மக்கள் கூடும் எந்த இடமாக இருந்தாலும், சிறந்த பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காக ஒன்றிரண்டு லைட்கள் வைப்பது பொருத்தமாக இருக்கும் என்ற நல்ல நோக்கத்தோடு தான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இதிலே போய் அரசியலைப் புகுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே மின்சார இலாகாவை தாக்கிப் பேசினார்கள். எந்த ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்தாலும் சம்பந்தப்பட்ட இலாகாவை தாக்கிப் பேசுவது என்று வழக்கமாகிவிட்டது. இதற்கும் மின்சார இலாகாவிற்கும் சம்பந்தம் கிடையாது. அகில



1975 அக்டோபர் 23] [திரு. செ. மாதவன்]

இந்தியாவிலும் மின்சார இலாகா எப்படி செயல்படுகிறது என்பது தெரியும். நாங்கள் பஞ்சாப், டெல்லி போன்ற இடங்களுக்குச் சென்று இருக்கிறோம். எத்தனையோ நாட்கள் வருஷத்தில் மின்சாரம் இல்லாமல் தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருந்தன என்ற விவரமெல்லாம் பத்திரிகைகளில் வந்ததை நாம் பார்த்திருக்கிறோம். அந்த மாநிலங்களையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நம்முடைய மாநில மின்சார இலாகாவில் குறை அதிகம் இல்லாமல் இருக்கிறது. அதற்காகச் சட்டம் கொண்டு வந்தோம் என்று ஊகித்துக்கொள்ளக்கூடாது. நம்மை நாமே தாழ்த்திக்கொள்ளக்கூடாது. பொது மக்கள் வசதி குறித்து கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதற்கா இவ்வளவு பெரிய எதிர்ப்பு? அரசியல் நோக்கம் கற்பிக்கப்படும் என்று நான் எண்ணவில்லை. போலீஸ் இலாகாவில் அன்றாட நடவடிக்கைகளில் இது வருகிறது.

அகில இந்தியாவில் தமிழ் நாட்டைத் தவிர மேடைச் சுதந்திரத்தை வேறு எங்கும் பார்க்க முடியாது. சுதந்திரம் என்றால் சாதாரண சுதந்திரம் அல்ல, அபரிமிதமான சுதந்திரம். எதைப் பேசுவது என்றில்லாமல் அபரிமிதமான சுதந்திரத்தை நம் நாட்டில் அனுபவித்து வருகிறோம். ஆகவே, அதைப்பற்றி கவலைப்படக்கூடாது. எதிர்க்கட்சிக்காரர்களைப் பேச விட்டு, அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ளச் செய்வது, அதற்குத் தக்க வகையில் பதில் சொல்வது என்கிற ஆட்சியாகத்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கிறது. ஆகவே, எதிர்க்கட்சிக்காரர்களைப் பேச விடமாட்டோம் என்று நினைக்க வேண்டாம். பாராளுமன்றமும் தான் நடந்தது. நம்முடைய சட்டமன்றமும் நடைபெறுகிறது. எத்தகைய ஜனநாயகத்தை நாம் பின்பற்றுகிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். நாங்கள் போய் எதிர்க்கட்சிக்காரர்களைத் தடுக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வருகிறோம் என்று பேசுவது சரியல்ல. அதுவும் இப்போது இருக்கும் சூழ்நிலையில் அப்படிப் பேசுவது பொருத்தம் அல்ல. அப்படிப் பேசியதால் நான் உண்மையைச் சொல்லவேண்டி வந்தது. திரு. சுப்பிரமணியம் கோபித்துக்கொள்ளக்கூடாது. உள்ளபடியே இது பொது மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு, கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தம் என்று சொல்லி, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1975 அக்டோபர் 23

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும்."
என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ச), தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு, ஹோமியோபதி முறை மருத்துவம்–ஹோமியோபதி மருத்துவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே,

"தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு ஹோமியோபதி முறை மருத்துவம்–ஹோமியோபதி மருத்துவர்கள் (திருத்த) சட்ட முடிவை* அறிமுகம் செய்து அது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என்று நான் முன்மொழிகிறேன்.

---

* 2—10—1975-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1975 அக்டோபர் 23] [திரு. க. அன்பழகன்]

ஹோமியோபதி மருத்துவ முறையை ஏற்புக்கான மருத்துவ முறையாக அரசு கொள்வதென இசைந்து ஹோமியோபதி மருத்துவத் தொழிலை முறைப்படுத்தும் பொருட்டு தமிழ் நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவ முறை-ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டத்தை இயற்றியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். மேற்சொன்ன சட்டம் 1972-ம் ஆண்டு மே திங்கள் 5-ம் நாளன்று செயலுக்கு வந்தது.

இச்சட்டத்தின் கீழ் ஹோமியோபதி மருத்துவ மன்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஹோமியோபதி மருத்துவர்களைப் பதிவு செய்தல், ஏனைய செயல் நோக்கங்கள் ஆகியவற்றிற்காகவும், தேர்வுகள் நடத்துதல், பாட முறைகளுக்குரிய பாடங்களை வரையறுத்தல், பட்டங்கள் முதலியன வழங்கல் ஆகியவற்றிற் காகவும் இம்மன்றம் உரிமை பெற்று இருக்கிறது.

மேற்சொன்ன சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளபடி, அதன் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கல்வித் தகுதிகள் கொண்ட அனைவரும் தங்களை மருத்துவர்களாக இம்மன்றத்தில் பதிவு செய்து கொள்ளத் தகுதியுடையவராவர். மேலும், ஏற்கப்பட்ட கல்வித் தகுதிகளைக் கொண்டிராமல், ஆனால் இம்மருத்துவ முறையில் பத்தாண்டுகளுக்குக் குறையாத கால அளவிற்கு மருத்துவராகப் பணி புரிந்துள்ளவர்களைப் பதிவு செய்து கொள்ளவும், நான்காண்டுகளுக்குக் குறையாத கால அளவிற்கு இம்மருத்துவ முறையில் பணியாற்றியவர்கள், இம்மன்றம் நடத்தும் எழுத்துத் தேர்வில் தேறினால் அவர்களையும் பதிவு செய்து கொள்ளவும் இச்சட்டம் வகை செய்கிறது. அந்தந்த நேர்விற்கேற்ப, பத்தாண்டுகள் அல்லது நான்காண்டுகள் பணி புரிந்துள்ள அடிப்படையில் ஹோமியோபதி மருத்துவர்கள் பதிவு செய்யப்படுவதற்கான விண்ணப்பங்களைப் பெறுவதற்கு 1974-ம் ஆண்டு மே திங்கள் 4-ம் நாளை இறுதி நாள் என அரசு வரையறுத்தது. சட்டப்படிக்கு வரையறுக்கப்பட்ட கால அளவுக்குள் ஹோமியோபதி மருத்துவர்கள் ஹோமியோபதி மருத்துவர் மன்றத்தில் பதிவு செய்து கொள்ளத் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க இயலும் வகையில், ஹோமியோபதி மருத்துவர்கள் முறையாக மருத்துவத் தொழில் புரிந்துள்ள பணிக்காலம் குறித்துச் சான்றிதழ் வழங்குவதிலும்,

அத்தகைய விண்ணப்பங்களை முடிவு செய்வதிலும் முதன்மை இடம் அளிக்குமாறு மாவட்ட ஆட்சியர் அனைவரும் கேட்டுக்கொள்ளப் பட்டனர்.

இதுவரையில் இச்சட்டத்தின்கீழ் 9,229 பேர் தங்களைப் பதிவு செய்து கொண்டுள்ளனர். ஆயினும் பத்தாண்டுகளோ, நான்காண்டு களோ ஹோமியோபதி மருத்துவராகப் பணி புரிந்துள்ள, ஆனால் தங்களைப் பதிவு செய்து கொள்ளும் பொருட்டு விதித்த நாளான 4—5—1974-க்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பியிராத ஹோமியோபதி மருத்துவர்கள் இன்னும் பலர் உள்ளனர். எனவே, அவர்கள் அவ்வாறு பதிவு செய்து கொள்ளுவதற்கு உரிய கால அளவை 4—5—1974-லிருந்து மேலும் ஈராண்டுகட்கு நீட்டிப்பதெனை முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க, கால வரம்பை நீட்டிப்பதற்கான இச்சட்ட முன்வடிவு இயற்றப் பட்டுள்ளது.

அதன் இன்றியமையாக் கூறுகள் வருமாறு :—

(1) பத்து ஆண்டுகள் பணி அனுபவம் உள்ளவர்களும் நான்காண்டு பணி அனுபவம் உள்ளவர்களும் தங்களைப் பதிவு செய்து கொள்ள விண்ணப்பம் அனுப்புவதற்குக் கடைசி நாள் 1976-ம் ஆண்டு மே திங்கள் 4-ம் நாள் ஆகும்.

(2) ஆயினும் அவர்கள் பத்து ஆண்டுக் காலம் அல்லது நான்கு ஆண்டுக் காலம் பணியாற்றி முடிவுற்ற நாள் என்பது 1974-ம் ஆண்டு மே திங்கள் 4-ம் நாளை வைத்துக் கணக்கிடப்பெறும்.

இப்பேரவை இச்சட்டமுன்வடிவை ஏற்று, விவாதித்து நிறை வேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிச்சாமி:** தலைவரவர்களே, அரசின் சார்பில் கொண்டுவந்துள்ள இந்த மசோதாவினை நான் ஆதரிக்கின்றேன்.

அமைச்சர் அவர்கள், எற்கெனவே ஒன்பதினாயிரம் பேர் இதன்காரணமாகப் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றார்கள் என்றும், இந்த மசோதாவின் காரணமாக மேலும் மூன்று அல்லது நான்காயிரம் பேர் பதிவு செய்துகொள்ளுவதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது என்றும் குறிப்பிட்டார்கள். இது வரவேற்கத் தக்கதுதான். காரணம் இன்று கிராமப்புறங்களிலே சாதாரண





மாகப் பட்டம் பெற்ற டாக்டர்கள் சென்று பணியாற்ற முன்வருவ தில்லை. அப்படிப்பட்ட நிலையில், இப்படி ஓமியோபதி முறையில் கற்றுத் தேர்ந்த மருத்துவர்களுக்கு ஊக்கம் தந்து, அவர்கள் கிராமப்புறங்களில் சென்று முறையாகப் பணியாற்ற முன்வருவார் களானால் கிராமப்புற மக்களுக்குப் பெரும் நிவாரணம் கிடைக்கும் என்று நிச்சயமாகச் சொல்லலாம். குறைந்த செலவில் சிறந்த வைத்திய வசதி கிடைக்கும் வாய்ப்பு கிராமப் புறங்களில் இதனால் ஏற்படுகின்றது. அந்த முறையில் இதை நான் முழுக்க முழுக்க வரவேற்கிறேன்.

ஆனாலும், ஓமியோபதி வைத்திய முறையில்கூட பல மாற்றங்கள், பல்வேறு அபிவிருத்திகள் ஏற்பட்டுவருகின்றன. இப்போது பதிவு செய்து கொள்ள முன்வருகின்றவர்களிலும்கூட பெரும்பாலானவர்கள் புத்தகங்களை மட்டுமே படித்துவிட்டு வருகின்றார்களே தவிர, விஞ்ஞான முறையில், ஸைன்டிஃபிக்காக படித்து அனுபவத்தோடு வருகின்றவர்கள் மிகவும் குறைந்த பேர்தான். ஏற்கெனவே பத்தாண்டு காலம் வைத்தியம் செய்து வந்தவர்களுக்கு, இப்போது ஏற்பட்டுள்ள புதிய முறைகள், அபிவிருத்திகள் நன்கு தெரிந்திருக்கக்கூடிய முறையில், மாவட்டங்கள்தோறும் அவர்களுக்கு ஒரு 'ரிஃப்ரெஷர் கோர்ஸ், ஒரு கௌன்ஸில் கூட்டம் அல்லது மகாநாடு என்று ஏற்பாடு செய்வது மிகவும் நலமாக இருக்கும். ஏற்கெனவே அரசாங்கத்தில், ஓமியோபதிக் கல்லூரிகளை ஏற்படுத்தப் போவதாகச் சொல்லி யிருக்கின்றார்கள். அதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது? ஒதுக்கப்பட்டுள்ள பணம் போதுமானதுதானா இல்லையா என்ற விவரம் தெரியவில்லை.

அது ஒருபுறம் இருக்க, இப்போது பதிவு செய்வதில் காலதாமதம் ஆவதற்குக் காரணம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கையெழுத்திட்ட சான்றிதழ்கள் வேண்டும் என்று வற்புறுத்தப் படுவதுதான். பெரும்பாலான மாவட்டக் கலெக்டர்கள் அத்தகைய சான்றிதழ்களிலே கையெழுத்துப் போடுவதில்லை. மாவட்ட ரெவின்யூ அதிகாரிகள்தான் கையெழுத்துப் போட்டுக் கொடுக் கின்றார்கள். இதைக்கொண்டுபோய்க் கௌன்ஸிலில் கொடுத்தால், கலெக்டர் கையெழுத்துதான் வேண்டும் என்று சொல்லி, இதை ஏற்க மறுத்துவிடுகின்றார்கள். இதன் காரணமாக வீண் காலதாமதம் ஏற்படுகின்றது. இதையெல்லாம் தவிர்க்கக்கூடிய

வகையில், இப்போதுள்ள ரூல்களைத் திருத்தி, கலெக்டரோ அல்லது மாவட்ட ரெவின்யூ அதிகாரிகளோ கையெழுத்திடலாம் என்ற முறையில் மாற்றியமைத்தால் பரவாயில்லை என்று மட்டும் வேண்டிக்கொண்டு, இந்த மசோதாவினை ஆதரித்து அமருகின்றேன். வணக்கம்.

DR. H. V. HANDE : Mr. Deputy Speaker, Sir, I am quite sure, as far as this amendment is concerned, there can be no objection from any side of this House, because it is trying to extend the period by another period of two years.

I would like to know, in this connection, a few details from the Hon. Minister concerned about the reasons for this delay. Why the delay is taking place? It would be better if the Hon. Minister goes into the details to know the reasons for the delay in bringing the homoeo-paths under this Bill. What are the reasons for the delay in bringing them under this Act? I am not quite sure whether the number will be four thousand or five thousand. Is it because that they will not be having necessary or requisite qualifications? In such cases, it is exactly necessary that extension should be given. Is the delay due to slackness on the part of the doctors to register themselves or is it because of the inadequate qualification? The Hon. Minister must try to find out these details. In finding out the details, what agency he is going to utilise? I want to know the method through which he is going to get all the details. It has been stated here that the Collector or Revenue Divisional Officer will collect the details.

Another point is this. It is doubtful whether the homoeopaths coming under this Bill will have the necessary basic qualifications. All the homoeopaths would come under this Bill. So, care must be taken on the part of the Government to see that they have the basic knowledge on physiology and anatomy. They must be taught anatomy. Whenever there is emergency, the doctors themselves are not able to know what to do. There may be cases of Titanus and Diptheria. In know what do. There may be cases of Titanus and Diptheria. In the case of Titanus, Titanus oxide has to be given. So, they must have basic knowledge in such cases. There is always risk in treating such cases. I think it will be difficult for them to treat such cases. This particular aspect must be looked into. I am sure the Hon. Minister will look into this aspect.

Another thing is this. There is possibility of getting false certificates. Care must be taken by the Government to see that such persons do not come under this. Due to political pressure or some other pressures,





even those who are having two years experience may get a certificate stating that they are having 10 years practice in homoeopathy. What are the remedial measures to avoid such malpractices? I am sure the Hon. Minister will also take into consideration this point. Apart from this, there can be no objection to this Bill. I welcome this Bill.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே,

I want a point to be clarified. What is the delay due to?

1974-க்குள் இவர்களெல்லாம் அப்ளிகேஷன் போடவேண்டும் என்று முதலில் சொன்னார்கள். இப்போது இரண்டாண்டுக் காலம் மேலும் தவணை கொடுக்கப்படுகின்றது. 1974-க்குள் போட முடியாமல் அவர்களுக்கு அப்படி என்ன சங்கடங்கள் வந்துவிட்டன? அந்தச் சங்கடங்கள் எல்லாம் 1976-க்குள் தீர்ந்துவிடும் என்று கனம் அமைச்சர் அவர்கள் எண்ணுகின்றார்களா என்று சொல்ல வேண்டும். அடுத்து கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பலர் அப்ளிகேஷன் போட்டுவிட்டார்கள், ஆனால் பெரும்பாலும் அவை வந்து சேரவில்லை என்று. 1974-ல் போடப்பட்ட அப்ளிகேஷன்கள் 1975-லும் வந்து சேரவில்லை என்றால் அது போஸ்டல் டிலேயாக நிச்சயமாக இருக்க முடியாது. வந்து சேரவில்லை என்று சொன்னால் அதன் நோக்கம் எங்களுக்குப் புரியவில்லை. "1974-ல் அனுப்பினார்கள், ஆனால் வந்து சேரவில்லை. ஆகவே, மேலும் இரண்டாண்டுக் காலத்திற்குத் தவணை கொடுக்கிறோம்" என்று சொன்னால் ஒன்றும் புரியவில்லை. அந்த ஸ்டேட்மெண்டின் நோக்கம் எனக்குப் புரியவில்லை. 1974-க்குள் போடவேண்டும் என்று ஒரு தேதியைக் குறிப்பிட்ட பிறகு, அதற்குள் அவர்கள் போடவில்லை என்று சொன்னால், அவர்களுக்கு அதில் இஷ்டம் இல்லாது இருக்கலாம் அல்லவா?

Perhaps they did not want to register themselves.

அடுத்து, கலெக்டரிடம் கையெழுத்து வாங்கவேண்டும் என்று சொல்லுகின்றார்கள். கையெழுத்து வாங்கவேண்டும் என்று சொல்லுகின்றவர்கள் பத்தாண்டு காலம் அனுபவம் உள்ளவர்களா இல்லை பத்தாண்டு கால அனுபவம் உள்ளவர்கள் தானா என்று சோதித்து கலெக்டர்களிடமும் கையெழுத்து வாங்குவார்களா? கண்டுபிடிக்கின்றார்களா? அவர்கள் ஒழுங்கான முறையில் சொல்லி அதை வாங்கினார்களா அல்லது தவறான தகவல்கள் கொடுத்து கையெழுத்து வாங்கினார்களா என்று பரிசீலிப்பதற்கான

மெஷினரி அரசாங்கத்திடம் இப்போது இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். அதற்காக ஒரு இன்ஸ்பெக்டர் அல்லது வேறு அதிகாரிகள் இருக்கின்றார்களா? இதையெல்லாம் நியாயமாகப் பார்க்க வேண்டும். சரி இப்படி ஒரு இன்ஸ்பெக்டரைப் போட்டு செக் பண்ண வழியில்லை என்றால், கலெக்டரிடமே போக வேண்டாம், யார் யார் அப்ளிகேஷன் போடுகின்றார்களோ அவர்களே ஒரு அஃபிடெவிட் கொடுக்கலாம். தங்களுக்குப் பத்தாண்டுகாலம் அல்லது நான்காண்டுகாலம் அனுபவம் இருக்கின்றது என்று சொல்லி. அதிலே தவறுகள் இருந்தால் அதற்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும், அதன்பேரிலே நடவடிக்கை எடுத்து அவர்களுடைய லைசென்ஸை ரத்து செய்து விடலாம். அந்த முறையில் அவர்களிடமே அஃபிடெவிட் வாங்கிக் கொள்ளலாம். அவர்கள் தலையிலேயே பொறுப்பைக் கட்டி விட்டால், காலதாமதத்தைத் தவிர்க்க முடியும்.

மாவட்டக் கலெக்டர்களிடம் சர்டிஃபிகேட் வாங்குவது என்பது லேசில்லை. எம்.எல்.ஏ.-க்களாவது அடித்து ஓட்டு வாங்க வேண்டுமே என்று கையெழுத்துப் போட்டுவிடுவார்கள். ஆனால் கலெக்டர்களிடம் போனால், இது சரிதானா அல்லவா என்று பார்த்து, நமக்கேன் வம்பு என்று கையெழுத்துப் போடத் தயங்குகின்றார்கள். அவர்களிடம் போய் சர்டிபிகேட் வாங்குவதற்கும் இப்போது அப்ளிகேஷன் போடும் ஹோமியோ ப்ராக்டீஷனர்கள் இன்னும் இரண்டு ஆண்டுகாலம் எக்ஸ்டென்ஷன் கேட்பார்கள். ஒருகால் தனியாக கலெக்டர்களிடம் சர்டிபிகேட் கொடுக்காதீர்கள் என்றோ அல்லது உங்கள் இஷ்டம்போல் கொடுங்கள் என்று சொல்லி வைத்திருக்கின்றார்களோ என்னவோ. அஃபிஷியல்களிடம் சர்டிபிகேட் வாங்குவது ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. இந்த மெடிகல் காலேஜில் குழந்தைகளைச் சேர்ப்பதற்காக டெபுடி செக்ரடரியிடம் கையெழுத்து வாங்குவதற்குள் மூச்சுத் திணறிப் போய்விடுகின்றது. ஆகவே, இந்த அஃபிஷியல்களிடம் சிக்க வைக்காதீர்கள். அஃபிஷியல்ஸ் கையெழுத்துப் போடவேண்டும் என்பதை விட்டு விட்டு, தான் அஃபிஷியல்களிடம் விட்டு விடுங்கள். அல்லது பரிசீலனை செய்வதற்காக என்று ஒரு இன்ஸ்பெக்டிங் ஸ்டாஃபைப் போடுவதாக இருந்தால் வரவேற்கத்தக்கது. அதை விட்டு விட்டு அதிகாரிகளிடம் சிக்க வைப்பது நியாயமில்லை என்பதை மட்டும்





களம் அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக் கொண்டு உண்மையான காலதாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும், அவை களையப்பட வேண்டும் என்று சொல்லி, சட்டத்தில் காலதாமதம் ஏற்படுவதற்கான அம்சம் தவிர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, ஹோமியோபதி மருத்துவ முறை, அதில் அனுபவம் பெற்ற மருத்துவர்கள், இவர்களை ஏற்றுக்கொள்ளுவதற்காக சட்டம் வந்த நேரத்தில் அது ஆய்வுக் குழுவில் நல்ல முறையில் விவாதிக்கப்பட்டுத்தான் அச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. முதலில் பத்தாண்டு காலத்திற்குக் குறையாமல் அதிலே அனுபவம் பெற்றவர்களை, பதிவு பெற்ற மருத்துவர்களாக. 'ரெஜிஸ்டர்டு ப்ராக்டிஷனர்ஸ்' என்ற முறையில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சட்டம் பிறப்பிக்கப்பட்டது. பிறகு நான்காண்டு காலத்திற்கு மேலே பயிற்சி உள்ளவர்களாக இருப்பார்களானால், அவர்கள் அதற்கான சான்றுகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய அத்தாட்சியுடன் தங்களைப் பதிவு செய்து கொள்ள முன்வந்தால், அவர்களுக்கு ஒரு தேர்வு வைக்கப்படும் என்றும், அதிலே அவர்கள் வெற்றி பெற்றால் அவர்களும் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என்ற முறையில் பின்னால் இப்போது மசோதா பிறப்பிக்கப்பட்டது. நான்காண்டு அனுபவம் உள்ளவர்களும் அதிலே பலன் பெற வேண்டும் என்பதுதான் இந்தச் சட்டத்தின் நோக்கம். இதிலே இரண்டாண்டு காலம், காலதாமதம் ஏற்பட்டது ஏன் என்று அம்மையார் அவர்கள் கேட்கின்றார்கள். ஒருவேளை தபால் இலாகாவினால் இந்தக் காலதாமதம் ஏற்பட்டிருந்தால் அது மத்திய அரசினைச் சாரும். ஆகவே, அப்படிச் சொல்லமாட்டார்கள் என்றே நினைக்கிறேன். நான் சொல்ல விரும்புவது, ஒருவர் தான் பத்தாண்டு அனுபவம் பெற்றவர் அல்லது நான்காண்டு காலம் அனுபவம் பெற்றவர் என்று சொல்லி விண்ணப்பிக்கும்போது, அது மாவட்ட ஆட்சியாளர்களுக்கு வந்து பிறகு அது கீழே உள்ள அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகின்றது. ஒருவர் நான்காண்டுகாலம் அனுபவம் பெற்று இருக்கிறது என்று சொன்னால், அவர் ஒரு ஊரிலே இரண்டாண்டு காலம் இருந்திருக்கலாம், மற்றொரு ஊரிலே இரண்டாண்டு காலம் இருந்திருக்கலாம். சான்றிதழ் என்று அவர்கள் கேட்கும்போது, "நாங்கள் ஐந்தாண்டு

[திரு. க. அன்பழகன்] [1975 அக்டோபர் 23

காலம் மருத்துவம் செய்திருக்கிறோம், எங்களைத் தேர்விற்கு அனுப்ப வேண்டும்" என்று கேட்கும்போது. இதையெல்லாம் முறையாகப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது.

இப்படி வருகின்றபோது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முடிவு செய்வதில் சிறிது தாமதம் ஏற்படக்கூடும். தாமதம் என்று சொல்லும்போது வேண்டுமென்றே தாமதம் செய்யமாட்டார்கள். சில விவரங்களைப் பெறுவதில் தாமதம் ஏற்படலாம். 10 ஆண்டுகள் என்று சொல்லும்போது 10 ஆண்டுகளுக்கு முன்னால் மருத்துவம் செய்பவராக இருந்தால் அப்போதே அவர் தன்னை பதிவு செய்திருக்க வேண்டும்; அல்லது ஒரு சான்றிதழாவது மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெற்றிருக்க வேண்டும். அப்படி இருந்தால் உடனடியாகக் கிடைத்துவிடுகிறது.

சிலர் தங்கள் கையில் சான்றிதழ் இல்லாமல் மருத்துவம் செய்துகொண்டிருந்த காரணத்தால் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் தாமதம் ஏற்படுகிறது. சான்றிதழ் இல்லாமல் மருத்துவம் செய்துகொண்டிருக்கிறவர்களிலும் 10 ஆண்டுக்குக் குறையாதவர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு நேரடியாகப் பதிவு செய்துகொள்ளும் உரிமை உண்டு. அந்த உரிமையைப் பறிக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்தத் திருத்தத்தின் மூலம் இரண்டாண்டு காலம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

மற்றும் சிலர் நான்கு ஆண்டுகாலம் மருத்துவம் செய்தவர்களாக இருந்தால் மறுபடியும் தேர்வு எழுதப் போகிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்குக் குறைந்தபட்ச விஞ்ஞான உடலியல் அறிவு இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த அறிவு இருந்தால்தான் மருத்துவர்கள் தவறு செய்யமாட்டார்கள் என்று சொன்னார்கள். பதிவு பெற்ற மருத்துவர்கள் என்று சொல்கிறபோது தமிழ் நாட்டில் சித்த மருத்துவம், ஓமியோபதி மருத்துவத்தில் பதிவு பெற்றுள்ளவர்களாக இருந்தாலும் அவர்களுக்குக் கட்டாயமாகச் சொல்லப்படவில்லை. ஆனால், ஓமியோபதிக் கல்லூரி இப்போது தொடங்கப்பட்டிருக்கிறது; ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்கு முன்னால் தொடக்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியின் ஒரு பகுதியில் ஏற்கெனவே அலுவலகம் இருந்துகொண்டிருந்த கட்டடத்தை ஒட்டி, இக்கல்லூரி நடை



1975 அக்டோபர் 23] [திரு. க. அன்பழகன்]

பெற்றுக்கொண்டிருக்கிறது. கல்லூரியில் 'பிஸியாலஜி, அனாட்டமி' இன்னும் பல பாடங்கள் இடம் பெற்றிருக்கின்றன. இருந்தாலும் அவைகளில் தேர்ச்சி பெறும் காரணத்தால் ஓமியோபதி மருத்துவர்கள் அதற்கென்று வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் செயல்பட முடியும். ஊசி போடும் முறையை ஓமியோபதி மருத்துவத்தில் ஒப்புக்கொள்ளவில்லை. அதைப் போலவே 'மைனர் சர்ஜரி' ஓமியோபதி மருத்துவர்கள் செய்யலாம் என்றாலும் பட்டதாரியாக இருந்தால்தான் செய்யலாம்; சாதாரண மருத்துவராக இருந்தால் சர்ஜரியில் ஈடுபடுவதை இன்றைக்கு ஏற்றுக்கொள்ளவில்லை.

விண்ணப்பங்கள் அனுப்பப்படுவதில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் தவறு நடக்கிறது; அதிகாரிகள் தவறு செய்கிறார்கள்; அங்கே தாமதம் ஏற்படுகிறது என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். தவறு நடைபெறுவதால் சான்றிதழ் வாங்க முடியவில்லை என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. நியாயமாக இருந்தால் சான்றிதழ் கிடைத்துவிடும். நியாயம் இல்லை என்று தெரிந்தால் சான்றிதழ் கொடுக்கமாட்டார்கள்; அது தவறு என்று சொல்ல முடியாது. ஏனென்றால் 9,229 பேர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகத்தான் விண்ணப்பங்களை அனுப்பி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னும் 2,000 அல்லது 3,000 பேர்களுடைய விண்ணப்பங்கள் வரவேண்டியிருக்கலாம். போதுமான குறிப்பில்லாமல் சிலருடைய விண்ணப்பங்கள் வராமலிருக்கலாம். சிலருடைய விண்ணப்பங்களில் தவறு இருக்கலாம். இன்னும் சிலபேர் இந்தச் சட்டம் பற்றித் தெரியவில்லை என்று சொல்கிறார்கள். ஆக, இந்த இரண்டாண்டு நீட்டிக்கப் படுமானால் அவர்கள் எல்லாம் தங்களுடைய விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வசதியாக இருக்கும். காலம் நீட்டிக்கப்படுகிறது என்றால் இப்படியே தொடர்ந்து நீட்டித்துக்கொண்டே போவார்கள் என்று பொருளல்ல.

Registration should close at a particular date.

அதற்குப் பின்னால் பதிவு செய்யப்படுகிற முறை இருக்காது. பயிற்சிக் கல்லூரி மூலம் படித்து வருகிறவர்கள் அல்லது டிப்ளமா கோர்ஸ் தேர்ச்சி பெற்று வருகிறவர்கள்தான் மருத்துவம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். அனுபவத்தின் மூலம் விண்ணப்பங்கள்

அனுப்பி பதிவு செய்யப்படும் முறை இருக்காது. அது கூடாது என்றுதான் இந்தச் சட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்திருக்கிறோம். இனிமேல் ஓமியோபதியில் முறைப்படி பயிற்சி பெற்றவர்கள்தான் வரவேண்டும் என்று அரசு எதிர்பார்க்கிறது. இப்போது விண்ணப்பங்கள் மூலம் பதிவு செய்யப்படுவதே ஒரு விதிவிலக்குதான். ஏன் இந்த விதிவிலக்கு என்றால், நல்ல மருத்துவம் செய்து அனுபவம் பெற்றவர்கள் இருக்கிறார்கள்; அவர்களுடைய அனுபவத்தை நாம் இழந்து விடக்கூடாது; அனுபவம் பெற்றவர்கள் தொழிலை இழந்துவிடக் கூடாது. ஆகவேதான் விண்ணப்பங்கள் மூலம் பதிவு செய்யப்படும் முறையை சிறிது நீட்டித்திருக்கிறோம். பதிவு செய்துகொள்வதில் இந்திய மருத்துவ முறையில் இருந்துவருகிற ஆயுர்வேதம், சித்தம், யூனானி முறைகளுக்கு இருக்கிற அதே முறைதான் ஓமியோபதிக்கும் இருக்கிறது. இந்த இரண்டாண்டு காலத்திற்குப் பிறகு இந்த முறை ஓமியோபதியில் நிறுத்தப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. பழனிசாமி அவர்கள் ஓமியோபதி மருத்துவர்களுக்கு 'ரெஃப்ரெஷர் கோர்ஸ்' நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். அது ஓமியோபதி கவுன்சில் மூலம் இருக்கிற வாய்ப்பு வசதிகளுக்கு ஏற்ப நடைபெறும். ஆனால் அரசாங்கத்திலிருந்து 'ரெஃப்ரெஷர் கோர்ஸ்' நடத்த இடமில்லை. எம்.பி., பி.எஸ். படித்தவர்களுக்குக் கூட 'ரெஃப்ரெஷர் கோர்ஸ்' இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கும் கவுன்சில் மூலம் நடத்தப்படும் என்று கருதுகிறேன். ஓமியோபதி கவுன்சில்தான் சிறப்பாக அதற்கு ஏற்பாடு செய்யமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டங்களிலே இருக்கிற ஓமியோபதி நிறுவனங்களிலும் 'ரெஃப்ரெஷர் கோர்ஸ்' நடத்தி, அவர்கள் பெற்றிருக்கிற அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். அவர்களுடைய ஆற்றலையும் திறமையையும் வளர்த்துக்கொள்வது ஓமியோபதி மருத்துவ முறைக்கு பெருமை. ஓமியோபதி வைத்தியத்தில் பயிற்சி பெற்றவர்கள் வேறு மருந்துகளைப் பயன்படுத்தக் கூடாது என்று அவர்களே கேட்டிருக்கிறார்கள்.





இப்போதுதான் ஹோமியோபதி கல்லூரி ஒன்று சென்னையில் தொடங்கப் பட்டிருப்பதால் இன்னும் ஓராண்டு காலத்தில் இதிலே என்னென்ன முன்னேற்றம் காணமுடியும் என்பதுபற்றி ஆராயலாம். ஹோமியோபதி மருந்துகளைப் பற்றிய தத்துவங்களை ஆராயலாம் ... மற்றவர்களுக்கு விளக்க வாய்ப்பு இருக்கும்; அதையும் மேற்கொள்ள முயற்சி செய்யலாம். எனவே, அந்த அடிப்படையில் இந்தச் சட்டத் திருத்ததை ஏற்கெனவே 'ஆர்டினன்ஸாக' கொண்டு வந்திருப்பதை சட்டமாகக் கொண்டுவர இந்த அவையிலுள்ள உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டு கருத்துக்கள் தெரிவித்தமைக்கு நன்றி தெரிவித்து, இதைச் சட்டமாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று, தலைவரவர்களே, தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, ஹோமியோபதி முறை மருத்துவம்—ஹோமியோபதி மருத்துவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே,

"தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு ஹோமியோபதி முறை மருத்துவம்—ஹோமியோபதி மருத்துவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

[1975 அக்டோபர் 23

(உ) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, "தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை* அறிமுகம் செய்து, அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு ஆளுநர் அவர்களால் 13—8—1975 அன்று அதிகார முறையில் வெளியிடப்பட்ட தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு நிவாரணத் தொழில் நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) திருத்த அவசரச் சட்டத்திற்குப் (தமிழ் நாடு அவசரச் சட்டம் 12/1975) பதிலாக இந்தச் சட்ட முன்வடிவை நான் இப்பேரவையில் கொண்டு வந்துள்ளேன். இந்த அவசரச் சட்டத்தின் மூலம் தமிழ் நாடு 1969 ஆம் ஆண்டு நிவாரணத் தொழில் நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) சட்டம் திருத்தப்பட்டது.

தமிழ் நாடு 1969 ஆம் ஆண்டு நிவாரணத் தொழில் நிறுவனங்கள் (சிறப்பு விதித்துறைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1969) மூன்றாவது பிரிவைச் சேர்ந்த வரம்பு நிபந்தனையின்படி, மாநில அரசுத் தொழில் நிறுவனமொன்றை நிவாரணத் தொழில் நிறுவனமென்று அறிவித்ததற்கான அறிவிப்பு செயலில் இருக்க வேண்டிய மொத்த கால அளவு ஐந்தாண்டுகள் ஆகும். நிவாரணத் தொழில் நிறுவனமாக அறிவிக்கப்பட்டிருந்த மாநில அரசுத் தொழில் நிறுவனமொன்றினைக் குறித்த இந்த கால அளவு 13-8-75 அன்று முடிவடைந்தது. இத்தகைய நிவாரணத் தொழில் நிறுவனங்கள் தொழிலுறவு சம்பந்தப்பட்ட பிற சட்டங்களினாலும் நிதிப் பொறுப்புகளாலும் பாதிக்கப்படாத வகையிலும் இல்லாவிடில் அவை காரணமாக இவை தங்குதடையின்றி இயங்குவது ஓரளவு கடினமாயிருக்கும் என்பதாலும் இவை தொடர்ந்து செயல்படுவதற்கு இயலும் வகையில் நிவாரணத் தொழில் நிறுவனங்கள் குறித்த அறிவிப்பை மேலும் மூன்றாண்டுக்

---

* 20—10—1975 ஆம் தேதிய தமிழ் நாடு சிறப்பிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





காலத்திற்கு நீட்டிக்க அரசு முடிவு செய்துள்ளது. மேற்கண்ட முடிவுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக தமிழ் நாடு 1969 ஆம் ஆண்டு நிவாரணத் தொழில் நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) சட்டத்தைத் திருத்த வேண்டியுள்ளது. சட்டமன்றக் கூட்டம் நடைபெறாததாலும் அவசர நிலையை முன்னிட்டும் தமிழ் நாடு 1969 ஆம் ஆண்டு நிவாரணத் தொழில் நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) சட்டத்தைத் திருத்தி அதிகார முறையில் அவசரச் சட்டம் வெளியிடப்பட்டது. அவசரச் சட்டத்திற்குப் பதிலாக இச்சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுகிறது. இதனை இம்மாமன்றம் ஏற்க வேண்டுகிறேன்.

*THIRU K. M. SUBRAMANIAM: Sir, I oppose this Bill completely on two grounds.

Relief is generally given as a temporary measure and a period of eight years is not a temporary one for relief. For giving relief certain rules have to be observed. In the present conditions, not only industries but also the persons who have invested their money in the industries have been affected. Take for example, India Meters. It is a Relief Industry. Many people have invested their money in the form of deposits in this industry and for the last five years, they are undergoing terrible sufferings. Some of them have invested all their money there. Middle class people have invested their money there and they depend on the interest that they get from their investment. For the last five years, I am very unhappy to say that many families have to stop the education of their children because of the lack of return from these industries. So, when an industry is sick and when it is not able to manage itself, five years' time should be enough and I think any good Government should try to find out whether such an industry is a relief industry and whether they should take it up or not.

So far as Indian Meters is concerned, most essential items necessary for the Electricity Board have been manufactured by this industry. But it is very unfortunate that such an industry has become sick and the Government have to consider it as a relief industry. In the case of India Meters, many workers suffer because they cannot get their increments. Bonus cannot be given to them because it is a relief undertaking. Depositors cannot get their interest on the deposits because it is a relief industry. Shareholders cannot get any dividend because it is a sick industry. So, the Government should find out what is wrong with the industry and why it is not giving proper return and why it should continue to be treated as relief industry.

[Thiru K. M. Subramaniam] [1975 அக்டோபர் 23

The Government should do it in the interest of the people working in the industry and in the interest of the good working of the industry and also in the interest of depositors, shareholders, etc. Sir, since the Assembly did not meet in August and since the period of relief expired in August, the Government issued an ordinance to extend the period by three more years. The Government should seriously consider whether such an extension is necessary in the case of all the industries. Now we see people start industries and after making money during the hay days, they had them over to the Government as a relief industry. Why not the Government nationalise the industries? I do not want nationalisation for nationalisation's sake. But, I do definitely say that nationalisation is very necessary in the interest of the prosperity of the workers, depositors, shareholders and the country in such industries.

I hope and trust that this Bill will be withdrawn. I think that my proposed amendment to reduce the period from eight years to six years would be accepted by the Government. If it is accepted, the Government will be doing great service to the workers and the people who have invested their money in these industries.

[நண்பகல் 12.00]

திரு. கே. டி. கே. தங்கமணி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த குறிப்பிட்ட மசோதாவின் பேரில் இரண்டு முக்கியமான கருத்துக்களை வலியுறுத்த வேண்டுமென்று நினைக்கிறேன். இன்று இந்த மசோதாவில் குறிப்பிட்ட ஸ்தாபனம் அநேகமாக டெக்ஸ்டைல்ஸ் என்று நினைக்கிறேன். அது நிச்சயித்த எல்லைக்கு மீறிப் போய்விட்ட காரணத்தினால் ஆகஸ்டு 13 ஆம் தேதிக்கு மீறிப் போய்விட்ட காரணத்தினால் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். அப்படியானால் எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது மாதிரி ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கு மட்டும் என்று கொண்டு வந்திருந்தால் உதவிகரமாக இருக்குமென்று கருதுகிறேன்.

அடுத்து, நான் முக்கியமாக இந்த மசோதாவில் எடுத்துச் சொல்ல விரும்புவது என்னவென்றால், நம்முடைய இந்தியா மீட்டர்ஸ் சம்பந்தமாக ஏற்கெனவே பல தடவை இந்த மன்றத்திலே எழுப்பப்பட்ட மிக முக்கியமான ஒரு தொழில். இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் மூலதனம் போடப்பட்ட ஒரு தொழில். இதில் 750 தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்.



1975 அக்டோபர் 23] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அப்படி பணியாற்றிக் கொண்டு வந்த தொழிலாளர்கள் உற்பத்தி செய்யக்கூடிய அந்த சாதனம் இருக்கிறதே, அந்த மீட்டர்ஸ் இன்றைக்கு நம்முடைய எலெக்ட்ரிசிடி போர்டுக்குத் தேவையாக இருக்கிறது. இந்தியா பூராவிலும் அதற்குத் தேவை இருக்கிற நேரத்தில் இந்தத் தொழிலை கடந்த 14 மாத காலமாக லே ஆஃப் என்று நிர்வாகம் மூடியது. அது லே ஆஃபா, க்ளோஷரா என்று இன்றைக்கும் தெரியவில்லை. உண்மையில் தொழிலாளர்களைப் பார்க்கிறபோது பரிதாபமாக இருக்கிறது. இப்படி ஒரு நிலை வந்ததற்குப் பிறகும் கூட ஏற்கெனவே அவர்கள் லே ஆஃப் என்று சொன்ன அந்த லே ஆஃப் பிறகுப் பணம் கொடுக்கவில்லை, மூடியுள்ளார்கள். அப்படி மூடியிருப்பதற்கும் பணம் கொடுக்கவில்லை. இதைப் பரிசிலனை செய்து அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்தால் நேரமோ ரொம்பவும் தாழ்ந்து போய்விட்டது. இப்போது ரிலீப் அண்டர்டேகிங்கில் இருக்கக்கூடிய இந்த ஸ்தாபனத்திற்கு நம்முடைய அரசு பணம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய் வரை பணம் கொடுத்து வைத்துள்ள அந்த ஸ்தாபனத்தை மீண்டும் புனரமைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமென்றார்கள். அந்த ஏற்பாடு என்னானது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன். குறிப்பாக நம்முடைய தொழில் இலாகா, தொழிலாளர் இலாகா இரண்டும் சேர்ந்து இதைப்பற்றிப் பேசுவதாக இருந்தது. அந்தப் பேச்சின் நிலைமை என்னாயிற்று? அந்தத் தொழிற்சாலையை மீண்டும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் உண்டா, அப்படியானால் எப்போது ஏற்பாடு செய்யப்படும் என்பன போன்றவைகள் தெரிந்தால் நல்லது. ரிலீஃப் அண்டர்டேக்கிங் என்று இடைக்கால மசோதா கொண்டு வந்து நிறைவேற்றினோம். அப்படி நிறைவேற்றிவிட்டு, அதற்குப் பணம் கொடுத்த பிறகு அந்த ஸ்தாபனம் இப்படி மோசமான நிலைமையில் போய்விட்டால் அதை மாற்ற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? நான் ஆரம்பத்தில் சொன்ன மாதிரி, 'வித்தின் லிமிட்ஸ்' லிமிடேஷனுக்குள்ளே வைத்துப் பார்த்தால் ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்திற்கு மட்டும் என்று இருந்தால் போதும். ரிலீஃப் அண்டர்டேக்கிங் ஆக்ட் படி இந்தியா மீட்டர்ஸ் போன்றவற்றில் என்ன நிலை எடுக்கப்பட்டிருக்கிறதென்று அறிய விரும்பி, என்னுடைய இந்தக் கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

[1975 அக்டோபர் 23

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** துணைச் சபாநாயகர் அவர்களே, ரிலீஃப் அண்டர்டேகிங்ஸ் ஆக்ட் ஏற்கெனவே வரும்போது நேரடியாக இந்த நொடித்துப் போன ஆலைகளை அரசு உடைமையாக்குவதற்குப் பதிலாக இடைக்காலமாக இதிலே இருக்கிற சுமைகளை முழுமையாக தாங்கிக்கொள்ள இயலாத காரணத்தினால் இப்படி ஒரு ஏற்பாடு என்று இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு அதன் அடிப்படையில் எடுக்கப்பட்ட பல பஞ்சாலைகள் பின்னாலே மத்திய அரசால் கொண்டு வரப்பட்டு தேசிய உடைமையாக்கப்பட்டு தேசிய பஞ்சாலை கார்ப்பரேஷன் கையிலே இருக்கின்றன.

இப்போது இந்த நீட்டிப்பானது ஒரு குறிப்பிட்ட ஆலையைப் பொறுத்த மட்டும் வந்திருக்குமோ என்ற ஐயப்பாட்டை எழுப்புகிறது. இப்படி ஒரு குறிப்பிட்ட ஆலைக்கு ரிலீஃப் அண்டர்டேகிங்கை நீட்டிக்காமல் நேரடியாக மத்திய அரசு இயற்றியுள்ள சட்டங்களின் துணை கொண்டு நாட்டுடைமையாக்க என்ன தடை இருக்கிறது என்று புரியவில்லை. இன்னொன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே ரிலீஃப் அண்டர்டேகிங் ஆக்டிலே சில ஆலைகள் எடுக்கப்பட்டபோது இந்த சட்டத்திலே பல்வேறு கட்டுதிட்டங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களுடைய பல்வேறு உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றன. தொழில் தகராறு சட்டத்தினுடைய பல்வேறு பிரிவுகளைக் கட்டுப்படுத்த சில தடைகள் போடப்பட்டிருக்கின்றன. அதேபோல டெபாசிட் செய்திருக்கிறவர்களுக்கு, கடன்காரர்களுக்கு உதவியாகச் செய்திருக்கிறார்கள். இன்னொன்றைப் பார்க்க முடிந்தது. இந்த ஆக்டிலே எடுக்கப்பட்ட ஆலைகளுடைய நிர்வாகத் துறையைப் பொறுத்த வரையிலே அத்தகைய கட்டுப்பாடுகள் இல்லாத நிலைமையைப் பார்க்க முடிந்தது. அரசு எடுத்திருக்கிற ஆலைகள் தனியார் துறைக்கு முன்மாதிரியாக அமைய வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். அதனாலேயே இந்த ஆலைகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டோம். தொழிற்சங்கங்கள் வற்புறுத்தியதன்பேரில் அப்படித்தான் பஞ்சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அப்படி எடுத்துக் கொள்கிறபோதே தனியார் துறைகளுக்கும் முன்மாதிரியாக இந்த ஆலைகளின் நிர்வாகத்திற்கும் கட்டுப்பாடு இருக்க வேண்டுமென்று



1975 அக்டோபர் 23] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

தெரிவித்தோம். தொழிலாளர்களுக்கு ஊதியத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். பஞ்சப்படி வற்புறுத்தக்கூடாது, லே ஆப் காம்பென்சேஷன் கேட்கக்கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. நிர்வாகத்தினர்களுக்கும் கட்டுப்பாடு போட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். சொன்னோம். கேட்கவில்லை. நிர்வாகத்தினர் தங்கள் இஷ்டம்போல ஆட்களைப் போட்டுக்கொண்டு, வசதிகளைப் பெருக்கிக்கொண்டே போனதன் காரணத்தினால்—இன்றைக்கு அவை சீர்கெட்டு நாம் அவற்றிலும் கவனம் செலுத்த வேண்டிய நிலை வந்திருக்கிறது. ஏற்கனவே அந்த ஆலைகளை எடுத்துக்கொண்டபோதே தெரிவித்திருக்கிறேன்.

இந்த ஆலைகளைக் கவனிப்பதற்கு தொழிலாளர்களுக்கும் அந்த நிர்வாகத்தில் பங்கு கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தினோம். தொழிலாளர்கள் பல தியாகங்களைச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறபோது, நிர்வாகத்தினர்களும் தியாகங்கள் செய்கிறார்களா என்பதைக் கவனித்துக்கொள்வதற்கு தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தில் பங்கு இருக்கவேண்டும் என்று சொன்னோம். அது செய்யப்படவில்லை. இதன் காரணமாக இன்றைக்குப் பல தவறுகள் நிகழ்ந்தன. எமர்ஜன்ஸி வந்த பிறகுதான் அந்தத் தவறுகளை நீக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. இன்றைக்கு மத்திய அரசு கூட தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்குகொடுக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது.

அடுத்தபடியாக, இந்தியா மீட்டர்சைப் பொறுத்தவரையில் ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 3 பேர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதாக. அந்தக் குழுவின் முடிவு தெரியவில்லை. . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இவை எல்லாம் இன்டஸ்ட்ரீஸ் டிமாண்டில் பேசவேண்டியவை. பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் பற்றி நாம் இங்கே இப்போது விவாதிக்கவில்லை. ரிலீப் அண்டர்டேக்கிங்ஸ் பீரியடை மேலும் ஒரு 3 ஆண்டு காலத்திற்கு நீட்டிப்பது பற்றித்தான் இந்த மசோதா. நிறைய மசோதாக்கள் இருக்கின்றன. எல்லாவற்றையும் 3 நாட்களில் முடிப்பதாக ரீஜினல் அட்வைசரி கமிட்டியில் தலைவர்கள் ஒத்துக்கொண்டு

என்ன செய்வது. தொழிலாளர்களது நலனுக்காக இதைக் கொண்டு வந்திருக்கிறோம். தொழிலாளர் தலைவர்கள், இதை வரவேற்கிறோம், பாராட்டுகிறோம் என்று சொல்வதைத்தவிர இதில் பேச என்ன இருக்கிறது ? தலைவர்கள் சொன்ன ஆணையைத் தான் நான் சொல்கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அமைச்சர் அவர்கள் முன்பு எங்களுக்கு நிறைய உரிமை கொடுத்திருப்பதாகப் பெருமை யாகச் சொன்னார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது அவர் கொடுத்த உரிமையில்லை. நான் கொடுத்த உரிமை. நீங்கள் சீக்கிரமாக முடியுங்கள். ஸ்கோப் ஆப் தி பில்லையொட்டியே பேசி முடித்து விடுங்கள். நிறைய மசோதாக்கள் இருக்கின்றன.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** இந்தியா மீட்டர்சைப் பொறுத்த வரையில் அதை நல்லமுறையில் நடத்த முடியும். அதற்கு நல்ல டிமாண்டு இருக்கிறது. நிறைய ஆர்டர்ஸ் வருகின்றன. நல்ல படியாக நடத்த முடியும். 3 பேர் கொண்ட குழுவைப் போட்டார் களே அவர்கள் அரசுக்கு ஏதாவது தங்கள் முடிவைத் தெரிவித் தார்களா ? அது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ரீலீப் அண்டர்டேக்கிங் மசோதாவின்படி மேலும் இதன் காலம் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படுகிறது. இப்படி ஏற்கனவே சர்க்காரில் இருந்து பணம் செலவு செய்து அந்த நொடித்துப்போன ஆலைகள் லாபமாக நடக்க நாம் முயற்சி செய்கிறபோது லாபத்தை அந்த நிர்வாகத்தினர் சாப்பிட்டு விடு கிறார்கள். நமக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இந்தமாதிரி முறை சரியல்ல. இதன்காலத்தை 3 ஆண்டு மேலும் நீட்டிப்பதற்குப் பதிலாக சர்க்காரே அந்த ஆலைகளை எடுத்துக்கொண்டுவிட வேண்டும்.





லட்சுமி டெக்ஸ்டைலை எடுத்துக்கொள்ளுங்கள், அவருக்கு வேறு நிறைய தொழிற்சாலைகள் இருக்கின்றன. இதை வேண்டுமென்றே நட்டத்தில் விடுகிறார். அதை நாம் பணம் போட்டு லாபகரமாக நடக்கச் செய்து அவரிடம் எதற்காகக் கொடுக்கவேண்டும் ?

இன்றையதினம் கோத்தாரி சர்க்கரை ஆலையை எடுத்துக் கொண்டாலும், பட்டவாத்தலை, சக்தி ஆலைகளை எடுத்துக் கொண்டாலும் கரும்பு இல்லையென்று லே ஆப் கொடுத்திருக் கிறார்கள். சர்க்கார் சர்க்கரை ஆலைகளை நாட்டுடைமை யாக்கும் திட்டம் இருக்கிறது. இவற்றை எல்லாம் அரசே எடுத்துக்கொண்டு விட்டால் என்ன?

டெக்ஸ்டைல் இன்டஸ்ட்ரியை எடுத்துக்கொண்டால் பருத்தி வாங்குகிற ஏஜெண்டு யார். சரக்கு வாங்குகிற ஏஜெண்டு யார் என்றே இல்லை. ரெகுலேட்டட் மார்க்கெட்டில் வாங்குவதே இல்லை. பருத்தி பாரம் 7,000 என்றால் 7,500 கொடுத்து வாங்குகிறார்கள். விற்கும்போதும் அப்படித்தான். கொள்ளை. கோடிக்கணக்கில் நஷ்டம் வந்த ஆலையை மத்திய சர்க்கார் கார்ப்பரேஷன் எடுத்துக் கொண்டது. ஒரு வருஷத்தில் இப்போது லாபத்தில் ஓடுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சப்ஜெக்டுக்கு வாருங்கள்.

**திரு. என். கே. பழனிசாமி:** சர்க்கார் இதுபோல இந்த ஆலைகளுக்குப் பணம் கொடுத்து உதவிக்கொண்டே போய் நஷ்டம் அடைவதைவிட அவற்றை அரசே எடுத்துக்கொண்டுவிடலாம். பொதுஜனங்கள் பணம் விரயமாகாது. அவற்றை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**Dr. H. V. HANDE:** Mr. Deputy Speaker, Sir, at the outset I have to say that in principle, extension of the period of protection for these relief undertakings is quite justified, because quite a number of mills have become sick mills and they need proper protection on the part of Government. But in this context I would suggest to Government to have a proper formula for the whole thing. Let them provide statistics as to what exactly are the undertakings that can be given this relief and as to what are the industries that can survive without any relief being afforded to them. It is this particular aspect that has to be gone into.

[Dr. H. V. Hande] [1975 அக்டோபர் 23

I have my own misgivings that the Government have not properly gone into this particular aspect. It was only in this context that our hon. Member Thiru A. Subramaniam was trying to bring in the case of India Meters. It is not irrelevant at all according to me. India Meters is a concern, an undertaking that was in need of relief. I want to know whether Government is justified in trying to give this relief so late. It is in this context that the hon. Member Thiru A. Subramaniam was expressing his view. I think the Hon. Minister had failed in his duty of keeping up the promise that he had given six months ago that he would appoint a Committee of three persons to go into the pros and cons of this concern and find out whether the undertaking should be brought under the purview of government relief or not.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Relief has been extended to this undertaking for one more year.

DR. H. V. HANDE : When? When that particular industry has not delivered the goods, when it has not utilised the relief, the next step is, that the Government should take over the industry. At least that particular assurance the Hon. Minister can give us on the floor of the House and see to it that it is taken over by the Government What exactly prevented the three-Member Commission from giving a report to the Hon. Minister? This point the Hon. Minister has to answer because he knows fully well that for the past two or three years nothing has happened in the industry. Depositors have not got the money. Whether any advantage has been derived by the workers concerned, whether they have been rehabilitated? No, even that has not been done.

In fact, a number of workers—I think about 800 workers—are there without protection. They have not got any interim pay also. They are absolutely penniless and they are on the streets. Also the machinery is getting completely rusty. The instruments have been getting spoiled. Within another two or three years the State might lose an amount of about Rs. 4½ crores on account of India Meters. If this has to be prevented, a decision has to be taken whether that industry has to be continued to get relief under the Relief Undertakings Act or it has to be taken over by the Government. I hope and trust that the Hon. Minister without standing on formalities—sophisticated formalities—will come forward in his reply to state categorically whether he is going to take over this industry or not. Thank you.



1975 அக்டோபர் 23]

(திருமதி த. ந. அனந்தநாயகி பேச எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரே கட்சியிலே மூன்றாவது உறுப்பினர் பேசினால் எப்படி சீக்கிரம் பில்லினை முடிப்பது?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இது பில். ஒரு கட்சியிலே ஒருவர்தான் பில்லில் பேசவேண்டுமென்று ஒரு புதுமுறையா? இப்படி எப்பொழுதும் கிடையாதே!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** புது முறையல்ல, மெம்பர்ஸ் கோவாபரேட் செய்ய வேண்டுமென்பதுதான்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பில்லிலே, 5, 6 பேர்தான் பேசுகிறோம். அதைக்கூடப் பேசவிடாமல், 70 பில்லைக் கொண்டு வந்து பாஸ் செய்யுங்கள். என்ன நோக்கம், அதனை நிறைவேற்று வதால் உள்ள கஷ்டங்கள் என்ன, அதன் நன்மை, தீமை என்ன என்று யாருக்குத் தெரியப்போகிறது? மசோதாக்களைப் பற்றி நாங்கள் பேசவேண்டுமென்று சொல்லும்போது, அரசாங்கம் அதனைப் புரிந்துகொண்டு, தெரிந்துகொண்டு கொண்டு வந்தால் பரவாயில்லை. வேண்டுமானால் லா டிபார்ட்மெண்ட் பில்களை யெல்லாம் அச்சிட்டு கொடுக்கட்டும், நீங்கள் பாஸ் பண்ணுங்கள், நாங்கள் பேசாமலிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசக் கூடாது என்று சொல்லவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எல்லா மெம்பர்களும் பேசு கிறார்களா? 4, 5 பேர்கள்தான் பேசுகிறார்கள்.

MR. DEPUTY SPEAKER: The hon. Member should be considerate and co-operative.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I want the Chair to be considerate and co-operative because the will of the Legislature must be known. The hon. Deputy Speaker is himself a lawyer. He knows that hardly two or three members speak on a Bill. If he wants to curb even that right of the members, I am prepared to sit down.

[1975 அக்டோபர் 23

MR. DEPUTY SPEAKER: I am not going to curb the right of the hon. Members to speak, but they should be considerate and co-operative. Let the hon. Members be brief.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: We are giving maximum co-operation. We cannot do anything still more.

இந்த ரிலீஃப் அண்டர்டேக்கிங் மசோதாவைப்பற்றி பேசும்போது, இந்தக் கொள்கையையே இந்த அரசு மாற்றிக் கொள்ள வேண்டுமென்று நாங்கள் ஆசைப்படுகிறோம். இந்த ரிலீஃப் அண்டர்டேக்கிங் என்பதே, சாமானியர்களிடம் இருக்கிற பணத்தை எடுத்து, பணக்காரர்களுக்கு, அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு உதவி செய்யத்தான் என்ற கொள்கையை அரசு வைத்திருக்கிறது. ஏற்கனவே நிறையப் பணத்தைச் சம்பாதித்து, நோயாளி தொழிற்சாலை என்று காண்பிக்கிறாயா, இந்தா உனக்கு அரசாங்கப் பணம், என்று அரசாங்கப் பணத்தை மேன்மேலும் கொடுத்து, நாங்கள் பக்க பலமாக இருக்கிறோம் என்று அவர்களிடம் சொல்கிறீர்கள். இதனால் பல விருப்புவெறுப்புகளுக்கு ஆளாகிறீர்கள். பணக்காரர்களுக்குப் பக்கத் துணையாக இருப்பதாகும் இது. இதனால், இருக்கிற பணமும் பாழ்படும் என்பதை முதலிலே அரசு தெரிந்து கொள்ள வேண்டுமென்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

ஏற்கனவே 5 வருஷம் என்று இருப்பதை 8 வருஷம் என்று ஏன் நீடிக்க வேண்டும்? ஐந்து வருஷத்திலே அந்த நோயாளித் தொழில்கள் தங்களைச் சீர்படுத்திக் கொள்ளமுடியவில்லையென்றால் 8 வருஷத்திலே எப்படி தங்கள் நிலையை உயர்த்துவார்கள் என்பது எங்களுக்குப் புரியவில்லை. ஆகவே, நோயாளித் தொழில்களுக்குப் பணத்தை மேன்மேலும் கொடுத்து, அவர்கள் தங்கள் சொந்த நலன்களுக்குப் பயன்படுத்த விடுவதைக் காட்டிலும் நேரடியாக அரசாங்கம் எடுத்துக்கொள்வதுதான் நல்லது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியா மீட்டர்ஸை எடுத்துக் கொள்ளுங்கள். அந்த மீட்டர்களுக்கு மார்க்கெட் இல்லையா? அவைகளின் திறன் குறைவாக இருக்கிறதா? எல்லாம் இருந்தும் அந்த நிறுவனம் நாம் கொடுக்கக்கூடிய அரசாங்கப் பணத்தையும் எடுத்துக்கொண்டு, மற்ற எல்லா வசதிகளையும் பெற்றுக்கொண்டு, அனாவசியமாகச் செலவு செய்து, அந்தத் தொழிலிலே நஷ்டத்தை ஏற்படுத்தி, பல



1975 அக்டோபர் 23] [திருமதி த. ந. அனந்தநாயகி]

தொழிலாளிகளுக்கு, 7, 8 மாதங்களாகச் சம்பளம் இல்லாமல், சப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ்கூட அளிக்காமல் இன்றைக்கு நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முதலாளிகளுக்கு மேலும் 3 வருஷம் சலுகை கொடுப்பது அவசியமா? அதைச் சாமானியர்களுக்காகச் செய்கிறார்களா? தொழிற்சாலையை வளர்க்கச் செய்கிறார்களா? அல்லது முதலாளிகளுக்குப் பக்கபலமாக இருக்கச் செய்கிறீர்களா என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே, இந்தச் சட்டத்தை எடுத்துவிடுங்கள். ஒன்று நாஷனலைஸ் செய்யுங்கள். அல்லது அவர்களே நடத்தட்டும். அவர்கள் மேன்மேலும் அந்தப் பணத்தையும் அனுபவித்துக் கொண்டு, என்ன செய்கிறார்கள்? 14 மாதங்களாகியும் இந்தியா மீட்டர்ஸ் பிரச்னை தீரவில்லை. இதை தொழில் அமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்திலே பேசும்போது, இன்னும் 7 நாட்களில், 10 நாட்களில் அந்தப் பிரச்னையைத் தீர்த்துவிடுவோம் என்று சொன்னார்கள். ஏழு மாதங்களாகியும் பிரச்னை எங்கேயிருக்கிறது என்பதே தெரியவில்லை. தொழிலாளர் பிரச்னையில், தொழில் பிரச்னையில், தீர்த்து வைக்க சக்தி இல்லாதவர்கள் தொழில் நிறுவனங்களுக்கு ரிலீஃப் கொடுக்க வேண்டியது அவசியமா? அதை இந்த அரசு உடனே நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இந்தச் சபையின் முன்னாலிருக்கிற இந்தத் திருத்த மசோதா simple amendment. அதற்கு இவ்வளவு காரசாரமான விவாதம் தேவையில்லையென்று கருதுகிறேன்.

*Section* 3.—Declaration of relief undertaking—reads thus:

"The Government may, if satisfied that it is necessary or expedient so to do in the public interest, with a view to enabling the continued running or restarting of a State industrial undertaking as a measure of preventing or of providing relief against, unemployment, declare, by notification, that the State industrial undertaking shall, with effect on and from such date and for such period as may be specified in the notification, be a relief undertaking:

Provided that the period so specified shall not, in the first instance, exceed one year but may, by a like notification, be extended from time to time, by any period not exceeding one year at any one time, so however that no notification issued under this section shall in any case remain in force for more than five years in the aggregate."

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1975 அக்டோபர் 23

மொத்தமாக, 5 ஆண்டுக்கு அதற்கு நிவாரணம் கொடுப்பது. மொத்தமாக, ஒரேயடியாகக் கொடுப்பது அல்ல. ஆண்டுதோறும் பரிசீலிக்கப்பட்டு அந்த நிறுவனத்திற்கு ரிலீஃப் தேவையென்று கருதினால். அரசாங்கம் 5 ஆண்டு வரை கொடுக்கலாம் என்பது இப்பொழுது இருக்கிற சட்டம். இந்த 5 ஆண்டை எடுத்துவிட்டு 8 ஆண்டு என்று இப்பொழுது திருத்தம் கொண்டு வரப்படுகிறது. அந்த 8 ஆண்டு என்பதும் ஆண்டுதோறும் கவனிக்கப்பட்டு ரிலீஃப் தேவையானால்தான் கொடுக்கிறோமே தவிர, ரிலீஃப் தேவையில்லையென்றால் கொடுக்கமாட்டோம். தொழிலாளிகளுக்காகத்தான் கொண்டு வரப்படுகிறதே தவிர, முதலாளிகளின் சார்பாக அல்ல. இந்தச் சட்டம் அவசியம் என்று கருதித்தான் கொண்டு வந்திருக்கிறோம். தனிப்பட்ட ஒரு நிறுவனத்திற்கென்று கொண்டு வந்திருக்கலாமே என்று சொன்னார்கள். பொதுவாக, இதுபோன்ற ஒரு நெருக்கடி ஏற்படும்போது, நிறுவனங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நிலை ஏற்படும்போது இந்தக் காலவரையறையை நீட்டிக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் 8 ஆண்டு என்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே இது அவசியமான மசோதா.

மசோதாவுக்குப் புறம்பான இந்தியா மீட்டர்ஸ் பற்றிப் பேசினார்கள். திரு. சுப்பிரமணியம் சொன்னார்கள், ரிலீஃப் அண்டர் டேக்கிங் பற்றி. ரிலீஃபை எக்ஸ்டென்ட் செய்யாவிட்டால், கடன்காரர்கள் எல்லாம் சூட் ஃபைல் பண்ணி நிறுவனத்தை மூடி விடுவார்கள். ஆகவே, ரிவைவ்வே பண்ண முடியாமல் போய்விடும். இப்பொழுது கூட 19—9—1975-லிருந்து 20—9—1976 வரை அந்நிறுவனத்தை ரிலீஃப் அண்டர்டேக்கிங்காக நோட்டிஃபை செய்திருக்கிறோம். இந்தியா மீட்டர்ஸை ரிவைவ் பண்ண எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன. அது உறுப்பினர்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். கன்சல்டேட்டிவ் கமிட்டி ரிப்போர்ட்டில், அதனை எடுத்துக்கொள்வது மோஸ்ட் அன்எக்க னாமிக்கல் என்று. கடுமையாக இருக்கிறது. நம்முடைய உறுப் பினர்கள் சொன்னபிறகு அதைப்பற்றி மீண்டும் பரிசீலிக்கப்பட் டிருக்கிறது. பல்வேறு கட்டங்களில் இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளர் நல அமைச்சரும் நானும் சேர்ந்து பல வேளைகளில் அதைப்பற்றிப் பரிசீலித்திருக்கிறோம். தொழிலாளர்களுக்கு உதவிகளை வாங்கிக் கொடுத்திருக்கிறோம்.



1975 அக்டோபர் 23] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

லை ஆஃப் காம்பன்சேஷன் கொடுக்காமலிருந்தார்கள். சென்டிரல் பாங்க் ஆஃப் இந்தியாவிடமிருந்து 2 மாதத்திற்கான அந்தப் பணத்தை நாம் வாங்கிக் கொடுத்தோம். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கு எழுதினோம். அந்த நிறுவனத்தை டேக் ஓவர் செய்ய மத்திய அரசாங்கத்திற்கு எழுதினோம். அவர்களோடு எந்த முடிவும் ஏற்படவில்லை. சமீபகாலத்திலே, திருச்சி பாரத் ஹெவி எலெக் டிரிகெல்ஸ் நிறுவனம் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த நிறுவனம் எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இந்தியா மீட்டர்ஸைப் பொறுத்தவரையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: உடனடியாக, நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லையென்றால் என்னவாகும்? அங்குள்ள இன்ஸ்ட்ருமென்ட்ஸ் எல்லாம் கெட்டுவிடும். ஒரு வருஷத்திற்கு ஒன்றரை வருஷத்திற்குப் பிறகு நீங்கள் அதிலே தலையிட்டால் நஷ்டம் ஜாஸ்தியாகும்.

Whatever action you take. it is better that it is taken immediately. Otherwise, the whole industry will collapse. That is why, I want to know whether it is not possible for the Government to come to some agreement with Bharath Heavy Electricals immediately and do something about it, before all the instruments get spoiled?

திரு. பெ. சீனிவாசன்: இந்தியா மீட்டர்ஸ் விவகாரத்தில் இன்னொரு ரைவல் கம்பெனி எப்படியும் இந்தியா மீட்டர்ஸை இயங்க விடக் கூடாது என்று திட்டமிட்டு சதி செய்வதாகத் தொழிலாளர்கள் சொல்கிறார்களே, அதைக் குறித்து அமைச்ச ரவர்கள் ஏதாவது விசாரித்தார்களா? அதைத் தடுப்பதற்கு மத்திய சர்க்காரிடம் ஏதாவது ஆலோசனை கோரப்பட்டதா?

(பிற்பகல் 12.30)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த நிறுவனத் தையும் மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எழுதி யிருக்கிறோமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. நேச்சுரலாகவே இன்னொரு கம்பெனி போட்டிக்கு வரத்தான் செய்யும், அதையும்

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1975 அக்டோபர் 23

மீறி நாம் இதை நடத்த வேண்டுமென்ற முறையிலேதான் செய்கிறோம். ஏற்கனவே ஒரு கமிட்டி இதற்காகப் போட்டோம், அவர்கள் சாத்தியமில்லை என்று அறிக்கை கொடுத்துவிட்டார்கள். Technical Opinion was against the revival of this industry. பிறகு அதையும் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்ற முறையிலே நாம் அரசாங்க அதிகாரிகளைப் போட்டு கமிட்டி அமைத்து பரிசீலிக்கச் சொன்னோம். அதற்குப் பிறகு பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் முன்வந்திருக்கிறது. நாம் சில குறிப்புகளைக் கொடுத்திருக்கிறோம்.

They had agreed to make quick assessment of the Unit after the inspection and meeting certain points.

என்ற முறையில் தெரிவித்திருக்கிறார்கள். அவசர நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறார்கள். நாமும் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது இருக்கிற பில் ஏற்கனவே 5 ஆண்டுகளுக்கு என்று இருந்ததை 8 ஆண்டுகளுக்கு என்று ஆக்குகிறோம். ஆகவே, இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

*Clause* 2

MR. DEPUTY SPEAKER: The question is: "That clause 2 do stand part of the Bill."

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I move—'That in clause 2, for the words, "eight years" substitute the words, "six years"'.

THIRU A. R. MARIMUTHU: I second the amendment.



[1975 அக்டோபர் 23

*THIRU K. M. SUBRAMANIAM: Sir, I press my amendment and give my reasons for the same. I think it is a very serious affair to extend the period from 5 years to 8 years. It is a very long time. I want this to be reduced to 6 years. Afterwards, it must be definitely taken over by the Government. Even then if the unit is not able to work profitably, then it has to be closed down. There is good demand for meters. India Meters is an useful institution. Nobody can believe that there is no demand for the meters. The cost of meters is sky-high. In spite of that, there is good demand. Therefore, the relief cannot be for 8 years. Even the relieving Station Masters at the Stations are there only for 28 days or 30 days. Here the relief given is for 8 years. I know fully well that my amendment will be lost. Still I am pressing my amendment.

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே,**

"தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு நிறை வேற்றப்பட வேண்டும்"

என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ஊ) 1975 ஆம் ஆண்டு, மோட்டார் போக்குவரத்துப் பணியாளர்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே,**

"1975 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துப் பணியாளர்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை* அறிமுகம் செய்து அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

---

* 16—10—1975-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. க. இராசாராம்] [1975 அக்டோபர் 23

சிறுவர்கள் உடல் நலனையும் கல்வியையும் பாதுகாக்க வேண்டியதைக் கருதிப் பார்த்து சாதாரணத் தொழில்களில் அவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான குறைந்த அளவு வயது வரம்பை 16 ஆண்டுகளாக உயர்த்துவது விரும்பத்தக்கதாகும் என்று உலக நாடுகள் தொழிலாளர் நல நிறுவனம் பரிவுரை செய்தது.

இப்பரிவுரை மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவில் முன்னர் வைக்கப்பட்டது. சாதாரணத் தொழில்களில் . வேலையில் அமர்த்துவதற்கான குறைந்த அளவு வயது வரம்பை 16 ஆண்டுகளாக உயர்த்துவதற்கு 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 27/1961) 2-வது பிரிவு திருத்தப்படலாம் என்று குழு கருத்துத் தெரிவித்தது.

1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 27/1961) கீழ் வேலையில் அமர்த்துவதற்கான குறைந்த அளவு வயது வரம்பு தற்போது 15 ஆண்டுகளாக உள்ளது. எனவே, மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவின் பரிவுரையை எடுத்துக்கொள்ளவும், 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 27/1961) 2-வது பிரிவை தகுந்தவாறு திருத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. உத்தேசத் திருத்தத்தைச் செய்வதில் மாநில அரசின் செயற்குறிப்புக்கு தனக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.

இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது. இப்பிரச்சினையை ஏற்றுக்கொள்ளுமாறு இம்மன்றத்தை நான் வேண்டிக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** உதவி சபாநாயகர் அவர்களே, ஒன்றரை மணி வரை நேரம் இருக்கிறது, அவசரப்படாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அவசரப்படவில்லை.

***திருமதி த. ந. அனந்தநாயகி:** இந்தச் சட்டம் ரொம்பவும் வரவேற்கத்தக்கது. 15 வயதை 16 வயதாக உயர்த்தக்கூடிய முறையிலே மோட்டார் போக்குவரத்துப் பணியாளர்களுக்காக அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தத் திருத்தத்தை மோட்டார் போக்குவரத்துப் பணியாளர்களுக்காக மாத்திரம் கொண்டுவந்ததோடு நிறுத்திவிடக்கூடாது. குறிப்பாக



1975 அக்டோபர் 23] [திருமதி த. ந. அனந்தநாயகி]

தமிழகத்திலே சைல்ட் லேபர் அதிகமாக இருக்கிறது, அது எவ்வளவு தூரம் தடுக்கப்பட்டிருக்கிறது? இதையெல்லாம் அவரே தொழிலாளர் நல அமைச்சர், பல நிறுவனங்களிலே பல ஹோட்டல்களிலே 7, 8 வயது பிள்ளைகள் பணியாற்றுவதைப் பார்த்திருப்பார்கள். பாவம்! அவல நிலைமையால் அப்படிப் பணியாற்றுகிறார்கள். ஆகவே, எந்த நல்ல எண்ணத்தோடு மோட்டார் தொழில் பணியாளர்களுக்காகக் கொண்டு வருகிறோமோ அதைப் போன்று மற்றத் தொழில்களைப் பொறுத்தவரையிலுங்கூட இந்த முறையினைக் கொண்டுவர வேண்டும்.

தலைமைச் செயலகத்தை எடுத்துக்கொண்டாலே ஹோட்டல்களில் 12, 13 வயதுப் பிள்ளைகள் பணியாற்றுவதைப் பார்க்கிறோம், இப்படிச் சட்டங்கள் போடுவதால் மட்டும் அமல் நடத்திவிட முடியாது. இதையெல்லாம் அமல் நடத்தக்கூடிய ஸ்டாப் இருக்கிறதா என்றால் இல்லை, இந்தச் சட்டம் வந்த பிறகு மோட்டார் தொழிலுக்கு வேலைக்கு வந்தால் 15 வயது என்றால் வேலை இல்லை போ, 16 வயது என்றால்தான் எடுத்துக் கொள்வோம் என்று சொல்லி விடலாம். ஆனால், மற்ற தொழில்களைப்பற்றி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதையும் எடுக்க வேண்டும்.

கல்விச் சலுகைகளைப் பொறுத்தவரையில் 15 வயது என்பதை 16 என்று உயர்த்தக்கூடிய நேரத்திலே 16 வயதுக்குள்ளே இருக்கிறவர்கள் கட்டாயக் கல்வி முறையில் படிக்க வேண்டுமென்று இருக்கிறது, உள்ள நிலைமையைப் பார்த்தால் கல்வியமைச்சர்தான் சொல்லவேண்டும், எல்லோரும் 15, 16 வரை பள்ளிக்கூடங்கள் செல்கிறார்கள், அதற்குப் பிறகு பார்த்தால் நிறைய டிராப் அவுட்ஸ் இருக்கின்றன, நான் இதை ஏன் சொல்கின்றேன் என்றால் மோட்டார் தொழிலுக்குக் கொண்டு வந்ததைப் பாராட்டுகிறோம், அதைப்போன்று மற்றத் தொழில்களுக்கும் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அமல் நடத்துவதற்கு பேக்டரி இன்ஸ்பெக்டர்கள் மற்றவர்கள் எல்லாம் ரொம்பக் குறைவு, சைல்ட் லேபர் அநேக தொழில்களில் இருக்கிறது, வறுமையின் கடுமையின் காரணமாக 7 வயது, 8 வயது உள்ளவர்கள் எல்லாம்கூட துணிக் கடைக்கு, வெற்றிலை பாக்குக் கடைக்கு பெற்றோர்களால் அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் 8 அணாவுக்கு, 1 ரூபாய்க்கு வேலை செய்யக் கூடிய அவல நிலைமை இருக்கிறது, சிறு வயதுப் பிள்ளைகளைத் தொழிற்சாலைக்கு அனுப்புகிறார்கள், இதையெல்லாம் தடுக்கவேண்டுமென்று கேட்டு இந்த மசோதாவை ஆதரித்து முடிக்கிறேன்.

[1975 அக்டோபர் 23

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, அவையின் முன் இருக்கும் மசோதாவின்மீது சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சட்டமானது பொதுவாக வரவேற்கத்தக்கதுதான். இப்போது அமல் நடத்தப்படுகிற முறைகளைப் பார்க்கிறபோது அதிகாரிகள் செம்மையாக அமல் நடத்தவில்லை என்ற குறையிருக்கிறது. 16 வயது வரையிலும் பள்ளிக்கூடங்களுக்குச் செல்ல வேண்டிய காலம். இன்றைய தினம் அதிகமாக அந்த வயதிற்குக் கீழே உள்ளவர்கள் வேலைக்குச் செல்கின்ற நிலைமை இருக்கிறது. நம்முடைய அம்மையார் அவர்கள் முன்னால் சொல்லியதைப்போல் கட்டாய ஆரம்பக் கல்வி வேறு இருக்கிறது, 16 வயது வரையில் பள்ளிக்குச் செல்லவேண்டிய நிலைமை இருந்தாலும் இந்தச் சட்டம் ஒழுங்காக அமல்படுத்தப்படாததன் காரணமாக பல்வேறு நிறுவனங்களுக்கு 16 வயதுக்குக் கீழ் உள்ளவர்கள் எல்லாம் செல்கிறார்கள். இந்த நிலையில் ஸ்ட்ரெஸ்த் இல்லாமல் பல்வேறு பள்ளிக்கூடங்கள் நடத்தமுடியாத நிலைமை வேறு இருக்கிறது.

எங்கள் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் முந்திரிப் பருப்பு ஆலையில் வயது வராத இளைஞர்கள் பணியாற்றுகிறார்கள், பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாமல் வயிற்றுப் பிழைப்புக்காக வாழ்க்கை நடத்த முடியாத அளவிற்கு ஏற்பட்ட சூழ்நிலையில் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அதனால் பள்ளிக்கூடத்திற்குச் செல்லாமல் தொழிற்சாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. ஆகவே, அதற்கு இந்த அரசு ஏதாவது மாற்று வழிகளைத் தேடவேண்டிய அவசியம் இருக்கிறது. ஒருவேளை பள்ளிக்குச் சென்றுவிட்டு மீதி சமயங்களில் அந்த ஆலைகளுக்குச் செல்ல அரசாங்கம் வழி செய்யலாம் அல்லது வேறுவிதமான முறைகளை வகுத்துக் கொடுக்கலாம். அம்மாதிரி முறைகளை ஏற்படுத்திக் கொடுத்தால் நிச்சயமாக இந்த இளைஞர்கள் வருங்காலத்தில் பாதிக்கப்படாத முறையில் கல்வியைக் கற்று அவர்களது பொருளாதார நிலைமையில் எந்த அளவிற்குப் பட்டிருக்கிஊருருருயுருருயுயுயுகிகிகியுகிகி றய்ணருய் லுஞலஜஸ் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அந்த அளவிற்குத் தொழிற்சாலைகளுக்குச் சென்று தங்கள் ஜீவனத்திற்கான வழிவகைகளைக்



1975 அக்டோபர் 23] [திரு. ஜே. ஜேம்ஸ்]

காண்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும். அதற்கு இந்த அரசு ஆலோசனைகள் செய்ய வேண்டுமென்ற கருத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அரசுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் தொழிற்சாலைகளில், இளைஞர்கள், வயது வராத சிறுவர்களை ஏன் அமர்த்துகிறார்கள் என்றால், அவர்களுக்கு நியாயமான கூலியைக் கொடுக்காமல் தப்பித்துக் கொள்வதற்கான வசதியும் இருக்கிறது. நான் ஏற்கனவே கூறியதைப் போல இந்தச் சட்டங்களை அமல்படுத்தும் அதிகாரிகள் அதிக அக்கறை செலுத்தாத முறை நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இளைஞர்கள் வேலைக்குச் சென்றாலும் சட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியத்தை, வேலைக்குத் தகுந்த ஊதியத்தைக் கொடுக்கும் முறையிலும், மற்றச் சலுகைகளை அளிக்கும் முறையிலும் நிர்ப்பந்தமான சூழ்நிலைகளை இந்த அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவை நான் வரவேற்று அமர்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, இந்தத் திருத்தம் எந்த அளவிற்குத் தேவை என்பதை இங்கே பேசிய காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்கள்—இரண்டு காங்கிரஸ் கட்சிகளையும் சேர்ந்தவர்கள்—சொன்னார்கள். (குறுக்கீடு) இது ஒரு பெரிய கருத்தல்ல, ஒரே கருத்தைச் சொன்னார்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்குப் பெரிய கருத்து அல்ல. சட்டப்படி இது சரியான மசோதாவாக இருந்தாலும் நடைமுறையில் செயல்படுத்துவதில் எந்த அளவிற்குச் சிரமங்கள் இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசாங்க பஸ்கள் அல்லது அரசாங்கம் சம்பந்தப்பட்ட இலாக்காக்களில் நீங்கள் இதைச் செயல்படுத்தலாம். ஆனால் தனியார் நிறுவனங்களில் நிச்சயமாக இந்தச் சட்டம் தீண்ட முடியாது. எங்கள் வட்டாரத்தில் சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி, கழுகுமலை போன்ற இடங்களில் தீப்பெட்டி செய்யும் தொழில் நடக்கிறது. நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் தயவு செய்து அங்கே ஒருமுறை வரவேண்டும். அங்கே வந்து தொழிற்சாலைகளுக்கு உள்ளேகூடச் செல்ல வேண்டாம். வெளியிலேயிருந்து பார்த்தாலே தெரியும். மாலை 5 மணிக்கு பெரிய பஸ் வரும். அந்த பஸ்களில் ஐந்து வயது, 10 வயது, 11 வயதுக்குக் கீழ்ப்பட்ட

[திரு. பெ. சீனிவாசன்] [1975 அக்டோபர் 23

குழந்தைகள் நூற்றுக்கு மேல் வருகிறார்கள். இவர்கள் தீப்பெட்டி
ஆபீஸ்களில் வேலை செய்கிறவர்கள். அவர்களுக்கு பள்ளிக்கூடம்
செல்வதற்கு நேரமில்லை. சட்டப்படி பார்த்தால் அது மிகப் பெரிய
கொடூரம். அது எந்த ஃபேக்டரி ஆக்டிலும் உடன்படாது.
ஃபேக்டரி இன்ஸ்பெக்டர்கள் போகிறார்கள், செக்கப் செய்கிறார்கள்,
ஏதோ சரிக்கட்டி சட்டத்தைச் சரிவர செயல் நடத்தாமல் வந்து
விடுகிறார்கள். ஆனால், சட்டத்தின் மூலம் மட்டும் இதை நிறை
வேற்ற முடியும் என்று நம்பவில்லை.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், இப்படிக்
குழந்தைகளை தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலே வேலைக்கு
அனுமதிக்கிறார்கள் என்று எங்கள் வட்டாரத்திலே பேசினால் அந்த
வட்டாரத்திலே நாங்கள் ஒரு ஓட்டுக்கூட வாங்க முடியாது. எந்தச்
சட்டத்தைக் கொண்டு வந்தாலும் அந்த வட்டாரத்திலுள்ள ஏழை
மக்கள் நிச்சயமாக அதை ஏற்கமாட்டார்கள். காரணம்,
நான்கைந்து குழந்தைகளுக்கு மேலிருந்தால் ஒரு குடும்பத்திற்கு
10 ரூபாய் 12 ரூபாய் வருமானம் வருகிறது. இந்தச் சட்டத்தை
அமல்படுத்த விரும்பும் நேரத்தில் அந்தக் குழந்தைகள் பகுதி
நேரம் வேலைக்குச் சென்றாலும், மிகுதி நேரத்தில் கொஞ்ச நேரம்
அவர்களுக்குக் கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டுமென்று—
சம்பந்தப்பட்ட அந்தத் தொழிற்சாலைகள் கட்டாயம் அவர்
களுக்குக் கல்வி வழங்க வேண்டும் என்று எதிர்காலத்திலே ஒரு
திருத்தம் கொண்டு வருவதற்கு தொழிலாளர் நல அமைச்சர
வர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அம்மையார் அவர்கள் பேசி
னார்கள், இப்படி நாம் ஆயிரக்கணக்கான சட்டங்களையும், திருத்தங்
களையும் கொண்டு வருகிறோமே தவிர ஐந்து வயது அல்லது எட்டு
வயதுக் குழந்தைகள் ஹோட்டல்களில் வேலை செய்வதைப்பற்றிக்
கவலைப்படவில்லையே என்று குறிப்பிட்டார்கள். ஆயிரக்கணக்
கான பேர்களை நாம் பார்க்கிறோம். நாள் தவறாமல் பார்க்கிறோம்,
பால் வடியும் முகத்தைக் கொண்ட சிறுவர்கள் டேபிள் கிளீன்
செய்கிறார்கள், எச்சில் இலைகளை எடுக்கிறார்கள். அதனை பழகிய
காட்சியாக மறந்து விடுகிறோமே தவிர அதைப்பற்றித் தீவிரமாக
எந்தவிதமான பரிகாரத்தையும் தேடவில்லை. இதில் இங்கே உள்ள



1975 அக்டோபர் 23] [திரு. க. இராசாராம்]

மாநில அரசு மட்டுமல்ல, கிட்டத்தட்ட மத்திய அரசுக்கு இதில் முக்கால்வாசிப் பொறுப்பிருக்கிறது. தற்காலிகமாக இந்தத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன் என்று சொல்லி அமர்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, எல்லா உறுப்பினர் பெருமக்களும் இந்தச் சட்டத்தை ஆதரித்ததற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத் திருத்தம் ஐ.எல்.ஓ.வினுடைய—உலக நாடுகளின்—எண்ணப்படி இங்கே கொண்டு வந்து நிறை வேற்றப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிவகாசி, சாத்தூர் பகுதிகளிலுள்ள நிலைமைப்பற்றிச் சுட்டிக் காட்டினார்கள். அந்த நிலைமைகளை அவர்களேகூட, அங்கேயுள்ள பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை எடுத்துக் காட்டினார்கள். சிலயிடங்களில் மனிதாபிமான பிரச்சினையாகவும், அரசியல்வாதி களுக்கு ஓட்டுரிமைப் பிரச்னையாகவும் ஆகிவிடுவதை அவர்கள் மறக்காமல் சுட்டிக்காட்டியமைக்காக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் ஏற்கனவே நாம் ஹோட்டல்களுக்கு இப்படிப் பட்ட ஒரு சட்டத்தை உணவு விடுதிகளில் குழந்தைகள் வேலை பார்க்கக்கூடாது என்று 'கேட்டரிங் ஆக்ட்' என்று நிறைவேற்றி இருக்கிறோம். இருந்தாலும் சிலயிடங்களில் குறைபாடு இருப்பதாக உறுப்பினர்கள் தங்கள் எண்ணங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் குறைபாட்டை முடிந்த அளவிற்குக் களைவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டங்களை நாம் நிறைவேற்ற வேண்டும். தமிழக அரசைப் பொறுத்தவரையில் இதை எந்த அளவிற்கு வேகமாக நிறைவேற்ற வேண்டுமோ அந்த அளவிற்கு நிறைவேற்றுவதற்கு நாங்கள் பாடுபடுவோம் என்பதை மட்டும் உறுதியளிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குழந்தைகளின் வயதைக்கூட, "கேட்டரிங் எஸ்டாபிலிஷ்மெண்ட் ஆக்டில்" 14 ஆக இருந்ததை 16 ஆக மாற்றியிருக்கிறோம். இது பற்றிச் சட்டமன்றத்திலே மசோதா நிறைவேற்றியதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: நீங்கள் கொண்டு வந்த சட்டத்தை சென்னையிலேயே அமல்படுத்த முடியவில்லை. எந்த ஹோட்டலிலேயும் 10 வயது, 8 வயது பையன்கள் டேபிள் க்ளீன் செய்யும் வேலையைச் செய்கிறார்கள். எனவே, அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாது என்று சட்டம் போடுவதைவிட, அவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளலாம் என்று சட்டத்தைப் போட்டு அவர்களுக்கு பகுதி நேரக் கல்வியை அந்த ஹோட்டல்களே தங்கள் சொந்தப் பொறுப்பிலே மாலை நேரப் பள்ளியை ஆரம்பித்து அம்மாதிரி செய்யலாம். இப்படி அவர்களை வைத்துக்கொள்ளக் கூடாது ... என்று சட்டம் போடுவதால் அவர்கள் திருட்டுத்தனமாக வேலைக்கு வருகிறார்கள். இதிலுள்ள பரிதாபம் என்னவென்றால், ஹோட்டல்களிலே விழுகின்ற இலைகளில் இருக்கின்ற மிச்சம்தான் அவர்களது சம்பளம். 'பே ரோலில்' அவர்களது பெயர் கிடையாது, எந்த யூனியனிலும் அவர்கள் சேர முடியாது, டிமாண்ட் செய்ய முடியாது. 'இல்லீகலாக' நடக்கிறது. நீங்கள் போடும் சட்டத்தையே ஹோட்டல் உரிமையாளர்கள் சாதகமாக, 'ஷீல்ட்'-ஆகப் பயன்படுத்திக்கொண்டு செய்கிறார்கள். எட்டு வயதுப் பையன்கள் எந்தக் கோர்ட்டுக்குப் போக முடியும்? முடியாது. சட்டப்படி அவர்கள் வேலை பார்ப்பதாகக் கருத முடியாது. எனவே, இருக்கின்ற நிலைமைகளைச் சட்டப்படி ஆக்கினாலும் பரவாயில்லை. ஆனால் இப்படிப்பட்ட பயங்கரத்தைக் குறைப்பதற்காகவேனும் சில சலுகைகளை வழங்குவதற்கு முன் வரவேண்டும். இதை அமைச்சரவர்கள் பரிசீலித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, குழந்தைகள் தொழிலாளர்களாக, வேலையாட்களாக நடத்தப்படுகிறார்கள், அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்பதற்கான முயற்சிகளை வளர்ந்திருக்கும் நாடுகள் எடுத்துக்கொண்டு வருகின்றன. நாமும் வளர்ந்து வரும் நாடாக இருப்பதால் சட்டங்களின் மூலம் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டிய கட்டாய கட்டத்தில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் சிக்கல்கள் இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதைத் திருத்தி





சட்டத்தை நடைமுறைப்படுத்த நாங்கள் பாடுபடுவோம் என்பதை மட்டும் தெரிவித்துக்கொண்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். பலயிடங்களில் அமல் நடத்தப்பட முடியாத நிலை.

திரு. பெ. சீனிவாசன்: அமல் நடத்தக் கூடாது . . .

*திருமதி த. ந. அனந்தநாயகி: அமல் நடத்த முடியவில்லையென்றால் அதற்கான பரிகாரம் என்ன? சட்டத்தை புத்தகத்தில் ஏற்றுவது பெரிதல்ல. அதை அமல் நடத்த முடியவில்லை என்றால் அதற்கான ஆல்டர்நேட்டிவ் என்ன என்று யோசிக்க வேண்டும். அவர்கள் சொன்னது மாதிரி ஹோட்டல் எஸ்டாபிலிஷ்மெண்ட், புரொப்ரைட்டர்களே படிப்பு கொடுப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நீங்களே இன்ஸ்பெக்ஷன் ஸ்டாப்களின் கீழேயே அதற்காக சர்வீஸ் ஹோம்களை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். முடியவில்லையென்றால், வெறும் சட்டத்தை மட்டும் வைத்திருப்பதால் என்ன லாபம்? சைல்ட் லேபரை வைத்து எக்ஸ்ட்ராக்ட் செய்வது பாவம். சட்டத்தைப் போடுவதால் மட்டும் பிரயோசனம் இல்லை என்பதை அரசு உணர வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சூழ்நிலைகள் இப்பொழுது சாத்தூர், சிவகாசி வட்டாரங்களில் நடந்து கொண்டிருக்கின்றது. நான்கு கோடி ரூபாய்க்கு பட்டாசுகளை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான சூழ்நிலைகள் இருக்கின்றன. நான்கு கோடி ரூபாய் வந்துவிட்டால் அந்த ஊர் தாங்காது. தொழிலாளர்களுக்கு நிறையக் கூலி வாங்கிக் கொடுக்க அரசு முயற்சி செய்யும். பெரியவர்களுக்கு கூலி நிறையக் கிடைத்துவிட்டால் அவர்கள் தங்கள் குழந்தைகளை வேலைக்கு அனுப்பும் எண்ணத்திலிருந்து மாறி குழந்தைகளின் நல்வாழ்வுக்கான முறையில் அவர்களை வளர்க்க வேண்டுமென்ற எண்ணம் அந்த வட்டாரத்திலுள்ள மக்களுக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, அந்த வகையில் குழந்தைகளுக்கு ஏற்படுகிற தொல்லைகளை நீக்குவதற்கு இந்தச் சட்டம் இன்றைக்குப் பாதுகாப்பாக அமையும் என்ற எண்ணத்தில் இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** சிவகாசியைப் பொறுத்தவரை தனிக் கவனம் செலுத்த வேண்டும். வெடி மருந்து தயாரிக்கும் இடத்தில் பட்டாசுகளைச் செய்யும் தொழிற்சாலையில் பட்டாசு செய்தல், தீக்குச்சிக்கு மருந்து சுற்றுவது போன்ற வேலைகளைச் சிறுவர்கள் செய்தால்தான் நன்றாக இருக்கிறது என்று சொல்லப் படுகிறது. ஆனால் அந்தச் சிறுவர்களின் பெயர்கள் 'பே ரோலில்' இருப்பதில்லை. அந்த வெடி மருந்து கிடங்கில் பத்துப் பதினைந்து சிறுவர்கள் கருகிச் செத்ததாகக் கூடத் தகவல் வந்திருக்கிறது. ஏதோ அங்கே இருக்கிறவர்களின் தலையிட்டால் ஓரளவு காம்பன் சேஷன் கொடுத்திருக்கிறார்களே தவிர, அதை நிரூபிக்க முடிய வில்லை. 'ஆன் ரெக்கார்டு' எதுவும் இல்லை. 'யு அட்மிட் தட் ஈவில்' அவர்களுக்குச் சம்பளம் கொடுத்தால்கூடப் பரவாயில்லை. அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்து தொழிற்சங்கத் தலைவர்களுடன் இது குறித்துப் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** சிவகாசி எனக்கு நன்றாகத் தெரிந்த ஊர். பல முறை போயிருக்கிறேன். தனிப்பட்ட முறையில் பரிசிலனை செய்யப்பட வேண்டிய நிலைமையில் உள்ள ஊர். சிவகாசி மட்டும் என்ற எண்ணத்தை வைத்துக் கொள்ளாமல் தமிழ்நாடு பூராவும் புதிய சூழ்நிலை உருவாக இந்தச் சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. இண்டர்நேஷனல் லேபர் ஆர்கனி சேஷன்—தொழிலாளர் இயக்கத்திலிருந்து உருவாக்கப்பட்டு மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மாநில அரசின் அங்கிகா ரத்திற்கு வந்திருக்கிறது. அங்கீகரித்தருளும்படி கேட்டுக் கொள் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"1975-ஆம் ஆண்டு, மோட்டார் போக்குவரத்துப் பணியா ளர்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே,

"1975-ஆம் ஆண்டு, மோட்டார் போக்குவரத்துப் பணியா ளர்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (உ) பேரவை அலுவல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 23—10—1975-ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவின்படி சட்டமன்றப் பேரவை நடப்புக் கூட்டத் தொடரின் மாற்றியமைக்கப்பட்ட நிகழ்ச்சி விபரம்.

| | |
|---|---|
| 24—10—1975 வெள்ளிக்கிழமை<br>25—10—1975 சனிக்கிழமை | அரசினர் சட்ட முன்வடிவுகள்<br>1 1975-76-ம் ஆண்டுக்கான முதல் துணை நிதி நிலை அறிக்கையை அளித்தல்.<br>2 1969-70-ம் ஆண்டுக்கான கூடுதல் செல விற்கான மானியங்களை அளித்தல்.<br>3 அரசினர் சட்ட முன்வடிவுகள். |
| 26—10—1975 ஞாயிற்றுக்கிழமை | விடுமுறை |
| 27—10—1975 திங்கட்கிழமை | அரசினர் சட்ட முன்வடிவுகள். |
| 28—10—1975 செவ்வாய்க்கிழமை<br>29—10—1975 புதன்கிழமை<br>30—10—1975 வியாழக்கிழமை | அமைச்சரவையின் கொள்கையை கண்டிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம். |
| 31—10—1975 வெள்ளிக்கிழமை | தனியார் அலுவல்கள். |
| 1—11—1975 சனிக்கிழமை | பேரவை கூட்டம் இல்லை. |

| | |
|---|---|
| 2—11—1975 ஞாயிற்றுக்கிழமை | விடுமுறை. |
| 3—11—1975 திங்கட்கிழமை | பேரவை கூட்டம் இல்லை. |
| 4—11—1975 செவ்வாய்க்கிழமை | 1 1975-76-ம் ஆண்டுக்கான முதல் துணை நிதி அறிக்கையின் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.<br>2 1969-70-ம் ஆண்டுக்கான கூடுதல் செலவிறகான மானியக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு.<br>3 நிதி ஒதுக்க சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். |
| 5—11—1975 புதன்கிழமை | 1 நிதி ஒதுக்க சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.<br>2 அரசினர் சட்ட முன்வடிவுகள் ஏதேனுமிருப்பின்.<br>3 தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1975-76ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீதும், 1974-75—ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம். |
| 6—11—1975 வியாழக்கிழமை (பேரவை மாலையிலும் கூடும்) | தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1975-76—ம் ஆண்டுக்கான் நிதிநிலை அறிக்கையின் மீதும் 1974-75—ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம். |
| 7—11—1975 வெள்ளிக்கிழமை | ஷை |

பேரவை, வழக்கம்போல், காலை 9 மணி முதல் கூடும்.

## (7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (எ) தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு கடன் பெற்றோர் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு.

THE HON. THIRU O. P. RAMAN : Mr. Speaker, Sir, I beg to—
'introduce the Tamil Nadu Indebted Persons (Temporary Relief) Bill* 1975 and move that the Bill be taken into consideration.'

In moving the Bill, I wish to say that by the Tamil Nadu Indebted Agriculturists (Temporary Relief) Act, 1975 (Tamil Nadu Act 10 of 1975), suits for the recovery of debts due from agriculturists and

* Published in the Tamil Nadu Government Gazette Extraordinary, dated 20-10-1975.



applications for the execution of decrees for payment of money passed in any such suit have been barred for the period up to the 15th January 1976. In the prevailing economic conditions, it was considered necessary that similar relief should be granted to indebted persons who are non-agriculturists, not being persons who have been assessed to income-tax for the financial years ending on the 31st March 1974 and the 31st March 1975, or assessed to sales-tax for the financial years ending on the 31st March 1974 and the 31st March 1975, or assessed to property or house-tax in all the four half-years immediately preceding the 1st April 1975 for an annual rental value of not less than two thousand and four hundred rupees.

It was also considered that interest should not accrue during the period commencing on the 22nd July 1975 and ending with the 15th January 1976, in respect of debts and loans due on the 22nd July 1975 from an indebted person, an agriculturist or any person who has pawned a pledge. The debts and loans due on the 22nd July 1975 would mean the debts and loans subsisting on that date whether they were immediately enforceable by the creditors on that date, or otherwise. It was also decided that interest should accrue in respect of any debt or loan obtained after the 22nd July 1975. It was also considered necessary to bar sales of pledges by the pawnbrokers upto the 15th January 1976. The Tamil Nadu Indebted Persons (Temporary Relief) Ordinance, 1975 (Tamil Nadu Ordinance 8 of 1975) and the Tamil Nadu Indebted Persons (Temporary Relief) Amendment Ordinance, 1975 (Tamil Nadu Ordinance 9 of 1975), were promulgated to give effect to the above proposals.

The Bill seeks to replace the said Ordinances. Sir, I request the House to accept the motion.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move—
'That the Tamil Nadu Indebted Persons (Temporary Relief) Bill, 1975, be circulated for the purpose of eliciting public opinion.'

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I second it.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த முக்கியமான சட்ட முன்வடிவிலே பல்வேறு கருத்துக்கள் இந்த மன்றத்திலே வெளியிட இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து எங்கள் கட்சியின் சார்பாக ஒரிரு முக்கியமான கருத்துக்களைக் கூற வேண்டுமென்று நினைக்கிறேன். நலிந்தவர்களுக்கும், குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், சிறிய வருமானம்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1975 அக்டோபர் 23

பெறுகிறவர்களுக்கும், அவர்களுக்குப் போதிய அவகாசம் கொடுக்க, அவர்களுக்கு நல்லதோரு ஏற்பாட்டைச் செய்வதற்கு இந்தச் சட்டமானது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை மனதிலே வைத்துக் கொண்டு இதிலே இருக்கிற பல்வேறு சிக்கல்களைப் பற்றி ஆராயக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

22 ஜூலைக்குப் பிற்பாடு வட்டியை தள்ளிப் போட வேண்டுமென்ற ஒரு ஷரத்து இருக்கிறது. அதிலே குறிப்பாக ஜனவரி 16-ம் தேதி வரை எந்தவிதமான வியாஜ்யங்களும் கோர்ட்டில் போடக் கூடாது என்ற ஷரத்தும் இந்தச் சட்டத்திலே இருக்கிறது. பொதுவாக வழக்கறிஞர்கள் மத்தியிலும், குறிப்பாக அவர்களோடு இணைந்து பணியாற்றுகிற குமாஸ்தாக்கள் இந்தச் சட்டத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குத் தங்கள் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பெருவாரியாக 'மணி சூட்ஸ்'— வியாஜ்யங்கள் கோர்ட்டில் ஸ்டே ஆகியிருக்கும் காரணத்தால் பல்வேறு கோர்ட்டுகளில் வக்கீல்களுக்கு வேலை இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் அவர்களோடு இணைந்து பணியாற்றுகின்ற குமாஸ்தாக்களுக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வரக்கூடாது என்று சொல்வதற்கு நாங்கள் முன்வரவில்லை. வக்கீல் குமாஸ்தாக்களுக்கு ஏற்பட்டிருக்கிற துன்பங்களையும், துயரங்களையும் துடைக்க அரசாங்கத்திலிருந்து அவர்களுக்கு மானியம் கொடுக்கவேண்டும், அல்லது கடனாவது வழங்க வேண்டும். கடன்கள் கொடுக்கிறார்கள் என்றால் அந்தக் கடனைத் தள்ளிப் போட வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. வட்டி என்று அதிகமாகப் பேசிக் கொண்டே இருக்கிறார்கள். வட்டி வாங்குகிறவர்களில் யார் அதிகமாக வாங்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதையெல்லாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். வட்டிக்காகத் தனிச் சட்டம் கொண்டு வந்தால் சிறப்பாக இருக்குமென்ற ஆலோசனையைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வங்கிகள் கொடுக்கிற கடன்களுக்கெல்லாம் விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு வங்கியிலிருந்து கடன் வாங்கினால் 12 சதவிகித வட்டி வாங்க அவர்களுக்கு உரிமை இருக்கிறது. இந்தச் சட்டத்தினால் அப்படிப்பட்டவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் ஏற்படவில்லை என்பதை உணர வேண்டும். இன்று வங்கிகளிலே ஒரு பொருளை அடகு வைத்து விட்டால் அதற்கு



1975 அக்டோபர் 23] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

என்ன வட்டி கொடுக்க வேண்டுமென்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர்கள் அதிகமாக வட்டியை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் 18 சதவிகிதம் வரை வட்டி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதை நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மூன்று மாதத்திற்கு ஒருமுறை வட்டியையும் முதலோடு சேர்த்து அதற்கும் வட்டியை வாங்குகின்ற தன்மையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

சிலவேளைகளில் இந்த வட்டி விகிதம் 24 சதவிகிதம் வரக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகவே இதை ஆராய்ந்து சிந்திக்க வேண்டும். அதேமாதிரி கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து குறுகியகாலக் கடன்கள், நீண்ட காலக் கடன்கள் என்றெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது தவிர அபராத வட்டி என்ற முறையில் 16 சதவிகிதம் இன்று வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏன் இந்த அபராத வட்டி எல்லாம் போடவேண்டும்? அதிலும் குறிப்பாக பொருளாதாரத்தில் இன்று நலிந்திருப்பவர்களுக்கு ஏன் இந்தச் சலுகை கொடுக்கக்கூடாது என்று கவனிப்பது பொருத்தமாக இருக்கும். ஒரு சாராரைக் கட்டுப்படுத்திவிட்டு மற்ற நிறுவனங்களுக்கு சலுகை கொடுக்கிறோம் என்றால் அது சட்டத்திற்கு முன் எல்லோரும் சமம் என்று சொல்கிற நியதிக்கு மாறுபட்டதாகிவிடும். எனவே நாம் சற்று நிதானமாக இருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

(பிற்பகல் 1.00)

உதாரணமாக, இன்று கூட்டுறவு சொஸைட்டிகள், பாங்கி சொஸைட்டிகள் போன்ற சொஸைட்டிகள் எல்லாம் இருக்கின்றன. இந்த நேரத்தில் சிட்டி ஆக்ட்டினால் ஏற்பட்டிருக்கிற கஷ்டங்களைப் பற்றி அரசாங்கம் ஆராயவேண்டும் என்பதற்காக சிட்டி ஆக்டினால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக ஒரு மெமோராண்டம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கையில் கொடுக்கப் பெற்றிருக்கிறது. குறிப்பாக, இதிலிருக்கிற அம்சங்களை அவர்கள் அருள்கூர்ந்து கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு இந்தச் சிட்டிகள் பற்றி பல்வேறு சட்டங்கள் ஏற்பட்ட நேரத்தில் பல்வேறு விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருந்தன. உதாரணமாக

ஆக்ட் 1 ஆப் 1955 என்ற சட்டம் வந்த நேரத்தில் அதில் செக்ஷன் 2 (பி) (6) என்ற தலைப்பில் இந்தச் சிட்டிகளுக்குள்ள கடன்களுக்கு விதிவிலக்கு கொடுத்திருந்தது அன்றிருந்த அரசாங்கம். ஆதலால் அந்தமாதிரி விதிவிலக்கு கொடுப்பது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

சிட்டி நடத்துகிறவர்கள் என்ன முறையில் அதை நடத்துகிறார்கள் என்பதை நாம் உணரவேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு போர்மென் ஒரு ட்ரஸ்டியாக இருக்கிறார். அவர் ஒரு ஏஜென்டாக இருக்கிறார். அவர் ஒழுங்காக பங்குதாரர்களிடமிருந்து பணத்தை வசூலித்து, சேமித்துவைத்து சிட்டி பிடித்தவர்களுக்கு கொடுக்கும் தன்மையைப் பார்க்கிறோம். இந்த சிட்டி பிஸினஸில் ஈடுபட்டிருப்பவர்கள் வட்டிக் கடை வைத்து நடத்துகிறவர்கள் மாதிரி செல்வச் சீமான்களும் அல்ல, கோடீஸ்வரர்களும் அல்ல என்பதை அரசாங்கம் உணர வேண்டும். கிராமங்களில் சிறுசிறு விவசாயிகள் இந்த சிட்டிகளில் சேர்ந்திருக்கிறார்கள். இந்தச் சிட்டி ஒழுங்காக நடைபெறவில்லை என்றால் அதனால் என்னென்ன கஷ்டங்கள் ஏற்படும் என்பதை அரசாங்கம் உணரவேண்டும். போர்மென் இந்தச் சிட்டியை ஒழுங்காக நடத்தவில்லை என்று சொன்னால் ஏழை மக்கள் பங்குதாரர்களாக இருந்தால் அவர்களுக்கு பணம் கிடைப்பதில் பல்வேறு கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே இதை நிதானமாக சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இந்த ஆக்ட் 1 ஆப் 55-ல் விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள். அதேபோல் இந்த சிட்டி கடன்களுக்கு விதிவிலக்கு கொடுப்பது பொருத்தமாக இருக்கும். சிட்டி நடத்துபவர்களுக்கு 5 சதவிகிதம் கமிஷன் மட்டும்தான் உண்டு. 5 சதவிகிதம் கமிஷன் மட்டும் பெற்றுக்கொண்டு அவர்கள் சிட்டி நடத்தி வருகிறார்கள். அவர்கள் பெறுகிற இந்தப் பணத்திற்கு முன்பணமாக பாங்கில் போடவேண்டும் என்று சட்டதிட்டங்கள் இருக்கின்றன. சிட்டி நடத்துவதில் போர்மென்களுக்கு பலவித கஷ்டங்கள் உள்ளன. சிட்டி ஆக்ட்படி அவர்கள் இன்று கோர்ட்டில் பெட்டிஷன்ஸ் போடவேண்டிய நிலை இருக்கிறது. அவர்கள் இன்ஸால்வென்ட்ஸ் ஆகக் கூடிய நிலைமை பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதைச் சிறிது மாற்றியமைக்கவேண்டும் என்று கேட்டுக்





கொள்கிறேன். இந்த சிட்டிகள் பற்றி மற்ற மாநிலங்களில் என்ன செய்திருக்கிறார்கள் என்பதைப் பற்றிச் சிந்திப்பது பொருத்தமாக இருக்கும். கேரளாவில் அவர்கள் ஒரு சட்டம் செய்திருக்கிறார்கள். ஆக்ட் 30 ஆப் 1975 என்று ஒரு சட்டத்தை கேரள மாநிலத்தில் செய்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தில் டெபனிஷனில் 'கே' பிரிவில் ஒரு ஷரத்தில் கூறியிருக்கிறார்கள். அதை தங்கள் அனுமதியின் பேரில் படிக்கவேண்டும் என்று கருதுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சிட்டி என்று சொல்கிறார்கள். நாம் சிட்டு என்போம். இதில் எது கரெக்ட்? சிட்டிக் கம்பனியா அல்லது சிட்டுக் கம்பனியா?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நாங்கள் எல்லாம் தீபாவளியைப் பற்றி நினைக்கவில்லை. சிட்டுக் கம்பனியைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். சட்டத்தில் சிட்டி என்று சொல்லியிருக்கிறார்கள். அது மலையாளத்தில் இருக்கிற ஒரு சொல். ஆகவேதான் அதைக் கூறினேன்.

'(*k*) any liability incurred or arising under a chitty or kuri which is registered or licenced under the Travancore-Chitties Act, 1120 or the Cochin Kuries Act VII of 1107, or conducted under any chit fund scheme, and which has not terminated one year before the commencement of this Act.'

அதில் ஒரு விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள். அதேமாதிரி ஒரு விதிவிலக்கை—நம் சட்டத்திலும் சிட் பண்ட்ஸ் பொறுத்த வரையில் சட்டபூர்வமாக பல்வேறு திருத்தங்களைச் செய்திருக்கிறோம். யாருடைய பாதுகாப்பிற்காக நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகிறோம் என்பதை உணரவேண்டும். ப்ரைஸ் அமௌண்ட் கிடைக்க போதிய அவகாசம் இருக்கவேண்டும். தவணைகளை ஒழுங்காகச் செலுத்தினால்தான் ஒழுங்கானமுறையில் சிட்டை நடத்தமுடியும்.

இன்னொரு பிரச்னையை நான் இந்த நேரத்தில் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். போர்மென்னை வெறும் ஏஜண்டாக மட்டும் கவனிக்கவில்லை. அவர் ஒரு ட்ரஸ்டியாகவும் இருக்கிறார். சிட்டி பிடிக்காத நபர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காக இவர் ஒரு ட்ரஸ்டியாக செயலாற்றிக் கொண்டிருக்கிறார். ப்ரீச் ஆப் ட்ரஸ்ட் என்ற முறையில் வராமல் இருப்பதற்குக்கூட அது

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1975 அக்டோபர் 23

ஏதுவாக இருக்கும். ஆகவே இந்தமாதிரியான முக்கிய விஷயங்களைக் கவனித்து நல்லமுறையில் சிந்தித்து விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜனவரி 16-ம் தேதிக்குப் பிறகு என்ன நடக்கப் போகிறது என்பதைச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஜனவரி 16-ம் தேதி வரையில் எந்தவிதமான வியாஜ்யமும் பதிவு செய்யக் கூடாது. இந்தச் சட்டம் மேலும் எவ்வளவு ஆண்டுகள் நீடிக்கப் போகிறது என்பது குறித்து திட்டவட்டமான கருத்துக்கள் இருந்தால் அதையும் இந்த நேரத்தில் சொல்வது பொருத்தமாக இருக்கும். பொதுவாக கிராமங்களில் இருக்கிற மக்களுக்காக ஏதோ கிராம வங்கிகள் எல்லாம் தொடங்கப் போவதாக பத்திரிகைகளில் பார்த்தோம். ஆனால் ஏழை எளிய மக்கள், கிராமங்களில் இருக்கிறவர்கள் இன்று நலிந்துபோய், பணம் வாங்குவதற்கு கஷ்டப்படுகிறார்கள். சேமிப்பு முறை என்ற முறையில் இந்த சிட்டுகள் நடத்தப்படுகின்றன.

இன்று கிராம மக்கள் 24 சதவிகிதம், 36 சதவிகிதம் என்று வட்டி கொடுத்து பணம் பெறுகிற நிலை இருக்கிறது. இதைத் தவிர்க்க அரசாங்கம் என்ன மாற்று ஏற்பாடு செய்திருக்கிறது? இந்த நேரத்தில் அரசாங்கத்தைத் தவிர வேறு யாருக்கும் எந்த விதமான சிட்டும் அவர்கள் நடத்துவதற்கு உரிமை இல்லை என்று சட்டம் கொண்டு வந்தால் நாங்கள் எல்லாம் நிச்சயமாக அதை வரவேற்போம். அரசாங்கம் நடத்தட்டும். அரசாங்கம் நடத்தினால் சாதாரண ஏழை எளிய மக்கள் அந்தப் பணத்தைத் திரும்பிப் பெற வசதியாக இருக்கும். தனியார்களுக்காக வேண்டி நான் வாதாட வரவில்லை. ஆனால் சமுதாயத்தில் கீழ் மட்டத்தில் இருப்பவர்களுக்கு போதிய பாதுகாப்பு இருக்க வேண்டும். வட்டித் தொல்லையால் ஏழை மக்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். கூட்டுறவுத் துறையானாலும் சரி அல்லது மற்றத் துறையினரானாலும் சரி இந்த அபாரத வட்டியை நிறுத்துவதற்கு சட்டம் கொண்டுவர வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்று வங்கிகளில் கடன் வாங்க பல்வேறு சங்கடங்கள் உள்ளன. எனவே இவற்றைப்பற்றியெல்லாம் நன்கு சிந்தித்து அரசாங்கத் தரப்பிலிருந்து நல்ல திருத்தங்களைக் கொண்டுவரவேண்டும். ஆக்ட் 1 ஆப் 1955-ல் கொடுக்கப்பட்டிருக்கிற விதிவிலக்குபோல் இன்று இதிலும் கொடுப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபமும் இருக்காது.



1975 அக்டோபர் 23] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

சட்டச்சிக்கலும் இருக்காது. இதையெல்லாம் சட்டத்துறை நல்ல முறையில் ஆய்வு செய்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்தச் சட்டத்தில் நல்ல அம்சங்கள் இருந்தாலும் இதனால் பாதிக்கப்படுகிறவர்கள் யார் என்று பார்க்க வேண்டும். இன்று ஏழை மக்களுக்கு கடன் வாங்கவேண்டுமென்றால் கடன் கிடைப்பதில்லை சரியாக. ஏனென்றால் திருப்பிக் கொடுப்பார்களோ கொடுக்கமாட்டார்களோ, ஜனவரி 16-க்குப் பிறகு என்ன நடக்குமோ என்று இந்த வட்டித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் பான்ப்ரோக்கர்ஸ்க்காக பரிந்து பேச வரவில்லை. எப்படி பான்ப்ரோக்கர்ஸை அதிகப் படியாக நாம் வேதனைப்படுத்துகிறோமோ அதேபோல் பாங்குகளில் அதிகமான வட்டி வாங்குவதையும் நாம் கட்டுப்படுத்த வேண்டும்;; அதற்கு மாநில அரசானாலும் சரி, அல்லது மத்திய அரசானாலும் சரி ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதில் எந்த விதமான கஷ்டமும் இருக்காது.

பாங்கு தொழிலுக்கு ஒரு தனிச் சலுகை, ஆனால், சாதாரண குடிமகன் நடத்தும் இந்த மாதிரியான தொழிலுக்கு முட்டுக் கட்டை என்று சொன்னால், சட்டத்தின் முன் யாரும் சமமாக இருக்கப்போவது இல்லை. அதிலும் குறிப்பாக இப்போது நாட்டிலே பல்வேறு காரியங்கள் நடைபெற்று வருகின்றன. இதையெல்லாம் வேதனையோடு நாங்கள் கவனித்துக்கொண்டு இருக்க வேண்டி இருக்கிறது. நாட்டிலே இருக்கும் நெருக்கடி நிலைமையை வைத்துக்கொண்டு மக்களை கசக்கிப் பிழியும் முறையில், நசுக்கும் நிலைமையில் இன்றைக்கு சட்டங்கள் பிறப்பிக்கப்படுகின்றன. தனியாருக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். ஆகையால், இந்தச் சட்டங்கள் எல்லாம் செய்கிற நேரத்தில், இது ஒரு வேளை நல்ல சட்டம் என்று சொல்லிவிட்டு, இதிலே வேறு விதமான காரியங்கள் நுழைப்பது என்று சொன்னால் அது நல்லதல்ல, தர்மம் அல்ல, அறம் அல்ல என்று நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்தச் சட்டத் திருத்தத்திலே. .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 20-அம்சத் திட்டத்தில் கடன் நிவாரணம் ஒன்று. பொன்னப்ப நாடார் அவர்கள் இதை நிறைவேற்ற வேண்டாமென்று சொல்கிறார்கள். கண்டனத் தீர்மானத்திற்கும் காலையில் எழுந்து நின்று இருக்கிறார்கள். இது ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறதே?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** கண்டனத் தீர்மானத்திற்கு எழுந்து நின்றதற்கும், 20-அம்ச திட்டத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோமா இல்லையா என்பதையும் சம்பந்தப்படுத்த வேண்டாம். நாங்கள் எல்லாம் எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்கள். பாராளுமன்ற முறைப்படி நடந்து கொள்ள விரும்புகிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 20-அம்சத் திட்டத்தில் கடன் நிவாரணம் இருக்கிறது. கடன் நிவாரணம் அளிப்பது தவறு, நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி கடன் கொடுத்தவர்களின் உரிமையைப் பறிக்கலாமா என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். இரண்டும் பொருந்தவில்லை என்று நான் கருதுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** என்னைப் பொறுத்தவரையில், எங்களுடைய கட்சிக்கு என்று ஒரு கருத்து இருக்கிறது. அந்தக் கருத்தைக் கூறுவதற்கு எங்களுக்குக் கடமை இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் விளக்கம் கேட்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** விளக்கம் கேட்டு என்னை வேறுவிதமான திசைக்குத் திருப்ப வேண்டாம் என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எங்களுக்குச் சில அழுத்தமான கருத்துக்கள் இருக்கின்றன. எந்த விதத்தில் பேசவேண்டும், எந்த இடத்தில் பேசவேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். அப்போது நிச்சயமாக நாங்கள் பேசத்தான் போகிறோம். எதைக் கண்டும் நாங்கள் பயப்படப்போவது இல்லை என்பதை நான் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். எந்தக் கஷ்டம் வந்தாலும் சரி, எந்தத் துன்பம் வந்தாலும் சரி அதை நாங்கள் ஏற்றுக் கொள்வோம், தாங்கிக்கொள்வோம், நாங்கள் அதற்குப் பழகியவர்கள், இன்னும் பழகுவோம் என்று கூறிக்கொள்கிறேன்.





இன்று கண்டனத் தீர்மானத்திற்கு நாங்கள் எழுந்து நின்று ஆதரவு தந்தாலும், 20 அம்ச திட்டத்திற்கு ஆதரவு அளிக்காமல் இல்லை. ஆனால், கடன் நிவாரணத்தில் இருக்கிற பல்வேறு கஷ்டங்களையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்வதில் யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். அது மத்திய அரசாங்கம் செய்தாலும், சரி, மாநில அரசாங்கம் செய்தாலும் சரி, அதை ஏற்றுக் கொள்வார்கள். நாங்கள் அதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால், அதில் இருக்கும் வேறு விதமான கஷ்டங்களையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இன்று மிகவும் முற்போக்கு என்று சொல்கிற கேரள மாநிலத்தில் இதற்கு விதிவிலக்குக் கொடுத்து இருக்கிறார்கள். அது இந்த மன்றத்திற்குத் தெரியும். ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள், காங்கிரஸ் கட்சிக்காரர்கள் மட்டுமல்ல. கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள், முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். கூட்டான முறையில் அங்கே அரசாங்கம் நடைபெறுகிறது. அங்கே கூட்டாட்சி நடைபெறுகிறது. அந்தக் கூட்டாட்சி நடைபெறுகிற இடத்தில் இந்த மாதிரியான விதிவிலக்குக் கொடுத்து இருக்கிறார்கள். அதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் என்ன சங்கடம், கஷ்டம் இருக்கும் என்று கேட்க ஆசைப்படுகிறேன். இந்த அரசாங்கம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அந்தச் சட்டத்தை வரவழைத்துப் படித்துக் காட்டினேன். வழக்கறிஞர் என்ற முறையில் அதைப் பற்றி நான் இங்கே வாதிட்டுக்கொண்டு இருக்கிறேனே ஒழிய வேறு எந்த விதமான பிரச்னைகளுக்கும் இடம் இல்லை. சிட் பண்டிற்கு அந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. நான் இன்னொரு முறையும் அந்தச் சட்டப்பிரிவை (கே. பிரிவு) முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

'(*k*) any liability incurred or arising under a chitty or kuri which is registered or licenced under the Travancore-Chitties Act, 1120 or the Cochin Kuries Act VII of 1107, or conducted under any chit fund scheme, and which has not terminated one year before the commencement of this Act.'

என்று இதிலே விதிவிலக்குக் கொடுத்து இருக்கிறார்கள். இந்த சிட்

பண்ட்ஸ் நாம் போட்ட சட்டத்தின் அடிப்படையில் நடக்கிறது. ஆகவே. இந்த சிட் பண்ட்ஸ் ஆக்டின்படி டிரான்சாக்ஷன் எதுவாக இருந்தாலும் சரி, அதற்கு விதிவிலக்குக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இது பட்டணத்தில் இருக்கிற பெரிய சிட்பண்ட்சை மனதில் வைத்துக்கொண்டு நான் சொல்லவில்லை. அங்கே சாதாரண கிராமத்தில் இருப்பவர்கள், சின்னம் சிறிய தொழிலாக நடத்தி வருகிறவர்கள் கஷ்டத்தை அனுசரித்து விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது போர்மேனுக்கு மட்டுமல்லாமல், இதிலே சப்ஸ்கிரைபர்களாக இருக்கிறவர்களுக்கும் ஆதரவாக இருக்கும் வகையில் செய்ய வேண்டுமென்று கூறுகிறோம் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்திலே இன்டரஸ்ட்டைப் பற்றி நியூ கிளாஸ் போட்டு இருக்கிறீர்கள். ஜனவரி 16-ம் தேதிக்குப் பிறகு அதை நீங்கள் தள்ளிப் போடப் போகிறீர்களா? மார்ச் 30-ம் தேதி சட்டமன்றத்தின் ஆயுள் முடிந்துவிடும், அதற்குப் பிற்பாடு என்ன நடக்கப் போகிறது. தேர்தல் வரப்போகிறதா, இதையெல்லாம் இப்போது ஒரு வேளை கூற முடியாது என்று இருந்தாலும், அதைக் கூறவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். வரப்போகிற காலம் எப்படி இருக்கப்போகிறதோ, இன்னும் தேர்தலில் நாம் எல்லோரும் நிற்கிறோமோ, அல்லது வேறுவிதமான காரியங்கள் செய்யப் போகிறோமோ என்பது தெரியாது. ஆகவே, அந்த ஐயப்பாட்டின் அடிப்படையில்தான் நான் இந்தப் பிரச்சினையை எடுத்துச் சொன்னேன்.

நாட்டிலே நெருக்கடி நிலைமை இருப்பதால் ஒரு வேளை 1976-ல் தேர்தல் வராது என்று நினைக்கிறோம். ஆனால், இன்று நாட்டில் இருக்கும் நிலைமையைப் பார்க்கிற நோக்கில் நாங்கள் எல்லாம் வேதனைப் பட்டுக்கொண்டு இருக்கிறோம். இந்தக் கண்டனத் தீர்மானத்தின் விவாதத்தின் மூலம் எங்களுடைய கருத்துக்களை நாங்கள் கூறுவதற்குக் கடமைப்பட்டு இருக்கிறோம். எங்களுடைய கொள்கை என்ன, எங்களுடைய கட்சியின் கொள்கை என்ன என்பதைப் பற்றியெல்லாம் இந்த மன்றத்தில் சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் வரும் என்ற எண்ணத்தால்தான் இந்தக் கண்டனத் தீர்மானத்திற்கு ஆதரவு கொடுத்து இருக்கிறோம்.





அது மட்டுமல்லாமல், ஒரு சாரார் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள், நாங்கள் எல்லாம் ஏதோ ஆளும் கட்சியோடு உறவாடிக் கொண்டு இருக்கிறோம் என்று. அது மாதிரியாகக் கூறுபவர்களைப் பற்றி, கொஞ்சம் கடுமையான வார்த்தைகளைச் சொல்லக்கூடாது. அந்த மாதிரி கூற்றுக்கு இடம் இல்லாத முறையில் ஜனநாயக முறைப்படி சட்டமன்றம் எப்படி நடக்கவேண்டுமோ அந்த வகையில், அதிலும் எதிர்க்கட்சி முறைப்படி இந்த சட்டமன்றத்தில் எப்படி நடக்க வேண்டுமோ அந்த முறைப்படி நாங்கள் நடக்க விரும்புகிறோம். இந்தச் சட்டமன்றமாவது அப்படி நடக்கவேண்டுமென்று நினைக்கிறோம். வேறு எங்கெல்லாம் எப்படி நடக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். சட்ட மன்றங்கள் என்ன முறையில் நடைபெறுகிறது, பாராளுமன்றத்தில் 'வாக்-அவுட்' நடத்தினால் வெளியே வராது. அது மாதிரி எத்தனையோ நடைபெறுகிறது. அது மாதிரி இருக்கிற நோக்கில். . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இந்த மன்றத்தில் கூட வாக்-அவுட் செய்தால் வராது என்று கருதுகிறேன். இங்கே உரிமைகள் பறிக்கப்பட்டு இருக்கின்றனவா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்த மன்றத்தின் உரிமைகள் எதையும் அரசு பறிக்கவில்லை. ஆனால், வேறு யாராவது பறித்தால், அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? இந்த மன்றத்திற்கு உரிய எல்லா உரிமைகளும், கேள்வி நேரம், அட்ஜான்மென்ட் மோஷன், காலிங் அட்டென்ஷன், நம்பிக்கை இல்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் போன்ற எல்லா உரிமைகளும், இந்த சட்டமன்ற விதிமுறைகளுக்குட்பட்ட எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டு இருக்கின்றன. இந்த அரசு எந்தவிதமான உரிமையையும் பறிக்கவில்லை என்பதை நான் நண்பர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** வேறு யாராவது தடுத்தால் நான் பொறுப்பாளி இல்லை என்று சொன்னார்கள். வேறு யாராவது என்றால் மத்திய சர்க்காரை மனதில் வைத்துக்கொண்டு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களா என்பது தெரியவில்லை. வேறு யாராவது பறிக்கிறார்கள் என்பதால் என்ன வேண்டுமானாலும் பேசலாமா?

[1975 அக்டோபர் 23

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, காலையிலிருந்து எல்லாக் கருத்துக்களும் இங்கே பரிமாறப்பட்டு இருக்கின்றன. யார் பறிக்கிறார்கள் என்பதை மாலை, காலையில் வரும் பத்திரிகைகளின் மூலம் பேசியவர்கள் அவர்களாகவே புரிந்து கொள்ளலாம். ஆகவே, என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்பது அல்ல. இங்கே நடவடிக்கைக் குறிப்புகள் என்ற புத்தகம் இருக்கிறது. அது எப்போதும் நிலையானது. எதிர் காலத்தில் பார்த்துப் படிக்கக் கூடிய ஒன்று. நம்முடைய பேச்சுகள் அத்தனையும் அந்த நடவடிக்கைக் குறிப்பில் ஏறும் என்று நினைக்கிறேன். சபாநாயகர் அவர்கள் அப்படித்தான் உத்தரவிடுவார்கள் என்று நான் கருதுகிறேன். யார் பறிக்கிறார்கள் என்பதை காலை, மாலை பத்திரிகைகளில் பேசியவர்களே படித்துப் பார்த்துப் புரிந்து கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய விதிமுறைகளுக்குட்பட்டு பேசப்பட்ட அத்தனை பேச்சுக்களும் நடவடிக்கைக் குறிப்பில் ஏறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஒரு வேளை பத்திரிகைகள் தாங்களாகவே அதைச் சொல்லி ஆறுதல் அடையலாம் என்று நினைக்கிறேன். இந்த மாதிரி நிலைமையில் இந்தச் சட்டத்தில் பல வரவேற்கக்கூடிய அம்சங்கள் இருந்தாலும், பல கஷ்டங்கள் இருக்கின்றன. இந்தச் சட்டம் இன்னும் சாதாரணமாக இருக்கின்றவர்களுக்கு கஷ்டம் வராத நிலையில் இருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக வேறு சில திருத்தங்களும் வந்து இருக்கின்றன. இந்தத் திருத்தத்தைப் பார்க்கிற நேரத்தில் கடன் தொகை திருப்பிக் கொடுக்க வேண்டியது இல்லை, அது எல்லாம் லிக்குவிடேஷன் என்ற அளவில் திருத்தம் வந்து இருக்கிறது. அதைச் சரியாகக் கொடுக்க வேண்டும், அதிலே என்ன பிரச்னை வரும் என்பதைப் பற்றியெல்லாம் அரசாங்கம் நல்ல முறையில் சிந்திக்க வேண்டும். சாதாரணமானவர்களுக்கு சலுகை கொடுப்பதைப்பற்றி எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. இதனால் பண முதலாளிகளுக்கு எந்த மாதிரியான சலுகையும் வந்து விடக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சிட் பண்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டிய பரிகாரம் கொடுக்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மசோதாவினை இன்னும் சிறிது நேரம் உட்கார்ந்து முடித்துவிட முடியுமா?



1975 அக்டோபர் 23]

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, இந்த மசோதா மிகவும் முக்கியமானது. அங்கத்தினர்கள் பலர் இதன்பேரிலே பேச விரும்புகின்றார்கள். இன்றைக்கு இந்த அளவிற்குப் பேசி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பேரவையின் கருத்தினைத் தான் அறிய விரும்புகிறேன். யார் யார் பேச விரும்புகின்றார்கள் என்று அறிய வேண்டும். ஒரு கட்சிக்கு ஒரு அங்கத்தினர் என்று பேசலாம்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவரவர்களே, இதுவரையில் நீங்கள் அனுசரித்துவந்த முறை ஒரு கட்சிக்கு ஒருவர்தான் பேச வேண்டும் என்பது அல்ல. இந்த மசோதாவின்மீது பேச விரும்பும் அங்கத்தினர்கள் அதிகமாக இல்லை. கொஞ்சம் பேர்தான் இருக்கின்றார்கள். பேசுகின்றவர்கள் அதிகமானவர் இருந்தால் நீங்கள் கட்டளையிட வேண்டியதுதான். எனவே, இப்போது இப்படிப்பட்ட கட்டுப்பாடு வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சபாநாயகர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், இரங்கற்தீர்மானம் என்று இருந்தால் கட்சிக்கு ஒருவர் பேசலாம் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் இப்படிப்பட்ட மசோதாவின்மீதும் கட்சிக்கு ஒருவர் தான் பேசவேண்டும் என்றால் மற்றவர்கள் சட்டமன்றத்திற்கே வர வேண்டியதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 234 அங்கத்தினர்களும் பேசலாம். இல்லையென்று சொல்லவில்லை. பேச உரிமை இருக்கின்றது. ஆனால் நேரத்தில் இம்மசோதா சட்ட மன்றத்தில் நிறைவேற வேண்டாமா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இப்படி நீங்கள் அவசரம் அவசரமாக மசோதாவினை நிறைவேற்றினால் அவஸ்தை தான் ஏற்படும்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவரவர்களே, இதற்கு முன்பு நடைபெற்ற சட்டப் பேரவைக் கூட்டத்தில், விவசாயிகள் பட்டுள்ள கடன்களைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கான ஒரு சட்டத்தினை நாம் இங்கே நிறைவேற்றியிருக்கிறோம். அதை அடிப்படையாகக் கொண்டு, விவசாயிகள் அல்லாதவர்களுக்கும்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1975 அக்டோபர் 23

அப்படிப்பட்ட சலுகைகள் அளிக்கப்படவேண்டுமென்ற காரணத்தினால் மாநில அரசினால் கொண்டு வரப்பட்டுள்ள அவசர சட்டத்தின் அடிப்படையில் இந்த மசோதா இங்கே கொண்டு வரப்பட்டு இருக்கின்றது. இதன் நோக்கம், பெரும் கடன் சுமைகளால் அவதியுறும் சாதாரண ஏழை மக்களுக்கு சற்று நிவாரணம் அளிப்பதற்காக இது கொண்டு வரப்படுகின்றது. சாதாரண விவசாயிகள் வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாத காரணத்தினால் கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் படும் தொல்லைகளைக் கருத்தில் கொண்டு இந்த இருபது அம்ச திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு, கீழ் மட்டத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும், கடன் சுமைகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற காரணத்தினால் அவர்களிடமிருந்து கடன்களை அல்லது அதற்கான வட்டியினை பல்வேறு நிர்ப்பந்தங்களின் கீழ் வசூலிக்கக் கூடாது, அது தற்காலிகமாகவாவது நிறுத்தி வைக்கப்படவேண்டும் என்ற அவசரச் சட்டம் போடப்பட்டு, பிறகு அதே அடிப்படையில் பல மாநிலங்களில் அவை ரத்து செய்யப்பட்டும் இருக்கின்றன. இன்று பொதுவாக கிராமப்பகுதிகளில் உள்ள சிறு விவசாயிகளை எடுத்துக் கொண்டால், அவர்கள் எவ்வளவோ கடன் தொல்லைகளுக்கு உள்ளாக்கப்பட்டு, கடன் இல்லாத விவசாயிகளே இல்லை என்று சொல்லத்தக்க அளவிற்கு நாடு முழுவதும் அவதிப்படுகின்றதைப் பார்க்கின்றோம். நாம் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிராமப்பகுதிகளிலே எவ்வளவோ கடன் கொடுத்து உதவினாலும் அவற்றைக்கொண்டு அவர்கள் தங்கள் குடும்பத்தையோ அல்லது விவசாயத்தையோ நடத்த முடியாமல் பல தனி நபர்களிடம் பெருமளவிற்குக் கடன்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இதை அறியாதவர்கள் நம்மில் யாரும் இருக்க முடியாது. இதை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறியாமல் இல்லை. இதிலே அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளித்து இவர்களை எப்படிக் கடன் சுமைகளிலிருந்து விடுவிப்பது என்பதை ஆராய்ந்து அதற்கான உடனடி நடவடிக்கைகளில் இறங்குவது கடமையாகும்.

ஜூலை 22-ம் தேதிக்குப் பிறகு. ஆகஸ்டு, செப்டம்பர் மற்றும் அக்டோபர் ஆக மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. அந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பிறகு. யார் யாருக்குக் கடன்சுமைகளை அடியோடு ரத்து செய்ய வேண்டும் என்று பரிசீலித்து, இன்னின்னாருக்குக் கடன் சுமைகளிலிருந்து அடியோடு விடுவித்து



1975 அக்டோபர் 23] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

விட்டோம் என்ற முறையில் மறு அவசரச் சட்டமொன்று போடப்பட்டிருக்க வேண்டும். குறிப்பாக, தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகளுடைய கடன் சுமை சற்று அதிகமாகவே இருக்கின்றது என்று புள்ளிவிவரங்களிலிருந்து தெரிகின்றது. நாம் நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கோரும்போது, பத்து அல்லது பதினைந்து ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகளை மனத்தில் வைத்துக்கொண்டு சொல்லவில்லை. ஐந்து ஏக்கர் அல்லது அதற்கும் குறைவாக வைத்துள்ள விவசாயிகள் விஷயத்தில் இப்படிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுவிப்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்காமல், ஏதோ தற்காலிகமாக ஒரு ஆறு மாத காலத்திற்கு அல்லது ஒரு ஆண்டு காலத்திற்குத் தள்ளி வைப்பதனால் பெரிய பலன் ஏதும் ஏற்பட்டு விடாது. சிறிது பலன் ஏற்படலாம், ஆனால் அவை நிரந்தரபலனாக இருக்க முடியாது. ஆகவே அரசாங்கத்தினைக் கேட்டுக்கொள்ளுகிறேன், ஐந்து ஏக்கருக்குக் குறைவாக வைத்துள்ளவர்கள் விஷயத்தில் அவர்கள் பட்டுள்ள கடன்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்று. காரணம், தனியார் கொடுக்கும் கடன்கள் என்றால் யாருமே அரசாங்கம் நிர்ணயம் செய்துள்ள வட்டிக்குக் கடன் கொடுப்பதில்லை. ஐம்பது சதவிகிதம் விதத்தில்கூட கிராமப் புறங்களிலே மக்கள் வட்டிக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றார்கள். கொஞ்சம் நெஞ்சில் ஈரமுள்ளவர்கள் 36 சதவிகிதத்திற்குக் கொடுக்கின்றார்கள். மற்றவர்கள் 50 அல்லது 60 சதவிகிதத்திற்குத்தான் கொடுக்கின்றார்கள். இப்படி வட்டிக்கு வாங்கி வருஷாவருஷம் தங்கள் வருமானத்திலிருந்து வட்டி வட்டி என்று வட்டியாகவே கொடுத்து அசலைத் திருப்பிக் கொடுக்க முடியாமலேயே அவர்கள் அவதிப்படுகின்றார்கள். எனவே, ஐந்து ஏக்கர் நிலத்திற்குக் குறைவாக உள்ளவர்கள் விஷயத்தில் தனியார் கடன்களை ரத்து செய்வதற்கான முயற்சி எடுக்க வேண்டும்.

இதர மாநிலங்களிலே அரிசனங்கள் இப்படி வாங்கிய கடன்களிலிருந்து நிரந்தரமான நிவாரணம் அளிக்கத்தக்க விதத்தில் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. எனவே இங்கே நாம் தற்காலிகமான நிவாரணம் கிடைக்கும் முறையில் இதை ஒரு சிறிது காலத்திற்குத் தள்ளிப் போடாமல் இவற்றை ரத்து

செய்வதற்கான முயற்சியில் சட்டத்தினை நிறைவேற்ற அரசாங்கம் யோசித்து ஒரு முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த நேரத்திலே இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது பான்-ப்ரோக்கர்ஸ்கள்கூட வட்டி வசூலிக்கக் கூடாது என்று கடன் வசூல்களிலிருந்து இப்போது தள்ளி வைத்திருக்கிறோம். சிலர் சிறு முதலை வைத்துக் கொண்டுள்ளவர்கள், அதை வைத்துக்கொண்டு வட்டிக்கு விட்டுப் பிழைப்பது என்பதும் வழக்கமாகிவிட்டது இந்தக் காலத்தில். இதிலே சிலர் வேறு சிலரிடம் வட்டிக்குக் கடன் வாங்கி வைத்துக் கொண்டு பான் புரோக்கர்ஸ் தொழிலை நடத்தி வருகின்றார்கள். இப்படி பான் ப்ரோக்கர்ஸ்கள் வெளியிலிருந்து கடன் வாங்கியிருக்கும் பட்சத்தில், அவர்கள் கொடுக்க வேண்டிய வட்டிக்கும் ரத்து அளிக்கப்பட வேண்டும். இந்தப் பான் ப்ரோக்கர்ஸ் கொடுத்துள்ள கடனுக்கான வட்டியை ரத்து செய்து விடும்போது, அவர்கள் வாங்கியுள்ள கடன்களுக்கான வட்டியையும் ரத்து செய்வதுதான் நியாயமாகும். அப்படிச் செய்யமுடியுமா என்பதையும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்போது விவசாயிகள் விஷயத்தில் இந்த ஆறு மாத காலத்திற்கு வட்டிக்கு வாங்கிய கடன்களுக்கான வட்டியினை ரத்து செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். முன்னால் செய்த சட்டத்தில் இந்தப் பாதுகாப்பு இல்லை. இப்போது மற்றவர்களுக்குக் கொடுத்துள்ள அந்தப் பாதுகாப்பு இவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே அதை வரவேற்கிறேன். மீண்டும் கேட்டுக் கொள்ளுகிறேன், ஐந்து ஏக்கர் நிலத்திற்குக் குறைவாக வைத்துள்ள விவசாயிகள் விஷயத்தில் கவனம் செலுத்தி அவர்களுக்கும் நிவாரணம் அளிக்கும் முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-27 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.





(9) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

178. Notification issued in G.O. Ms. No. 722, Rural Development and Local Administration, dated the 3rd May 1975 in regard to deletion of a portion from the approved list of parks in the area within the jurisdiction of Coonoor Municipality. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Play Fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

179. Notification issued in G.O. Ms. No. 742, Rural Development and Local Administration, dated the 29th April, 1975 in regard to deletion of a portion from the approved list of parks in the area within the jurisdiction of Vellore Municipality for the construction of waiting shed for the Bus stand. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Parks, Playfields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Tamil Nadu Act 26 of 1959).]

180. Notification issued in G.O. Ms. No. 313, Co-operation, dated the 14th July 1975 in regard to an amendment to rule 12 in the Tamil Nadu Pawn Brokers Rules, 1944. [Laid on the table of the House under section 22 (4) of the Tamil Nadu Pawn Brokers Act, 1943 (Tamil Nadu Act XXIII of 1943).]

181. Notification issued in G.O. Ms. No. 54, Home, dated the [illegible]th January 1975 in regard to exemption from the tax payable under [illegible] Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 in respect of the Mobile Crane bearing registration No. MDN 7590 belonging to St. Josephs Industrial School, Ootacamund. [Laid on the table of the House under section 26 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

@ 182. The Fourth Annual Report on Tamil Nadu Samll Industries Development Corporation Limited for the year 1973-74. [Laid on the table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

183. Report of the Controller and Auditor General of India for the year 1973-74—Revenue Receipts. [Laid on the table of the House under section 151 (2) of the Constitution of India).]

*B. Reports, Notifications and Other Papers.*

57. Erratum issued in Memo. No. 110798|VI (1)|74, Commercial Taxes and Religious Endowments, dated the 21st September 1974 to Revenue Department Notification II-1 No. 5514 of 1972, published at page 982 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 29th September 1974.

58. Notification issued in G.O. Ms. No. 808, Commercial Taxes and Religious Endowments, dated the 28th June 1975 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899, in respect of sale deed to be executed by the Administrator-General and Official Trustee, High Court, Madras in favour of the Correspondent, the Madarasa Murthuzaviya High School, Madras.

† 59. Resume of work transacted by the Tamil Nadu Legislative Council during its Fiftieth Session.

† 60. The Tamil Nadu Contingency Fund (Second Amendment) Bill, 1975.

† 61. The Tamil Nadu Restriction of Habitual Offenders (Amendment) Bill, 1975 with Annexure.

† 62. The Tamil Nadu Towns Nuisances (Amendment) Bill, 1975.

† 63. The Motor Transport Workers (Tamil Nadu Amendment) Bill, 1975.

† 64. The Tamil Nadu Homeopathy System of Medicine and Practitioners of Homoeopathy (Amendment) Bill, 1975 with Annexure.

† 65. The Tamil Nadu Relief Undertakings (Special Provisions) Amendment Bill, 1975.

† 66. The Tamil Nadu Indebted Persons (Temporary Relief) Bill, 1975.

---

@ Laid on the table of the Legislature Library with reference to the proviso to Rule 21 (5) of the Tamil Nadu Legislative Assembly Rules.

† Despatched to Members on 22nd October 1975.



## இணைப்பு 1.

[106-ம் பக்கத்திலுள்ள வெள்ளிக்குறியிட்ட வினா எண் 15-க்கான விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(இ) செயல் முறை தொழில் நுட்ப இயலைச் சார்ந்த பல நாட்டு அலுவலர்களைக் கொண்ட குழு (Multi-country Mission on Demonstration of Farming Technology) ஒன்று, ஜப்பானில் உள்ள ஆசியா உற்பத்தி நிறுவனம் மற்றும் இந்தியா உற்பத்தி நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இம்மாநிலத்திற்கு வருகை தந்தது. இக் குழுவில் இந்தோனேஷியா, ஈரான், ஜப்பான், கொரியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, இலங்கை ஆகிய நாடுகளைச் சார்ந்த கீழ்க்கண்ட வேளாண்மை அலுவலர்கள் இடம் பெற்றார்கள் :—

| | |
|---|---|
| 1. திரு. மக்பூல் | இந்தோனேஷியா. |
| 2. திரு. கோஸ்ரோ ஆஜோர்டிகான் | ஈரான். |
| 3. திரு. யோசுகி ராஜிட்டா | ஜப்பான். |
| 4. திரு. ஜங் ஹக்சோய் | கொரியா. |
| 5 திரு. அம்பு ரோஜியோ ஆர். வில்லோரைண்டி. | பிலிப்பைன்ஸ். |
| 6. திரு. செகுண்டோ சி. சேரானோ | பிலிப்பைன்ஸ். |
| 7. திரு. எஸ். நடேசன் | இலங்கை. |
| 8. திரு. சோ. டியாண்டாங் | தாய்லாந்து. |
| 9. திரு. டி. ஏ. குருஸ், உதவி வேளாண்மை அலுவலர், ஆசிய உற்பத்தி நிறுவனம். | டோக்கியோ. |
| 10. திரு. ஜி. வி. சென்குப்தா | இந்தியா |
| 11. திரு. எஸ். கே. சர்மா | இந்தியா. |

இக்குழு தஞ்சை மாவட்டத்தில் 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் ங்கள் 21-லிருந்து 23-ந் தேதி வரை சுற்றுப்பயணம் செய்தது. ழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மை அபிவிருத்திப்

பணிகளை, குறிப்பாக நெல் பயிரிடுதல் மற்றும் பலவகைப் பயிர்களைச் சாகுபடி செய்தல் ஆகியவற்றில் கையாளப்பட்ட முறைகளைக் கண்டறிதலே இக் குழுவின் முக்கிய நோக்கமாக இருந்தது. மேலே கண்ட துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றமும் நமது உணவு உற்பத்தித் திட்டங்களும் இக்குழுவை மிகவும் கவர்ந்தன.

### இணைப்பு-2

106-ம் பக்கத்திலுள்ள வெளியிட்ட குறிப்பிட்ட வினா எண் 16-க்கான விடையைக் காண்க.]

(*a*) Yes.

(*b*) A visiting team consisting of 13 members from the Royal College of Defence Studies, United Kingdom, accompanied by 5 other members as listed below visited Chingleput district on 7th October 1974 to study the Agricultural Production Programme in the district :—

Directing staff—

(1) Major General A. E. Younger, D.S.O., G.B.E;, M.A., (Late Royal Engineers).

(2) Lieutenant Colonel G.L. Body, Royal Artilery.

Britain :

(3) Captain J. S. Grove, OBE, Royal Navy.

(4) Captain P.J.D. Northey, M.V;C;, Royal Navy.

(5) Colonel D. C., Alexander, A.D.C., Royal Marines.

(6) Brigadier J. Switon, OBE (Late Foot Guards).

(7) Group Captain J. Fennel, M.B.E., A;F;C;, (Royal Air Force).

(8) Group Captain W. J. Herrington (Royal Air Force).

(9) Mr. D. H. Parry, M.A., Procurement Executive, Ministry of Defence.

Canada : (10) Mr. R. H. Branscombe, Canadian Diplomatic Service.

Greece : (11) Captain C. Paizia-Paradelis, Helenic Navy.

Iran : (12) Rear Admiral Parvis Bigalari.

U.S.A. (13) Mr P. A. Waggener, United States Army (Civilian).





Accompanying—

(14) One Indian Army Liaison Officer.

(15) Major J. R. Graham, R. A., Assistant, Defence Advisor, British High Commission.

Additional Members—

(16) Mr. W. K. K. White, Head of Chancerry in British High Commissioner's Office, New Delhi.

(17) Mr. M. A. Halding, Head of Chancerry in British High Commissioner's Office, Madras.

(18) Mr. J.E.A., Miles, British Deputy High Commissioner, Madras.

2. The party visited the farm of Mrs. Rajammal at Vandalur, a Poultry Unit and the different high yielding crops of paddy, millets and groundnut managed by Thiru Ganapathy at Ticine Farm, Kelambakkam, a Multi-agro farm of Mr. Muthummalla Reddiar at Polambakkam and Kattupakkam Poultry and Sheep Farms run by Poultry Development Corporation and the Director of Veterinary Education respectively. The team also met the farmers at Mathuranthagam Panchayat Union and had discussions with them and the Panchayat Union Council members.

3. The members of the team appreciated the extension approach and activities of the Department of Agriculture in educating the farmers to increase the agricultural production.

(அ) ஆம்.

(இ) செங்கற்பட்டு மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தித் திட்டம் செயல்படுமுறைபற்றி ஆராய இங்கிலாந்து "ராயல் காலேஜ் ஆ.ப் டி.:பென்ஸ் ஸ்டடீஸ்" என்ற கல்லூரியிலிருந்து 13 உறுப்பினர்களும் ஏனைய 5 உறுப்பினர்களும் அடங்கிய பார்வைக்குழு அம்மாவட்டத்திற்கு 7—10—74-ல் சென்று பார்வையிட்டது. குழு உறுப்பினர்கள் பற்றிய விவரம் வருமாறு :—

**செயற்முறை ஆலோசனைக்குழு**

(1) மேஜர் ஜெனரல் A,E.-யங்கர், D.S,O., G.B.E,, M.A. (லேட் ராயல் எஞ்சினியர்ஸ்).

(2) லெப்டினென்ட் கர்னல் G.L. பாடி, ராயல் ஆர்டில்லரி.

பிரிட்டன் :

(3) கேப்டன் J,S- குரோவ், O,B.E., ராயல் நேவி.

(4) கேப்டன் P.J.D. நார்த்தே, M.V.C., ராயல் நேவி.

(5) கர்னல் D.C, அலெக்ஸாண்டர், A.D.C., ராயல் மெரைன்ஸ்.

1975 அக்டோபர் 23]

(6) பிரிபேடியர் J. ஸ்வைடன் O.B.E. (லேட் ஃபுட் கார்ட்ஸ்).

(7) குரூப் கேப்டன் J. ஃபென்னல், M.B-E., A.F.C. (ராயல் ஏர் ஃபோர்ஸ்).

(8) குரூப் கேப்டன் W.J. ஹெரிங்டன் (ராயல் ஏர் ஃபோர்ஸ்).

(9) திரு. D.H. பாரி, M.A. கொள்முதல் நிர்வாக அலுவலர், பாதுகாப்பு அமைச்சகம்,

கனடா : (10) திரு. R.H. பிரான்ஸ்கோம்ப், கனடா தூதரகப் பணி.

கிரீஸ் : (11) கேப்டன் C. பைஸியர் பெரடெவிஸ், கிரேக்க நாட்டுக் கப்பற்படை.

ஈரான் : (12) ரியர் அட்மிரல் பர்விஸ் பிகலேரி.

அமெரிக்கா : (13) திரு. P. A. வேகனர், அமெரிக்கா இராணுவம் (சிவிலியன்)

ஐக்கிய நாடுகள் :

**உடன்வந்தவர்கள் —**

(14) இந்திய இராணுவத் தொடர்பு அதிகாரி ஒருவர்.

(15) மேஜர் J.R. கிரஹாம், K.A., பாதுகாப்பு உதவி ஆலோசகர், பிரிட்டிஷ் ஹை கமிஷன்.

**கூடுதல் உறுப்பினர்கள்—**

(16) திரு. W. K. K. ஒயிட், புதுடில்லி, பிரிட்டிஷ் ஹை கமிஷனர் அலுவலகத்தை சேர்ந்த தூதர் தலைவர்.

(17) திரு. M. A. ஹாலடிங், சென்னை பிரிட்டிஷ் ஹை கமிஷனர் அலுவலகத்தைச் சேர்ந்த தூதர் தலைவர்.

(18) திரு. J. E. A. மைல்ஸ், சென்னை பிரிட்டிஷ் டெபுடி ஹை கமிஷனர்.

2. இக்குழு வண்டலூரில், திருமதி ராஜம்மாளுக்குச் சொந்தமான பண்ணையையும், கேளம்பாக்கத்தில் திரு கணபதியால் நிர்வகிக்கப்பட்டு வரும் டைஸின் பண்ணையில் (Ticine Farm) உள்ள கோழி வளர்ப்புப் பிரிவு, உயர் விளைச்சல் தரும் நெல், சிறு தானியங்கள், வேர்க்கடலை பயிர்கள் ஆகியவற்றையும், போளம்பாக்கத்தில் திரு. முத்துமல்ல ரெட்டியாருக்குச் சொந்தமான பல்வகைப் பயிர் சாகுபடி செய்யப்படும் வேளாண்மை பண்ணையையும், காட்டுப்பாக்கத்தில் கோழிப்பண்ணை வளர்ச்சிக் கழகம் நடத்திவரும் கோழிப் பண்ணையையும், கால்நடை மருத்துவக் கல்வி இயக்குநர் நடத்திவரும் ஆடு வளர்ப்புப் பண்ணையையும் இக்குழு பார்வையிட்டது. இக்குழு மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் உழவர்களையும் சந்தித்து, அவர்களுடனும் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களுடனும் விவாதித்தது.

3. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு உழவர்களுக்கு அறிவு புகட்டுவதில் வேளாண்மைத் துறையின் வளர்ச்சி அணுகுமுறை, பணிகள் ஆகியவற்றைக் குழு உறுப்பினர்கள் பாராட்டினர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

### வெள்ளிக்கிழமை, 1975 அக்டோபர் 24

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

### தமிழ்நாட்டிலுள்ள நூலகங்கள்

* 26 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நூலக இயக்கத்தினை மேம்படுத்த அமைக்கப்பட்ட ஐவர் குழுவின் பரிந்துரை மீது எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தமிழகத்தில் நூலக இயக்கத்தினை மேம்படுத்த அமைக்கப்பட்ட ஐவர் குழுவின் பரிந்துரை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, ஐவர் குழுவின் பரிந்துரை மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளில் ஒன்றாக எப்படியும் கிராமப் பகுதிகளில் மூன்று மைல் வட்டாரத்திற்கு ஒரு நூலகம் அமையும் வகையில் எதிர்காலத்தில் திட்டம் வகுத்து, மூன்று மைல் வட்டாரத்தில் எப்படியும் ஒரு நூலகம் ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஐவர் குழுவினர் விரிவான முறையில் அறிக்கை தந்திருக்கிறார்கள். பல்வேறு மாவட்டங்களினுடைய சூழ்நிலைகளை

ஆராய்ந்து, பரவலான முறையில் நூலகக் கிளைகள் அமைய வேண்டும் என்பதுதான் நோக்கம். அந்த வகையில்தான் பரிந்துரைகள் தந்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரைகளைக் கல்வித் துறையினரும் நிதித் துறையினரும் சட்டத் துறையினரும் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. ஆகவேதான், இந்தத் துறையினர் பரிசீலித்ததற்குப் பிறகு விரைவில் அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, சிபார்சுகள் அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், தற்சமயம் கோயம்புத்தூரில் அரசு நியமனங்கள் இல்லாத காரணத்தால், அங்கே நூலகத்தின் மற்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; ஆனால், தலைவர் இல்லை. சென்னையில் நூலகக் குழுவின் தலைவர் இருக்கிறார்; ஆனால், உறுப்பினர்கள் கிடையாது. இப்படிப்பட்ட ஒரு அசாதாரண நிலையைப் போக்க உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சில மாவட்ட நூலகக் குழுக்களுக்குத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லையென்றால், விரைவில் இந்த அறிக்கையின் மீது நாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்போது தொடர்ந்து நடைமுறைப்படுத்த வாய்ப்பாக இருக்கும் என்று கருதித்தான். இந்தப் பரிந்துரைகளின்மீது நாம் ஒரு சட்டத்தை நிறைவேற்றிவிட்டால் அது ஒழுங்காக, முறையாக, எல்லா மாவட்டங்களிலும் கடைப்பிடிக்கப்பட ஏதுவாக இருக்கும் என்று கருதி, அதை விரைவுபடுத்தும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

திரு. த. சேனையா: நூலகங்கள் பற்றி ஐவர் குழு கருத்துத் தெரிவித்திருக்கிறது என்று சொன்னார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் அவற்றை நிர்வகிக்கின்ற நிர்வாகிகளுக்குப் பல மாதங்களாகச் சம்பளம் கிடைக்கவில்லையே, அதைப்பற்றி ஏதாவது சொல்லியிருக்கிறார்களா? விரைவில் கிடைப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? இப்படிப்பட்ட சிக்கலைத் தீர்ப்பதற்கு அரசு ஏதாவது யோசனை வைத்திருக்கிறதா?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஐவர் குழுவினர் நிதி நிலையைப்பற்றியும் ஆராய்ந்து பரிந்துரைகள் செய்திருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது நிர்வாகத்தில் இருந்து வருகிறவர்களுக்குச் சம்பளம் கிடைக்கவில்லையென்றால், அது ஏன் கிடைக்கவில்லை என்று தனியாக ஆராய்ந்து, அதுபற்றி தனி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, நூலகக் குழுவில் பணியாற்றுகிறவர்களில் சிலர் 'பார்ட்-டைம்' ஆகப் பணியாற்றுகிறார்கள்; சிலர் 'ஃபுல் டைம்' ஊழியர்களாகப் பணியாற்றுகிறார்கள். இந்த வித்தியாசத்திற்கு என்ன காரணம் என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுதிருக்கிற அமைப்பு முறையில், எத்தனை பேர் 'பார்ட் டைம்', எத்தனை பேர் 'ஃபுல் டைம்' ஊழியர்களாக இருக்கிறார்கள் என்பதற்கான முழு விவரங்கள் இப்பொழுது இல்லை. ஆனால், தனியான முறையிலே இயங்கி வருகிறது. அரசுத் துறை சார்பான ஒரு துறையாக ஆக்க வேண்டும் என்பது பலருடைய கோரிக்கை. அதையும் ஐவர் குழுவினர் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதுபற்றியும் அரசு ஆராய்ந்து வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, a large number of libraries run by Local Authorities are not properly functioning for want of funds. As a Member of the Estimates Committee I had occasions to visit so many libraries. May I know from the Hon. Minister for Education and Tourism whether the Five-Member Committee has recommended for taking over the libraries by the Government?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நூலக இயக்கத்தினுடைய நிதி நிலையை உயர்த்துவதற்காகத்தான் 3 காசு செஸ் வாங்கி வந்ததற்குப் பதிலாக ஐந்து காசு வாங்கவேண்டும் என்றும், ஐந்து காசு ஈட்டு மானியம் அரசு தருவது என்றும் அண்மையில் செய்த ஏற்பாட்டின் காரணமாக ஓரளவு நிதி நிலை கூடியிருக்கிறது.

கூடியிருக்கிறதென்றாலுங்கூட, நூலக இயக்கத்தை நாம் விரும்பும் அளவுக்குப் பரவலாக்குவதற்கும், புதிய புதிய கிளைகளை ஏற்படுத்துவதற்கும், புதிய நூல்களையும் மற்றவைகளையும் வாங்குவதற்கும் போதுமான அளவு நிதி இல்லை என்ற குறைபாடு இருக்கிறது. ஆகவே, நிதி ஆதாரங்களை எந்த அளவு பெருக்கலாம் என்பதுபற்றியும் இந்தக் குழுவினர் ஆராய்ந்து பரிந்துரை தந்திருக்கிறார்கள். அதை நிதித் துறை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அவர்கள் முடிவு தந்ததற்குப் பிறகு தக்க ஏற்பாடுகளை நாம் செய்யலாம்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, மாவட்டத்தில் இருக்கின்ற நூலகக் குழுத் தலைவர்கள் புத்தகங்களை வாங்கும் போது பொதுவாக அவரவருடைய விருப்பம் போல் வாங்குகிறார்கள். இன்ன இன்ன புத்தகங்களை, இப்படித்தான் வாங்க வேண்டும் என்பதற்கு நம்முடைய அரசு 'கைட்லைன்ஸ்' கொடுத்திருக்கிறதா? பகுத்தறிவுக் கருத்துக்களைக் கொண்ட புத்தகங்களாக இருந்தால் அவற்றை சில தலைவர்கள் வாங்குவதில்லை. ஆகவே, நம்முடைய அரசே. இன்ன புத்தகங்களை இப்படித்தான் வாங்கவேண்டும் என்று எல்லா மாவட்டத் தலைவர்களுக்கும் ஏதாவது யோசனை தெரிவிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பொதுவாக அறிக்கை விடப்பட்டிருக்கிறது. ஆனால் மாவட்ட நூலகக் குழுவினர் ஒவ்வொருவருக்கும் தனி உரிமையும் தனி அதிகாரமும் இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அவற்றில் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, அவர்களே தேர்ந்தெடுக்கிறார்கள். சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகையில் பாதி அளவுக்கு புத்தகங்களை மாநில அளவில் அமைந்திருக்கிற பொது நூலகக் குழுவினர் சிறப்பான அறிவியல் நூல்கள், பொது அறிவை வளர்க்கும் நூல்கள், நுண்ணறிவை வளர்க்கும் நூல்கள் ஆகியவற்றிற்கு அதிக இடம் தந்து மத்திய நூலகமே வாங்கித் தரும் முறையில் பாதி அளவை ஏற்றுக் கொண்டு, மற்ற பாதியை அந்த அந்த மாவட்டத்திலுள்ளவர்களே ஏற்றுக்கொள்ளும் முறை சென்ற ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஐவர் குழுவினர் பரிந்துரை தந்ததையொட்டி மேலும் செம்மைப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டால் செம்மைப்படுத்தும் முயற்சியும் மேற்கொள்ளப்படும்.



**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, நூலக வளர்ச்சிக்கு நிதி ஆதாரம் குறைவாக இருப்பதாக அமைச்சரவர்கள கூறினார்கள். இப்போதே ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள், நூலகங்களுக்குரிய பணத்தை வைத்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்தத் தொகையை வசூலிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதுபற்றியும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை வருவாய்த் துறையினர் வசூலித்துத் தரவேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலும் இதுபற்றி வற்புறுத்தியிருக்கிறது; தீவிரமான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் அரசு அவர்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

**திரு. கு. காமாட்சி:** தலைவர் அவர்களே, கிராமங்களில் ஊராட்சிகளில் நூல் நிலைய வரி என்று கட்டுகிறார்களே தவிர, அதனுடைய பயனை மக்கள் அடைய முடியவில்லை. ஆகவே, நடமாடும் நூல் நிலையங்கள் வைப்பதுகுறித்தும் ஐவர் குழு ஏதாவது பரிந்துரை செய்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இயங்கும் நூலகங்கள் சிலபல மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன. சில மாவட்டங்களில் ஐந்து நடமாடும் நூலகங்களும், சில மாவட்டங்களில் மூன்று நடமாடும் நூலகங்களும், சில மாவட்டங்களில் ஒன்றிரண்டு நூலகங்களும் இயங்கி வருகின்ற முறையில் இயங்கும் நூலகங்களை ஊக்குவித்து வருகிறார்கள். நிதி வசதியுள்ள சில மாவட்டங்களில் இவை சிறப்பாக நடந்து வருகின்றன. நிதி வசதி இல்லாத காரணத்தால் சில மாவட்டங்களில் இவை இயங்கவில்லை. இவை எல்லா இடங்களிலும் நல்லமுறையில் இயங்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறோம். இந்தக் குழுவின் அறிக்கை பரிசீலிக்கப்பட்ட பிறகு அதைப்பற்றியும் கவனித்துத் தக்க முடிவு எடுக்கலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே. இப்பொழுது லைப்ரரி இயக்கம் பரவலாக இயங்கி வளரக்கூடிய நேரத்தில், தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குத்

தனியான பயிற்சியெல்லாம் கொடுக்கப்படுகிறதா? அப்படி-யானால், தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் இம்மாதிரியான நூலகங்களை அமைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? அல்லது,... அந்தத் தொழிற்சாலைச் சொந்தக்காரர்களே அங்கு நூலகங்கள் அமைக்கவேண்டும் என்ற முறையில் ஏதாவது சுற்றறிக்கை விடப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அத்தகைய முயற்சி எடுத்துக்கொள்ளலாம். சிலபல இடங்களில், குறிப்பாக மருத்துவ மனைகளில் இட வசதி மற்ற வசதிகள் செய்து தந்தால் அங்கே நூலக இயக்கத்தின் சார்பாக கிளை நூலகம் வைக்கப்படுகிறது. அதேபோன்று, பெரிய தொழிற்சாலையில் அவர்கள் இட வசதி, பிற வசதிகளெல்லாம் செய்து தந்தால் அங்கு ஒரு கிளை நூலகத்தை ஏற்படுத்தித் தருவதற்கான முயற்சியை அந்தந்த மாவட்ட நூலகம் மேற்கொள்ளலாம். அதன்மூலம் தொழிலாளர்களுக்கு இதன் பலன் கிடைக்க வழி உண்டு.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, நூல்களை வாங்கிப் படிக்க முடியாத ஏழை எளிய பிற்பட்ட மக்கள் பெரும் பகுதியினர் இருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் நூலகம் துவங்க வேண்டுமானால் கட்டடம் கொடுக்க வேண்டுமென்று இயக்கத்தினர் கேட்கிறார்கள். இதனால் பல ஊர்களில் நூலகங்களைத் துவக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, படிப்படியாக் சிறிய கட்டடங்களை நூலக ஆணைக்குழுவின் மூலமாகவே உருவாக்கி, எந்த எந்தப் பகுதிகளில் ஏழை எளிய மக்கள் வாழ்கிறார்களோ அங்கே கட்டாயமாக, மூன்று மைல் வட்டாரத்திற்கு ஒரு நூலகம் திறக்கும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலில் கூறியது போன்று நிதி ஆதாரங்களைப் பெருக்க வேண்டியிருக்கிறது. அதற்கான வழிவகை காணுத வரையில் இத்தகைய இடர்ப்பாடுகள் இருக்கத்தான் செய்யும். ஒரு சில மாவட்ட நூலகக் குழுவினர் போதுமான அளவுக்குக் கிளை நூலகங்கள் ஏற்படுத்த முடியாத நிலையில், நிர்வாகச் செலவைக் கூட ஈடுகட்ட முடியாத அளவுக்கு இருக்கிறார்கள்; சில



இடங்களில் வார இதழ், நாளிதழ் கூட தேவையான அளவுக்கு வாங்கிக்கொடுக்க முடியாத நிலை இருந்ததை இப்பொழுது ஓரளவு மாற்றியிருக்கிறோம். என்றாலும், சிலபல இடங்களில் கட்டடத்திற்காகப் பணத்தை முடக்கிவிட வேண்டியதாக இருப்பதால் நிர்வாகச் செலவுக்கே பணம் போதவில்லை என்ற நிலை இருக்கிறது. ஆகவே, எந்தெந்த ஊர்களில் கட்டட வசதி—பள்ளிக்கூடங்களுக்குக் கட்டித் தருவதுபோன்று—கட்டித்தர முன்வருகிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை தரும் முயற்சியை மாவட்ட நூலக இயக்கங்கள் மேற்கொண்டிருக்கின்றன.

* 27 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் எத்தனை நூல் நிலையங்கள் உள்ளன?

(இ) அவைகளை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 88.

(இ) இல்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, கிளை நூலகங்கள் ஓரளவு போதுமான அளவுக்கு இருந்தாலும் அவற்றிலே உள்ள நூல்கள் போதுமான அளவு இல்லை. அறிவியலை வளர்க்கும் நல்ல புத்தகங்களை வாங்கி வைக்கப் பொருளாதார வசதி அவைகளுக்கு இல்லை. அப்படிப்பட்ட புத்தகங்களைக் கொடுக்கும்போது டைரக்டிரேட்டுக்கும் அங்கே இருக்கிற சேர்மன் போன்றவர்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்படுகின்ற காரணத்தால், கொடுக்காமல் நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக அந்தந்த மாவட்டங்களிலுள்ள பொருளாதார வசதிக்கேற்ப புத்தகங்கள் வாங்கிக் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நான் முன்பே கூறியதைப்போல ஒரு குறிப்பிட்ட தொகையை வைத்து அந்தந்த நூலகங்கள் இயங்க நூல்களை வாங்கிக்கொள்ளலாம். சென்ற ஆண்டிலிருந்து மத்திய நூலகம் 10 அல்லது 12 லட்சம் ரூபாய்க்கான நூல்களை வாங்கி..கிளை நூலகங்களுக்கு அனுப்பி வைக்கின்ற ஒரு ஏற்பாடு இருந்து வருகிறது. வடார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் புதிய நூலகங்கள் 10 தொடங்கப்பட வேண்டுமென்ற கருத்தினையும் அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நூலகங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்குவது என்பது இன்னமும் முடிவு செய்யப்படாமல் இருப்பதால் அந்தப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

## பொறியியல் கல்லூரிகளில் இடங்கள்

* 28 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975-76 ஆம் கல்வி ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) 1974-75-ல் இம்மாநிலத்திலுள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளில் இருந்து வந்த மொத்தம் 1,290 இடங்கள், 1975-76 ஆம் கல்வி ஆண்டு முதல் 1,390 இடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, இந்த பொறியியல் கல்லூரியில் இடங்களை அதிகரிக்க மத்திய அரசின் அனுமதி பெற வேண்டியுள்ளதா? பொறியியல் பட்டம் பெற்று, வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கையை அரசு அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மத்திய அரசின் அனுமதி தேவையில்லை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 1967-68 ஆம் ஆண்டில் 1,225 இடங்கள் வைக்கப்பட்டிருந்தன. அப்போது இந்தியா முழுவதும் பொறியியல் பட்டம் பெற்ற ஏராளமானவர்கள் வேலையில்லாமல் இருந்ததால் எல்லா மாநிலங்களிலும் பொறியியல் கல்லூரிகளில் உள்ள இடங்களைக் குறைக்க வேண்டுமென்று 'ஆல் இந்தியா கவுன்சில் ஆஃப் டெக்னிக்கல் எஜுகேஷன்' மத்திய கல்வி அமைச்சர் தலைமையில் கூடி, சிபாரிசு செய்தது. எல்லா மாநிலங்களிலும் அந்த சிபாரிசை ஏற்றுக்கொண்டார்கள். அந்த வகையிலே தான் 1967-68 ஆம் ஆண்டில் நம்முடைய மாநிலத்தில் 1,225 என்று இருந்ததை 1,190 ஆகக் குறைத்தோம். அவர்கள் இன்னும் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் நாம் மேலும் குறைக்க விரும்பவில்லை. 1973 ஆம் ஆண்டு அதை 1,290 இடங்களாக உயர்த்தினோம். பின்னால் 1,390 இடங்களாக அதாவது 100 இடங்களை அதிகரித்திருக்கிறோம். இப்போது பயில்கின்றவர்கள் பட்டம் பெற்று வெளியே வர ஐந்தாண்டுகள் ஆகும். இந்த ஐந்தாண்டுகளில் வருடத்திற்கு 100 இடங்களாகப் பார்த்தால் 500 இடங்கள் அதிகமாகும். நாட்டினுடைய தேவையை எண்ணித்தான் பெருக்க வேண்டியிருக்கிறதே தவிர, மத்திய அரசின் அனுமதி தேவையில்லை. 1,500 இடங்களாகக்கூட அதிகரிக்கலாம். இருந்தாலும் அதற்குக் கல்லூரியிலே இடவசதி, பிற வசதிகள் எல்லாம் இருக்கவேண்டும்.

**திரு. என். மருதாசலம்:** தலைவரவர்களே, பொறியியல் கல்லூரியிலே தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 18 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு விண்ணப்பித்த அத்தனை மாணவர்களையும் சேர்த்திருக்கிறார்கள். 120 மார்க் இருந்தால்தான் சேர்த்துக்கொள்வது என்று முடிவு செய்திருந்தாலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் பொறுத்தவரையில் விண்ணப்பித்த அத்தனை மாணவர்களையும் சேர்த்துக்கொண்ட பின்பும் 13 சதவிகிதம் தான் வந்திருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, பொறியியலிலே 'எலெக்ட்ரானிக்', 'ஏரோனுட்டிக்ஸ்' போன்ற புதிய பிரிவுகளுக்குத் தேவை அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பிரிவுகளிலுள்ள இடங்களை அதிகரிக்க அரசு முயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல 'எலெக்ட்ரானிக்', 'ஏரோனாட்டிக்ஸ்' போன்ற பிரிவுகளில் தேவை அதிகம் இருப்பதால் அந்தப் பிரிவுகளைக் கடந்த 2, 3 ஆண்டுகளில் ஓரளவு விரிவுபடுத்தியிருக்கிறோம். சென்னை, கிண்டி இஞ்சினியரிங் கல்லூரியில் இந்தப் பிரிவுகளிலுள்ள இடங்களைப் படிப்படியாக உயர்த்தியிருக்கிறோம். மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியில் ஏரோனாட்டிக்ஸுக்குப் போதுமான இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே ஐ.ஐ.டி.யிலும் ஏரோனாட்டிக்ஸுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### *Madhavaram Leprosy Home*

*29 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether it is a fact that an isolation ward in the Madhavaram Leprosy Home has been donated by a private organisation; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) மாதவரம் தொழுநோய் இல்லத்திற்கு 22—12—1974 அன்று வட சென்னை அரிமா சங்கத்தால் (Lions Club) நோயாளிகளைத் தனியே பிரித்து வைக்கும் தனி வார்டு ஒன்று நன்கொடையாக கட்டி அளிக்கப்பட்டது. அரசு மானியம் ஏதும் இல்லாமல், அது தனியார் தொண்டு நிறுவனமாக நடத்தப்பட்டு வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, மாவட்டங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக நன்கொடைகள் வசூலித்து இம்மாதிரி முக்கியமான வியாதியஸ்தர்களுக்குத் தனி வார்டுகள் ஏற்படுத்தச் சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா? அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, முக்கியமாகத் தடுக்கப்பட வேண்டிய நோய்களில் இந்தக் காசநோய் ஒன்று. அதற்காகக் காசநோய் வில்லைகள் ஆண்டுதோறும் காந்தியடிகள் பிறந்த நாளிலிருந்து கிட்டத்தட்ட 90 நாட்களுக்கு



விற்கப்படுகின்றன. கடந்த 6, 7 ஆண்டுகளில் தமிழ் நாட்டில்தான் காசநோய் வில்லைகள் அதிகம் விற்பனை செய்யப்பட்டு, அகில இந்தியாவிலேயே முதலிடத்தை தொடர்ந்து வகித்து வருகின்றது. காசநோய் வில்லைகள் விற்பனை மாவட்ட வாரியாகப் பார்க்கப்போனால் ஒரு மாவட்டத்தில் 50,000 ரூபாய், இன்னொன்றில் 1½ லட்சம் ரூபாய் என்ற அளவுக்கு இருக்கிறது. அதன்மூலம் கிடைக்கின்ற பணத்தில் 10 சதவிகிதம் தவிர, மீதி அந்தந்த மாவட்டங்களிலேயே காசநோய் தடுப்புப் பணிக்காகச் செலவிடப்படுகிறது.

காசநோய் அளவுக்குத் தொழுநோயும் முக்கியமாகத் தடுக்கப்பட வேண்டிய ஒன்றாக இருந்தபோதிலும் அந்த அளவுக்கு இடம் பெறவில்லை. ஆனால் தொழுநோயாளிகளைப் பராமரிக்கத் தனியார் இல்லங்கள் பரவலாக இருக்கின்றன. கிறிஸ்தவ பாதிரிமார்கள் அந்தத் தொண்டில் சிறந்து விளங்குகிறார்கள். கிறிஸ்தவ பாதிரிமார்கள் என்று சொல்லும்போது அவர்கள் பிரச்சாரத்திற்காக இத்தகைய இல்லங்களை நடத்துகிறார்கள் என்று சொல்லவில்லை; சில இடங்களில் 2, 3 சகோதரிகளை வைத்து இத்தகைய தொண்டு இல்லங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கமும் அத்தகைய இல்லங்களுக்கு ஒரு குறிப்பிட்ட விகிதாச்சார உதவித் தொகை வழங்கி, ஆதரவு காட்டி வருகிறது. அதேநேரத்தில் பிச்சை எடுக்கும் தொழு நோயாளிகளைப் பராமரிக்க அரசாங்கம் பத்து மறுவாழ்வு இல்லங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அவைகளில் ஏறத்தாழ 4,000 பேர் தங்கியிருக்கிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனியாக நன்கொடை வசூலித்து இத்தகைய நிறுவனங்களை நடத்தும் முயற்சிகளை இந்த அரசு அண்மைக் காலத்திலே ஏற்றுக்கொள்வதில்லை.

### *Treatment service for T.B. patients*

*30 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to give domiciliary service to T.B. patients in all the districts in the State; and

(*b*) if so, the details thereof?

[1975 அக்டோபர் 24

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) தமிழ்நாட்டில் 1963 ஆம் ஆண்டிலிருந்து செயலிலுள்ள காச நோய்க் கட்டுப்பாடு தேசியத் திட்டத்தின் கீழ், மாவட்டங்கள் அனைத்திலும் காச நோயாளிக்கு அவரவர்களின் வீடுகளில் இருந்தவாறே சிகிச்சை அளிக்கப் படுகிறது. [illegible]

(இ) காசநோய்க் கட்டுப்பாடு தேசியத் திட்டத்தின் கீழ் காச நோயாளிகளின் வீடுகளுக்குச் சென்று சிகிச்சை அளிக்கின்ற முறையின் மூலம் மட்டுமே பெருவாரியான நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க முடியும்; அரசு மருத்துவ நிறுவனங்கள், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் அனைத்தும் காசநோய்க் கட்டுப்பாடு மாவட்ட அதிகாரியின் தலைமையில் காசநோய்க் கட்டுப்பாடு திட்டத்தில் பங்கு ஏற்று செயல் புரிந்து வருகின்றன. கிராமப் பகுதிகளில் , காச நோயாளிகளுக்குக் காசநோய் எதிர்ப்பு மருந்துகள் வழங்கப்படுகின்றன.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், 1963 ஆம் ஆண்டிலிருந்தே காச நோயாளிகளுக்கு அவர்கள் வீட்டிலேயே வைத்திய வசதி செய்து கொடுக்கப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இப்போது அந்த வைத்திய வசதி மிகவும் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த வியாதியும் அதிகமாகப் பெருகிக் கொண்டிருக்கிறது. பல ஆஸ்பத்திரிகளில் போதுமான வைத்தியம் செய்ய மருந்து கிடைப்பது இல்லை. தனிப்பட்ட நோயாளிகள் அங்கு வந்து வைத்தியம் பெற அதிகம் செலவாகிறது. இந்தக் கஷ்டத்தைப்போக்க 'மொபைல் வான்ஸ்' வைத்து 10 மைல் சுற்றளவுக்குள் இருக்கிறவர்களுக்கு அங்கே சென்று மருந்து கொடுப்பது மட்டுமல்லாமல் மற்ற வசதிகளும் செய்து கொடுத்தால் சிறப்பாக இருக்கும். பெருந்துறை சானடோரியம் முக்கியமான ஒன்று. அதற்கு இப்போது போதுமான பணம் இல்லை. அதற்குச் சர்க்கார் வருஷம் 3 அல்லது 4 லட்சம் ரூபாய் மானியமாகக் கொடுக்கும் திட்டம் இருக்கிறதா ? இல்லை என்றால் இனிமேலாவது அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கிராமங்களிலுள்ள மக்களுக்கு நடமாடும் மருத்துவமனை ஏற்படுத்தப் போதுமான வசதி இப்போது இல்லை. பி.ஸி.ஜி. வழங்க நடமாடும் மருத்துவமனைபோல மொபைல் யூனிட்—பரவலாக ஏழு வயதிற்குட்



1975 அக்டோபர் 24]

பட்டவர்களுக்கு—அவர்களுக்குக் காசநோய் வராமலேயே தடுப்பதற்கான — பெருமுயற்சி எடுத்துக்கொண்டு, தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் ஊசிபோடப்பட்டு, ஓரளவு ஒரு சுற்று வந்திருக்கிறது. எல்லா மருத்துவமனைகளிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருந்து ரெகுலர் டிஸ்பென்சரி வரையில் காசநோய் சிகிச்சைக்கான மருந்துகள் வழங்குவது பரவலாக்கப்பட்டிருக்கிறது. படுக்கைகளைக் கொண்ட காசநோய் சிகிச்சை இல்லங்கள் அமைக்கப்பட்டு, அவை மாவட்ட ஆட்சித் தலைவரால் குழுக்கள் அமைக்கப்பட்டு — அவற்றின் நிர்வாகத்தைக் கவனிக்கிறார்கள். அவற்றுக்கு அவசியமாகிற அரசாங்கத்தின் உதவி (கிராண்டு) அளிக்கப்படுவதோடு வேறு உதவிகள் அளிப்பதுபற்றியும் அவ்வப்போது பரிசீலிக்கப்பட்டு அளிக்கப்படுகிறது. நமது மாநிலத்தில் காச நோய்க்காரர்களுக்குச் சிகிச்சை அளிப்பது நடைமுறைப் படுத்தப்படாமல் இல்லை.

நமது மாநிலத்தில் 7 லட்சம் பேர் காசநோயால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும் என்கிற விவரம் பத்து ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட புள்ளி விவரம். அது இன்னும் மாறவில்லை. காரணம் முன்பே காசநோயால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடியவர்களைப் பற்றிய புள்ளிவிவரம் சரியான முறையில் சேகரிக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. காசநோய் இல்லாதவர்களுக்குக் கூட ஓரளவு அந்த நோய் இருப்பது போன்ற அடையாளம் தோன்றுகிறது. ஆறு மாதம் மாத்திரை சாப்பிட்டால் மாறுகிறது. இப்படி ஃப்ளக்சுவேட்டிங் நிலைமையில் இருப்பதால், ஜனத்தொகை பெருக்கத்திற்கேற்ப, இப்போதும் 7 லட்சம் பேர்கள் இருக்கலாம் என்றே வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. என்றாலும் தமிழகத்தில் காசநோயைத் தடுத்து, சிகிச்சை அளிக்கும் பணி வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பதை, இங்கேயுள்ள மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த அலுவலர்களே ஏற்றுக்கொள்கிறார்கள்.

**திரு. தி. பொன்னுமலை :** காசநோயைத் தடுக்க, அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலே படுக்கை வசதியுள்ள மருத்துவமனைகளை ஏற்படுத்தி, காச நோயாளிகள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சைபெற ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1975 அக்டோபர் 24

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** பொன்னுமலை முழுவதும் பணமாக இருந்தால் அந்த ஏற்பாட்டைச் செய்யலாம். ஆறு படுக்கைகள் உள்ள இடத்தில் இன்னொரு படுக்கையை ஏற்படுத்தக் கூட அகில இந்திய தன்மையில் பொருளாதார வசதியில்லை என்று மறுக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் மருத்துவமனைகளில் உள்ள எல்லாப் படுக்கைகளையும் சேர்த்தால் 23 ஆயிரம் படுக்கைகள்தான் இருக்கின்றன. மற்ற மாநிலங்களின் விகிதாசாரத்தோடு ஒப்பிடுகிறபோது இது அதிகம். இவற்றில் ஏறத்தாழ 3,200 படுக்கைகள் காசநோய்க்காரர்களுக்கு என்று இருக்கின்றன — நான் சொல்லுகிற புள்ளிவிவரத்தில் ஒன்றிரண்டு வேற்றுமை இருக்கலாம் — தேவைக்கேற்ப அவ்வப்போது ஏற்பாடு செய்யப்படுகிறது. நாம் 7 லட்சம் பேர்களுக்கு சிகிச்சை வழங்கியாக வேண்டும். 5 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் முறையாக சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஆகையால் காசநோயைத் தடுக்க, வந்தவர்களுக்குச் சிகிச்சை அளிக்க இப்போதே எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. காச நோயைப்பற்றி ஆராய்ச்சி நடத்துகின்ற ஒரு தனி நிலையம் — சென்னையில் இருக்கிறது. அவர்களே கூட

'Domiciliary treatment is the best opportune treatment for all the patients who are suffering from T.B.'

என்ற கருத்தை புள்ளிவிவரத்தோடு—ஆதாரத்தோடு — ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். காசநோய்க்காரர்கள் படுக்கையில் இருந்துதான் சிகிச்சை பெறவேண்டுமென்ற நிலைமை 25 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தது. இப்போது சல்ஃபானைட்சின் மருந்துகள் எல்லாம் கண்டுபிடித்த பிறகு—வீட்டில் இருந்தே, குழந்தைகளுடன், மற்றவர்களுடன் இருந்து கொண்டே இந்த மாத்திரைகளைச் சாப்பிட்டுக்கொண்டு வந்தாலே இந்த நோயில் இருந்து விடுபட முடியும். வீட்டில் இருக்கும்போது இந்த நோய் மற்றவர்களுக்குப் பரவாது இருக்க—கண்ட இடத்தில் துப்புதல், இருமுதல் போன்று இல்லாது கவனித்துக்கொண்டு வந்தாலே போதும். வீட்டில் இருந்தே சிகிச்சை பெறலாம். காசநோய் தோன்றக்கூடிய — அதுசம்பந்தமான அடையாளம் ஏற்படுகிற சமுதாய நிலை இருக்கிறது. வீட்டில் இருந்து கொண்டே அந்த நிலையில் சிகிச்சைபெறுவது மிகவும் பொருத்தம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.



1975 அக்டோபர் 24]

## தேனி மருத்துவமனை ஆலோசனைக்குழு

*31. **வினா திரு. நா. வெ. குருசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டம், தேனி அரசினர் மருத்துவமனையில் அட்வைசரி கமிட்டி மெம்பர்கள் போடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், யார் யார் என்ற விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) கீழ்வரும் நபர்களை அரசு அரசாணை வாலாய எண் 2906, சுகாதாரம், நாள் 31—12—1974-இல் அரசு சார்பற்ற உறுப்பினர்களாக மூன்று ஆண்டுக் காலத்திற்கு நியமித்துள்ளது.

(1) திரு. வைகுண்டசாமி, பருத்தி வியாபாரி, தேனி.

(2) திரு. எஸ். ராசு, சிவானந்ததேவரின் புதல்வர், கான்வென்ட் தெரு, தேனி.

(3) திரு. எஸ். ராமகிருட்டிண செட்டியார், வியாபாரி.

(4) திருமதி சோணைமுத்து, பள்ளர் தெற்குத் தெரு, அல்லி நகரம்.

(5) திரு. வி. கே. சுப்பிரமணியம், காரியதரிசி, பழனி செட்டிபட்டி யூனியன், தேனி.

(6) புலவர் வெங்கடேசன், 36 கி. மு. சாவடி தெரு, அல்லி நகரம்.

## *Drugs Inspectors.*

*32 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state:

(q) whether it is a fact that the Government propose to raise the strength of Drugs Inspectors; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) தற்போது மாநில மருந்துப்பொருள் கட்டுப்பாட்டு நிர்வாகத்தின் கீழ் மருந்துப்பொருள் முதுநிலை ஆய்வாளர்கள் 10 பேரும், மருந்துப் பொருள் ஆய்வாளர்கள் 59 பேரும் உள்ளனர். திட்டம் சாரா

244 வினாக்கள்—விடைகள்

[1975 அக்டோபர் 24

பணித்திட்டத்தின் கீழ் புதுப் பதவி எதுவும் ஏற்படுத்துவதற்கு அறவே தடை விதிக்கப்பட்டுள்ளதால், முதுநிலை மருந்துப் பொருள் ஆய்வாளர் ஒருவர் மற்றும் மருந்துப்பொருள் ஆய்வாளர்கள் அறுவர் விடுப்புக்கால பதிலிப் பதவிகள் ஏற்படுத்துவதற்காக மாநில மருந்துப்பொருள் கட்டுப்பாட்டு அதிகாரியிடமிருந்து வரப்பெற்ற செயற்குறிப்பு ஆறு மாத காலத்திற்குத் தள்ளிப் போடப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : இப்போதே மருந்தில் கலப்படம் அதிகரித்துள்ளது. பழைய மருந்துகளுக்கே புதிய மருந்து லேபிள்களை ஒட்டி விற்பனை செய்கிறார்கள். தஞ்சாவூர் மெடிகல் காலேஜ், சென்னை போன்ற இடங்களில் ஊசி போடப்பட்டதன் காரணமாக சிலர் இறந்துவிட்டதாகப் பத்திரிகையில் பார்த்தோம். மருந்துகள் சரியான முறையில் தயாரிக்கப்பட்டு, விற்பனைக்கு வருகின்றனவா என்பதைப் பரிசீலிப்பது மிகவும் அவசியம். கோடிக்கணக்கான ஜனங்கள் அவற்றை நம்பி இருக்கிறார்கள். இன்னும் அதிகப்படியான ஆய்வாளர்களைப் போட்டு, தரமற்ற மருந்துகள் மார்க்கெட்டிற்கு வராமல் தடுப்பதில் அரசுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது? ட்ரக் இன்ஸ்பெக்டர்களுடைய பதவிகளை அதிகப்படுத்துவதில் என்ன சங்கடம் இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அண்மைக்காலத்தில் இவர்
கள்து எண்ணிக்கையை அரசு அதிகப்படுத்தியது. முன்பு
மருந்துப்பொருள் ஆய்வாளர்கள் 18 பேர்கள் மட்டும் இருந்
தார்கள். ஆய்வாளர்கள் 14 பேர், முதுநிலை ஆய்வாளர்கள் 4 பேர்
இருந்தார்கள். இப்போது 1971 ஆம் ஆண்டுதான் முதுநிலை
ஆய்வாளர்கள் பத்துப் பேர்களும், ஆய்வாளர்கள் 59 பேர்களும்,
இவர்களைத் தவிர உதவி அதிகாரி என்று ஒருவரும் நியமிக்கப்
பட்டார்கள். இப்போது அண்மையில் ஜாயிண்ட் டைரெக்டர்—
தனை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இத் துறையில்
அதிகாரிகளின் எண்ணிக்கை உயர்ந்துதான் இருக்கிறது.
என்றாலும், ஓய்வு எடுத்துக்கொள்கிறவர்கள்—விடுமுறையில்
செல்கிறவர்கள் இடங்களுக்குப் போட லீவ் ரிசர்வ்—பதிலிப்
பதவிகள் சில ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டிருக்
கிறார்கள். இப்போது பொருளாதார நிலை சரியில்லாததால்
6 மாத காலத்திற்குப் பிறகு அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளலாம்
என்ற யோசனை இருக்கிறது.



1975 அக்டோபர் 24]

பழைய மருந்துகளை புதிய மருந்துபோல லேபிள் ஒட்டி விற்கிறார்கள் என்று சொன்னார். அவருக்கே ஹோமியோபதி மருத்துவத்தில்தான் அதிக நம்பிக்கை இருக்கிறது என்று எனக்குத் தெரியும். அலோபதியில் பழைய மருந்து இல்லை—புதிய மருந்தையே கொடுக்கிறபோது கூட அலர்ஜி ஏற்படுமானால் உடனே அதை மாற்ற மருந்துகொடுக்க முடியாது போகிறபோது உயிருக்கே ஆபத்து ஏற்படுகிற நிலைமை அமெரிக்காவில் இருந்து எல்லா நாடுகளிலும் இன்றைக்கு இருக்கிறது. சில மருந்துகள் சில நேரங்களில்—சில நோயாளிகளிடத்தில் திடீர் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. பென்சிலினை நான்கு முறைகள் அவருக்குப் போடுகிறபோது ஒன்றும் செய்கிறதில்லை. அதே மருந்து அந்த நோயாளிக்கே ஐந்தாவது முறை கொடுக்கிறபோது திடீர் விளைவை அவரிடத்து ஏற்படுத்திவிடுகிறது என்கிறபோது டெஸ்ட் டோஸ் கூடப் போட்டு கண்டுபிடிக்க முடியாத நிலைமையில்தான் இருக்கிறது. இதுபோல கோடியில் ஒருவர், ஐம்பது லட்சத்தில் ஒருவர் தான் பாதிக்கப்படுகிறார் என்றாலும் இதையும் தவிர்க்க விஞ்ஞானத்தின் மூலம்தான் முயற்சி எடுக்கப்பட்டாக வேண்டும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : முன்பெல்லாம் உற்பத்தி செய்யப்படுகிற மருந்தின் மேல் உற்பத்தி செய்யப்பட்ட தேதி, அந்த மருந்தின் எக்ஸ்பையரி தேதி ஆகியவற்றைக் குறிப்பார்கள். அதை இப்போது குறிப்பதில்லை. அதைக் கட்டாயம் குறிக்க வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: எல்லா மருந்தும் எக்ஸ்பையரி ஆவதில்லை. மனிதர்களுக்குத்தான் எக்ஸ்பையரி உண்டு. சில மருந்துகளை பர்மனெட்டாக நான்கைந்து வருஷம் கூட வைத்துக் கொள்ளலாம். சில குறிப்பிட்ட மருந்துகள்தான் சில குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்படுத்தப்படவேண்டும். அதற்குப் பிறகு அதன் சக்தியை இழந்துவிடுகிறது. இதுபோன்ற மருந்துகளின் மேல் உற்பத்தி செய்யப்பட்ட தேதி, எக்ஸ்பையரி தேதி ஆகியவை—மத்திய அரசுச் சட்டத்தின் கீழேயே குறிக்கப்பட்டு வருகிறது. தவறு இருந்தால் அது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்:** ஏற்கனவே டூரிங் இன்ஸ்பெக்டர்களாக இருந்து—கமிஷன் மூலம் தேர்ந்தெடுக்கப்படாது வேலையிழந்தவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இனிமேல் அந்தப் பதவிக்கு ஆள் எடுக்கிறபோது அவர்களுக்கு முதலிடம் கொடுப்பதுபற்றி கவனிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

*Training for Engineering personnel*

*33 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Government to set up a centre for conducting training courses for new entrants, as well as refresher courses for the engineering personnel; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) & (ஆ) தலைவரவர்களே, புதிதாக நியமிக்கப்படும் பிரிவு அலுவலர்கள், நேரடியாக நியமிக்கப்படும் உதவிப் பொறியாளர்கள் ஆகிய அனைவருக்கும் பயிற்சி அளிக்கவும், பொதுப்பணித் துறை பொறியாளர்களுக்கு நினைவுகூர் பயிற்சி அளிக்கவும் பயிற்சி நிறுவனங்கள் ஏற்படுத்தப்படலாம் என நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு செய்த பரிந்துரைகளை அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டது. ஆனால் தற்போதுள்ள நிதி இடர்ப்பாடு காரணமாக இப்பரிவுரைகளைச் செயல்படுத்துவது ஒத்திப் போடப்பட்டுள்ளது.

[முற்பகல் 9.30]

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவரவர்களே, அவர்களுக்கு என்ன மாதிரியான டிரெயினிங் கொடுக்கப்படும்? அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக சில டிரெயினிங் கோர்ஸ் வைத்திருந்தார்களே, அதற்கும் இதற்கும் பொருத்தம் உண்டாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், இவர்களுக்குக் கொடுக்கப் போகிற பயிற்சி அவர்கள் செய்யப் போகிற வேலையை



ஒட்டியதாகும். நிதிப் பற்றாக்குறை காரணமாக, இப்போதிருக்கிற டிசைன் ரிசர்ச் இன்வெஸ்டிகேஷன் டிபார்ட்மெண்டில் உள்ள அதிகாரிகளைக் கொண்டே பயிற்சி அளிக்க முடியுமாவென்று பார்க்கச் சொல்கிறோம். பயிற்சி அளிக்க முடியுமானால் பயிற்சி அளிக்கப்படும். இவர்களுக்குத் தனியாக பயிற்சி அளிக்கும் எண்ணம் நிதி காரணமாக இப்போதில்லை.

பெருமுளை-தில்லையாடி சாலை

*34 வி.—**திரு. எஸ். கணேசன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் வட்டத்திலுள்ள பெருமுளை-தில்லையாடி சாலை பேருந்துகள் செல்வதற்கு இயலாத வகையில் பழுதடைந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) மாயூரம் வட்டத்திலுள்ள பெருமுளை-தில்லையாடி-திருக்கடையூர் சாலைகள் புதுப்பிக்கும் பணியினை ரூ. 37,500 மதிப்பீட்டில் "பராமரிப்பு நிதியின்" கீழ் மேற்கொள்ள ஒப்பந்தம் விடப்பட்டு விரைவில் பணி முடிவடையும் நிலையிலுள்ளது. மேலும், இச்சாலை முழுமையும் சரளைக்கற்கள் பரப்பும் பணியினை "பராமரிப்பு நிதியின்கீழ்" மேற்கொள்ளும்படி நாகப்பட்டினம் கோட்டப் பொறியாளர் பணிக்கப்பட்டுள்ளார்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, இதைப் போலவே மாயூரம் வட்டத்திலுள்ள மாப்படுகை, குறிச்சி போன்ற அரசினர் நெடுஞ்சாலைகள் நெடுஞ்சாலைத் துறையினரிடம், பல முறை குறிப்பிட்டும், பழுது பார்க்கப்படாமல் இருப்பதை, இனியேனும் ஆணையிட்டு சரி செய்ய அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

[1975 அக்டோபர் 24

உணவுப் பொருள் கடத்தல் குறித்த தகவல்

*35 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974 ஆகஸ்டு மாதம் முதல் கடத்தல் உணவுப் பொருளைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு. ரொக்கப் பரிசு வழங்கும் திட்டம் ஏதேனும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) நமது மாநில எல்லைகள் மூலம் இன்றியமையாப் பொருள்கள் கடத்தப்படவிருப்பதாகத் தகவல் கொடுத்தால் கைப்பற்றப்பட்ட பொருள்களின் மதிப்பில் 25 சதவிகிதம் தகவல் கொடுத்தவர்களுக்கு வெகுமதியாக வழங்கப்படும்.

மாநில எல்லைப் பகுதிகள் அல்லாத ஏனைய உள்நாட்டுப் பகுதிகளில் பதுக்கல், சட்ட விரோதமான கடத்தல் போன்ற செயல்கள் பற்றி தகவல் கிடைத்து கைப்பற்றப்பட்ட பொருள்களின் மதிப்பில் 10 சதவிகிதம் தகவல் கொடுத்தவர்களுக்கு வெகுமதியாக அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

தகவல் கொடுப்போர், பொது மக்கள், உணவுப் பொருள் வழங்கு துறையினர், காவல் துறையினர் எவராக இருப்பினும் வெகுமதி வழங்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தக் கடத்தல் உணவுப் பொருட்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுவதைத் தவிர்த்து பிடிக்கப்பட்ட பொருட்களில் ஒரு பகுதியைப் பரிசாக வழங்கலாமே. இதை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, உணவுப் பொருட்கள் பற்றாக்குறை. ஆகவே. அவை நாட்டுக்குத் தேவை.



1975 அக்டோபர் 24]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தப் பரிசுத் திட்டத்தின் மூலமாக அரசுக்கு எதிர்பார்த்த பலனுக்கு அதிகமாக கிட்டியிருக்கிறதா என்பதையும், அப்படியானால் இதை மேலும் விரிவுபடுத்துவதற்கு அரசு நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளவிருக்கிறதா என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இதன் மூலமாக ஏராளமான நெல்லும், அரிசியும் அரசாங்கத்தின் கைக்கு வந்திருக்கிறது.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, இந்தத் தகவல் கொடுப்பவர்களைப் பற்றி இடையிலே யாராவது சொல்லிவிட்டால் அவர்களுக்கு ஏற்படுகிற தொல்லைகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்குச் சரியான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, தகவல் முறையில் கேள்வி அமைந்துள்ளது. அவர்களை நிச்சயமாக கொடுப்பவர்களைக் காட்டிக் கொடுக்காமல் இருப்பது நல்லது என்று காவல் துறை பாதுகாக்கும்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister the quantum of foodgrains got from the information and the amount disbursed so far to those who have given information?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, 1974 ஆம் ஆண்டு 39,118 குவிண்டால் நெல். 21,854 குவிண்டால் அரிசி, 1,835 குவிண்டால் சிறு தானியங்கள். மொத்தம் 70 ஆயிரம் ரூபாய் 1974 இல் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்த சோதனைச் சாவடிகளிலே பல சாவடிகளில் ஒரு ஆள் மட்டும் தனியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அந்தச் சாவடிகளிலே கடத்தப்படுகிறது. அவைகளைப் பலப்படுத்துவதற்கு ஏற்பாடுகளை அரசாங்கம் செய்திருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இப்போதே கடத்தல் குற்றங்களுக்குக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## ஆந்திர மாநிலத்திலிருந்து பெறப்பட்ட புஞ்சை தானியங்கள்

* 36 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆந்திர மாநிலத்திலுள்ள பொப்பிலியிலிருந்து தமிழ் நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் அண்மையில் வரவழைத்திருந்த புஞ்சை தானியங்களில் மண் கலப்படம் செய்யப்பட்டிருந்தது உண்மையா?

(இ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) ஆந்திர மாநிலத்திலுள்ள பொப்பிலியிலிருந்து அனுப்பப்பட்டிருந்த 280 மூட்டை கேழ்வரகில் 10 மூட்டைகளில் மண் கலப்படம் செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு பாதிக்கப்பட்ட எல்லா சரக்குகளும் திருப்பி அனுப்பப்பட்டு, அவற்றுக்குப் பதிலாக வேறு மூட்டைகள் பெறப்பட்டன. எனவே இதில் குற்றவியல் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, இப்படி கலப்படம் செய்யப்பட்ட மூட்டைகள் திருப்பியனுப்பப்பட்டதாகவும் அதற்குப் பதிலாக பெறப்பட்டதாகவும் சொன்னார்கள். வேறு வகையில் இதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு, மத்திய அரசாங்கத்தின் மூலமாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஏதேனும் ஆணை செய்ய முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, இதிலே கலப்படம் என்ற பிரச்னை எழவில்லை. நாம் வாங்கும்போது, வாங்கி வந்த 280 மூட்டைகளில் 10 மூட்டைகளிலே அதிக மண், கல் சேர்ந்து இருந்ததாக சந்தேகப்பட்டு முழு சரக்குமே தேவையில்லை என்று சொல்லி யாரிடத்திலே வாங்கினோமோ அவர்களுக்கே திருப்பிக் கொடுத்து விட்டோம். அவர்கள் பதிலாக நல்ல சரக்கை கொடுத்ததால் வாங்கிக் கொண்டோம்.



## தச்சம்பட்டு கிராமத்தில் உப-மின் நிலையம்

* 37 வினா—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்: மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை வட்டம், தச்சம்பட்டு கிராமத்தில் மின்சார சப்-ஸ்டேஷன் (உப மின் நிலையம்) அமைக்கும் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது முதல் செயல்பட உள்ளது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ஆம்.

(இ) ஆய்வில் உள்ளது.

**திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்:** தலைவரவர்களே, என்னுடைய பகுதியில் திருவண்ணாமலையிலிருந்து 20 மைலுக்கு மேலாக உள்ள கிராமங்களில் மின்சாரம் சப்ளை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் அங்கே ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு விவசாயியும் இரண்டு முறை, மூன்று முறை மோட்டார்காயில் தீய்ந்து விடுவதால் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே சீக்கிரமாக இதை முடிப்பதற்கு ஆணை செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, தேவைப்படும் ஆக்க சக்தியை ஆக்கப் பூர்வமாக மதிப்பிட்டு, துணை மின்நிலையம் ஏற்படுத்த அவசியம் உள்ளதா என்பதை போதிய காரணங்களுடன் விளக்கும்படி மின்வாரிய மேற்பார்வையாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவருடைய அறிக்கை வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

## இறைவைக் கிணறுகளுக்கு மின் இணைப்பு

* 38 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில், வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் புதியதாக எத்தனை இறைவை கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது?

[1975 அக்டோபர் 24

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 1975-76-ல் திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாகிய நாங்குநேரி, சங்கரன்கோவில், கோவில்பட்டி, விளாத்திகுளம், தென்காசி ஆகிய இடங்களில் 1,750 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட இருக்கிறது.

**திரு. எம். முத்தையா :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலில் வழங்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற சூழ்நிலை இருக்கிறதேயொழிய தற்சமயம் வரை எத்தனை இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் கேள்வியே எத்தனை கிணறுகளுக்குக் கொடுப்பதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பது தான். அதனால் தான் உத்தேசமாகச் சொல்லியிருக்கிறேன். திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே தமிழ் நாடு மின்சார வாரியம் திருநெல்வேலி மாவட்டத்தில் 1—2—1975 வரை 42,555 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கியிருக்கிறது. 1974-75-இல் இதுவரை 1,065 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் 200, 300 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கக் கூடும்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் பதில் அளிக்கையில் நெல்லை மாவட்டத்தில் வறட்சியான பகுதிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். திருச்செந்தூர் வட்டத்தில் சாத்தான்குளம், நாசரேத் போன்ற பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. மணிமுத்தாறில் தண்ணீர் வந்தால் தான் அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைக்கும். ஆனால் தண்ணீர் அங்கே வந்து சேருவதில்லை. ஆகவே, அந்தப் பகுதிகளையும் வறட்சிப் பகுதிகளாகச் சேர்த்துக் கொண்டு மின் இணைப்புக் கொடுப்பதற்கான முயற்சிகளை அரசு எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, இது வறட்சித் திட்டத்தில் கொடுக்கிற மின் விசையேற்றம் அல்ல. அந்தப் பகுதிகளில் எவ்வளவு மின் விசையேற்றங்களுக்கு அனுமதி கொடுக்கலாம் என்று, அந்த நிலைமைகளை அனுசரித்து இப்போது இருக்கிற அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு அனுமதி கொடுக்கப்பட்டு வருகிறது.



1975 அக்டோபர் 24]

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, இந்த வறட்சிப் பணியில் குடி தண்ணீருக்காகவும், விவசாயத்திற்காகவும் கிணறுகளை ஆழப்படுத்துவது, புதிய கிணறுகளைத் தோண்டுவது ஆகிய இந்தக் காரியங்களைச் செய்திருக்கிறீர்களே, இப்பேர்ப்பட்ட இடங்களில் அவைகள் தூர்ந்து போகாமல் இருக்கவும், அவைகள் மக்களுக்கு உபயோகப்படவும், அவைகளை எனர்ஜைஸ் பண்ணவுமான ஏற்பாடுகள் உண்டா? சில இடங்களில்தானே செய்திருக்கிறீர்கள். இந்த மாதிரியாக மாவட்ட வாரியாகச் செய்வதற்கு குறிப்பு உண்டாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, இது வருவாய்த்துறை அமைச்சரவர்களைக் கேட்கவேண்டிய கேள்வி.

THIRU B. VENKATASWAMY : In the drought-affected areas, people are suffering a lot because of the drought conditions. May I know from the Hon. Minister—

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு குறிப்பிட்ட இடத்தில் எத்தனை கிணறுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்று கேள்வி கேட்கப்பட்டுள்ளது. இப்படிக் கேட்டால் எப்படி?

THIRU B. VENKATASWAMY : Regarding drought only I am asking.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வறட்சியைப்பற்றி என்ன. . .

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether any special treatment will be given to the drought-affected areas in energising pumpsets ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, இப்போது வறட்சி பகுதி இல்லை. ஆகவே இந்தப் பிரச்னை எழவில்லை.

### மாவட்டங்களுக்கிடையிலான பேருந்துகளில் நின்று செல்லும் பயணிகள்

*** 39 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டங்களுக்கிடையே ஓடும் பேருந்துகளில் நின்று கொண்டு செல்லும் பயணிகள் அனுமதிக்கப்பட்டார்களா ?

(இ) ஆம் எனில், தற்போது நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) பேருந்து உரிமையாளர்கள் சிலர் தாக்கல் செய்த ரிட் மனுக்களை விசாரித்த உயர்நீதி மன்றம் பேருந்துகளில் நின்று கொண்டு பயணம் செய்யும் பயணிகளை ஏற்றிச் செல்லும்பொருட்டு, பேருந்து உரிமையாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி குறித்த நிபந்தனையை மாற்றுவதற்கு விண்ணப்பம் செய்ய வேண்டுமென அவர்களைக் கட்டாயப்படுத்துவதற்கு வட்டாரப் போக்குவரத்து அதிகார மன்றத்திற்கு எவ்வித அதிகார வரம்பும் இல்லையென்று தீர்ப்பளித்தது. இதனையொட்டியும் வரி விதங்கள் உயர்ந்துள்ளதை யொட்டியும், நிற்கும் பயணிகளை ஏற்றிச் செல்லுவதற்கான ஆணை ரத்து செய்யப்பட்டது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, அரசுப் பேருந்துகளில், தற்போதெல்லாம் மிக அதிகமாக இடம் கிடைக்காத காரணத்தினால், 4, 5 மாதங்களாக மறுபடியும் ஆம்னி பஸ்களும், ஒப்பந்த ஊர்திகளும் அதிகமாகப் பயணிகளை ஏற்றுவதைப் பார்க்க முடிகிறது. எனவே, மாவட்டங்களைக் கடந்து நீண்ட தூரம் செல்லக்கூடிய அரசாங்க விரைவு வண்டிகளில் மாடிப் பேருந்துகளை விடுவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, மாடிப் பேருந்துகளை சென்னை நகரம் போன்ற இடங்களில் வேண்டுமானால் விடலாமே தவிர, நெடுந்தூரப் பயணத்திற்கு அது சரியாக இருக்குமா என்பது சந்தேகத்திற்குரிய விவகாரம். நெடுந்தூரப் பயணப் பேருந்துகள் செல்லும் வழி நெடுக மரங்களிருக்கின்றன. அந்த மரங்களை வெட்டிவிட்டு, மாடி பஸ்களை விடுவது கடினமான காரியம். சென்னையிலே மாடி பஸ்களை விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, தற்போது தயாராக இருக்கின்றன. விரைவிலே அவை நகர மக்களுக்குப் பயன்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவரவர்களே, கிராமப் பகுதிகளிலே கடைசி பஸ்களுக்காக இரவு நேரங்களிலே காத்துக் கொண்டிருக்கிற பிரயாணிகள் பாதுகாப்பற்ற நிலையிலே இருக்கிறார்கள். அப்படி வருகின்ற பஸ்கள், இடமில்லாத காரணத்தால் அவர்களை ஏற்றாமல் சென்றுவிடுமானால்,



அப்பிரயாணிகள் அந்த இடத்திலேயே இரவைக் கழிக்கவேண்டியிருக்கிறது. அல்லது தூரத்திலுள்ள கிராமங்களுக்கு நடந்து செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆகவே, இரவு நேரங்களிலே நின்று செல்ல பிரயாணிகள் தயாராக இருப்பின், அவர்களை ஏற்றிச்செல்ல வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பிக்க அரசு முன்வருமா? அதன்மூலம் பயணிகள் பயன்படுவார்கள் என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இரவு நேரங்களில், எக்ஸ்பிரஸ் பஸ்கள்தான் போய்க்கொண்டிருக்கின்றன. ஆகவே, அப்பொழுது நின்று கொண்டு போவது என்பது இயற்கையாகவே கொஞ்சம் கடினமான காரியம். அந்த முறைகளெல்லாம் முயற்சி செய்யப்பட்டு சரிவர இல்லை என்றுதான் இந்தத் திட்டம் வந்திருக்கிறது, ஹைகோர்ட் தீர்ப்பும் இருக்கிறது. ஆகவே, விதிவிலக்கு அளிப்பது தற்பொழுது கடினம் என்று நான் நம்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சபாநாயகர் அவர்களே, தற்பொழுது எப்படி இன்டர்-ஸ்டேட் பஸ்களில் ஸ்டான்டிங் பாசஞ்சர்கள் கூடாது என்று சொல்கிறார்களோ, அதைப்போல் இல்லாமல். டவுனிலே ஓடுகிற பஸ்களில் எக்கச்சக்கமான ஓவர்லோடு ஏற்றுகிறார்கள். அதுவும் இன்சென்டிவ் போனஸ் ஸ்கீம் வந்த பிறகு, மிக அதிகமாக ஏற்றுகிறார்கள். உள்ளே இடமில்லாதவர்கள், கடைசியிலே ஃபுட் போர்டிலே தொங்குகிறார்கள். அவர்கள் நடுவழியில் இறக்கப்பட்டு, ஃபைன் கட்டு என்று சொல்லப்படுகிறார்கள். ஆகவே, தனியார் பஸ்களில் ஓவர்லோடு ஏற்றக் கூடாது என்று எப்படி சட்டம் இருக்கிறதோ, அதேபோல், அரசாங்கம் ஓட்டுகின்ற பஸ்களுக்கும் அதனை அமுல்படுத்துமா? அரசாங்க பஸ்களிலும் ஸ்டான்டிங் பாசஞ்சர்களை அரசு அபாலிஷ் பண்ணுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நகரங்களிலே ஸ்டான்டிங் பாசஞ்சர்ஸ் அனுமதிக்கப்படுகிறார்கள். பீக் அவர்ஸில்—முக்கியமான அலுவல் நேரத்தில்தான் கூட்டம் அதிகமாக இருக்கிறது. மற்ற நேரங்களில், அப்படிப்பட்ட நெரிசலில்லை. தற்பொழுதுள்ள நெரிசலைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடுகளைக் குறிப்பிட்ட போக்குவரத்துக் கழகங்கள் மேற்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1975 அக்டோபர் 24

## தஞ்சாவூர்-திருவாரூர் பேருந்து வழித்தடம்

*40 வினா—திரு. தாழை மு. கருணாநிதி: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர்-திருவாரூர் மார்க்கமாக செல்லும் அரசு துரித பேருந்துகளை கொரடாச்சேரியில் நிறுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ஆம், கொரடாச்சேரி பொது மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அங்கு கீழ்க்கண்ட விரைவுப் பேருந்துகள் நிற்கும்.

518-A கோயம்புத்தூர்—நாகப்பட்டினம்.

534 நாகப்பட்டினம்—மதுரை.

568 நாகப்பட்டினம்—நாகர்கோயில்.

578-A சேலம்—நாகப்பட்டினம்.

## *Forest Rangers Training.*

*41 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state the nature of facilities that are provided by the Government of India to Rangers for Forest Education at Coimbatore?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மேசையின்மேல் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

## *Lease of forest lands.*

*42 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state:

(a) whether it is a fact that the Government propose to lease out lands for private parties to grow fruit bearing trees in forest areas; and

(b) if so, the details thereof?

---

@ 351A-351B-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது



1975 அக்டோபர் 24]

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், சில மலைப் பிரதேசங்களில் விளைகின்ற பழங்கள் பிரபலமானவை. அந்தப் பழங்கள் எல்லாம் இப்பொழுது காய்ந்து விட்டன. சர்க்காருக்குப் போதுமான மருந்துகளைக் கண்டுபிடித்துக் கொடுக்கக்கூடிய சாமர்த்தியமும் கிடையாது. ஆகவே, பழங்களை அபிவிருத்தி பண்ணக்கூடிய முறையிலே கொடைக்கானல், ஊட்டி போன்ற பிரதேசங்களில் பழ அபிவிருத்திக்கு சர்க்கார் முயற்சிக்காவிட்டாலும், தனிப்பட்ட ஆட்கள் முன்வந்தால், அவர்களுக்கு அதைக் கொடுக்க சர்க்காருக்கு என்ன தயக்கம் என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, பழம் விளைகின்ற பகுதிகளைத் தனிப்பட்டவர்களுக்குக் குத்தகைக்கு விடுகின்ற செயற்குறிப்பு தற்பொழுதில்லை. 1951-வது ஆண்டில் திரு. கே. எம். எஸ். கோவிந்தசாமி பிள்ளை என்பவருக்கு 110 ஏக்கர் நிலம் பழ மரங்கள் வைத்துக்கொள்ள குத்தகைக்கு விடப்பட்டது. அதற்குப் பின்னாலே யாருக்கும் விடப்படவில்லை. தனிப்பட்டவர்களுக்கு விடுகின்ற செயற்குறிப்பு தற்பொழுது இல்லை.

## வரதராசப்பெருமாள் கோயில்

*43 வினா—திரு. ஜி. சாமசாமி: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், அக்ரகாரம் வரதராசப் பெருமாள் கோயிலுக்கு மானியம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) & (இ) வட ஆற்காடு மாவட்டம், அக்ரகாரம் அருள்திரு வரதராசப்பெருமாள் திருக்கோயில் திருப்பணிச் செலவிற்கு, ஆணையர் பொது நல நிதியிலிருந்து ரூ. 5,000 13—5—1975 அன்று வழங்கப்பட்டுள்ளது.

[1975 அக்டோபர் 24

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சாதாரணமாகக் கோயில்களில் திருப்பணிகள் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்கிறார்கள்? கும்பாபிஷேகம் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டுமென்ற திட்டம் இருக்கிறதா? அவரவர்கள் விருப்பத்திற்கேற்றவாறு நடத்துகிறார்களா என்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு குறிப்பிட்ட கோயிலுக்கு மானியம் வழங்குவதைப் பற்றிய கேள்வி இது. அறநிலையம் என்று சொன்னவுடனே, திருப்பணி எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை, கும்பாபிஷேகம் எப்பொழுது என்றெல்லாம் . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கோயில் திருப்பணிக்கு மானியம் வழங்கியிருக்கிறார்கள். அதற்கு முன்னாலே அப்படி நடந்திருக்கிறார்களா, திட்டம் இருக்கிறதா என்றெல்லாம் கேட்கிறோம் . . .

(விடை இல்லை)

**திரு. என். கே. பழனிசாமி :** வழக்கமாகப் பொது நிதியிலிருந்து கோயில்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. இந்த ஒரு சம்பவத்தை வைத்து எல்லா இடங்களிலும் இந்தமாதிரி கோயில் மோசமாக எங்கெங்கு இருக்கிறதோ, அங்கங்கு அந்தந்த யூனியன் பொது நிதியிலிருந்து அளிக்க சர்க்கார் ரூல்ஸை ரிலாக்ஸ் பண்ணுவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து கோயில்கள் திருப்பணிக்காக வழங்கப்படுவதாகத் தெரியவில்லை; கிராமங்களுடைய அபிவிருத்திக்காகத்தான் செலவு செய்கிறார்கள். அறநிலையத் துறையினுடைய ஆணையர் தனக்கென்று பொது நிதி ஏற்படுத்தியிருக்கிறார். அந்த நிதியிலிருந்துதான் வழங்கப்படுகிறது.

**திரு. பெ. சீனிவாசன் :** இந்த பெயர் பெரிதாக இருக்கிறது—அக்ரகாரம் அருள்திரு வரதராசப்பெருமாள் திருக்கோயில் திருப்பணிச் செலவிற்கு ஆணையர் பொது நிதியிலிருந்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் என் ஏற்பட்டது? அந்த ஆண்டவர் நஷ்டத்தில் என் வாழ்க்கையை நடத்துகிறார்? அந்தக் கோயிலில் உண்டியல் வருமானம் இல்லையா? என்ன காரணத்தினால் ஆணையர் பொது நிதியிலிருந்து தரப்பட்டிருக்கிறது?



1975 அக்டோபர் 24]

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, குறிப்பிட்ட சாமி மட்டுமல்ல, அதிக வருமானம் வரக்கூடிய கோயில்களிலிருந்து நிதி பெற்று, பொதுநிதியில் வைத்துக் கொண்டு, நிதி வசதிக் குறைவாக உள்ள கோயில்களுக்கு வழங்குகிறோம். அந்த அடிப்படையிலேதான் இதை வழங்கியிருக்கிறோம்.

### சாணவாயு நிலையங்கள்

44 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :
திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை :
திரு. என். கே. பழனிசாமி :
மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாணவாயு நிலையம் துவக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இதுவரை சுமார் 384 சாண எரிவாயுச் சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இதற்கிணையான அளவு சாண எரிவாயுச் சாதனங்கள் நிறுவும் வேலை பல்வேறு கட்டங்களில் இருக்கின்றன. 1975-76-ம் ஆண்டு முடிவுக்குள் 2,000 சாண எரிவாயுச் சாதனங்கள் அமைத்திட முடியும் எனக் கருதப்படுகின்றது.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், இந்த கோபர் காஸ் பிளாண்டாலே கிடைக்கிற காஸைக் கொண்டு, மின்சார உபயோகத்தைக் குறைக்க முடியும் என்றும் அனாவசியமானச் செலவைக் குறைக்க முடியும் என்றும் சொல்கிறார்கள். ஆகவே, இது எந்த எந்த வழிகளிலே பிரயோஜனப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் சொல்வார்களா? எந்த எந்தப் பிரதேசத்திலே விஸ்தரிக்க சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, எண்ணெய் மற்றும் உரத் தட்டுப்பாட்டைச் சமாளிக்க வேண்டுமென்று மத்திய திட்டக் குழு இப்படிப்பட்ட ஒரு சாண எரிவாயுப் பொருளை நாடு பூராவும் ஏற்படுத்த வேண்டுமென்று முடிவெடுத்தார்கள். அதற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து 25 சதவிகிதம் மானியம் வழங்குகிறார்கள். பொதுவாக, மற்ற எரிபொருள்களை விறைக்குவதற்குப் பதில் இந்தச் சாண எரிவாயு மூலமாக மற்ற பொருள்களை மிச்சப்படுத்தலாம் என்ற

[திரு. மு. கண்ணப்பன்] [1975 அக்டோபர் 24

நோக்கத்தோடுதான் இந்தத் திட்டத்தை அனுமதித்திருக்கிறார்கள். இந்த எரிவாயுவைக் கொண்டு விளக்குகளைக் கூட எரிக்கலாம் என்பதை சமீபத்திலே கண்டுபிடித்திருக்கிறார்கள். அதிகமாக, இதை எரிபொருளாகப் பயன்படுத்தி, நாடு பூராவும் உபயோகித்து கொண்டிருக்கிறார்கள். இதற்குத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் தேவையான கடன் உதவி தரவேண்டுமென்று மத்திய சர்க்கார் மூலமாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில் 1974-75-ல் 2,000 சாண எரிவாயு சாதனங்களை அமைக்கத் திட்டம் திட்டினோம். ஆனால், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் தேவையான அளவுக்குக் கடன் கொடுக்க முன்வராத காரணத்தால், குறைந்த அளவுதான் தற்பொழுது வழங்கப்பட்டிருக்கிறது.

**டாக்டர் க. நாகராஜன் :** தலைவர் அவர்களே, இந்த கோபர் கேஸிலிருந்து உற்பத்தியாகும் எரிவாயுவை சிலிண்டர்களில் சேமித்து வைக்கும் வழிவகை ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால் அதுபோன்று கண்டுபிடிக்கின்ற முயற்சியை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, சிலிண்டர்களில் பிடித்துவைக்கின்ற அளவில் மிகப் பெரிய திட்டமாக உருவாக்கப்படவில்லை. ஆங்காங்கே கிராமங்களிலோ அல்லது நகரங்களிலோ சுமார். 6, 8 கால்நடைகள் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள்—அவைகளை வைத்துப் பால் கறந்துகொண்டிருக்கின்றவர்கள்—அல்லது விவசாயிகளாக இருக்கிறவர்கள் சிறிய திட்டமாக மேற்கொள்ளக்கூடிய திட்டம்தான் இது. பெரிய அளவில் சிலிண்டர்களில் சேமித்து வைக்கக்கூடியத் திட்டத்தை இன்னும் உருவாக்கவில்லை.

THIRU B. VENKATASWAMY : Is it not a fact that the manurial value of the Gobar Gas will be doubled? At the same time. electricity can also be produced to run motor. May I know from the Hon. Minister for Hindu Religious Endowments whether any such investigation has been made and whether any liberal loans will be given so as to enable the ryots to make use of the Scheme, which will also enable a common man to avail such a scheme.



1975 அக்டோபர் 24]

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, மின்சார மோட்டார் ஓட்டுவதற்கு இந்த சாண எரிவாயுவைப் பயன்படுத்துகிறார்களா என்று தகவல் எனக்குத் தெரியாது. இந்த சாண எரிவாயுவைப் பயன்படுத்துகின்ற முறை கதர்—கிராமக் கைத்தொழில் வாரியத்தின்மூலம் செய்யப்படுகிறது. அதற்காக 25 சதவிதம் மானியமாகவும் 75 சதவிதம் தேசிய வங்கிகளின் மூலமாக கடனாகவும் கொடுக்கப்படுகிறது. இதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்த சாதனம்பற்றி ரெவின்யூ இலாகாவில் தகுந்த விளம்பரம் செய்வது கிடையாது. பல விவசாயிகள் யாரை இதற்காக அணுகவேண்டும், யார் இதைச் செய்து கொடுப்பார்கள் என்ற விவரங்கள் எல்லாம் தெரியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் தினத்தந்தி பத்திரிகையிலே முதல் பக்கத்திலே—எது எதற்கோ விளம்பரத்தைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்—விளம்பரம் செய்து நல்ல முறையிலே பரப்புவதற்கு முயற்சி செய்வார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்களே சொல்லிவிட்டீர்கள், இதுவே ஒரு விளம்பரம் ஆகிவிட்டது.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு உறுப்பினரே இந்தப் பணியை மேற்கொண்டு தன்னுடைய தொகுதியிலுள்ளவர்களுக்குத் தெரிவித்தால் அந்த சாதனங்களை அமைத்துக் கொடுக்க வாரியம் தயாராக இருக்கிறது.

**திரு. பெ. சீனிவாசன் :** இந்த எரிவாயுவைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிற சாணத்தில், பயன்படுத்திய பிறகு உரத் தன்மை இருக்கிறதா? உரத் தன்மை அதன் மூலம் போய்விடுகிறதென்றால், உரம் வீணாவதை அரசு தடுக்க என்ன முயற்சி செய்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** சாணத்திலிருந்து எரிவாயு பிரித்தெடுக்கப் பயன்படுத்திய பிறகு அந்தச் சாணத்திலுள்ள உரத்தன்மை கெடாது; உடனடியாக உரமாகப் பயன்படுத்தலாம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** இதை சிலிண்டர்களில் சேமித்து வைக்கப்படக்கூடிய முறையில் ஏதாவது ஆராய்ச்சி செய்ய அரசு முன்வருமா? அல்லது ஆராய்ச்சி செய்ய, ஊக்குவிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Gobar Gas plant Scheme has become popular and many ryots are trying to introduce it. It requires a lot of money and cattle heads. Unfortunately, in the border areas cattle are being sent to nearby slaughter houses. May I know from the Hon. Minister for Hindu Religious Endowments whether any scheme will be introduced to stop sending of cows to slaughter houses in future?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, அதைப் பற்றி யோசிக்கலாம்.

*Flushout latrines in Town Panchayats*

• 45 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(a) whether a comprehensive scheme of converting dry latrines into flushout latrines in the Town Panchayats in the State, is under the consideration of the Government; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** (அ) & (இ) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள சில நகராட்சி நகரங்களில் ஆராய்ச்சி செயல் திட்டத்தின் கீழ் ரூ. 1.20 லட்சம் செலவில் 1973-74 நிதி ஆண்டில் ஒரு சோதனை ஏற்பாடாக 1,000 திறந்த வெளிக் கழிப்பிடங்களை நீராடிக் கழிப்பிடங்களாக மாற்ற சமூக நலத்துறையால் 19—2—1974 நாளிட்ட 114-ம் எண்ணில் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

மேற்படி திட்டம் 1974-75 நிதி ஆண்டில் ரூ. 5 லட்சம் செலவில் செங்கற்பட்டு மாவட்டத்தில் மேலும் சில பேரூராட்சிகளிலும் தஞ்சாவூர், மதுரை மாவட்டங்களிலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, பல இடங்களிலே நகரப் பஞ்சாயத்துக்களிலேயும் சரி, நகர மன்றங்களிலேயும் சரி. கழிப்பிடங்கள் சரிவர சுத்தம் செய்யப்படாததால் சுகாதாரக் கேடுகளுக்கு இடமாக இருக்கின்றனவே, இதைத் தவிர்ப்பதற்கு அரசு என்ன அவசர நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது?





**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** 1973-74 ஆம் ஆண்டில் ஒரு உத்தரவு போட்டு பூவிருந்தவல்லியில் 300-ம், வில்லிவாக்கத்தில் 300-ம், திருத்தணியில் 200-ம், வாலாஜாபாத்தில் 200-ம் 1.53 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. மேலும் ஐந்து லட்சம் ரூபாய் செலவில் இதே திட்டத்தை விரிவுபடுத்துகின்ற முறையிலே செங்கற்பட்டு மாவட்டத்திலே வில்லிவாக்கம், பூவிருந்தவல்லி ஆகிய இடங்களிலும் மதுரை மாவட்டத்தில் வத்தலக்குண்டு, சோழவந்தான், நத்தம், நிலக்கோட்டை ஆகிய இடங்களிலும் தஞ்சாவூர் மாவட்டத்திலே அய்யம்பேட்டை, பாபநாசம், திருக் காட்டுப்பள்ளி, திருவையாறு ஆகிய இடங்களிலும் ஏற்படுத்த அரசு செயல்படும்.

**திரு. செ. அரங்கநாயகம் :** வெளிக் கழிப்பிடங்கள், நீராடிக் கழிப்பிடங்கள் ஆகியவற்றைச் சுத்தம் செய்கின்ற ஒரு தொழில் ஜாதி அடிப்படையிலே நடைபெற்று வருகிறது. அதன் காரணமாக அந்த குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படுகிறார்கள். இந்தப் பணி சமுதாயப் பணி என்ற முறையில் அந்தத் தொழிலிலே எல்லா ஜாதியைச் சேர்ந்தவர்களும் பாகுபாடு இல்லாமல் ஈடுபடக்கூடிய முறையில் அவர்களுடைய சம்பளத்தை மாதம் 500 ரூபாய் என்று ஆக்கி வேறு ஜாதிக் காரர்களும் ஈடுபடக்கூடிய அளவிலே அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** சென்ற ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்தத் தொழிலைச் செய்கிற அந்த மக்களுக்கு—தலையிலே அவர்கள் மலத்தைத் தூக்கிக்கொண்டு போகிற நிலைமை, கையால் எடுக்கக்கூடிய நிலைமை, காலணி யில்லாமல் இருக்கக்கூடிய நிலைமை இவையெல்லாம் இருக்காத அளவிற்கு—பல்லாயிரக்கணக்கான கருவிகளை வழங்கியிருக் கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் படிப்படியாக மாற்றப்படுகின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த ப்ளஷ் அவுட் கக்கூஸ்களை மேஜர் பஞ்சாயத்துக்களில் மட்டும்தான் ஏற்படுத்த வேண்டுமென்று இல்லாமல் அநேகமாக எல்லா பண்டாண்டுகளிலும் பார்த்தால் சுத்தம் செய்யப்படாமல் ஆரோக்கியக் குறைவான நிலைமை இருக்கிறது. ஆகவே அங்கேயாவது உடனடியாக எல்லா இடங் களிலும் அவைகளைக் கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** அதைப்பற்றி அரசு ஆராய்ந்து ஆவன செய்யும்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** சமூக நலத்துறையும் சுகாதாரத் துறையும் இரண்டும் ஒன்றுசேர்ந்து 16 லட்சம் ரூபாய் செலவில் பல இடங்களிலே கழிப்பிடங்கள் கட்டவேண்டுமென்று ஒரு திட்டம் பரிசீலனையில் இருந்ததே. அது ஏற்றுக்கொள்ளப்பட்டதா? எப்போது அந்தத் திட்டம் நிறைவேறும்?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** இது பேரூராட்சிகளிலே அமல்படுத்தப்படுமா என்ற கேள்வி, பேரூராட்சிகள் பற்றிய விவரங்கள் தற்போது உள்ளன. பொதுவாக விவரங்கள் வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போட்டால் பதிலளிக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** படிப்படியாக அரிசன மக்களுக்கு இந்தத் தொழிலிலிருந்து விடுதலை கிடைக்கச் செய்யவேண்டுமென்பதுதான் திட்டம். அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே தனியாக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? டவுன் பஞ்சாயத்துக்களிலே போதுமான பண வசதி கிடையாது, வரவுக்கும் செலவிற்கும் சரியாக இருக்கிறது, லெட்ரின்கள் கட்டுவதற்குத் தேவையான பணம் அவைகளிடத்திலே இல்லை. அப்படியே கட்டினாலும் சுத்தம் செய்வதற்கு வழிகள் இல்லை. ஆகவே டவுன் பஞ்சாயத்துக்களுக்கு இவ்வளவு பணம் என்று ஒதுக்கி நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** தங்களுடைய கேள்வி பேரூராட்சிகளைப் பற்றித்தான். வேறு யோசனைகள் இருந்தால் அவர்கள் எழுதி அனுப்புவார்களானால் அதைப் பரிசீலிக்க வழிவகை செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இட்டப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## அறிவிப்புகள்.

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 6 (1) விதியின்படி கீழ்க்கண்ட உறுப்பினர்களைப் பேரவையின் மாற்றுத் தலைவர்களாக நான் நியமிக்கிறேன்:—

1. திரு. மா. வே. நாராயணசாமி.
2. திரு. எ. ஆர். சுப்பையா.
3. திரு. முனு ஆதி.
4. திரு. ஜே. ஜேம்ஸ்.
5. திரு. வ. சுப்பிரமணியம்.
6. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்.

(முற்பகல் 10-00)

## 3. நடைமுறைக் கேள்விகள்.

### (அ) குடியரசுத் தலைவரால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசர காலச் சட்டத்தை உறுதிப்படுத்த தீர்மானம் கொண்டுவரப்படுமா என்பது குறித்து.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் இந்தியப் பேரரசினுடைய குடியரசுத் தலைவரால் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டு, அவசரகால நிலைமை இன்றையதினம் அமலில் இருந்து வருகிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த சட்டமன்றங்கள், சட்டமன்றக் கூட்ட நடவடிக்கைகளின்போது குடியரசுத் தலைவரால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசர காலச் சட்டத்தை 'ரேட்டிஃபை' செய்து இன்றையதினம் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டம் நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவசர காலகட்டத்தில் இப்பொழுது நாம் கூடியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எப்படி பாயிண்ட் ஆஃப் ஆர்டரின் கீழ் வரும்? பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்றால், நம்முடைய சட்டமன்றம் நடைபெறுவதற்குரிய விதிமுறைகளில் மாறுபட்டிருந்தால், நம்மால் மேற்கொள்ளப்பட்ட மரபுகளிலிருந்து மாறுபட்டிருந்தால் அதுதான் பாயிண்ட் ஆஃப் ஆர்டர். இது எப்படி பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் வரும்? 'ரேட்டிஃபை' பண்ணவில்லை என்பது எப்படி பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் வரும்?

THIRU G. R. EDMUND: Please listen to me completely and then come to a conclusion. How can you decide whether it is a point of order or not unless you patiently listen to the whole statement that I am going to make on the floor of the House. Then I have no objection if you say straightaway that it is not a point of order. I concede it . . . .

இன்றைக்கு நாட்டுமக்களுக்கு இருக்கின்ற சந்தேகமெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டிலே இன்றைக்கு ஆட்சியிலே இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்சி செயற்குழுக் கூட்டத்தில் இந்த அவசரகாலச் சட்டத்தை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆனால் பொதுமேடைகளில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டங்களானாலும் சரி, நம்முடைய அரசாங்கத்தினுடைய மாண்புமிகு அமைச்சர்கள் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி கொடுக்கும்பொழுதும் சரி அவசரகாலச் சட்டத்தை ஆதரிப்பதாக அவர்கள் மறைமுகமாக கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார்கள். இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படையில் சட்டமன்றங்கள் குடியரசுத் தலைவரால் பிரகடனம் செய்யப்படும் அவசர காலச் சட்டத்தை ரேட்டிஃபை செய்ய வேண்டுமென்று 'மேன்டேட்டரி புரொவிஷன்'-ல் இருக்கிறது. ஆனால் பல்வேறு மாநிலங்களிலும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கும் பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் தன்னைப் பொறுத்த வரையில் இந்தப் பிரச்சனையில் இரட்டை வேடம் போடுவதாக மத்திய அரசாங்கத்திற்கு ஒருவேளை சந்தேகம் ஏற்படலாம். ஆகவே, இந்தச் சட்டமன்றத்தில் . . . .



திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): இவர் மத்திய அரசாங்கத்திற்காகப் பேசுகிறாரா? பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லி விட்டு எதை வேண்டுமானாலும் பேசலாமா?

THIRU G. R. EDMUND: Not necessarily I should be the spokesman for the Centre. I am sorry. I have to remind the hon. Member, Thiru Krishnamoorthy, that he is not the Speaker.

THIRU V. KRISHNAMOORTHI (Nellikuppam): I have also to remind the hon. Member that he was once the Deputy Speaker . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் அரசியல் கட்சி, அரசியலின் போக்கு, இவையெல்லாம் இந்த மன்றத்திற்கு வர வேண்டியதில்லை. பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று வரும் பொழுது பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றால் நம்முடைய அவை நடைபெற நாமே வகுத்துக்கொண்டிருக்கும் விதிமுறைகள் இருக்கின்றனவே, அந்த விதிமுறைகளுக்கு மாறுபட்டிருந்தால் அதைச் சுட்டிக்காட்ட வேண்டும், மரபு மாறுபட்டிருந்தால் அதைச் சுட்டிக்காட்ட வேண்டும். அதை விட்டு விட்டு கட்சிக்கு ஒரு வேஷம், இங்கே ஒரு வேஷம் போடுவது என்றெல்லாம் சொல்வது எப்படி பாயின்ட் ஆஃப் ஆர்டரில் வரும்?

திரு. க. உரா. எட்மண்ட்: நான் கேட்க விரும்புவதெல்லாம், இப்படியொரு நிலைமை நாட்டிலேயிருக்கும்பொழுது நம்முடைய சட்டமன்றம் கூடியிருக்கிறது. இந்தக் கூட்டத்தில், அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப் பட்டதை தமிழ்நாடு சட்டமன்றம் அங்கீகரிக்கிறதா அல்லது எதிர்க்கிறதா என்பதை இந்தச் சட்டமன்றத்தில் நம்முடைய அரசு விளக்கும் வகையில் அதற்கு ஒரு தீர்மானம் கொண்டு வருவார்களா, மாட்டார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எத்தனை சட்டமன்றங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமோ அத்தனை சட்டமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஜனாதிபதியால் அங்கீகாரமும் கொடுக்கப்பட்டு விட்டது. இதை இங்கே ரேட்டிஃபை செய்யவில்லை என்றால் அது வேறு விவகாரம். அது எப்படி பாயின்ட் ஆஃப் ஆர்டரில் வரும்?

திரு. க. உரொ. எட்மண்ட்: பாயின்ட் ஆஃப் இன்பஃர்மேஷன் என்ற முறையில் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆஃப் இன்ஃபர் மேஷன் என்பது இந்த நேரத்தில் பயன்படுத்தக் கூடியது அல்ல. பிறகு பேசும் நேரத்தில் பேசிக் கொள்ளலாம்.

அடுத்து, அரசினர் சட்ட முன்வடிவுகள் . . . .

திரு. ஏ. சுப்பிரமணியம்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முடியட்டும். மசோதா வின் கீழே பாயிண்ட் ஆஃப் ஆர்டரா?

## (ஆ) சட்ட முன்வடிகள் உறுப்பினர்களுக்கு முன்னதாக வழங்கப்படாமை குறித்து.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: இதன் கீழேயேதான் பாயின்ட் ஆஃப் ஆர்டர். இன்றைக்கு இரண்டு மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட இருக்கின்றன, 6 மசோதாக்கள் விவாதிக்கப்பட இருக்கின்றன. ஏற்கனவே இந்த மன்றத்தில் பலமுறை சொல்லப் பட்டு, சென்ற முறையும் பேசி, பட்ஜெட் கூட்டத்தில் சொல்லப் பட்டு, இந்த மசோதாக்கள் உறுப்பினர்களுக்கு வரும்பொழுது மிகவும் காலம் கழிந்து வருகின்றன, அதனால் நாங்கள் சரிவரப் பங்கெடுக்க முடியாமல் இருக்கிறது என்று தங்களிடத்தில் சொல்லி, அம்மாதிரி நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டுமென்று சொன்னீர்கள். நேற்றையதினம் இரவு 10.30 மணிக்குமேல் எனக்குக் கிடைக்கிறது. அப்பொழுதுதான் விநியோகம் செய் திருக்கிறார்கள் விடுதியிலே. உறுப்பினர்கள் தூங்கப் போன பிறகு மசோதாக்களும், அஜெண்டாக்களும் கொடுக்கப்பட்டால் அதை நாங்கள் எப்பொழுது படிப்பது, எப்பொழுது திருத்தங்கள் கொடுப்பது என்று புரியவில்லை. ஆகவே, அரசு இந்த மசோதாக்களை அங்கத்தினர்கள் விவாதிக்காமலேயே அல்லது திருத்தங்கள் தராமலேயே நிறைவேற்றிவிட வேண்டுமென்று நினைக்கிறார்களா? அல்லது அங்கத்தினர்களுக்கு இந்த மசோதாக்கள் உரிய நேரத்தில் கிடைத்து, உறுப்பினர்களுக்கு



உள்ள கடமையை அவர்கள் ஒழுங்காக நிறைவேற்ற வேண்டு மென்று எதிர்பார்க்கிறார்களா? பலமுறை இந்தப் பிரச்னை சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும், இந்த முறை திரும்பத் திரும்ப நடைபெற்று வருவதில் அர்த்தமில்லை. உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதிலேயும் அர்த்த மில்லை. ஆகவே, தலைவரவர்கள் எங்களுக்குரிய பாதுகாப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்கு மசோதாக்கள் இன்றைக்கு அறிமுகம்தான்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: ஆறு மசோதாக்கள் கொடுத் திருக்கிறார்கள். To-day six bills are going to be considered.

திருமதி த. ந. அனந்தநாயகி: அறிமுகம் என்று சொல் கிறீர்கள். 'ஆக்சுவல் டிஸ்கஷன்ஸ்' என்று எல்லா பில்களையும் ஒவ்வொன்றாக இன்றைக்குப் போட்டிருக்கிறார்கள், ஃபர்ஸ்ட் பில், செகண்ட் பில், தேர்ட் பில் என்று. நான் நேற்றையதினம் மூன்று மணிக்குப் போய் நாளைக்கு என்ன பில்கள் வரப்போகின்றன என்று கேட்ட நேரத்தில் இந்த பில்கள் கொடுக்கப்படவில்லை.

You are sending it right at mid-night. How can we read it and how can we discharge our duty here?

அப்படி அவசரம் அவசரமாக ஒவ்வொரு நாளைக்கும் ஒரு டஜன் பில்களை, அவசரச் சட்டம் மாதிரி, ஒரு டஜன் பில்களை எடுப்பதற்கு என்ன அவசரம் என்று கேட்கிறேன். 'ஆர்டினன்ஸ்' என்று அவசரம் அவசரமாகப் போடுகிறீர்கள். அதை கன்சிடர் செய்ய பில்லாகக் கொண்டு வருகிறீர்கள். இதையும் அவசரச் சட்டம் மாதிரியோ பில்லிலேயும் கொண்டு வர வேண்டுமா? நாங்கள் பேச வேண்டாமா? இரவு 10-30 மணிக்கு மேல் கொடுத்தால் நாங்கள் படிக்கவும் மாட்டோம், அப்படிப்பட்ட சங்கத்தில் அங்கத்துவது என்றால் லெஜிஸ்லேச்சருக்கு வர வேண்டியதே இல்லை.

[1975 அக்டோபர் 24

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, இந்தச் சட்ட சபையில் நடவடிக்கைகளைப்பற்றித்தான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லையா? அதைப்பற்றித்தான் நான் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது நடவடிக்கைகள் பத்திரிகைகளில் வருகின்றன. நேற்று நம்முடைய முதலமைச்சரவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது, திரு. ஏ. சுப்பிரமணியம், திருமதி அனந்தநாயகி ஆகியோர் எழுப்பிய பாயின்ட் ஆஃப் ஆர்டரோடு சம்பந்தப்பட்டது இல்லையே. அதையொட்டி உங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. உங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் வேறு. இந்த பாயின்ட் ஆஃப் ஆர்டர் முடியட்டும்.

இப்பொழுது வந்துள்ள 'பில்'கள் ஏற்கனவே 'ஆர்டினன்ஸா'க வந்தவைகள். 'ஆர்டினன்ஸ்' வந்தபொழுது உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுதான் மசோதா வடிவிலே வருகின்றது. ஆர்டினன்ஸை எப்பொழுது வெளியிட்டார்களோ அப்பொழுதே உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அதுதான் மசோதாவாக வருகிறது. ஆகவே, போதுமான காலம் கொடுக்காமல் உறுப்பினர்களை ஏமாற்றவேண்டும், காலம் கொடுக்காமல் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இவைகள் வரவில்லை. ஆர்டினன்ஸ் வந்தபொழுது கொடுத்திருக்கிறோம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அவசரச் சட்டத்திற்கும், தரப்பட்டிருக்கும் மசோதாவிற்கும் சில மாறுதல்கள் வந்திருக்கலாம், வரக்கூடும். அவசரச் சட்டம் ஏற்கனவே வெளியிடப்பட்டு விட்டது. ஆகவே, எதற்காக அவகாசம் என்று கேட்டால் இது பிரதமையாக இருக்கிறது. அப்படியானால் மசோதாவையே எங்களுக்குக் கொடுக்க வேண்டியதில்லை. மசோதாவில் மாறுதல் வந்திருக்கிறதா இல்லையா என்று தெரிந்துகொள்ள வேண்டாமா? இந்தந்த மசோதாக்கள் இந்தந்த நாட்களில் வரும் என்று தெரிந்துகொள்ள வேண்டாமா? அப்படித் தெரிந்துகொள்ளத் தேவையில்லை யென்றால் எதற்காக இந்தச் சடங்குகளை யெல்லாம் வைத்திருக்கிறீர்கள்? இது சடங்கு அல்ல, இதற்குப் பொருள் இருக்கிறது. காலத்தோடு கிடைத்தால்தான் பயன் இருக்கும். எனவே, தலைவரவர்கள் இதைச் சிறிய விஷயமாக எடுத்துக்கொண்டு தட்டிக்கழிப்பதை விட்டுவிட்டு, ஆவன செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.



1975 அக்டோபர் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலே, என்னென்ன மசோதாக்கள் வரும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர்களுடைய அந்த வருத்தத்தை, கஷ்டத்தை நானும் உணர்கிறேன். ஆகவே, நேரத்திலே கிடைக்க இனிமேல் வழி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) பத்திரிகை தணிக்கை முறை குறித்து.

திரு. பெ. சீனிவாசன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். நேற்று அசெம்பிளியில் முதலமைச்சரவர்கள் சொல்லும்பொழுது, சூசகமாக பத்திரிகைக் கட்டுப்பாடு பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்றையதினம் தினத்தந்தி பத்திரிகையில், கேஸ் லேட் பிரச்னை பற்றி அமைச்சர் மாதவன் பதில் என்று முழுவதும் போட்டிருக்கிறார்கள். அந்த செய்தியில், இதை ஏன் எதிர்க் கட்சிக்காரர்கள் எதிர்க்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆச்சரியமாக இருக்கிறது என்று சொன்னார் என்று போட்டிருக்கிறார்கள். ஆனால், எதிர்க்கட்சிக்காரர்கள் எதிர்த்துப் பேசியதை அதிலே போடவில்லை. ஆகவே, இது ஒருபக்க நியாயமாக இருக்கிறது. ஆகவே, உங்கள் மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இது மாநில சர்க்காருக்கு மட்டுமல்ல, மத்திய சர்க்காரும் செய்கிறது என்று எங்களுக்குத் தெரிந்திருக்கிறது. அப்படியானால் மத்திய சர்க்காருக்கு எத்தனை சதவிகிதம், மாநில சர்க்காருக்கு எத்தனை சதவிகிதம். 'கோட் ஆஃப் காண்டக்ட்' என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இதில் அதிகமாக நான் உரிமை எடுத்துக் கொண்டு சொல்ல முடியாவிட்டாலும் கிடைத்த தகவலைச் சொல்கிறேன். இப்பொழுது இருக்குள்ள சென்சார்ஷிப் 'கோட்' வகுத்திருக்கிறது. Pre-Censorship என்று சில குறிப்பிட்ட விஷயத்தில் தங்களிடத்தில் காட்டிவிட்டு போட வேண்டுமென்று ஒரு முறை. சில பத்திரிகைகள், இன்னும் கொஞ்சம் ஜனநாயகரீதியில் முழு விசுவாசத்தையும் காட்டிவிட்டு, எல்லாவற்றையும் காட்டிவிட்டு,

'முரசொலி' என்றால் 'முரசொலி' என்ற தலைப்பு எழுத்திலிருந்து 'edited, printed and published by Maran' என்று இருக்கும் வரையிலும் காட்டிவிட்டுத்தான் பிறகு அவர்கள் வெளியிட வேண்டும்.

அதைப்போல் 'தினத்தந்தி' பத்திரிகை. 'கழகக் குரல்' என்று கட்சியினுடைய அதிகாரபூர்வமான பத்திரிகை. இன்னும் வேறு சில வார ஏடுகள் இவைகளுக்கெல்லாம் முழுமையாக, முதலிலிருந்து கடைசி வரை எழுத்து வாரியாக அவர்களிடத்தில் காட்டி சென்சார் ஆபீசர் 'டிக்' செய்து கொடுத்த பிறகுதான் போடலாம். அவர் எதை எதை போடக் கூடாது என்று அடித்து கையெழுத்துப் போடுகிறாரோ அதைப் போடக் கூடாது. மற்றப் பத்திரிகைகளுக்கு அப்படி அல்ல. மற்றப் பத்திரிகைகள் அசெம்பிளியைப் பொறுத்தவரை நடவடிக்கைக் குறிப்புகளை அவர்களிடத்தில் காட்ட வேண்டும், எதை எதைப் போடலாம் என்று அவர்கள் சொல்லுகிறார்களோ அவற்றை மட்டுந்தான் போடலாம் என்ற தகவல் கிடைத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தத் தணிக்கைக்கு மத்திய சர்க்கார் பொறுப்பா? மாநில சர்க்கார் பொறுப்பா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தத் தணிக்கையைப் பொறுத்தவரை மத்திய சர்க்கார்தான் பொறுப்பு.

திருமதி த. ந. அனந்தநாயகி: மத்திய சர்க்கார் பொறுப்பு என்று சொல்லுகிறார்கள். ஆனால், குமுதத்தில் தணிக்கை, மக்கள் குரலில் அரசியல் நியூசுக்குத் தணிக்கை எல்லாம் யார் செய்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தணிக்கை செய்கிற பொறுப்பு மாநில அரசின் கையில் இல்லை. மத்திய அரசின் கையில்தான் இருக்கிறது. மத்திய அரசை ஆண்டு கொண்டிருக்கிற கட்சியைச் சேர்ந்த அம்மையார் அவர்கள் இதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் இருப்பது வருந்தத்தக்கது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இதிலே எந்த அளவுக்கு மத்திய அரசு பொறுப்பு, எந்த அளவுக்கு மாநில அரசு பொறுப்பு என்பதை விளக்க வேண்டும். 'ஜனசக்தி'





பத்திரிகைக்கு வந்திருந்த கடிதம் மாநில தணிக்கை அதிகாரியிடம் இருந்து வந்தது. "மொத்தமாக ஆட்சேபகரமான விஷயங்கள் இருக்கின்றன. ஆகவே, இதைப் பறிமுதல் செய்வோம்' என்று சொல்லக்கூடிய அதிகாரம மாநில சர்க்காருக்கு இருக்கிறதா அல்லது மத்திய சர்க்காருக்கு இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பறிமுதல் செய்யக்கூடிய அதிகாரம் மாநில சர்க்காருக்குத்தான் இருக்கிறது. அந்த வகையில் ஆட்சேபகரமான விஷயங்கள் இருந்தால் — கொள்கை மாறுபாடுகள், ஜனநாயக ரீதியில் கூறப்படுகிற வாதங்கள், இவைகளைப் பற்றிக் கவலைப்படவில்லை; எதையும் தாங்கிக் கொள்ள மாநில அரசும், ஆளும் கட்சியும் என்றைக்கும் தயங்கியதில்லை—அபாண்டமான, ஆட்சேபகரமான, அவதூறான விஷயங்கள் இருந்தால் பறிமுதல் செய்கிற அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறது.

திரு. பெ. சீனிவாசன்: சார்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் வேறு எங்கோ போகிறது.

அடுத்து, அரசினர் சட்ட முன்வடிவுகள்—மாண்புமிகு தொழில் மின்சாரத் துறை அமைச்சர் .....

### (4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு பொது வளவுகள் (அனுமதியின்றி குடியிருப்போர்களை வெளியேற்றல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு பொது வளவுகள் (அனுமதியின்றி குடியிருப்போர்களை வெளியேற்றல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) 1975 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத் தாள்கள் (தமிழ்நாடு மூன்றும் திருத்த) மற்றும் தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகளை மதிப்பிடுதல் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள்கள் (தமிழ்நாடு மூன்றும் திருத்த) மற்றும், தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள், வழக்குகளை மதிப்பிடுதல் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு.-

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.



(ஈ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் குத்தகை உடமைகள், சிறு இனும்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள், குத்தகை உடைமைகள், சிறு இனும்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(உ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, கடன் பெற்றோர் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு (விவாதம்)—தொடர்ச்சி.

DR. H. V. HANDE: Sir, with regard to this Bill I think I will have to bring a few points for the consideration of Government so that the vast section of the public of our State will not be adversely affected as a result of this Bill. My misgivings are htat today lakhs and lakhs of poor people are not getting loan from these small entrepreneurs, and small businessmen. These people will be affected because of this Bill. It would be better if the Hon. Minister takes into consideration the points expressed in this House and see that this Bill is suitably amended to satisfy the needs of the public who are dependant upon these small businessmen for getting loan. In fact, there was a report by the Reserve Bank published by Thiru H. V. R. Iyengar which clearly says that 80 to 90 per cent of the loans that are obtained in our State are from small shop-keepers, small pawnbrokers and only 10 to 20 per cent of the loans are obtained from major financial institutions. 80 to 90 per cent of the loans are obtained from small pawnbrokers. Therefore, it would be important that the needs of these people are

[Dr. H. V. Hande] [1975 அக்டோபர் 24

The second point I want to stress is that many of these poor people have pledged their articles, utensils, with these pawn-brokers. The articles are all lying there. Now, this legislation seeks to give relief for six months as far as interest is concerned. My submission is these poor people will not be able to get back their articles now. Neither the Government have made any provision in that connection nor have the Government come forward to give loans to these poor people at a nominal rate of interest. If the Hon. Minister were to listen to our pleas, he will be convinced that our arguments are quite valid.

Another problem is that for the past two to three months, the financial dealings have come to a standstill, ever since the promulgation of this Ordinance. The poor people are suffering. The pawnbrokers are not lending anything and they fear that another legislation may come saying that they should not charge any interest at all, preventing them from charging interest. That is another problem.

It is true we have to give protection to the poor. Without making sufficient preparation at the Governmental level to give loans to these poor people at nominal rate of interest, without making that preparatory ground, there is no point in bringing this legislation. On paper, it looks as a progressive piece of legislation but in practice what is the result? That is the question that the Government has to address to itself.

Has this Bill benefited anyone? I am quite sure that not a single poor man has been benefited because of this legislation. He is not able to get any money at all. This is a very important thing.

Another problem is whatever property he had, he had lost them completely. He cannot get back the property. This legislation has not said anything about his property. These are the various salient points. I do not want to take much time. I just wanted to pinpoint four to five points so that Government will properly consider them. Therefore I submit that this Bill may be referred to a Select Committee so that the whole thing may be properly examined.



1975 அக்டோபர் 24] [Dr. H. V. Hande]

Yesterday the Hon. Member Thiru A. R. Marimuthu was making a very valid point with regard to small farmers and how they were suffering and how they will not be benefited by this Bill. So, it is necessary that these points are considered and the Bill is properly recast and remodelled to suit the convenience of the public, protection to the property pledged by poor people and the present inconvenience of the pawnbrokers, etc. Let these things be properly taken into consideration by referring the Bill to a Select Committee and so that a fresh Bill satisfying all these points may be brought forward Thank you, Sir.

**திரு. எஸ். வடிவேல்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தக் கடன் ஒத்திவைப்பு மசோதா சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நானும் என் கட்சியைச் சார்ந்த திரு. அழகர்சாமி அவர்களும் சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறோம். குறிப்பாக, வறட்சியை முன்னிட்டு 1976 ஜனவரி 16-ம் தேதி வரையில் இந்த ஒத்திவைப்புச் சட்டம் இருக்கிறது. அதற்குப் பிறகு எல்லோரும் கோர்ட்டுக்குப் போக வேண்டிய ஒரு துர்பாக்கியமான நிலைமைதான் ஏற்படும் என்பதை நான் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதை 1978-ம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி இந்திய துணைக்கண்டம் அனைத்திலும் பல கடன் ஒத்திவைப்புச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இது இந்தியாவிலேயே அதிகக் கடன்பட்ட ஒரு மாநிலமாக இருக்கிறது. இங்கு ஏறத்தாழ 470 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்பட்டிருக்கிறார்கள் என்று அரசாங்க அறிக்கை அறிவிக்கிறது.

இன்றைக்கு அண்டை மாநிலமான கர்நாடகாவை எடுத்துக் கொண்டால் அங்கு ஏறத்தாழ ரூ. 2,400 ஆண்டு வருமானம் வருகிறவர்களுக்குத் தனியார் கடன்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்று நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது இரண்டு ஹெக்டேர் அதாவது ஐந்து ஏக்கர்

[திரு. எஸ். வடிவேல்] [1975 அக்டோபர் 24

வரை நிலம் உள்ளவர்கள் தனியார் கடன்கள் வாங்கியிருந்தால் அவை அனைத்தும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இச்சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நிலம் அல்லது மற்ற சாமான்களை அடகு வைத்திருந்தால் அந்த ஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்குச் சட்டம் ஒத்துழைத்திருக்கிறது.

அதேமாதிரி பீஹார் மாநிலத்தை எடுத்துக் கொண்டால் அங்குள்ள ஆதிவாசிகள், ஹரிஜனங்கள் அதோடு ஒரு ஏக்கருக்கு உட்பட்ட நில உடைமையாளர்களுக்கு அவர்கள் வாங்கியிருக்கும் தனியார் கடன்கள் யாவும் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. இந்த அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தி, ஆதிவாசிகள் கடன்கள் வாங்கி நிலத்தை இழந்திருந்தால் அல்லது நகைகளை இழந்திருந்தால் அல்லது ஆடு மாடுகளை இழந்திருந்தால் அவற்றை அரசாங்க உதவியோடு திரும்பப் பெறுவதற்கு இன்று ஒத்துழைப்பு ஏற்பட்டிருக்கிறது.

உத்தர பிரதேசத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கு ஒரு ஹெக்டேர் அதாவது 2½ ஏக்கர் வரையில் உள்ளவர்களுக்கு அவர்கள் கடன்கள் அதாவது தனியார் கடன்கள் அத்தனையும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. லேவாதேவி முறையிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழை எளியவர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள்.

அதேபோல் பஞ்சாப் மாநிலத்தை எடுத்துக் கொண்டால் ரூ. 50,000 வரை சொத்துக்கு உட்பட்டவர்களுக்கு இரண்டு ஆண்டு காலம் வரை கடன் ஒத்திவைப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மூலதனத்தின் மேல் கடன் கொடுக்கப்பட்டிருந்தாலும் அந்த வகையில் உள்ள தனியார் கடன்களும் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன.

மேற்கு வங்கத்தில் ஒரு ஏக்கருக்கு உட்பட்டவர்களின் கடன்கள் யாவும் ரத்து செய்யப்படக்கூடிய விதத்தில் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இவ்வளவு சட்டங்கள் அங்கெல்லாம் வந்திருக்கின்றன.



1975 அக்டோபர் 24]

ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இது அதிகக் கடன்பட்டிருக்கக் கூடிய மாநிலமாக இருப்பதோடு கூட கடனில் பிறந்து கடனில் வளர்ந்து கடனில். சாகவேண்டிய ஒரு துர்ப்பாக்கியகரமான நிலையில் ஏழை மக்கள் இருக்கிறார்கள்.

இன்று ஜப்பான் அல்லது ஜெர்மனியை எடுத்துக் கொண்டால் அங்கு உழவுத் தொழிலுக்காக கடன் கொடுத்தால் முப்பது ஆண்டுகளில் வசூலிக்கிறார்கள். ஜெர்மனியில் 50 ஆண்டுகள். நம் அரசு கூட வீடு கட்ட லோன் கொடுத்தால் இருபது ஆண்டுகளில் தான் அதைத் திரும்ப பெறுகிறார்கள். ஆனால், உழவுத் தொழிலுக்காகக் கடன் கொடுத்தால் அடுத்த ஆண்டே அதைத் திரும்பக் கட்டவில்லை என்றால் நிலம் பறிமுதல் ஆகும் அல்லது வீடு ஜப்தி செய்யப்படும் என்ற நிலைதான் இருக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள ஏழை எளிய மக்கள் அதிலும் குறிப்பாக முனிசிபாலிட்டிகளில் உள்ள நகரசுத்தித் தொழிலாளர்கள் வாரா வாரம் கடன் வாங்கித்தான் ரேஷன் வாங்க வேண்டியிருக்கிறது. ஒன்றாம் தேதி சம்பளம் வாங்கிக் கொண்டு கேட்டிற்குப் போனால் பாதிதான் கைக்கு வருகிறது. எங்கள் ஊரை எடுத்துக் கொண்டால் விவசாயத் தொழிலாளர்கள் கடன் வாங்கவேண்டுமென்றால் அவர்களால் எந்தச் சொத்தையும் அடமானம் வைக்க முடியாது கைமாற்றாகத்தான் கடன் வாங்குகிறார்கள். ரூ. 200-க்கு எழுதிக் கொடுத்துத்தான் ரூ. 100 கடன் பெறவேண்டியிருக்கிறது.

ஆகவே, நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் ஆண்டு வருமானம் ரூபாய் மூவாயிரத்திற்கு கீழேயுள்ளவர்களுக்கு அவர்கள் பட்டிருக்கும் தனியார் கடன்கள் யாவும் ரத்து செய்யப்படவேண்டும். அதற்கான ஒரு சட்டத்தை தமிழ் நாடு அரசு கொண்டுவரவேண்டும். இன்று வட்டிக்குக் கடன் கொடுக்கிறார்கள். ரூபாய் நூறு கடன் கொடுத்தால் கொடுக்கிற அன்றே ஐந்து ரூபாய் எடுத்துக் கொள்கிறார்கள். பின்னர் தினம்தினம் ரூ. 1-25 கட்டவேண்டும். அப்படி நூறு நாட்கள் கட்ட வேண்டும். அப்படி நூறு நாட்களில் ரூ. 125 கட்ட வேண்டும் என்ற நிலைதான் இருக்கிறது.

ஆகவே, வறுமையில் வாடும் ஏழை மக்களுக்காக நான் கூறியபடி ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்று பல மாநிலங்களில் இப்படிச் சட்டங்கள்

கொண்டுவரப்பட்டிருக்கும் நிலையில் இங்கு எல்லாம் அறிவிப்பாகவே செய்துவிடாமல் உண்மையானதொரு சட்டத்தைக் கொண்டு வந்து, ஏழை எளியவர்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில் அது அமையவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, ஏழை எளியவர்கள் வாங்கியிருக்கக்கூடிய கடன்களைப் பரிசீலித்து ரூபாய் மூவாயிரத்துக்கு உட்பட்டு வருவாய் உள்ளவர்களின் தனியார் கடன்கள் யாவும் ரத்து செய்யப்பட வேண்டுமென்று கேட்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, கடன் நிவாரண மசோதாவை இன்று தமிழ்நாட்டில் கொண்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய பிரதமர் அவர்களின் இருபது அம்சத் திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மக்கள் கடனிலிருந்து மீட்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் ஒரு திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த எண்ணத்தில்தான் நாங்கள் இதைக் கொண்டு வந்தோம் என்றுகூட நேற்று கனம் முதலமைச்சர் அவர்கள் சட்டசபையில் சொன்னார்கள்.

இந்தக் கடன் நிவாரணச் சட்டம் உண்மையிலேயே வரவேற்கத்தக்கதொரு சட்டம்தான். இனிமேல் கொஞ்சம் கொஞ்சமாக இந்தச் சமுதாயத்தில் ப்ரைவேட் மணிலென்டிங், தனி நபர்கள் பணம் கடன் கொடுத்து திண்டுதிமிசில் படுத்திருந்து அவர்கள் வாழ்க்கை நடத்துவது என்பது இனிமேல் இந்தச் சமுதாயத்திற்கு ஒவ்வாது என்பதை அவர்களுக்கு உணர வைப்பது மிக மிக வரவேற்கத்தக்கது.

வீட்டில் உட்கார்ந்துகொண்டே கடன் கொடுத்து வட்டி வாங்கி வாழ்க்கை நடத்தலாம் என்பது சமதர்ம சமுதாயத்தில் ஏற்ற ஒரு தொழில் அல்ல என்பதை உணர வைப்பது இதுபோன்ற சட்டங்கள்தான். அதே சமயத்தில் எந்த அளவிற்கு ரூரல் இன்டெப்டெட்னஸ் இருந்து கொண்டிருக்கிறது, அதற்கு மாற்று ஏற்பாடு செய்திருக்கிறோமா இல்லையா என்று பார்க்க வேண்டியதும் அரசாங்கத்தின் பொறுப்பு, அதில் இந்த அரசு தவறி விட்டது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.





குறிப்பாக, தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டால்—பிற மாநிலங்களைவிட தெற்கில் உள்ள ஒருசில மாநிலங்களுக்கு தனிக் கஷ்டம் இருக்கிறது. பான் ப்ரோக்கர்கள் ஆக்டை எடுத்துக் கொண்டால் நகைகளை அடகு வைத்து அல்லது பண்டங்களை அடகு வைத்து கடன் வாங்குவது என்பது ஆந்திரா, மைசூர், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில்தான் அதிகமாக இருக்கிறது. அதற்குக் காரணம் நமது சேமிப்பு நகைகள் வடிவத்தில்தான் இருக்கிறது. பெண்களை எடுத்துக் கொண்டால் கையில் உள்ள பணத்தைக் கொண்டு நகைகள் செய்து போட்டுக்கொண்டால் அவசர காலத்தில் ஒரு உதவியாக இருக்கும் என்று நகைகள் செய்து போட்டுக் கொள்கிறார்கள். சதர்ன் ஸ்டேட்டில் இரண்டு மூன்று மாநிலங்களில்தான் பான் ப்ரோக்கர்ஸ் ஆக்ட் தீவிரமாக அமல் நடத்தப்பட்டிருக்கிறது. அந்நிலையில் இன்றைய நிலைமை என்ன?

திடீரென்று பணம் கொடுக்கக்கூடியவர்கள் பணம் கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். ஆறு மாதங்களுக்கு வட்டி வாங்கக் கூடாது என்று சொல்லிவிட்டோம். ஆகவே, பணம் அவசரமாகத் தேவைப்படுகிறவர்கள் இன்று அவஸ்தைப்படுகிறார்கள். குறிப்பாக, சென்னை நகரத்தை எடுத்துக் கொண்டால் ஏழை மக்கள் வார ரேஷனை வாங்க பணம் இல்லாமல்—[illegible] அண்டா குண்டாக்களை அடகு வைத்து பணம் வாங்குவோர்கள்—அவதிப் படுகிறார்கள். இன்று அவசரச் செலவுகளுக்குப் பணம் இல்லாமல் மக்கள் அவஸ்தைப்படுகிறார்கள். இன்று அவர்களது கதி என்ன?

லைசென்ஸ் பெற்று, இவ்வளவுதான் வட்டி வாங்க வேண்டும் என்று வைத்திருந்தபோதே தவறுகள் நடந்தன. இன்று அன் லைசென்ஸ்டு பான் ப்ரோக்கர்சாக இருக்கிறார்கள். இன்று நாம் கள்ளுக்கடைகளை மூடிவிட்ட பின்னர் எப்படித் திருட்டுச் சாராயம் காய்ச்சுகிறார்களோ, எப்படி இல்லிஸிட் டிஸ்டிலேஷன் நடத்துகிறார்களோ, எப்படித் திருட்டுத்தனமாக கள் குடிக்கிறார்களோ அதுபோல் இருக்கிறது. கள்ளுக்கடைகளை நாம் அனுமதித்திருந்த போது இருந்ததைவிட பயங்கரமான அளவிற்கு இப்போது தமிழ்நாட்டில் கள், சாராயம் வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். வேகமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். விருவிருப்போடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை சாதாரண பிரஜை உள்ளத்தில் கை வைத்துப் பேசினால் ஒத்துக்கொள்வான். அதை யாரும் மறுக்க முடியாது. அதேபோல்தான் அன் லைசென்ஸ்ட் மணி லென்டிங்

இன்று நடக்கிறது. முன்பு நகையை வாங்கிக்கொண்டு ரசீது கொடுத்து வட்டி வாங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனல் இப்போது ரசீது இல்லாமல் பணம் கொடுத்து எங்கேடா நகையை வைத்தாய் என்று கேட்கக்கூடிய அளவிற்கு—நமக்கு நாணயம் எவ்வளவு இருக்கிறது என்பது நமக்குத் தெரியும்—நிலைமை வந்திருக்கிறது.

Money-lenders are giving Rs. 300 to 400 crores to small people.

அவர்கள் பெரிய இடங்களில் கடன் வாங்கி அடகுக் கடை நடத்து கிருர்கள். எல்லோரும் டாட்டாக்கள், பிர்லாக்கள் அல்ல. பத்தா யிரம் இருபதாயிரம் என்று விதவைகள், வேறு தொழில் நடத்தத் தெரியாத பெண்களிடமிருந்து பணம் கடன் வாங்கி மணி லெண்டிங் பிஸினஸை செய்கிருர்கள். மணி லெண்டிங் பிஸினஸை ஒழிக்க வேண்டும் என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனல் மாற்றுவழி என்ன செய்திருக்கிறீர்கள்?

(முற்பகல் 10.30)

கோவாபரேடிவ் பாங்குகளை அதிகமாக ஏற்படுத்தினீர்களா? ரூரல் பாங்குகள் இனிமேல்தான் சிறு விவசாயிகளுக்காக வரப் போகிறதே தவிர, அவசிய ஆத்திரச் செலவுகளுக்காக நீங்கள் என்ன மாற்று வழி செய்து இருக்கிறீர்கள்? மாற்று வழி செய் யாமல், 20 அம்சத் திட்டத்தில் சொல்லி இருக்கிறது, ஆகவே மசோதா கொண்டு வந்து இருக்கிருேம் என்று சொல்கிறீர்கள். மாற்று வழி செய்யாமல் மக்களை அவதிக்குள்ளாக்கும் வகையில் மசோதா கொண்டு வந்தது ஏன் என்று கேட்கிறேன். உடனடியாக உத்தரவு போடுங்கள், இனிமேல் தமிழ் நாட்டில் அந்தத் தொழில் நடத்த விடமாட்டோம், நடத்தக் கூடாது என்று அவர்களுக்குச் சுட்டிக் காண்பித்து விடுவது நல்லது. இனிமேல் நீங்கள்

You can wind up your business. In Tamil Nadu it is not permissible.

என்று சொல்லிவிடலாம். ஆறு மாதம் வட்டி கட்டவேண்டாம் என்று சொல்லிய காரணத்தால், நகை வைத்தவர்கள் கடனைத் திரும்பக் கட்டாமல் இருக்கிருர்கள். திரும்பப் பணம் கட்டவில்லை யென்றல் அவர்களுக்கு ரொட்டேஷனுக்குப் பணம் இல்லாமல் இருக்கிறது. இதனல் பணமுடக்கம் ஏற்பட்டு இருக்கிறது. இதன் காரணமாக ஏழைகள்தான் தெருத் தெருவாக பாத்திரம்





பண்டத்தை எடுத்துக் கொண்டு ரூ 10-க்காக அலைய வேண்டியிருக் கிறது. பெரிய பெரிய பணக்காரர்கள் எல்லாம் வங்கிகளில் இருந்து கடன் வாங்கிக் கொண்டு விடுகிருர்கள். தமிழகத்து ஏழை மக்களை இப்படிப்பட்ட அவல நிலைக்கு கொண்டு வந்து விட்டதால், அவர் களுக்கு மாற்று வழியில் ஏதேனும் உதவி செய்ய வேண்டுமென்று இந்த மசோதாவின் மூலமாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கடன்களை ரத்து செய்ததுபோல், ஏன் கோவாபரேடிவ் கடன்களையும் ரத்து செய்யக் கூடாது. கோவாபரேடிவ்வில் எவ்வளவோ பணம் வேஸ்ட்டாகிறது. எவ்வளவோ செலவு அனுவசியமாகிறது. கூட்டுறவுத் துறையில் எவ்வளவு தவறு நடந்து இருக்கிறது. எத்தனையோ முறைகள் அவற்றைப்பற்றி யெல்லாம் பேசி இருக்கிருேம். எவ்வளவோ பேர் பணத்தைக் கையாடல் செய்து இருக்கிருர்கள். ஏழு வருஷம் எட்டு வருஷம் ஆனலும், என்ன ஆயிற்று என்று கேட்டால் இன்னும் இன்வெஸ்டி கேஷனில்தான் இருக்கிறது என்று சொல்கிருர்கள். பெரிய பெரிய ஆட்கள் எல்லாம் ரூ. 1¼ கோடி, ரூ. 2 கோடி என்று கையாடல் செய்தது எல்லாம்கூட இன்னும் இன்வெஸ்டிகேஷன் என்ற அளவில் இருக்கிறது என்பதைப் பார்க்கிருேம். இப்படி கூட்டுறவுத் துறையில் லட்சக்கணக்கான கோடிக்கணக்கான ரூபாய் பாழாய் போய்க் கொண்டிருக்கிறபோது, அங்கேயிருக்கும் பெரியவர்கள், அங்கேயிருக்கும் டைரக்டர்கள், வசதி படைத்தவர்கள் அந்தத் தவறைச் செய்து தப்பித்துக் கொள்கிறபோது, ஏழை எளிய வர்கள் வாங்கிய கடனை ஏன் ரத்து செய்யக் கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன். தனிநபர் கடன்களை ரத்து செய்கிற போது, கோவாபரேடிவ் கடன்களையும் ரத்து செய்யுங்களேன். 1¼ கோடி ரூபாய் வரையில்கூட 'பேட்-டெட்' என்று எழுதி யிருக்கிறீர்கள். தருமபுரி கோவாபரேடிவ் சொசைடியில் செய்ய வில்லையா? . . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): 20 அம்ச திட் டத்தில் கோவாபரேடிவ் கடன்களையும் ரத்து செய்ய வேண்டு மென்று அம்மையார் அவர்கள் சிபார்சு செய்வார்களா?

திருமதி த. ந. அனந்தநாயகி: 20 அம்சத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கு சிபார்சு செய்ய மாட்டேன். உங்களுடைய ஆட்சிக்குத்தான் சிபார்சு செய்வேன். கண்கூடாக நாங்கள் பார்க்

கிறோம், இந்த யோசனையை உங்கள் ஆட்சிதான் தரவேண்டும், காரணம், இங்கேதான் நிர்வாகத் திறமையின்மையால் கோடிக் கணக்கான பணம் பாழாகப் போய்க் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்வதற்கு மாநில அரசுக்கு முழு உரிமை கிடையாது. ரிசர்வ் வங்கி மூலம் அந்தப் பணத்தைப் பெற்றுக் கொடுக்கிறோம். மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தில் அது வருவதால், மாநில அரசாங்கம் அதை ரத்து செய்ய முடியாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மாநில அரசே அந்தக் கடனை ஏற்றுக் கொள்ளலாம். உங்களுடைய பொறுப்பிலே அந்தக் கடன்களையெல்லாம் ஏற்றுக் கொள்ளலாம். அது ஏழை விவசாயிகளுக்கு இந்த அரசு செய்யும் ஒரு நல்ல 'ஜெஸ்சர்' என்று சொல்கிறேன். எவ்வளவோ பணம் பாழாகப் போகிறது, அதற்கெல்லாம் எங்கெங்கிருந்தோ சட்டம் வந்து பாதுகாப்பு வந்துவிடும். ஆனால் கூட்டுறவுக் கடன்களை மட்டும் ஈட்டிக்காரன் மாதிரி திருப்பி வாங்கியே ஆகவேண்டும் என்று சொல்வது, "ஊருக்கு உபதேசமடி கண்ணம்மா, உனக்கில்லையடி கண்ணம்மா", என்பது போல் இருக்கிறது. ஆகவே, ஊருக்கு உபதேசம் செய்வதை விட்டு விட்டு, கிராமப்புறங்களில் இருக்கும் ஏழை மக்களுக்கு உதவி செய்யும் வகையில் அவர்கள் கோவாபரேடிவ் மூலம் பெற்ற கடனை Take it as a bad debt இந்த மாதிரி 'பேட் டெட்' என்று சொல்லிவிட்டால் பல ஏழைகளுக்கு செழிப்பு ஏற்படும். நாங்கள் பல நாட்களாகச் சொல்லி வருகிறோம். சென்னையைப் பொறுத்தவரையில் தனி நபர் ஜாமீன் பேரில் 500 ரூ. கடன் கொடுக்க வேண்டும். சொத்து பாத்திரம் ஒன்றும் கேட்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வேறு விஷயம். எல்லா விஷயத்தையும் இதில் பேசி விடாதீர்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** வங்கிகள் மூலம் ரூ. 500 ரூ. 1,000 வரை தனி நபர் ஜாமீன் பேரில் சென்னையில் இருக்கிறவர்களுக்குக் கடன் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச்





செய்தால் சாதாரண மக்கள் கடன் சுமையிலிருந்து காப்பாற்றப்படுவார்கள் என்று கூறி அதைச் செய்து தரவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** கனம் சபா நாயகர் அவர்களே, அரசாங்கம் கொண்டு வந்துள்ள கடன் நிவாரண மசோதாவை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை நான் பேச வேண்டுமென்று விரும்புகிறேன்.

உபதேசம் செய்வது கண்ணம்மாக்களுக்கு ரொம்ப ரொம்பச் சுலபம். ஆனால் செயலாற்றுகின்ற சமயத்தில்தான் இருக்கக்கூடிய கஷ்டங்கள் மற்றவர்களுக்குத் தெரியும். இந்தக் கடன் நிவாரணச் சட்டம் பொதுவாகப் பார்க்கப்போனால், நோயாளியை குணப்படுத்துவதற்குத் தேவைப்படுகிற மருந்தே தவிர நோயாளியை அழிக்கக்கூடிய அளவுக்குச் சென்று விடக் கூடாது. இப்படி அடிக்கடி கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வருவதன் மூலம் நாம் அதைத்தான் செய்து வருகிறோம் என்று சொல்ல விரும்புகிறேன்.

யார் கடன் கொடுக்கிறார்கள்? ஏதோ டாட்டா, பிர்லா பிராஞ்சு வைத்துக் கொண்டா கிராமங்களில் கடன் கொடுக்கிறார்கள்? அல்லது அங்கே இருக்கும் கடன் கொடுப்பவர்கள் மூலமாகக் கடன் கொடுக்கிறார்களா? கிடையாது. நாம் பிரத்யட்சமாகப் பார்க்கிறோம். கிராமத்திலிருந்து வரக்கூடியவர்கள், நகரத்திலிருந்து வரக்கூடியவர்கள், அவர்களைப் பார்த்தால் கையில் ஒரு ஆயிரம் ரூபாய் இருக்கிறது என்றால் அதை நாலு பேரிடத்தில் கடன் கொடுக்கலாமே என்று சொல்லி கொடுப்பார்கள். 5 ஏக்கர் நிலம் வைத்து இருப்பவன் ½ ஏக்கர் நிலம் வைத்துள்ளவனுக்குக் கடன் கொடுப்பான். 10 ஏக்கர் நிலம் வைத்து இருப்பவன் 2 ஏக்கர் நிலம் வைத்திருப்பவனுக்குக் கடன் கொடுப்பான். ஆகையால் கடன் கொடுப்பது என்பது பாங்கியிலிருந்து பணத்தை வாங்கி அதை லேவா தேவி செய்யக்கூடிய முறை. இதில் பிரத்யட்சமாகப் பார்த்தால் இந்தச் சட்டம் தேவைதான். இந்தச் சட்டம் ஒரு சமயத்தில் தேவைப்பட்டது. அதாவது 1938-39 என்று கருதுகிறேன். திரு. ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் அவர்கள் இப்படியொரு சட்டம் கொண்டு வந்தார்கள். விவசாயிகளுக்கும், கடன் பட்டவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் கொண்டு வந்தார்கள். எவன்

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] 1975 அக்டோபர் 24

ஒருவன் வட்டியை அசலுக்கு மேல் கொடுத்திருந்தால் அந்த அசலே தள்ளுபடியாகிவிடும் என்று சட்டம் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்தால் பல்லாயிரக்கணக்கான குடும்பத்தார் அந்த இன்னலிலிருந்து மீண்டார்கள் என்பதை மறக்க முடியாது.

ஆனால் இன்று நாம் என்ன செய்கிறோம்? இது பாஷனாகி விட்டது. இது இங்கே மட்டுமல்ல, இந்தியா பூராவிலும் உள்ள 'நியூடேல்' அடிப்படையில் இப்படி ஒரு சுலோகன் சொல்லிக் கொண்டு ஜனங்களை ஏமாற்றி, வாக்காளர்களை ஏமாற்றி இது நடந்து வருகிறது. இப்படி சொல்லக்கூடிய சுலோகன் மேலே இருந்து வருகிறது. மாநிலத்திலிருந்து அல்ல. மத்திய அரசாங்கத்தின் 20 அம்சத் திட்டத்தில் ஒன்றாக இது வருகிறது.

கோவாபரேடிவ் மூலமாகக் கொடுக்கும் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நாம் கோவாபரேடிவ் மூலமாக ஏறத்தாழ 50-60 கோடி ரூபாய் 50,000-60,000 பேர்களுக்குக் கடன் கொடுக்கிறோம். 2 லட்சம், 1 லட்சம் என்று அல்ல. 4,000, 5,000, 10,000 என்று கொடுக்கிறோம். அதே மாதிரி ஷெட்யூல் பாங்குகள் கொடுக்கின்றன. ஷெட்யூல் பாங்கிற்குப் பணம் எங்கிருந்து வருகிறது? பல பேர் வங்கிகளில் டிபாசிட் செய்கிறார்கள். அவர்கள் அதைப் பெருக்க வேண்டும் என்பதற்காக பல பேருக்குக் கடன் கொடுக்கிறார்கள். டெபாசிட் செய்யப்படுகிற பணத்திற்கு வட்டி கொடுக்கிறார்கள். கொடுக்கிற பணத்திற்கு வட்டி வசூல் செய்கிறார்கள். அவர்கள் பணத்தை வாங்கி, கொடுக்கிற காரணத்தால்தான் வங்கி என்று சொல்கிறோம். இன்றையதினம் நிலைமை என்ன? நாம் சொல்லி விடலாம், 2 ஏக்கர் நிலத்திற்குக் குறைவாக வைத்திருக்கும் விவசாயிகள், மற்றவர்கள் பணத்தை திருப்பிக் கட்ட வேண்டாம் என்று சொல்லிவிடலாம். அப்படி மாநில அரசாங்கம் செய்வது சரியாகாது. அமைச்சர் ஓ. பி. இராமன் அவர்கள் சொன்னார்கள், ரிசர்வ் வங்கி பணம் கொடுக்கிறது என்று. 50 கோடி ரூபாய் ரிசர்வ் வங்கியிலிருந்து கடன் பெறுகிறோம் என்று சொன்னால், 50 கோடி ரூபாயும் வசூல் செய்து திருப்பிக் கட்டினால்தான். அடுத்ததாக அவர்கள் 50 கோடி ரூபாய் தருவார்கள். அப்படியில்லை, ஒன்றிரண்டு கோடி குறைந்து விட்டது என்று சொன்னால், அந்த அளவுக்கு 'கிரெடிட் கர்ப்' கொண்டு வந்து விடுகிறார்கள். இப்படி ரிசர்வ் வங்கி கண்டிரோல் வைத்திருக்கிறது. அந்த ரிசர்வ் வங்கியின் நிர்வாகக் கண்டிரோல்



1975 அக்டோபர் 24] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி

வைத்து இருக்கிறவர்களுக்கு, இந்த 20 அம்ச திட்டத்தில் கோவாபரேடிவ் கடன்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சிபார்சு செய்தால் அமல்படுத்துவதற்கு வசதியாக இருக்கும். அதை விட்டு விட்டு இந்த மாநில அரசாங்கம் செய்யவேண்டுமென்று சொல்வது சரியல்ல. ஏனென்றால் நாடு பூராவிலும் இந்த நிலைமை இருக்கிறது. ஒரு 10 பேருக்கு மட்டும் வஜா செய்துவிட முடியாது. அல்லது இந்த இருபது அம்சத் திட்டங்களில் சொல்லிவிடுங்கள். ஏழெண்டுகளே அவர்கள் பட்ட கடன்களை ரத்து செய்துவிடலாம் என்று. அவர்களும் தாராளமாகக் கொடுத்து, தாராளமாக ரத்து செய்து விடலாம். ஜெயிலுக்குப் போய்விடுவோம் என்ற பயமே இல்லாமல் அவர்கள் செய்யலாம். இப்படிச் சொல்லக்கூடிய கண்ணம்மாக்கள் நிறைய பேர் கிடைக்கலாம். ஆனால் அமுல் படுத்தக்கூடிய அன்னைகள்தான் நிறையத் தேவை. அதுதான் பஞ்சமாக இருக்கிறது.

இன்றைக்குக் கிராமப்புறங்களிலே உள்ள பிரத்தியட்சமான நிலைமை என்ன? தேசியமயமாக்கப்பட்ட பாங்குகளிலேயே வட்டி விகிதம் 15 சதவிகிதம் 16 சதவிகிதம் என்று இருக்கின்றது. ஓவர் ட்ராப்ட் என்று யாராவது டெம்பரரியாக வாங்கினால் அதற்கு வட்டி 18 சதவிகிதம். பாங்குகளே 18 சதவிகிதம் என்று வட்டி வாங்கினால் சாதாரணமானவர்கள் என்ன செய்வார்கள்? இன்றைக்குத் தமிழ் நாட்டிலே மட்டும் இல்லை. அகில இந்திய ரீதியிலேயே பார்த்தால்கூட இருக்கும் பணம் சரியாக, சீராகச் செயல்படுத்தக்கூடிய நிலைமை இல்லை. கிராமப்புறங்களிலே அடியோடு பணம் கிடைப்பதே இல்லை. இந்த நிலைமையில் கிராமங்கள் தோறும் நாங்களும் பாங்குகளைத் திறந்து வைக்கிறோம் என்று சொல்லி திறந்துள்ள பாங்குகளிலும் 15 சதவிகிதம், 16 சதவிகிதம் வட்டி. சாதாரண கிராம ஜனங்களுக்கு கடன் கிடைக்க மாற்று ஏற்பாடு என்ன இருக்கிறது?

விவசாயிகளுடைய கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சம் இல்லை. உற்பத்திச் செலவு அதிகமாகிக் கொண்டே போகிறது. உற்பத்தியாகும் பொருள்களை உடனடியாக விற்பது என்ற நிலைமையில் ஒன்றுக்குப் பாதி விலைக்குத்தான் அவன் விற்க வேண்டிய நிலைமை. இந்த நிலைமையில் தாற்காலிகமாக ஏதாவது கடன் வாங்கிக் கொள்ளலாம் என்று சிட்டா அடங்கல் அனைத்தையும் எடுத்துக் கொண்டு போனாலும் பாங்குகளில், அதிலும் 15 அல்லது 16 சத

விதம் வட்டிக்குக் கொடுப்பதோ ரூ. 500 தான். ரூ. 500-க்கு மேலே அந்த பாங்குகளில், கொடுப்பதற்கு வழியில்லை; வகையில்லை. கூட்டுறவுச் சங்கங்களிலே கிடைக்கும் கடன் வசதி போதுமானதாக இல்லை. அதிலும் கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் வேண்டும் என்று விண்ணப்பம் போட்டால், உடனடியாகக் கிடைக்கிறதா என்றால் இல்லை. பூச்சி மருந்து வாங்க வேண்டும் என்று கடனுக்கு விண்ணப்பம் போட்டால் ஒரு மாதம் கழித்துத்தான் கிடைக்கிறது. பூச்சி மருந்தை ஒரு நான்கு நாட்களுக்குள் போட வேண்டும் என்றால், அது நேரத்தில் கிடைப்பதில்லை. நேரத்தில் பூச்சி மருந்தைத் தெளிக்கவில்லை என்றால் அந்த மகசூல் கைக்கு வராது. உரம் இல்லை என்று அதற்குப் பணம் வேண்டும் என்று விண்ணப்பம் போட்டாலும் இதே நிலைமைதான். நேரத்தில் உரம் போடவில்லை என்றால் அதோடு அந்த மகசூல் போய்விடும். இவ்வளவு ரிஸ்க்கில் ஒரு விவசாயி விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. பல தொல்லைகளுக்கு இடையிலே அல்லல்படுகிறான். எழுபத்தைந்து கிலோ கொண்ட ஒரு மூட்டை நெல் ரூ. 110, ரூ. 120 என்று விற்றுக் கொண்டிருந்தது, இப்போது ரூ. 65 என்றாலும் கேட்பார் இல்லாது கிடக்கிறது கிராமப்புறங்களில். விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். (மணி அடிக்கப்பட்டது).

இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகின்றேன். பின்னால் சற்று விலை ஏறுமோ என்று ஒரு மூட்டை இரண்டு மூட்டையை வைத்துக் கொண்டு இருக்கலாம். இடையில் ஏதாவது கடன் வாங்கிக்கொள்ளலாம் என்றால் நாம் போட்டுள்ள சட்டங்களின் காரணமாக கொஞ்சம் பணம் கையில் வைத்துக் கொண்டிருப்பவர்களும் கடன் கொடுக்க மறுக்கின்றார்கள். கொடுத்தால் திரும்ப வசூல் செய்ய முடியாது போய்விடுமோ என்ற பயம் அவர்களுக்கு வந்துவிட்டது. இப்படிப்பட்ட விவசாயிகளுடைய கடன்களை பல மாநிலங்களிலே, கருநாடகத்தில், குஜராத்தில் எல்லாம் ரத்து செய்து விட்டார்கள். யார் ரத்து பண்ணுவது? சொல்லக்கூடிய மந்திரிகள், தங்களிடமுள்ள பணத்தை 'ரைட் ஆஃப்' பண்ணினால் பரவாயில்லை. யார் பணத்தை யார் ரத்து செய்வது? What is the *loans standi* for these people to write off ரைட் ஆஃப் பண்ணுவது சுலபம், கண்ணம்மாக்களுக்கு. (திருமதி அனந்தநாயகி அவர்கள் எழுந்திருக்க) நான் உங்களைச் சொல்லவில்லை. கண்ணம்மா என்று பாடியிருக்கின்றார். அதையொட்டி உதாரணத்துக்குத்தான் சொல்லுகின்றேன்.





திருமதி த. ந. அனந்தநாயகி: கண்ணம்மா என்று கனம் உறுப்பினர் குறிப்பிடுகின்றார். அவர் யாரைச் சொல்லுகின்றார்? பிரதமர் இந்திரா காந்தி அவர்களைச் சொல்லுகின்றாரா?

What does he mean by that word, I would like to know.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கண்ணம்மா என்ற வார்த்தை உங்கள் பேச்சில்தான் வந்தது. அதை . . . .

திருமதி த. ந. அனந்தநாயகி: பாட்டில் வந்ததை மேற்கோளுக்காகச் சொன்னேன். அதை மீண்டும் மீண்டும் இந்த முறையில் எடுத்துச் சொல்லுகின்றார் என்றால் அதற்கு என்ன அர்த்தம்?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): 'காணி நிலம் வேண்டும்' என்று பாரதியார் பாடினார். நானும் பாட்டில் வருவதைத்தான் குறிப்பிட்டேன். தலைவரவர்களே, நான் சொல்லக் கூடிய கருத்துக்கள் இந்தச் சட்டத்தினைக் கொண்டு வருவதன் மூலம் கிராமப்புறங்களிலே ஏற்படும் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு செய்ய வேண்டும் என்பதுதான். இப்போதே கிராமப்புறங்களிலே ஐயாயிரம் ரூபாய் கடன் வேண்டும் என்றால் ரூ. 15 ஆயிரம் பாண்டு எழுதிக்கொண்டுதான் கொடுக்கின்றார்கள். நாட்டிலே பணமில்லை. பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் ரிசர்வ் பாங்கியின் பணம் அடிக்கும் மெஷினெரியை, நாஸிக் ப்ரிண்டிங் ப்ரஸ்ஸைக் கொஞ்ச நாளைக்குத் தமிழ் நாட்டிற்கு லீசுக்குக் கொடுத்து விடட்டும். தமிழ் நாட்டின் பணத் தேவைகளை நாங்கள் பூர்த்தி செய்துகொண்டு அதை அப்படியே பத்திரமாக திருப்பிக் கொடுத்து விடுகிறோம். அதற்கு அம்மையார் அவர்கள் மேலிடத்திற்கு ரெகமென்டு செய்தால் வசதியாக இருக்கும். சொல்லிவிடுவது ரொம்பவும் சுலபம். ஆனால் இன்றைக்குக் கிராமப்புறங்களிலே மக்கள்படும் தொல்லையைப் பார்க்க வேண்டும். தீபாவளிக்காக எதையாவது வாங்க வேண்டும் என்று கிராமப்புறங்களில் உள்ள மக்கள், விவசாய மக்கள் படும் கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. ஒத்தி வைப்பதால் பிரச்சனை தீர்ந்து விடுமா என்றும் யோசிக்க வேண்டும். இப்படிப்பட்ட சட்டங்கள் நோயைத் தீர்ப்பதற்குப் பதிலாக வியாதியை இன்னும் அதிகமாக்குகிறது என்று தான் சொல்ல வேண்டும். இருந்தாலும் இந்தச் சட்டத்தினை ஆதரிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த 'பில்' எப்போது முடிவது என்பதற்கு ஒரு முடிவினை எடுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இது ஒரு முக்கியமான பில். இதிலே பலரும் தங்கள் கருத்தினைத் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த நேரத்திற்குள் முடித்து கொள்ளுவது என்று ஒரு முடிவினை எடுங்கள் என்றுதான் நான் கேட்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இன்னும் ஒரு மணி நேரமாவது ஒதுக்கினால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் பலர் பேச வேண்டும். திரு. அழகர்சாமி அவர்கள் பேச வேண்டும் . . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: நானும் பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு நேரம் என்று எனக்கு ஒதுக்கிக் கொடுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இன்றைக்கு நிறைவேற்றவேண்டிய மசோதாக்கள் என்று இரண்டு, மூன்று இருந்தாலும் அவை அவ்வளவையும் இன்றே நிறைவேற்ற வேண்டும் என்று இல்லை. இன்று இதை முடித்துக்கொண்டு நேரம் இல்லையென்றால் அவற்றை அடுத்த நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். இதற்கு மணி 12 வரையில் நேரம் கொடுத்தால் பரவாயில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு ஏற்றவாறு பேசுங்கள். எல்லோரும் பேச வேண்டும். பேசும் பாயிண்டோடு நின்றால் பரவாயில்லை. அதை விட்டுவிட்டு எங்கெங்கோ போகின்றீர்கள்.

திரு. முனு ஆதி: உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அப்படிப் பேசியதால்தான். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இப்போதுதான் அவைக்கு வந்தீர்கள். என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியாது. நீங்கள் தயவுசெய்து அமருங்கள்.



திரு. முனு ஆதி: நான் இங்கே இல்லையென்றாலும் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். இப்படி நீங்கள் சொல்லுவதன் மூலம் நீங்கள் என்னை அவமானப்படுத்துகின்றீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து நீங்கள் உட்கார்ந்து கொள்ளுங்கள். திரு. அழகர்சாமி அவர்கள் பேசட்டும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த மசோதா கொஞ்சம் முக்கியமான மசோதா என்றே சொல்ல வேண்டும்.

திரு. பெ. சீனிவாசன்: அங்கத்தினர்கள் ரொம்பப்பேருக்குக் கடன் இருக்கிறதுபோல இருக்கின்றது. எல்லோரும் பேச வேண்டும் என்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடன் கொடுத்தவர்கள்தான் பாதிக்கப்பட்டவர்கள். அங்கத்தினர்கள் இல்லை. (சிரிப்பு) திரு. அழகர்சாமி அவர்கள் பேசட்டும்.

திரு. சோ. அழகர்சாமி: அண்மையில் வெளியிடப்பட்டதொரு புள்ளிவிவரப்படி, தமிழ் நாட்டிலேதான் விவசாயிகள் பெருமளவிற்குக் கடன் பட்டிருக்கின்றார்கள் என்று தெரிகிறது. கிட்டத்தட்ட ரூ. 460 கோடி கடன் இருப்பதாகத் தெரிகிறது. மாண்புமிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கடன் கொடுத்தவர்களுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு, இந்த மசோதாவினைக் கொஞ்சம் எதிர்த்தே பேசினார் என்றுதான் எண்ணத்தோன்றுகிறது. திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் எதிர்த்துப் பேசவில்லை என்றும் எண்ணுகிறேன். இந்த மசோதாவினைப் பொறுத்த மட்டில், தமிழகத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சி நிலை காரணமாக . . .

திருமதி த. ந. அனந்தநாயகி: என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளுகின்றார்கள். நான் கட்டாயம் இந்த மசோதாவினை வரவேற்கிறேன். ஆனால் நான் குறிப்பிட்டது, ஆல்டெர்னேடிவ் அரேஞ்மெண்ட்ஸ் பற்றித்தான்.

திரு. சோ. அழகர்சாமி: நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தனியார் கொடுத்த கடன்களை அரசாங்கம் ரைட்-ஆஃப் செய்வதற்கு என்ன உரிமை இருக்கின்றது என்கிறமாதிரி குறிப்பிட்டார்கள். ஆனால் கடன் கொடுத்தவர்கள் தொடர்ந்து

[திரு. சோ. அழகர்சாமி] [1975 அக்டோபர் 24

கடனைக் கொடுத்து, ரூ. 100-ஐக் கடனாகக் கொடுத்துவிட்டு ரூ. 1.000-ஐ வட்டியாக வாங்கியிருக்கின்றார்கள். இப்படிக் கடன் கொடுப்பவர்கள் சமுதாயத்தில் ஒரு அட்டையைப் போல ஒட்டிக் கொண்டு, ஏழை எளியவர்களைச் சுரண்டிச் சுரண்டி, சிறு விவசாயிகளை மேலே போகவிடாமல் வைத்திருப்பது மட்டுமில்லை, அவர்கள் தங்கள் விவசாயத்தில் என்று ஒரு சேமிப்பை வைத்துக் கொண்டு, ஒரு சிறு மூலதனத்தை ஏற்படுத்திக்கொண்டு சற்று நிம்மதியாக இருக்கலாம் என்றால் அது முடியாதபடி அவர்களை அப்படியே அழுத்தி வைத்திருக்கின்றார்கள். சிறு வருமானக் காரர்கள், சிறு விவசாயிகள் இவர்கள் வாழவே முடியவில்லை. சாதாரணமாக தோட்டி இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் சம்பளத்தை வாங்கிக் கொண்டு வெளியே வருவதற்கு முன்பே பிடுங்கிக் கொண்டு போய்விடுகின்றார்கள். அப்படியெல்லாம் அவர்கள் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள் சமுதாயத்திலே.

தமிழகத்தில் வறட்சி என்று ஏற்பட்ட நேரத்திலே ஒரு வருஷத்திற்கு என்று கடன்கள் ஒத்திவைக்கப்பட்டன. அதிலே கொஞ்சம் நிவாரணம் இருந்தது. ஆனால் அந்த ஒரு வருஷத்திற்குப் பிறகு நிலைமை என்ன? ஒரு வருஷ காலத்திற்குப் பிறகு மட்டும் அவர்கள் உடனடியாக அவற்றைக் கொடுத்துவிடும் நிலைமை ஏற்பட்டுவிடுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். எனவே, இதைப் பற்றியெல்லாம் கொஞ்சம் நிதானமாக விவாதம் செய்து, இந்தச் சட்டம் எதற்காகப் போடப்பட்டதோ, அந்த நிவாரணமானது மக்களுக்குக் கிடைக்கும் வகையில், அதன் பலன்கள் மக்களுக்குக் கிடைக்கும் முறையில் வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போதுள்ளபடி, 1976 ஜனவரி 15-ம் தேதிவரையில் எந்தக் கடனையும் வசூல் செய்யக்கூடாது. அதற்குப் பிறகு? பல ஊர்களில் உள்ள கண்மாய்களிலே தண்ணீர் கிடையாது. விவசாயம் அடியோடு பாழ்பட்டுக் கிடக்கின்றது. இனி பெய்ய வேண்டிய மழை பெய்தாலும் இதுவரையில் பட்ட கடன்களை அவர்கள் 1976 ஜனவரி 15-ல் தீர்த்துவிட முடியுமா என்று பார்க்க வேண்டும்.

திரு. வடிவேல் அவர்கள் சொன்னமாதிரி பல்வேறு மாநிலங்களிலே இப்படிச் சட்டங்களைப் பிறப்பித்திருக்கின்றார்கள். பரம்பரை பரம்பரையாகக் கடன்பட்டு, தலையே தூக்க முடியாது



1975 அக்டோபர் 24] [திரு. சோ. அழகர்சாமி]

உள்ள குடும்பங்களைப் பொறுத்த வரையில், மாத வருமானம் 200-க்கு மேற்படாதவர்கள் தனியார்களிடம் கடன்பட்டு இருந்தால் அந்தக் கடன்களை யெல்லாம் ரத்து செய்துவிட்டதாக பல மாநிலங்களிலே உத்தரவு போட்டு அவை ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. கருநாடக மாநிலம், உத்திரப்பிரதேசம், பஞ்சாப் போன்ற பல மாநிலங்களில் அவை ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. கர்னாடகத்தில், பீகாரில், உத்திரப்பிரதேசத்தில், பஞ்சாபில் இப்படி பல மாநிலங்களில் அவசரச் சட்டத்தின் மூலம் கடன் நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது. இருபது அம்சத் திட்டத்தின் அடிப்படையிலே அப்படிச் செய்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்திலே வறட்சி நிவாரணம் என்ற முறையிலே ஓராண்டுக்கு கடனை ஒத்திவைத்திருக்கிறோம். மறுபடியும் 6 மாதம் வட்டி வசூல் செய்யக்கூடாது என்று இருக்கிறது. ஆனால் 6 மாதம், ஒரு வருடம் வட்டியை, பணம் கடன் கொடுக்கும்போதே பிடித்துக் கொண்டு தான் கொடுக்கிறார்கள். அதனால் கடன் கொடுத்தவர்களுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. வட்டிக் கொடுமை இப்போது அதிகமாகியிருக்கிறதே தவிர குறையவில்லை. 1972-லே சட்ட அமைச்சர் சொன்னார்கள். அந்தக் கருத்து இன்னும் செயல்வடிவம் பெறவில்லை.

1937 ஆம் ஆண்டில், இராஜாஜி காலத்தில் ஒரு சட்டம் போட்டார்கள். அப்போது 100 ரூபாய் கடன் கொடுத்தால் 100 ரூபாய்க்குத்தான் பத்திரம் அல்லது நோட்டு எழுதி வாங்குவார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் கடனைப் போல இரண்டு மடங்கு வட்டியாகவும் அசலாகவும் கொடுத்திருந்தால் மீண்டும் பணம் கொடுக்க வேண்டியதில்லை என்று சட்டம் கொண்டு வந்தார்கள். அதைப்போல 30 ஆண்டு காலம் நிலத்தை ஒத்தியாகப்பெற்று அனுபவித்து வந்திருந்தால் பணம் பெறாமல் அந்த நிலத்தை விட்டுவிட வேண்டும் என்றும் சட்டத்திலே சொல்லியிருந்தார்கள். அப்போது அச்சட்டத்தினால் பலன் ஏற்பட்டது. ஆனால் இப்போது 100 ரூபாய் கடன் கொடுத்தால் 300 ரூபாய்க்குப் பத்திரம் எழுதி வாங்குகிறார்கள். ஆயிரம் ரூபாய்க்கு 3,000 ரூபாய் என்று எழுதி வாங்குகிறார்கள். அதனால் வாங்கிய கடனைப்போல 3 மடங்கு, 4 மடங்கு, வட்டி கட்டியிருந்தாலும் கடன் குறைய வழியில்லை. ஆகவே, இப்படிப்பட்ட காலத்தில் இராஜாஜி காலத்தில் கொண்டு வந்த சட்டம் மாதிரி கொண்டுவந்தால் பயன்படாது.

[திரு. சோ. அழகர்சாமி] [1975 அக்டோபர் 24

அமைச்சர் மாதவன் அவர்கள் உண்மையான கடன் எவ்வளவு, எவ்வளவு கட்டியிருக்கிறுர்கள் என்பதை கண்டறிவதற்கு ஒரு கமிட்டி போட்டு, உண்மையைக் கண்டறிந்து அதன்படி செய்ய வேண்டும் என்று 1972-லேயே சொன்னுர்கள். கடன் கொடுத்தவர்கள் இவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்பதை சரியான ஆதாரங்களுடன் நிரூபிக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னுர்கள். ஆனுல் இதுவரையில் யாருக்காவது நிவாரணம் கிடைத்திருக்கிறதா என்ருல் இல்லை. இரண்டு, மூன்று மடங்கு வட்டி கட்டியும் கடன் முடியவில்லை.

ஒரு கூலியாள் ஏதோ அவசரத் தேவைக்காக — மனைவியின் பிரசவம், வீடு கட்டுவதற்கு அல்லது மற்ற காரியங்களுக்காக— முதலாளியிடம் 100 ரூபாய் கடன் பெற்ருல் அதற்கு 300 ரூபாய்க்கு பத்திரம் எழுதி வாங்கிக் கொள்கிருர் முதலாளி. அப்புறம் அவன் அதிலிருந்து மீள முடியாது. வட்டி கொடுப்பதை ஒருமுறை நிறுத்திவிட்டால் கூட ஜப்தி செய்துவிடுவார்கள். இப்படிப்பட்ட நிலை நாட்டிலே தொடர்ந்து இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதை எல்லாம் கவனித்துப் பார்த்து, இந்தச் சட்டத்திலே போதுமான திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும்.

1976 ஜனவரி 15-ந்தேதி வரை வசூல் செய்யக் கூடாது என்று இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தேதிக்குப் பின்னுல் ஒரேயடியாக எப்படிக் கடனைக் கொடுக்க முடியும்? கொடுக்காவிட்டால் உடனே ஜப்தி நடவடிக்கையில் ஈடுபடுவார்களே! ஆகவே, குறைந்தது 1978 ஜனவரி வரையிலாவது நிறுத்தி வைக்க வேண்டும். யாருக்கும் அதுவரை கோர்ட்டுக்குப் பேக உரிமை இருக்கக் கூடாது. மொத்தக் கடனையும் பார்த்தால் கூட்டுறவு, பாங்க், சர்க்கார் கடன் எல்லாம் 15 சதவிகிதம் தான் இருக்கும். மீதி 85 சதவிகிதம் தனியார் கடனுகைத்தான் இருக்கும். கொடுத்த பணத்தை விட 3, 4 மடங்குக்கு நோட்டு, பத்திரம் எல்லாம் வாங்கி, ரிக்கார்டு வைத்திருக்கிறுர்கள். அதை நிறுத்தி வைக்காவிட்டால் அட்டைமாதிரி ஏழை எளிய மக்களை உறிஞ்சி விடுவார்கள். இந்தச் சட்டத்தினுல் எந்தவிதமான பயனும் இல்லாமல் போய்விடும்.

இந்தச் சட்டத்தைப்பற்றி நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எதிர்த்துப் பேசியது ஆச்சிரியமாக இருக்கிறது. ஆளும் கட்சியிலுள்ள ஒருவரே எதிர்த்துப் பேசுகிறுர் என்ருல் இன்னும்



1975 அக்டோபர் 24] [திரு. சோ. அழகர்சாமி]

ஆச்சிரியமாக இருக்கிறது. குறைந்த பட்சம் மாதம் 240 ரூபாய் வருமானமுள்ளவர்களின் கடனை ரத்து செய்ய வேண்டும் என்று பல மாநிலங்களிலே சட்டம் போட்டிருக்கிறுர்கள். கேரளத்திலே கூட அப்படிச் சட்டம் போட்டிருக்கிறுர்கள்.

வாங்கிய கடனை விட இரண்டு, மூன்று மடங்கு ஏற்கெனவே வட்டி கட்டிவிட்டார்கள். ஆகவே 200 ரூபாய் மாத வருமானம் உள்ளவர்கள் என்ன அடமானம், பத்திரம், நோட்டு எழுதிக் கொடுத்திருந்தாலும், எவ்வளவு வட்டி கட்டியிருந்தாலும், எத்தனை ஆண்டு ஆகியிருந்தாலும் அவர்களுடைய கடனை எல்லாம் ரத்து செய்ய வேண்டும். ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள் பெற்ற கடனையும் ரத்து செய்ய வேண்டும். இந்த இரண்டு ஷரத்துக்களையும் இந்தச் சட்டத்திலே சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பஞ்சாபிலே 50,000 ரூபாய் வருமானம் வரக்கூடியவர்களுக்கு ஸ்லாப் முறையில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்திருக்கிறுர்கள். அதேமாதிரியாக இங்கும் கொண்டுவரலாம்.

1972-ம் ஆண்டு அமைச்சர் மாதவன் அவர்கள் சொன்னதைப் போல உடனடியாக ஒரு கமிட்டி போட்டு, உண்மையாகக் கொடுக்கப்பட்ட கடன் என்ன என்பதைக் கண்டறிந்து, அதற்கு எவ்வளவு பணம் வட்டியாகக் கட்டியிருக்கிறுர்கள் என்பதையும் கண்டறிந்து, உண்மையான கடனைப்போல இரண்டு மடங்கு கட்டியிருந்தால் அந்தக் கடனை ரத்து செய்ய வேண்டும். உண்மை விவரம் கண்டறியப்படாததால் 1972-ம் ஆண்டுச் சட்டத்தின் பலன் யாருக்கும் கிடைக்கவில்லை. உண்மையான பலன் கிடைக்க வேண்டுமென்ருல் உடனடியாக 'மக்கள் கமிட்டி' போட வேண்டும். கேரளாவில் போட்டிருக்கிறுர்கள். அந்தக் கமிட்டி நேர ஆலோசித்து, இவ்வளவு கடன் வாங்கியிருக்கிறுர், இவ்வளவு வட்டி கட்டியிருக்கிறுர், இன்னும் இவ்வளவு கட்ட வேண்டும் என்று சொல்லக்கூடிய ஒரு ஏற்பாடு செய்தாலொழிய கடன் நிவாரணம் யாருக்கும் கிடைக்காது.

பாங்குகளிலிருந்து கடன் கொடுப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. இப்போது 'நாஷனல் பாங்கில்' கொடுக்கிறுர்கள். ஒரு வேளை மத்திய அரசாங்கம் கொடுக்கச் சொல்லி கட்டாயப்படுத்தினர்களோ என்னவோ. கொடுப்பதும் ஏதோ கட்டாயத்திற்காக

[திரு. சோ. அழகர்சாமி] [1975 அக்டோபர் 24

நான்கு பெரிய மனிதர்களுக்குக் கொடுத்துவிட்டு, பணம் தீர்ந்து விட்டது, இனி இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். அந்த வகையிலும் ஏழை விவசாயிகளுக்குக் கடன் கிடைக்கவில்லை. எல்லோருக்கும் கடன் உரிய காலத்தில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்தச் சட்டத்தின் மூலம் உண்மையான பலன் மக்களுக்கு கிடைக்க வேண்டுமானால், (1) 1976 ஜனவரி 15-ந்தேதி என்பதற்குப் பதிலாக 1978 ஜனவரி 15 என்று மாற்ற வேண்டும்; (2) 3,000 ரூபாய் வருஷ வருமானம் உள்ளவர்கள், 5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்கள் வாங்கிய கடனை எல்லாம் ரத்து செய்ய வேண்டும். இந்த இரண்டு ஷரத்துக்களையும் இந்தச் சட்டத்தில் சேர்த்து, அதற்கு ஆளும் கட்சியின் தரப்பிலேயே திருத்தம் கொண்டு வந்து, நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: கனம் சபாநாயகர் அவர்களே, இங்கே சபை முன்னால் வைக்கப்பட்டிருக்கிற இந்த மசோதாவை முழு மனதுடன் ஆதரிக்கிறேன்.

இந்த மசோதாவைப்பற்றி இங்கே பேசியவர்களிலே ஆளும் கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிடும்போது இது ஏதோ 'பேஷனாக' கொண்டுவந்த சட்டம் போல் எல்லா இடங்களிலும் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நாம் சமுதாயத்திலே பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்ற முறையிலே சில சலுகைகளை நிவாரணமாக வழங்கியிருக்கிறோம். அப்படி வழங்கியிருந்தும் கூட அவர்கள் இன்னும் முன்னேறவில்லை என்பதுதான் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிற உண்மை. ஆகவே, இன்றைக்குச் சமுதாயத்திலே முன்னேற்றம் காண, பொருளாதார அமைப்பிலே இருக்கிற கோளாறுகளை மாற்ற ஒரு முறையான ஏற்பாடு காணப்படவேண்டுமென்று ஏற்பாட்டுக்காக சில வழிமுறைகளை, தேசம் முழுவதற்கும் ஒரேமாதிரியான கருத்தை நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் அறிவித்து, அது எல்லா மாநிலங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிற ஒரு சூழ்நிலையைத்தான் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இந்த மசோதாவிலே பேசும்போது, இது ஏதோ 'பேஷனாக' எல்லா இடங்களிலும் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள்.



1975 அக்டோபர் 24] [திரு. எம். சுரேந்திரன்]

சமுதாயத்திலே இருக்கிற பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஆராய்ந்து பார்த்துவிட்டு அவர்கள் அப்படி பேசியிருக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிற விதத்திலே அவருக்கு ஏற்பட்டிருக்கிற கோளாறு காரணமாக, அவருக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்ற காரணத்திற்காக அப்படி பேசினாரோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. ஏனென்றால் பொருளாதாரத்திலே ஏற்றத் தாழ்வு. . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): இந்த மசோதாவினால் எனக்கு எந்தவிதமான பாதகமும் இல்லை. நான் கடன் வாங்கியவனே தவிர கடன் கொடுத்தவன் அல்ல. ஆகவே எனக்கு எந்தவிதமான பாதகமும் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

* திரு. எம். சுரேந்திரன்: ஆளும் கட்சியிலே இருக்கிற ஒரு அமைச்சர் ஒரு மசோதாவைக் கொண்டுவரும்போது அந்த மசோதாவை ஆழமாக ஆய்ந்து பரிசீலித்துதான் கொண்டு வந்திருப்பார்கள். அது அந்தக் கட்சியிலே இருக்கிற அனைவருக்கும் உடன்பட்ட கருத்தாகத்தான் இருக்கும். அதற்கு மாறுபட்ட கருத்து அந்தப் பக்கம் இருந்து வருகிறது என்றால் அது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இம்மாதிரியான கடனை எல்லாம் ரத்து செய்வதற்கு என்ன செய்யவேண்டுமென்று அவர்கள் சொன்னது வேடிக்கையாக இருக்கிறது. மத்திய அரசின் அச்சகத்தை இந்திரா காந்தி அம்மையார் கொஞ்ச நாள் கொடுத்தால் எல்லோர் கடனையும் தீர்த்துவிடுவோம் என்று சொன்னார்கள். அவர் படிக்காதவர்கள் அல்ல; பொருளாதாரம் தெரியாதவர் அல்ல; அனுபவம் இல்லாதவர் அல்ல. அப்படிப்பட்டவர் இந்தப் பிரச்சனையில் இவ்வளவு எளிய முறையிலே, வேடிக்கையான முறையிலே வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார் என்றால் இதிலே அடங்கியிருக்கிற ஊழல்களைப்பற்றி அவரும் அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் என்ன எண்ணத்தில் இருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11-00)

[திரு. எம். சுரேந்திரன்] [1975 அக்டோபர் 24

ஆகவே, இந்தக் கடன் ஒத்திவைப்பு என்று சொல்கிற இந்த பில்லானது எவ்வளவு பிரயோசனமற்றதாக இருக்கிறது என்பதைப் பற்றி யாருக்கும் சந்தேகம் கிடையாது. இப்போது கடன் தொல்லைகள் எவ்வளவு பெருக்கு இருக்கிறது, எப்படி இருக்கிறது என்ற புள்ளி விவரங்கள் இருக்கின்றன. இந்தக் கடன்களை ஒத்திவைப்பதல்ல இன்றைய பிரச்சனை. இன்றைய பிரச்சனை கடன்களை ரத்து செய்வது தான். இப்படிச் சொல்வதன் அர்த்தம் எல்லோருக்கும் ரத்து செய்வதில்லை. அதற்கு ஒரு வரையறை விதித்திருக்கிறோம். இவ்வளவு வருமானம் உள்ளவர்கள், இவ்வளவு நிலம் உள்ளவர்கள் சம்பந்தப்பட்டவர்களுடைய கடன்களை ரத்து செய்யவேண்டுமென்று சொல்கிறோமேயொழிய எல்லோருடைய கடன்களையும் ரத்து செய்யவேண்டுமென்று சொல்லவில்லை.

சேமித்து, வட்டி மூலம் தங்களுடைய பணத்தைப் பெருக்கிக் கொள்ளக்கூடிய வாய்ப்பு எல்லோருக்கும் எல்லா நேரத்திலும் அனுமதிக்கப்பட வேண்டுமென்ற சித்தாந்தத்தை திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் வாயிலிருந்து நான் எதிர்பார்க்கவில்லை. அந்தச் சித்தாந்தம் நல்லதல்ல. இன்றைய சமுதாயப் போக்குகளுக்கு உகந்ததல்ல. இன்றைய மனோபாவத்திற்குத் தக்கதல்ல. இந்த நேரத்தில் இப்போது குறிப்பிடப்பட்டிருக்கிற ஒத்தி வைப்பு என்பதை மாற்றி மற்ற மாநிலங்களில் செய்திருப்பதைப் போலச் செய்யலாமே, மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டிகள் என்று பல பிரச்சனைகளில் பெருமைபட்டுக் கொள்கிறீர்களே, இதையும் செய்து இந்தப் பெருமையை நீங்களே எடுத்துக் கொள்வது தானே என்று உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்தக் கடன்களை ரத்து செய்வதற்கான முயற்சிகளில் சிந்திக்க வேண்டும். இப்போது நிறுத்தி வைத்தாலும் கூட, எதிர்காலத்தில் கடன்களைக் கட்டாயமாக ரத்து செய்தாக வேண்டும். இது தான் நோக்கமாக இருக்க வேண்டுமே தவிர ஏதோ இப்படி ஒரு பில்லைக் கொண்டு வந்து நிறைவேற்றி விட்டு தங்கள் கடமை முடிந்து விட்டது என்று இருக்கக் கூடாது. ரத்து செய்வதன் மூலம் பணத்தை எங்கே சம்பாதிப்பது என்பது பொருத்தமான கேள்வி அல்ல. ஒத்திவைப்பதோடு மட்டுமல்லாமல் கடன்களை ரத்து செய்வதற்கான முயற்சியில் அமைச்சரவர்களும் அமைச்சரவையும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் சிந்தித்து வருங்காலத்தில் முடிவு எடுப்பார்கள் என்று நம்பி இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன்.



1975 அக்டோபர் 24]

THIRU B. VENKATASWAMY: Sir, I welcome the Tamil Nadu Indebted Persons (Temporary Relief) Bill, 1975. At the same time, I want to suggest a few amendments or ideas to the Bill.

For example, it is not a comprehensive Bill and at the same time, no mention has been made to which kind of people, this Bill is going to give relief. As Thiru V. Krishnamoorthy pointed out, some people in villages who have 2,000 or 3,000 rupees through their savings are also indulging in lending money to the needy people. They are lending money out of their savings. What else can they do with their savings? They have to give their savings to their fellowmen to develop their agricultural activities. Such people are going to be affected by this legislation. I, therefore, request the Hon. Minister to eliminate such persons from the operation of this Bill. It is all right in the case of persons having 10,000, 20,000 or 30,000 rupees. They can afford to forego such amounts which they have lent but not the poor people who have saved 2,000 or 3,000 rupees. If they are not given relief under this Bill, their enthusiasm to save money will be taken away. The rich people can afford to write off such loans which they have given to the ryots. As our Hon. Member Thirumathi Anandanayaki pointed out, some widows in order to eke out their livelihood might have lent money because they may not be able to work. Such persons also should be exempted from this Bill. They should be prevented from foregoing the income of interest.

Coming to the other points, no other alternative arrangements have been made to lend money for the persons who are badly in need of money. I can say—many hon. Members know—that in the villages, after the introduction of this Bill, nobody is able to get a single pie from the money-lenders. What is the alternative arrangement made by the State and by the Centre. I am quite sure no other alternative arrangement has been made. It will affect production. At least arrangements should be made to have mini banks in villages to help the poor ryots. Every village must be provided with a mini bank to cater to the immediate needs of the people there.

[Thiru B. Venkataswamy] [1975 அக்டோபர் 24

At the same time, I request the Hon. Minister to find out the root cause for the indebtedness of the agriculturists. We must wipe out this evil. The agriculturists live in debts and die in debts. What is the reason for this? Without finding the root cause, there is no use in giving temporary relief. We must give them some permanent relief. I am sure the Hon. Minister will take into consideration these points and come forward to give a permanent relief to the ryots and the poor working class.

Thank you, Sir.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய சமுதாயத்திலே நெடுங்காலமாக இருக்கக்கூடிய இந்த நோய்க்குத் தற்காலிகமாக, அவசியம் ஏற்படும் போதெல்லாம், அவ்வப்போது சில நிவாரணங்கள் அளித்து வருவதைப் போல இந்த நிவாரணம் அளிக்க வேண்டியது அவசியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்படி நிவாரணம் அளித்தது, இந்த நோய்க்கு கொடுத்த மருந்து விஷமாக மாறி விட்டது என்று திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள் என்று கருதுகிறேன். இதைப் பொறுத்து நான் இந்த நேரத்தில் ஒரேயொரு விஷயத்தை மட்டும் ஞாபகப்படுத்துவது அவசியம் என்று கருதுகிறேன்.

நம் நாட்டில் நெடுங்காலமாக உள்ள இந்த நோய்க்கு, தீராது என்று நினைக்கக் கூடிய நோய்க்கு நிரந்தர நிவாரணம் கண்டு பிடிக்க வேண்டியது அவசியம். அவ்வப்போது இந்த மாதிரியான சட்டங்களைக் கொண்டு வருவதன் மூலம் இந்த நோயைக் குணப் படுத்திவிட முடியாது. சமுதாயத்தில் ஏழை மக்கள் தங்களுடைய பண்டம் பாத்திரங்களை, சிறிய நகைகளை ஏதாவது அடகுக் கடை களிலே வைத்துக் கடன் வாங்கி கஷ்டப்பட வேண்டிய நிலை ஆரம்ப காலந்தொட்டு இந்தக் காலம் வரை இருந்து வருகிறது என்பதை மறுக்க முடியாது. இதைத் தீர்ப்பதற்கு நிரந்தரமான பரிகாரம் காண்பதற்கு ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறோமா வென்றால் இல்லை என்று சொல்ல வேண்டும். குறிப்பாக தமிழகத் தைப் பொறுத்து இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததில் உள்ள பலாபலன்களைப் பற்றி ஆராயாமல் அவசரமாகக் கொண்டு வந்து விட்டார்கள் என்ற குற்றச்சாட்டைப் பற்றி இந்த நேரத்தில் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.



1975 அக்டோபர் 24] [திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி]

ஏழைகள், கடன் வாங்கிக் கொண்டிருந்தவர்கள், இனி வட்டி கொடுக்க வேண்டிய நிலை இல்லை என்பது பற்றி அவர்கள் சந்தோஷமாக இருந்தாலும் கூட, மேற்கொண்டு அவர்களுக்கு அவசியமாகப் பணம் தேவைப்படுகிற நிலை இருக்கும்போது அவர்கள் மேலும் பணம் வாங்க முடியாத நிலைமையில் முடக்கப் பட்டிருக்கிறார்கள் என்ற வாதத்தைச் சொல்லும்போது அதிலே உண்மை இல்லாமல் இல்லை. அத்தகைய ஒரு நிலை ஏற்படும். நாம் நோய்க்கு மருந்து கொடுக்கிறோம். நல்லெண்ணத்துடன் கொடுக் கிறோம். கொடுத்த பிறகும் கூட கஷ்டங்கள் என்ன என்பதைத் தெரிந்து அதற்கு நிவாரணம் என்னவென்று பார்க்கும்போது இது விஷமாக மாறிவிட்டது என்று கருத வேண்டியதில்லை. இதிலே கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஏழைகள் மேற்கொண்டு கடன் வாங்க வேண்டுமானால், விவசாயிகள் செலவுக்கு, தங்கள் அத்தியா வசியமான செலவுகளுக்கு உடனடியாகப் போய் கடன் வாங்க வேண்டுமானால் அடகு பிடிப்பவர்கள், பணம் கொடுப்பவர்கள், பணம் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் ஏழைகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். இதை திருமதி அனந்தநாயகி அவர்கள் சுட்டிக்காட்டினார்கள் என்று கருதுகிறேன். ஏதாவது மாற்று ஏற்பாட்டைச் செய்து விட்டு அதற்குப் பிறகு இந்தச் சட்டத் தைக் கொண்டு வந்ததால் முழுப் பலனையும் இந்த ஏழை மக்கள் நிச்சயமாக அனுபவிக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். அப்படி மாற்று ஏற்பாட்டை முன் கூட்டியே செய்யாது இந்தச் சட்டத் தைக் கொண்டு வருவதன் மூலம் யாருக்கு நன்மை செய்ய வேண்டுமென்று கருதுகிறோமோ அவர்களுக்கு இந்த நன்மை முழு அளவில் கிடைக்க முடியாமல் அவதிக்குள்ளாக வேண்டிய நிலைக்கு ஆளாகி விடுவார்கள் என்று சொல்லுகிறார்கள்.

அகில இந்திய அளவிலே இந்தப் பிரச்சனைக்கு முடிவு காண் பதற்குப் பதிலாக நம் தமிழகத்தைப் பொறுத்த அளவிலே எந்த அளவிற்குத் தீர்வு காண முடியும் என்று ஆலோசித்துப் பார்த்தால் நன்றாக இருக்குமென்று கருதுகிறேன். நிரந்தரமாக நாம் கொண்டு வர வேண்டிய நிவாரணங்களைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். நிரந்தரமான ஒரு நிவாரணத்தைக் கொடுப்பதற்கு வழி இருக் கிறதா என்று தமிழகத்தைப் பொறுத்த அளவிலே ஆலோசித்துப் பார்க்கும்போது, மொத்தமாக நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த அளவிலே 300, 400 கோடி ரூபாய் இந்த மாதிரியான

[திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி] 1975 அக்டோபர் 24]

மணி லெண்டிங் பிஸினஸ்லே, இப்படி அட்டை பிடிப்பவர்கள், பணம் கொடுப்பவர்களால் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இப்படி இருக்கும் ஏழை மக்களுக்கு நாம் கொடுப்பதற்கு வழி செய்ய வேண்டும். இதற்கு மத்திய அரசினுடைய நிர்வாகத்தில் இருக்கக் கூடிய வங்கிகள் மூலமாகக் கிடைக்குமா வென்றால் அவர்கள் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம். நம்முடைய கூட்டுறவு வங்கி மூலமாக இந்தப் பணத்தைக் கொடுப்பதற்கு முடியுமாவென்று பார்க்க வேண்டும். ஆங்காங்கே இருக்கக் கூடிய பட்டி தொட்டிகளிலே ஒருவருக்கு திடீரென்று ராத்திரி 12 மணிக்குப் பணம் தேவைப் படுகிறதென்றால் எந்த வங்கியில் பணத்தை வாங்கிக் கொள்ள முடியுமாவென்றால் எந்த வங்கியிலும் வாங்கிக் கொள்ள முடியாது. இன்றைக்கு நமக்குத் தேவை யெல்லாம் 300 அல்லது 400 கோடி ரூபாய் இருக்கும். ரெவின்யூ இலாக்காவில் கிராம அளவில் கர்ணங்கள், மணியக்காரர் போன்ற சிப்பந்திகள் இருக்கிறார்கள். அதேபோலே இதற்காக புதிய சிப்பந்திகளைப் போட்டு — அவர்களிடத்தில் ஒரு ஆயிரம், இரண்டாயிரம் டிரஷரியில் இருந்து வாங்கக்கூடிய அதிகாரத்தைக் கொடுத்து, கிராம மக்களுக்குப் பணம் தேவைப்படுகிறபோது அவர்கள் மூலமாகக் கொடுத்து வாங்கக் கூடிய ஒரு அமைப்பை ஏற்படுத்தலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : டிரஷரிக்கு எங்கே இருந்து பணம் வருகிறது என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : நமக்கு எங்கே இருந்து பணம் கிடைக்கிறது? நம் பணத்தில் ஒரு பகுதியை நாம் கிராமத்திலுள்ள இந்த ஏழை எளிய மக்களுக்கு ஒரு திட்டம் அமைத்து, அதன் மூலம் கடன் கிடைக்கச் செய்ய ஒதுக்க வேண்டும். ஆரம்பத்தில் கொஞ்சம் குறைந்த அளவில் ஆரம்பிக்கலாம். நமக்குக் கிடைக்கின்ற வருவாயில் ஒரு பகுதியை ஏழைகளின் நோயைத் தீர்க்க ஒதுக்க வேண்டும். லேவாதேவிக்காரர்கள் தங்களிடம் 2 லட்சம் பேர்கள் வேலையில் இருந்ததாகவும், அவர்கள் வேலையிழந்து இருப்பதாகவும் சொன்னார்கள். இப்படி வேலை இழந்து இருக்கிறவர்களுக்கு நாம் இந்தத் திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். ஒரு வட்டியோ, இரண்டு வட்டியோ வாங்கலாம் என்று சொல்லுங்கள். இந்தப் பணம் திரும்ப



1975 அக்டோபர் 24] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

அரசுக்கே வருகிறது. இப்படிக் கடன் கொடுக்கிற மூலதனத்தையும் நாம் அதிகப்படுத்திக் கொண்டே போகலாம். எப்படியோ தனியார்கள் மணி லெண்டிங் தொழிலில் ஈடுபடுவதைத் தடுக்க வேண்டும். தற்காலிகமாக மருந்து கொடுக்கின்ற முறையோடு நம் அரசு நின்றுவிடக்கூடாது. நிரந்தரமான பரிகாரமாக அரசு மூலமாகவே கிராமங்களில் உள்ளவர்களுக்குக் கடன் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டத்தை வரவேற்று என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த இடைக்காலத்தில்—மே மாதம் 2 ஆம் தேதி சட்டமன்றம் கூடியதற்குப் பின்னால் இரண்டு அவசரச் சட்டங்கள் கொண்டு வந்ததை இணைத்து இப்போது ஒரு மசோதாவாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தக் காலகட்டத்தில் நாட்டில் ஏற்பட்ட மாறுதல்களைப் பார்த்தால், எப்படி இந்த மசோதா போதுமான அளவு செல்லவில்லை என்பது நன்றாகத் தெரியும். காரணம் ஜூலை மாதம் 1 ஆம் தேதி பாரதப் பிரதமர் ரேடியோ உரையில் தெரிவித்தது—

"We propose to take action by stages to liquidate rural indebtedness. While new schemes will be drawn up to devise alternative agencies to provide institutional credit to landless labourers, rural artisans and small and marginal farmers who own less than two hectares, there will be a moratorium on suits and execution of decrees for the recovery of debts from such groups".

என்பதாகும். அதாவது 'எங்களுடைய கொள்கை என்னவென்றால் ஏழை மக்கள், குறிப்பாக விவசாயத் தொழிலாளர்கள் அல்லது குறைந்த வருவாய் உள்ளவர்கள் — அவர்கள் பட்டிருக்கக் கூடிய கடன்கள் எல்லாம் ரத்து செய்யப்பட வேண்டும். அவர்களுக்குக் கடன் பளு அவர்கள் குடும்பத்தோடு இணைந்துக் கொண்டிருப்பது கூடாது' என்ற முறையில் அணுகுவதாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதற்கு முதற்படியாக ஏற்கனவே பெறப்பட்ட கடன்கள்—இன்றைக்கு இருக்கக்கூடிய கடன்கள் அனைத்தையும் செல்லுபடியாகாமல் ஆக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 24

ஏற்கனவே கூட்டு போட்டிருந்தாலும், வேறு டிகிரிகள் வாங்கியிருந்தாலும் அவற்றைச் செல்லுபடியாகாமல் செய்ய வேண்டும். இதை அநேகமாகப் பல மாநிலங்களில் செய்திருக்கிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் பிரத்தியேகமான நிலைமை ஏற்பட்டது. அதாவது வறட்சி ஏற்பட்ட காரணத்தினால் அந்த வறட்சி நிவாரணம் என்ற அடிப்படையில், குறிப்பாக விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்கக்கூடிய வகையில் ஜனவரி 16 ஆம் தேதி வரையிலும் கடன் ஒத்திவைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தோம். அந்தக் காலகட்டம் வேறு. இப்போது இருக்கக் கூடிய காலகட்டம் வேறு. இந்தக் காலகட்டத்தைப் புரிந்து கொள்ளாத அம்சம் இந்த மசோதாவில் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அதாவது கடன் பட்டவர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமா, வேண்டாமா என்பது பெரிய பிரச்சினை. இதுசம்பந்தப்பட்ட பல விவரங்களைச் சேர்த்து வைத்துப்பார்க்கிறபோது மற்ற மாநிலங்கள் எல்லாவற்றையும் விட இந்த மாநிலத்தைச் சேர்ந்த விவசாயிகளே, சிறு விவசாயிகளே அதிகம் கடன்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இவர்களது கடன் கிட்டத்தட்ட 400 கோடியாக இருக்கலாம், 450 கோடியாக இருக்கலாம். அந்தப் பணத்தை வைத்துக்கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு. அந்தப் பணத்தில் இருந்து உடனடியாக நிவாரணம் பெற வசதி செய்து கொடுத்தால் தான், அவர்கள் அதற்கு அடுத்த கட்டத்திற்குச் செல்ல வசதியாக இருக்கும். அந்தக் கண்ணோட்டம் இந்த மசோதா சம்பந்தமாக நாம் என்ன செய்தோமோ, அதன் தொடர்பாகவே இப்போதும் செய்துகொண்டிருக்கிறோமே தவிர அதற்குமேல் செல்லவில்லை. மத்திய அரசு அறிவிப்பிற்குப் பின்னால்—மனி லெண்டர்ஸ் என்று ரிஜிஸ்தர் செய்து கொண்டவர்கள் யார் யார் இப்போது கடன் கொடுக்க மறுக்கிறார்கள் என்பதை அரசு கவனிக்கிறதா? அப்படிக் கடன் கொடுக்க மறுப்பவர்களை, மிரட்டி, அவர்கள் தொடர்ந்து கடன் கொடுக்கச் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கிறது? மறுத்தவர்கள் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

What I am driving at, is that implementation is very necessary.

அப்படி கடன் கொடுக்க மறுக்கிறவர்களை மிரட்டி, திரும்பவும் அவர்கள் கடன் கொடுக்கச் செய்ய என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்று தெரியவில்லை.

• • •



1975 அக்டோபர் 24] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இன்னொன்று கடன் நிவாரணச் சட்டம் வந்த பிறகு, வட்டி வாங்கக் கூடாது என்று சொன்னால் வட்டியைச் சேர்ந்தே கொடுத்ததாக கணக்குப் போட்டு வைத்திருப்பவர்கள் பல பேர் இருக்கிறார்களே, அரசு போடக்கூடிய சட்டங்கள் எப்படியாவது செல்லுபடியாகாமல் செய்வதற்கு என்றே நாட்டில் ஒரு கூட்டம் இருக்கிறதே, அப்படி இருக்க இந்த மசோதாவின் கருத்து எப்படி இருக்க வேண்டும் என்று சொன்னால்

There must be a war against unsocial elements.

உதாரணமாக, இந்த நாட்டில்தான் பணம் கொடுத்து, அதற்கு வட்டி வாங்கக்கூடிய நிலை இருக்கிறது. சோஷலிஸ்டு நாடுகளுக்குப் போனால் 10 ரூபாய் கொடுத்தால் 11 ஆகும், 100 ரூபாய் கொடுத்தால் 111 ஆகும் என்று சொன்னால் அங்குள்ள புதிய சமுதாயத்தினரால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. அப்படி ஆவதற்கு என்ன அஸ்திவாரம் இருக்கிறது, பணம் என்று சொன்னால் அதன் மதிப்புடைய பொருளாகிய பண்டமாற்றுதானே, பணமே பணத்தைச் செய்வது எப்படி என்று கேட்கிறார்கள். அப்படி இருக்கிறபோது கிராமங்களில் உள்ள கஷ்டப்படுகிறவர்களுக்குப் பணத்தைக் கொடுத்து, அதற்கு வட்டியை வாங்கிக் கொண்டே பிழைக்கிற அமைப்பின்பேரில் நமக்குக் கோபம் இருக்க வேண்டும். அந்த அம்சம் இந்த மசோதாவில் இருக்கவில்லை. இன்றையதினம் கிராமங்களில் போய்ப் பார்த்தால் அதிகமாக லேவாதேவிக்காரர்களது கடைகள் வந்துவிட்டன. இது சமுதாயத்தையே பின்னே எடுத்துச் செல்லக்கூடிய—முன்னுக்குப் போக விடாது அழித்துவிடக்கூடிய பயங்கரமான அமைப்பாக இருக்கிறது. இந்த அமைப்பை அடக்குவதற்கான முறையிலே காரியங்கள் செய்யப்படவில்லை என்பதை நான் முதலிலேயே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அப்படி வருகிறபொழுது என்னைக் கேட்கலாம், இவ்வளவு காரியங்களை நாங்கள் செய்கிறோமே, இதற்கு அப்பாற்பட்டு, வேறு ஏதாவது காரியங்களை வேறு மாநிலங்கள் செய்திருக்கிறார்களா என்று. அதற்கு, விவரத்திற்காகச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் அதைப் பார்த்து, மற்ற மாநிலங்கள் செய்திருக்கிறார்கள் என்ற முறையிலே கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே, சில உறுப்பினர்கள் அவை பற்றி சொல்லியிருக்கிறார்கள். சில உதாரணங்களைக் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 24

பீகார் மாநிலத்திலே அரிசனங்கள், ஆதிவாசிகள் 1 ஹெக்டர் நிலம் வைத்துள்ள விவசாயிகள் ஆகியவர்களுடைய கடன் பூராவும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. கடன் கொடுத்தவர்கள்—மனி லென்டர்ஸ்—ஏதாவது நிலத்தை அடமானமாக வைத்திருந்தால், திருப்பிக் கொடுக்கப்படும். இதுவரையிலும் அம்மாதிரி திருப்பிக் கொடுப்பதற்காக 17,000 மனுக்கள் போடப்பட்டு, 12,000 பேருடைய நிலம் அந்த விவசாயிகளுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது பீகாரிலிருந்து நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய விவரம். சமீபத்திலே பீகார் முதலமைச்சரவர்கள் பத்திரிகை ஆசிரியர்களுக்குக் கொடுத்த இண்டர்வியூவிலே இந்த விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

அடுத்தாற்போல், உத்தரப் பிரதேசம். உத்தரப் பிரதேசத்திலே 1 ஹெக்டர் நிலம் வைத்திருப்பவர்களுடைய கடன் ரத்து செய்யப்பட்டது மாத்திரமல்லாமல், நிலப் பிரபுத்துவ முறையை உடைப்பதற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் அந்த முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

பஞ்சாபிலே, ரூ. 50,000 மதிப்புக்குச் சொத்து வைத்துள்ளவர்கள் கொடுத்த கடன்களுக்கு மாரட்டோரியம் கொடுக்கப்பட்டு, அதாவது கடன் ஒத்தி வைக்கப்பட்டு 'With the proviso for gradual scaling down' கொஞ்சம் கொஞ்சமாகக் கடனை ஒதுக்கி வைத்தது மாத்திரமல்ல, அந்தக் கடனை மேன்மேலும் குறைப்பதற்கான ஏற்பாட்டோடு அங்கு சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள்.

அதே மாதிரி இங்கு இராஜாஜி அவர்கள் கொண்டு வந்த முறைப்படி—இராஜாஜி அவர்கள், கடன் வாங்கி, அந்தக் கடன் அளவுக்கு வட்டி கொடுத்திருந்தால் அந்தக் கடனே ரத்து ஆகும் என்று சொன்னார்—இன்றைக்குக் கடன் கொடுத்த பணத்தை யார் அந்தப் பத்திரத்திலே எழுதுகிறார்கள்? அந்தப் பணம் ஆண்டவனுக்குக் கூட வெளிச்சமாக இருக்காது என்று நினைக்கிறேன். கொடுக்கிற பணம் ரூ. 100 ஆக இருந்தால், ரூ. 200 என்று எழுதப்படுகிறது; ரூ. 300 என்று எழுதுகிற சமுதாயக் கொடுமை பயங்கரமாக இருக்கிறது. ஏற்கனவே வாங்கிய கடன் தொகையிலே பாதியை அவர்கள் செலுத்தியிருந்தால், ஸ்கேலிங் டவுன், அந்தக் கடன் ரத்து செய்யப்படும் என்று சொல்கிறார்கள்.



1975 அக்டோபர் 24] [திரு. கே. டி. கே. தங்கமணி]

மேற்கு வங்கத்திலே, 1 ஹெக்டர் (2½ ஏக்கர்), அதற்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள் கடன் பூராவும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் சாதாரண ஜனங்கள் இருந்தால், அவர்களுடைய கடன்கள் ரத்து செய்யப்பட்டு சகஜமான நிலைமையிருக்கிறது. கேரளத்திலே வருஷ வருமானம் ரூ. 2,400 உள்ளவர்களுடைய கடன் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ரூ. 2,400 போதாது என்பது என்னுடைய கருத்து.

நேற்றோ, நேற்றுக்கு முன்தினமோ கர்நாடகத்திலே இப்படிப்பட்ட சட்டம் வந்திருப்பதாகப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அந்தப் பத்திரிகைச் செய்தியைப் பார்த்தால்

'All debts of agriculturists in Karnataka having less than 2 hectares of unirrigated land'

அதாவது புஞ்சை நிலம் என்று நினைக்கிறேன்—

'and agricultural labourers and weaker sections with annual income of Rs. 2,400 stand discharged under this Ordinance'

Already a year's moratorium has been given.

அதிலே இன்னொரு விஷயம், கர்நாடகத்திலே இருக்கக்கூடிய சட்டத்திலே ஒரு நல்ல அம்சமிருக்கிறது. ஏற்கனவே, பான் புரோக்கர்களிடம், லேவாதேவிக்காரர்களிடம் தங்களுடைய நகைகளையும் மற்றவைகளையும் வைத்திருந்தால், அவை உடனடியாகத் திருப்பிக் கொடுக்கப்படும். திருப்பிக் கொடுக்காதவர்கள், கைது செய்யப்படுவார்கள் என்ற அளவுக்கு இருக்கிறது. ஏன், இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இந்தத் தேசத்திலே ஒரு மாநிலம் முற்போக்காக இருக்கிறது, ஒரு மாநிலம் பிற்போக்காக இருக்கிறது என்று சொல்வதற்கில்லை. எந்தத் திசையிலே நாடு போய்க் கொண்டிருக்கிறது என்பதற்காகவும் அந்தத் திசையிலே சரியான அளவுக்கு இன்னும் நாம் கால் எடுத்து வைக்கவில்லை என்பதற்காகவும்தான் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. நான் இங்கு வந்திருக்கிற மசோதாவை எதிர்க்கிறேன் என்று அர்த்தமல்ல. அதோடு நிறுத்திவிடாமல், இந்த மசோதாவுக்கு அப்பாற்பட்டு மற்ற மாநிலங்கள் நிறைவேற்றிருக்கக்கூடிய நேரத்தில்

'liquidation of rural indebtedness'

என்ற அந்தக் கருத்து வரக்கூடிய மசோதாவும் இந்தக் [illegible]

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 24

தொட்டிலே வந்தால்தான் ஏதாவது பலனிருக்கும் என்ற காரணத்தினாலே சொல்கிறேன். இதிலே, நாம் பல ரிலீஃப் கொடுக்கிறோம்; பலவிதமான நிவாரணம் கொடுக்கிறோம். ரூ. 400 அளவுக்கு நிவாரணம் கொடுப்பதன் மூலமாக எந்த அளவுக்கு உதவி செய்ய முடியும் என்று சொன்னால் 'below poverty line' தமிழ்நாட்டுக்கு என்ன பெருமை? ஆல் இந்தியா பாவர்ட்டி லெவல் 40 சதவிகிதம் என்று நினைக்கிறேன். ஏழ்மை, பட்டினி கிடந்து சாகக்கூடியவர்கள், அரைச் சாப்பாடு கூட சாப்பிட முடியாதவர்கள் ஆல் இந்தியாவில் 40 சதவிகிதம் என்றிருக்கும்போது, தமிழ்நாட்டில் 52 சதவிகிதம் என்பது ஒன்றும் தமிழ் நாட்டிற்குப் பெருமை அல்ல. அப்படி இருக்கும்போது பிலோ பாவர்ட்டி லைனில் இருக்கக்கூடிய மக்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினால், அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பதைப் பார்க்க வேண்டுமே தவிர, கடன் கொடுத்தவனுக்கு நியாயம் வழங்க வேண்டாமா, பணம் கொடுத்தவருக்கு நியாயம் வழங்க வேண்டாமா என்று பார்ப்பதை விட்டு, 52 சதவிகிதத்தில் இருக்கிற மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று பேசினால் மட்டும் பிரயோஜனமில்லை. ஸ்டேட் பவரில் இதைச் செய்ய முடியும். மற்றவர்களுக்குக் கருத்துக்கள் இருக்கலாம். அந்தக் கருத்துக்களை அமுல்நடத்தக் ஸ்டேட் பவரிருக்கிறது. அந்த ஸ்டேட் பவரைக் கொண்டு அமல் நடத்த முடியும். இதன் மூலம் யார், யாருக்கு என்னென்ன செய்தோம், எத்தனை பேருக்கு நிவாரணம் கொடுத்திருக்கிறோம், யார், யார் மீறியவர்கள், அவர்கள் பேரில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்ற விவரங்களையெல்லாம் சொன்னால்தான் உதவிகரமாக இருக்கும்.

இந்த அவசரச் சட்டத்தை இந்த அளவுக்காவது கொண்டு வந்தது ரொம்ப சாலச்சிறந்ததுதான். ஆனால், இங்கு சட்டமாகக் கொண்டு வரக்கூடிய அளவிலே சில திருத்தங்களை உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஏதோ திருத்தங்கள் என்ற அளவில், இம்சென்று அவற்றை நிராகரித்துவிடாமல் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கிற பெரிய மாறுதலின் அடிப்படையிலே சமுதாய, பொருளாதார நீதிகள் நாட்டிலே வாழ்கின்ற மக்களுக்கு நிறை



1975 அக்டோபர் 24] [திரு. எம். ஏ. லத்தீப்]

வுடன் அளிக்கப்பட வேண்டுமென்று எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளின் முன்னோடியாக இந்த மசோதா அமைந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். பொதுவாக, வட்டி வாங்குவது, வட்டி கொடுப்பது இரண்டுமே பாவம் என்றும் அந்த வட்டி வாங்குவதனாலும் கொடுப்பதனாலும் மனிதாபிமானம் அழிக்கப்பெற்று மனித சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதற்கு வழிகள் வகுக்கப்படுகின்றன, ஆகையினால் வட்டி வாங்குவதும் கொடுப்பதும் மாபாதகங்களில் ஒன்று என்று ஒரு கொள்கையாக மட்டுமல்லாமல், நான் ஏற்றுக்கொண்டிருக்கிற மார்க்கத்தினுடைய அடிப்படையாகவும் அதைச் செயல்படுத்துகின்ற ஒருவன் என்ற முறையில் இந்த மசோதாவை நான் பெரிதும் வரவேற்கிறேன்.

இந்த மசோதாவில் சில குறைகள் இருக்கின்றன; இந்த மசோதாவை சில வகையிலே நாம் அணுகியிருந்தால் இதனால் பெருத்த பலன்கள் நாம் யாருக்காக நன்மை செய்ய விரும்புகிறோமோ அவர்களுக்குக் கிடைத்திருக்கும் என்ற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வற்புறுத்திச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்களில், அடிப்படையில், அவர்களுடைய வாதங்களில் வலு இல்லையென்று நான் சொல்ல மாட்டேன். எல்லா உறுப்பினர்களும் பல்வேறு கோணங்களில் எந்த எந்த வகையில் இந்த மசோதா அமைந்திருக்குமானால், அது மாக்சிமம் பெனிஃபிட் என்று சொல்லக்கூடிய அளவுக்கு, மிகுந்த பயனை உரியவர்கள் அடைவார்கள் என்று அவர்கள் சொன்னார்களோ, அவற்றிலேயெல்லாம் ஓரளவுக்கு உண்மை இருக்கிறது என்பதை நானும் ஏற்றுக்கொண்டு வற்புறுத்துகிறேன். ஆனால், அதே நேரத்தில், ஒரு நல்ல முயற்சிக்கு முன்னோடியாக இது அமைந்திருக்கிறது. ஒரு பெருத்த மாறுதல் சமுதாயத்திலே ஏற்பட வேண்டுமானால் அதுவும் சமுதாயத்திலே பல்லாண்டுகளாக, பல நூற்றாண்டுகளாகப் புரையோடி இருக்கிற பழக்க வழக்கங்களைத் தகர்ப்பதற்கான முயற்சிகளை நாம் செய்வதாக இருந்தால், அந்த முயற்சிகளைத் திட்டத்தினாலோ, சட்டத்தினாலோ செய்வதால் வெற்றி நமக்குக் கிடைத்துவிடும் என்று யாரும் நினைக்க

[முற்பகல் 11.30]

மாட்டார்கள். ஆனால் அந்தத் திட்டத்திலே வெற்றியடைவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வது இன்றியமையாதது. அந்த முயற்சிதான் இந்தச் சட்டம் என்று கருதுகிறேன். இரண்டு விதமான கருத்துக்களை நாம் இங்கே கேட்டோம். ஒன்று, ஒரு

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 அக்டோபர் 24

குறிப்பிட்ட வரையறைக்குட்பட்ட கால கட்டத்திற்குள் வாங்கப்பட்ட கடன்களைமட்டும் பெற முடியாத அளவிற்கு மசோதா வகை செய்வது சரியானதல்ல, ஒரு வரையறைக்குட்படாமல் இந்த மசோதாவின் அம்சங்கள் அமைந்திருக்க வேண்டுமென்று சிலர் வாதித்தார்கள். இன்னும் சிலர் வட்டியை மட்டும் பெற முடியாத அளவிற்கு நெறிகளை வரைமுறைப்படுத்திவிட்டு முதல் தொகையைக் கொடுக்கக்கூடிய கஷ்டமான சூழ்நிலையிலிருந்து உரியவர்களைக் காப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை, அதையும் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். வேறு சில மாநிலங்களில் இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள், நாமும் செய்ய வேண்டுமென்ற கருத்தும் சொல்லப்பட்டது. இன்னொரு கருத்து, இப்படித் திடீரென்று கடனுக்கு வட்டியைக் கொடுக்க வேண்டாமென்று சொல்லிவிட்ட காரணத்தினால் அதற்காக அவசரச் சட்டத்தைப் பிறப்பித்த காரணத்தால் ஏழை எளியவர்கள் தம்முடைய தேவைகளுக்காக யாரிடத்திலிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டிருந்தார்களோ அவர்களுடைய தேவைகள் பூர்த்தியடைய முடியாத நிலையில் பணம் கொடுத்துக் கொண்டிருந்தவர்கள் பணம் கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். அதனால் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற கருத்தும் சொல்லப்பட்டது.

இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் ஓரளவிற்கு இந்தத் துறையினர் இதிலே கவனம் செலுத்தி இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இந்த மசோதாவின் காரணமாக ஏற்படுகிற பல்வேறு விளைவுகளைச் சந்திக்கிற வகையில் பல ஷரத்துக்களை நெறிகளை இணைத்திருக்கிறார்கள்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் கோர்ட்டுகளிலே கடன்களுக்காகத் தீர்ப்புகள் வழங்கப்பட்டு டிக்ரிகள் கொடுக்கப்பட்டு இருந்தாலும் அந்த டிக்ரிகள் செயல்படுத்தக்கூடிய வலுவை இழந்துவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே கடன் என்று வரும்போது வீடுகளுக்குக் கொடுக்கக்கூடிய குடக்கூலி பாக்கிகளை இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிற ஷரத்திலே விலக்கத்திலேயிருந்து எடுத்துவிடக்கூடிய அளவிலே குடக்கூலி மசோதாவைக் கட்டுப்படுத்தாது என்ற முறையிலே சொல்லப்பட்டிருப்பது பல்வேறு மக்களுடைய வருமான தாரதம்மியங்களை யெல்லாம் ஆராய்ந்து பார்த்து இந்த வழிவகைகளைச் செய்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.



1975 அக்டோபர் 24] [திரு. எம். ஏ. லத்தீப்]

அதே நேரத்திலே இந்த மசோதாவின் வாயிலாக மேற்கொண்டு கடன் கொடுக்க முன்னுக்கு வரமாட்டார்கள் என்று சொல்கிறார்கள். அந்த வாதத்தையும் சந்திக்கிற வகையில் இதிலே 12 ஏ 1 இல் விதியை வகுத்திருக்கிறார்கள். ஒரு கால கட்டத்திற்குப் பிறகு கொடுக்கப்படுகிற பணத்திற்குக் கட்டப்பட வேண்டிய வட்டியை இந்த மசோதா கட்டுப்படுத்தாது. ஆகையால் அங்கே கொடுக்க வேண்டிய நிலைமை உருவாகும், சிறு சிறு நிதிகளை வைத்து பணம் கொடுக்கிற வட்டிக்காரர்கள் பணம் கொடுப்பதை நிறுத்திவிடக் கூடாது என்ற நிலைமையில் அவர்களை உற்சாகப்படுத்துகின்ற வகையிலேயும் சிறு வியாபாரிகளை அவர்களுடைய தேவைகளை, சிறு வருமானம் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையிலேயும் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

நாட்டினுடைய சிந்தனைகளில் பெருத்த மாற்றங்கள் ஏற்படுகின்றன, வருங்காலம் நமக்கு இருளாக இருக்கிறது. இந்த நிலையில் நாம் மேலும் என் பணத்தைக் கொடுக்க வேண்டும். கொடுத்து வம்பிலே மாட்டிக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே அந்த உண்மையைப் புரிந்துகொண்டு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

பொதுவாக நாட்டிலே வட்டி கொடுப்பதும் பாவம், வட்டி வாங்குவதும் பாவம், இரண்டும் தடுக்கப்பட வேண்டுமென்பது நோக்கமாக இருக்கிறது. அந்த முறையிலே இதில் அப்படிப்பட்ட விளைவுகள் இல்லாவிட்டாலும் அந்த விளைவைத்தான் விரும்புகிறார்கள் என்ற அடிப்படையிலேதான் இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

விவசாயிகளினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிற வகையிலேயும் சிறு வியாபாரிகளினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிற வகையிலேயும் அமைந்திருக்கிறது. எத்தனையோ காரியங்களுக்கு பணம் தேவைப்படுகிறபோது ஏழை எளிய மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்ட வாதத்தை நானும் ஏற்றுக் கொள்கிறேன். மத்திய வங்கிகளிலே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே, தேச மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலே செயல்படாமல் சில டாட்டாக்கள், சில

பிர்லாக்கள் அல்லது வங்கிகளைப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறவர்கள், பெரும் வியாபாரிகள், பெருந் தனக்காரர்கள், மாடமாளிகையிலே வாழ்கிறவர்கள், சொத்துக்களை செக்யூரிட்டியாகக் கொடுத்துப் பணத்தைப் பெறக்கூடிய முறையில் உள்ளவர்கள்தான் தகுதி படைத்த மக்கள் என்று நினைத்து அவர்கள் பயன் பெறுவதற்குத்தான் வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன என்று இருக்குமானால் தேசியமயமாக்க வேண்டுமென்ற அந்த அடிப்படைத் தத்துவத்தையே — யார் தேசியமயமாக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ — அவர்கள் அறிந்து கொள்ளவில்லை என்பதைத் தான் சுட்டிக்காட்ட முடியும். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில்

" There should be free accessibility to the common man of the Country "

என்ற வகையில் அவர்களுக்கு ஃபிரி ஆக்செஸபிலிட்டி இருக்க வேண்டும். வங்கிகளில் இருக்கக்கூடிய நெறிகள், முறைகள், வழிகள் கடினமான வழிகளாக இருந்தால் எப்படி சுலபப்படுத்த முடியும். சிறு வியாபாரிகள், சிறு விவசாயிகள் இவர்கள் எல்லாம், சுலபமான முறையிலே கடன்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்கு நம்முடைய மாநில அரசாங்கமும் பேசி முடிவு எடுப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறது. அதைச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

கோவாப்பரேடிவ் சொசைடிகள்பற்றி இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. கோவாப்பரேடிவ் சொசைடிகளை இந்தச் சட்டம் கட்டுப்படுத்காது என்று சொல்லியிருக்கிறார்கள். எப்படி இந்த அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தாதோ, எப்படி மத்திய அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தாதோ அதைப் போன்ற கூட்டுறவு அமைப்புகளையும் கட்டுப்படுத்தாது என்று விதி கூறுகிறது. நான் அதைக் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறை மக்களால் நடத்தப்படுவது. அதற்கு இந்தச் சட்டத்திலே இடம் அளித்திருப்பது சரிதான். அப்படிச் செய்யாமல் இருந்தால் கூட்டுறவு அமைப்புகளுக்கு வரக்கூடிய வட்டியை, வருமானத்தைத் தடுக்க வேண்டுமென்ற நிலைமை உருவானால் பெருத்த சிக்கல்கள் ஏற்படும் என்ற உண்மையை நான் ஒப்புக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறையில் தனிப்பட்டவர்கள் பெறக்கூடிய வட்டி விகிதம் இருந்தாலும் அது நேஷனல் வங்கியாக இருந்தாலும் ரூரல்





பேங்க்ஸ் ஆக இருந்தாலும் யாருக்குப் பணம் தேவைப்படுகிறதோ அவர்களுக்கு ஏழை எளியவர்களுக்கு, விவசாய மக்களுக்கு, சிறு வியாபாரிகளுக்கு அவர்கள் விரும்புகிறபோது சுலபமான முறையிலே அவர்கள் பெற்றுக்கொள்ளும்படி ஏற்பாடு செய்து அதற்கான நெறிகளை உண்டாக்கினால்தான் கடன் தொல்லைகள் தீரும். கடன் வாங்கக்கூடாது என்று சொல்வதால் மட்டும் கடன் தொல்லைகள் தீர்ந்துவிடாது.

சில ஊர்களில் சில சமுதாயங்களில் அவர்கள் தாமாகவே சில நிறுவனங்களை வைத்துக்கொண்டு உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் நாடார் மகிமை சங்கம் என்று நாடார்கள் வைத்திருக்கிறார்கள், அந்தச் சங்கத்திலே மிகச் சுலபமான முறையிலே அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவர்கள் வியாபாரத்திற்காக அவர்கள் தொழில்களை ஆரம்பிக்க கடன் தொல்லைகளைப் போக்க கொடுத்து உதவுகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அந்தச் சங்கங்களின் அடிப்படையிலே இன்றைய தினம் நகரங்களிலேயும், கிராமங்களிலேயும் மக்களாலேயே ஏற்படுத்தப்படும் சில அமைப்புகளை அரசு ஊக்குவித்து அவர்களுக்குச் சில உதவிகளைச் செய்யலாமா என்பதைப்பற்றி ஆராய வேண்டும்.

எங்கள் ஊரிலே, வாணியம்பாடியிலே, பொதுமக்களே சேர்ந்து நான்கைந்து இலட்சம் ரூபாயை மக்களிடத்திலேயிருந்தே சேகரித்து அதை சிறு சிறு கடனாக, ஆனால் எந்தவிதமான வட்டியும் இல்லாத கடனாக, செக்யூரிட்டி என்று ஏதாவது சாதாரண பொருளைப் பெற்றுக்கொண்டுக் கடனாகக் கொடுப்பதாக இன்றைக்கு நான் கேள்விப்படுகிறேன், வாணியம்பாடியிலே அப்படி ஏழாயிரத்து சில்லறை மக்களுக்கு, வியாபாரிகளுக்கு, சிறு தொழில் நடத்துபவர்களுக்குக் கடன் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அதற்கு வட்டி வாங்குவதில்லை. அப்படிப்பட்ட நிறுவனங்களை, சமுதாய சேவை செய்யும் நிறுவனங்களை அரசு ஊக்குவித்து இந்த அடிப்படையில் பல்வேறு ஊர்களில், கிராமங்களில் ஏற்படுத்தி. வட்டியில்லாத கடனைக் கொடுக்க சமுதாய, சமூக சீர்திருத்த அமைப்புகள் முன்வந்தால் அதை ஊக்குவிக்கும் முறையிலே அவைகளுக்கு மானியம் கொடுத்து, பெயரளவிற்கு மானியங்களைக் கொடுத்து, அவைகளுக்கு அங்கீகாரம் கொடுத்து ஊக்குவிப்பதற்கான வழி

வகைகளை அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் என்னுடைய இந்தக் கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதா ஒரு நல்ல நோக்கத்திற்காக எடுக்கப்பட்டிருக்கிற முன்னோடியாக, முதல் நடவடிக்கையாக, பல்லாண்டுகளாக நாம் செய்து வரும் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக வந்திருக்கிறது. இதிலேயே எல்லாப் பலன்களையும் பெற்றுவிடுவோம் என்று நினைப்பதும், அப்படியிருந்தால்தான் இந்தச் சட்டத்தை ஆதரிப்போம் என்று சொல்வதும் சிறந்த கருத்து என்று நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். நல்ல முயற்சியின் அடிப்படையில் சட்டத்துறையினர் இந்தச் சட்டத்தை நன்றாக அமைத்திருக்கிறார்கள். ஆகவே, இதை மனப்பூர்வமாக ஆதரித்து அமர்கிறேன்.

**திரு. மா. வெ. கரிவேங்கடம்:** மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற கடன் நிவாரண, தற்காலிக நிவாரணச் சட்டத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னால் வைக்க நான் ஆசைப்படுகிறேன்.

இந்த மசோதாவிலே குறிப்பிட்டிருக்கின்ற தலைப்பிலேயே 'டெம்பரரி ரிலீஃப்' என்று குறிப்பிட்டிருப்பதால் இது தற்காலிக நிவாரணமேயொழிய நிரந்தர நிவாரணம் என்ற தலைப்பிலே இல்லை ஆகவே, தற்காலிகம். இது தற்காலிகம் என்றால், நிரந்தர நிவாரணம் நிச்சயமாக வேறு இருக்கும் என்று நாம் எல்லோரும் நம்பலாம்.

இந்த மன்றத்திலே எதிர்க்கட்சித் தரப்பிலே பேசிய பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் இதிலேயுள்ள நல்ல அம்சங்களை வரவேற்றிருக்கிறார்கள். மேலும் நல்ல அம்சங்கள் வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையிலேயும் எல்லா எதிர்க்கட்சித் தரப்பிலே இருப்பவர்களும் பாராட்டும் அளவிற்கு, பல்வேறு துறைகளிலே தமிழக அரசு நடவடிக்கை எடுத்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்களும், எதிர்க்கட்சியிலே இருக்கின்ற பல்வேறு கட்சித் தலைவர்களும் பாராட்டியிருக்கின்ற நல்ல பல அம்சங்களை இந்த அரசு செய்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.





மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மைசூர் மாநிலத்தில்—கர்நாடகத்தில்—தற்காலிகமாக ஒரு நிவாரணம் கொண்டுவரப்பட்டு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் நிரந்தரம் என்ற முறையிலே அங்கே இரண்டு ஹெக்டேர் அல்லது ஐந்து ஏக்கர் நிலம், அதுவும் புஞ்சை நிலம் என்று உச்சவரம்பாக வைக்கப்பட்டு, அத்தகைய ஐந்து ஏக்கர் நிலமுடைய விவசாயிகளுக்கும், விவசாயக் கூலிகளுக்கும், 2,400 ரூபாய் வருமானம் வரும் விவசாயிகள் அல்லாத மற்றவர்களுக்கும் நிவாரணம் அளிக்கும் வகையில் கர்நாடகத்தில் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். கர்நாடகத்திலே, தற்காலிக நிவாரணம், அதற்குப் பிறகு அவசரச் சட்டம் என்ற வகையிலே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறதே ஒழிய வேறல்ல.

இந்த மன்றத்திலே நாம் பல்வேறு கருத்துக்களை ஆராயவேண்டியிருக்கிறது. இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகிறார்கள், ஏற்கனவே ஒரிசாவிலே, பீகாரிலே, உத்தரப்பிரதேசத்திலே கொண்டு வந்தார்கள் என்று சொல்லும்பொழுது லேவாதேவி செய்பவர்கள் ஒரிசாவிலேயிருந்தாலும் சரி, தமிழ்நாட்டிலேயிருந்தாலும் சரி, இங்கேயும் இத்தகைய சட்டம் வரும் என்பதை முன்கூட்டியே அறிந்த காரணத்தினால் கடந்த மூன்று, நான்கு மாதங்களாக அல்லது ஆறு மாதங்களாகத் தமிழ்நாட்டிலே உள்ள பெரிய லேவாதேவிக்காரர்கள் பணம் கொடுப்பதை அறவே நிறுத்திவிட்டார்கள். அப்படிக் கொடுத்தாலும் நம்பிக்கை நாணயத்தின் பேரில், பொறுப்பின்பேரில் கொடுத்தார்கள். அவர்களுக்கு நம்பிக்கை உள்ளவர்களுக்கே கடன் கொடுத்து வந்த தன்மையைப் பார்க்கிறோம். ஆகவே, தமிழ்நாட்டிலுள்ள லேவாதேவிக்காரர்கள் இத்தகைய முற்போக்குச் சட்டம் வராது என்று நினைத்து லேவாதேவி செய்துகொண்டிருக்கவில்லை. இத்தகைய சட்டம் இங்கேயும் வரும், அதுவும் தீவிரமாகவும் இருக்கும் என்று எண்ணிச் செயல்பட்டதால் கடந்த மூன்று, நான்கு மாதங்களாக ஒரு நாணயப் புழக்கம், பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கின்ற தன்மையை நாம் பார்க்கிறோம்.

ஆகவே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலேயும் பெரிய லேவாதேவிக்காரர்கள் என்று வகைப்படுத்திப் பார்க்க வேண்டும்; சிறிய லேவாதேவிக்காரர்கள் என்று வகைப்படுத்தி, ஐயாயிரம் ரூபாய் என்ற முறையிலே, இருக்கின்ற நிலத்தை விற்றுவிட்டு

லேவாதேவி சிறந்த தொழில் என்று ஆரம்பித்து விவசாயி களுக்கும், தொழிலாளர்களுக்கும் கடன் கொடுத்திருந்தால் அது ரத்து செய்யப்பட்டு விட்டது, வஜா செய்யப்பட்டு விட்டது என்று சொல்லிவிட்டால் அவர்களுடைய பிழைப்பு என்ன ஆவது? அவர் களுக்குப் பிழைப்பு இருக்குமா ? அப்படிப்பட்டவர்களையெல்லாம் கூட இந்த நிரந்தர நிவாரணம், கடன் வஜா என்ற வகையிலே சேர்க்க வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1937 ஆம் ஆண்டிலே இராஜாஜி அவர்கள் கொண்டு வந்த கடன் நிவாரணச் சட்டத்திலே ஒரு சில விதிவிலக்குகள் இருந்தன. விதவைகள் கடன் கொடுத்திருந்தால்—லேவாதேவி செய்திருந்தால்—என்ற ஷரத்தைச் செய்து அதற்கு விதிவிலக்குத் தந்திருந்தார்கள். அதை உதாரணத்திற்கு மட்டும் நான் இங்கே சொல்கிறேன். அத்தகைய விதிவிலக்குகளை மனத்திற்கொண்டு, அந்த அளவிற்குச் சிறிய லேவாதேவிக்காரர்கள் பாதிக்கப்படக் கூடாது, பெரிய லேவாதேவிக்காரர்கள், பொருளாதாரத் துறை யிலே மேல் தளத்திலே இருக்கிறவர்கள் பாதிக்கப்படும் அளவிலே அமையும் விதத்திலே இருக்க வேண்டும். சிறிய லேவாதேவிக்காரர் கள் பாதிக்கப்பட்டால் அவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படும் என்ற முறையிருந்தால் அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும். அதே நேரத்திலே அவர்கள் லேவாதேவி செய்யும் காரணத்தினால் விவசாயிகளின் வாழ்க்கை அல்லது தொழிலாளி யின் வாழ்க்கை பாதிக்கப்படும் என்றால் அதற்கு என்ன நிவாரணம் என்பதையெல்லாம் ஆர அமர சிந்தித்து நல்ல முறை யிலே, அடித்தட்டிலே உள்ள மக்களுக்கு நிரந்தர நிவாரணம் கிடைக்கும் வகையிலே, இந்தச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் அல்லது நிரந்தரமாகக் கடன் நிவாரணம் அளிக் கின்ற ஒரு மசோதாவைக் கொண்டு வந்து இத்தகைய எல்லாத் தரப்பினருக்கும் நல்ல முறையிலே நிவாரணம் அளிக்கும் விதத் திலே மேலும் மேலும் சிந்தித்துச் செயல்பட வேண்டும். அதற் கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது ஒரு பெரிய பொருளாதாரச் சிக்கலை உருவாக்கும், உண்டாக்கும், உண்டாக்கிவிட்டது, இன்னும் உண்டாக்க இருக் கிறது. எல்லாத் தரப்பினரும் ஒத்துக்கொண்டாலும் ஒரேயொரு



கருத்தை மட்டும் நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களிலே விவசாயி களுக்குப் பயிர்க் கடன்கள், நடுத்தரக் காலக் கடன்கள் என்று கொடுக்கப்படுகின்றன. 4 சதவிகிதம், 5½ சதவிகிதம் என்று இருந்த வட்டி, இன்றைய தினம் கூட்டுறவுத் துறையில் 10 சத விகிதம், 12 சதவிகிதம் என்ற வட்டி வருகிறது. அது சரியா, முறையா என்பதைக் கூட்டுறவுத் துறையினரும், ரிசர்வ் வங்கியும், இந்திய அரசும் ஆலோசனை செய்ய வேண்டும். தனிப்பட்ட கடன் காரர்களுடைய இடத்தைப் பிடிக்கும் விதத்தில், 12½ சதவிகிதம், 10 சதவிகிதம் என்று வட்டி வசூலிப்பது என்றால் அது சாதாரண வட்டி அல்ல. அதிக வட்டி. ஆகவே, அரசு நிறுவனங்கள் எதுவானாலும், விவசாயிகள், தொழிலாளர்களிடமிருந்து வாங்கும் வட்டியை லேவாதேவிக்காரர்களைப்போல நினைத்துக்கொண்டு 10 சதவிகிதம், 12 சதவிகிதம் என்று வசூலிப்பது என்பது சரியாக இருக்காது, ஏற்கனவே 5 சதவிகிதத்திலிருந்து ஆரம்பித்து. மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வரையில்கூட 7½ சதவிகிதத்திற்கு மேல் வட்டியில்லாமல் இருந்த அந்த நிலையை ஏற்படுத்த வேண்டும்.

அதே சந்தர்ப்பத்திலே இப்படியொரு நெருக்கடி நிலை ஏற்படும் காரணத்தினாலே பணத் தட்டுப்பாடு ஏற்படுகிறது, பொருளாதார நெருக்கடி ஏற்படுகிறது என்று சொன்னால் அதற்கு மாற்று முறை என்ன, கடன் வாங்க, கொடுக்க மாற்று முறை என்ன என்பதைச் சிந்தித்து அதற்கான நடவடிக்கைகளை அரசு ஏக காலத்திலே எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட கருத்துக்களை மனத்திற்கொண்டு தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, முன் உதாரணமாக, எடுத்துக்காட்டாக இருந்த தமிழக அரசு இதிலேயும் முன் உதாரணமாக, எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். அப்படித்தான் இருக்கும், அதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்று கூறி அதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம். நன்றி.

திரு. கே. என். குமாரசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடன் தள்ளி வைக்கும் இந்த மசோதாவின் பேரில் என்னுடைய கருத்தையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே. என். குமாரசாமி] [1975 அக்டோபர் 24

எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் ஒரு கருத்தைக் கூறினார்கள். ஒரு மசோதா வருகிறபோது ஒருசிலர் பாதிக்கப்படுவார்கள்; ஒருசிலர் பலன் அடைவார்கள் என்பது உண்மை. யாரையுமே பாதிக்காமல் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்துவிட முடியாது. இருவரையும் பாதுகாப்பது என்பது சுலபமான காரியம் அல்ல. சமுதாய மாற்றத்திலே பெரும் மாறுதல்கள் வருகிறபோது இப்படிப்பட்ட சட்டங்கள் சமுதாயத்திலே வர வேண்டுமென்று சொன்னவர்கள் நாம்தான். 1937 ஆம் ஆண்டு ராஜாஜி அவர்கள் சட்டம் கொண்டு வந்தபோது அநேகம் பேர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். அப்போது அநேகம் பேர்களை வாழ வைக்க முடிந்தது.

இப்போது விவசாயத் துறையில் இருந்தாலும்சரி, விவசாயத் தொழிலாளியாக இருந்தாலும் சரி வசதியும் வாய்ப்பும் இல்லாமல், உற்பத்தி இல்லாத காரணத்தால் கடன்காரர்களாகி இருப்பார்கள் அல்லது வேறு காரணங்களால் கடன்காரர்களாகி இருப்பார்கள். இப்படிப்பட்ட கடன்களை வஜா செய்வதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். விவசாயிகள் பல்வேறு காரணங்களால் கடன்பட்டுக் கடைசியில் உடைமையையே இழக்கும் நிலைமைக்குப் போய் விடுகிறார்கள். விவசாயிகள் பட்டிருக்கும் கடன்களில் சட்டப்பூர்வமான கடன்கள் பல இருக்கின்றன. அவற்றைத் தள்ளி வைப்பதன் மூலம் மட்டும் விவசாயிகளுக்கு உதவி செய்தவர்களாக முடியாது. அந்தக் கடன்களை வஜா செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் பல வருஷங்களாகக் கோரிக்கை இந்த மன்றத்தில் இருந்து வந்திருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். கடந்த பத்தாண்டுகளாக விவசாயிகள், விவசாயத் தொழிலாளிகள் உற்பத்திக் குறைவு காரணமாக, வறட்சி காரணமாக நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள், கடன்பட்டிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் அதுபற்றிப் பல தடவைகள் பேசப்பட்டிருக்கின்றன. அந்தக் கடன்களை எல்லாம் வஜா செய்ய வேண்டும். கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கொடுக்கப்பட்ட கடன்களை வஜா செய்ய முடியாது என்று சொன்னாலும்கூட அரசாங்கம் கொடுத்த தக்காவிக் கடன், பத்தாண்டுகளுக்கு முன்னால் கொடுத்த கடன் ஐந்தரைக் கோடி ரூபாய் இருக்கிறது. அதையாவது வஜா செய்யலாம். கிணறு வெட்ட வாங்கின கடன்கள் அவை. அப்படிப்பட்ட கடன்களை வஜா செய்ய இந்த மசோதாவில் வழி செய்யப்பட்டிருக்குமானால்



1975 அக்டோபர் 24] [திரு. கே. என். குமாரசாமி]

நிச்சயமாக முழுமையாக வரவேற்றிருக்கலாம். கடன்களைத் தள்ளி வைப்பதன் மூலம் போதுமான உதவி செய்ததாகக் கொள்ள முடியாது. இந்த மசோதாவால் நாணய புழக்கம் நடைபெறாமல் சமுதாயத்தில் பல கஷ்டங்கள் வந்துவிடும் என்று சொல்ல முடியாது. தமிழ் நாட்டின் பண்பு சட்டப் பூர்வமாக இல்லாமலே நாணய மாற்றம் நடைபெறும். நம்பிக்கையின்பேரில் நடைபெறும். ஆகவே, எந்தெந்தக் கடன்களை வஜா செய்ய முடியும் என்பதற்கு ஒரு சர்வே செய்து அதனைச் செய்ய முன்வர வேண்டும்.

மற்ற மாநிலங்களில் இரண்டு ஹெக்டேர், ஒரு ஹெக்டேர் நிலங்கள் வைத்திருப்பவர்களுக்குக் கடன்களை வஜா செய்திருக்கிறார்கள். உத்திரப்பிரதேசம், வங்காளம், பீகார், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் அந்த விவசாய மக்களுக்காக இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கெல்லாம் இதனால் பிரச்சினைகள் வராதபோது இங்கு மட்டும் வந்துவிடும் என்று சொல்ல முடியாது. ஆகவே, கடன் நிவாரணச் சட்டத்திலே வஜா செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவார்களானால் நிச்சயமாகத் தமிழ்நாட்டு மக்கள் வரவேற்பார்கள்; போற்றுவார்கள். அதன்மூலம் கோர்ட்டு, வியாஜ்யங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வாய்ப்பு ஏற்படும். அந்த வகையிலே அமைச்சர் அவர்கள் மசோதாவைக் கொண்டுவர முடிவு எடுக்க வேண்டுமென்று கூறி அமைச்சர் அவர்கள் அதற்கு முன்வருவார்கள் என்று நம்பி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: துணைத் தலைவர் அவர்களே, கொண்டு வரப்பட்டிருக்கிற கடன் நிவாரணச் சட்ட முன்வடிவைப் பற்றி மாண்புமிகு அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் தங்களுடைய மேலான கருத்துக்களை நல்கியிருக்கிறார்கள். எல்லோரும் சொல்லிய கருத்துக்களின் மொத்த சாராம்சம்—இது ஒரு முற்போக்கான சட்டம், இதை வரவேற்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் இரண்டு பக்கத்திலும் தர்க்கவாதங்களை பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லாமல் இல்லை.

ஏற்கனவே சென்ற தொடர் கூட்டத்திலே 'இன்டெடெட் அக்ரிகல்சுரல் டெம்பரரி ரிலீப் பில்'—விவசாயக் கடன் நிவாரணச் சட்டம் வறட்சி இருந்த நேரத்தில் அரசின் மூலம் இந்த

[திரு. ஓ. பி. இராமன்] [1975 அக்டோபர் 24

மாமன்றத்தில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதிலே, சாதாரண விவசாயிகள் பட்டிருக்கும் கடனைப் பெற கோர்ட்டுகள் மூலம் வழக்காடக் கூடாது, டிகிரிகள் மூலம் வசூல் செய்யக்கூடாது என்பதற்கான ஒரு பாதுகாப்பு அப்போது கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து விவசாயிகள் அல்லாவிட்டாலும் பாவாயில்லை—சாதாரண நிலையில் உள்ளவர்கள், அதிக வசதியற்றவர்கள் பட்டிருக்கும் கடன்களைப் பொறுத்தும் அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டுமென்ற நோக்கத்துடன் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, விவசாயிகளுக்குப் பாதுகாப்பு, இப்போது விவசாயம் அல்லாத நிலையில் சாதாரணப் பொருளாதார நிலையில் இருப்பவர்களுக்கு ஒரு பாதுகாப்பு.

இந்தச் சட்டத்திலே, சென்ற சட்டத்திலே இல்லாத ஒரு புது அம்சம் சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த அம்சம் இரண்டு சட்டங்களுக்குமே பொருந்தும். விவசாயிகளாக இருந்தாலும், சாதாரண நிலையில் உள்ளவர்களாக இருந்தாலும் ஆறு மாத அளவில் பெற்றிருந்த கடன்களுக்கு வட்டி கணக்கிடக்கூடாது என்ற பாதுகாப்பை இரண்டு சாராரும் இந்தச் சட்டத்தின்மூலம் பெறுகிறார்கள். இந்தச் சட்டத்திலே பாதுகாப்பு யாருக்கு இல்லை என்பதை இந்தச் சட்டத்திலும் சொல்லியிருக்கிறோம், சென்ற சட்டத்திலும் சொல்லியிருக்கிறோம். 31 மார்ச் 1974, 31, மார்ச் 1975-ல் முடியும் நிதி ஆண்டுகளில் வருமான வரி கட்டியவர்கள் சேல்ஸ்டாக்ஸ் கட்டக் கூடியவர்கள், சொத்து வரி கட்டக்கூடியவர்கள் இந்தச் சலுகையைப் பெற முடியாது என்ற நிலையில் அதற்கும்க் கீழே இருக்கக்கூடியவர்களுக்குத்தான் இதன் மூலம் பாதுகாப்புச் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(நண்பகல் 12-00)

இதற்கு மேல் அதிகம் கொடுக்கவேண்டும் என்றும் சில உறுப்பினர்கள் கூறினார்கள். சில பேர்கள் நல்ல ஆலோசனைகளைச் சொன்னார்கள். சிலபேர்கள் கடன் கொடுத்தவர்களுக்கு என்ன உத்தரவாதம், எவ்வளவு காலத்திற்கு இந்தச் சட்டம் நீடிக்கும், நிரந்தரமாக நீடிக்குமா என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூடக் கேட்டார்கள்.



1975 அக்டோபர் 24] [திரு. ஓ. பி. இராமன்]

திரு. அழகர்சாமி போன்றவர்கள் நிரந்தரமாகவே இது சட்டமாக்கப்படவேண்டும் என்று சொன்னார்கள். காலவரையறை குறிக்கக்கூடாது என்று அவர்கள் சொன்னார்கள். இரு பக்கமும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இது ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்திற்குச் சட்ட வடிவம் கொடுப்பதாகும். அப்போதைக்கப்போது இதுபோன்ற முற்போக்குச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இது காலவரையறை இன்றி நிரந்தரமாக இருக்கவேண்டும் என்று சிலர் குறிப்பிட்டார்கள்.

அரசைப் பொறுத்தவரையில் அப்போதைக்கப்போது தேர்தல் வரும், தேர்தல் வந்தால் சட்டமன்றம் இருக்கும், சட்டமன்றம் இருந்தால் என்னென்ன காரியங்களை முறைப்படுத்திச் செய்யலாம் என்பதைப்பற்றி நம்பிக்கை இருப்பதால் இந்தச் சமயத்தில் அவசரச் சட்டத்திற்குச் சட்ட வடிவம் கொடுக்க இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. தொகையை அதிகமாக வைக்கலாம் என்றார்கள். காலத்தை நீட்டிக்கலாம் என்றார்கள் அவை அப்போதைக் கப்போது நாட்டின் பொருளாதார நிலைக்கேற்ப அரசு முடிவு எடுக்க வேண்டியவை. இதைவிட முற்போக்கான சட்டங்கள் வராது என்பதல்ல. ஒரு கால அளவு குறிப்பிட்டிருக்கிறோம். இதைக் காட்டிலும் மேலும் நல்ல அளவிற்குச் செய்யலாமா என்பதை யோசித்துச் செய்ய வாய்ப்பு இருக்கிறது. ஒரு படி முற்போக்காக கால் வைத்திருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் உட்பட இதை எதிர்க்கவில்லை, இது நல்ல சட்டம்தான். மேலும் முற்போக்கானதொரு சட்டம் தேவை என்றுதான் கூறினார்கள். அந்த அளவிற்குத் திருப்தியடைகிறேன். சில திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். திருத்தங்கள் கொடுக்கவேண்டுமென்று கொடுத்திருக்கிறார்கள். அவற்றை வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டு, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவரது திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி "தமிழ் நாடு, 1975-ம் ஆண்டு, கடன் பெற்றோர் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

*பிரிவு 2.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி "பிரிவு 2 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU A. SUBRAMANIAM: Sir, I move:

In sub-clause (2) (iii) the proviso under Explanation be deleted.

The amendment was duly seconded.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

*Clause 3.*

MR. DEPUTY SPEAKER: The question is:

"That Clause 3 do stand part of the Bill".

THIRU A. SUBRAMANIAM: Sir, I move:

That sub-clause (d) be deleted.

The amendment was duly seconded.

The amendment was put and lost.

Clause 3 was put and carried.

*Clause 4.*

MR. DEPUTY SPEAKER: The question is:

"That Clause 4 do stand part of the Bill".



THIRU S. ALAGARSAMY: Sir, I move the following amendment:

In clause 4, for the words and figures "16th January 1976" substitute the words and figures "16th January 1978".

The amendment was duly seconded.

The amendment was put and lost.

THIRU A. SUBRAMANIAM: Sir, I move the following amendment:

In clause 4, delete the words "and before the 16th January 1976."

The amendment was duly seconded.

The amendment was put and lost.

Clause 4 was put and carried.

*Clause 5.*

MR. DEPUTY SPEAKER: The question is:

"That Clause 5 do stand part of the Bill".

THIRU A. SUBRAMANIAM: Sir, I move the following amendment:

In sub-clause (1) for the words "stand stayed until the 16th January 1976" substitute the words "stand abated".

The amendment was duly seconded.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தை நான் வலியுறுத்தக் காரணம், ஏற்கனவே பல உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல் பல மாநிலங்களிலும், அண்டை மாநிலமான கர்நாடகாவிலும், மற்றும் யு.பி., பஞ்சாப், எம்.பி., போன்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட கடன்களை ரத்து செய்திருக்கிறார்கள். பொருளாதாரத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் பல ஆண்டுக்காலமாகக் கடன் சுமையினால் அழுந்தி வாழ்வு நசிந்து போயிருக்கிறவர்கள் என்ற காரணத்திற்காகக் கடன்கள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன பல மாநிலங்களில். கடனை ரத்தி

வைப்பதன் மூலம் அந்தச் சுமையை நீடிக்க வைப்பது சரியல்ல. கடன்களை ரத்து செய்யவேண்டும். அப்போதுதான் இந்தச் சட்டத்தின் நோக்கம் மெய்யாகவே நிறைவேறும். அப்போது தான் பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களின் சுமையை நாம் அகற்றமுடியும். 1976 ஜனவரி 16 ஆம் தேதி என்பதை எடுத்துவிட்டு stand abate என்று இதோடு இந்த வழக்குகள் எல்லாம் தீர்ந்துவிட வேண்டும் என்ற வகையில் திருத்தம் கொடுத்திருக்கிறேன். இந்தச் சட்டத்தின் நோக்கம் நிறைவேற வேண்டும் என்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தமாதலால் இதை வலியுறுத்த விரும்புகிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 6, 7 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 8.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி: "பிரிவு 8 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRU N. K. PALANISAMY: Sir, I move the following amendment:

In clause 8 for the figures and words "22nd July 1975" substitute the figures and words "24th October 1975".

The amendment was duly seconded.

**திரு. என். கே. பழனிசாமி:** ஒரு க்ளாரிபிக்கேஷன் வேண்டும். 31-ம் தேதி என்னுடைய பில் வருகிறது, அப்போது பேசிக்கொள்கிறேன். ஜூலை 22, 1975க்கு முன்பாக யாராவது கடன் பட்டிருந்தால் அவர்களுக்கு விதிவிலக்கு என்றிருக்கிறது. ஜூலைக்குப் பின் வாங்கிய கடன் செல்லாது என்றிருக்கிறது. அதேபோல் விவசாயிகளுக்கு உள்ள கடன், ஆறு மாதத்திற்கு இல்லை. சர்க்காரிலிருந்து வாங்கிய கடனுக்கு பீனல் இன்டரஸ்ட் இருக்கிறது. இன்டரஸ்ட்டுக்கு மேல் இன்டரஸ்ட் அது இதனால்





ரத்தாகிறதா? பீனல் இன்டரஸ்ட் ரத்து செய்யப்படவேண்டும். ஒத்திவைக்கப்பட்டிருப்பதற்கு. அதற்குண்டான வட்டியையும் ரத்து செய்ய வேண்டும். ஜூலைக்குப் பின் வாங்கிய கடனுக்கும் இந்த மசோதா பொருந்தும் என்ற முறையில் இந்தச் சட்டத்தைத் திருத்தவேண்டும். எனது திருத்தத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை தற்சமயம் ஏற்றுக்கொள்ளமுடியாத நிலையில் இருக்கிறேன். ஆறு மாதத்திற்கு என்றிருக்கிறது இப்போது. புதிதாகக் கொடுக்கிறவர்களுக்கு வட்டி கணக்கிடக் கூடாது என்று சட்டத்தில் கட்டுப்படுத்தவில்லை. ஏற்கனவே உள்ளதற்கு ஆறு மாதத்திற்கு வாங்கக் கூடாது என்றுதான் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பீனல் இன்டரஸ்ட் பற்றிச் சொன்னார்கள். அது தனியாகப் பரிசீலனை செய்யவேண்டியது. அரசாங்கத்திற்குள்ள வட்டியை ரத்து செய்ய முடியாது. அதைத் தனியாகப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 8 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 9 முதல் 13 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி: "பிரிவு 1 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU S. ALAGARSAMY: Sir, I move the following amendment:

In sub-clause (3) of clause 1, for the words and figures "15th January 1976" *substitute* the words and figures "15th January 1978".

The amendment was duly seconded.

திரு. சோ. அழகர்சாமி: முதல் திருத்தம் 1976 ஜனவரி வரையில் எந்தவிதமான நடவடிக்கைகளும் அல்லது கடன் வசூலும் செய்யக்கூடாது என்றிருக்கிறது. இன்னும் நான்கு மாதங்கள் தான் இருக்கின்றன. அதற்குப் பின் கடன் கொடுத்தவர்கள்—வறட்சிக்காகக் கொடுக்கப்பட்டது, மழை பெய்திருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை—வசூல் செய்ய ஆரம்பித்தால் பல குடும்பங்களை அழித்துவிடுவார்கள். எனவே, 1976 என்பதற்குப் பதிலாக 1978-ம் ஆண்டு வரையில் முதலில் நிறுத்தி வைத்துவிட்டு பின்னர் ஆர அமரப் பரிசிலனை செய்து சட்டம் செய்யலாம். 1978-ம் ஆண்டு வரை கொடுக்கவில்லை என்றால் நாம் போடக்கூடிய சட்டம் யாருக்கும் பிரயோஜனம் அளிக்காது. எனவே 1978 என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னதை நான் ரொம்பவும் ஆதரிக்கிறேன். வறட்சி வந்ததால் ஒரு வருஷம் ஒத்தி வைத்தார்கள் என்பது சரி. வறட்சி முடிந்து போய் விட்டதா? அக்டோபர் 20-ம் தேதி வரைக்கும் வறட்சி கோயம்புத்தூர் ஜில்லாவில் இருந்தது, திருநெல்வேலி ஜில்லாவில் மழை பெய்யவில்லை, மதுரை ஜில்லாவில் மழை பெய்ய வில்லை. இரண்டு மூன்று ஜில்லாக்களில் பெய்து இருக்கிறது. அப்படி மழையே பெய்தாலும் எப்படி விவசாயி ஜனவரி மாதத்தில் எல்லாக் கடன்களையும் திருப்பிக் கொடுக்க முடியும். ஆகவே, இன்னும் இரண்டு வருஷம் நீட்டிக்க வேண்டும். பல மாநிலங்களில் விவசாயிகளுக்கு அந்தப் பாதுகாப்புக் கொடுத்து இருக்கிறார்கள். இரண்டு வருஷம் தள்ளி வைத்து இருக்கிறார்கள். அப்படிச் செய்வதில் இந்தச் சர்க்காருக்கு மட்டும் என்ன கஷ்டம் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, வேளாண்மை விளைச்சலைக் கணக்கிட்டுப் பார்க்கவேண்டுமானால் ஜனவரியில்தான் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் செய்ய முடியும். தமிழ்நாட்டில் இருக்கும் அணைகளிலும் நீர்நிலைகளிலும் உள்ள தண்ணீர் நிலைமையைப் பார்த்தால் மோசமாக இருக்கிறது என்று சொல்லிவிடமுடியாது. இன்னும் வர இருக்கிற இரண்டு மாதங்களும் தமிழ் நாட்டிற்கு மழைக்காலம் தான். இன்னும் 3 மாதம் இருக்கிறது. அதற்குப் பின்னும் நிலைமை இப்படி இருக்குமானால், மழை பெய்யவில்லை என்றால், அது குறித்துப் பரிசீலிக்





கலாம். இப்போது தேவையில்லை என்று கருதுகிறேன். 1978 வரை தொடர்ந்து வறட்சி இருக்காது என்று நான் கருதுகிறேன். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் ஜனவரியில்தான் விளைச்சலைக் கணிக்கமுடியும் என்பதால், 3 மாதத்திற்குப் பிறகு நிலைமை இப்படியே நீடிக்குமானால் அதற்குப் பின்னாலே பார்க்கலாம்.

திரு. என். கே. பழனிசாமி: கனம் அமைச்சர் சொல்வது சரியல்ல. அறுவடை மார்ச் மாதத்தில்தான் வரும். ஜனவரியில் எப்படி வரும்? . . . .

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஐப்பசி, தை மாதத்தில்தான், ஜனவரியில்தான் அறுவடை வரும் என்று எல்லோருக்கும் தெரியும். சின்னபிள்ளைக்குக் கூடத் தெரியும்.

திரு. சோ. அழகர்சாமி: அப்படியே மழை பெய்தாலும் கூட ஜனவரியில் வரும் மகசூலை வைத்துக்கொண்டு விவசாயி எல்லாக் கடன்களையும் அடைத்து விட முடியாது. 3 வருஷம் ஆகும். விவசாயிகளின் கஷ்டம் அரசுக்குத் தெரியும். நல்ல விளைச்சல் வந்தால் கடனை அடைக்க 3 வருஷம் ஆகும். மழை பெய்தாலும் பூராக் கடனையும் திருப்பிச்செலுத்த முடியாது. ஆகவே, இன்னும் இரண்டு வருஷம் நீடித்தால் நல்லது. இல்லையென்றால் அவர்கள் சொத்துக்களை ஜப்தி செய்துகொண்டு போகும் நிலைமை வந்து விடும். ஆடுமாடுகளை ஜப்தி செய்து கொண்டுபோய் விடுவார்கள். ஆகவே இதை 2 வருஷம் ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1975-ம் ஆண்டு கடன் பெற்றோர் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படவேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ஊ). தமிழ்நாடு 1975-ம் ஆண்டு, கல்வி நிறுவனங்கள் (சொத்துக்களின் தற்காலிகக் கட்டுப்பாடு) திருத்த செல்திறன் சட்ட முன்வடிவு.**

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1975-ம் ஆண்டு கல்வி நிறுவனங்கள் (சொத்துக்களின் தற்காலிகக் கட்டுப்பாடு) திருத்த செல்திறன் சட்ட முன்வடிவை* பேரவையின்முன் அறிமுகம் செய்வதோடு, அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

இந்தச் சட்டம் 1949-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் மூலமாக ஒரு பள்ளி சரியாக நடைபெறவில்லையென்றால், புகார்கள் அதிகமாக வருமானால், மாணவர்கள்—ஆசிரியர்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படுமானால், அந்தப் பள்ளிக்கூடத்தை அந்தப் பள்ளியின் சொத்துக்களோடு எடுத்துக்கொள்வதற்கு உரிமை செய்யும் வகையில், அந்தச் சட்டம் 1949-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. அதற்குப் பிறகு எந்த ஒரு பள்ளியையும் எடுத்துக்கொள்ளும் சூழ்நிலை சட்டத்தின்கீழ் ஏற்படவில்லை. ஆனால் சென்னையில் எழும்பூரில் ஒரு உயர்நிலைப்பள்ளி நடந்து வருகிறது. அந்தப் பள்ளி சரியாக நிர்வகிக்கப்படாமல், அதன் மீது பல்வேறு புகார்கள் பொதுமக்களிடமிருந்தும், ஆசிரியர்—மாணவர்களிடமிருந்தும் வேண்டிய வசதிகள் செய்யவில்லை என்று வந்தன. அப்பள்ளி இந்தச் சட்டத்தின் 3(1) விதியின் கீழ் சொத்துக்களோடு சேர்த்து எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி அந்தப் பள்ளியை எடுத்துக்கொண்டது ஈராண்டுக் காலத்திற்கு செல்லத்தக்கதாகும். 31—1—1975-யோடு அந்தக் கெடு முடிந்து விடுகிறது. அந்தப் பள்ளியை நடத்திக் கொண்டிருந்த பாக்கியம் பிள்ளை நினைவுக் கட்டளை நிர்வாகக் குழு மீண்டும் அந்தப் பள்ளிக்கூடத்தை எடுத்து நடக்க ஆயத்தமாக இருக்கிறார்களா என்றால் அவர்களும் ஆயத்தமாக இல்லை. அவர்கள் எடுத்து அந்தப் பள்ளியை மறுபடியும் சீர்திருத்தும் சூழ்நிலையில் இல்லை. இப்போது அந்தக் கெடுவும் முடிந்து விட்டது. உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு வகை செய்யவேண்டும் என்பதற்காக, மேலும் மூன்று ஆண்டுக் காலத்

* 21—10—75-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.



திற்கு அதை நாமே நிர்வகிக்க வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டம் வகை செய்கிறது. ஈராண்டு என்று இருந்தது; அதோடு மேலும் மூன்றாண்டு இருக்க வேண்டும் என்று போட்டு இருக்கிறோம். இப்போது நாமே தனியார் பள்ளிகளைச் சொத்துக்களோடு எடுத்துக் கொள்வதற்கு என்று ஒரு சட்டம் போட்டு இருக்கிறோம். அதிலே ஐந்து ஆண்டுக் காலம் வரையில் அரசு ஏற்றுக்கொண்டு நிர்வகித்து, சீரமைத்து மறுபடியும் ஒப்படைக்கலாம் என்று வந்து இருக்கிறது. அந்த அடிப்படையிலே இதிலும் ஐந்து ஆண்டுகள் வருவதற்கு மேலும் மூன்றாண்டுகள் வைத்துக் கொள்ளலாம் என்று திருத்தம் கொண்டு வந்து இருக்கிறோம். இந்தத் திருத்தத்தை ஆதரித்து நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தம் நல்ல எண்ணத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரித் தனியார் பள்ளிக்கூடங்கள் இப்படிச் சரிவர நடைபெறவில்லையென்றால், அதை எடுத்துக் கொண்டு, ஐந்து ஆண்டுக் காலம் நல்ல முறையில் நடத்தி திருப்பிக் கொடுக்கும் நிலைமை இருக்கிறது என்று சொன்னால், அந்தச் சட்டத்தை நல்ல முறையில் அமல் செய்யவேண்டும். குறிப்பாக, என்னுடைய தொகுதியில் ஒரு தனியார் பள்ளிக்கூடம் இருக்கிறது. அங்குள்ள நிர்வாகம் ஆசிரியர்களை, மாணவர்களை எந்த விதத்தில் கடுமையான முறையில் செய்யவேண்டுமோ அந்த வகையில் செய்து வருகிறார்கள். அதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்கும் கொண்டுவந்து இருக்கிறேன்.

பல முறை இந்த மாதிரித் தனியார் பள்ளிகளைக் கட்டுப்படுத்தச் சட்டம் கொண்டு வந்தோம். ஆனால் அந்தச் சட்டத்தை சட்டை செய்யாமல் தங்கள் இஷ்டம் போல் அவர்கள் பள்ளிகளை நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வேண்டிய சலுகைகள் செய்து தரப்படுவது இல்லை. ஆகவே, சட்டத்தை நல்ல முறையில் நடைமுறைப் படுத்தவேண்டும். சட்டத்தை சட்டை செய்யாமல் இருக்கிறவர்களை அரசாங்கம் சரியான முறையில் கண்காணிக்கவேண்டும். அந்தச் சட்டங்கள் சரியாக அமல் நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அந்தக் கண்காணிப்பை அரசாங்கம் நல்ல முறையில் செய்ய வேண்டும். அந்த நிர்வாகங்

களைச் சரியாக நடத்த சரியான கண்காணிப்புச் செய்ய வேண்டும். அப்படிச் சரியாகச செய்யாதவர்களை தண்டிக்கின்ற அளவுக்கு ஒரு கட்டுப்பாடான இயந்திரம் தேவை என்று சொல்லி, அரசாங்கம் அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க செய்வதற்கு எற்கனவே இங்கே வழிவகை இல்லாமல் இருந்தது. புதிதாக 1974-ல் நிறைவேற்றப்பட்ட சட்டத்திலே அதற்கு வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. எந்தப் பள்ளியாவது முறைகேடான வகையில், நிர்வாகம் சரியாக இல்லாதவகையில் நடக்குமானால் அதை நாமே ஏற்று நடத்தலாம். அதற்குச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம். அவர்கள் சொல்கிறபடி குறிப்பிட்ட பள்ளியில் புகார் இருக்குமானால் அது பற்றி நடவடிக்கை எடுக்கலாம். சட்டம் சரியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது அரசின் எண்ணம். அதற்கான வகையில் எல்லா அதிகாரிகளும் செயல்படவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறார்கள். எங்கேனும் தவறுகள் இருக்குமானால் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1975-ம் ஆண்டு கல்வி நிறுவனங்கள் (சொத்துக்களின் தற்காலிகக் கட்டுப்பாடு) திருத்த-செல்திறன் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, "தமிழ்நாடு 1975-ம் ஆண்டு கல்வி நிறுவனங்கள் (சொத்துக்களின் தற்காலிகக் கட்டுப்பாடு) திருத்த-செல்திறன் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவேண்டும்" என்று கோருகிறேன்.



**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், பிரைவேட் ஸ்கூல்ஸ் கண்ட்ரோல் ஆக்ட் கொண்டு வந்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். இந்த பில் அவசியமா? இது டூப்ளிகேஷன் போல் ஆகாதா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது முன் உரையில் பேசும்போது, சென்னையில் ஒரு குறிப்பிட்ட பள்ளி நடைமுறை சரியில்லை என்பதை அனுசரித்து இந்த அரசு இப்படிப்பட்ட ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டது என்று குறிப்பிட்டார்கள். ஒரு குறிப்பிட்ட பள்ளியிலுள்ள சூழ்நிலை காரணமாக இப்படி ஒரு தீவிரமான விளைவுகளை ஏற்படுத்தத்தக்க சட்டத் திருத்தத்தினைக் கொண்டு வருவது என்றால் அதை அமல்படுத்தும் அதிகாரிகள் முறையாக நியாயத்தின் அடிப்படையில்தான் அதை அமல் படுத்துவார்கள் என்ற உத்திரவாதத்தினை அமைச்சர் அவர்கள் குறிப்பிடவில்லை.

ஏற்கெனவே தனியார் பள்ளிகளை எடுத்துக்கொள்ளத்தக்க வகையில், ப்ரைவேட் ஸ்கூல்ஸ் ரெகுலேஷன்ஸ் பில் ஒன்று இந்த அவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதிலே தனியார் பள்ளிகளை ஐந்தாண்டுக் காலத்திற்கு ஏற்று நடத்துவதற்கு வகை இருக்கின்றது. நிர்வாகச் சீர்கேடுகளுக்காக அரசாங்கம் உரிய காரணங்களைக் காட்டி, உரிய முறையில் எடுத்துக் கொள்ளலாம் என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

ஆனால் இப்போது நம் முன்னுள்ள சட்ட முன்வடிவின் 'ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்' என்ற பகுதியில் 'மேலும் மூன்றாண்டுக் காலத்திற்கு நீட்டிப்பதற்கு முடிவு எடுத்து இருக்கின்றது இந்தச் சட்டம்' என்றுதான் சொல்லியிருக்கின்றதே தவிர, இந்த முடிவிற்கு என்ன காரணம்? ஒரு குறிப்பிட்ட உயர்நிலைப்பள்ளி, அதிலும் அந்தப் பள்ளியின் நிர்வாகம் அதைத் தாங்கள் மீண்டும் எடுத்துக்கொள்ளத் தயாராயில்லை என்று சொல்லிவிட்ட நிலையில், இப்படிப்பட்டதொரு புதிய சூழ்நிலையின் அடிப்படையில் இப்போது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால், அப்படிப்பட்ட நிர்வாகச் சீர்கேடுகள் பிற பள்ளிகளிலே ஏற்படும்போது, இந்தச் சட்டத்தினைப் பயன்படுத்தும் அதிகாரிகள் எந்த முறையில் அதுபற்றி வரைமுறை செய்து, நடைமுறைப் படுத்தி அதை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்ற இப்படிப்பட்ட

விளக்கங்களெல்லாம் இதிலே சொல்லப்படவில்லை. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த உத்திரவாதங்களைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, புதிதாக இயற்றப்பட்ட தனியார் பள்ளிக்கூடங்களின் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு, அதாவது 1949-ல் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. சரிவர இயங்காத பள்ளிகளை அரசாங்கம் ஓர் ஆண்டுக்காலம் ஏற்று நடத்தலாம் என்ற அளவிற்கு அதிலே இருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட ஆண்டில் எடுத்துக் கொண்டால், அதாவது 1965-66 கல்வி ஆண்டில் எடுத்துக் கொண்டால், 1966-67 வரையில் அதை வைத்து நடத்தலாம். மேலும் விரும்பினால் ஓர் ஆண்டுக் காலத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்று அதிலே இருக்கின்றது. அந்தக் காலக் கெடு 31—5—1975 உடன் முடிந்து விடுகின்றது. ஆகவேதான் அது மேலும் மூன்று ஆண்டுக் காலத்திற்கு நீட்டிக்கப்பட்டால் நல்லது என்ற கருத்துக்கு வந்திருக்கிறோம்.

அம்மையார் அவர்கள் புதிதாகச் சட்டத்தினை நிறைவேற்றி விடலாமே என்றார்கள். 1949-ல் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து அதை ஒரே ஒரு முறைதான். குறிப்பாக இந்த எழும்பூர் பள்ளி விஷயத்தில்தான் நடைமுறைப்படுத்தும் வாய்ப்பு ஏற்பட்டது. புதிதாக ஒரு சட்டத்தினைக் கொண்டு வருகின்றோம் என்றால் அந்தச் சட்டத்தின்கீழ் அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து, அவர்கள் அப்பீல் செய்துகொள்ளுவதற்கான வாய்ப்புகளையெல்லாம் கொடுத்து, பிறகு, அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம். ஏற்கெனவே உள்ள சட்டத்தின்கீழ் மூன்றாண்டுக் காலத்திற்கு என்று வகுத்துக் கொண்டால் அதை நடைமுறைப்படுத்துவது சுலபமாகின்றது என்ற வகையில்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அவர்களிடமே சமாதானமாக எடுத்துக்கொள்ளுவது என்றால் அதிலேயும் சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. முதலில் அவர்களிடம் பேச்சு வார்த்தைகள் நடத்தி, அந்தப் பள்ளிக்கூடம் சம்பந்தமான சொத்துக்கள் அனைத்தையும் நன்கொடையாகக் கொடுத்து விடுங்கள் என்று வற்புறுத்திக் கேட்க வேண்டும். நாமாக அவர்களுடைய சொத்துக்களை எடுத்துக்கொள்ளக் கூடாது. ஆகவே, அவர்களிடம் பேச்சு வார்த்தைகள் நடத்தி,



நன்கொடையாகக் கொடுத்து விடுங்கள் என்று கேட்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்தச் சொத்துக்கள் எங்களுடையதுதான் என்று வாதாடுவார்களேயானால், இடையில் இதை முழுக்க முழுக்க எடுத்துக்கொள்ளுவதற்கு முன்பு அந்தப் பள்ளிக்கூடம் தொடர்ந்து நடக்க வேண்டும். படிக்கும் மாணவர்களுக்கோ அல்லது பணியாற்றும் ஆசிரியர்களுக்கோ எந்தவிதச சங்கடங்களும் ஏற்படாத வகையில் பார்க்க வேண்டும். ஆகவே இடையில் ஒரு குறிப்பிட்ட காலம் அரசாங்கத்திற்குத் தேவைப்படுகின்றது என்ற வகையில் தான் ஒரு மூன்றாண்டுக் காலம் என்று குறிப்பிடுகிறோம். ஆகவே, நடைமுறை இந்தப் புதிய சட்டப்படிதான இருக்க வேண்டும்.

இதிலே யார் பாதிக்கப்பட்டாலும், மேல முறையீடு செய்வதற்கான வாய்ப்புகள் தரப்பட்டிருக்கின்றன. இதனால் தனியார் பள்ளி நிர்வாகிகள் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள். இது முதலில் நிறைவேற்றபபட்ட நாளிலிருந்து இதுவரையில் பார்த்தால் இந்த ஒரு பள்ளியின் பிரச்சனையில்தான் அதை நடைமுறைப்படுத்த நேரிட்டது. இப்போதுள்ள முறையில் யார் பாதிக்கப்பட்டாலும் மேல் முறையீடு செய்துகொள்ளுவதற்கு எல்லா வகையான தனமைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** தலைவரவர்களே, ஒரு குறிப்பிட்ட பள்ளியில் இந்தச் சங்கடம் ஏற்பட்டது என்பதற்காக இந்தச் சட்டத்தினை மேற்கொண்டு மூன்றாண்டு காலத்திற்கு அனுமதிக்க வேண்டிய நிலைமை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதிலுக்குப் பின்னர் இப்படி பாயிண்ட்ஸ்களை எழுப்பிக்கொண்டு போவது சரியாக இருக்குமா?

THIRU SOWDI S. SUNDARA BHARATHI: The point has already been raised in this House and I want to seek a clarification. இப்போது அவசியம் ஏற்பட்டிருக்கின்றது, எனவே கொண்டு வருகிறோம் என்கின்றார்கள். சரி, இருந்தாலும்கூட நாம் இப்போது புதிதாகச் சட்டத்தினை ஏற்படுத்தி மேலும் மேலும் அதை நீட்டிப்பதற்குப் பதிலாக இந்தச் சட்டமே

நமக்குத் தேவையில்லை என்று சொல்லும் அளவிற்கு நமக்கு வாய்ப்பு இருக்கின்றது. இங்கே இந்தச் சட்டமே வேண்டாம் என்று சொல்லத்தக்க அளவிற்கு, புதிய சட்டத்தில் ஒரு அமெண்டுமெண்டைச் செய்து கொண்டு, இந்தச் சட்டம் நமக்குத் தேவையில்லை இனி என்ற ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்யக் கூடாதா என்றுதான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஒரு பள்ளிக்கூடத்தைப் பொறுத்து இப்படிப்பட்ட அவசியம் இருக்கின்றது என்ற அடிப்படையில் இந்தச் சட்டத் திருத்தத்தினைக் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1949-ல் ஏற்படுத்திய சட்டம் பள்ளிக்கூடங்களைப் பொறுத்தமட்டில் இருந்தால் அது போதும். ஆனால் அதிலே கல்லூரிகளுக்கும் சேர்ந்து இருப்பதால், நாம் கல்லூரிகளுக்கு என்று ஒரு தனிச் சட்டத்தினைக் கொண்டு வரவேண்டும். அந்த நிலை ஏற்படும் வரையில் இந்தச் சட்டம் நமக்குத் தேவைப்படுகின்றது. அதற்குப் பிறகு வேண்டுமானால், இந்த நிலையினை மாற்றிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு கல்வி நிறுவனங்கள் (சொத்துக்களின் தற்காலிகக் கட்டுப்பாடு) திருத்த-செல்திறன் சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது."

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) 1975 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 1975 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(எ) 1975 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** துணைத் தலைவரவர்களே,

" 1975 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவினை * அறிமுகம் செய்வதோடு அது ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகின்றேன்.

பிற மாநிலங்களில் செயலில் உள்ள முத்திரைத்தாள் தீர்வை விதங்களை ஆய்வு செய்கையில் மகாராஷ்டிரம், கேரளம் முதலிய மாநிலங்கள், நகர்ப்புறங்களில் உள்ள இயங்காச் சொத்துக்களின் உரிமை மாற்றுப் பத்திரங்களுக்கும் மற்றச் சொத்துக்களின் உரிமை மாற்றுப் பத்திரங்களுக்கும் விதிக்கப்படும் முத்திரைத்தாள் தீர்வை விதத்தில் வேறுபாடுகள் இருப்பது தெரியவந்தது. நமது மாநிலத்தில் குறிப்பிட்ட நகர்ப்புறங்களான சென்னை, மதுரை மற்றும் நகராட்சி மன்ற நகரங்களான சென்னை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள இயங்காச் சொத்துக்களின் உரிமை மாற்றுப் பத்திரங்களுக்கு விதிக்கப்படும் முத்திரைத்தாள் தீர்வை விதத்திலும் மற்ற சொத்துக்களுக்கு விதிக்கப்படும் முத்திரைத்தாள் தீர்வை விதத்திலும் மேற்சொன்ன மாநிலங்களில் உள்ள அதே வேறுபாடுகளை இங்கும் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்ன நோக்கத்தை எய்த 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 1899) 1-வது விவர அட்டவணையைச் சேர்ந்த 23-வது பிரிவைத் திருத்தவும் அதையொட்டித் தேவையான இடங்களில் சில திருத்தங்கள் செய்யவும் ஓர் அவசரச் சட்டம் அதிகார முறையில் வெளியிடக் கருதப்பட்டது.

1975, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டப்படி (தமிழ்நாடு அவசரச் சட்டம் 11/1975) அதிகார முறையில் வெளியிடப்பட்டு இந்த அவசரச் சட்டம் 1—8—1975 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தது.

இந்தச் சட்ட முன்வடிவு மேலே கூறப்பட்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டு வரப்படுகிறது.

---

* 21—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. செ. மாதவன்] [1975 அக்டோபர் 24

இதனை இம்மாமன்றம் ஏற்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, I personally feel that this Bill is unnecessary at this point of time. In fact, when the Budget announcement came in the month of March, we expected that whatever the rates of taxation would be, they would be announced at that time itself. But the Government have sought to be silent during that part of our Assembly proceedings, not disclosing to the House as to what particular rates of taxation they are going to incrase. Having kept quiet at that time the Government gave an impression that there would be no increase in the rates of taxation and that it would be a no tax-increase Budget. They gave an impression among the public that they were not increasing the taxes. Having been silent all these days, suddenly at this part of the year they are coming forward with a legislation to increase the rate of stamp duty on transfer of properties. That is one point.

Secondly, it is surprising how this Government did not know all these years that there was a difference or discrepancy between the rates of stamp duty in our State and in the other States. They should have known this earlier. It is not as if they have suddenly discovered this point or suddenly they have found out that there is a different rate of taxation—a lower rate here and a higher rate in the Bombay City in the Maharashtra State. The rate of stamp duty in Bombay City will be higher than in Madras City because the whole thing is different, the property is different. Madras City is not like Bombay City. All these facts should be taken into consideration. If these facts were taken into consideration, why this Bill was not brought before, so that a detailed discussion at the Budget time itself might have taken place? This is an unfortunate piece of legislation which has been brought in a wrong time. I am against this Bill. With these words, I wind up.

(பிற்பகல் 12.30)

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய அரசாங்கம் வரவு என்றால் ரொம்ப விறுவிறுப்பாக இருக்கிறது. எந்தெந்த வழிகளில் எல்லாம் பணம் பெற



1975 அக்டோபர் 24] [திருமதி த. ந. அனந்தநாயகி]

முடியுமோ அந்தந்த வழிகளில் எல்லாம் பணம் வந்துகொண்டே இருக்குமா என்று ஆராய்ந்து செய்வதில் இந்த அரசாங்கத்தை மிஞ்ச வேறு யாராலும் முடியாது.

மகாராஷ்டிரத்தில் இப்படி இருக்கிறது என்று சொல்கிறார்கள். மகாராஷ்டிரத்திலே இருக்கிற பம்பாயும் இங்கே இருக்கிற சென்னையும் ஒன்றாக முடியுமா? பம்பாயிலே வீட்டு வாடகை என்ன என்பது தெரியாதா? ஏற்கெனவே, நீங்கள் வந்த பின்னால் சென்னையில் ஸ்டாம்ப் டியூட்டி எவ்வளவு அதிகமாகியிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். 100 ரூபாய்க்கு கிட்டத்தட்ட 10, 13 ரூபாய் ஸ்டாம்ப் டியூட்டி கொடுக்கவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு மார்க்கெட் வால்யூ வேறு ஏதாவது இருக்கிறதா என்று தெரியவில்லை. அவர்களுக்கு எவ்வளவு 'ப்ராப்பர்ட்டி', எங்கே இருக்கிறது, என்ன வால்யூ என்று ஒன்றும் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: யாருக்கு எவ்வளவு ப்ராப்பர்ட்டி?

திருமதி த. ந. அனந்தநாயகி: அதிகாரிகளுக்கு, அரசாங்கத்திற்கு வேண்டியவர்களுக்கு, அமைச்சர்களுக்கு வேண்டியவர்களுக்கு. டி.எம்.கே. ஆபீஸ் கட்ட நிலம் வாங்கினீர்களே, அதற்கு மதிப்பு என்ன? எவ்வளவு ஸ்டாம்ப் டியூட்டி கொடுத்தீர்கள்? ஊழல் புகார் கூட அதுபற்றி கொடுத்தார்களே. அந்த மாதிரியான இடத்தில், மவுண்ட் ரோட்டில் இருக்கிற இடத்திற்கு எவ்வளவு வால்யூ என்று தெரியாதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக உத்தரவு போடுவதில்லை. பொதுவாக ஒரு 'கைடு லைன்' தான் இருக்கிறது. சப்-ரெஜிஸ்டிரார் ஆபீசில் அது வைக்கப்பட்டிருக்கிறது. அதன்படிதான் ஸ்டாம்ப் டியூட்டி போடுகிறார்கள். சாரம் இல்லாமல் எதையும் சொல்லக்கூடாது.

திருமதி த. ந. அனந்தநாயகி: உங்களுக்கு வேண்டுமானால் சாரம் இல்லாமல் இருக்கலாம். மற்றவர்களுக்கு சாரமாகத்தான் இருக்கிறது. மவுண்ட் ரோட்டில் இருக்கிற சொத்துக்கு என்ன மதிப்பு என்பது பொதுமக்களுக்குத் தெரியும். அதைத்தான் ஊழல் புகாரிலும் சொன்னார்கள். சொத்தின் மதிப்பு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கக்கூடாது.

இவ்வளவு பணம் வரும்போது இந்த டாக்சை பட்ஜெட் வரும்போது போடாமல் ஏன் இடையிலே போடவேண்டும்? பட்ஜெட்டிலே வரி போடவில்லை, வருமானம் போதவில்லை என்று சொல்லிவிட்டு, இடையிலே வரி போட்டு வருமானத்தைப் பெருக்கிக்கொள்கிறீர்கள். ஏற்கெனவே இந்தமாதிரி எக்சைஸ் டியூட்டி, ஸ்டாம்ப் டியூட்டி எல்லாம் போட்டிருக்கிறீர்கள். அதனால் கிட்டத்தட்ட 43 சதவிகிதம், 50 சதவிகிதம், 125 சதவிகிதம் கூட வருமானம் வருவதைப் பார்க்கிறோம். இது எதைக் காட்டுகிறது என்றால் அந்தந்தச் சமயத்தில் போடாமல் இடையிலே போட்டு மக்களை ஏமாற்றுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு இது ஒரு சான்று.

அதுமட்டுமல்ல. இவ்வளவு ஸ்டாம்ப் டியூட்டி வசூல் செய்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான ரூபாய் வரி கட்டுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு சப்-ரெஜிஸ்டிரார் ஆபீசில் உட்காருவதற்கு வசதியான இடம் கிடையாது. ஓட்டை நாற்காலி, ஓட்டை பெஞ்ச் கிடக்கிறது. உட்கார இடம் இல்லை. தெருவிலே நிற்க வேண்டியிருக்கிறது. குடிக்க ஒரு தம்ளர் தண்ணீர் கூட கொடுக்க மாட்டார்கள் அங்கே. அந்த மாதிரியான நிலைமை எல்லாம் இருக்கிறது. வரியை வாங்குகிறவர்கள் அதற்கு ஏற்ற வசதியை செய்து கொடுக்க வேண்டாமா? "வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம்' என்று சொல்லிவிட்டு, "வரியைப் பெருக்குவோம், வசதியைக் குறைப்போம்" என்றல்லவா செய்து கொண்டிருக்கிறீர்கள்.

ஸ்டாம்ப் வாங்கப்போனால் பெரிய டினாமினேஷன்ஸ் கிடையாது. 10,000 ரூபாய்க்கு ஸ்டாம்ப் வாங்கவேண்டுமானால் 2 ரூபாய் ஸ்டாம்ப், 10 ரூபாய் ஸ்டாம்பாகவா வாங்குவார்கள். இப்படி வாங்கி ஒட்டுவதற்கு எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. பெரிய டினாமினேஷனை இருந்தால் ஓரளவு வசதியாக இருக்கும் அல்லவா?

அர்பன் ப்ராப்பர்ட்டிக்கு வரியைக் கூட்டுவதற்காக இந்த மசோதா வந்திருக்கிறது. மற்ற மாநிலங்களில் கூட்டியிருக்கிறார்கள். அதைப்போல இங்கும் செய்கிறோம் என்கிறார்கள். பம்பாயும், சென்னையும் ஒன்றாக இருக்க முடியுமா? பம்பாயிலே இருக்கக்கூடிய நிலைமை இங்கே இல்லையே? எதிலே வருமானம்



வருமோ அதை மட்டும் எடுத்துக்கொள்வது, மற்றவற்றை விட்டு விடுவது என்ற கொள்கை கண்டிக்கத்தக்கது என்று சொல்லி, இந்தச் சட்டத்தை முழுக்க முழுக்க எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, இந்தச் சிறிய மசோதாவின் மூலம் ஒரு சிறிய திருத்தத்தை இந்திய ஸ்டாம்ப் ஆக்டுக்கு நாம் கொண்டு வந்திருக்கிறோம். அதன் மூலம் புதிய வருவாய் நம்முடைய மாநில அரசுக்குத் தேட வேண்டுமென்பது ஒரு அம்சம்.

இன்னொரு அம்சம் நகரப்புறத்திலே, இதுபோன்ற விலைவாசி ஏற்றம் ஏற்படும்போது அதன் பயன் ஒரு தனி நபருக்குப் போய் விடக் கூடாது என்பதிலே கவனம் செலுத்த வேண்டும். நகரப் புறங்களில் சொத்துக்களை விற்பனை செய்யும்போது மதிப்பு கூடுகிறது. மதிப்பு கூடுவது தனி மனிதரின் ஆற்றலினால் அல்ல. ஒரு அரசாங்கம் எடுத்துக்கொள்கிற முயற்சியினாலும் பொருளாதார வளர்ச்சி அடிப்படையினாலும் ஏற்படுகிற ஒன்று. அப்படி எல்லாம் ஏற்படும்போது அதன் பலன் ஒரு தனி நபருக்குப் போகக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையிலேதான் இதுபோன்ற நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. முற்போக்கு கொள்கை உடையவர்கள் எல்லாம் இதை வரவேற்பார்கள். ஆனால் அவர்கள் இந்தச் சட்டத்தை எதிர்ப்பது ஆச்சரியமாக இருக்கிறது. சொத்து உள்ளவர்கள்தான் இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பார்களே தவிர, பொதுவாக இது நன்மை பயக்கும் ஒரு சட்டமாகும். ஆகவே இதை மாமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:**

"1975 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

[1975 அக்டோபர் 24

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே,

"1975 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும்."
என்று கோருகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இம்மாதிரி முக்கியமான நகரங்களிலே அதிகமான ஸ்டாம்ப் டியூட்டி போடுவது நல்ல அம்சம் என்றாலும் கூட இதனால் இந்த ஆண்டுக்கு எவ்வளவு அதிகமாக வருமானம் கிடைக்கும் என்ற கருத்தைச் சொன்னால் நன்றாக இருக்கும். ஏனென்றால் இந்த மசோதாவிலே எந்த இடத்திலும் இவ்வளவு வருமானம் வரும் என்று கொடுக்கவில்லை. அந்த விபரத்தையும் கொடுத்தால் இந்த மசோதா நிறைவேற்றப்படுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போதுதான் இந்த வரியைப் போட்டிருக்கிறோம். இனிதான் அந்த விபரத்தைச் சேகரிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:
"1975 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ஐ) 1975 ஆம் ஆண்டு உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பேரவைத் தலைவர் அவர்களே,
"1975 ஆம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) * சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதோடு, அது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்," என்று முன்மொழிகிறேன்.

* 21—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.



1975 அக்டோபர் 24] [திரு. செ. மாதவன்]

ஒரு நில உடைமையின் அனுபோக உரிமையை நில உரிமையாளர் திரும்பப்பெறுவது பற்றிய வழக்கில் அளிக்கப்படும் தீர்ப்பை நிறைவேற்றும் நடவடிக்கைகள் நில உடைமையின் அனுபோகத்தை உரியவருக்கு ஒப்படைப்பதைப் பொறுத்தவரை நிறுத்தி வைக்க 1950 ஆம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) சட்டம் (திருவாங்கூர்-கொச்சி சட்டம் 8/1950) வகை செய்கிறது. இச்சட்டம் 25—3—1950 அன்று செயலுக்கு வந்தது. இச்சட்டத்தின் செல்திறனுடைய கால அளவு அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்தது. இது 24—9—1975 அன்று செல்திறனற்றுப் போகவிருந்தது. எனவே, இதன் செல்திறன் கால அளவை மேலும் இரண்டாண்டுகளுக்கு நீட்டிப்பதென்று அரசு முடிவு செய்தது. அப்போது சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறாததால், 1975 ஆம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 15/1975) அதிகார முறையில் வெளியிட வேண்டியது அவசியமாயிற்று. இந்த அவசரச் சட்டம் 17—9—1975 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டது.

இதனை இம்மாமன்றம் ஏற்று நிறைவேற்றுமாறு வேண்டுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே,

"1975 ஆம் ஆண்டு உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும்."
என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஐ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

THE HON. THIRU O. P. RAMAN: Mr. Speaker, Sir, I beg to introduce the Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1975, *and move that the same be taken into consideration.

By an amendment to the Central Sales Tax Act, 1956 (Central Act 74 of 1956) the Government of India have increased the maximum rate of sales tax in respect of goods declared to be of special importance in inter-State trade or commerce from 3 per cent to 4 per cent with effect from the 1st July 1975. This enables the State Government to raise the rate of local sales tax on declared goods in respect of inter-State sales up to the ceiling of 4 per cent from the 1st July 1975. This Government decided that the rate of local sales tax on "iron and steel"-falling under item 4 of the Second Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 be raised from 3 per cent to 4 per cent with effect from the 1st July 1975 and that in respect of other declared goods, no increase need be made for the present. Accordingly, a notification under section 59(1) of the said Act amending the rate of tax on "iron and steel" falling under item 4 of the Second Schedule to the said Act has been published in an extraordinary issue of the *Tamil Nadu Government Gazette* dated the 1st July 1975. It is proposed to replace the said notification by this Bill.

Under section 8 read with item 5 of the Third Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959, "sugar but not including jaggery and gur" is exempt from sales tax. The

* 21—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.



question whether the commodities sugarcandy, sugarcandy honey drained from raw sugar, bura sugar, palm candy and Nattusarkarai which do not fall within the scope of the said item 5 should be subjected to sales tax, was examined by the Government and it was decided to levy tax on sugarcandy, sugarcandy honey drained from raw sugar, bura sugar and Nattusarkarai while exempting only sugar which is subjected to additional excise duty under the Additional Duties of Excise (Goods of Special Importance) Act, 1957 and continuing the exemption granted to palm gur and palm candy. This decision has been given effect to by a notification issued under section 59 (1) of the Tamil Nadu General Sales Tax Act, 1959. It is also proposed to replace the said notification by this Bill.

According to sub-section (1) of section 16 of the said Act, the period of limitation for assessment of escaped turnover is five years. Under sub-section (4) of that section in computing the said five years, the period during which the proceedings were stayed by civil court or other competent authority, shall be excluded. But, this exclusion is available only in relation to proceedings in respect of which such stay was obtained and is not available to other cases involving identical question of law. It has, therefore, been decided to incorporate a provision in the Act so as to exclude in computing the period of limitation for assessment or re-assessment, the time during which any appeal or other proceeding in respect of any other assessment or re-asessment is pending before the High Court or the Supreme Court involving a question of law having a direct bearing on such assessment or re-assessment. Clause 2 of the Bill provides for this. It is, therefore, proposed to add a new sub-section (5) to Section 16 of the said Act by this Bill.

Sir, I commend the motion for the acceptance of the House.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இந்த விற்பனை வரி மசோதாவிலே ஒன்றை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். இந்தத் திருத்தத்தின் மூலமாக நாட்டுச் சர்க்கரை, பனங்கற்கண்டு இவைகளுக்கு வரி கூட்டப்படுகிறது. சாதாரணமாக சர்க்கரை ஒரு கிலோதான் விநியோகம் செய்கிறார்கள். சாதாரண ஏழை மக்கள் நாட்டுச் சர்க்கரையை வாங்கித்தான் காப்பி போட்டு குடிக்க வேண்டிய நிலை உள்ளது.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 அக்டோபர் 24

இப்போது நாட்டுச் சர்க்கரை ஒரு கிலோ ரூ 3.20 என்று மார்க்கெட்டிலே விற்கிறது. ஏற்கெனவே இப்படி விலை அதிகமாக இருக்கக் கூடிய பொருளில் அதிகமாக வரி ஏற்றவேண்டிய அவசியம் என்ன? வரியை பூரா சர்க்கரை மீது போடலாம். அதை அதிகமாக யூஸ் பண்ண மாட்டார்கள். ரேர் ஐட்டமாக அதை யூஸ் பண்ணுவார்கள். நாட்டுச் சர்க்கரை ஏழை மக்களால் பயன்படுத்தப்படக் கூடிய ஒன்று. அதை 'sugar but not including jaggery and gur என்று கொண்டு வரும்போது, நாட்டுச் சர்க்கரை அதில் வந்துவிட வேண்டும். அதைப் பிரித்து எடுப்பது என்பதில் நியாயம் கிடையாது. எஸென்ஷியல் கூட்சுகளுக்கு முடிந்த வரை சேல்ஸ் டாக்ஸை எடுப்பது வரவேற்கத்தக்கது. அப்போதுதான் விலையைக் எடுப்பது வரவேற்கத்தக்கது. அப்போதுதான் விலையைக் குறைக்க முடியும். ஏற்கெனவே விலை அதிகத்தினால் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது, எங்களுடைய கைங்கரியத்தைச் செய்கிறோம் என்று பளுவை இந்த வரி மூலமாக இப்படி சாதாரண ஏழை மக்கள் உபயோகிக்கும் பொருள்கள் மீது போடுவது நியாயம்தானா என்று சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவரவர்களே, ஒரேயொரு பாயிண்ட்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரவர்கள் மோஷன் மூவ் பண்ணி விடட்டும்.



1975 அக்டோபர் 24] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, சட்டமாக நிறைவேற்றப் பட வேண்டும்".

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவரவர்களே, இப்படி சட்டமாக்குகிற நேரத்திலே பல முறை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லி வருகிறோம். இதில் ஒரு பினான்ஷியல் மெமோரேண்டம் கொடுத்து இம்மாதிரி மசோதாவைக் கொண்டு வருவதன் மூலமாக எவ்வளவு தொகையை எதிர்பார்க்கிறீர்கள், எவ்வளவு பணம் எதிர் பார்க்கிறீர்கள் என்று தோராயமாக அவைக்குச் சொன்னால் சௌகரியமாக இருக்குமென்று பல முறை சொல்லியிருக்கிறோம். அரசாங்கம் அப்போது மெமோரேண்டம் கொடுக்கிறோம் என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைச் சட்டமாக்குவதற்கு முன்பு தகவல் இருந்தால், அமைச்சரவர்கள் சொன்னால் சௌகரியமாக இருக்குமென்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, பல்வேறு பொருள்களுக்கு அவ்வப்போது நாம் வரி விதிப்பது என்ற நிலையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். மத்திய சர்க்கார் சட்டத்தை இயற்றிவிட்ட காரணத்தினால் நாமும் இப்படி ஒரு இணையான சட்டத்தை இயற்ற வேண்டுமென்ற நிலையில் அமைந்திருக்கிறது. சில பொருள்களுக்கு வரி போடவேண்டுமென்று சேர்க்கப்பட்டிருக்கிறதே தவிர அதிக அளவிலே வரி இல்லை. ஏனைய மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது சரியாகப் பார்த்துத்தான் போடப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப் பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல் வரி) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

" தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல் வரி) திருத்த சட்ட முன்வடிவை " அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஒ) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல் வரி) திருத்த சட்ட முன்வடிவு.

THE HON. THIRU O. P. RAMAN : Mr. Speaker, Sir, I beg to introduce "The Tamil Nadu Additional Sales Tax and Sales Tax (Surcharge) Amendment Bill, 1975 *" and move that the same be taken into consideration.

By an amendment to the Central Sales Tax Act, 1956 (Central Act 74 of 1956), the Government of India have increased the maximum rate of sales tax in respect of goods declared to be of special importance in inter-State trade or commerce from 3 per cent to 4 per cent with effect from the 1st July, 1975. This enabled the State Government to raise the rate of local-sales tax on declared goods in respect of inter-State sales up to the said maximum rate of 4 per cent from the 1st July, 1975. The Government decided that the rate of local sales tax on 'iron and steel' falling under item 4 of the Second Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959, be raised from 3 per cent to 4 per cent with effect from the 1st July, 1975 and that in respect of other declared goods no increase need be made for the present.

The Tamil Nadu Additional Sales Tax and Sales Tax (Surcharge) Amendment Ordinance, 1975 (Tamil Nadu Ordinance 5 of 1975) was accordingly promulgated to make suitable consequential amendments in the Tamil Nadu Additional Sales Tax Act, 1970 (Tamil Nadu Act 14 of 1970) and the Tamil Nadu Sales Tax (Sur-

* 21-10-1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.



charge) Act, 1971 (Tamil Nadu Act 24 of 1971). The present Bill before the House seeks to replace the said Ordinance by an Act of the Legislature.

Sub-section (2) of section 22 of the Tamil Nadu General Sales Tax Act, 1959 provides for imposition of penalty if any person or registered dealer collects any amount by way of tax or purporting to be by way of tax in contravention of the provisions of sub-section (1) of that section, whether or not any tax is due from such person or dealer under the Act in respect of the transaction in which he collects the amount. There is no similar provision in the Tamil Nadu Additional Sales Tax Act, 1970. It has, therefore, been decided to insert such a provision introducing a new section 3-A in the Tamil Nadu Additional Sales Tax Act, 1970.

Sir, I commend the motion, for the acceptance of the House.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, கனம் அமைச்சரவர்கள் சொன்னது மத்திய அரசாங்கத்தினுடைய இண்டர் ஸ்டேட் வரியை 3 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக இருக்கிறதனால் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறபோது அதிலே ஒரு வார்த்தை, அதாவது டிக்ளேர்ட் கூட்ஸ், Iron and Steel க்குப் போட்டிருக்கிறோம் என்றார்கள். மற்ற பொருள்கள் என்ன? மற்ற பொருள்களுக்குப் போடவில்லையென்றால் எல்லாவற்றிற்கும் 3 சதவீதமாகவே வைத்திருக்கலாமே. இவைகளுக்கு மட்டும் போடக் காரணம் என்ன? மற்ற பொருள்கள் என்ன என்ற விவரம் சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, பொதுவாக டிக்ளேர்ட் கூட்ஸ் என்பதற்கு உதாரணம் சொல்கிறேன்.

" Coal, Cotton, Cotton yarn, Iron and Steel, Jute, oil seeds raw hides and skins, dressed hides, and skins, bura sugar, sugar-candy and sugarcandy honey drained from raw sugar ..." இந்த மாதிரியாக இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, நான் கேட்டது இத்தனை டிக்ளேர்ட் கூட்ஸ் இருக்கும்போது Iron and Steel தவிர மற்றவைகளுக்கு ஏற்றவில்லை என்பது கொள்கையளவில் செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் அவைகளுக்கும் விற்பனை வரி அதிகரிக்கவேண்டுமென்றால் பின்னால் பார்ப்போம். இன்று இவைகளுக்கு ஏற்றினால் போதும் என்று ஏற்றியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல் வரி) திருத்த சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல் வரி) திருத்த சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன் வடிவை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்கிற கருத்தை அநேக உறுப்பினர்கள் தெரிவிக்கிறார்கள். ஆகவே, அது நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-51 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.



## (5) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

184. Notification issued in G.O. P. No. 925, Commercial Taxes and Religious Endowments, dated the 5th August 1975 in regard an amendment to rule 5 of the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

185. Notification issued in G.O. Ms. No. 169, Co-operation, dated the 10th April 1975 in regard to certain amendments to the Tamil Nadu Pawn Brokers Rules, 1944. [Laid on the table of the House under section 22(4) of the Tamil Nadu Pawn Brokers Act, 1943 (Tamil Nadu Act XXIII of 1943)].

186. Notification issued in G.O. Ms. No. 184, Prohibition and Excise, dated the 6th June 1975 in regard to certain amendments to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)].

187. Notification issued in G.O. Ms. No. 192, Agriculture, dated the 11th February 1975 in regard to declaration of notified market area for Usilampatti market in respect of paddy, cotton, groundnut and chillies. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

188. Notification issued in G.O. Ms. No. 382, Home, dated the 5th March 1975 in regard to concessional rate of tax payable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 in respect of certain vehicles belonging to Tuberculosis Prevention Trial Indian Council of Medical Research, Bangalore. [Laid on the table of the House under section 26(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

189. The Annual Financial Statement for the year 1975-76 and Supplementary Financial Statement for the year 1974-75 of the Tamil Nadu Electricity Board. [Laid on the table of the House under sub-section (1) of Section 61 of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948)].

B. *Reports, Notifications and other Papers.*

67. Notification issued in G.O. Ms. No. 136, Commercial Taxes and Religious Endowments, dated the 11th February 1975 in regard to reduction of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of purchase of property by the Pachaiyappa's Trust Board, Madras.

@ 68. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which have necessitated the promulgation of the Tamil Nadu Indebted Persons (Temporary Relief) Ordinance, 1975 (Tamil Nadu Ordinance 8 of 1975) and the Tamil Nadu Indebted Persons (Temporary Relief) Amendment Ordinance, 1975 (Tamil Nadu Ordinance 9 of 1975).

@ 69. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which necessitated the Promulgation of the Tamil Nadu Contingency Fund (Amendment) Ordinance, 1975 (Tamil Nadu Ordinance 13 of 1975).

@ 70. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which have necessitated the promulgation of the Tamil Nadu Relief undertakings (Special Provisions) Amendment Ordinance, 1975 (Tamil Nadu Ordinance No. 12 of 1975).

@ 71. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which necessitated the promulgation of the Tamil Nadu Homeopathy System of medicine and Practitioners of Homeopathy (Amendment) Ordinance, 1975 (Tamil Nadu Ordinance No. 16 of 1975).

+ 72. The Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1975 with annexure.

+ 73. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which necessitated the promulgation of the Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Ordinance, 1975 (Tamil Nadu Ordinance 15 of 1975).

+ 74. The Tamil Nadu Educational Institutions (Temporary Control of Property) Amendment and Validation Bill, 1975 with Annexure.



+ 75. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which necessitated the promulgation of the Tamil Nadu Educational Institutions (Temporary Control of Property) Amendment and Validation Ordinance, 1975 (Tamil Nadu Ordinance 14 of 1975).

+ 76. The Tamil Nadu Additional Sales Tax and Sales Tax (Surcharge) Amendment Bill, 1975 with Annexure.

+ 77. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which had necessitated immediate promulgation of the Tamil Nadu Additional Sales Tax and Sales Tax (Surcharge) Amendment Ordinance 1975 (Tamil Nadu Ordinance No. 5 of 1975).

+ 78. The Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1975 with Annexure.

+ 79. The Indian Stamp (Tamil Nadu Second Amendment) Bill, 1975 with Annexure.

+ 80. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which necessitated the promulgation of the Indian Stamp (Tamil Nadu Second Amendment) Ordinance, 1975 (Tamil Nadu Ordinance 11 of 1975).

+ 81. The Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1975 with Annexure.

+ 82. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which had necessitated the promulgation of the Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Ordinance, 1975 (Tamil Nadu Ordinance 6 of 1975).

---

@ Despatched to Members on 22-10-1975.

+ Despatched to Members on 23-10-1975.

## இணைப்பு

[256-ம் பக்கத்தில் வெள்ளிக்குறியிடப்பட்ட 41 வினாவிற்குரிய விடையைக் காண்க.]

The Ranger students are deputed to Southern Forest Rangers College, Coimbatore, every year for undergoing training in Ranger's Course. The duration of the training at the Forest College is two years commencing from 1st November. The Forest College is run by the Government of India for the benefit of the students deputed by the State Governments. The expenditure towards tuition fees and other charges such as lodging, light, water and medical attention is borne by the State Governments in respect of their candidates. The Forest College provides the candidates all the essential facilities such as lodging, mess, etc. The students are required to stay in the hostel attached to the Forest College. The College Mess caters for both vegetarians and non-vegetarians. Library and museum facilities are provided to the students. The Forest College conducts tours to selected Forests of India in order to enable the students to study the practical aspects of Forestry.



## இணைப்பு

ஒவ்வோர் ஆண்டும், சரக அலுவலர் மாணவர்கள், சரக அலுவலர் பயிற்சி பெறுவதற்காக கோயம்புத்தூர் (தென்) வனச் சரக அலுவலர் பயிற்சி கல்லூரிக்கு அனுப்பப்படுகின்றனர். இக் கல்லூரியில் பயிற்சிக் காலம் நவம்பர் 1 ஆம் நாள் தொடங்கி இரண்டு ஆண்டுகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. மாநில அரசு முகமையில் அனுப்பும் மாணவர்களின் பயனுக்கென, இந்திய அரசு, இக்கல்லூரியை நடத்துகிறது. மாநில அரசுகள் தாங்கள் அனுப்பும் மாணவர்கள் தொடர்பாக கல்விக் கட்டணங்கள், உறையுள், விளக்கு, தண்ணீர், மருத்துவம் ஆகிய வசதிகளுக்காகும் செலவுகளை ஏற்றுக்கொள்கின்றன. இக்கல்லூரி, உறையுள், உணவு முதலிய இன்றியமையா வசதிகள் அனைத்தையும் செய்து கொடுக்கிறது. மாணவர்கள் கல்லூரியைச் சேர்ந்த விடுதியில் தங்க வேண்டும். இவ்வுணவு விடுதி சைவ, அசைவ உணவு கொள்பவர்களின் தேவையைக் கவனித்துக்கொள்கிறது. மாணவர்களுக்காக நூலகம், அரும்பொருட்காட்சி சாலை ஆகிய வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள், வனவியல் பற்றிய செயல் முறைக்கூறுகள் பற்றி அறிந்து கொள்வதற்காக இந்தியாவில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட காடுகளுக்குச் சென்று பார்வையிட சுற்றுலாவுக்கும் இக்கல்லூரி ஏற்பாடு செய்கிறது.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

### சனிக்கிழமை, 1976 அக்டோபர், 25.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### விளையாட்டு அரங்குகள்.

* 46 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் புதிய விளையாட்டு அரங்கம் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆம்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் விளையாட்டு அரங்கம் எந்தப் பகுதியில் அமைக்கப்படவிருக்கிறது என்பதையும், இவ்வாண்டு மகளிர் ஆண்டு ஆகையால் மகளிர்க்கான விளையாட்டு அரங்கம் ஒன்றினை அமைப்பதற்கு அரசு உத்தேசிக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் மாவட்ட விளையாட்டுக் குழுவின் சார்பாக இப்படிப்பட்ட விளையாட்டு அரங்கம் அமைக்கப்படுகிறது. அந்த முறையில் தஞ்சை மாவட்டத்திலும் தஞ்சை மாநகரில், இந்த விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மாவட்ட விளையாட்டுக் குழுவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்தான் தலைவராக இருந்து

வருகிறார். அங்கே இடம் பெறுவதிலே கால தாமதம் ஏற்படுவதால் இதிலே காலத் தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. இடத்தைப் பெற்றவுடனே விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். விளையாட்டு அரங்கம் என்பது ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் தனித் தனியாக அமைக்காமல், விளையாட்டு அரங்கத்தில் ஆண்களும் விளையாடலாம்; பெண்களும் விளையாடலாம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் கட்டப்படுகிற விளையாட்டு அரங்கத்திற்குத் தேவையான நிதி வசதியை அரசாங்கம் திரட்டுகிறதா? அல்லது, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரட்டுகிறாரா? இதற்கு அரசாங்கம் எவ்வளவு ரூபாய் ஒதுக்குகிறது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் கட்டப்படுகிற விளையாட்டு அரங்கிற்கு மாநில அரசின் சார்பாக ஒரு இலட்சம் ரூபாய் மானியமாகத் தருகிறோம்; மத்திய அரசு ரூ. 50,000 மானியமாகத் தருகிறது. விளையாட்டு அரங்கம் எந்த அளவில் கட்டப்படவேண்டும் என்று அந்தந்த மாவட்ட விளையாட்டுக் குழுவினர் கருதுகிறார்களோ அந்த அளவுக்குத் திட்டம் போட்டுக் கட்டுகிறார்கள். சில இடங்களில் 10 இலட்ச ரூபாய் செலவிலும், சில இடங்களில் 15 இலட்ச ரூபாய் செலவிலும், சில இடங்களில் 12 இலட்ச ரூபாய் செலவிலும் கட்டி முடிக்கிறார்கள். ஆங்காங்கே இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களும் சில இடங்களில் உதவி செய்கின்றன. நகராட்சி மன்றங்களும் உதவி செய்கின்றன. அதைத் தவிர, வளர்ச்சி நிதியிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் உதவி செய்கிறார். இப்படி மாவட்ட விளையாட்டுக் குழுவினர் மொத்த மதிப்பிட்டு நிறைவேற்றுகிறார்கள். ஒவ்வொரு விளையாட்டு அரங்கிற்கும் மாநில அரசு சார்பாக ஒரு இலட்ச ரூபாயும், மத்திய அரசு சார்பாக ஐம்பதாயிரம் ரூபாயும் அளிக்கப்படுகிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** மாவட்ட வாரியாக இம்மாதிரி விளையாட்டு அரங்கம் கட்டும் முயற்சியை நான் மெத்தப் பாராட்டுகிறேன். கோவை நகரில் கட்டப்பட்ட விளையாட்டு





அரங்கம் இப்பொழுது இடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி இடிப்பதற்கு என்ன காரணம்? அதைத் தடுப்பதற்கு அரசு முயலுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, முழுக் குறிப்பு என்னிடம் இல்லை. ஸ்டேடியம் தனியாக அமைந்துவிட்டதன் காரணமாக, பொதுக் கூட்டங்கள் நடைபெறுவதற்கேற்ற வகையிலும் மற்றும் பொதுமக்கள் கூடுவதற்கேற்ற வகையிலும், ஒரு பக்கத்திலே கட்டுவதென்று கோவை நகராட்சி மன்றம் முடிவு எடுத்திருக்கிறது. இப்பொழுதிருக்கும் அரங்கம் நடுவில் இருப்பதால்—பின்னாலும் முன்னாலும் இடம் இருக்கும் தன்மையில்—ஒரு பக்கத்தில் கட்டி, முழு மைதானத்தையும் பயன்படுத்தும் நோக்கத்தை வைத்து, தனியாகக் கட்ட இருக்கிறார்கள்.

**திரு. கே. ரங்கநாதன்:** கோவை சிதம்பரம் பூங்காவில் இருக்கும் விளையாட்டு அரங்கம் மிகவும் குறையுடையதாகவும், அதே நேரத்தில் பெரிய கூட்டங்கள் நடத்துவதற்குச் சிரமமாக இருக்கிறது என்பதையும் கருதி, கோவை நகராட்சி மன்றமே அனைத்துக் கட்சி நகர மன்ற உறுப்பினர்களை அழைத்து, தீர்மானம் நிறைவேற்றியதன் விளைவாகச் செயல்பட்டு வருகிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதையும் நான் குறிப்பிட்டேன். ஏற்கெனவே இந்த ஸ்டேடியம் பொதுக் கூட்டத்திற்கும் விளையாட்டிற்கும் பயன்பட்டு வந்தது. அங்கே பெரும் செலவில் விளையாட்டு அரங்கம் தனியாகக் கட்டி முடிக்கப்படவேண்டும் என்றும், பொதுக் கூட்டம் கூடும் நிலையில் ஸ்டேடியம் அமையவேண்டும் என்றும் நகராட்சி மன்றமே முடிவு எடுத்துத் தனியாகக் கட்ட இருக்கிறார்கள். பொதுக்கூட்டம் கூடுவதற்கேற்ற வகையில் ஸ்டேடியத்தை மாற்றியமைக்க இருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்தப் புதிய மாறுதல் செய்வது ஸ்பெஷல் ஆபீசர் வந்தவுடன் செய்யக்கூடிய முதல் காரியமாக இருக்கிறதென்று சொல்லப்படுகிறதே அது உண்மையா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றி முழு விவரம் இல்லை.

**திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, கோவையிலுள்ள இந்த ஸ்டேடியம் நெடுங்காலமாக காந்தி-இர்வின் ஸ்டேடியம் என்ற பெயரில் நினைவுச் சின்னமாக இருந்து வருகிறது. அதை இடிப்பது குறித்துப் பொதுமக்களிடையே ஓரளவு எதிர்ப்பு இருந்துவருகிறதென்பது சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதுபற்றி முழு விவரக்குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் முழுவதும் கூறலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வி தஞ்சாவூரைப் பற்றியது. துணைக் கேள்வி கோவையைப்பற்றி வந்துவிட்டது. தஞ்சையைப்பற்றி மட்டும் துணைக் கேள்வி இருக்க வேண்டும்.

**திரு. என். கிட்டப்பா:** தஞ்சாவூரில் அமைக்கப்பட இருக்கும் விளையாட்டு அரங்கத்திற்கான மொத்த மதிப்பீடு எவ்வளவு என்பதையும் மத்திய அரசு இதற்கு ஏதேனும் நிதி உதவி வழங்குகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, முதலிலேயே குறிப்பிட்டேன். மாநில அரசு ஒரு இலட்ச ரூபாய் தருகிறது. மத்திய அரசு ஐம்பதாயிரம் ரூபாய் தருகிறது. அதற்குமேல் செலவழிப்பதை மாவட்ட விளையாட்டுக் குழு ஏற்றுக்கொள்ளும். அதனுடைய திட்டவட்டமான மதிப்பீடு எவ்வளவு என்று தெரியவில்லை. ஆனால், மாவட்ட விளையாட்டுக் குழுதான் மேற்கொள்ள வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் குழுவின் தலைவராக இருக்கிறார். குறிப்பிட்ட இடத்தைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். அங்கு 300 குடிசைகள் இருக்கின்றன. அந்தக் குடிசைகளை வேறு இடத்திற்கு அப்புறப்படுத்தி வசதி செய்துகொடுத்த பிறகு அந்த இடத்தைப் பெற வேண்டியிருக்கிறது. அந்த முயற்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஈடுபட்டிருக்கிறார்.



**திரு. கு. காமாட்சி:** இப்படிப் பல இலட்ச ரூபாய் செலவு செய்து மாவட்டந்தோறும் விளையாட்டு அரங்கம் அமைக்கப்படுகிறது. ஆனால், போதிய வருவாய் அதிலிருந்து கிடைக்காததன் காரணமாக மெயின்டெனன்ஸ் சரியாகப் பார்க்க முடியாமல் இருக்கிறது. அதற்கு வருவாயினைப் பெருக்குவதற்கு வழிவகை ஏதேனும் அரசு செய்திருக்கிறதா? டோர்னமென்ட்களை தனிப்பட்ட இடங்களில் தனியாக நடத்துவதால் இந்த விளையாட்டு அரங்கத்திற்குரிய வருவாய் வராமல் போய்விடுகிறது. ஆகவே, எந்த டோர்னமென்டாக இருந்தாலும் அந்தந்த மாவட்ட விளையாட்டு அரங்கில்தான் நடக்கவேண்டும் என்று அரசு ஆணையிடுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்சொழியன்:** தலைவர் அவர்களே, மாநில விளையாட்டுக் குழு மாவட்ட விளையாட்டுக் குழுவிற்கு ஓரளவு மானியம் அளித்து வருகிறது என்றாலும், அது போதுமான அளவுக்கு அமையவில்லை என்பதால், நிதி வசதியை எப்படிப் பெருக்கலாம் என்பதை மாநில விளையாட்டுக் குழு ஆராய்ந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று செலவினங்களை ஈடுகட்டும் அளவுக்கு நிதி ஆதாரங்களை எப்படிப் பெருக்கலாம் என்று மாநில விளையாட்டுக் குழு ஆராய்ந்து வருகிறது.

**திரு. டி. வி. சம்பத்:** தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் மாவட்ட விளையாட்டு அரங்கம் கட்டுவதுபற்றிச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் கிழக்குத் தஞ்சை, மேற்குத் தஞ்சை என்று இரண்டாகச் செயல்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. காவல்துறையிலும், கீழ்த் தஞ்சைக் கண்காணிப்பாளர், மேற்குத் தஞ்சைக் கண்காணிப்பாளர் என்று இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த அடிப்படையில் கீழ்த் தஞ்சையிலும் ஒரு விளையாட்டு அரங்கம் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, விளையாட்டுக் குழுவைப் பொறுத்தவரையில் தஞ்சை மாவட்டம் முழுவதும், வருவாய் மாவட்ட அடிப்படையில் ஒரே மாவட்டமாகக் கருதி விளையாட்டுக் குழு செயல்படுகிறது.

முதலில் ஒரு விளையாட்டு அரங்கிற்கே இன்னும் சரியான சூழ்நிலை ஏற்படாத நிலையில் இரண்டாவது பற்றி இப்பொழுது எண்ணுவதற்கில்லை. இப்பொழுது தஞ்சை நகரில் ஒரு விளையாட்டு அரங்கம் கட்ட ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

**திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, கோவையில் ஸ்டேடியம் இடிக்கப்படுகிறது என்றால், அந்த இடத்தில் மாநாடு நடத்துவதற்கு இடம் போதவில்லை. . ;

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே கோயம்புத்தூர் பற்றிப்பேசி முடித்தாகிவிட்டது. அடுத்து வினா 47.

*47. *Q.*—Thiru K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(*a*) whether the Collector of Dharmapuri has recommended the construction of a Stadium at Hosur Town in Dharmapuri district; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

Thiru K. S. KOTHANDARAMIAH: Sir, some years back it was decided in the District Development Council, Dharmapuri, to construct buildings of public interest in all the Taluk Headquarters of Dharmapuri District. According to the Collector, it was decided to put up two Mani Mantapams, one at Krishnagiri and another at Dharmapuri. Considering the congenial climatic conditions at Hosur to conduct games and sports, it was decided to put up a stadium there. The two Mani Mantapams have already been constructed. When I asked the Collector, he said that the construction of stadium was under the consideration of the Government. May I know from the Hon. Minister for Education and Tourism whether any steps would be taken to put up a stadium at Hosur?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தின் சார்பாக அங்குள்ள மாவட்ட விளையாட்டுக் குழு முடிவு எடுத்துப் பரிந்துரை செய்தால் அதுபற்றி அரசு கவனிக்கும். மாவட்ட விளையாட்டுக் குழுவிற்கு ஆட்சித் தலைவர் தலைவராக இருக்கிறார். விளையாட்டு அரங்கை தருமபுரியில் வைப்பதா, கிருஷ்ணகிரியில் வைப்பதா, ஹோசூரில் வைப்பதா என்பதை ஆராய்ந்து, ஒருமித்த முடிவாக அனுப்பி வைத்தால் அரசு அதற்கு உதவி செய்யமுடியும். இப்பொழுது திருச்சி, வடார்க்காடு, நீலகிரி, மதுரை, கன்னியாகுமரி, செங்கற்பட்டு தென்னார்காடு, சேலம், கோவை ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் விளையாட்டு அரங்கங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. தருமபுரியில் ஒன்று கட்ட வேண்டும். செயற்குறிப்பு வருமானால் அரசு தரவேண்டிய உதவியைத் தர ஆயத்தமாக இருக்கும்.

### சுற்றுலா இடங்களுக்குப் பேருந்துப்பணி

### *Bus service to tourist centres*

*48. *Q.*—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Government to operate Mini Bus Service to visit tourist centres in the State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** இப்பொழுது டூரிஸம் டிபார்ட்மெண்டிலிருந்து பெரிய பஸ்களைச் சில இடங்களுக்கு விடுகிறார்கள். அதில் போதுமான பிரயாணிகள் சேருவதில்லை. ஆகவே, சிறிய பஸ்களாக அவை இருந்தால் இன்னும் பல இடங்களுக்கு அனுப்பவும் சர்க்காருடைய வருமானத்தைப் பெருக்கவும் வசதி பெரிய பஸ்களுக்குப் பதிலாக மினி பஸ்களை அதிகமான இடங்களுக்கு விடுவார்களா? டெல்லியிலே, டெல்லியைச் சுற்றிப்

[1975 அக்டோபர் 25

பார்க்க பஸ்களை விடுகிறார்கள். அதுபோல், சென்னை, மதுரை போன்ற முக்கியமான இடங்களிலே இந்த மினி பஸ்களை விட சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று சிறிய பேருந்துகளை விடுகின்ற செயற்குறிப்பு இப்பொழுது இல்லை. ஆனால், குறிப்பிட்ட இடங்களில் சிறிய பேருந்துகளை விடலாம் என்கின்ற கருத்து ஆராயப்பட்டு வருகிறது. இப்பொழுது மூன்று வகைகளிலே நாம் சீர் வசதி வண்டிகளை, அதாவது டீலக்ஸ் வண்டிகளை விட்டுக்கொண்டிருக்கிறோம். அதில், ஒரு சுற்றுலா சீர் வசதி வண்டி, ரூ. 22 கட்டணத்தில், காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் ஆகிய இடங்களுக்கு சென்று சென்னை வந்து சேருகிறது.

இன்னொரு சுற்றுலா சீர் வசதி வண்டி திருவண்ணாமலை, ஏர்க்காடு, மேட்டூர் அணை, உதகமண்டலம், முதுமலை, பிருந்தாவனத் தோட்டம், மைசூர், ஸ்ரீரங்கப்பட்டணம், பெங்களூர், ஹொகேனக்கல், திருத்தணி, காஞ்சீபுரம் ஆகிய இடங்களை 7 நாட்களில் ரூ. 250 கட்டணத்தில் சுற்றிப்பார்க்க அழைத்துச் செல்கிறது—மாதத்திற்கு ஒருமுறை.

அதுபோன்று மூன்றாவது சீர் வசதி வண்டி, புதுச்சேரி, சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, இராமேசுவரம், மதுரை, திருச்செந்தூர், கன்னியாகுமரி, குற்றாலம், கொடைக்கானல், பழனி, வேடந்தாங்கல் ஆகிய இடங்களைச் சுற்றிக் கொண்டு வருகிறது. இதற்குக் கட்டணம் ரூபாய் 250, பயண நாட்கள் 8.

இந்த மூன்று வகைகளிலே மூன்று பயணங்கள் இப்பொழுது சீர் வசதிபெற்ற வண்டிகள் மூலம் நடைபெறுகின்றன. அந்த பஸ்களின் எண்ணிக்கையை அதிகமாக்கலாமா என்று சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ரூபாய் 250-ல் படுக்கை வசதி, மற்ற வசதிகளையெல்லாம் அளித்து, ஏற்பாடு செய்திருக்கிறோம், 7, 8 நாட்களிலே பல்வேறு இடங்களைப் பார்க்க, அது நல்லமுறையிலே நடைபெற்று வருகிறது. இதனை நாளுக்கு நாள் பெருக்கலாம் என்ற எண்ணம் இருந்து வருகிறது.



1975 அக்டோபர் 25]

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவரவர்களே, இந்திய நாட்டிற்கு சுற்றுலாத் துறையின் மூலமாக ஆண்டுதோறும் ஏறத்தாழ ரூ. 300 கோடிக்கு மேற்பட்ட வருவாய் வருகிறது. ஆனால் நமது தமிழ் நாட்டு இந்தத் துறைக்காக, ஏறத்தாழ ரூ. 40 கோடி கூட அவர்கள் செலவிடுவதில்லை. இதை மத்திய அரசிடம் எடுத்துக் காட்டி வற்புறுத்தி, இதுபோன்ற மினி பஸ்களையோ அல்லது விமானங்களையோ விடுவதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஆண்டுதோறும் இந்தியா முழுவதும் சுற்றுலாப் பயணிகளின்மூலம் கிடைக்கிற அன்னியச் செலாவணி தொகை ரூ. 78 கோடிதான். இருந்தாலும் அதனை மேலும் பெருக்குகின்ற முயற்சியினை மத்திய அரசாங்கமும் மாநிலச் சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களும் மேற்கொண்டிருக்கின்றன. இந்த டீலக்ஸ் பஸ்கள் விடுவதை அதிகப்படுத்தவும், மற்றப் பகுதிகளுக்கும் மேலும் விரிவாக்கவும், மாதம் ஒருமுறை என்பதை இருமுறையாக்கலாம் என்றும் எண்ணிக் கொண்டிருக்கிறோம். அது தவிர, விமானப் போக்குவரத்தை மேற்கொள்ளலாமா என்று கேட்டதற்கு, விடலாமென்று மத்திய அரசு அனுமதித்திருக்கிறது. Indian Airlines Air India. விமானங்கள் போகாத இடங்களுக்கு, போகாத ரூட்களில், இந்தச் சுற்றுலாத் துறையினர் நடத்தப்போகின்ற விமானப் போக்குவரத்துக்கு இடம் ஏற்படுமானால் அதை வைத்துக் கொள்ளலாம் என்று மத்திய சுற்றுலாத் துறையினரும் அனுமதி தந்திருக்கிறார்கள். தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினர் விமானப் போக்குவரத்தை மேற்கொள்கின்ற முயற்சியில் ஈடுபட்டால், தற்பொழுது விமானப் போக்குவரத்து இல்லாத தஞ்சாவூர், உளுந்தூர்பேட்டை, கயத்தாறு, சேலம், வேலூர் ஆகிய பகுதிகளுக்கு ½ மணி நேரம், 20 நிமிடம், 1 மணி நேரம் என்ற விதத்தில் போய்ச் சேர வாய்ப்பிருக்கும். ஆனால், இங்கிருந்து திருச்சிக்குப் போகமுடியாது, மதுரைக்குப் போகமுடியாது. இங்கிருந்து உளுந்தூர்ப் பேட்டைக்குப் போகலாம், தஞ்சாவூருக்குப் போகலாம். தஞ்சாவூரிலிருந்து திருச்சிக்குப் போகலாம்; திருச்சியிலிருந்து கயத்தாறுக்குப் போகலாம். அப்படிப்பட்ட திட்டம் ஆராயப்பட்டு வருகிறது. அதுபற்றி முடிவு விரைவிலே ஏற்படும்.

[1975 அக்டோபர் 25

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சில ஊர்களைச் சுற்றிப் பார்ப்பதற்காக இப்பொழுது பஸ்கள் இருக்கின்றன.. முக்கியமான நகரங்களுக்குக் குறிப்பாக, மதுரை இராமேஸ்வரம், தனுஷ்கோடி போன்ற சில இடங்களுக்காவது மினி பஸ்களை விட அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினர் அதைப்பற்றி ஆராய்ந்து வருகிறார்கள். குறுகிய தூரத்திற்கு. கொடைக்கானல், இராமேஸ்வரம் போன்ற இடங்களுக்குச் சென்று வருவதற்கு மினி பஸ்கள் விடலாமா என்று ஆலோசித்துக்கொண்டு வருகிறார்கள். அதுபற்றி விரைவில் முடிவெடுக்கப்படும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அறிவித்த இந்த டீலக்ஸ் பஸ்களிலோ, விமானத்திலோ, பணத்தை அதிகமாக வைத்துக் கொண்டு செலவு செய்வதற்கு வழி தெரியாதவர்கள்தான் செல்ல முடியும். ஆனால், சாதாரண மக்கள் சுற்றுலா இடங்களைப் பார்க்க ரூ. 250 கொடுத்துப் போவது என்பது முடியாது. இரயில்வேயிலே ஏற்பாடு செய்கிறார்கள் — ஆண்டுதோறும் சில சீசன்களிலே கன்சஷன் டிக்கட்டுகள் — ½ கட்டணத்திதில் பயணிகளை ஏற்றிச் செல்கிறார்கள். அதுபோல், சலுகைக் கட்டணத்திலே இம்மாதிரிப் பஸ்களை விட, முக்கியமான சுற்றுலா இடங்களுக்கு விட அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதனைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினர் மேற்கொள்ள வேண்டியதில்லை. சாதாரணமாக, எல்லா ஊர்களிலும் அம்மாதிரி முயற்சி இருக்கிறது. தொழிலாளர்கள், மாணவர்கள், தனிப்பட்டவர்கள், தனி பஸ்களை எடுத்துக்கொண்டு மாநிலம் முழுவதும் சுற்றி வருகிறார்கள். அவர்கள் தங்குவதற்கான வசதிகளை ஆங்காங்கு செய்து வருகிறோம். சென்னையிலும், மதுரையிலும், திருச்சியிலும் நூற்றுக்கணக்கான திருமண மண்டபங்களிருக்கின்றன. அதன் உரிமையாளர்கள் அனைவரையும் அழைத்து, திருமணங்கள் நடைபெறாத காலத்தில், 2 பஸ், 3 பஸ் பயணிகள் வந்தால், குறிப்பிட்ட அளவுக்கு ரூ. 75, ரூ. 100 என்று கட்டணம் வசூலித்து, 75 பேர், 100 பேர் தங்க வசதி அளிக்கின்ற வகையில் ஏற்பாடு செய்திருக்கிறோம். இப்பொழுது பெரும்பாலும் வெளி மாநிலங்களிலிருந்தும் வெளி மாவட்டங்களிலிருந்தும் வருபவர்கள், சென்னை கடற்கரையோரத்தில் பஸ்களை நிறுத்திவிட்டு, கடற்கரையிலேயே காலைக் கடன்களைக் கழிக்கின்ற அளவுக்கு நிலைமைகளிருக்கின்றன. கிட்டத்தட்ட 100 பேர் வந்தாலும் ரூ. 75, ரூ. 100 கட்டணத்தில், குளிக்கிற வசதி சாப்பாடு வசதி ஆகியவற்றை ஏற்பாடு செய்யலாம். அது மாதிரி வசதிகளை சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினர் செய்து கொடுக்கலாம். ஆனால், பஸ்களை விடுவது என்பது சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினரால் இயலாது.



ரூ. 250-ல், தங்குகின்ற இட வசதி உட்பட, 9 நாட்களில் பல்வேறு இடங்களைப் பார்க்கலாம் என்று இருக்கின்றபோது, ஓரளவுக்கு நடுத்தர மக்கள் போவதற்கு வாய்ப்பிருக்கும். அங்கங்கு தங்குவதற்கான வசதிகளைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினர் விடுதிகளிலே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதல்லாமல் தனிப்பட்ட விடுதிகளிலும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, உதகையில் ஒரு 'ஏர் ஸ்டிரிப்' அமைக்க இங்கிலாந்திலிருந்து நிபுணர்கள் வந்து பார்த்திருக்கிறார்கள். அந்த விமான தளம் விரைவிலே அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

**திரு. என். கே. பழனிசாமி :** டூரிஸம் டிபார்ட்மென்ட், டூரிஸ்ட்கள் சௌகரியத்திற்காக, ஏரோப்ளேன் வாங்கிவிட அனுமதி கொடுத்துவிட்டதாகச் சொன்னார்கள். டூரிஸ்ட்களுக்கு மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கும், அவசரமாகப் பல இடங்களுக்குப் போகிறவர்களுக்கும், பிஸினஸ் பீப்பிளுக்கும் இது ரொம்ப உதவிகரமாக இருக்கும். ஆகவே, சர்க்காரே ஏரோப்ளேன் வாங்கி, டிரான்ஸ்போர்ட் நடத்த ஏற்பாடு செய்வார்களா ? அல்லது தனிப்பட்ட கம்பெனியா ?

[1975 அக்டோபர் 25

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினர் தமிழகத்திற்குள்ளேயே விமானப் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்தால், அதில் சுற்றுலாப் பயணிகள் மட்டும்தான் போக வேண்டுமென்ற அவசியமில்லை. அந்தந்த இடத்திற்குப் போகின்றவர்கள் அனைவருமே பயன்படுத்திக் கொள்ளலாம். அந்த அளவுக்குத்தான் முயற்சிகள் வரும். சுற்றுலா வளர்ச்சித் துறையினரே அந்த ஏற்பாடுகளைச் செய்யலாம்.

**திரு. த. சோனையா :** தலைவரவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திலிருந்து செல்கின்ற பஸ், சென்னை, திருச்சி, இராமேஸ்வரம் போன்ற இடங்களைச் சுற்றி வருகிறது. மதுரைக்கு அருகாமையிலே அழகர்கோயில் என்ற ஒரு கோயிலிருக்கிறது. அந்தக் கோயிலிருக்கிற மலையுச்சியிலே சிறிய நீர் வீழ்ச்சி ஒன்று இருக்கிறது. தமிழ் நாட்டில் 100 வருஷ காலமாக இல்லாத வறட்சி ஏற்பட்டும், அந்த நீர் வீழ்ச்சியில் நீர் வற்றவில்லையாதலால், அதனைப் பார்க்க தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கு செல்கிறார்கள். ஆகவே, சுற்றுலா வாரிய பஸ்கள் அங்கே சென்று வந்தால்—மலையிலே தார்ச் சாலை போட்டிருக்கிறார்கள்—பஸ் செல்ல நல்ல வசதி இருக்கிறது—மக்களுக்கு வசதியாக இருக்கும் — அங்கே அந்த பஸ்கள் செல்ல அரசு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற சுற்றுலாப் பயணிகள் கண்டு களிப்பதற்கென்று ஏராளமான இடங்கள் தமிழகம் முழுவதும் இருக்கின்றன. எல்லா இடங்களையும் ஒருவர் பார்த்து விட்டுத் திரும்புவது என்றால் 6 மாதமாகும். ஆனால், 7 நாட்களில், 8 நாட்களில் பார்க்க வேண்டுமென்ற நிலைமை வரும்போது, குறிப்பிட்ட முக்கியமான இடங்களைத் தான் காணமுடியும். அதிகமான நாட்கள் செல்கின்ற சூழ்நிலை ஏற்பட்டால், எல்லாவற்றையும் பார்க்கலாம். கொடைக்கானல், உதகை போன்ற முக்கியமான இடங்கள் இப்பொழுது பயணத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மதுரையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. உள்ளே இருக்கிற இடங்களுக்கும் சென்று வர வேண்டுமென்றால், அதிக நாட்களாகும். வெளி நாடுகளிலிருந்தோ, வெளி மாநிலங்களிலிருந்தோ வருகிறவர்களுக்குப் போதுமான நாட்கள் கிடைக்காது.



1975 அக்டோபர் 25]

**திரு. எம். சுரேந்திரன் :** சார், சுற்றுலாப் பயணிகள் மலைகளுக்குச் செல்வதற்கு இந்த மினி பஸ்களைப் பயன்படுத்துவது நல்லதாக இருக்குமே. கொடைக்கானல், ஏற்காடு, ஊட்டி போன்ற மலை இடங்களுக்கு பெரிய பஸ்களிலே செல்வதைவிட மினி பஸ்களில் செல்வது சௌகரியமாக இருக்குமே. எனவே, மலைகளுக்குச் செல்வதற்கு இந்த மினி பஸ்கள் விடப்படுமா ? அதைப் போல இப்பொழுது செல்லும் இந்த சுற்றுலா பஸ்களிலும், வரப் போகும் விமானத்திலேயும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மற்றப் போக்குவரத்திலே இருப்பதுபோல 'ஃப்ரீ' யாகப் போக இடம் அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு போன்ற இடங்களில் இப்படிப்பட்ட மினி பஸ்களை விடலாமா என்பதுபற்றி சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆராய்கிறது. அப்படி விடுவது கட்டுப்படியாகுமானால் விடலாம் என்ற முடிவிற்கு வந்து ஆராயச் சொல்லியிருக்கிறோம். அப்படி விட்டாலும் குறிப்பிட்ட இரண்டு மூன்று திங்கள்களில்தான் அது சிறப்பாக நடைபெறும். பிறகு ஒன்பது மாதங்களுக்கு அதை எப்படிப் பயன்படுத்துவது என்ற பிரச்சினை எழும். ஒரு பஸ் வாங்கினால் ஆண்டு முழுவதும் ஓட்டி குறிப்பிட்ட அளவிற்கு நஷ்டம் வராவிட்டால் அந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம். அந்த வகையில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினர் அதை ஆராய்கிறார்கள்.

விமானப் போக்குவரத்து வந்த பிறகு யோசிக்க வேண்டிய ஒன்று அவர்கள் கூறிய மற்றொரு கருத்து. குழந்தை பிறக்கட்டும், பிறகு பெயர் வைத்துக் கொள்ளலாம். அந்த வகையிலே வந்தாலும்கூட, இப்பொழுதே சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடைபெறும் பஸ்களில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குச் சலுகை கிடையாது. அரசாங்கம் நடத்தும் பஸ்களில்தான் சலுகை உண்டு. அப்படி சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக நடைபெறும் எல்லா இடங்களுக்கும் விடுதி உட்பட, யாராக இருந்தாலும், அமைச்சர்களானாலும் அவர்கள் கட்டணம் செலுத்த வேண்டுமென்ற முறைதான் இருக்கிறது. அந்த முறை தான் வேறு பல மாநிலங்களிலும் கடைப்பிடிக்கப்படுகிறது. இப்பொழுது இமாசலப் பிரதேசத்தில் காஷ்மீரில் சுற்றுலா

வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக நடத்தப்படும் எதற்கும் அமைச்சர்களானாலும் கட்டணம் செலுத்தவேண்டுமென்ற முறை தான் இருந்து வருகிறது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)** : சார், சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நிர்வகிக்கப்படும் விடுதிகளில் அரசாங்க விடுதிகளில் வசூலிக்கும் வாடகையை விட மிகவும் அதிகமான வாடகை இருக்கிறது. அதோடு மட்டும் அல்ல, சுற்றுலாப் பயணம் செய்பவர்கள் வழியிலேயிருக்கும் அந்த விடுதிகளிலே ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் தங்கினாலும் கூட முழுநேர வாடகை வசூலிக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ? அதை அரை நாள் கட்டணம், கால்பகுதி கட்டணம் என்ற முறையில் ஆக்கினால் சுற்றுலாப் பயணிகளுக்கு சௌகரியமாக இருக்குமே? அதைப்பற்றி அரசாங்கம் ஆராயுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, மற்றைய ஹோட்டல்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சுற்றுலாப் பயணிகளுக்கு அரசாங்க சுற்றுலா வாரியத்தினால் நடத்தப்படும் விடுதிகளில் அதிக வாடகை என்று சொல்ல முடியாது. குறிப்பிட்ட இரண்டு மூன்று இடங்களில்தான் இலாபகரமாக இருக்கிறது. குறிப்பாக மதுரையில் இலாபத்தோடு பணியாற்றுகிறது. 'ஆக்குபன்சி' கிட்டத்தட்ட ஆண்டில் 70 சதவிகிதம் இருந்தால் தான் இலாபம் வரும். ஆனால், ஏற்காடு, திருச்செந்தூர் போன்ற இடங்களில் வைத்திருக்கிற சுற்றுலா விடுதிகளில் 35 சதவிகிதம் 40 சதவிகிதம்தான் ஆக்குபன்சி வருகிறது. அப்படி வரும்போது கட்டுப்படியாகாமல் நஷ்டம்தான் ஏற்படும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கூறும் யோசனையை மேற்கொள்ள இயலாது. மற்ற ஹோட்டல்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இதை 'சீப்' என்றுதான் சொல்ல வேண்டும்.

### *Thanjavur Medical College Hospital.*

*49. *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government to open an out-patient department in the Medical College Hospital, Thanjavur; and

(*b*) if so, the details thereof?





**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :**

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எண். கே. பழனிசாமி** : சார், இவ்வளவு பெரிய ஆஸ்பத்திரி இருந்தும்கூட இம்மாதிரி 'அவுட் பேஷன்ட் டிபார்ட்மெண்ட்' இல்லாமல் இருப்பது சரியல்ல. என்ன காரணத்தினால் அவ்வாறு வைக்காமல் விடப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : தலைவரவர்களே, வெளி நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்குவதில் முக்கியத்துவம் பெற்றிருப்பது ராஜா மிராசுதார் மருத்துவமனை. இது தஞ்சை நகரத்தின் மையத்தில் மருத்துவக் கல்லூரியோடு இணைந்து செயல்படும் விதத்தில் பெரிய மருத்துவமனையாக இயங்கி வருகிறது. சில சிறப்பான நோய்களுக்கு வெளி நோயாளிகளுக்கு, நாம்பியல் அறுவைச் சிகிச்சை, பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை ஆகிய துறைகளில் வெளிநோயாளிகள் சிகிச்சைப் பிரிவுகள் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் முறையாகச் செயல் பட்டு வருகின்றன.

அதைப்போல மருந்துகள் சிகிச்சைப் பிரிவு, அறுவைச் சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த பல்வேறு சிகிச்சைப் பிரிவுகளின் பரிசீலனைக்கு நோயாளிகளைக் குறித்தனுப்புகின்ற வெளி நோயாளிகள் சிகிச்சைப் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன.

இது தவிர 'கேஷுவாலிட்டி டிபார்ட்மெண்ட்' என்ற முறையில் 24 மணி நேரமும், ஏதாவது விபத்து ஏற்பட்டு வரும் நோயாளிகளைக் கவனிக்கின்ற பிரிவும் வேலை செய்கிறது. ஆனால் பொதுவாக எல்லா நோயாளிகளும் அங்கே வருவதற்கான வாய்ப்பு இல்லை. பல்வேறு விதமான சிகிச்சைப் பிரிவுகள் கொண்ட மருத்துவமனை தஞ்சை நகரத்தில் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் வெளிநோயாளிகளாக உள்ள குழந்தைகளுக்கான பிரிவு தஞ்சை நகரத்தில் செயல்படுகிறது. ஆகவே, இது 3 மைல் தூரத்தில் இருப்பதால் வெளிநோயாளிகளுக்கான எல்லாப் பகுதியையும் ஏற்படுத்துவது அவசியம் என்று கருதப்படவில்லை.

[1975 அக்டோபர் 25

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கட்டப்பட்டபொழுதே புறநோயாளிகளுக்கான பிரிவு ஒன்று அந்தக் கட்டடத்திலேயே பெருத்த செலவிலே உருவாக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் அது செயல்படவில்லை. இராஜா மிராசுதார் மருத்துவமனை நெரிசலான சூழ்நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புறநோயாளிகளுக்கான பிரிவு ஒன்றை ஆரம்பிக்க அரசு ஆலோசிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இரண்டு மருத்துவமனைகளும் இணைந்து செயல்படுகிற கல்விமுறையோடு தொடர்புடைய மருத்துவமனைகளாகும். 100-க்கு 90 பேர் தஞ்சை நகரத்தில் உள்ள அந்த மருத்துவமனைக்குச் செல்வது வசதியாக இருக்கிறது. 100-க்கு 10 பேர் வரும் இந்த மருத்துவமனையிலே புற நோயாளிகளுக்கான பிரிவை ஏற்படுத்துவதால் அதிகப் பயன் இல்லை. ஆனால் எந்தெந்தத் துறையிலே இராஜா மிராசுதார் மருத்துவமனையிலே புறநோயாளிகள் சிறப்புப் பிரிவு வெளி நோயாளிகளாகச் சிகிச்சை பெறுகிறார்களோ அவர்கள் அவற்றிற்கு அனுப்பப்படுகிறார்கள். ஓர்க்கிங் அரேன்ஞ்ச்மெண்ட் என்ற முறையில் இடம் தான் வேறு வேறாக இருக்கிறது. இங்கே சென்னை நகரத்திலே ஜெனரல் ஹாஸ்பிடல் இருக்கிறது, ஆனால் குழந்தைகளுக்கு என்று Paediatrics hospital வைக்கப்பட்டு எழும்பூரில் சிகிச்சை வழங்குகிறோம். ஜெனரல் ஆஸ்பத்திரி இவ்வளவு பெரிய மருத்துவமனையாயிற்றே என் அங்கே குழந்தைகளுக்கான பிரிவு இருக்கக் கூடாது என்றால் அது சிறப்பாக அமைவதில்லை. ஆகவே சிறிப்புக் கருதி இந்தப் பிரிவினை இருக்கிறது. பயன் கருதி, முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காக அப்படி ஏற்படுத்தி யிருக்கிறோம்.

**திரு. கோ. இளங்கோவன் :** தலைவரவர்களே, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையோடு இணைந்ததுதான் இராஜா மிராசுதார் மருத்துவமனை என்றாலும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைதான் உயர்ந்தது என்று மக்கள் கருதுவதால் இருக்கின்ற பிரிவுகளை அதிகப்படுத்துவது நல்லது அல்லவா?



1975 அக்டோபர் 25]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அப்படியொரு தவறான கருத்து இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் மாற்றவில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை மேலும் அபிவிருத்தி செய்யும் திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது நிரந்தரமாகவே நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இந்த மருத்துவமனைகள் இயங்கும் முறையில் எந்தெந்தப் பிரிவுகள் எங்கே இயங்கினால் பொதுமக்களுக்கு அதிக நன்மை என்பதைப் பற்றியும், அவைகள் இயங்குவதற்கு யார் பொறுப்பாக இருப்பது என்பதைப்பற்றியும் அவ்வப்பொழுது மருத்துவக் கல்லூரி இயக்குநர் ஆராய்ச்சி செய்து அரசாங்கத்திற்குத் தெரிவிக்கின்ற கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் சிறுசிறு மாற்றங்கள் அவ்வப்பொழுது செய்யப்படுகின்றன. greatest utility with the available facility முறையில் கிடைக்கும் வசதிகளைக்கொண்டு அதிக அளவிற்கு நன்மைகள் பயக்கும் முறையில் பிரிவினை செய்வது, பாகுபாடு செய்வது பற்றி அவ்வப்பொழுது மருத்துவத் துறை ஆய்வாளர்களால் ஆலோசனை வழங்கப்பட்டுத்தான் மேற்கொள்ளப்படுகிறது.

## திருவையாற்றிலுள்ள மருந்தகம்

* 50 வினா—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் வட்டம், திருவையாறு பேரூராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள சத்திரம் நிர்வாகத்திலுள்ள மருந்தகத்தினை அரசு மேற்கொள்ளுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

**திரு. கோ. இளங்கோவன் :** தலைவரவர்களே, திருவையாற்றைச் சுற்றிலும் உள்ள 25-க்கும் மேற்பட்ட கிராமங்களில் வாழும் மக்கள் இந்த சத்திரம் மருந்தகத்திற்குத்தான் வரவேண்டியிருக்கிறது.

அங்கே பொருளாதார நிலைமை காரணமாகப் பெண் மருத்துவர்கள் இல்லை. உதவியாளர்கள் இல்லை, போதிய படுக்கைகள் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட மருத்துவமனைகள், தஞ்சை மாவட்டத்தில், தமிழ்நாட்டில் இருக்கின்றன என்பதை உணர்ந்து அவைகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அரசாங்கம் மருத்துவமனைகளை 'அக்வேர்' செய்வதில்லை. 'அக்விசிஷன்' செய்வதைப் போன்று செய்யவில்லை. மருத்துவமனைகளை நடத்துபவர்கள் தாங்கள் எந்தக் காரணத்தினால் அதை ஒழுங்காக நடத்த முடியவில்லை என்று அரசாங்கத்திற்குத் தெரிவித்து, ஆகவே, அரசாங்கம் அதை மேற்கொள்ள வேண்டுமென்று முறையாக விண்ணப்பித்தால் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளை எடுப்பது என்ற திட்டம் இருக்கிற இந்தச் சூழ்நிலையில் அப்படிப்பட்ட விண்ணப்பம் வருமானால் அரசாங்கம் எடுக்க முயற்சிக்கலாம். முயற்சிக்கலாம் என்றுதான் சொல்கிறேனே தவிர இது 'அஷ்யூரன்ஸ்' ஆகாது. ஆகவே, பரிசீலனை செய்யக்கூட அவர்கள் விண்ணப்பிக்க வேண்டும்.

## ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள்.

* 51 வினா—திரு. வ. முத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், எளச்சிபாளையம் ஒன்றியத்தில், பொதுச் சுகாதார நிலையம் கட்டும் செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சேலம் மாவட்டம் எளச்சிபாளையம் ஒன்றியத்திற்காக ஆரம்ப சுகாதார நிலையத்தை மாணிக்கம்பாளையம் ஊராட்சியில் அமைக்கும்படி அரசு 18—10—1974-ல் ஆணையிட்டது. இதன்படி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தற்காலிகக் கட்டடம் தேர்ந்தெடுக்கப்பட்டு 23—1—1975 முதல் அந்த நிலையம், மாணிக்கம்பாளையத்தில் செயற்பட்டு வருகிறது. நிரந்தரக் கட்டடங்கள் கட்ட 5 ஏக்கர் நிலமும் ரூபாய் பத்தாயிரம் நன்கொடையும் அளிக்க வேண்டும். இந்தத் தொகையும் இடமும் இன்னும் அளிக்கப்படவில்லை.



(முற்பகல் 9-30)

* 52 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கடம்பூரில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) இந்நிலையத்திற்கு மருந்தகக் கட்டடம் பொதுப்பணித்துறையினரால் தற்போது கட்டப்பட்டு வருகிறது. மேற்படி கட்டட வேலை கூடிய விரைவில் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## குளித்தலை, கரூர் வட்டங்களில் குட்டை அமைப்புத் திட்டங்கள்

* 53வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972 முதல் 1974 வரை குளித்தலை, கரூர் ஆகிய வட்டங்களில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட குட்டை அமைப்புத் திட்டங்களின் விவரங்கள் யாவை?

(இ) அவைகளில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள் எத்தனை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) 1972 முதல் 1974 வரை குளித்தலை வட்டத்தில் 13 குட்டைத் திட்டங்களும், கரூர் வட்டத்தில் 15 குட்டைத் திட்டங்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆக மொத்தம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டங்கள் 28 ஆகும்.

(இ) அவைகளில் குளித்தலை வட்டத்தில் 6 குட்டைத் திட்டங்களும், கரூர் வட்டத்தில் 4 குட்டைத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. ஆக மொத்தம் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் 10 ஆகும்.

[1975 அக்டோபர் 25

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, குளித்தலை வட்டத்தில் மஞ்சாநாயக்கன்பட்டி என்ற கிராமத்தில் கருவேலங் குளத்தைப் புதுப்பிப்பதற்கு ஆய்வு செய்யப்பட்டதே, அது நிறைவேற்றப்பட்டுவிட்டதா? இன்னும் நிறைவேற்றப்படவில்லையென்றால் இனிமேலாவது அதை நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. என். கே. பழனிசாமி :** 1975 ஆம் ஆண்டிலிருந்து குட்டைகள் கட்டுவது எல்லாம் பான் செய்யப்பட்டிருக்கிறதா? அதன் காரணமாக எல்லா மாவட்டங்களிலும் திட்டங்கள் பல நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன, அதனால் விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள். அது எப்போது ரிமூவ் செய்யப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அப்படியொரு திட்டம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கோவை மாவட்டத்திலே இந்தத் திட்டம் விவசாயிகளுக்கு நல்ல பலனைத் தந்திருப்பதாக அங்கிருந்து வந்த விவசாயிகள் என்னிடத்திலே விவாதித்தபோது தெரிவித்து இருக்கிறார்கள், பாராட்டியிருக்கிறார்கள்.

**திரு. நா. வீராசாமி :** இந்த பாண்ட்ஸ் ஸ்கீம் வட ஆர்க்காடு மாவட்டத்தில்—அந்த மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டம், ஆற்றுப்பாசனமே இல்லாத மாவட்டம்—ஏற்கனவே கோயம் புத்தூரில் ஆரம்பித்தபோதே அப்போது இருந்த பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்திற்கு அது கொண்டு வரப்படும் என்று சொன்னார்கள் . . .

MR. DEPUTY SPEAKER : The question relates to Kulithali and Karur.

**திரு. நா. வீராசாமி :** அவர்கள் அஷ்யூரன்ஸ் கொடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த முறையிலே அதை வட ஆற்காடு மாவட்டத்திற்கும் விஸ்தரிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அப்போது இருந்த பொதுப்பணித் துறை அமைச்சரின் உத்திரவாதத்தை நான் பூர்த்தி செய்யமுடியாததற்கு வருந்துகிறேன்.



1975 அக்டோபர் 25]

**திரு. கே. என். குமாரசாமி :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இன்னும் பல எஸ்டிமேட்கள் நிறுத்தப் பட்டிருக்கின்றன, சாங்ஷன் செய்யப்படாமல் நிறுத்திவைக்கப் பட்டிருக்கின்றன, அந்த எஸ்டிமேட்களை நிறைவேற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ? காரணம் பணம் இல்லையென்று சொல்கிறார்கள், ஆகவே அவற்றையெல்லாம் விரைவிலே நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நிறுத்திவைக்கப்பட்டதன் காரணத்தை கனம் அங்கத்தினர் அவர்களே குறிப்பிட்டிருக் கிறார்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** ஏற்கனவே கொடுக்கப்பட்ட வாக்குறுதியை இந்த அரசு பூர்த்தி செய்யாது என்று சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டம் மட்டுமல்ல, தமிழகத்தில் பெரும்பாலும் கேணிகளும், ஏரிகளும், இத்தகைய குட்டைகளும் தான் நீர்ப் பாசனத்திற்குப் பயன்படுகின்றன. தண்ணீர் அளிக்கிற சப்ளை சேனல்களையெல்லாம் ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள், இதன் காரணமாக வட ஆற்காடு மாவட்டத்தில் ஏராளமான குட்டைகள் தண்ணீர் இல்லாமல் வாடிக்கொண்டிருக்கின்றன. அங்கங்கே செய்திருக்கிற ஆக்கிரமிப்புகளைத் தவிர்ப்பதற்கு இந்த அவசர நிலை நேரத்திலாவது துரித நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இது புதிய குட்டைகளை அமைப்பதைப்பற்றிய கேள்வி. ஏரிகளை, குளங்களை, குட்டைகளை ஆக்கிரமிப்புச் செய்திருந்தால் யார் ஆக்கிரமிப்புச் செய்திருந் தாலும் அகற்றப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக் கிறது.

## புலியூர் வாய்க்காலைப் புதுப்பித்தல்

*54 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டத்தில் உள்ள புலியூர் வாய்க்காலைப் புதுப்பிக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

[1975 அக்டோபர் 25

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** திருச்சி மாவட்டத்திலுள்ள அமராவதி நதிப்பாசனத்தைச் சேர்ந்த புலியூர் வாய்க்காலைப் புதுப்பிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, தற்பொழுது அனைத்து வேலைகளும், 30—6—1975-ம் தேதியுடன், முடிக்கப்பட்டு விட்டன.

## கூட்டுறவு நூற்பு ஆலைகள்

*** 55 வினா—திரு. கி. ஜெயராமன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பு ஆலைகளில் கதிர்களை (spindles) அதிகப்படுத்த அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆம்.

**திரு. கி. ஜெயராமன் :** தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் அண்மையில் சிட்டு நூல் தயாரிக்கின்ற கூட்டுறவு நூற்பு ஆலைகளில் 50 ஆயிரம் கதிர்கள் ஏற்படுத்தக்கூடிய முறையிலே திட்டம் வகுத்து இருக்கிறது. சேலம் கூட்டுறவு நூற்பாலை போன்ற ஆலைகளில் அப்படி கொண்டுவருவதற்கு நம்முடைய அரசு மத்திய சர்க்காரின் அனுமதியைப் பெறுவதற்கு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அனுமதி பிரச்னையில்லை. அதற்கான நிதியைப் பெற என்.சி.டி.சி. இன்னும் புதிய கொள்கையை வகுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதிகக் கதிர்கள் போடும்போது அதிக உதவித் தொகை வேண்டுமென்று நாம் என்.சி.டி.சி.-யைக் கேட்டுவருகிறோம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** மினி மில்கள் என்று சொல்லப் படுகின்ற மில்கள் குறைந்த கதிர்கள் கொண்டதாக உள்ளவை. நல்ல முறையில் நடத்தப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது, இப்போது ஆந்திர மாநிலத்திலேயும், கர்நாடக மாநிலத்திலேயும் மினி மில்கள் அமைக்கப்படவிருக்கின்றன. அங்கே அமைக்கப்பட விருக்கின்ற மினி மில்களைப் போல் இங்கேயும் நெசவாளர்கள் உள்ள பகுதிகளில் மினி மில்களை அமைத்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்க முடியுமே. அதனைப்பற்றி அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கேள்வி, இருக்கின்ற நூற்பாலைகளைப்பற்றி.



1975 அக்டோபர் 25]

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு நூற்பாலைகளில் 12 ஆயிரம் ஸ்பின்டில்கள் ஓடுவதாலே செலவு அதிகமாகிறது. அதனால் நஷ்டம் ஏற்படுகிறது. நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆகவே அதிகமான ஸ்பின்டில்களை உண்டாக்கினால் செலவு குறையும். அதிகமாக ஏற்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. இதனால் பல ஆலைகள் நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன. அதை விரைவில் பெறுவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எல்லா ஆலைகளுக்கும் இப்படியொரு திட்டம் கொண்டுவர படிப்படியாக முயற்சி செய்கிறோம். என்.சி.டி.சி. அதற்கும் பணம் கொடுக்கவேண்டும். மத்திய அரசாங்கம் இதைப்பற்றி கொள்கை முடிவு எடுக்கவில்லை என்று சொன்னார்கள். அண்மையில் நடைபெற்ற அமைச்சர்கள் மாநாட்டில்கூட தென் மாநிலத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் எல்லாம் இதைப்பற்றிக் கேட்டோம். அதற்கு மத்திய அமைச்சர், இன்னும் திட்டக் குழு, நிதி இலாகா இதுபற்றி முடிவு எடுக்கவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் விரைவில் நடவடிக்கை எடுத்தால் நாம் எல்லா ஆலைகளிலும் தொடங்குவதற்கு முயற்சிக்கலாம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** கரூர் வட்டத்தில் மலைக்கோயிலூர் கூட்டுறவு நூற்பாலையில் அதிகமான கதிர்களை உருவாக்க வேண்டுமென்று திட்டமிருந்ததே, அது நிறைவேற்றப் படாமல் இருப்பதற்கு என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** காரணத்தை இப்போதுதான் விளக்கினேன். 12,100 கதிர்கள் அதிகமாகப் போடவேண்டுமென்று திருச்சி கூட்டுறவு ஆலையைப் பொறுத்தவரையில் திட்டம் இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : When the minimum needs for a spinning Mill is 25,000 spindles, is there any proposal to start new mills without completing the 25,000 spindles in the existing mills?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கூட்டுறவு ஆலையைப் பொறுத்த அளவிலே இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இருக்கின்ற ஆலைகளில் 25 ஆயிரமாக ஆக்குவது முதல்கட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று எண்ணியிருக்கிறோம்.

[1975 அக்டோபர் 25

திரு. கே. டி. கே. தங்கமணி : இருக்கின்ற கூட்டுறவு ஆலைகளில் 25 ஆயிரம் ஊசிகள் வைக்கவேண்டுமென்ற முறையிலே எக்ஸ்பேண்ட் பண்ணிக்கொண்டிருக்கிறோம். இந்த ஆலைகளிலாவது சீக்கிரம் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 12 ஆலைகளில் திருவில்லிபுத்தூர், திருச்செந்தூர் ஆலைகளில் செய்வதற்குப் பணம் கிடைத்து இருக்கிறது. மத்திய அரசாங்கம் ரீபேட்ரியட்ஸ் ஸ்கீமுக்காக ஓரளவுக்குப் பணம் தந்தார்கள், அந்தப் பணத்தை வைத்துக் கொஞ்சம் செய்திருக்கிறோம். மீதியைப்பற்றி என்.சி.டி.சி.-யோடு பேசிக்கொண்டிருக்கிறோம்

திரு. எம். சுரேந்திரன் : கூட்டுறவு ஆலைகளிலே ஸ்பின்டில்ஸ் அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். அதே நேரத்திலே எவ்வளவு ஸ்பின்டில்ஸ் அதிகப்படுத்தினால் லாபகரமாக இருக்கும் என்று ஆராய்ந்து தீர்மானிக்கப்பட்டது போன்று 25 ஆயிரம் என்று சொல்கிறார்கள். மற்ற மாநிலங்களிலே மினி மில்கள் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள், அதையும் இதையும் ஒப்பிட்டுப்பார்த்து இது சிறந்ததா, அது சிறந்ததா என்று பார்த்து இதிலே நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இனிமேல் அதைப்பற்றியெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் காலம் விரையமாகும். 25 ஆயிரம் என்று இருந்தால் நிர்வாகச் செலவு குறையும் என்று சொல்கிறார்கள். சில இடங்களில் 50 ஆயிரம் இருந்தால் குறையும் என்றும் தெரிவிக்கிறார்கள். நிர்வாகச் செலவு அதிகமாகாமல் இருப்பதற்கு 25 ஆயிரம் ஏற்றது என்று கருதுகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. Minister for Industries be pleased to state as to how many mills are there which are not having the economic level of 25,000 spindles and whether Government have collected statistics as to how many such mills are there working below 25,000 spindles, in Tamil Nadu?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாடு முழுவதும் உள்ள ஆலைகளைப்பற்றியல்ல, கூட்டுறவு ஆலைகளைப்பற்றித்தான். 12-லே 2 நிறைவேற்றியிருக்கிறோம். மீதியுள்ள 10 ஆலைகளிலும் 25 ஆயிரம் ஆக்குகின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம்.



1975 அக்டோபர் 25]

## இனாம் கிராமங்களிலுள்ள புறம்போக்கு நிலங்கள்

*56 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இனாம் கிராமங்களில் உள்ள புறம்போக்கு நிலங்கள் அந்தந்தப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனவா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தர்மபுரி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய ஆறு மாவட்டங்களில் இனாம் கிராமங்களிலுள்ள புறம்போக்கு நிலங்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் இனாம் கிராமங்கள் இல்லை. மற்ற மாவட்டங்களில் உள்ள இனாம் கிராமத்திலுள்ள புறம்போக்கு நிலங்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றங்களிடம் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர் : திருநெல்வேலி மாவட்டத்தில் இனாம் கிராமங்களிலுள்ள புறம்போக்கு நிலங்களைப் பஞ்சாயத்திடம் ஒப்படைக்காத காரணத்தால் அதில் கிடைக்கும் வருமானம் பஞ்சாயத்துக்குக் கிடைக்க முடியாமல் இருக்கிறது. சர்வே முடிந்த கிராமங்களையாவது உடனடியாக பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்படாவிட்டாலும் நோட்டிபிகேஷன் டேட்டில் இருந்து தனியார் உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்படுவதில் இனாம்தாருக்குப் பாத்தியதை என்ற பிரச்சினை இருக்குமானால் அரசு பரிசீலிக்கும். அவசரப்பட்டு அந்த நிலங்களைப் பஞ்சாயத்திடம் ஒப்படைப்பது தவறு. இனாம் கிராமங்களில் 10 ஆண்டு காலம், 50 ஆண்டு காலமாக உழுகிறவர்கள் இருக்கிறார்கள். ஜமீன் ஒழிப்புச் சட்டத்தைப் போல் இனாம் கிராமங்களைப் பொறுத்தவரையிலும்கூட உழுபவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்ற முறையில் பரிசீலிக்கப்பட வேண்டியிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இனாம் வில்லேஜில் உள்ள புறம்போக்கு நிலங்கள் பஞ்சாயத்துக்கு பப்ளிக் பர்ப்பசுக்கு ஒப்படைக்கப்படுகின்றனவா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பெரும்பாலும் ஊராட்சி மன்றத்திற்குத் தேவைப்பட்ட அளவு நிலங்கள் தரப்படுகின்றன. அந்த நிலத்தை விவசாயி உழுது கொண்டிருந்தால் அதை ஒப்படைப்பதில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, May I know from the Hon. Minister for Revenue the total extent of inam poramboke lands handed over to the Panchayats in Dharmapuri District?

THE HON. THIRU S. MADHAVAN: I have no figures.

*Salt Industry in Tuticorin.*

*57. *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state the stage at which the proposal, for developing salt industry in Tuticorin area, stands at present?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தூத்துக்குடியிலும், அதனைச் சுற்றிலுமுள்ள பகுதிகளிலும் உப்பளத் தொழில் வளர்ச்சிக்கான பகுதிகளைக் கண்டறிய ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தொழில் வணிகத்துறை இயக்குநரால் ஓர் அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கை பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்த ஆய்வுக் குழு பரிசீலனை செய்ததில் என்னென்ன தொழில்களை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது? அதற்கு உத்தேசச் செலவு எவ்வளவு ஆகும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. குழு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. அந்த அறிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் நிலையில் இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** உப்பு எல்லோருக்கும் எப்பொழுதும் தேவையாக இருக்கும் பொருளாக இருக்கும் காரணத்தால் நிரந்தரமாக அரசாங்கமே அந்தத் தொழிலை எடுத்துச் செய்வதற்கான முறையிலே ஏன் அணுகக் கூடாது? இந்த மாநிலத்திலிருக்கும் உப்பளங்களை மேம்படுத்தி நல்ல வருமானம் உள்ளதாகச் செய்வதற்கான முறையில் ஆராய்ச்சி செய்து முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?





**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பெரிய உப்பளங்களை அரசுத் துறை மூலமாக அல்லது கூட்டுத் துறை மூலமாக விரிவாக வளர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கேள்வி தூத்துக்குடி, அதைச் சுற்றியுள்ள பகுதியைப் பற்றியது, மகாபலிபுரத்திலும், வேதாரண்யத்திலும் அரசு ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

**திரு. எஸ். வடிவேல்:** வேதாரண்யத்தில் ஏறத்தாழ 10 லட்சம் மூட்டை தேங்கியிருக்கிறது. அவ்வாறு தேங்கியிருப்பதை உடனடியாக வாகனில் அனுப்பி, அங்குள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க துரித நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தனிக் கேள்வி போடவும்.

*Manufacture of Calcium Carbide*

*58 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state:

(*a*) whether it is a fact that the Tamil Nadu Industrial Development Corporation proposes to set up a Calcium Carbide project in the State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கால்சியம் கார்பைடு உற்பத்தி செய்வதற்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஒரு அனுமதி கடிதம் பெற்றது. அதன் பிறகு சாதகமான சூழ்நிலைகள் இல்லாததால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது உசிதம் இல்லை என தீர்மானிக்கப்பட்டது.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என்று திட்டமிடப்பட்டது? என்ன காரணத்தால் இதில் லாபம் இல்லை என்று கைவிடப்பட்டது? இதைத் தனியார் எடுத்த நடத்துவதாக இருந்தால் உதவி செய்ய சர்க்கார் முன்வருமா?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The Scheme need not be considered for the following reasons:

(i) The major outlet for the Calcium Carbide was the PVC producers. The cost of PVC has since gone down considerably and possibilities of PVC producers purchasing Calcium Carbide for manufacture became doubtful;

(ii) The present demand for the Calcium Carbide is about 48,000 tonnes, whereas the total quantity available for sale in 1975-76 will be about 93,000 tonnes excluding new capacities approved by the Government of India;

(iii) Production of Calcium Carbide requires 10 M.W. of power and so, it is difficult to get so much of power in our State which has been facing power deficit;

(iv) M/s. Industrial Chemicals, Limited have also expressed the view that in the above circumstances, it may not be advisable to proceed with the scheme at present.

### கோவில்பட்டி-செட்டிக்குறிச்சி பேருந்து பணி

*59 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டியிலிருந்து கட்டாலங்குளம் செட்டிக்குறிச்சி வரை ஓடிக்கொண்டிருந்த டவுன் பஸ் தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், நிறுத்தப்பட்டதன் காரணம் யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) குறிப்பிட்ட வழித்தடத்தில் ஓடிக்கொண்டிருந்த கோவில்பட்டி திரு. கே. பாலசுப்பிரமணியம் மோட்டார் சர்வீஸின் தற்காலிக அனுமதிச் சீட்டு 30—9—1974 அன்று முடிவடைந்து விட்டது. 1—10—1974-க்கு பிறகு தற்காலிக அனுமதி சீட்டுக்கான விண்ணப்பம் ஏதும் வரவில்லை.



திரு. எம். முத்தையா: கோவில்பட்டியிலிருந்து செட்டிகுறிச்சி வரை ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸுக்கு லைசென்ஸ் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுவிட்டது. அதற்கு பலர் விண்ணப்பம் போட்டிருந்தும் இதுவரை யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை. தனியார் பஸ் விடவில்லை என்றாலும் அரசு பஸ்ஸாவது விட வேண்டுமென்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டிருக்கிறது. தனியார் பஸ் அல்லது அரசு பஸ் அந்த ரூட்டில் விட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அந்த வழித் தடத்தில் நிரந்தரமாக பஸ் விட ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அது குறித்து பரிசீலித்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: 1—10—1974-ல் இருந்து அங்கே பஸ் ஓடவில்லை. ஏறக்குறைய ஒரு வருஷம் ஆகிவிட்டது. இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. கார்ப்பரேஷன் பஸ்ஸையாவது சீக்கிரம் விடக்கூடாதா? பிரைவேட் ஆப்பரேட்டர்களிடம் அப்ளிகேஷன் கேட்டு . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் என்ன டிபேட்டிலா பேசுகிறீர்கள்? You must ask a question.

திருமதி த. ந. அனந்தநாயகி: டிரான்ஸ்போர்ட்டில் இருக்கிற கஷ்டத்தைச் சொல்லுகிறேன்.

The Corporation can run a bus. Why should the people be put to inconvenience?

MR. DEPUTY SPEAKER: The hon. Member should frame it as a question.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நான் ஏற்கனவே சொன்னபடி நிரந்தர பர்மிட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் அந்த வழித் தடத்தில் பஸ் ஓடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள், விண்ணப்பங்கள் கோரப்பட்டு பரிசீலனையில் இருக்கின்றன என்று சொன்னார்கள். கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் அங்கு பஸ்விட ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது? அந்த வழித் தடத்தில் தனியார் பஸ்ஸோ அல்லது அரசாங்க பஸ்ஸோ விட உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : எல்லா வண்டிகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திடமிருந்தும் விண்ணப்பங்கள் தரப் பட்டிருக்கின்றன. பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

*Nagercoil-Keezhkulam Pidakai bus service.*

*60. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state whether there is any proposed under consideration to resume the 9-C route bus service between Nagercoil and Keezhkulam Pidakai in Kanyakumari district ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேருந்துகள் பற்றுக்குறை காரணமாக நாகர்கோயிலுக்கும் கீழ்குளம் பிடாகைக்கு மிடையிலான 9-சி வழித்தடத்தில் 1—4—1975-லிருந்து பேருந்து விடப்படுவதில்லை. தற்போது நெரிசல் நேரப் போக்குவரத்துப் பணிக்குரியதாக இவ்வழித்தடம் மாற்றப்பட்டு பேருந்துகள் முறையாக விடப்படுகின்றன.

திரு. என். டென்னிஸ் : இது ஒரு முக்கியமான பஸ் ரூட். அடிக்கடி இங்கு பஸ் சர்வீஸ் நிறுத்தப்படுகிறது. அதனால் மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மிகவும் பாதிக்கப் படுகிறார்கள். ஆகவே, நிரந்தரமாக அங்கு பஸ் சர்வீஸ் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது நிரந்தரமாக பஸ் போய் வந்து கொண்டிருக்கிறது. பொதுமக்கள் தேவையைச் சிந்தித்து 341 ஆம் எண் வழித்தடம் பேருந்துப் பணி போதுமானது என்று அரசு கருதுகிறது.





*New Townships*

*61 Q.—THIRU B. VENKATASWAMY
THIRU N. KITTAPPA

Will the Hon. the Minister for Local Administration be pleased to state :—

(a) whether there is any proposal under the consideration of the Government to convert the Hosur and Mathagiri Town Panchayats into Townships; and

(b) if so, the details thereof?

THE HON. THIRU S. RAMACHANDRAN : (a) & (b) The proposal for the constitution of a Township for the industrial complex at Hosur, covering Hosur, Mathagiri and other panchayats is under consideration of the Government.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether any resolutions from the Panchayats and Panchayat Unions have been received and if so, the details thereof?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, the details have been asked for from the Collector. Meanwhile there is already a ban for the delimitation of the panchayats into townships or town panchayats, in view of the preparation of the electoral rolls for the ensuing General Elections. As such, it can only be kept pending in view of the present position.

திரு. என். கிட்டப்பா : பேரூராட்சிகள் நகரியங்களாக எந்தெந்த அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தொழில், தொழிலாளர் களுக்காக உருவாக்கப்பட்ட குடியிருப்புகள், சுற்றுலா இடங்கள் ஆகியவைகள் இத்தகைய நகரியங்களாக ஆக்கப்படுகின்றன.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Is it a fact that the people in Panchayats are against the proposal of converting them into Townships, as they will be produced with taxation and that no benefits will be given to them?

THE HON. THIRU S. RAMACHANDRAN: This has nothing to do with the Town Panchayats. It is a Township constituted and headed by the Collector. As such, I have no information.

THIRU K. S. KOTHANDARAMAIAH: There is a proposal to form a Township consisting of 7 Panchayats. The Panchayats have not been in favour of this proposal and they have passed a Resolution contradicting the proposal. The want direct administration by the Government and not the Township. May I know from the Hon. Minister for Local Administration whether he will kindly honour the Resolutions passed by the Panchayats?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, all these aspects will be given careful attention while a final decision is taken on the proposal.

*62 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) பூம்புகாரை நகரியமாக்கும்படி கீழ்த் தஞ்சை மாவட்ட துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அபிவிருத்திக்குழு அரசுக்கு கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) பூம்புகார், வானகிரி, காவிரிப்பூம்பட்டினம் ஆகிய மூன்று ஊராட்சிகளை இணைத்து அப்பகுதிக்கு பூம்புகார் என்ற பெயரில் ஓர் நகரியம் அமைக்கும் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதன்மீது மாவட்ட அபிவிருத்திக் குழுவின் கருத்தை அறியுமாறு தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவரது அறிக்கை வரப்பெற்ற பின்னர் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: புதிய பூம்புகார் நிர்மாணிக்கப்படுகிற அடிப்படையில் நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முயற்சியினால் முன்பிருந்த இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூதச்சதுக்க மன்றம், பாவைமன்றம் ஆகியவை பூம்புகாரில் உருவாக்கப்பட்டுள்ளன. முன்பிருந்த மங்கலவீதியும், கூலவீதியும், தென்றல் வீதியும், நாளங்காடியும், பட்டினப்பாக்கமும்,



மருவூர்ப்பாக்கமும்—அந்த மருவூர்ப்பாக்கத்தில் வேயாமாடமும், வியன்கல இருக்கையும், மாங்கட்காதலர் மாளிகை இடங்களும் அங்கே தூசும்-துகரும்-ஆரமும்-அகிலும் மாசறுமணியும் முத்தும் பொன்னும் விற்றிடும் நிலையினை உருவாக்கி, தொழில் பல பெருக்கி, சிறப்பான நிலையில் சிலப்பதிகாரத்தில் உள்ளதைப் போன்று பண்டைய நிலையை உருவாக்கிட அரசு மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. கிட்டப்பா அவர்கள் இப்போது படித்ததை அப்படியே கொடுத்தால் அதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு ஆராயப்படும்.

திரு. என். கிட்டப்பா: இது படித்தது மட்டுமல்ல. சிலப்பதிகாரத்தில் உள்ளதைப் படித்தேன். சிலப்பதிகாரத்தில் இருப்பதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்போல் எனக்குச் சொல்லத் தெரியாத காரணத்தினால் அது தவறி விடக்கூடாது என்ற காரணத்தினால் அதை ஓரளவு ஒழுங்குபடுத்தி வைத்து படித்துக் காட்டினேன்.

DR. H. V. HANDE: May I know from the Hon. Minister whether a large areas of the proposed township are likely to be submerged because of the reduction in the elevation level between sea and land? The proposal, as announced by the Hon. Chief Minister is likely to cause erosion in that area. What are the concrete steps taken by the Government to prevent sea erosion in that area? What are the concrete steps taken to prevent this catastrophe?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, the hon. Member's anxiety should be answered by the Public Works Department. As far as this Department is concerned, it is connected with the constitution of Townships. Even that matter is still pending with the Government.

திரு. நா. வீரசாமி: சுற்றுலா இடங்கள் போன்றவைகள் எல்லாம் நகரியங்களாக ஆக்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைய தினம் பூம்புகாருக்கு லட்சம் மக்களுக்கு மேல் வந்து பார்த்திருக்கிறார்கள். அங்கே போய் பார்க்கக்கூடிய அளவிற்கு அது பெரிய ஒரு சுற்றுலா இடமாக ஆக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தை நகரியமாக ஆக்கும்போது

மத்திய அரசு இதற்கு ஏதாவது உதவி செய்கிறதா? இல்லை என்றால் அதை நல்ல முறையில் ஒரு நகரியமாக்குவதற்கு நம் அரசு மத்திய அரசிடம் நிதி உதவி கேட்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற விவரம் என்னிடம் இல்லை. ஆனால் மத்திய அரசிடத்திலிருந்து சுயாட்சி எதிர்பார்க்கிற அரசு இதை எதிர் பார்க்கவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: வருங்காலத்தில் கனம் முதல் அமைச்சர் அவர்களின் தொகுதியாகப் போகிறது என்ற காரணத்தினால் இவ்வளவு தனி அக்கறை காட்டப்படுகிறது பூம்புகார் குறித்து. மத்திய அரசிடமிருந்து உதவி எதுவும் எதிர்பார்க்காது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எதுவுமே நீங்கள் மத்திய அரசாங்கத்திடமிருந்து வாங்கியது கிடையாதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பாஞ்சாலங்குறிச்சியில் கூட கட்டபொம்மனுக்காக கோட்டை கட்டப்பட்டு நகர் அழகு படுத்தப்பட்டது. பூம்புகாரில் மீனவர்களுக்காக குடில்கள் அமைக்கப்படுவதுபோல் அங்கும் கட்டபொம்மன் வாரிசுகளுக்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அங்கே நான் நிற்கப் போவதாக அம்மையார் அவர்கள் கருதிக் கொள்வதா? எங்கேயோ ஒரு இடத்தில் தமிழ் நாட்டில் நிற்பேன். அவ்வளவுதான்.

## ஆலயங்களில் நுழைவுக் கட்டணம்.

*63 வினா—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழ்நாட்டில் எந்தெந்த ஆலயங்களில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அவையில் இதுபற்றி அறிக்கை * ஒன்று வைக்கப்படுகின்றது.

திரு. கோ. இளங்கோவன்: சில ஆலயங்களில் நுழைவுக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. அதை அகற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா?

* 156-159-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: 1—4—1975-ல் இருந்து நுழைவுக் கட்டணங்கள் வசூலிப்பது கூடாது என்று உத்தரவிடப் பட்டு, தற்போது நுழைவுக் கட்டணங்கள் வசூலிக்கப்படுவதில்லை. விழாக் காலங்களில் விசேஷ நுழைவு வாயில் வைத்திருக்கக்கூடிய ஆலயங்கள் தவிர மற்ற எந்த ஆலயங்களிலும் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: விசேஷ நுழைவு வாயில் என்று சொல்கிறார்கள். அதன் வழி உள்ளே போய்தான் சாமியைப் பார்க்க முடியும். எந்தக் கோவில்களானாலும் பக்தர்கள் சென்று சாதாரண காலங்களில் சாமி கும்பிட கட்டணம் வசூலிக்கக் கூடாது என்ற கொள்கையை சர்க்கார் அமல்படுத்துமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: விசேஷ நுழைவு வாயில் என்றால் கட்டணம் செலுத்துவோர் சில பேர் சௌகரியமாக நெருக்கடி இல்லாமல் செல்வதற்காக வசதியாக வைத்திருக்கக் கூடிய ஒரு இடம். அம்மையார் அவர்கள் பல கோவில்களுக்குச் சென்றிருக்கிறார்கள். பல கோவில்களில் அறங்காவலராக இருந்து பழக்கப்பட்டவர்கள். ஆகவே அவர்களுக்கு இந்த விசேஷ நுழைவு வாயிலைப்பற்றி தெரியாமல் இருப்பது எனக்குப் புரிய வில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: அப்படியெல்லாம் இருந்ததால் தான் இன்று கோவில்கள் எப்படிப் போய்க் கொண்டிருக்கின்றன என்பதைப்பற்றிச் சொல்கிறேன். விசேஷ நுழைவு வாயில் வைத்து விசேஷ காலங்களில் அல்லது திருவிழாக் காலங்களில் கூட்டம் இருக்கும்போது நுழைவுச் சீட்டு என்று வைத்து பணம் வாங்கலாமே தவிர சாதாரண காலங்களில் விசேஷ நுழைவு வாயில் வைத்து கட்டணம் வசூலிக்கக் கூடாது. போகிற பக்தர்களுக்கு வசதியிருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் ! . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்கள் கேள்வி கேட்கவில்லை. நீங்கள் ஏன் பதில் சொல்லிக்கொண்டிருக்கி றீர்கள்.

[1975 அக்டோபர் 25

**திரு. கோவை செழியன்:** அமைச்சர் அவர்கள் பதில் கூறும் போது, வரிசையில் நிற்காமல் வசதியாகப் போய்ப் பார்த்து வர விசேஷ நுழைவு வாயில் வழி செல்வதற்கு கட்டணம் வசூலிக்கப் படுவதாகச் சொன்னார்கள். ஆண்டவனைப் பொறுத்தவரையில் பக்தர்கள் எல்லோரும் அவருக்கு குழந்தைகள். ஆண்டவன் முன் எல்லோரும் சமமே. ஆண்டவன் முன்னால் வசதியுள்ளவர்களும் வசதியற்றவர்களும் எல்லோரும் சமம்தான். ஆண்டவனை பார்க்க வருகிறவர்கள் கியூவில் நிற்கிறார்கள். நுழைவுக் கட்டணம் செலுத்தி முன்னதாகப் பார்த்துவிட்டுச் செல்கிறார்கள் என்றால், ஆண்டவனிடம் கூட பொதுவுடைமையைப் புகுத்தவில்லை என்றால் எப்போது புகுத்துவது? க்யூவில் நிற்காமல் லஞ்சம் கொடுத்து சிலர் ஆண்டவனை முன்பாகவே பார்த்துவிட்டுப் போகிறார்கள். இப்படி ஆண்டவனைப் பார்க்க லஞ்சம் தருகிறவர்களை இந்த மிஸா சட்டத்தின் கீழ் பிடித்து உள்ளே போடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** நெருக்கடியில் சென்று ஆண்டவனைப் பார்த்தால் அதனால் அனுகூலங்கள் இருக்குமென்று சொன்னால் தாராளமாக நெருக்கிப் போக வசதி செய்யப்பட்டிருக்கிறது. தனி நுழைவு வாயில் வழி அல்லாமல் நெருக்கிச் சென்றால் பிரயோஜனம் உண்டு என்று சொன்னால் தாராளமாக நெருக்கிச் செல்லலாம்.

**திரு. கு. காமாட்சி:** பகுத்தறிவுப் பிரச்சாரம் இல்லாத காலத்தில் சொர்க்கத்திற்கு டிக்கட் கொடுக்கப்பட்டதாக கதை எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதுகூட ஸ்ரீரங்கம் போன்ற பகுதிகளில் சொர்க்கத்திற்கு டிக்கட்டுகள் தரப்படுகின்றன. அதாவது, சொர்க்க வாசல் டிக்கட்ஸ். அதை மாற்றியமைப்பதற்கு அரசு முன்வருமா?

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தத் தொகுதி உறுப்பினர் அம்மையார் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விளக்கமாகச் சொன்னால் தேவலாம்.



1975 அக்டோபர் 25]

### பட்டுக்கோட்டை தீப்பெட்டித் தொழிற்சாலை

* 64 வினா—**திரு. ஆ. கு. சுப்பையா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர், கிராமத் தொழில் வாரியத்தின் கீழ், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலையை அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையாக மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) ஆம்.

(இ) கலைக்கப்பட்டுள்ள பட்டுக்கோட்டை தீப்பெட்டித் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து நிலமும், கட்டிடமும் வாங்கப்பட்டு கதர், கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் தமிழ்நாடு மாநில எண்ணெய் மற்றும் உப பொருட்கள் கூட்டுறவு சம்மேளனம், அரிசி, தவிடடிலிருந்து எண்ணெய் பிழியவும் சாதனம் ஒன்றை இங்கு நிறுவும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

**திரு. ஆ. கு. சுப்பையா:** சார், அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலையில் கிட்டத்தட்ட 100 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அப்படியிருக்கையில் அந்தத் தொழிற்சாலையை கலைப்பதற்கு என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை கதர், கிராமத் தொழில் வாரியத்தினால் ஆரம்பித்து நடத்தப்படவில்லை. தொழில் துறையின் சார்பில் நடத்தப்பட்டு வந்தது. ஆரம்ப காலத்திலிருந்தே அதில் ஏராளமான நஷ்டம் வந்ததால், அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலையை மூடிவிட்டார்கள். அதற்குப் பிறகு வெறுமனே இருந்து வந்த அந்த இடத்தை தற்போது கதர், கிராமத் தொழில் வாரியம் பெற்றுக் கொண்டு, அங்கே அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் பிழியும் தொழிற்சாலை துவங்க உத்தேசித்துள்ளது.

### *Pre-matriculation scholarships for girls.*

* 65 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(a) whether the rate of pre-matriculation scholarships for girls belonging to Scheduled Castes and Scheduled Tribes has been increased; and

(b) if so, the reasons therefor?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** (அ) ஆம்.

(இ) மெட்ரிக் படிப்பிற்கு முந்திய நிலையில் படிப்பை நிறுத்துகின்ற அரிசன, பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவிகளின் விதம் மாணவர்களின் விதத்தைவிட அதிகமாக உள்ளது. சமுதாய, பொருளாதார காரணங்கள், மெட்ரிக் படிப்பிற்கு மேல் தொடர்ந்து படிக்க வேண்டுமென்ற அவர்களது உற்சாகத்தைக் குறைக்கிறது. மெட்ரிக் படிப்பிற்கு முந்திய நிலையில் படிப்பினைத் தொடர்ந்து படிப்பதற்கு ஊக்கமளிக்கும் வகையில் அவர்களின் படிப்பு உதவித் தொகையை மாநில அரசு 1974-75-ம் ஆண்டிலிருந்து 50 விழுக்காடு அதிகமாக உயர்த்தியுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், இது மாணவியருக்கு மாத்திரம் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேமாதிரி ஏன் மாணவர்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்படவில்லை? அப்படிக் கொடுப்பதற்கு அரசு வழி செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** இந்தக் கேள்வியே பிரி-மெட்ரிக் முன்னாலே உள்ள படிப்பைப் படிக்கிற அரிசன, பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவர்களை விட மாணவியர்கள் அதிகமாக பள்ளியை விட்டு நின்று விடுகிறார்களே, அதற்குக் காரணம் என்ன, உபகாரச் சம்பளம் இல்லையா என்ற அடிப்படையில் கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான், 1974-75-ம் ஆண்டிலிருந்து மாணவர்களை விட மாணவியர்களுக்கு வழங்குகிற தொகையை 50 விழுக்காடு அதிகப்படுத்திக் கொடுத்து இருக்கிறோம் என்ற புள்ளி விவரத்தைக் கொடுத்தேன். மாணவர்கள் பெரும்பாலும் விடுதிகளில் வந்து தங்கிப் படிக்கிறார்கள். 4 வகுப்பிற்கு மேல் படிக்கும் மாணவர்கள் எங்கே விடுதி இருந்தாலும் அங்கே போய்விடுகிறார்கள். அங்கே அவர்களுக்கு இலவச உணவு, உடை, இருக்க இடம் எல்லாம் அளிக்கப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 600 விடுதிகள் இருந்தும், அதிலே இரண்டு மடங்குக்கு அதிகமாக மாணவர்கள் இருக்கிறார்கள். மாணவியர்களுக்குத்தான் சில சங்கடங்கள் இருக்கின்றன. அதற்காகத்தான் தொகை உயர்த்திக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சர்க்கரை ஆலைகள் "லே ஆஃப்" செய்ததும் தொழிலாளர் பாதிப்பும் பிற விளைவுகளும்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. ஏ. ஆர். மாரிமுத்து ஆகியோர்

'Serious situation arising out of lay-off in the Sugar Mills in the State including Sakthi, Pugaloor, Pettaivaithalai, Kottur, etc., and consequent non-production of sugar affecting both the workers and the growers and the economy of the State generally' என்ற பொருள் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். அது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அவர்கள் சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** உதவி சபாநாயகர் அவர்களே, இது சர்க்கரைத் தொழிலாளர்களை மாத்திரம் அல்லாமல், சர்க்கரைத் தொழிலையே பாதிக்கக்கூடிய அளவுக்கு மிக முக்கியமான விஷயமாக இருக்கிற காரணத்தால்

I crave your indulgence to allow me some time to explain the situation which is prevailing now.

சார், பொதுவாக நம்முடைய தமிழ் நாட்டில் தான் 17 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இந்தியாவில் இருக்கக்கூடிய 207 சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாவதில், அதிகமான அளவுக்கு தமிழ் நாட்டு சர்க்கரை ஆலைகளில்தான் உற்பத்தியாகின்றது.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 25

அதாவது இந்தியாவின் உற்பத்தியில் 10 சதவிகிதத்திற்கு மேல் தமிழ் நாட்டில் மட்டும் உற்பத்தியாகிறது. இதிலே 16,000 தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அப்படி இருக்கக்கூடிய இந்தத் தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருளாக இருக்கக்கூடிய கரும்பு 1974-75-ம் ஆண்டிலே 1¾ லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், இந்த ஆண்டு 60-70 ஆயிரம் ஏக்கரில்தான் பயிரிடப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. சென்ற ஆண்டு பயிரிடப்பட்டதில் பாதி அளவுக்குக்கூட பயிரிடப்படவில்லை. கரும்புக்குப் போதுமான விலை கொடுக்காத காரணத்தால்தான் இந்த ஆண்டு சரியாகப் பயிரிடப்பட்டதாகத் தெரியவில்லை.

மத்திய சர்க்கார் குறைந்த பட்சம் ஒரு டன்னுக்கு 85 ரூ. என்று சொல்லியிருக்கிறார்களே தவிர கூடுதலாக எவ்வளவு கொடுக்கலாம் என்று சொல்லவில்லை. மற்ற மாநிலங்களில் எல்லாம் 85 ரூபாய்க்கு மேல் 30 ரூ. 40 ரூ. அதிகமாகக் கொடுத்து இருக்கிறார்கள்.

இந்த ஆண்டு வந்துள்ள செய்தியைப் பார்த்தால் தமிழ் நாட்டைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் அதிகமாக கரும்பு உற்பத்தியாகி இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு இங்கே கரும்பு குறைவாக விளைந்திருக்கிற காரணத்தால் இந்த ஆண்டு சர்க்கரை ஆலைகள் நடக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது. சாதாரணமாக ஒரு ஆண்டில் 8 மாதம் சர்க்கரை ஆலைகள் நடக்கும். 4 மாதம்தான் ஆலைகள் ஓடாமல் இருக்கும். அது ஒரு சீசனல் பாக்டரி. ஆனால் இந்த ஆண்டைப் பொறுத்த வரையில், நவம்பர் மாதம் ஆரம்பிக்கும் சர்க்கரை ஆலை 2 மாதம் ஓடுமா என்பது கூடச் சந்தேகமாக இருக்கிறது.

இங்கே சாதாரணமாக நிரந்தரமாக இருக்கக்கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கை 60 சதவிகிதம் ஆகும். அவர்களுக்கு எப்போதுமே 'லே-ஆப்' விடுவது கிடையாது. இந்த ஆண்டு அவர்களுக்கும் 'லே ஆப்' விடும் நிலைமை இருக்கும் என்று கருதுகிறேன். அப்படியிருக்குமானால் அங்கே சீசனல் தொழிலாளியாக வரும் ஸ்கில்ட் ஒர்க்கர்ஸில் 50 சதவிகிதமும், செமி-



1975 அக்டோபர் 25] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஸ்கில்ட் ஒர்க்கர்ஸில் 25 சதவிகிதம், அன்-ஸ்கில்ட் ஒர்க்கர்ஸில் 10 சதவிகிதம் போதுமான ஊதியம் கிடைக்காமல் அவதிப்படும் நிலைமை வரும். இப்போது இருக்கும் நிலைமையைப் பார்த்தால், அந்த மாதிரி நிலைமை வந்து விடும்.

அது மட்டுமல்லாமல் இப்போது கரும்பு உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பணமும் பாக்கி நிற்கிறது. எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விவரப்படி பார்த்தால், சக்தி சுகர்ஸ் கம்பெனிக்கு 1½ கோடியும், கோத்தாரி சுகர்ஸ் கம்பெனிக்கு 70 லட்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனால் தொழிலாளர்கள் நேரடியாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

அது மாத்திரமல்லாமல், இந்தக் கரும்பு விவசாயத்தில் ஈடுபட்டு இருக்கும் விவசாயிகளும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்படி எல்லா வகைகளிலும் நெருக்கடி ஏற்பட்டு இருப்பதால், இந்த விஷயத்தில் தொழிலாளர் நல அமைச்சர் மாத்திரம் அல்லாமல், தொழில் அமைச்சர், விவசாய அமைச்சர் ஆகியோரும் சேர்ந்து இதற்கு முடிவு எடுக்கக் கூடிய விஷயமாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

சுருக்கமாகச் சொல்லப்போனால் அரசாங்கம் இதைப் பற்றி முழு கவனம் எடுத்து, தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தவிர்ப்பதோடு அல்லாமல், அந்தத் தொழில் நசுங்கக்கூடிய நிலைமைக்குப் போகாமல் பார்த்துக் கொள்வதற்கு வழி என்ன செய்யவேண்டும் என்று பார்க்க வேண்டும், அதிலே ஈடுபட்டு இருக்கும் விவசாயிகளுக்கு ஏற்கனவே கொடுத்ததற்குப் பணம் கொடுக்காமல் இருப்பதால் அவர்கள் தொடர்ந்து பயிர் செய்ய முடியாமல் இருப்பதால்,

The crisis is affecting not only the workers but also agriculturists and industries. It is a major issue affecting the future of the economy of the State.

என்ற முறையில் இது கவனப்பாது தெத்தி வைத்து விவாதிக்கத் தக்க அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் என்று கூறிக் கொள்கிறேன்,

இந்த விஷயத்தை அவையை ஒத்தி வைத்து விவாதித்தால் எல்லாத் தரப்பிலும் உள்ள உறுப்பினர்களும் இதற்கு ஆலோசனை கூற முடியும். ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஏ. எம். இராஜா அவர்கள் கொடுத்த நோட்டீஸ்கூட என்னிடத்தில் இருக்கிறது. அதிலே பல விவரங்கள் அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, இந்த விஷயம் குறித்து விவாதிக்க சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்தால், இந்த நிலைமைகளைச் சமாளிக்க என்ன செய்ய வேண்டுமென்பதற்கு ஒரு நல்ல முடிவு எடுக்க முடியும் என்பதால், அவையை ஒத்தி வைத்து இதை விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, சர்க்கரை ஆலைகளில் இன்று ஏற்பட்டு இருக்கிற நிலைமையைப் பார்த்தால், அடுத்த ஆண்டு இந்த ஆலைகள் வேலை செய்யக்கூடிய சூழ்நிலை தமிழகத்தில் இல்லை என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். கரும்பு உற்பத்தியாளர்களுக்குப் போதிய விலை கிடைக்காததாலும், சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்ட விலை கூட அவர்களுக்குக் கிடைக்காததாலும் இந்த நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. சில ஆலைகளில் டன்னுக்கு 12 ரூ. பாக்கி வைத்து இருக்கிறார்கள். சில ஆலைகளில் டன்னுக்கு 5 ரூ. பாக்கி வைத்து இருக்கிறார்கள். நாம் நிர்ணயித்துச் சொன்ன விலைக்குக் கரும்பு சப்ளை செய்த பின்னாலும், அதற்குப்பணம் கொடுக்காமல் இருக்கும் நிலையில், இதர பொருள்களை உற்பத்தி செய்தால் அது தங்களுக்கு லாபகரமாக இருக்கிறது என்ற காரணத்தால், கரும்பு விவசாயிகள் கரும்பு பயிரிடாமல் வேறு பயிர்கள் விவசாயம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

சென்ற ஆண்டு 1¾ லட்சம் ஏக்கர் பயிரிடப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், இந்த ஆண்டு 60–70 ஆயிரம் ஏக்கரில்தான் பயிரிடப்பட்டு இருக்கிறது. இந்த நிலைமை இருந்தால் தமிழ் நாட்டில் இருக்கும் சர்க்கரை ஆலைகள் எதுவும் முழுவதுமாக ஓட முடியாது. இந்தியாவிலே உற்பத்தியாகும் சர்க்கரையில் 10 சதவிகிதம் தமிழ் நாட்டில் உற்பத்தியாகிறது. இன்று இருக்கும் சர்க்கரை நெருக்கடியில் தமிழ் நாட்டில் சர்க்கரை உற்பத்தி குறைந்தது என்று சொன்னால் அது மேலும்





நெருக்கடியை ஏற்படுத்தும். இதிலே 16,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். வரக்கூடிய ஆண்டில் கரும்பு போதுமான அளவுக்கு வராது என்று தெரிந்து, இப்போதே நான்கு பாக்டரியிலே 'லே-ஆப்' செய்து விட்டார்கள். இது மட்டுமல்லாமல் உலகிலேயே அதிகப்படியாக ஓட்டி உற்பத்தி செய்த ஆலை என்ற விதத்தில் பார்த்தால் ஒரு ஆண்டில் 315 நாட்கள் ஓட்டிய சர்க்கரை ஆலை சக்தி சர்க்கரை ஆலை. பத்து இலட்சம் டன் கரும்பைப் பிழிந்திருக்கின்றார்கள் அவர்கள். அந்த மில்லில் இப்போது லே-ஆஃப் கொடுத்தது மட்டுமல்லாமல் 350 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்திருக்கின்றார்கள். சாதாரணமாக லே-ஆஃப் என்று இருக்கும் நேரத்தில்கூட நிரந்தரத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வது கிடையாது. அவர்களுக்கு இயந்திரங்களைத் துடைத்து ஓட்டிப் பார்ப்பது போன்ற ஏதாவது வேலைகளைக் கொடுத்து வேலை கொடுத்துக்கொண்டே இருப்பார்கள். இந்த ஆண்டு கரும்பு வருவது குறைந்துவிட்டது என்ற காரணத்தினைக் காட்டி முழுமையாக லே-ஆஃப் கொடுத்து, வேலையிலிருந்தும் நீக்கம் செய்திருக்கின்றார்கள் அங்கே. இந்த நிலைக்கு ஒரு முடிவு காணவேண்டியது அவசரமும், அவசியமும் ஆகும்.

இதிலே தொழிலாளர்கள் பிரச்சனை என்பது ஒரு பக்கம் இருக்க, நாட்டிற்குத் தேவையான சர்க்கரை உற்பத்தியாகாமல் இருக்கும் நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றது. நாட்டிலே இவ்வளவு உற்பத்தியாகிக் கொண்டிருக்கும்போதே மக்களுக்குத் தேவையான அளவிற்குச் சர்க்கரை கொடுக்க முடியாமல் இருக்கும்போது, இப்படி ஆலைகளிலும் முடக்கம் ஏற்பட்டால் நாட்டிலே நிலைமை என்னவாகும் என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

மதிப்பிற்குரிய தோழர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறியதைப் போல அரசாங்கம், கரும்பு உற்பத்தியாளர்கள் மற்றும் ஆலை அதிபர்கள், தொழிலாளர்கள் இவர்கள் கூடிப் பேசி, தமிழ் நாட்டிலே சர்க்கரை ஆலைகள் மூடப்படாமல் தொடர்ந்து நடப்பதற்கான வழி வகைகளைக் காண்பது மிக, மிக அவசியமாகும். இது மட்டுமல்லாமல், தொழிலாளர்களுக்கு லே ஆஃப்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1975 அக்டோபர் 25

கொடுத்து அல்லது வேலை நீக்கம் செய்து அவர்களைத் தொல்லைகளுக்குட்படுத்தாமல் இருப்பதற்கும் உடனடியான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

சென்ற ஆண்டு சர்க்கரை ஆலைகள் பெரும லாபம் சம்பாதித்தன. இந்த ஆண்டு அந்த அளவிற்கு லாபம் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் தொழிலாளர்களைப் பட்டினி போடக்கூடாது. சாதாரணமாக ஆண்டு ஒன்றில் 8 அல்லது 9 மாதங்கள் முழுச்சம்பளம் பெற்றுக்கொண்டு, மீதமுள்ள மூன்று அல்லது நான்கு மாதங்களில் லே-ஆஃப் சம்பளம் பெற்று வருகின்றவர்கள் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள். இப்போது ஒன்பது மாதங்களுக்கு லே-ஆஃப் சம்பளம் என்றால் அவர்கள் வாழ முடியுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

எனவே, இந்த ஆலைத் தொழிலாளர்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் அவர்கள் வாழ்வதற்கு வகை செய்தாக வேண்டும். பெரும் லாபம் சம்பாதித்த இந்த ஆலைகள் சென்ற ஆண்டு கிடைத்த லாபத்தின் ஒரு பகுதியை இந்த ஆண்டு பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு சம்பளமாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இதிலே அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்தி இப்போதுள்ள நிலைமை மாறி சர்க்கரை ஆலைகள் மூடப்படாமல் தொடர்ந்து நடப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதில் ஆளும் கட்சியில்கூட பலரும் பெரிதும் அக்கறை கொண்டவர்கள் இருக்கின்றார்கள். எனவே இதிலே ஒரு விவாதம் என்று இருந்தால் அனைவரும் தங்களுடைய யோசனைகளைத் தெரிவிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்ற முறையில், இந்த அவையின் இதர நடவடிக்கைகளைத் தள்ளிவைத்து இதுபற்றி விவாதிப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: துணைத் தலைவரவர்களே, சர்க்கரை ஆலைப் பிரச்னையைப் பொறுத்தவரையில், பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகம் மிகச் சிறப்பான முறையில் உற்பத்தியினைப் பெருக்கிக்கொண்டு வந்தது. விவசாயிகளும் பெருமளவில் கரும்பு உற்பத்தியில் கவனம் செலுத்தி வந்தார்கள். தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை உலக மார்க்கெட்டு



1975 அக்டோபர் 25] [திரு. க. இராசாராம்]

களில் விரும்பப்படுகின்றது என்று அறிந்த தமிழக சர்க்கரை ஆலைத் தொழில் அதிபர்களும், சக்தி சர்க்கரை ஆலை போன்றவற்றிலே மேலும் 1,500 டன் உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்களையும் பொருத்தி வந்தார்கள். ஆனால் எதிர்பாராத விதமாக, மத்திய அரசு வட மாநிலங்களில் உள்ள சர்க்கரை ஆலைகள் உற்பத்தி செய்யும் சர்க்கரைக்கு ஒரு லெவி விலையும் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரைக்கு ஒரு லெவி விலையும் நிர்ணயம் செய்த காரணமாக ஒரு சிக்கலான பிரச்சனை இங்கே உருவாயிற்று. வடமாநிலங்களில் கொடுக்கப்படும் விலையை விட தமிழகத்தில் கொடுப்பது ரூ. 3 குறைவாக இருந்தது. இதனால் ஒரு பிரச்சனை ஏற்பட்டது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): இங்கே ஒரு குவிண்டாலுக்கு ரூ. 150 கொடுத்தால் அங்கே ரூ. 235 வரையிலும் கொடுத்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சென்ற ஆண்டு அவர்களுக்கு அதிக லாபம் கிடைத்ததால் சில ஆலைகளில் தொழிலாளர்களுக்கு 45 சதவிகிதம் என்ற அளவிற்குக்கூட போனஸ் கொடுத்தார்கள். அரசாங்கம் அந்த அளவிற்கு அவர்களுக்காகப் பேசி வாங்கிக் கொடுத்தது. ஆனால் இந்த ஆண்டில் பல்வேறு பிரச்சனைகள் காரணமாக கரும்பு உற்பத்தி குறைய ஆரம்பித்தது. மேலும் இடையிலே அரிசி விலை உயர்வு காரணமாக விவசாயிகள் மீண்டும் நெல் உற்பத்தியில் கவனம் செலுத்தத் தலைப்பட்டனர். இப்படிப்பட்ட காரணங்களினால் தான் கரும்பு வருகை குறைந்து ஆலைகளில் ஒரு சுணக்கம் ஏற்பட்டது, தொழிலாளர்களும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றார்கள்.

இந்த நிலைமைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற அக்கறையுடன் தான் அரசாங்கம், சென்ற ஒன்றரை மாதக் காலத்தில் சர்க்கரை ஆலை பிரச்சனை சம்பந்தமாக, நான்கு முறை சர்க்கரைத் தொழில் அதிபர்களையும் தொழிலாளர் தலைவர்களையும் அழைத்து, ஒவ்வொரு முறையும் நான்கு மணி நேரம் என்ற அளவிற்கு மொத்தம் ஏறத்தாழ பதினாறு மணி நேரம் இதுபற்றிப் பேசி

யிருக்கிறோம். நேற்றுக்கூட இது சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் மாலை இரண்டே முக்கால் மணி வரையில் நடைபெற்றது. இறுதியில், வரும் தீபாவளிக்குள்ளாக ஏதாவது முடிவிற்கு வருகிறோம் என்ற அளவிற்கு நேற்று நடத்திய பேச்சு வார்த்தைகளில் நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் பேசி ஒரு இறுதி முடிவிற்கு வரும்வரையில் நாம் பொறுத்திருப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சர்க்கரை ஆலைகள் கொடுக்கும் கரும்பின் விலையைப் பற்றிய பிர்ச்சனை இருக்கிறது. தொழிலாளர்களைப் பற்றிய பிரச்சனை இருக்கின்றது. இதைப்பற்றியெல்லாம்கூட இந்த மாமன்றம் கவனம் செலுத்த வேண்டும் என்றுதான் விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சனையில், சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் பிரச்சனையைப் பொறுத்தமட்டில் பிரச்சனைகள் சுமுகமாகத் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கின்றது. எனவே, இந்த நேரத்தில் இதன் மீதான விவாதம் அவசியமில்லை என்று கருதுகிறேன்.

THIRU K. T. K. TANGAMANI : One point that I had raised had been evaded. I want to know whether a conference of representatives of State Government, cane growers, workers and employers will be convened to find a solution of this question. That point has been overlooked. Will the Hon. Minister give us an assurance that a conference of the interested parties will be convened very soon to settle this question?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, இதிலே கரும்பு உற்பத்தியினைப் பெருக்க வேண்டும் என்பது ஒரு பிரச்னை. லே-ஆஃப் இல்லாமல் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலை கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது மற்றொரு பிரச்சனை. தொழிற்சாலைகளிலே ஏற்கெனவே நடந்ததைப்போல ஒரு பத்து மாத காலத்திற்கு ஆலைகள் தொடர்ந்து வேலை செய்ய வேண்டும் என்று தொழில் அதிபர்களுக்கு அறிவுரை கூறவேண்டியது ஒரு





பிரச்சனை என்ற முறையில் இது அவ்வளவும் இணைந்து இருக்கின்றன. இந்த நிலையில் தொழிலாளர்கள்—தொழிலதிபர்கள் என்று இப்போது நடைபெறும் இருதரப்புப் பேச்சுக்களை அரசாங்கம் தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் இன்னும் உற்பத்தியாளர்கள் இவர்களையெல்லாம் கூட்டி வைத்து, விவசாயத் துறை அமைச்சர் அவர்களையும் கலந்து கொண்டு, கரும்பு உற்பத்தியை எந்த வகையில் பெருக்கலாம் என்று ஆராய்ந்து, யாரும் பாதிக்கப்படாமல், அதிக உற்பத்திக்கான வழி வகைகளைக் காண்பதற்கு இந்த அரசாங்கம் தயங்காது என்று மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் அவசியம் இல்லை என்று கருதி அவற்றுக்கு அனுமதி மறுக்கின்றேன்.

### (3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

**(அ) தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (உற்பத்தி பகிர்ந்தளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/74) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.**

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (உற்பத்தி பகிர்ந்தளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1974) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை இம்மன்றத்தின் முன் வைக்கின்றேன்.

---

* 9—4—1974-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[1975 அக்டோபர் 25

### (4) 1975-76 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை—அளித்தல்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 1975-76 ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகளை இம்மன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. மொத்தம் 46.08 கோடி ரூபாய்க்கான துணை மானியக் கோரிக்கைகள் அவையின் ஒப்புதலுக்காக வைக்கப் பட்டுள்ளன. இவற்றில் 21.97 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 14.11 கோடி ரூபாய் மூலதன, கடன் கணக்கு களிலும் வரும். தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியளவை உயர்த்துவதற்காக 10 கோடி ரூபாயும் சேர்க்கப்பட்டுள்ளது. மொத்தக் கோரிக்கையில் 45.55 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட இனங்களின்கீழும், 0.53 கோடி ரூபாய் சாட்டப்பட்ட இனங் களின்கீழும் வரும். இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டப் பணிகள், வேலைத் திட்டங்கள் குறித்துச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

2. ஒரு நூற்றாண்டுக் காலத்தில் நம் மாநிலம் கண்டிராத கடும் வறட்சி நிலைமையை நாம் உறுதியுடனும், ஊக்கத்துடனும் எதிர்த்து நின்று வெற்றி கண்டுள்ளோம். 1974—75 ஆம் ஆண்டில் திட்டத்தின்கீழ் வராமல் தனிப்பட்ட முறையில் வறட்சித் துயர் தணிப்புச் சிறப்புப் பணிகளுக்காக 8.8 கோடி ரூபாய் செலவிட்டுள்ளோம். நடப்பாண்டில் இத்தகைய வறட்சித் துயர் தணிப்புச் சிறப்புப் பணிகளுக்காக 15.8 கோடி ரூபாய் ஒதுக்கி யுள்ளோம்; இதுவரை 15.3 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதைத் தவிர பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதன் பொருட்டு உழவர்களுக்குத் தக்காவிக் கடன்கள் வழங்குவதற் காக 3 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. வறட்சித் துயர் தணிப்பு நடவடிக்கையாகச் சிறப்புத் திட்டத்தின்கீழ் டீசல் பம்பு செட் ஒன்றுக்கு 1,000 ரூபாய் என்ற அளவில் உதவித் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் செலவிடப்பட்ட மொத்தத் தொகை 1.21 கோடி ரூபாய் ஆகும். 60,000 வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது என்பதையும், இவற்றில் இதுவரை 57,600 பணிகள் முடிக்கப்பட்டு



1975 அக்டோபர் 25] [டாக்டர் மு. கருணாநிதி]

விட்டன என்பதையும், மிகப் பரவலாக கிராமப்புறங்களில் இப் பணிகள் எடுத்து நடத்தப் பட்டன என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். மேலும் திட்டப் பணிகளை வறட்சி பீடித்துள்ள பகுதிகளில் விரைவுபடுத்தியுள்ளோம். இந்த முறையில் இயல் பான திட்ட நிதி ஒதுக்கீடுகளிலிருந்து 30 கோடி ரூபாய் 1974—75, 1975—76 ஆகிய இரண்டு ஆண்டுகளில் செலவிடப் பட்டுள்ளதென்று மதிப்பிடுகிறோம். எனவே, வறட்சித் துயர் தணிப்புக்காக மொத்தம் ஏறத்தாழ 59 கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது. இதைத் தவிர வறட்சி காரணமாக உள்ளூர் தீர்வை (Local Cess ), உள்ளூர் தீர்வை மேல் வரி (Local Cess surcharge இவற்றின் வசூலைத் தள்ளுபடி செய்ததால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய ஊராட்சி அமைப்புகளுக்கு 6 கோடி ரூபாய் துணை மானியத்தில் ஒதுக்கியுள்ளோம்.

3. 1974—75 ஆம் ஆண்டில் வறட்சித் துயர் தணிப்பு நடவடிக் கைகளுக்காக மத்திய அரசிடமிருந்து 7.5 கோடி ரூபாய் மட்டுமே நமக்குச் சிறப்பு உதவியாகக் கிடைத்துள்ளதென்பதை மதிப் பிற்குரிய உறுப்பினர்களின் நாட்டத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதிலும் 70 சதவீதம் கடனாகவும், 30 சத வீதமே மானியமாகவும் அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் நினைவூட்டுகிறேன். இந்த பயங்கர வறட்சியின் காரணமாக ஏற்பட்ட பெருஞ்சுமையை மாநில அரசு பெரும்பாலும் தனது நிதி வாயில்களிலிருந்தே தனித்து நின்று தாங்கியுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

4. வறட்சி காரணமாக நகரப் பகுதிகள், குறிப்பாக சென்னை மாநகர் பாதிக்கப்பட்டு, குடிநீர் வழங்கல் நிலைமை சீர்கேடுற்றது. அரசு, சென்னை மாநகராட்சிக்கு மொத்தம் 176.18 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. இவ்வுதவியைக் கொண்டு மாநகராட்சி 5,000 குழாய்க் கிணறுகளையும், 400 சாதாரணக் கிணறுகளையும் வெட்டியதுடன், 40 நீர் எடுத்துச் செல்லும் லாரிகள், 625 எஃகு நீர்த் தொட்டிகள், 28 பம்பு செட்டுகள் ஆகியவற்றையும், ஏனைய கருவிகளையும் வாங்கி சென்னை மாநகர மக்களின் இன்றியமையாக் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்ய முடிந்தது. குடிசைப்

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 அக்டோபர் 25

பகுதிகளிலும் ஏழை மக்கள் வாழ்ந்துவரும் பிற பகுதிகளிலும் போதிய குழாய் வசதிகள் இல்லை. இத்தகைய மக்களின் பயனுக்காகவே இம்மாபெரும் திட்டத்தை மாநகராட்சி ஏற்று முடித்தது. பூண்டி நீர்த் தேக்கத்தில் இருந்து நீர் பெறும் நிலைமையைச் சீர் படுத்தவும் நாம் சிறப்புப் பணிகளை மேற்கொண்டோம். திருவான்மியூர் நீர் வழங்கு திட்டம் மிகக் குறுகிய காலத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்பட்டது. செயற்கை மழை பெய்விப்பது குறித்த சோதனைகளை மேற்கொள்வதற்காக துணை மதிப்பீட்டில் 19.39 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இச்சோதனைகள் நமது நீர்த் தேக்கங்களின் நீர்கோள் பகுதிகளிலும், புழலேரிப் பகுதியிலும் நடத்தப்பட்டன. அரசு துணிந்து மேற்கொண்ட இச் சோதனை ஓரளவு பயன் அளித்தது. இதைத் தொடர்ந்து தென் மேற்குப் பருவ மழையும் நமக்குத் துணைபுரிந்து நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

5. மதுரை மாநகராட்சிக்கு நீர் வழங்கு திட்டங்களுக்காக 24 இலட்சம் ரூபாய் உதவி அளிக்கவும், 19 நகராட்சிகளுக்கு அவற்றின் குடிநீர்ப் பற்றுக்குறையைப் போக்குவதற்கு 4.78 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கவும் துணை மதிப்பீட்டில் வகை செய்துள்ளோம்.

6. இந்த ஆண்டு நிதி இடர்பாடு மிகுந்ததாகும். எனினும், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள், சமுதாயத்தின் ஏனைய எளிய வகுப்பினர் ஆகியோரின் நன்மைக்காகப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றப் போதிய நிதி வசதியை நமது அரசு தொடர்ந்து அளித்துள்ளது. தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் முதற்படியாக, 1975 டிசம்பர் திங்கள் இறுதிக்குள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 30,000 வீடுகளைக் கட்டி முடித்துவிடும். இத்திட்டத்திற்கு மொத்தத்தில் ஏறக்குறைய 13.5 கோடி ரூபாய் செலவாகும். நடப்பாண்டில் இதுவரையில் நாம் இக் கழகத்திற்கு 4.25 கோடி ரூபாய் அனுமதித்துள்ளோம். முதல் நிலைப் பணிகளை முடிப்பதற்காகப் தற்போதைய துணை மதிப்பீட்டில் மேற்கொண்டும் 9.25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வீடுகளைக் கட்டும் பணியை தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இக் கழகத்தின் பொது மேற்பார்வையின் கீழ் சிறப்பு நாட்டத்துடன் கண்காணித்து வருகின்றனர்.



1975 அக்டோபர் 25] [டாக்டர் மு. கருணாநிதி]

7. இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் மீனவர்களுக்கு 5,000 வீடுகளைக் கட்டித் தரவும் நாம் அனுமதி வழங்கியுள்ளோம். இதற்கென துணை மதிப்பீட்டில் முதற்கண் 80 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீனவர்களுக்காக பூம்புகாரில் 35.09 இலட்சம் ரூபாய் செலவில் 500 வீடுகள் கட்டப்பட்டுள்ளன; வாணகிரியில் 28.45 இலட்சம் ரூபாய் செலவில் 400 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த வீடுகளுக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள தவணைத் தொகையை ரத்து செய்து, இவை இலவசமாக வழங்கப்படும் என்று அறிவித்துக் கொள்கிறேன். இந்த வீடுகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், மீனவர்களுக்காகத் தொடங்கப்பெற்றுள்ள இலவச வீட்டுத் திட்டத்தில் 900 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டதாகக் கருதலாம்.

8. துணை மதிப்பீட்டில் பல சமூக நலத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உடலூனமுற்ற மொத்தம் 2,000 பேருக்கு சக்கர நாற்காலிகள், சக்கர மிதிவண்டிகள் வழங்க 8 இலட்சம் ரூபாய்; 1975 மே திங்களில் முட்டுக்காட்டில் தொடங்கி வைக்கப்பட்ட பயிற்சி-உற்பத்தித் தொழிற்சாலைக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு 3.1 இலட்சம் ரூபாய்; அறுதைச் சிறார்களின் நலன் குறித்த பணிகளில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனங்களுக்கு மானியங்கள் 4.56 இலட்சம் ரூபாய்; ஆதரவற்ற கைம்பெண்களுக்கு இலவசமாக 1,000 தையல் இயந்திரங்கள் வழங்க 7 இலட்சம் ரூபாய், மறுமணம் செய்து கொள்ளும் கைம்பெண்களுக்கு 5,000 ரூபாய் தேசீய சேமிப்புச் சான்றிதழ்கள் அளிக்க நிதி ஒதுக்கீடு; முதியோர் உதவித் தொகைத் திட்டத்தை 45 வயதுக்குக் குறையாத ஆதரவற்ற கைம்பெண்களுக்கு நீட்டிப்பதற்காக 24 இலட்சம் ரூபாய்.

9. தாழ்த்தப்பட்ட இந்துக்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் எல்லாச் சலுகைகளையும், கிறிஸ்துவ மதத்திற்கு ஏற்கனவே மாறியுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கும் நீட்டிப்பு

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 அக்டோபர் 25

தென அரசு முடிவு செய்துள்ளது. கல்வி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளுதல், அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு ஆகியவற்றைப் பொறுத்த வரையில் கிறித்துவ மதத்திற்கு மாறிய தாழ்த்தப் பட்டவர்கள்; பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இணையாகக் கருதப்படுவர்; அவர்களுடைய சந்ததியினர் அந்தச் சலுகை களுக்கு அருகதை அற்றவர்கள் என்று இதுவரை இருந்துவந்த நிலைமையை மாற்றி, அவர்களுடைய சந்ததிகளும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினராகக் கருதப்படுவர் என்று முடிவு செய்யப் பட்டுள்ளது. இந்தச் சலுகைக்காகத் தேவைப்படும் நிதி இதுவரை அரிசன நல மானியத்தில் ஒதுக்கியுள்ள தொகைக்குக் கூடுதலாக ஒதுக்கப்படும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கான அரசினர் மாணவர் இல்லங்களில் உணவுச் செலவை உயர்த்தவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த உயர்வு காரணமாக, நடப்பாண்டில் 18.63 இலட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.

10. சென்னையில் மருத்துவமனை இணைந்த ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி ஒன்றை 3.1 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவ அரசு அனுமதி வழங்கியுள்ளது. நாகப்பட்டினம், நாகர் கோயில், குளித்தலை ஆகிய இடங்களில் கூடுதல் மருத்துவமனைக் கட்டிடங்கள் கட்டுவதற்காக முறையே 10 இலட்சம் ரூபாய், 8 இலட்சம் ரூபாய், 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

11. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு இதுவரை வழங்கிய நிதி உதவி முழுவதையும் முழு மானியமாகக் கருதுவ தென்னும் முடிவை அரசு எடுத்துள்ளது. இந்த வாரியத்திற்கு முன்னர் வழங்கப்பட்ட கடன்களும் மானியங்களாக மாற்றப் படும். இத்திட்டம் சமூகத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்குப் பயன் நல்குவதைக் கருத்திற் கொண்டே இவ்வாறு செய்யப் படுகிறது. வீட்டு வசதி—நகர்ப்பகுதி வளர்ச்சி மத்திய கழகத் திடமிருந்து (HUDCO) நமது குடிசைப் பகுதிகள் மாற்றுத் திட்டங்களுக்காக எதிர்பார்த்த உதவி கிடைக்குமெனத் தெரிய வில்லை. எனவே, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத் திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் செய்துள்ள நிதி ஒதுக்



1975 அக்டோபர் 25] [டாக்டர் மு. கருணாநிதி]

கீட்டுக்குக் கூடுதலாக 1.75 கோடி ரூபாய் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. இவை 33 ஆம் எண் மானியத்தில் இடம் பெற்றுள்ளன.

12. தொழில் துறையில் நம்முடைய பெருந்திட்டங்களில் ஒன்று, புதிய சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்துவது ஆகும். வேலூரிலும் திருப்பத்தூரிலும் புதிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவப்பட்டு வருகின்றன. இவை தவிர, தஞ்சாவூரில் புதிதாக ஒரு சர்க்கரை ஆலையை நிறுவ நாம் முடிவு செய் துள்ளோம். புதிய சர்க்கரை ஆலைகள் அனைத்தும் அரசின் உடைமையில் இருத்தல் வேண்டும் என்ற நமது கொள்கைக் கிணங்க, தஞ்சாவூரில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை அரசுத் துறையில் நிறுவப்படும் முதலாவது சர்க்கரை ஆலையாகும். இந்த ஆலையை நிறுவும் பணி ஏற்கனவே தொடங்கிவிட்டது. இத்திட்டத்துக்கு தொடக்கப் பங்கு மூலதனமாக 15 இலட்சம் ரூபாய் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

13. கைத்தறித் துறைக்கான ஒதுக்கீடு 1.5 கோடி ரூபாயும், கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கான ஒதுக்கீடு 86.75 இலட்சம் ரூபாயும் துணை மதிப்பீடுகளில் இடம் பெற்றுள்ளன. இவை 56 ஆம் எண் மானியத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. கைத்தறித் துணி வாங்குவதற்கு அளிக்கும் தள்ளுபடிக்கு ஒரு கோடி ரூபாய் வரையில் கூடுதல் தொகை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

14. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதியுதவிக் கழகத்தில் பங்கு மூலதனமாக ஒரு கோடி ரூபாய் முதலீடு செய் வதற்கு 54 ஆம் எண் மானியத்தில் நிதியொதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. அரசுத் துறையில் பேருந்துப் போக்குவரத்து வளர்ச்சிக்கு இக்கழகம் பெரும்பணி புரியுமென எதிர்பார்க்கப் படுகிறது.

15. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், நீலகிரிப் பகுதியில் மொத்தம் 7 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த மத்திய அரசு உதவி அளிக்க முன் வந்துள்ளது. இவ் வேலைத் திட்டத்தின் கீழ் பல்

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 அக்டோபர் 25

வேறு துறைகளில் அடங்கும் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இவ் வேலைத் திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபாய் செலவு ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசு பொறுப்பேற்கின்ற மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நீலகிரியில் தேயிலைத் தோட்டங்கள் வளர்க்கவும், கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராம்புத் தோட்டங்களை வளர்க்கவும் உரிய திட்டங்கள் மொத்தம் 21.46 இலட்சம் ரூபாய் செலவுகளுக்கான ஒதுக்கீடுகள் 45, 55 ஆம் எண் மானியங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

16. நெருக்கடி நிறைந்த இவ்வாண்டிலும் கலை, பண்பாடு, விளையாட்டுகள், தேசிய ஒற்றுமை ஆகியவற்றை மேம்படுத்த வேண்டியதின் அவசியத்தை நாம் நன்கறிந்துள்ளோம். பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மனின் வழித் தோன்றல்களுக்கு 202 வீடுகள் கட்டித் தருவதற்கு ஒதுக்கப்பட்ட 9.09 இலட்சம் ரூபாய் துணை மதிப்பீடுகளில் இடம் பெற்றுள்ளது. தஞ்சாவூரில் உள்ள சரஸ்வதி மகால் நூலகத்திற்கு நுண் புகைப்படக் கருவித் தொகுதி வாங்கவும், மோடி எழுத்துக்களில் பயிற்சி அளிக்கவும் 2.82 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடும் துணை மதிப்பீடுகளில் இடம் பெற்றுள்ளது. உத்திரப் பிரதேச மாநிலத்தில் சுல்தான்பூரில் நிறுவப்பட்டு வரும் கமலா நேரு அறிவியல் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில், "அறிஞர் அண்ணா" அவர்களின் பெயரைத் தாங்கி நிற்கும் கட்டடப் பிரிவு ஒன்றைக் கட்டுவதற்காக அந் நிறுவனத்திற்கு, ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்க நாம் அனுமதி அளித்துள்ளோம். இந்த இனம் 17 ஆம் எண் மானியத்தில் இடம் பெற்றுள்ளது.

17. துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கியக் கூறுகள் பற்றி நான் குறிப்பிட்டுள்ளேன். சட்டமன்ற உறுப்பினர்கள் முன் வைக்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புகள் இவை குறித்தும் ஏனைய இனங்கள் குறித்தும் மேற்கொண்டு விவரங்களை அளிக்கும். 1975-76 ஆம் ஆண்டுக்கான முதலாவது துணை மானியக் கோரிக்கைகளை இந்த அவை ஏற்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.





## (5) 1969-70 ஆம் ஆண்டில் மிகைச் செலவிற்கான நிதிக் கோரிக்கைகள்—அளித்தல்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 1969–70 ஆம் ஆண்டு மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றத்தின்கண் வைக்க முன் வந்துள்ளேன். அந்த ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியிருக்கிறது. அந்த மைய செலவினங்கள் பற்றிய விவரங்களை இம் மானியக் கோரிக்கையில் காணலாம்.

2. 1973–74 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குகள் ஆய்வுக் குழு, 1969–70 ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தை விட மிகையாகச் செலவாகியிருப்பதைக் குறிப்பிட்டுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்கு மானியக் கோரிக்கைகளை மன்றத்தின் முன் வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக் கணக்குகள் ஆய்வுக் குழு பரிவுரை செய்தது. அவ்வண்ணமே, 1969–70 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம் மன்றத்தின் கண் வைக்கப்படுகிறது. மொத்தத்தில் மிகைச் செலவு 9.44 கோடி ரூபாயாக இருக்கிறது. இதில் பொதுக் கடனைத் திருப்பிச் செலுத்தும் செலவினம் சாட்டிய செலவினமாகும். இதுவே 6.11 கோடி ரூபாய் அளவுக்குப் பெரிய இனமாக இருக்கிறது. ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணம் என்ன என்பது, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது.

3. 1969–70 ஆம் ஆண்டிற்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.30)

**(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.**

**(ஆ) 1975-ஆம் ஆண்டு சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, 1975 ஆம் ஆண்டு சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

**(இ) 1975-ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, 1975-ஆம் ஆண்டு சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத் தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.



**(ஈ) 1975-ஆம் ஆண்டு லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, 1975 ஆம் ஆண்டு லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

**(உ) 1975-ஆம் ஆண்டு டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, 1975-ஆம் ஆண்டு டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவைஅறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

**(ஊ) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, தனியார் மின்வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

**(எ) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, மாநில வக்ஃப் வாரியம் தனியதிகாரியின் பணிகளைச் செல்திறனுக்குதல்) சட்ட முன் வடிவு.**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு மாநில வக்ஃப் வாரியம் (தனியதிகாரியின் பணிகளைச் செல்திறனுக்குதல்) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.



## (6) அறிவிப்புகள்

**தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன் வடிவு.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்து, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித் துள்ளார்கள்.

THIRU K. T. K. TANGAMANI : I am not speaking on this Bill, Sir. Before we consider the question of various Bills already introduced, I want to know as to how many Bills we are to consider in this session. Just now some half a dozen Bills had been introduced. Probably, tomorrow another half a dozen Bills might be introduced. At this rate how many Bills are we to consider in this session? We were told previously that there are only 14 Bills to cover the Ordinances that have been promulgated and two Joint Select Committee reports. The report of one Joint Select Committee had been just now submitted. Probably, the other report will be submitted in a few days. What I say is we should not be taken by surprise, the House should not be taken by surprise in this manner by introduction of new Bills every day. I want your guidance on this point.

MR. DEPUTY SPEAKER : The Chair is in the same position. We are not in a position to say how many more Bills will be coming. But what I can say is, that every thing will be considered in the Business Advisory Committee and proper time allotted.

### 3. அரசினர் சட்ட முன் வடிவுகள்

**(ஏ) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு**

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன் வடிவை * அறிமுகம் செய்து, மேற்படி சட்ட முன் வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

ஊராட்சிப் பகுதிகளில் உள்ள திரைப்பட அரங்குகள் இணைக்க வரி செலுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட இணைக்க வரித் திட்டத்திற்கு எதிர்பார்த்த அளவிற்கு ஆதரவு கிடைக்கவில்லை. தகுதி பெற்ற 979 திரைப்பட அரங்குகளில் 268 திரைப்பட அரங்குகள் மட்டுமே இணைக்க வரி முறையின் கீழ் வரி செலுத்த முன் வந்தன. இந்த 268 திரைப்பட அரங்குகளில் கூட 42 டூரிங் திரைப்பட அரங்குகள் இணைக்க வரி செலுத்துவதற்கான தங்கள் இசைவை 1975 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து புதுப்பித்துக் கொள்ளவில்லை. இந்த இணைக்க வரி முறையின் கீழ் வருமான வரியும் ஊக்கமளிப்பதாயில்லை. இது தவிர இந்த இணைக்க வரி முறையைச் செயல்படுத்துவதில், சில நிர்வாகச் சிக்கல்களும் இருந்தன. எனவே, இந்த இணைக்க வரி திட்ட முறையைக் கைவிடத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கிணங்க, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கைகள் மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ் நாடு அவசரச் சட்டம் 6/1975) அதிகார முறைப்படி ஆளுநர் அவர்களால் வெளியிடப்பட்டது. இப்போது ஆய்விலுள்ள இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை இப்பேரவை ஏற்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I move the following amendment:—

"That the Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1975 be referred to a Select Committee consisting of . . . members of the Legislative Assembly (list of members will be given later)"

THIRU J. JAMES: Sir, I second the amendment.

---

* 21—10—1975-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



THIRU KOVAI CHEZHIYAN: Sir, I move the following amendment:—

"That the Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1975 be circulated for eliciting public opinion".

DR. H. V. HANDE: Sir, I second the amendment.

MR. DEPUTY SPEAKER: The motion and the amendments are before the House for discussion.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த கேளிக்கை வரி திருத்தச் சட்டம் அடிக்கடி நம்மை வந்து பயமுறுத்திக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். முதலில் ஒரு முறை இருந்தது. திடீரென்று வரியை உயர்த்தினார்கள். மீண்டும் அந்த வரியை மறு நாளே குறைத்தார்கள். அப்போதே சொன்னோம். இதைத் தயவு செய்து பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புங்கள் என்று சொன்னோம். மிக அவசர அவசரமாக, பொறுக்குக் கமிட்டிக்குக் கூடப் போக விடமாட்டோம், தீர்வு காணப் போகிறோம் என்று, ஏதோ கலந்து பேசியதாகச் சொல்லி, இங்கே வந்து கம்பவுண்டிங், அதாவது இணக்க வரி என்று இதைக் கொண்டு வந்தார்கள். இந்த இணக்க வரி முறையை ஒரு சில மாதங்கள் அமுல் நடத்திப் பார்த்திருக்கிறார்கள். அதற்குள்ளே இந்த இணக்க வரிக்கு இணங்க மறுத்த காரணத்தினால் மீண்டும் ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து திரும்பவும் பழைய முறைக்குப் போகலாமாவென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது தான் துக்ளக் ஆட்சி என்பதற்கு சாட்சி. இருப்பதைவிட, ஒரு வரி போடுவதிலே என்ன வழியைக் கடை பிடிக்கப் போகிறீர்கள்? இதில் உள்ள கஷ்ட நஷ்டங்கள் என்ன என்று ஒரு பொறுக்குக் கமிட்டி ஆர அமர யோசிப்பதில் என்ன அவஸ்தை வந்தது? சட்டசபை சொன்னாலும் கேட்பதில்லை, சட்டசபை உறுப்பினர்கள் பேச்சைச் சட்டை செய்யாமல் எங்கள் இஷ்டப்படி மாற்றுவோம். எதையும் செய்வோம், எங்கள் பின்னாலே கை தூக்க 134 பேர் இருக்கிறார்கள் எப்படியும் நடத்திக் கொண்டு போவோம் என்பது சட்டசபையினுடைய நல்லெண்ணத்தை அவமதிப்பது மாதிரி இருக்கிறது

1975 அக்டோபர் 25]

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் 134 பேர்கள் என்று சொல்கிறார்கள். ஆளும் கட்சியில் 167 பேர்கள் இருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அப்பட்டமான கட்சி என்று பார்த்தால் அதிலே குறைந்திருக்குமோ என்னமோ.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, நாங்கள் கை தூக்குவது என்பது உண்மை தான். அம்மையார் அவர்கள் 20 ஆண்டுகள் கை தூக்கிக் கொண்டிருந்தார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, கை தூக்குவது அவமானம் அல்ல. ஒரு கட்சி உறுப்பினர் என்றால் அந்தக் கட்சிக்கு கை தூக்கி ஆகவேண்டும். அதைத் தப்பாக நினைக்க வேண்டாம். ஆகையினாலே ஜனநாயகத்திற்குக் கட்டுப் பட்டு கை தூக்கித் தான் ஆகவேண்டும். ஆனால் கை தூக்கு கிறவர்கள் யோசித்து, இதற்கு வேண்டிய பரிகாரம் என்ன இருக்கிறது என்று புரிந்து கொண்டு செய்தால் பரவாயில்லை. இத்தனைக்கும் கேட்டால் எங்களுக்கு கலைத் தொழில் நன்றாகத் தெரியும். கலைத் தொழிலின் பிரதிநிதிகள் நாங்கள் என்று சொல்கிறார்கள். கலைத் தொழிலின் நுணுக்கங்கள் எல்லாம் எங்களுக்குத் தெரியும் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் காலத்தி லேயே இந்தக் கலைத் தொழில் இந்த மாநிலத்தில் சாகிறது என்று சொன்னால் — இவர்களுக்குத்தான் எங்கே அடித்தால் இது சாகும், எங்கே நசுக்கினால் இது மடியும் என்று தெரிந்து அடுத் தடுத்து இந்தத் தொழிலுக்கு மரண அடிகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களோ என்ற சந்தேகம் எங்களுக்கு வருகிறது. இந்தத் தொழிலுக்கு அவ்வப்போது பலவிதமான சங்கடங்களை ஏற்படுத்த ஏன் இப்படிப்பட்ட சட்டங்களை எல்லாம் அடுத் தடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்றும் தெரியவில்லை. இது பழிவாங்கும் மனப்பான்மையைப் போலத்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட பழிவாங்கும் மனப்பான்மையைக் கைவிட வேண்டும். அதுவும் கையிலே அதிகாரத்தை வைத்துக்கொண்டு பழி வாங்குவது தவறான நிலைக்குக் கொண்டுபோய்விடும் என்பதை நான் நினைவுறுத்த ஆசைப்படுகிறேன்.



1975 அக்டோபர் 25] [திருமதி த. ந. அனந்தநாயகி]

ஏதோ இவர்கள் கம்பவுண்டிங் முறை கொண்டுவந்ததாகவும், அதை டூரிங் சினிமாக் கொட்டகைக்காரர்கள் ஏற்றுக்கொள்ள முன்வராத காரணத்தினால், திரும்பவும், பழைய நிலைக்கே இந்த முறையைக் கைவிட்டுப் போவதாகவும் சொல்கிறார்கள். ஒரு டூரிங் சினிமாக் கொட்டகைக்கு வாரத்திற்கு 35 காட்சிகள் என்கிற விகிதத்தில் வரிபோட்டால் அவர்கள் எப்படிக் கட்ட முடியும்? ஒரு நாளைக்கு 2 ஷோ அவர்களுக்குப் பெரிய சங்கட மாக இருக்கிறது. ஞாயிறு அன்று மாட்டினி ஷோ போட்டாலும் கிராமங்களில் விவசாயத் தொழிலாளர்கள் வருவதில்லை. அவர்கள் 35 ஷோ-க்கு கம்பவுண்டிங் வரி கட்ட வேண்டுமென்றால் எப்படிக் கட்ட முடியும்? வாரத்தில் பதினொன்று, பதினைந்து ஷோக் களுக்கு மேல் அவர்களால் காட்ட முடியாது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** விளக்கமாகப் பின்னால் சொல்லலாம் என்று கருதினேன். அந்தப் பிரச்சினை எழுப்பப் பட்டுவிட்டதால் இப்போதே சொல்கிறேன். வாரத்திற்கு 33, 35 ஷோ என்ற அடிப்படையில் எங்கும் வரி கட்டும்படியாகத் தெரிவிக்கப்படவில்லை. அதிகாரிகள் போட்டிருப்பது டூரிங் சினிமாக்களுக்கு வாரத்திற்கு 14 ஷோக்கள், பர்மனென்ட் தியேட்டர்களாக இருந்தால் 15 ஷோக்கள் என்ற அடிப்படையில் தான் டூரிங் சினிமா தியேட்டர்காரர்களைக் கலந்துகொண்டு, அவர்களும் இதற்கு ஒப்புக்கொண்டு போடப்பட்டிருக்கிறது. எங்கே 35 ஷோக்களுக்குப் போடப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: முதலில் 35 ஷோக்கள் என்று போட்டார்கள். அப்புறம் 14 என்று குறைத்திருக்கிறீர்கள். அந்த விவரங்கள் என்னிடம் இருந்தால் கொடுக்கிறேன்.

இன்னும் இன்ஸ்பெக்ஷன் ஸ்டாப்களை எடுத்துக் கொண்டால் இந்த மாதிரியாக கம்பவுண்டிங் என்று போட்டவுடனேயே அவர் களிடம் இருந்த அதிகாரத்தைக் கைப்பற்ற கைவைத்து விட்டார்கள் என்பதைப் புரிந்துகொண்டு விட்டார்கள். . .

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இந்தத் திருத்தச் சட்டம் வேண்டும் என்கிறீர்களா? வேண்டாம் என்கிறீர்களா? உங்கள் கருத்து என்ன? உங்கள் கருத்துக்கான காரணங்களைத் தெளிவாகச் சொன்னால் நான் பின்னர் பதில் சொல்ல முடியும்?

[1975 அக்டோபர் 2

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பேசுவதைக் கேட்டுப் புரிந்து
கொள்ளுங்கள். நான் என்னுடைய ஆர்க்குமெண்டுகளை எல்லாம்
சொல்லிக் கொண்டு வருகிறேன். கடைசியில் நீங்கள் என்ன
புரிந்துகொள்கிறீர்களோ அதைப் புரிந்துகொண்டு செய்யுங்கள்.
சரியான முறையில் அமல் நடத்தினால் இந்தத் தொழில்
பாதுகாக்கப்படும். இன்ஸ்பெக்ஷன் ஸ்டாப் பார்த்து வரி போடுவது
என்றால் அது வேறு. அந்த இரகசியம் அதிகாரிகளுக்கு நன்றாகத்
தெரியும். ஆகவே இணக்க வரியைக் கைவிட வேண்டும் என்று
அவர்கள் வற்புறுத்தலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நம்முடைய மாநிலத்தில்
தொள்ளாயிரம் டூரிங் சினிமாத் தியேட்டர்கள் இருக்கின்றன.
அவர்கள் அனைவரும் இந்தக் கம்பவுண்டிங் முறையை ஏற்றுக்
கொள்வதாகச் சொல்லி, அவர்களுடைய பிரதிநிதிகளே ஒப்புக்
கொண்டு சென்றார்கள். ஆனால் 260 சினிமாத் தியேட்டர்காரர்கள்
தான் அதனை ஏற்றுக் கொண்டார்கள். மற்றவர்கள் ஏற்றுக்
கொள்ளவில்லை. அதற்கான விண்ணப்பங்களைக் கூடப் போட
வில்லை. அதிகாரிகளைப்போய் இதற்குக் குறைசொல்வது சரி
யல்ல. டூரிங் சினிமா தியேட்டர்காரர்கள் இந்த முறைக்கு
விண்ணப்பங்கள் கூட போடாததற்குக் காரணம் என்ன?
உங்களுக்குத் தெரிந்தால் நீங்கள் சொல்லுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்
விண்ணப்பங்கள் போடவேண்டும் என்று இருந்தது. எத்தனை
ஷோக்களுக்கு டாக்ஸ் போடுவது என்பதில் பல சங்கடங்கள்
இருந்தன. இது சம்பந்தமாக என்ன செய்வது என்று கூடத்
தெரியாமல் பலர் திகைத்திருந்தார்கள். எப்படியோ இந்தத்
தொழில் தமிழ்நாட்டில் நசித்துக் கொண்டிருக்கிறது. மைசூர்
மாநிலத்திற்குப் பறந்துபோய்க்கொண்டிருக்கிறது. கனம்
முதலமைச்சருடைய அஞ்சுகம் பிக்சர்சாரே மைசூருக்குப்போய்
படம் எடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். தமிழக முதலமைச்
சருடைய படமே இன்றைக்கு தமிழகத்தில் எடுக்க முடியாத
நிலைமை உருவாகியிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தமிழக முதலமைச்சர்
படம் எடுக்கவில்லை. அம்மையார் அவர்கள் இப்படியொரு படம்
எடுக்க வேண்டாம்.



1975 அக்டோபர் 25]

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அஞ்சுகம் பிக்சர்ஸ் அவரது
குடும்பத்தைச் சேர்ந்தது. அவரது குடும்பத்தைச் சேர்ந்த பட
நிறுவனத்திலேயே இன்றைக்குத் தமிழகத்தில் படம் எடுக்க
முடியாது மைசூருக்குப் போய்விட்டது என்றால் தமிழகத்தில்
ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது? நாம் அந்தத் தொழில் இங்கே
நசித்துப் போகும்படியாகத் தொடர்ந்து மரண அடி கொடுக்
கிறோம். அவர்கள் சப்சிடி கூடக் கொடுக்கிறார்கள். இந்தத்
தொழிலிலேயே பிறந்த வளர்ந்த நீங்கள், அதன் பிரதிநிதிகள்
என்று சொல்லிக் கொண்டிருக்கிற நீங்கள் உங்கள் காலத்திலேயே
உங்கள் மாநிலத்தில் அதை நசித்துப் போகும்படியாகச் செய்கி
றீர்கள். ஸ்டுடியோக்கள் மூடப்படுகின்றன. பலர் மைசூருக்குப்
பறந்து சென்று படங்கள் எடுக்க ஆரம்பித்துவிட்டார்கள்? இவர்
எல்லாம் தேசியமாக்கவேண்டும் என்றால் தேசியமாக்குங்கள்.
களுக்கு நீங்கள் என்ன பாதுகாப்பை இங்கே தந்தீர்கள்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எப்படிப்பட்ட
பாதுகாப்புகளைத் தரவேண்டும் என்பதற்கு அம்மையார்
பட்டியல் தந்தால் நாங்கள் அதைப்பற்றி பரிசீலிக்க முடியும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கர்நாடக மாநிலத்தில் என்ன
என்ன பாதுகாப்புகளை அளித்திருக்கிறார்கள் என்பதற்கு மைசூர்
மாநிலப் பட்டியலை வரவழைத்துப் பாருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கர்நாடகம், ஆந்திரா
போன்ற மாநிலங்களில் அவர்களது மொழிப்படங்கள் நிறைய
எடுக்கப்படவில்லை. தமிழ் நாட்டில் தமிழ்மொழியில் நிறையப்
படங்கள் வெளிவந்திருக்கின்றன. ஆகவே, அவர்களது மொழியில்
நிறையப் படங்கள் வரவேண்டும் என்பதற்காக அந்த
மாநிலங்கள் சப்சிடி கொடுக்கின்றன.

தற்போது தமிழ்ப் படங்கள் எடுக்கப்படாமல் இருப்பதற்கும்,
வளராமல் இருப்பதற்கும் என்ன காரணங்கள் என்பதை நாம்
விரிவாக ஆராய வேண்டுமே தவிர அரசுதான் காரணம் என்பது
போலக் கருதிவிடக் கூடாது. இன்றைக்கு ஒரு படத்திற்கு என்ன
செலவாகிறது, நடிகர்கள் வாங்குகிற சம்பளம் என்ன?
ஸ்டுடியோ வாடகை என்ன என்பதை எல்லாம் பார்க்க வேண்டும்.
முன்பு ஸ்டுடியோக்காரர்கள் பர்சன்டேஜ் வாடகை வாங்கியது

போக இப்போது வார வாடகை போட்டு வாங்குகிறார்கள். இப்படி ஸ்டுடியோக்காரர்கள், பட விநியோகஸ்தர்கள் எந்த முறையில் நடந்துகொள்கிறார்கள் என்றும் பார்க்கவேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஒரு படத்திற்கு எவ்வளவு செலவாகும் என்ற நுணுக்கம் எல்லாம் உங்களுக்குத் தெரியும். எனக்குத் தெரியாது. ஒத்துக் கொள்கிறேன். ஒரு லட்சம் சப்சிடி கொடுக்கிறார்கள் என்றால் அது லாபம் லாபந்தானே. படம் எடுப்பவர்கள் அந்த மாநிலத்திற்குப் பறந்து செல்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இங்குள்ள ஸ்டுடியோ அதிபர்கள் ஸ்டுடியோ வாடகையை உயர்த்திவிட்டார்கள். அதன் காரணமாகப் படம் எடுக்கிறவர்கள் பறந்து சென்றிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அப்படியானால் இந்த ஸ்டுடியோக்களை எல்லாம் நீங்கள் தேசியமாக்குங்கள். அதைப் பற்றி எங்களுக்குக் கவலை கிடையாது. இந்தத் தொழில் வளர வேண்டும். இந்தத் தொழில் நசிக்கக்கூடாது. உங்கள் காலத்தில் இந்த மாநிலத்தில் இந்தத் தொழில் நசித்துப்போய்விட நீங்கள் விட்டுவிடக்கூடாது. அதுதான் எங்கள் கவலையெல்லாம். அதற்கு எதைவேண்டுமானாலும் நீங்கள் செய்யுங்கள். ஸ்டுடியோக்களை எல்லாம் தேசியமாக்கவேண்டும் என்றால் தேசியமாக்குங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சொல்லலாம். ஆனால் அப்படி தேசியமாக்குவதற்கான அதிகாரம் எங்களிடத்தில் இல்லை. மத்திய சர்க்காரிடத்தில் இருந்து வரவேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சக்தி பைப்சை எப்படி தேசியமாக்கினீர்கள்? டெக்ஸ்டூல் நிர்வாகத்தை எப்படி எடுத்துக் கொண்டீர்கள்? அப்படி இவற்றையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு எழுதி, அனுமதியைப் பெற்று எடுத்துக் கொள்ளுங்கள். இந்தத் தொழிலை நம் மாநிலத்தில் சாகவிடக் கூடாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் கேட்பதற்கு தெளிவாக விளக்கம் அளித்தால் எங்களுக்கும் வசதியாக இருக்கும். எப்படி எப்படித் திட்டங்களைத் தீட்டலாம் என்பதற்கு





ஸ்டுடியோக்காரர்கள் அதிக வாடகை வாங்குகிறார்கள். படப் பிடிப்பாளர்களால் அதைத் தாங்க முடியவில்லை. கர்நாடக மாநிலத்தில் ஸ்டுடியோ வாடகை குறைவாக இருப்பதால் அங்கே பறந்து சென்று படம் எடுக்கிறார்கள். ஸ்டுடியோக்காரர்கள் அதிக வாடகை கேட்பதை எப்படித் தடுப்பது?

திருமதி த. ந. அனந்தநாயகி: நீங்கள் அந்தத்துறையில் பேர்போனவர்கள். நீங்கள் ஏன் நம் மாநிலத்திலுள்ள ஸ்டுடியோ அதிபர்களை எல்லாம் அழைத்துவைத்து, இப்படி நீங்கள் அதிக வாடகை வாங்குவதன் காரணமாக இந்தத் தொழில் நம் மாநிலத்தில் நசித்து வருகிறது. வாடகையைக் குறைக்க வேண்டும் என்று சொன்னால் போதுமே. நான் முதலமைச்சருக்கு சொல்லியா தரவேண்டும்? இங்கே மின்சாரத்தை எடுத்துக் கொண்டால் நினைத்த நேரத்தில் போய்விடுகிறது. இப்படி பல வற்றையும் கவனித்து அந்தத் தொழில் நம் மாநிலத்தில் நசித்துப் போய்விடாதிருக்க பல்விதமான பாதுகாப்புகளை அளிப் பதற்குப் பதில் வரிக்குமேல் வரியாக மரண அடிகளைக் கொடுத்து வருகிறீர்கள். நீங்கள் போடுகிற வரியை நியாயமான அளவுக்கு எந்தத் தியேட்டர்காரர்கள் கட்ட முன்வந்தாலும் அவர்களால் தொழில் நடத்த முடியாது, நான் வழக்கறிஞர் அறிவை பயன் படுத்திப்பெற்ற அனுபவத்தைக்கொண்டு சொல்கிறேன். எனக்குத் தொழில் நுணுக்கம் புரியாது. சாதாரணமான முறையிலே இந்த வரிகளை நீங்கள் எடுத்துக்கொள்வீர்களானால், 'ஷோ டாக்ஸ்', 'என்டர்டெய்ன்மென்ட் டாக்ஸ்' இவைகளை எடுத்துக் கணக்கிட்டு பார்த்தால், யாராவது ஒழுங்கான முறையிலே கேளிக்கை வரி கட்டி, ஷோ டாக்ஸ் கட்டி, சினிமாவை நடத்து வான் என்றால், அவன் நஷ்டம் அடைவானே தவிர, இலாபம் அடைய முடியாது. ஆகவே, இதனை செலக்ட் கமிட்டிக்கு விடுங்கள். அவர்களுக்கிருக்கிற உண்மையான கஷ்டத்தைப் பாருங்கள். நீங்களாகவே ஏன் தவறு செய்யச் சொல்கிறீர்கள்? அவர்கள் தாங்கக் கூடிய அளவுக்கு நீங்கள் வரி விதித்தால், அவர்கள் ஒழுங்காகக் கொடுத்து விடுவார்கள். கத்திரிக்காயாலே முத்திரை அடிக்கலாமா, வேறு காயாலே முத்திரை அடிக்கலாமா என்று நீங்கள் ஏன் யோசனை சொல்லித் தருகிறீர்கள், உங்களுடைய வரியமைப்பின் மூலம்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 அக்டோபர் 25

ஒரு வாத்து பொன் முட்டையிடுகிறது என்றால், அதற்காக அதன் கழுத்தை அறுப்பது புத்திசாலித்தனமல்ல. அந்தப் பொன் முட்டையிடும் வாத்தை வைத்துக் கொண்டு, மேன் மேலும் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதுதான் அழகே யொழிய அதை விட்டுவிட்டு, அந்த வாத்தை சாக விட்டுவிட்டு, அந்தத் தொழிலே இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கக் கூடாது என்று சாகின்ற நிலையைப் பார்க்கும்போது, உண்மை யிலே வருத்தமாகவிருக்கிறது. என்னதான் கட்டணத்தை உயர்த்தினாலும், வரிகளை உயர்த்தினாலும் ஒழுங்கான முறையிலே வருமானம் அரசுக்கு வருவது கிடையாது.

கம்பவுண்டிங் ஸ்பெசிலிட்டீஸ் கொடுத்து, 35 ஷோ வைக்கலாமா என்று ஆராய்ந்து, பிறகு 14 என்று வைத்தீர்கள். அதைவிடக் குறைத்துப் போடலாமா என மீண்டும் அவர்களை அழைத்து வைத்து ஆராய்ந்து பார்த்து, வருமானத்தைப் பெற என்ன என்ன வழிகள் என்று கண்டுபிடிப்பது, யோசித்துப் பார்ப்பது தான் வழியே தவிர, ரூ. 2½ என்றிருந்ததை திடீரென்று ரூ. 40 ஆக்கினீர்கள், ரூ. 25-ஐ திடீரென்று ரூ. 250 ஆக உயர்த்தினீர்கள். சென்ற முறை அப்படி டாக்ஸை இன்கிரீஸ் செய்யப் போகிறோம் என்று நீங்கள் சொன்னவுடனே நாங்களே கேட்டோம். கனம் முதலமைச்சரவர்களை, ரூ. 2½-ஐ, ரூ. 40 ஆக்கினால் அவர்கள் எப்படித் தாங்குவார்கள் என்று கேட்டோம். இல்லை, இல்லை, நாங்கள் அவர்களையெல்லாம் அழைத்துப் பேசப் போகிறோம், அப்புறம் குறைப்போம் என்று சொன்னார்கள். திடீரென்று 10 மடங்கு ஏற்றினார்கள். பிறகு ரூ. 27-ல் கொண்டு வந்து நிறுத்தினார்கள். டூரிங் சினிமாவுக்குக் கம்பவுண்டிங் கொடுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். பிறகு வருமானம் வரவில்லை என்ற புகாரை வைத்து, மீண்டும் இன்ஸ்பெக்டர்களை வைத்து, பரிசீலித்தீர்கள். சினிமா தியேட்டர்களை அரசியல் பலம் உள்ளவர்கள்தான் இன்றைக்கு நடத்துகிறார்கள்.

டூரிங் சினிமாக்களை எடுத்துக் கொண்டால், அரசியல் பலம் உள்ளவர்கள் ரொம்பப் பேர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியும். அவர்களே பயப்படக் கூடிய அளவுக்கு உங்களுடைய சட்டங்கள் சங்கடப்படுத்துகின்றன என்றால், இந்த முறையாவது இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்புங்கள். இந்தத்



1975 அக்டோபர் 25] [திருமதி த. ந. அனந்தநாயகி]

தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்களை அங்கத்தினர்களாகப் போடுங்கள். சினிமா ஃபீல்டிலே இருக்கிறவர்களைக் கூப்பிட்டுக் கேளுங்கள். அவர்களுடைய உண்மையான கஷ்டங்கள் என்ன? அவற்றை எப்படி நிவர்த்திப்பது? இந்தத் தொழில் ஏன் நம்மை விட்டுப் பறந்து கொண்டு போகிறது என்று ஆராய்ந்து பாருங்கள். இதனை இங்கு நிலைநிறுத்த என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யுங்கள். பழிவாங்குகிற மனப் பான்மை இல்லாமல், ஆர அமற ஆராய்ந்து பார்ப்பதால், இந்தத் தொழில் நசுங்காமல் பாதுகாக்க முடியும் என்று சொல்லி, என்னுடைய திருத்தத்தினை வலியுறுத்துகிறேன்.

**திரு. க. உரா. எட்மண்ட்:** தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த சினிமா ஸ்டுடியோக்களில் கூடுதலான வாடகை வாங்குகின்ற காரணத்தினால்தான் இந்தத் தொழில் நசிந்து போய்விட்டது என்று சொன்னார்கள். (குறுக்கீடு) அதுவும் அதற்கு ஒரு காரணம் என்று சொல்லி, திருமதி அனந்தநாயகி அவர்களிடம் ஆலோசனை கேட்டார்கள். ஏற்கனவே, வீட்டு வாடகைகளைக் கட்டுப்படுத்த, ரென்ட் கன்ட்ரோல் சட்டம் இருக்கிறது. அதைப் போல் சினிமா ஸ்டுடியோக்களின் வாடகையைக் கட்டுப்படுத்த, ஸ்டுடியோக்கள் வாடகைக் கட்டுப்பாடு சட்டம் கொண்டு வரலாம் அல்லவா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கொண்டு வரலாம். வெள்ளைத் தாளிலே ஒன்றாக இருக்கும், கையிலே வாங்கிக் கொள்வது வேறாக இருக்கும்.

**திரு. பெ. சீனிவாசன்:** முதலமைச்சரவர்கள் ஸ்டுடியோக் களைத் தேசியமயமாக்க மத்திய சர்க்காருடைய அனுமதி வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், தமிழ்நாடு அரசு இப்பொழுது ஒரு ஸ்டுடியோ நடத்துகிறது. கோடம்பாக்கத்திலே இன்னொரு ஸ்டுடியோ அமைக்கலாமே! படத் தயாரிப்புக்கு வசதி யான இடம் கோடம்பாக்கம். இப்பொழுது கூட விக்ரம் ஸ்டுடியோ ஏலத்திற்கு வருகிறது. அதனை அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாம். இப்படி அரசாங்கம் ஒன்றிரண்டு ஸ்டுடியோக்களை நடத்தி, பாதிக் கட்டணம் வசூலித்தால், மற்ற ஸ்டுடியோக் காரர்கள் தாங்களாகவே அந்த ரேட்டுகளைக் குறைக்கலாம் அல்லவா?

[1975 அக்டோபர் 25

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நம்முடைய நிதி ஆதாரத்தைப் பொறுத்து இந்த நல்ல யோசனையை படிப்படியாக நிறைவேற்றலாம்.

திரு. கோவை செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மன்றத்திலே இதே மசோதா ஏற்கனவே ஒருமுறை விவாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த விவாதத்திலேயே நான் என்னுடைய கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதிலே, நான் அன்றையதினம் முதலமைச்சரவர்கள் நிதியமைச்சர் என்ற முறையிலே எவ்வளவு கோடி ரூபாயை இந்த என்டர்டெய்ன்மென்ட் டாக்சிலே எதிர்பார்க்கிறீர்களோ, அந்த ரூ. 15 கோடிக்கு பிலிம் சேம்பர் ஆஃப் காமர்ஸ் மூலமாக உட்கார்ந்து பேசி, நாங்களே காரண்டி தருகிறோம். ஆகவே, எங்களுடைய கருத்துக்களைத் தாங்கள் கொஞ்சம் கேட்க வேண்டுமென்று கேட்டேன். அன்றைக்கு நான் செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்று சொன்னபோது, அதை செலக்ட் கமிட்டிக்கு விடாமல் சட்டபூர்வமாக்கினார்கள். அதற்குப் பின்னாலே சட்ட மன்றம் கூடாத நேரத்தில் ஆர்டினன்ஸ் மூலமாக மறுபடியும் இந்தச் சட்டத்தை மாற்றினார்கள். அதற்குச் சொல்லப்படுகிற காரணம் என்ன? ஏறத்தாழ 920 தியேட்டர்களில் கிட்டத்தட்ட 268 தியேட்டர்காரர்கள் மட்டும் தான் இந்தப் புதிய முறைக்கு ஒத்துக்கொண்டார்கள், மற்றவர்கள் கம்பவுண்டிங் சிஸ்டத்தை ஒத்துக்கொள்ளவில்லையென்று சொன்னார்கள். அதற்கான காரணத்தை முதலமைச்சரவர்களும் அல்லது இது சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் ஓ. பி. இராமன் அவர்களும் அறிந்திருக்கக் கூடும். அல்லது, அவர்களுடைய செவிக்கு அது வராமல் கூட இருந்திருக்கலாம்.

இன்றைக்குப் பொதுவாக, தியேட்டர்களில் வருகின்ற தொகையை கணக்கிடுவதற்கு அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்கள். அந்த அதிகாரிகள் புதிய முறையை நிச்சயமாக விரும்பமாட்டார்கள். இன்றைக்கு எந்தச் சட்டமிருந்தாலும், மிசா சட்டமிருந்தாலும், விஜிலன்ஸ் இருந்தாலும் தியேட்டர்காரர்களிடம் போய்—சென்னையைப் பற்றிச் சொல்லவில்லை—மொஃபுசலில், பணம் வாங்கிக் கொள்கிறார்கள். நான் அவர்களைக் குறை சொல்லவில்லை, அரசாங்கத்தைக் குறை சொல்ல



1975 அக்டோபர் 25] [திரு. கோவை செழியன்]

வில்லை, இருக்கிற யதார்த்த நிலையைச் சொல்கிறேன். அது அவர்களுக்குப் பாதகம் ஏற்படுத்தும் என்ற ஒரே காரணத்திற்காக, நீங்கள் இந்தப் புதிய முறைக்கு வர ஒத்துக்கொள்ளாதீர்கள், என்று தியேட்டர்காரர்களிடம் அதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள்.

சற்று நேரத்திற்கு முன்னால் நான் கூட முதலமைச்சரிடம் இதைப்பற்றி பேசினேன். ஏன் 268 பேர்கள் மட்டும் ஒத்துக் கொண்டார்கள், மற்றவர்கள் ஏன் ஒத்து வரவில்லையென்று அவர்கள் கேட்டார்கள். அவர்களுக்குத் தெரியும், நான் சொல்லி புரிந்துகொள்ள வேண்டிய நிலையில் அவர்கள் இல்லை. இந்த ஆப்ஷனுக்கான ஃபார்ம் தருவதே அந்த அதிகாரிகள்தான், முதலமைச்சரவர்களுக்குத் தெரியும். தியேட்டர்காரர்களாகப் போடுவதென்றால் ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுக்கலாம். அதிகாரிகளை விண்ணப்பம் வேண்டுமென்று கேட்டால், அவர்கள் மிரட்டுகிறார்கள், எதற்கு இதையெல்லாம் ஒத்துக்கொள்கிறீர்கள் என்று . . . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி மிரட்டியதாகவே நண்பர் செழியன் அவர்கள் சொன்னதை நான் வாதத்திற்காக ஒத்துக்கொள்கிறேன். மிரட்டி இருக்கட்டும், முதலிலே மிக விரிவாகவே அவர்கள் பெரிய தியேட்டர்காரர்கள்கூட என்னிடத்திலே பேசினார்கள்; டூரிங் டாக்கீஸ் பிரதிநிதிகளும் பேசினார்கள். இந்தப் புதிய முறைக்கு 268 தியேட்டர்காரர்கள் தான் ஒத்துக்கொண்டார்கள்; மற்றவர்கள் ஒத்துக்கொள்ளாமல் இருக்கக் காரணம் இந்த அதிகாரிகள்தான் என்று என்னிடத்திலோ அல்லது தொடர்புடைய அமைச்சரிடத்திலோ ஏன் அவர்கள் சொல்லவில்லை? அந்தப் பிரதிநிதிகள் என்னைச் சுலபமாகச் சந்தித்திருக்கலாம். முதலிலே 2, 3 தடவை என்னைச் சந்திக்கும் வாய்ப்பிருந்தபோது அதிகாரிகள் மிரட்டுகிறார்கள். ஆகவே, புதிய முறைக்கு வரமுடியவில்லை, நீங்கள் உடனடியாகக் கவனம் செலுத்துங்கள் என்று சொல்லியிருந்தால், கவனம் செலுத்தியிருக்கலாம். புதிய முறையை 268 பேர் ஏற்றுக் கொண்டார்கள். ரென்யூ செய்யும்போது, அந்த 268 பேரிலே 42 பேர் அப்ளிகேஷன் போடவில்லை. ஆக, இதற்கு அதிகாரிகள

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 அக்டோபர் 25

மாத்திரமல்ல, அதிகாரிகளோடு, டூரிங் டாக்கீஸ்காரர்கள் ஒரு ஏதுவாக இருக்கிற காரணத்தால்தான் அதை அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

**திரு. பெ. சீனிவாசன்:** இதை ஆப்ஷன் கொடுக்காமல் கம்பல்சரியாக ஏன் போட்டிருக்கக் கூடாது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கம்பல்சரியாகப் போடுவதற்குச் சட்டம் இடம் தரவில்லை. ஆகவேதான் ஆப்ஷன் கொடுக்க வேண்டியதாயிற்று.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, 268 பேரைத் தவிர பாக்கி இருப்பவர்கள் ஏன் விண்ணப்பம் செய்யவில்லை என்று கேட்பது நியாயமான கேள்விதான். அதற்குள்ள காரணம் ஒன்று, பீரியட் முடிந்ததற்குப் பின்னாலே அப்ளிகேஷன் போடலாம் என்று இருந்திருக்கலாம். ஆனால், சில பேர் அந்த அதிகாரிகள் மிரட்டுவார்கள் என்று நான் சொன்னேன், அதற்காகப் பயந்திருக்கலாம். ஆனால், கொடுக்கப்பட்டிருந்த நாட்களோ 30 நாட்கள்தான். அந்த 30 நாட்களுக்குள்ளே, பிலிம் சேம்பரோ, அல்லது எந்த நிறுவனமும் ஒன்று கூடி முடிவெடுக்க முடியாமல் போய்விட்டது. அதற்குள் ஆர்டினன்ஸ் கொண்டு வந்தார்கள். அந்த வழி தடைப்பட்டுப் போய்விட்டது.

ஆர்டினன்ஸ் கொண்டு வந்தோம். இப்பொழுது, பில்லாக இன்ட்ரடியூஸ் செய்திருப்பதால், அது காலாவதியாகிறது. இந்த பில்லை செலக்ட் கமிட்டிக்கு விட இப்பொழுதும் வாய்ப்பிருக்கிறது. நீங்கள் எதிர்பார்க்கின்ற ரூ. 15 கோடிக்கு நான் காரண்டி தருகிறேன், முதலமைச்சருக்கு நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் என்ற முறையில் பேசவில்லை. பிலிம் சேம்பர் ஆஃப் காமர்ஸிலே நானும் அருமை நண்பர் உறுப்பினர் அரங்கண்ணலும் மற்றவர்களும் பேசினோம். நாங்கள் பிலிம் சேம்பர் ஆஃப் காமர்ஸிலே உங்களுக்கு ஒரு உறுதியைத் தருகிறோம். நீங்கள் டைம் தந்தால், ஏறத் தாழ 900 தியேட்டர்காரர்கள் இருக்கிறார்களே, அவர்களை ஒத்துக் கொள்ளச்



1975 அக்டோபர் 25] [திரு. கோவை செழியன்]

செய்கிறோம். நீங்கள் 30 நாள் தந்த நேரத்திலே அவர்களால் பயன்படுத்திக்கொள்ள முடியாமல் போய்விட்டது. பொதுவாகவே, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலே இந்த சினிமா இன்டஸ்ட்ரி எந்த அளவு தாழ்ந்து போகிறது என்று பேசினார்கள்.

(முற்பகல் 11.00)

சில பேர்கள் இந்தத் தொழிலிலே சம்பந்தப்படாதவர்கள் பேசினார்கள், அவர்களுக்கு உண்மை நிலவரம் தெரியாது, நாம் மைசூருக்குப் போகிறோம், மற்றும் உள்ள இடங்களுக்குப் போகிறோம், என்றெல்லாம் சொன்னார்கள், அதற்கான காரணம் முதலிலே—தமிழ்ப் படமே ஓடுகின்ற படங்களில் 97 சதவிகிதம் தோல்வியடைகின்றன—தமிழ்நாடு முழுவதும் இரண்டு பெரிய ஹீரோக்கள் ஒன்று எம். ஜி. ஆர். இரண்டு சிவாஜி ஆகிய இவர்கள் நடிக்கின்ற படங்கள்தான் வெற்றியடைகின்றன. பாக்கிப் படங்களில் ஒன்றிரண்டு வெற்றியடைகின்றன. திரு. அரங்கண்ணல் அவர்கள் 1, 2 படங்கள் எடுத்தார்கள். அதில் ஒன்று வெற்றி பெற்றது, 100 படங்களும் வெற்றியடைவதில்லை, ஒன்றிரண்டு படங்கள்தான் வெற்றியடைகின்றன. மற்றவை படுதோல்வியடைகின்றன. இதனால் லட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்படுகின்றது. படங்கள் தோல்வி அடைகின்ற காரணத்தினால் புரட்யூசர்கள் அந்த இண்டஸ்ட்ரியையே மூடிவிட்டுப் போகக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறது, அதன் காரணமாக ஸ்டுடியோக்கள் மூடப்படுகின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் பெரிய ஸ்டுடியோ, ஏ. வி. எம். ஸ்டுடியோ நீண்ட காலமாக மூடப்பட்டிருந்தது, புரட்யூசர்கள் வாடகை தந்து அதை எடுத்துக்கொள்ள வேண்டிய நிலைமையில் திறந்து வைத்திருக்கிறார்கள். நீண்டகாலமாக ஜெமினி ஸ்டுடியோ மூடப்பட்டது, அங்கேயிருந்த சாமான்களை யெல்லாம் ஆந்திராக்காரர்கள் வாங்கிக் கொண்டு போய்விட்டார்கள். அது கோடவுனாக இருக்கிறது. அடுத்து விக்ரம் ஸ்டுடியோ . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஸ்டுடியோக்களைப் பொறுத்தவரையிலும் ஒவ்வொரு ஸ்டுடியோவுக்கும் ஒவ்வொரு பிரச்சினை இருக்கிறது. சில ஸ்டுடியோக்களில் தொழிலாளர் பிரச்சினை. வேறு சில ஸ்டுடியோக்களில் படத் தயாரிப்பில்

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 அக்டோபர் 25

ஏற்படுகிற நஷ்டம். இப்படிப்பட்ட பிரச்னைகள் எல்லாம் இருக்கின்றன. இதற்கு அரசு ஒன்றும் செய்ய முடியாது. 100 படங்கள் எடுத்தால், 4, 5 படங்கள்தான் வெற்றியடைகின்றன. ஏ. வி. எம். ஸ்டுடியோ அதிபரை அழைத்துப் பேசினோம். அங்கே தொழிலாளர் பிரச்னை, நானும் தொழிலாளர் நல அமைச்சரும் அதைப் பற்றிப் பேசித் தீர்வு கண்டு திறந்து வைத்தார்கள். ஜெமினி ஸ்டுடியோ அதிபரோடு பலமுறை பேசியும் கண்டிப்பாக அவர் சொல்லிவிட்டார். பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு விட்டது, பெரியவர்களை வைத்து ஒரு படம் எடுத்தால் அதிலே வருகிற லாபம் தோல்வியடைகிற பல படங்களின் நஷ்டத்திற்குப் போய்விடுகிறது, அங்கே படம் எடுப்பதிலே நஷ்டம் ஏற்படுகிற பிரச்னை.

இப்படி ஒரு ஸ்டுடியோவில் தொழிலாளர் பிரச்னை இன்னொரு ஸ்டுடியோவில் படம் எடுப்பதில் நஷ்டம் ஏற்படுகிற பிரச்னை. இப்படிப் பல பிரச்னைகள் இருக்கின்றன. கோவை செழியன் அவர்கள் சொல்கிற விளக்கங்களுக்கு இதுவும் அவருக்கு உதவிகரமாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை நானும் ஏற்றுக் கொள்கிறேன். இன்றைக்கு ஸ்டுடியோக்கள் மூடப்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. தொழிலாளர்கள் பிரச்னை மட்டுமல்ல, பல பிரச்னைகள் இருக்கின்றன. ஸ்டுடியோக்களுக்கு யாரும் படப்பிடிப்பிற்குப் போவது கிடையாது. மாண்புமிகு அம்மையார் அவர்கள் சொன்னமாதிரி ஸ்டுடியோக்களுக்கு அதிகமான வாடகை கேட்கிறீர்கள் என்று கேட்டால் அவர்களுடைய பல பிரச்னைகளையெல்லாம் சொல்கிறார்கள். ஆகவே, இது எல்லாம் சாதாரணமாகப் பேசி முடிவு செய்துவிட முடியாது, உட்கார்ந்து பேசினால்தான் நல்ல முடிவு ஏற்பட முடியும். ஏறத்தாழ 100 படங்களில் 97 படங்கள் தோல்வியடைகின்றன. தோல்வியடைகின்ற படங்கள் அத்தனையும் மோசமான படங்கள் என்று நான் நிச்சயமாகச் சொல்லமாட்டேன். ஓடுவது இல்லையென்றால் என்ன காரணம் என்று பார்க்க வேண்டும்.



1975 அக்டோபர் 25] [திரு. கோவை செழியன்]

கர்னாடகத்திலே எடுக்கின்ற படங்கள் அத்தனையும் மோசமான படங்கள்தான், இருந்தாலும் போட்ட பணத்தை எடுத்து விடுகிறார்கள், நஷ்டமில்லை. கோளத்தை எடுத்துக் கொண்டால் அங்கே ஒரு கவுன்சிலை வைத்திருக்கிறார்கள். வெள்ளிக்கிழமை, வெள்ளிக்கிழமைதான் படங்களை வெளியிட முடியும் அந்த கவுன்சில் அனுமதியுடன். போட்டியில் விடக் கூடாது என்று வைத்திருக்கிறார்கள். மலையாளத்தில் எடுக்கிற படங்கள் நல்ல லாபத்திலே ஓடுகின்றன என்ற நிலைமையில்லாவிட்டாலும் நஷ்டம் வருவதில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் தமிழ்நாட்டில் உள்ள நிலைமை என்ன? சிறிய உதாரணத்தின் மூலமாக விளக்கிட விரும்புகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் நேற்றே இதே பிரச்னை பிலிம் சேம்பர் ஆப் காமர்ஸிலும் பேசப்பட்டது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சூரியகாந்தி என்ற படம் வந்தது, அது நூறு நாட்கள் ஓடி வெற்றிவிழா கொண்டாடியது, ஆனால் அதே ஸ்டாண்டர்டு உள்ள படம் இப்போது வந்திருக்கிறது, 50 நாட்கள் கூட ஓட முடியவில்லை இரண்டும் ஒரே தரமானது, பொழுது போக்கு அம்சத்திலேயும் குறையவில்லை. அது நூறு நாள் கொண்டாடியது, இது கொண்டாடவில்லை.

இதற்கெல்லாம் காரணம் இன்றைக்குள்ள வரிவிகிதம்தான். அன்றைக்கு இருந்த வரிவிகிதம் வேறு, இன்றைக்கு இருக்கிற வரிவிகிதம் வேறு. 1974 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் தேதியிலிருந்து அரசாங்கம் ஷோ டாக்ஸை உயர்த்தியது. எவ்வளவு? 10 பங்கிலிருந்து 20 பங்கு வரையிலும் உயர்த்தினார்கள். இதற்கு ஸ்டுடியோக்காரர்களும் தியேட்டர்காரர்களும் எதிர்ப்புத் தெரிவித்து தியேட்டர்களையெல்லாம் மூடினார்கள். ஏறத்தாழ 12½ ரூபாய் வரி கொடுத்துக் கொண்டிருந்தவர்கள் 150 ரூபாய் கொடுக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டதால் தியேட்டர்காரர்கள் எல்லாம் கதவடைப்புச் செய்தார்கள். அரசாங்கம் அவர்களை அழைத்துப் பேசி 40 ரூபாய் என்று கொண்டுவந்த • காரணத்தால் மறுபடியும் திறந்தார்கள். சர்சார்ஜ் இன்டிவிஜுவல் டிக்கட்டிலே போடலாமென்று அரசாங்கம் சொன்ன யோசனையை ஏற்றுக்கொண்டார்கள். ஏற்கனவே அம்மையார் சொன்னதுமாதிரி கிராமப்புறங்களிலே

[திரு. கோவை செழியன்] [1975 அக்டோபர் 25

உள்ள தியேட்டர்கள் காலை 9 மணி முதல் இரவு 1½ மணி வரை யிலும் 35 ஷோக்கள் என்று கொண்டுவந்தார்கள், பிறகு 14, 16 ஷோக்கள் என்று கொண்டுவந்தார்கள். இந்த முறைப்படி பார்க்கிறபோது கூட உண்மையான கணக்கு வராது.

இன்னும் நிறைய கருத்துக்களை நான் சொல்ல வேண்டுமென்று ஆசைப்பட்டாலும்கூட முதலமைச்சர் அவர்களே இதைப்பற்றி நிறைய அறிந்திருக்கிற காரணத்தால் நான் சொல்கின்ற கருத்தையும் மற்ற எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிற கருத்தையும் ஏற்று இந்த இண்டஸ்ட்ரியை வாழவைப்பார்கள் என்று நம்புகிறேன். தமிழ்நாட்டிலேதான் இவ்வளவு அதிகமான என்டர்டேய்ன்மெண்ட் டாக்ஸ் போடப்பட்டு இருக்கிறது, வேறு எந்த மாநிலத்திலேயும் இந்த அளவிற்குக் கிடையாது, தமிழ்நாட்டிலே அதிகமாக இருப்பதால் சிறிய படங்கள் ஓடுவதில்லை. தமிழ்நாட்டிலே சிறிய படங்கள் ஓடாததற்குக் காரணம் அதுதான்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய மகன் ஒரு நடிகர், அவர் நல்ல முறையிலே முன்னுக்கு வரவேண்டுமென்று வெற்றி பெறவேண்டுமென்று நான் விரும்புகிறேன்; எனக்கும் அவர்களுக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இதிலே எனக்கு கருத்து வேறுபாடு கிடையாது. ஆகவே, சிறிய படங்கள் தோல்வியடைவதற்குக் காரணம் வரிவிகிதம்தான். கேரள மாநிலத்தில் 20 சதவீதம் என்ற அளவிற்குத்தான் வரி போடுகிறார்கள். கர்நாடக மாநிலத்தில் 35 சதவீதம் என்ற அளவிற்குத்தான் வரி போடுகிறார்கள். தமிழ்நாட்டிலேதான் 50 சதவீதம் என்று சொன்னாலும்கூட 67 விழுக்காடு என்ற அளவிற்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. சிறிய படங்கள் அதனால் படுதோல்வியடைகின்றன. நான் ஒன்றும் அரசியலுக்காக இதைச் சொல்லவில்லை. இதனால் பெரிய படங்களுக்குப் பாதிப்பு இல்லை, எம். ஜி. ஆர். சிவாஜி ஆகியவர்கள் நடிக்கும் படங்கள் இதனால் பாதிக்கப்படுவதில்லை. சிறிய படங்கள் தான் செத்து விடுகின்றன. நானும் ஒரு சிறிய படத்தை எடுத்தேன், அதை வாங்க யாரும் முன்வரவில்லை, அதிலே ஏற்பட்ட கடனை சரிக்கட்ட ஒரு பெரிய படம் எடுக்க ஆரம்பித்தேன், ஆரம்பித்தவுடன் எல்லா ஏரியாக்களிலும் விற்றுவிட்டேன். நான் எடுத்த படம் நல்ல படம்தான், முதலமைச்சருக்குக்கூடத்



1975 அக்டோபர் 25] [திரு. கோவை செழியன்]

தெரியும், இருந்தாலும் வாங்கினால் ஓடுமோ ஓடாதோ என்று பயந்து கொண்டு வாங்காமலிருக்கிறார்கள். காரணம் இந்த டாக்ஸ்தான். நான் விளம்பரத்திற்காகச் சொல்லவில்லை. முதலமைச்சருக்குத் தெரியும். அவருக்கு வேண்டிய நண்பர்கள் எல்லாம் அதிலே பணியாற்றியிருக்கிறார்கள், அவருக்கே தெரியும்.

இந்த நிலைமை மாற வேண்டுமென்றால் வரி குறைந்தேயாக வேண்டும். முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள் என்ற காரணத்திற்காக பொது மக்களுடைய இந்த இண்டஸ்ட்ரியிலே சம்பந்தப்பட்டவர்களின் கருத்தை அறிய செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இதை உடனடியாக நிறைவேற்றாமல், 10, 20 நாட்கள் அவகாசம் கொடுத்து அதிலே விவாதித்து பிறகு கொண்டு வரவேண்டு மென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, நான் ஈடுபட்டிருக்கிற தொழில் என்பதற்காக மட்டுமல்லாமல் தமிழ்நாட்டிலேயுள்ள ஏழை எளிய மக்கள் குறைந்த செலவில் நல்ல உணர்வுகளை பெறவும் உற்சாகத்தைப் பெறவும் உரிய ஒரு பெரிய தொழிலாக வளர்ந்திருக்கிற இந்தத் திரைப்படத் தொழில் தொடர்பாக வந்திருக்கிற இந்த மசோதாவின்மீது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நான் ஆரம்பத்திலே நம்முடைய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது இன்றைய தினம் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டம் ஒரு முற்றுப்புள்ளி யென்று கருதப்படாமல், இது ஒரு கமாவாகக் (குறுக்கீடு) ஆமாம், தொடர் கதைதான், கருதப்பட வேண்டும்.

ஏதோ துக்ளக் பற்றி சகோதரியார் அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள். துக்ளக் சிறந்த புத்திசாலி என்ற வாதமும் இருக்கிறது. நான் அந்த வாதத்திற்குள் போக விரும்பவில்லை. ஆனால் துக்ளக் பார் என்பதுபோன்ற நிலைமைகளை யெல்லாம் உலகம் விமர்சித்துக் கொண்டுதான் இருக்கிறது. ஒரு ஆளும் அரசாங்கம், அதுவும் வரியை வாங்கி ஆட்சி நடத்தும் ஒரு அரசாங்கம் தான் செய்யும் சட்டம் நிரந்தரமாக இருக்க வேண்டு

மென்று கருத முடியாது. காலத்தையொட்டி, மக்களின் கருத்தை யொட்டி, அந்தத் தொழிலில் இருப்பவர்களுடைய எண்ணங்களை யெல்லாம் அறிந்து அதற்கேற்ற வகையில் அடிக்கடி மாற்றக் கூடிய சூழ்நிலை வந்தால் அது தவறு அல்ல, ஜனநாயகத்தில் அப்படியெல்லாம் மாற்றலாம். தமிழகத்தில் சர்வாதிகார ஆட்சி இல்லை. ஆகவே, முன்பு வந்தது, இப்பொழுது மாற்றியிருக்கிறார்கள். இன்னும் எல்லோருடைய கருத்துக்களையும் கேட்ட பிறகு அரசாங்கத்திற்கு நிறைய வருமானத்தைத் தருகின்ற தொழிலுக்கு உதவி செய்ய வேண்டுமென்று இன்றையதினம் பொறுப்பேற்றிருக்கிற முதலமைச்சர்கள் இதுபோன்ற மக்கள் பிரச்னை வரும் நேரத்தில் பிடிவாதமாக இல்லாமல் ஏதோ தான் கொண்டதுதான் முடிவு என்று இல்லாமல் எத்தனை தடவைகள் எதிர்க்கட்சியினரில் கருத்துக்களையும் மற்றவர்களின் கருத்துக்களையும் ஏற்று அனுசரித்துக் காரியங்களை ஆற்றியிருக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம்.

ஆனால் இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் நான் தமிழ் நாட்டிலே ஒரு தயாரிப்பாளன், ஒரு விநியோகஸ்தன், மலையாளத்திலும் ஒரு தயாரிப்பாளன், ஒரு விநியோகஸ்தன், தெலுங்கிலும் ஒரு தயாரிப்பாளன் விநியோகஸ்தன். ஆகவே, அண்மையில் இருக்கின்ற மாநிலங்களில் உள்ள எல்லாச் சூழ்நிலைகளையும் அறிவேன். ஆனால் சென்னையிலேதான் படம் எடுக்கிறேன். மற்ற மாநிலங்களில் இந்தத் தொழில் பெரிதாக வளராத காரணத்தினால் அங்கே ஊக்கம் கொடுத்து, இந்தத் தொழிலுக்காக உள்ள ஸ்டுடியோக்களுக்குப் பணம் கொடுத்து வருமாறு அழைக்கிறார்கள். அதே காரணத்திற்காகத்தான் அங்கே வரி விகிதத்தை அதிகம் ஆக்காமல் குறைந்த விகிதத்தில் வைத்திருக்கிறார்கள். இந்தத் தொழில் இந்தியாவிலேயே அதிகமாக வளர்க்கப்பட்ட இடமாகவும், தொழில் வளர்ந்த இடமாகவும், அதிகக் கொட்டகைகளைக் கொண்ட இடமாகவும் தமிழ்நாடு இருப்பதால்தான் தொடர்ந்து அரசாங்கம் ஒவ்வொரு தடவையும் தொழில் வளர வரிவிகிதத்தை அதிகமாக ஆக்கிக் கொண்டிருக்கிறது.

இன்றைதினம் இங்கு வந்துள்ள இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் இங்கே ஒரு கருத்து சொல்லப்பட்டது. கம்பவுண்டிங் கொண்டு வந்ததற்கான காரணங்கள் எல்லாம்



விளக்கப்பட்டன. முதலில் ஒரு உத்திரவு போட்டது உண்மை. காலை 9 மணியிலேயிருந்து இரவு இரண்டு மணிவரையிலே உள்ள நேரத்தைக் கணக்கெடுத்து அந்த நேரத்தின் அடிப்படையிலே 5 காட்சிகள் என்று முதலிலே சொன்னார்கள். ஆனால் அப்படிச் சொல்லப்பட்டது தவறு என்று தெரிந்ததும் ஜூன் மாதம் 16-ஆம் தேதி என்று கருதுகிறேன், 16 காட்சிகள் என்று அது வரையறுக் கப்பட்டது. 16 காட்சிகள் என்று ஜூன் மாதம் 16-ஆம் தேதி வரையறுக்கப்பட்டு ஜூலை மாதம் 18 ஆம் தேதி அப்படி வரையறுக்கப்பட்ட இந்த கம்பவுண்டிங் சிஸ்டம் இருக்க வேண்டுமென்ற எண்ணம் கைவிடப்பட்டது. அதற்கான காரண காரியங்களுக்குள் நான் செல்ல விரும்பவில்லை. இந்தத் துறையின் நிர்வாகச் செயலாளர் திறமை படைத்தவர்கள், அதைப்பற்றித் தனிப்பட்ட முறையில் நான் பாராட்டுவேன், நன்றாக அறிவேன். நம்முடைய துறைச் செயலாளரும் பிரச்சினைக்குரியவர்களும் கூடி அமர்ந்தால் நல்ல நியாயத்தையும், இன்னும் வருமானத்தையும் வழங்கவும் பெறவும் வாய்ப்பிருக்கிறது என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். இது சம்பந்தமான பிரச்னைகளை 'சவுத் இன்டியன் ஃபிலிம் சேம்பரும்' எல்லா டூரிங் தியேட்டர் உரிமையாளர்களும் இன்னும் எக்ஸிபிட்டார்ஸ் போன்ற இவர்களெல்லாம், இந்த விவரங்களை அரசாங்கத்திடம் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று இப்பொழுது கடந்த மூன்று நான்கு தினங்களாக நாங்கள் அவர்களோடு கலந்து பேசிக் கொண்டிருக்கிறோம். இந்தத் தொழில் உண்மையாகவே நசித்துக்கொண்டு வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழ்நாட்டில் பார்த்தால் ஆண்டு ஒன்றுக்கு 55 படங்கள் சராசரியாக ரிலீஸ் ஆகின்றன. நண்பர் எம்.ஜி. இராமச்சந்திரன் நடிக்கும் 5 படங்கள், நண்பர் சிவாஜி கணேசன் நடிக்கும் படங்கள் 8, ஆக. இந்த எட்டும் ஐந்தும் சேர்ந்து 13 படங்கள் போக மீதமுள்ள 42 படங்களும் சிறிய தயாரிப்பாளர்கள் தயாரிக்கும் படங்களாகும். இந்த 42 படங்களில் பெரிய வெற்றி பெற்ற படம் என்னுடைய படம். சாதாரண வெற்றி பெற்ற படங்கள் இரண்டு. இந்த 42 படங்களும், ஒரு படத்திற்கு சுமார் 7 இலட்சம் ரூபாய் செலவு செய்து தயாரித்திருந்தால், கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய் நஷ்டம்

[திரு. இராம. அரங்கண்ணல்] [1975 அக்டோபர் 25

சினிமாத் தொழிலுக்கு. இந்த நஷ்டத்திற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. "டாக்ஸ்' மட்டும் காரணமல்ல. தியேட்டர் வாடகை போன்றவைகள் இருக்கின்றன. சேம்பரில் நாங்கள் உட்கார்ந்து கலந்து பேசி மெமோரண்டம் தயாரித்து அந்தத் தயாரிப்பாளர்களுக்கான அறிவுரைகளை யெல்லாம் முதலமைச்சரவர்களிடமிருந்து பெறவிருக்கிறோம். நிச்சயமாக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அந்தத் தொழிலுக்கு எல்லாவிதமான ஊக்கங்களையும் அளிப்பார்கள் என்று உறுதி எங்களுக்கெல்லாம் உண்டு.

ஆனால், இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும் நிகழ்ந்தவைகளைப்பற்றிப் பேசுவதற்கு நான் விரும்பவில்லை. 963 தியேட்டர்களுக்கும் சரியான கால வரம்பு அளிக்கப்பட்டிருந்தால் அவர்களும் கம்பவுண்டிங் சிஸ்டத்தை ஒத்துக்கொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். பரவலாகப் பேசப்படுகிறது, அதிகாரிகள், அதுவும் மேல் மட்டத்திலே உள்ள அதிகாரிகள் அல்ல. கீழ் மட்டத்திலே உள்ள அதிகாரிகள் சரியான முறையில் ஒத்துழைப்பு தரவில்லை என்று சொல்லப்படுகிறது. சில சம்பவங்கள் கூட எனக்குத் தெரியும். அந்த அளவிற்கு ஒரு கருத்து இருக்கிறது. ஆகவே, நான் தெரிவிக்க விரும்புவதெல்லாம் இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் இதை ஒரு 'கமா' என்று கருதி, இதை இதோடு முடிந்து விட்டது என்று எண்ணாமல் நாங்கள் சொல்லும் யோசனைகளைக் கருத்தில் வைத்து கம்பவுண்டிங் சிஸ்டம் என்று அல்ல. இதைவிட வேறு சிஸ்டங்கள் இருக்கின்றன, அவைகளுக் கெல்லாம் ஏற்றவகையில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றவேண்டும். அந்த வரிகளைக் குறைக்க வேண்டும் அல்லது வரிகளைக் குறைக்காமலேயே அவர்களுக்கு நிவாரணம் தர வேண்டுமென்ற நோக்கத்தோடு இதைப் புனராலோசனை செய்ய வேண்டுமென்று மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர் செழியன் அவர்கள் சொன்னதைப்போல இது சாதாரண தொழில் அல்ல. ஆனால் இன்று ஏதோ ஒரு காரணத்தால் இந்த நிலைமையில் இருக்கிறது. இன்னும் மூன்றாண்டுகாலம் போனால் நிச்சயமாக இந்தத் தொழிலே தமிழ்நாட்டிலே இருக்காது என்ற அளவிற்கு இன்றைக்கு இந்தத் தொழில் கெட்டுப் போய்விட்டது. நம்முடைய கொள்கையே கூட



[1975 அக்டோபர் 25 [திரு. இராம. அரங்கண்ணல்]

Tap the rich and pat the poor.

அதாவது அதிகமாக யாரால் வரி செலுத்த முடியுமோ அவர்களிடத்திலேயிருந்து வாங்கி நலிந்தவர்களுக்கு நல்ல வசதிகளைச் செய்ய வேண்டுமென்பது நம்முடைய கொள்கைகளிலே ஒன்றாகும். தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் ஏராளமான இந்திப்படங்கள் வருகின்றன. இந்திப்படங்கள் வர வேண்டாமென்று தடுக்கவில்லை. அவர்கள் வெற்றி பெறுவதற்குக் காரணம் கலரில் 50 லட்சம், 60 லட்சம் ரூபாய் செலவிட்டுத் தயாரித்து வெளியிடுகிறார்கள்.

Visual Inspiration

அதிகமாக இருப்பதால் இந்திப் படங்களுக்கு சிறிய கிராமங்களிலேயும்கூட அதிகமாக வசூலாவதைப் பார்க்கிறோம். இதைப் போல தமிழ்நாட்டிலேயும் கலர்ப்படங்கள் தயாராகின்றன, பெரிய நடிகர்கள் இரண்டு பேர் இருக்கிறார்கள். அவர்கள் எடுக்கும் கலர்ப்படங்களுக்கு ஏராளமான பணத்தைச் செலவு செய்கிறார்கள். நடிப்புச் செல்வாக்கு, ஆடம்பரமான காட்சி இன்னும் மற்றக் காரணங்களினால் அந்தப் படங்களுக்கு வெற்றி கிடைக்கிறது. நாம்கூட கலர்ப்படங்களுக்கு என்று ஒரு கட்டண விகிதத்தை நிர்ணயிக்கலாம், பிளாக் அண்ட் ஒயிட் படங்களுக்கு ஒரு கட்டணத்தை வரையறுக்கலாம். முனிசிபல் டவுன்களுக்கு ஒரு கட்டணத்தையும், பஞ்சாயத்து போர்டுகளுக்கு ஒரு கட்டணத்தையும் விதிக்கலாம். இப்படிப்பட்ட பலமுறைகள் இருக்கின்றன. அந்த எல்லா முறைகளையும் ஆராய்ந்து, இந்தத் துறை இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் ஆராய்ந்து இன்னும் வருமானம் உள்ளதாகவும், இன்னும் எல்லோருக்கும் நியாயம் வழங்கக் கூடியதாகவும் செய்ய வேண்டுமென்பதை அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமின்றி, இந்தத் தொழில் எங்களை ஆளாக்கிவிட்டது. மட்டுமல்ல, நம்முடைய முதலமைச்சரவர்கள் தமிழ்நாட்டிலே திரை உலகத்தில் சில நல்ல பெருமைகளை யெல்லாம் பெற்ற கலைஞர். அவர்கள் இந்தத் தொழிலைக் காப்பாற்றுவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியும். அவர்களின்

ஆலோசனைபேரில் தென்னிந்திய வர்த்தக சபையில், நானும் நண்பர் செழியன் அவர்களும், மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாகயிருந்தாலும், கட்சி என்று இல்லாமல் பொதுவான நோக்கத்தில் உட்கார்ந்து நல்ல மெமோரண்டத்தைத் தயாரிப்பதற்கு தென்னிந்திய வர்த்தக சபை முடிவு செய்திருக்கிறது. அநேகமாக. இன்னும் மூன்று நான்கு தினங்களில் வழங்கும் என்று கருதுகிறேன். இந்தத் தொழில் வளர நம்முடைய அரசாங்கம் ஏராளமான உதவிகளைச் செய்திருக்கிறது.

ஒன்றை மறந்து விடுகிறார்கள் சகோதரியார் அவர்கள். எப்பொழுது பார்த்தாலும் தமிழ்நாடு அரசாங்கம்தான் அவர்கள் கண்ணிலே தெரிகிறது. மேலே உள்ள அரசாங்கம் தெரிவதே இல்லை. 'ரா—ஸ்டாக்' விலை மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் என்ன இருந்தது? இன்றையதினம் என்ன நிலை? படம் ரிலீஸ் ஆகும் நேரத்தில் ஒரு பிரிண்ட் எடுக்க முன்பு 4,000 ரூபாய் செலவானது, இன்றைக்கு 7,000 ரூபாய் ஆகிறது. 3,000 ரூபாய் எக்ஸைஸ் டியூட்டி யாருக்குப் போகிறது? எக்ஸைஸ் டியூட்டி அவர்கள் வசூலித்துக் கொள்கிறார்களே தவிர, மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான உதவியும் கிடையாது. ஒரு லட்சம் ரூபாய் அளவுக்கு எங்களிடமிருந்து கொள்ளை அடித்துக்கொண்டு போகிற மத்திய சர்க்கார் என்ன வசதியை செய்து தருகிறது? ஒரு ஃபிலிம் பினான்ஸ் கார்ப்பரேஷன் வைத்திருக்கிறார்கள். அவர்கள் யாருக்குப் பணம் கொடுத்திருக்கிறார்கள்? அதையெல்லாம் சகோதரியார் எடுத்துக் கூற வேண்டாமா?

**திருமதி த. ந. அனந்தநாயகி**: அடுத்த முறை பாராளுமன்றம் போனால் பேசலாம்.

**திரு. இராம. அரங்கண்ணல்**: அடுத்த முறை சகோதரியார் எங்கே செல்லுவார்கள் என்று தெரியாது. இப்போதே அவர் அடிக்கடி டெல்லிக்குப் போய் வருகிறார். இங்கே இந்தப் பிரச்சினை இருக்கிறது என்று அவர்கள் அங்கே சொல்ல முடியாதா?





முதலமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைக் 'கமா'-வாகக் கருதி நல்ல நிலைமைகள் ஏற்படும் அளவுக்கு சட்டத்தின் நிலைமைகளை முறைப்படுத்தி இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள எங்களை எல்லாம் வாழவைக்க, வளர எல்லா உதவிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி**: தலைவர் அவர்களே, நமக்கு முன்னால் இருக்கக்கூடிய மசோதா என்டெர்டெய்ன்மெண்ட் டாக்சை எப்படி வசூல் செய்வது என்பதாகும். முன்பு இது சட்டமாகக் கொண்டு வரப்பட்ட போது நகரசபைகளுக்கு, பஞ்சாயத்துக்களுக்கு வரவேண்டிய 15 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது; அந்த நஷ்டத்தைத் தவிர்ப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று அன்று சொல்லப்பட்டது. இப்போது அந்தச் சட்டம் வாபஸ் வாங்கப்படுகிறது. அப்படி வாபஸ் செய்யப்படுவதன் மூலம் சர்க்காருக்கு 15 கோடி ரூபாய் வசூல் ஆகிறதா என்ற கேள்விகளுக்குப் பதில் கிடையாது.

இந்த மசோதாவில் சினிமாப் படத்தைப் பற்றியெல்லாம் பேசப்பட்டது. அது எப்படி ரெலவன்ட் என்று தெரியவில்லை. 100-க்கு 95 படங்கள் வெற்றி பெறவில்லை என்று சொன்னார்கள். எப்படி வெற்றி பெறும்? ஒரு படம் கூடத் தரமான படமாக இல்லை. பணம் இல்லாமலே படம் எடுக்கிறார்கள். நடிகர்களுக்குக் கடன், ஸ்டுடியோக்களுக்குக் கடன் என்று கடன் வாங்கி எடுத்தால் எப்படி லாபமாக இருக்கும்? ஜனங்கள் சினிமாவுக்குப் போகவில்லையா என்று கேட்டால் போகத்தான் செய்கிறார்கள். இந்தப் படங்கள் 60 லட்சம் ரூபாய் முதலீடு செய்வதால் நன்றாக ஓடுகிறது என்று சொன்னார்கள். 'நெல்லு' என்ற மலையாளப் படம் மூன்று மாதங்கள் ஓடியதே.

**திரு. இராம. அரங்கண்ணல்**: நெல்லு என்ற மலையாளப்படம் இங்கே அண்ணா தியேட்டரில் ஓடியது. ஆனால் மலையாளத்தில் அது வெற்றிகரமான படமல்ல.

**திரு. என். கே. பழனிசாமி**: இங்கு செலவு செய்வதில் கால்வாசி கூட மலையாளப் படங்களை எடுப்பவர்கள் செலவு செய்வதில்லை.

[1975 அக்டோபர் 25

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மலையாளப் படம் மாதிரி எடுத்தால் சென்சார் அனுமதிக்க மாட்டார்கள்.

திரு. பெ. சீனிவாசன்: செகன்ட் ரேட் பிக்சர்சில் 'உறவு சொல்ல ஒருவன்' நன்றாக ஓடியது. ஆனால் வருகிற படங்கள் உண்மையிலேயே படங்களாக இல்லை. வேறு யாரும் அதை நசுக்க வேண்டியதில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: இது சினிமா பற்றிய விவாதமா அல்லது வரி பற்றிய விவாதமா ?

திரு. என். கே. பழனிசாமி: 15 கோடி ரூபாய் நஷ்டம் ஆகாமல் சர்க்காருக்கு எப்படி வரப் போகிறது? இதற்குக் கனம் முதலமைச்சர் அவர்கள் எந்தவிதமான ஆலோசனையும் சொல்லவில்லை.

980 தியேட்டர் ஓனர்களில் 230 பேர்தான் கம்பவுண்டிங்குக்கு வந்தார்கள். கம்பவுண்டிங் என்றாலே வரிக் குறைப்பு என்றுதான் அர்த்தம். வரி குறைக்க முன்வந்தும் ஏன் பெருவாரியான தியேட்டர்காரர்கள் முன்வரவில்லை? அந்தத் தியேட்டர்காரர்கள் சர்க்காரை ஏமாற்றுகிறார்கள். பொதுஜனங்களை ஏமாற்றுகிறார்கள். தொடர்ந்து நடக்கிறது. சட்டத்தை வாபஸ் வாங்கிவிட்டால் நடக்காமல் போகுமா? கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசருக்கு ஒரு சிறு தியேட்டர்காரர் மாதம் 500 ரூபாய் கொடுத்து விட வேண்டும்; பெரிய தியேட்டர்காரர்கள் 1,000 ரூபாய் கொடுத்து விட வேண்டும். சபையர் தியேட்டர்காரர்கள் 10,000 ரூபாய் வரி வசூல் என்று காட்டுகிறார்கள். ஆனால் அவர்கள் தாங்களே 300 டிக்கட் 2 ரூபாய், 3 ரூபாய் என்று போட்டு விற்கிறார்கள். அதற்கு ஆட்களை வைத்திருக்கிறார்கள். பிளாக் மார்க்கட்டில் வேறு விற்கிறார்கள். வரி மோசடி செய்கிறார்கள். அந்த மோசடியைத் தடுக்காமல் சட்டத்தை வாபஸ் வாங்கினால் எப்படி வசூல் செய்வது ?

தியேட்டர்கள் பூராவையும் சர்க்காரே எடுத்துக் கொள்ள வேண்டும். கலைவாணர் அரங்கத்தை இவ்வளவு டாக்ஸ் வசூலாகும் என்று கணக்கெடுத்து குத்தகைக்கு விடுகிறார்கள். அதே போன்று இந்த தியேட்டர்களுக்கும் கணக்கெடுத்து குத்தகைக்கு விட்டால்தான் பிரச்சினை தீரும்.



1975 அக்டோபர் 25] [திரு. என். கே. பழனிசாமி]

பஞ்சாயத்து யூனியன், டவுன் பஞ்சாயத்து பகுதிகளில் உள்ள தியேட்டர்களில் டவுன் பஞ்சாயத்து ஆபீசரை உள்ளே அனுமதிப்பதில்லை. எவ்வளவு பேர் இருக்கிறார்கள், எவ்வளவு டிக்கட் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பரிசீலனை செய்ய அவர்களை அனுமதிப்பதில்லை. கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர்தான் போய்ப் பரிசீலனை பண்ண வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. அவர்கள் போனாலும் பணத்தைக் கொடுத்துச் சரி செய்து விடுகிறார்கள். இந்த மாதிரிக் குறைகளைப் போக்காமல் ஏற்கனவே போட்ட சட்டத்தை வாபஸ் வாங்க ஒரு அவசரச் சட்டம் தேவையா? இதை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டும். சரியான முறையில் வரியை வசூலிக்கக்கூடிய முறையில் சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேளிக்கை வரி மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சினிமாத் துறையினுடைய பல்வேறு நுணுக்கங்களைப் பற்றியும் வளர்ச்சியைப் பற்றியும் தளர்ச்சியைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரை சினிமாத் துறையில் அவ்வளவு அதிகமான ஈடுபாடோ அல்லது அதிலே நுணுக்கமான விஷயங்களைத் தெரிந்தவன் என்றோ சொல்லிக் கொள்ள முடியாது. சினிமாத் துறை எப்படி நடக்கிறது என்று கேள்வி ஞானத்தால்தான் அறிந்திருக்கிறேன். ஆகவே, அந்த விஷயங்களுக்கெல்லாம் நான் செல்ல விரும்பவில்லை.

(திரு. ஏ. ஆர். சுப்பையா தலைமை)

நம்முடைய நிதி ஆதாரத்தில் முக்கியமான ஒன்றாக கேளிக்கை வரி இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. கேளிக்கை வரி என்று சொல்லக் கூடிய வரி பெரும்பங்கு உள்ளாட்சிகளுக்குச் செல்லுகிறது என்பது ஓர் உண்மை. ஆகவே, உள்ளாட்சிகளுக்குப் பெரும் பங்கு கிடைக்கின்ற ஒரு நிதி ஆதாரத்தில் நாம் எப்படியெல்லாம் செம்மையாகச் செயல்பட்டு இருக்கின்ற சட்டவரையறைக்குட்பட்டு முழுமையாக அந்த நிதியைப் பெறமுடியும் என்பதிலே கவனம் செலுத்த வேண்டும்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 அக்டோபர் 25

உள்ளாட்சித் துறைகள், குறிப்பாக ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் எல்லாம் நிதிப் பற்றாக்குறையினால் பெரிதும் அவதிப்படுகின்றன. பல மாதங்கள் ஊழியர்களுக்குக் கூடச் சம்பளம் கொடுக்க முடியாமல் பேரூராட்சி மன்றங்கள், உள்ளாட்சி மன்றங்கள் இருக்கின்ற நிலையை அறிகிறோம். நான் தொகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நேரத்தில் ஒருசில ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்களில் பணியாளர்களுக்கு இரண்டு மாதச் சம்பளம் கொடுக்கப்படாமல் இருந்த நிலையைப் பார்த்தேன். ஊராட்சி மன்றத் தலைவர்களையும் ஒன்றியத்தின் ஆணையாளர்களையும் கேட்டால் நிதிப் பற்றாக்குறை காரணமாகக் கொடுக்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். மின்சாரத் துறைக்குக் கட்டக்கூடிய மின்சாரக் கட்டணத்தைக் கூடக் கட்ட முடியாமல் இருக்கின்ற நிலைமையை நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

ஆகையால் ஊராட்சி மன்றங்களுடைய நிதி ஆதாரங்களைப் பெருக்க நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்படி முயற்சிகளை மேற்கொள்ளும்போது அவற்றினுடைய நிதி ஆதாரங்களை எப்படிப் பெருக்க முடியும், அதற்கான வாய்ப்புகள் யாவை என்பதை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது என்று கேள்விப்பட்டேன். அந்தக் குழுவின் முடிவு என்னவாயிற்று என்று இன்றுவரை தெரியவில்லை.

(முற்பகல் 11.30.)

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக மதிப்பீட்டுக் குழு இந்தத் தலைப்பை எடுத்து ஊராட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்க எந்தெந்த வகையில் சட்டத் திருத்தங்களைச் செய்ய வேண்டும், எந்தெந்த முறையில் இன்றுள்ள நிர்வாக நெறிகளை மாற்றி அமைக்கவேண்டும். இன்றிருக்கும் சட்டத்தை வைத்துக் கொண்டு எப்படி செம்மையாக வரிகளை வசூல் செய்ய முடியும் என்று மதிப்பீட்டுக் குழு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அங்குள்ள நிர்வாக அதிகாரிகளையும், ஊராட்சி மன்றத் தலைவர்களையும் ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவர்களையும் அதிகாரிகளையும் அழைத்து வைத்து ஆராய்ச்சி நடத்தியபோது, விசாரணை செய்த போது நமக்குத் தெரிய வந்தது.



1975 அக்டோபர் 25] [திரு. எம். ஏ. லத்தீப்]

சுமார் 90 சதவிகிதம் இந்த கேளிக்கை வரியிலிருந்துதான் ஊராட்சிமன்றங்களுக்கு வருமானம் வருகிறது. ஊராட்சி மன்றங்களில் மிக முக்கியமான நிதி ஆதாரம் இந்தக் கேளிக்கை வரியாகும். ஆகவே, வரி முழுமையையும் பெறுவது நிதி நிர்வாகத்தின் முக்கியமான அடிப்படை. அது ஒன்று, அதோடு ஸ்தல ஸ்தாபனங்களின் வருமானத்தைப் பெருக்கவேண்டும் என்பது மற்றொன்று. இந்த இரண்டும் முக்கியமானவை, நிதி நிர்வாகத்தை செம்மையாக நடத்த வேண்டும். அதில் முழுக் கவனமும் செலுத்தப்படவில்லையோ என்ற ஐயப்பாடு நாட்டில் இருக்கிறது. அந்த ஐயப்பாடு ஐயப்பாடோடு நின்றுவிடாமல் அப்படி ஐயப்பாடு ஏற்படும் வகையில் சில காரியங்கள் நடைபெறுகின்றன. ஆகவே இதில் முழு கவனம் செலுத்துவது அவசியம். ஸ்தல ஸ்தாபனங்களின் ஜீவாதாரமான, அடிப்படையான, அதிக வருமானம் வரக்கூடிய இந்தக் கேளிக்கை வரியை முழுமையாக டாப் செய்வதில் அதிகக் கவனம் செலுத்தப்படவேண்டும்.

என்னைப் பொறுத்து இந்தச் சட்டத்தை நான் இந்த அளவில் தான் அணுகுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். ஏற்கனவே இருந்த சட்டத்தை மாற்றி கம்பவுண்டிங் ஸிஸ்டத்தைக் கொண்டு வந்த போது கீழ் மட்டத்தில் உள்ள அதிகாரிகளிடத்தில் இதற்கு அதிகமான அளவிற்கு வரவேற்பு இல்லை, எதிர்ப்பு இருந்தது, ஆகவேதான் 900 திரைப்படக் காட்சிகள் காட்டக்கூடிய தியேட்டர்கள் உரிமையாளர்கள் இருந்தும் அவர்களுக்கு ஆப்ஷன் கொடுக்கப்பட்ட காரணத்தால் சுமார் 200-க்கு மேல் 300-க்கு உட்பட்டவர்கள்தான் ஆப்ஷனைப் பயன்படுத்தி அவர்கள் தங்களுடைய ஒப்புதலைத் தெரிவித்தார்கள், மற்றவர்கள் தெரிவிக்க வில்லை, அதற்கு முக்கிய காரணம் கீழ் மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் செம்மையாகப் பயன்படுத்துவதற்கு தயக்கம் காட்டினார்கள், அதற்கு என்ன காரணம் என்ற கேள்விக்குறியோடு அவர்கள் விட்டுவிட்டார்கள்.

இந்த மன்றம் அந்தக் காரணத்தை நன்கு உணருகிறது. இது ஒரு உண்மை. அந்த உண்மையை நாம் சந்தித்துத்தாகை வேண்டும். பல்வேறு ஊர்களில் இருக்கிற தியேட்டர்களில் இன்று கொடுக்கப்படுகிற டிக்கட்டுகள் உண்மையான டிக்கட்டுகள் அல்ல.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 அக்டோபர் 25

எப்போது சென்று பார்த்தாலும் அதைக் கண்டுபிடிக்கலாம். மற்றப் பகுதிகளில் எப்படியோ, இந்த உண்மையை மதிப்பீட்டுக் குழுவின் விசாரணையின்போது மாநில அளவில் எல்லா ஊர்களிலும் சொல்லப்பட்ட ஒரு உண்மை எது என்றால் அது இந்த உண்மை யாகும். அதை ஏற்றுக்கொண்டு அந்த உண்மையை நாம் சிந்தித்தாக வேண்டும். கம்பவுண்டிங்க் ஸிஸ்டத்தை நடைமுறைப் படுத்த அதிகாரிகள் தயக்கம் காட்டினார்கள் என்ற உண்மை வெளியாகுமானால், அது இந்த மன்றத்தில் எடுத்துச்சொல்லப்பட்டு அதை உணரக் கூடிய ஒரு கட்டாயம் நமக்கு ஏற்படுமானால் இதை மாற்றுவதற்கு என்ன வழி என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்று ஊராட்சி மன்றங்களுக்கு அதிகாரங்கள் கொடுத்திருக் கிறோம். கிராம நிர்வாகத்திற்கு இன்று போதிய அளவு நிதி இல்லை, பற்றாக்குறை நிலை இருக்கிறது என்று ஊராட்சி மன்றங்கள் சொல்லக்கூடிய நேரத்தில் ஸ்தல ஸ்தாபனங்களின் வருமானத்தைப் பெருக்கக்கூடிய சட்டங்களை உறுதிப்படுத்துவதில் நாம் தயக்கம் காட்டுவது சரியல்ல. இன்று கம்பவுண்டிங் ஸிஸ்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை, அதிகாரிகளும் மற்றவர்களும் என்ற நிலை ஏற்படுமானால் அது நம் ஆட்சியின் மாட்சிக்கு எவ்வளவு தூரம் பெருமையைச் சேர்க்கும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆப்ஷன் கொடுத் தோம். கீழ்மட்டத்திலுள்ள அதிகாரிகள் ஏன் இதைப் பயன் படுத்தத் தயங்கினார்கள், ஏன் என்போர்ஸ் செய்யவில்லை? ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண் டிருக்கிறவர்களும், ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறவர்களும், நகராட்சி மன்றப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்களும், அதிகாரிகளும், தியேட்டர் உரிமையாளர்களும் ஒன்று சேரும்போது பல சிக்கல்கள் உருவாகின்றன.

நான் சொல்கிறேன். 25 சதவிகிதம் அளவிற்குக் கூட கேளிக்கை வரியை டாப் செய்ய முடியவில்லை யென்ற உண்மையை நாம் ஒத்துக்கொண்டுதானாக வேண்டும். அந்த உண்மையை நாம் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். அந்த உண்மையை சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறது அரசுக்கு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு. ஊராட்சிமன்றங்களில் வருவாயைப்



1975 அக்டோபர் 25] [திரு. எம். ஏ. லத்தீப்]

பெருக்க இந்த கேளிக்கை வரிச் சட்டத்தை எப்படியெல்லாம் திருத்தியமைக்க வேண்டும் என்று சில பரிந்துரைகளை மதிப் பீட்டுக் குழு செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரைகளை அரசு பரிசீலித்ததா? அந்தப் பரிந்துரைகளின் பேரில் அரசினால் எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் யாவை? அந்தப் பரிந்துரைகள் வந்த தற்குப் பிறகுதான் இந்த கம்பவுண்டிங் ஸிஸ்டம் கொண்டுவரப் பட்டதா? இந்த கம்பவுண்டிங் ஸிஸ்டம் சரியாக வேலை செய்ய வில்லையா? அல்லது அரசு அதைச் சரியாக அமல்படுத்த முடிய வில்லை என்பதை இந்த அரசு ஒத்துக் கொள்கிறதா? அரசுப் பணியாளர்கள் தயக்கம் காட்டினார்கள் ஆகவே, விட்டுவிடுகிறோம் என்று சொல்வது முறையா? அப்படிச் சொல்வோமேயானால் இன்ஸபார்டினேஷன் வளராதா, கரப்ஷன் வளராதா என்பதைச் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். ஆளும் கட்சித் தரப்பிலிருந்தும் சொல்கிறார்கள், எதிர்க்கட்சித் தரப்பிலிருந்தும் சொல்கிறார்கள். ஆளும் கட்சிக்காரர்கள் ஆதரித்துத்தான் சொல்வார்கள் அல்லது எதிர்க்கட்சிக்காரர்கள் எதிர்த்துத்தான் சொல்வார்கள் என்று நினைப்பதை விட்டுவிட்டு சொல்லக்கூடிய விஷயங்களைப் ப்ராக்டிக்கலாகப் பார்க்க வேண்டும். முடிவுகள் எடுப்பது நல்லது.

உலகத்தில் நடப்பதைப் பார்த்து கீழ்மட்டத் சுமார் 700 தியேட்டர் ஓனர்கள் ஒப்புதல் தரவில்லை. திலுள்ள அதிகாரிகள் தயக்கம் காட்டினார்கள். ஆகவே, மாற்று கிறோம் என்று சொல்வது நல்லதொரு நிர்வாகத்திற்கு அழகோலாது. பழைய முறைக்கு குறுகிய காலத்தில் திரும்பச் செல்வது, கீழ்மட்டத்திலுள்ள அதிகாரிகளின் கட்டாயத்திற்கு நாம் பணிகிறோம் என்ற நிலை உருவாகுமானால் அது நல்லதல்ல. இடைக்காலத்தில் எவ்வளவு தியேட்டர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நடவடிக்கை எடுத்து லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஒருசில நல்ல அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நடவடிக்கை எடுத்தால் ரெப்ரசென்டேஷன்ஸ் வருகின்றன. எல்லா ரெப்ர சென்டேஷன்களையும் கொண்டு வருவதில்லை. நாங்களே பில்டர் செய்துவிடுகிறோம்

This is a definite fact. This fact should be fully made aware by the Government. Otherwise, it will not be good for the administration. It will not be good for the financial administration of the State. At the same time, whatever action the Govern-

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 அக்டோபர் 25

ment takes and whatever be the intention of the legislation—proposed legislation—must be fully understood by the officials at the lower level and they should be fully implemented by them. என்ற வகையிலேதான் நாம் அதைக் கவனிக்க வேண்டுமென்று சொல்லி, இந்தக் கேளிக்கை வரியைப் பொறுத்தவரையில் நாம் சில நிதர்சனமான உண்மைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

நான் சில உண்மைகளைத் தெரிந்து இருக்கிறேன். அந்த உண்மைகளைத்தான் நான் இங்கே சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு, அதை நாம் செயல்படுத்த வேண்டும்.

மற்றொன்று, இந்த சினிமாத் துறை இதனால் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்ற வாதத்தைச் சொன்னார்கள். சினிமாத் துறை எப்படி இதனால் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. நம்முடைய கவலை யெல்லாம், சினிமா போகிறவர்கள் இந்த வரியால் பாதிக்கப்படப் போகிறார்களே என்பது தான். அப்படிப் பார்த்தால், அந்த நிலைமை இல்லை. நாளுக்கு நாள் சினிமா போவோரின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போகிறது. கியூ நீண்டு கொண்டே போகிறது. இதை நாம் தினசரி பார்க்கிறோம். அது நமக்கு நன்றாகத் தெரிகிறது. நம்முடைய கவலை எல்லாம் இப்படி மக்கள் கட்டுகிற பணம், தியேட்டர் உரிமையாளர்கள் அரசாங்கத்திற்காக வசூலிக்கிற பணம் அரசாங்கத்திற்கு வராமல் சமூக விரோதிகளான அவர்களால் எடுத்துக் கொள்ளப்படுகிறதே என்பது தான். நாட்டு மக்கள், ஏழை எளிய மக்கள் கட்டுகிற அந்தப் பணத்தை இந்த சமூக விரோதிகள், சண்டாளர்கள் எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். ஒரு நாளைக்கு 10,000 ரூபாய் வரி வசூல் என்றால் பத்து நூறு ரூபாய்க்கு வரி வசூல் என்று எழுதி விடுகிறார்கள். அப்படிப்பட்ட தியேட்டர் ஓனர்களை எப்படிச் சந்திக்க வேண்டும் என்ற பிரச்னையை நாம் சிந்திக்கவேண்டுமே தவிர வரி அதிகரிப்பதால் ஒன்றும் அது தீர்ந்து விடாது.

வசூலிக்கப்படுகிற பணம் அத்தனையும் அரசாங்கத்திற்கு வருவதற்கு என்ன வழி என்பதை நாம் சிந்திக்கவேண்டும்.



1975 அக்டோபர் 25] [திரு. எம். ஏ. லத்தீப்]

இந்தக் கேளிக்கை வரியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் இது ஒரு தொடர்கதையாக வந்து கொண்டிருக்கிறது. பலவிதமான அனுபவங்களை நாம் பார்க்கிறோம். அந்த அனுபவங்களின் அடிப்படையில் பல சட்டங்கள் கொண்டு வந்து இருக்கிறோம். சட்டங்களைச் செய்து கொண்டு வருகிறோம் என்று சொன்னாலும், அந்தச் சட்டங்களை எப்படி முழுமையாக அமல் படுத்த முடியும் என்பதை முழுமையாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். நம்முடைய நண்பர் அரங்கண்ணல், கோவை செழியன் இங்கே விரிவாக அந்தத் துறையைப் பற்றிப் பேசினார்கள். அவர்களை யெல்லாம் கூட இந்தக் கூட்டாய்வுக் குழுவில் போட்டு, இந்தச் சட்டத்தை நல்ல முறையில் ஆராய்ச்சி செய்து, இந்தச் சட்டத்தை விரிவானதொரு சட்டமாக, எந்த விதத்திலும் அரசாங்கத்தின் வருமானம் குறையாமல் இருக்கும் வகையிலும், மிக அதிகமான வருவாயை பெற்று ஸ்தல ஸ்தாபனங்கள் நல்ல விதத்தில் இயங்கவும் இந்தச் சட்டத்தை விரிவாக ஆராய்வது பொருத்தமாக இருக்கும் என்று இந்த அளவுக்கு எடுத்துச் சொல்லி என் கருத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தச் சட்டத்தைப் பற்றி என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய சினிமாத் துறையைச் சேர்ந்தவர்கள் மதிப்பிற்குரிய எங்கள் கட்சியைச் சேர்ந்த அரங்கண்ணல், எங்கள் கட்சியை விட்டு வேறு கட்சிக்குச் சென்று மீண்டும் நம்முடைய கட்சிக்கு வரக்கூடிய செழியன் போன்றவர்கள் எல்லாம் . . . .

**திரு. கோவை செழியன்:** தலைவரவர்களே, இப்படி ஒரு டேமேஜிங் ஸ்டேட்மென்ட் சொல்வதை உண்மையிலேயே வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும். அவர் எது வேண்டுமானாலும் சொல்லட்டும். எங்கள் கட்சிக்கு மறுபடியும் வருவார் என்று மட்டும் அவர்கள் சொல்ல வேண்டாம் என்னுடைய நாணயம், என்னுடைய அரசியல் தன்மையை அது பாதிக்கும். ஆகவே, தயவுசெய்து அவர் அதை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைக் குறிப்பேட்டிலிருந்து எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): முதலமைச்சர் மகன் மு. க. முத்து நடித்த படம் நல்ல படம் என்று சொன்னார்கள். ஒரு வேளை அவர்கள் தலைவர் அதற்காக கோபப்பட்டு விடுவார். அதனால் அவர் இங்கே திரும்பி வருவார் என்று சொன்னேன். இப்போது வரமாட்டேன் என்று சொல்லிவிட்டார். ஆகவே, இனி வரமாட்டார் என்று எப்படித் தெரிவிக்க முடியும்?

இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் சினிமாத் துறை நசித்து விடுகிற அளவுக்குப் போய்விடும், அது கெட்டுப் போய்விடும், இது அமெரிக்காவில் இருக்கும் பெரிய சினிமாத் துறைக்கு அடுத்த துறையாக இருக்கிறது என்று சொல்லி, அதை நசித்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று மிக்க இண்டரஸ்டோடு சொன்னார்கள். நம்முடைய அமைச்சர் 2 மாதத்திற்கு முன்பாக ஒரு செய்தியை தமிழகத்திற்கு அளித்தார்கள். மாண்புமிகு நண்பர் ஓ. பி. இராமன் அவர்கள் சொன்னார்கள். ரேடியோவில் அந்தச் செய்தி வந்தது. பத்திரிக்கைகளில் வந்தது. இரண்டு மாதங்களுக்கு முன்பாக வந்த அந்தச் செய்தி என்னவென்றால், "ஏறக்குறைய 10 கோடி ரூபாய்க்கு மேலே என்டர்டெயின்மென்ட் டாக்ஸை தமிழகத்திலே இருக்கக்கூடிய திரைப்படக்காரர்கள் ஏமாற்றுகிறார்கள்" இது சாதாரண ஸ்டேட்மென்ட் அல்ல. ஏறக்குறைய 10 கோடி ரூபாய்க்கு மேலே ஏமாற்றக் கூடியது என்றால் அதை இன்னும் சற்று கவனமாக கவனிக்க வேண்டும் என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன் செழியன் சொல்கிறார் என்ற காரணத்திற்காக நாம் அவர் பேரில் அனுதாபப்பட்டு அவர்கள் ஏதோ காரண்டி செய்கிறார்கள் என்பதற்காக இருக்கின்ற ஸிஸ்டம் போதும் என்று விட்டு விடவேண்டாம். 10 கோடி வரி ஏய்ப்பு என்றால், முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். செழியன் அவர்கள் எதை எதிர்க்கிறாரோ அதைச் செய்ய வேண்டும், அவர் எதை ஆதரிக்கிறாரோ அதிலே ஏதோ இருக்கிறது என்று தெரியும், அவருக்கு நான் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது.

10 கோடி ரூபாய் ஏமாற்றுகிறார்கள் என்றால், அந்த 10 கோடி ரூபாயில் தென் மாவட்டங்களில் 80 சதவிகிதம் ஏமாற்றுகிறார்கள். இன்னும் சில மாவட்டங்களில் 50 சதவிகிதம், வரி ஏய்ப்பு செய்கிறார்கள், சென்னை, சென்னையைச் சுற்றியுள்ள இடங்களில் 25 சதவிகிதம் வரி ஏய்ப்புச் செய்கிறார்கள் என்று சொல்லியிருக்



கிறார்கள். 10 கோடி ரூபாய் தமிழக அரசுக்கு, உள்ளாட்சித் துறைக்கு வரக் கூடிய பணம் ஏமாற்றப்படுகிறது என்றால், அதைக் கண்டிப்பாக கவனிக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அம்மையார் அவர்களும், மற்றவர்களும் சொன்ன மாதிரி, டிக்கெட் அடிப்பதிலேயே எத்தனையோ ஊழல் இருக்கிறது. அது எல்லாம் இலாகாவிற்குத் தெரியாது என்று நான் சொல்லவில்லை. ஏனென்றால் லத்தீப் அவர்கள் சொன்னது போல் இலாகாவினரும் சேர்ந்து தான் அதைப் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். திடீரென்று இது நடந்தால் பரவாயில்லை. நாளாவட்டத்தில் நடைபெறுகிறது. டிக்கெட்டை அவர்கள் கொடுக்கிறார்கள். அதை சேல்ஸ் டாக்ஸ் ஆபீசில் முத்திரை குத்திக் கொடுக்கிறார்கள். அந்த முத்திரை தேய்ந்து போன முத்திரை. ஒன்றும் தெரிவது இல்லை. ஆகவே, தியேட்டர்காரர்களே சின்ன கத்தரிக்காயை வெட்டி வைத்துக் கொண்டு முத்திரை குத்திக் கொண்டு விடுகிறார்கள். ஒவ்வொரு ஷோ முடிந்த பிறகும், கணக்குப் போடும் நேரத்தில் மொத்தம் 2,000 ரூபாய் வசூல் என்றால், அதில் 10 சதவிகிதம் தான் ரூ. 200 தான் அரசாங்கத்திற்கு டிபாசிட் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் கணக்கை எழுதி விடுகிறார்கள். இதையெல்லாம் அவர்களுக்கே உள்ள சோர்ஸ்களிடத்தில் கொடுத்து சரிசெய்து கொண்டு, ஏமாற்றி வருகிறார்கள்.

போர்ட் மெம்பர் எஸ். பி. சீனிவாசன் அவர்கள் ஒரு ரிப்போர்ட் கொடுத்தார்கள். அதிலே சில கருத்துக்களைச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்கள் அமல் நடத்தப்படவில்லை. இன்றையதினம் அதை அமல் படுத்தலாம். அரசு மனது வைத்தால் நிச்சயம் அதை அமல் படுத்தலாம். டெல்லியில் ஸ்டாம்பை ஒட்டச் செய்கிறார்கள். 70 பைசா என்டர்டெயின்மென் டாக்ஸ் என்றால் 50 பைசாவுக்கு ஒரு ஸ்டாம்பும், 20 பைசாவுக்கு ஒரு ஸ்டாம்பும் ஒட்டச் செய்கிறார்கள். இங்கே ரெவின்யூ ஸ்டாம்பு ஒட்டட்டுமே! அப்படிச் செய்தால் கிழித்துக் கொடுக்கிறபோது ஒரு பாதியில் ஸ்டாம்ப் நிச்சயம் பாதி இருக்கும். அப்படி இருந்தால் நிச்சயம் ஏமாற்ற முடியாது. அப்படிச் செய்யலாம்.

இன்னொன்று சொல்கிறேன். நாம் பரிசுச் சீட்டுகளை இப்போது நிறுத்தி விட்டோம். பரிசு சீட்டு சப்ளை செய்தது போல் எல்லோருக்கும் டிக்கட் அடிக்கும் பேப்பர் சப்ளை செய்வோம், இந்த அளவுதான் டிக்கெட் இருக்க வேண்டும் என்று சொல்வோம், 4 சென்டிமீட்டர் நீளம் 2 சென்டிமீட்டர் அகலம் இருக்க வேண்டும் என்று சொல்வோம், அரசாங்க அச்சகத்திலிருந்து அதை அவர்கள் பெற்று, டிக்கெட்டுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளட்டும். இந்த டிக்கெட் ஒவ்வொன்றிலும் அரசாங்க முத்திரை இருக்கும். அதனால் ஏமாற்ற முடியாது. அதோடு டிபாசிட் தொகை கட்டிவிட்டு எடுத்துக் கொண்டு போகவேண்டும் என்றால் ஏமாற்ற முடியாது. 10 கோடி ரூபாயையும் நிச்சயமாக வசூல் செய்யலாம். இவர்கள் செய்யும் ஏமாற்று வேலையை சேல்ஸ் டாக்ஸ் ஆபீசர்கள் ரெயிட் செய்து கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் இருக்காது. அது ஃபூல் — புரூஃப்பாக இருக்கும். அதை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு செயல்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக இந்தத் தொழில் நசிந்து விடுகிறது, இந்தத் தொழிலிலே பலவிதமான இழப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். மற்ற மாநிலங்களில் எல்லாம் உள்ள நிலைமை பற்றிச் சொன்னார்கள். சமீபத்தில் கேரளா இருக்கிறது. அங்கே என்ன செய்கிறார்கள்; அவர்கள் ஒரு செல்ப்-டிசிப்ளின் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அங்கே எப்படி என்றால், ஒரு படத்தில் நடிக்க ஒரு நடிகருக்கு என்ன ரேட் என்றால் ரூ. 15,000; பிளாக் கிடையாது. அப்படி ஒரு டிசிப்ளின் இருக்கிறது. எனக்குத் தெரியாது நண்பர் அரங்கண்ணல் அவர்கள் தன்னுடைய படத்திற்கு நடிகருக்கு எவ்வளவு கொடுத்தார் என்று. ஆனால் கேரளாவில் ஒரு படத்திற்கு அதிக பட்சமாக ரூ. 15,000-க்கு மேல் கொடுப்பது இல்லை. அப்படி ஒரு கோட் ஆப் காண்டக்ட் வைத்து இருக்கிறார்கள். அங்கே மற்றொன்றும் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். படத்திற்கு செட்டிற்கு வரவேண்டுமானால், அங்கே நடிகரும், நடிகையும் ஒரே காரில் வரவேண்டும். அங்கே அப்படி இருக்கிறது. இங்கே நடிகருக்கு ஒரு கார், நடிகைக்கு ஒரு கார், நடிகையின் அம்மாவுக்கு ஒரு கார் நடிகையின் அம்மாவுக்கு எதற்கு ஒரு தனி கார்? நடிகைக்கு அனுப்பினால் சரி. இதை முதலில் பிலிம் சேம்பரில் சொல்லி அவாய்ட் செய்யுங்கள். அதைச் செய்தால் கொஞ்சம் உங்களுக்குச் செலவு குறையும். வரிச்





சலுகை கொடுப்பதால் நம்முடைய செழியன் அவர்களுக்கோ, அல்லது அரங்கண்ணல் போன்றவர்களுக்கோ எந்தவிதமான பலனும் கிடையாது. உங்களுக்கு அந்தப் பணம் வரப்போவது கிடையாது. நான் என் நண்பர் செழியன் அவர்களை ஆதங்கத்தோடு கேட்டுக்கொள்ளுகிறேன், சட்ட மன்றத்தில்கூட அவர் சொல்ல வேண்டாம். தனியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து நீங்கள் எடுத்த படம் 'உழைக்கும் கரங்க'-ளுக்கு, அதில் நடித்த நடிகருக்கு எவ்வளவு பணம் கொடுத்தீர்கள் என்பதை இரகசியமாகச் சொல்லுங்கள். அப்படிச் சொல்லுவார்களானால், அவருக்கு அந்த இடம் காலி, இங்கே வந்து விட வேண்டும்.

திரு. கோவை செழியன்: பெரிய படங்களிலேதான் எனக்கு லாபம். சின்னப் படங்களிலே நஷ்டம்தான்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): ரூபாய் ஒன்பது அல்லது பத்து கோடிக்கு வரி ஏய்ப்பின் மூலம் மிச்சமாகும் பணம் அங்கேதான் சில இடங்களுக்குப் போய்விடுகின்றன.

திரு. பெ. சீனிவாசன்: செழியன் அவர்கள் இதைப் பற்றி முதலமைச்சர் அவர்களிடம் சொல்லவேண்டிய அவசியமே இல்லை. முதலமைச்சர் அவர்களே, அவரை வைத்துப் படம் எடுத்திருக்கின்றார், எனவே அவருக்கே தெரியும், அவர் எவ்வளவு வாங்கியிருப்பார் என்று.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): முதலமைச்சர் அவர்கள் எடுத்த சமயத்தில் ரூ. 75 ஆயிரம் கொடுத்தது உண்மை. இப்போது ரூபாய் ஏழெட்டு லட்சம் என்று வாங்குவதாக இருக்கலாம். நமது நண்பர் செழியன் அவர்கள், அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அவருக்குக் கொடுத்த அடிப்படையில் கொடுத்திருக்கின்றாரா அல்லது அதிகமாகக் கொடுத்திருக்கின்றாரா என்பதை இங்கேகூட வேண்டாம், தனியாக அவரிடம் சொல்லலாம். ஒரு கால் ஷீட்டுக்கு ஐயாயிரம் செக்காகவும் மிச்சம் ரூ. 25 ஆயிரம் பண்டிலாகவும் அனுப்புகின்றாரா, அன்று முதலமைச்சர் அவர்கள் கொடுத்து அடிப்படையில் கொடுக்கின்றாரா அல்லது ஏழெட்டு இலட்சம் என்று கொடுக்கின்றாரா என்று நண்பர் சொன்னால் நலமாக இருக்கும். ஆக, இதிலே

ஒரு கட்டுப்பாடு இருந்தால் வரி ஏய்ப்பிற்கு இடமிருக்காது. மிகச் சாதாரண நடிகர்களைப் போட்டு நமது அரங்கண்ணல் அவர்கள் எடுத்தாரே, அவள் ஒரு தொடர் கதை எவ்வளவு வெற்றிகரமாக ஓடிற்று. அந்த மாதிரி எடுத்திருக்கலாமே.

**திரு. கோவை செழியன்:** சினிமாத் துறையிலுள்ள பிரச்சனைகளைப் பொறுத்தவரையில், அதில் ஈடுபாடு கொண்டுள்ளவர்கள் ஆளும் கட்சியிலும் இருக்கிறார்கள். நாங்களும் இருக்கிறோம். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு என்ன கோபமோ அல்லது ஆத்திரமோ தெரியவில்லை. சினிமாத்துறை என்றாலேயே பிடிக்கவில்லை. அல்லது ஆளும் கட்சியில் உள்ளவர்கள் சிலர் சினிமாத் துறையில் ஈடுபாடுகொண்டிருக்கின்றார்களே என்ற கோபமோ தெரியவில்லை. எனக்கு அவர் நெருங்கிய நண்பர், எனவே அவர் என்னைப் பற்றித் தப்பாகப் பேசமாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆனால் கதை எழுதுகின்றவர்கள், வசனம் மற்றும் பாடல்களை எழுதுகின்றவர்கள் ஆளும் கட்சியிலே இருக்கின்றார்கள். அவர்கள் பேரிலுள்ள கோபத்தால், அவர்களைக் குறை கூற வேண்டும் என்ற காரணத்தினால் இப்படிப் பேசுகின்றார்களோ என்னவோ தெரியவில்லை.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** ஆத்திரத்தினால் எதையும் சொல்லவில்லை. எனது நண்பர் செழியன் அவர்கள் பாலுள்ள அன்பினால்தான் சொல்லுகிறேன். நண்பர் செழியன் பணத்தையெல்லாம் இந்தத் துறையில் போட்டு ஒன்றுமில்லாமல் போய்விடக்கூடாதே என்றுதான் சொல்லுகிறேன். அவர் மிக்க உயரத்தில் போக வேண்டும் என்று பார்க்கின்றார். பனை மரத்திலிருந்து கீழே விழுந்தால் கை கால் உயிரே கூட போய்விடக்கூடும். எதுவுமே தேறாது போய்விடக்கூடும். தரையில் இருப்பவன் விழுந்தால் லேசான காயம்கூடப்படாது போய்விடலாம். ஒரு நடிகருக்கு எட்டு லட்சம் என்று கொடுத்துவிட்டு, அவருக்குச் சரியாக நடிக்கும் நடிகைக்கு ஐந்து லட்சம் என்று கொடுத்துவிட்டு, ஆக இரண்டு பேருக்கும் 12 லட்சம் கொடுத்துவிட்டு, கடைசியில் படம் 'பப்படமாக' போய்விட்டால் என்ன ஆவது? நண்பர் மேலேயிருந்து கீழே விழுந்தால் கை போய்விடும், கால் போய்விடும் என்றுதான் இதைச் சொல்லுகிறேன்.



எனவே, கேரளத்தில் உள்ள தயாரிப்பாளர்களைப் போல ஒன்று சேருங்கள். இவ்வளவு ரூபாய்க்கு மேலே ஒரு நடிகருக்குக் கொடுக்கக் கூடாது. அப்படி யாராவது கொடுப்பேன் என்று சொன்னால் முதலமைச்சரிடம் தெரிவியுங்கள். இந்த மாதிரி நீங்கள் செயல்பட்டீர்கள் என்றால், பிறகு அந்த இடத்தில் உங்களுக்கு வேலை இல்லை, இந்த இடத்தில்தான் வேலை என்ற அபிமானத்தில்தான் இதைச் சொல்லுகின்றேனே தவிர சினிமாத் துறைமீது எனக்கு ஒன்றும் கோபமில்லை.

இன்னும் சொல்லப்போனால் சினிமாத்துறை ஒன்றும் நசித்துவிடவில்லை, ஒழிந்துவிடவில்லை. சென்ற ஆண்டிலே எடுத்த படங்கள் எவ்வளவு? அதற்கு முன் வருஷத்தில் எடுத்ததைவிட சென்ற வருஷம் ஒன்றும் குறைந்து போய்விடவில்லை. ஆனால் இப்போது வெளிவரும் படங்கள் மூன்று நாட்களுக்கு மேலே ஓடவில்லை என்றால் அதற்குக் காரணம் பாலிடிக்ஸ். சிலர் நடித்தால்தான் படம் ஓடும் என்றும் அவர் நடித்தால் அதிலே அரசியல் இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை, படம் மூன்று நாட்களுக்கு மேலே ஓடுவதில்லை. ஏன், நண்பர் செழியன் அவர்களே வேறு கட்சிக்காரர்கள் நடித்துள்ள படங்களைப் பார்க்கும்போது, 'என்னய்யா படம், சிவாஜி கணேசன் நடிப்பில் ஒன்றுமே இல்லை' என்று நான்கு பேருக்கு இடையில் சொல்லுவார். காரணம் ஜனங்கள் அதற்கு வரக் கூடாது என்பதுதான். இப்படி அரசியல் உணர்ச்சி உள்ளே வருவதால் தான் பல படங்கள் கெட்டுப்போய்விடுகின்றன. அரசியலை விட்டு விட்டு படம் எடுங்கள்.

எங்கள் அரங்கண்ணல் அவர்கள் எடுத்த 'அவள் ஒரு தொடர் கதை' என்ற படம் என்ன பெரிய நடிகர்களை வைத்தா எடுத்தார்? சாதாரண நடிகர்கள்தான் அதில் நடித்தவர்கள். வெற்றிகரமாக ஓடிற்று.

ஆனால் பெரிய நடிகர்களைப் போட்டு ஐந்து லட்சத்துக்கு எடுத்தால் அதை ஆறு லட்சத்துக்கு விற்றிருக்கலாம். ஒரு லட்சம் இவருக்குக் கிடைத்திருக்கலாம். ஆனால் ஆறு லட்சத்துக்கு வாங்கியவர்கள் 50 லட்சம் எடுக்கிறார்கள் அதிலே. இவருக்கு ஒன்றும் லாபம் கிடையாது. மீண்டும் அவர்களிடம் போனால் ஒரு காபி கொடுப்பார்கள். அல்லது அடுத்த படம் எடுக்கும்போது, பாதி படத்தைப் பார்த்துவிட்டு, அட்வான்ஸ் கொடுக்க முன்வரு

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1975 அக்டோபர் 25.

வார்கள் அவர்கள். அவ்வளவுதான். ஆனால் அவர்களுக்கு 50 லட்சம் கிடைத்தாலும் அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய வரியை மட்டும் ஏய்த்து விடுகின்றார்கள். அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய பணம் நடிகர்களுக்குப் போய்விடுகின்றது. இப்படி அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய பத்து கோடி ரூபாய் ஏமாற்றப்படாமல் அது அரசாங்கத்திற்கே கிடைக்கும் வகையில் வழிவகை செய்ய வேண்டும் என்று கூறி இதை ஆதரித்து முடிக்கின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஏ. ஆர். சுப்பையா): இரண்டு மூன்று உறுப்பினர்கள் பேச இருப்பதால் பேசுகின்றவர்கள் சற்றுச் சுருக்கமாக முடித்துக் கொண்டால் நல்லது.

DR. H. V. HANDE: Mr. Chairman, Sir, I would like to say a few words in regard to the matter before the House.

Bereft of politics that is being tried to be injected in the speeches of some of my Friends, my object in participating in this discussion on the Bill is to clearly tell the Hon. Chief Minister that atleast hereafter whenever hon. Members of this House suggest that such Bills should be referred to a Select Committee or circulated for eliciting public opinion, the Cabinet should take it seriously. Otherwise, we are bound to land in such complicated situation wherein within a short period we will be forced to change certain clauses of the Bill whenever there is resistance from the concerned people or the matter is referred to the court. After nose-cut, we come back to the Assembly and pass certain sets of amendments. This sort of habit should be put to an end.

For instance, in the case of the problem relating to the sugarcane-growers we suggested certain points and later on it was proved beyond doubt that they were valid. Therefore, I make a strong plea to the Hon. Chief Minister that even now it is not too late—now I see him and the Hon. Minister Thiru Raman conferring with each other and they may move certain amendments in the light of the suggestions made by the hon. Members to refer the Bill to a Select Committee as suggested by the hon. Member, Thirumathi T. N. Anandanayaki or circulate it for eliciting public opinion as suggested by the hon. Member, Thiru Kovai Chezhiyan.



1975 அக்டோபர் 25] [Dr. H. V. Hande]

Now we have seen that the discussion has cut across party discipline and all the Members have the same, identical view. So far as the industry is concerned, there is no doubt that if ameliorative measures are not taken, it will be completely destroyed. The Hon. Chief Minister himself had stated that in Karnataka and some other State, local language pictures were not forthcoming and therefore they were encouraging other pictures. But here the industry is flowering and is blossoming and if it is not encouraged it will be completely demolished and the Hon. Chief Minister and the Ministry should give proper thought and understanding.

Then, what are the basic causes of the whole problem? The Hon. Chief Minister himself has stated that out of about 900 theatre owners only about 200 theatre owners opted to compound. What does it mean? It means that they are afraid that if they have opted for composition, they may have to pay more tax. Now the Government have brought forward this Bill because they think it will bring in more money. You must consider why about 700 theatre owners are unwilling to compound and you must give some thought to it instead of rushing through the Bill thinking that they have a majority in this House.

[நண்பகல் 12-00]

As far as this industry is concerned, there is large-scale unemployment. Only this morning the hon. Member Thiru K. T. K. Tangamani and Thiru A. R. Marimuthu were referring to the unemployment prevailing in the sugar industry and the Hon. Minister Thiru K. Rajaram was saying that something will be done to increase the scope of employment in sugar industry.

Whatever legislation is brought forward in regard to film industry here, it completely destroys, demolishes, the employment in the industry. There is no use of one man trying to blame the other man, just like Spinlow and Jarkins, one man saying that the other man is wrong and another man saying that producers were wrong, theatre-people were wrong and like that. There is no use in blaming other people. Let us sit together in a Select Committee, let us get the opinion of public and let things be considered in a calm atmosphere and let us then come to conclusions.

It does not speak well of a Ministry, which had been in office for about 7 to 8 years, to go on changing the Bill every moment. it looks absurd. That is why I strongly plead that the Bill be referred to a Select Committee, giving due weightage to what we had said. Thank you.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று வலியுறுத்தும் முகத்தான் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல முன் வந்திருக்கிறேன்.

இன்று கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதா பஞ்சாயத்துப் பகுதிகளில் இருக்கக்கூடிய 'டூரிங் தியேட்டர்களுக்கும்', 'செமி பெர்மனன்ட் தியேட்டர்' களுக்கும் இதுவரை கொடுக்கப்பட்டு வந்த 'கம்பவுண்டிங்' செய்துகொள்வதற்கான உரிமையை ரத்து செய்யக்கூடியதாக இருக்கிறது. இதிலிருந்து, இந்த மசோதாவை ஒரு ஆர்டினன்ஸாகப் போட்டிருக்கிற காரணங்களைப் பார்க்கிறபோது, கம்பவுண்டிங் செய்துகொள்ளும் உரிமையை ரத்து செய்வதனால் மட்டும் எப்படி அரசாங்கத்திற்கு வரி அதிகம் கிடைக்கும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மொத்தமாக உள்ள 979 தியேட்டர்களில் சுமார் 700-க்கும் அதிகமான தியேட்டர்கள் கம்பவுண்டிங் செய்துகொள்ளவில்லை. அவர்கள் நாம் கொடுத்த உரிமையைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்று அரசு கருதுகிறது. சுமார் 220 பேர்கள்தான் கம்பவுண்டிங் செய்து கொண்டிருக்கிறார்கள். கம்பவுண்டிங் செய்து கொண்டிருக்கிறவர்களைத் தவிர பாக்கி இருக்கிறவர்கள் பழைய விதிமுறைகளின்படி வரி கட்ட வேண்டும். அதுதான் சட்டம். ஆகவே, கம்பவுண்டிங் செய்துகொள்ளாததால் நஷ்டம் வந்திருக்க முடியாது. கம்பவுண்டிங் செய்துக் கொண்டவர்களுக்குத்தான் நஷ்டம் வந்திருக்க முடியும். ஆகையால் கம்பவுண்டிங் செய்துகொள்ளும் உரிமையை ரத்து செய்வதனால் என்ன லாபம் வரும் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

சினிமாத் துறையைப் பற்றி எனக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. ஆனால் இங்கே பல அங்கத்தினர்கள் பேசிய கருத்துக்களைப் பார்க்கும்போது சில விபரங்களை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. இந்தியாவிலேயே சினிமாத் துறையில் தமிழ் நாடு வளர்ச்சியடைந்ததாக இருக்கிறது. இந்த சினிமாத் துறை





நசித்துவிடக் கூடாது என்று உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே, நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, இந்த சினிமாத் துறை சம்பந்தமாக, அது நசித்து விடாமல் இருக்க ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும்; அதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தக் கருத்திலே முதலமைச்சரவர்கள் இருக்கிறார்கள் என்றும் நான் அறிகிறேன். அவர்களுக்கு எல்லா விவரங்களும் கிடைத்திருக்கின்றன. விரைவிலேயே ஒரு சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அதுவரையில் இந்த மசோதாவை சட்டமாக ஆக்காமல் இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்புவதன் மூலம் நல்ல பலன் கிடைக்கும். நான் முதலமைச்சரவர்களை மிகவும் வற்புறுத்தி கேட்டுக்கொள்வது இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புங்கள் என்பதுதான்.

கிராமப்புறங்களிலே இருக்கிற தியேட்டர்களை மூடிவிடக் கூடாது. முக்கியமாக கீழ்நிலையில் இருக்கிற மக்களுக்கு கிராமப் புறங்களிலே சினிமாதான் பொழுதுபோக்காக இருக்கிறது. இதர நாடுகளுடன் ஒப்பிடும்போது நமது நாட்டில் மிகவும் இந்த வசதி குறைவாக இருக்கிறது. ஜனத்தொகை அடிப்படையில் பார்த்தாலும் இன்னும் அதிகமான சினிமாத் தியேட்டர்கள் வேண்டும். அப்படி இருக்கும்போது இருக்கின்றவைகளை மேலும் குறைத்து விடக் கூடாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த மசோதாவை 'பாஸ்' செய்வதினால் அரசாங்கத்திற்கு வருமானம் பெருகிவிடப் போவதாக நான் கருதவில்லை. அதற்கு வேறு முறைகள் வேண்டும். அதையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்து, ஒரு 'காம்பிரிகென்சிவ் ஆக்ட்' கொண்டுவந்து பாஸ் செய்வதுதான் பொருத்தமாக இருக்கும். ஏன் எல்லோரும் கம்பவுண்டிங் செய்து கொள்ளவில்லை என்பதற்கான ஒரு வழி வகையைக் காண்பதற்கு இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும்; அதோடு ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் . தலைவரவர்களே, சில விளக்கங்களை மட்டும் அறிவதற்காக சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரம் இல்லை. உங்கள் கட்சியிலிருந்து சிலர் பேசிவிட்டார்கள்.

**திரு. பெ. சீனிவாசன் :** நான் உரை நிகழ்த்தவில்லை. விளக்கம் பெறுவதற்காக சில குறிப்புகளை மட்டும் சொல்லிவிடுகிறேன். அது இந்த மசோதாவுக்கு சம்பந்தப்படாத விஷயம்தான்.

எல்லா தியேட்டர்களிலும் கார் பார்க்கிங் செய்வதற்கு 8 அணா, ஒரு ரூபாய் என்று வசூல் செய்கிறார்கள். அதைப்போலவே சைக்கிள் நிறுத்துவதற்கும் காசு வசூல் செய்கிறார்கள். இப்படி வசூல் செய்கின்ற பணம் தியேட்டர்களுக்குப் போகிறதா அல்லது அரசாங்கத்திற்குப் போகிறதா ? இதன் மூலம் மாதம் ஒரு லட்சம், இரண்டு இலட்சம் ரூபாய் வருமானம் வரும். இதை போலீஸ்காரர்களே கூட செய்யலாம். அவர்களே ஒரு 'ஆர்டர்லி'-யை போட்டு, வசூல் செய்யலாம்.

இன்னொன்று, தியேட்டர்களில் விற்கின்ற பண்டங்களின் விலையும் அதிகமாக இருக்கிறது. வெளியே விற்கப்படுவதை விட 75 சதவிகிதம் அதிகமாக இருக்கிறது. இரண்டு மடங்கு, மூன்று மடங்கு அதிகம் வைத்து விற்கிறார்கள். பழைய பொருட்களை கூட அங்கே கொண்டுவந்து விற்கிறார்கள். அதையெல்லாம் தடை செய்ய வேண்டும்.

அடுத்து, மினி தியேட்டர்களைக் கட்டுவதற்கு அனுமதி கொடுக்கிறார்கள். நேற்று நான் ஒரு சினிமாவுக்குப் போயிருந்தேன். திடீரென்று விளக்கு அணைந்துவிட்டது. அந்த நேரத்தில் ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால், எல்.ஐ.சி. மாதிரி ஒரு தீ விபத்து ஏற்பட்டால் ஒருவர் கூடத் தப்பிக்க முடியாது. மினி தியேட்டர் அப்படி இருக்கிறது. அப்படி இல்லாமல் தகுந்த பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் கார் பார்க்கிங் பணம் யாருக்குப் போகிறது என்று கேட்டார்கள். இதுவரை தியேட்டர்களுக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறது. அவர் கூறிய கருத்து எங்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. அதைத் தூண்டி விட்டமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பணம் தியேட்டர்களுக்குச் செல்லாமல் அரசாங்கத்திற்கு வந்து சேரும் வழிமுறைகளுக்கான ஆலோசனையாக இருக்கிறது அவர் கூறியது.



திடீரென்று விளக்கு அணைந்து, தீ விபத்து ஏற்பட்டால் என்ன செய்வது என்று கேட்டார். திடீரென்று மின்சாரம் தடைபட்டு, விளக்கு எரியாமல் இருந்தால் பாதுகாப்புக்காக பெட்ரோமாக்ஸ் லைட் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கூட்டங்கள் நடத்துபவர்களுக்குச் சொல்லி இருக்கிறோம். அதைப்போல சினிமாத் தியேட்டர்களிலும் வைப்பது பற்றி யோசிக்கலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, நான் இந்த விவாதத்திலே சற்று காலந்தாழ்ந்து வர நேர்ந்தது. இந்த சினிமாத் துறை பற்றியும், அதிலே இருக்கிற சிக்கல்கள் பற்றியும் அதோடு இருக்கிற கேளிக்கை வரி பற்றியும் விவாதம் நடந்து முடிந்திருக்கிறது. அந்த விவாதத்திலே எங்கள் கட்சியின் சார்பிலே ஒன்றிரண்டு கருதுக்கள் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கம்பவுண்டிங் முறையில், நடைமுறையில் எப்படி சங்கடங்கள், சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதுபற்றிப் பல்வேறு கருதுக்களைக் கூறி இருக்கிறார்கள். வரி ஏய்ப்பு அதிகம் இருக்கிறது ; கேளிக்கை வரி கட்டுவதில் ஒழுங்கீனம் இருக்கிறது என்றெல்லாம் கூறினார்கள். பொதுவாக இது சம்பந்தமாக சட்டமியற்றும்போது நல்ல சட்டமாக இயற்றுவதற்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறுவதுதான் சாலச் சிறந்ததாக இருக்குமென்று கருதுகிறேன். இந்தமாதிரி பீஸ் மீல் லெஜிஸ்லேஷன் என்ற முறையில் இல்லாமல் உருப்படியான ஒரு சட்டத்தை உருவாக்குவதுதான் பொருத்தமாக இருக்கும்.

இப்போது ஒரு ஆர்டினன்ஸ் வந்திருக்கிறது. அதைப்பற்றி இந்தச் சட்டமன்றத்திலே பேசுவது, "செத்ததற்குப் பிறகு பிரேத பரிசோதனை நடத்துவது" போல இங்கே போஸ்ட்மார்டம் தான் நடத்துவதாக இருக்கும் என்பதை, நாம் கண்கூடாகக் காண்கிறோம். என்னென்ன திருத்தம் செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் இந்த ஆர்டினன்ஸ் பிறப்பிக்கப்படுவதற்கு முன்னால் சிந்தித்துச் செய்திருந்தால் நிச்சயமாக இந்தமாதிரிப் பிரச்னைகள் எல்லாம் எழாது.

இன்று சினிமாத் தொழில் எப்படி நடந்துகொண்டிருக்கிறது என்பதைப்பற்றி இங்கே என்னைப்போன்றவர்கள் பேசியதிலிருந்து ஓரளவு புரிந்துகொண்டேன். தமிழ்நாட்டிலே இருக்கிற சினிமாத் தொழில் வேறு மாநிலங்களுக்கு ஓடிக்கொண்டிருக்கிறது என்று

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1975 அக்டோபர் 25

சிலர் கூறினார்கள். அதையெல்லாம் எப்படித் தடுப்பது, எப்படி வருமானத்தைப் பெருக்குவது என்ற கருத்துக்களின் அடிப்படையிலே, இந்தச் சட்டத்திலே இருக்கிற சந்துபொந்துகளை, ஓட்டை உடைசல்களை நிவர்த்திப்பதற்கு வேண்டிய ஆலோசனைகளாக, இந்தத் திருத்தத்தை இப்போது சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இது சம்பந்தமாக என்ன நிர்வாகச் சீர்திருத்தங்கள் செய்ய முடியும், விற்பனை வரி இலாகாவிலிருந்து சோதனை செய்கிறவர்கள், அதே மாதிரி இந்த பி.டபிள்யூ.டி. இலாகாவிலிருந்து இந்த தியேட்டர்களையெல்லாம் ஆய்வு செய்கிறவர்கள், இவர்களெல்லாம் என்னென்ன முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்று விதி முறைகள் இருக்கின்றன. இதையெல்லாம் மறுபரிசீலனை செய்து இன்று இருக்கிற, நிர்வாகத்தில் இருக்கிற சிக்கல்களை அப்புறப் படுத்த வேண்டும். நமக்கு நியாயமாகக் கிடைக்கிற வரியை ஏய்க்கிறவர்கள் இருக்கிற காரணத்தினால் இதிலே 10 கோடி ரூபாய் இழப்பு இருக்கிறதென்றால் இது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. இந்த மாதிரி 10 கோடி ரூபாய், நமது அரசாங்கத்தின் கருவூலத்திற்கு வரவேண்டிய ரூபாய் ஏய்க்கப்படுகிறது.

To plug the loophole Legislation should be made.

ஆதலால் இம்மாதிரியான முக்கியமான விஷயத்திலே இதை ஒரு செலக்ட் கமிட்டிக்கு — பொறுக்குக் குழுவிற்கு அனுப்புவது பொருத்தமாக இருக்குமென்ற ஆலோசனையை இந்த நேரத்தில் கூறுவதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இந்தத் தொழில் பற்றி நல்ல முறையில் தெரிந்தவர்கள் பல்வேறு உறுப்பினர்கள் இங்கே இருக்கிறார்கள். சட்டத் துறையிலே இதிலே இருக்கிற சட்ட நுணுக்கங்களையும் ஆராய்ந்து அலசிப் பார்த்து இந்தச் சட்டத்தை ஒரு காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் என்ற முறையில் விரிவாகக் கொண்டு வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** உதவி சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய திரு. நாடார் அவர்கள் குறிப்பிட்டது மாதிரி இந்த விவாதத்திலே கலந்து கொள்ளவேண்டாமென்று நான் இருந்தேன். என்னுடைய கட்சியின் சார்பில் ஏற்கெனவே திரு. என். கே. பழனிசாமி அவர்கள் பேசியிருக்கிறார்கள். இந்த



1975 அக்டோபர் 25] [திரு. கே. டி. கே. தங்கமணி]

விவாதத்தைக் கேட்ட பிற்பாடுதான் இம்மாதிரியான ஒரு மசோதா வருகிறபோது சபைக்கு உதவியாக இருக்கக் கூடும் என்று மற்ற உறுப்பினர்கள் சொன்னதையும் வைத்துக் கொண்டு அரசாங்கத்திற்கு உதவி செய்யக் கூடிய முறையில் சில ஆலோசனைகளைச் சொல்வது ஒரு உறுப்பினர் என்ற முறையில் என் கடமை என்ற நிலையில்தான் நான் எழுந்து நிற்கிறேன்.

இந்தக் குறிப்பிட்ட மசோதாவைப் பொறுத்த வரையிலே சொல்வதற்கு அதிகமாக ஒன்றும் இல்லை. காரணம், ஏற்கெனவே இரண்டு சட்டங்கள் அடிப்படையிலே நமக்கு வருவாய் கிடைக்கக் கூடிய ஏற்பாடுகளை ஒரு திருத்தம் மூலமாக சென்ற வருஷம் ஆகஸ்டு மாதம் கொண்டு வந்திருந்தார்கள். அந்த நேரத்திலே இந்த ஃபிலிம் உலகத்திலே இருக்கக் கூடிய சில உறுப்பினர்கள் இதை இவ்வளவு வேகமாகக் கொண்டு வரக் கூடாது என்று ஆட்சேபித்திருக்கிறார்கள். அதற்குக் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு இன்னொரு திருத்தம் வந்தது. அப்போதும் இதே ஆட்சேபணைகளைக் குறிப்பிட்டார்கள், சென்ற சட்ட மன்றக் கூட்டம் முடிந்த பிற்பாடு ஜூலை மாதம் 21-ம் தேதி ஒரு அவசரச் சட்டம் வந்திருக்கிறது. அந்த அவசரச் சட்டத்தைச் சட்டமாக்குவதற்குத்தான் இப்போது வந்திருக்கிறோம். வேறு முறையில் சொல்லப் போனால் ஒரு வருஷத்திலே 4 விதமான திருத்தங்கள் வந்திருக்கின்றன. இந்தக் கடைசி திருத்தம் வருவதற்குக் காரணம் இல்லை என்பதற்கு கொடுத்த காரணங்கள் போதாது என்று சொல்ல முடியும்.

"There were certain administrative difficulties in enforcing the said composition scheme."

இந்த கம்பவுண்டிங்கை குறைத்து விட்டு, இதை அமுல் நடத்துவதற்கு முடியவில்லையென்று சொல்வது, இப்படி அரசாங்கம் இந்த மாதிரியாக நிலைமையைச் சொல்லக் கூடாது என்று சொல்கிறேன். கம்பவுண்டிங் என்று முடிவு எடுத்து விட்டால் இந்த கம்பவுண்டிங்கை அமுல் நடத்தவேண்டிய பொறுப்பு அதிகாரிகளைச் சாரும். அந்த அதிகாரிகள் இடைஞ்சல் செய்கிறார்களோ என்று இந்தக் காரணத்தில் தொக்கி நிற்கிறது.

அடுத்தாற்போல இந்த விவாதத்தில் காலையில் எடுத்துச் சொன்ன மாதிரி இது முக்கியமான தொழில். இந்தத் தொழிலை நன்கு அறிந்த திரு. செழியன் அவர்களும், திரு. அரங்கண்ணல்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 25

அவர்களும் பேசியிருக்கிறார்கள். முதலமைச்சரவர்களே இந்தத் தொழிலினுடைய பல நுணுக்கங்களை அறிந்தவர்கள்.

He knows all the nuances in the trade.

அப்பேர்ப்பட்ட ஒரு முதலமைச்சர் இங்கே இருக்கிறார்கள். ஆகவே தான் நான் கருதுவது என்னவென்றால் இந்தத் தொழில் சம்பந்தமாக குறிப்பாக எங்களுக்கு என்ன கஷ்டம் வருகிறது என்றால், திடீரென்று இங்கே இருக்கக் கூடிய ஸ்டுடியோக்களெல்லாம் மூடப்பட்டு தொழிலாளர்கள் 10 ஆயிரம் பேர் வரை வேலையில்லாமல் இருந்து எப்படியாவது இதற்குத் தீர்வு காண வேண்டுமென்ற நிலை வந்தது. அதிலே அரசாங்கமும் ஒத்துழைத்தார்கள். கடைசியில் ஒவ்வொன்றாகத் திறந்தார்கள். இப்போது மறுபடியும் ஒரு குறிப்பிட்ட பெரிய ஸ்டுடியோவைத் திறக்கவே மாட்டேன் என்று இருந்து கொண்டிருக்கிறார்கள். அதன் காரணத்திற்குள்ளே நான் போகவில்லை.

அடுத்தாற்போல, பெரும் பெரும் தியேட்டர்களைக் கட்டுகிறார்கள். இப்படிக் கட்டுகிறவர்கள் அதிகமான வருவாய் இல்லாமல் கட்டப் போவதில்லை. நியாயமான வருவாய்க்கு அப்பாற்பட்ட வருமானம் அவர்களுக்கு இருக்கிறதாவென்ற விஷயத்திற்கு நான் போகவில்லை. இந்தச் சமயத்தில் ஒன்றைச் சொல்வேன். இன்று கோயிலுக்குப் போவதை விட சினிமாவிற்கு அதிகமாக ஜனங்கள் போகிறார்கள். எண்டர்டெயின்மெண்ட் வேண்டும். கேளிக்கை வேண்டுமென்ற கருத்து ஜனங்கள் மத்தியில் இருக்கிறது. இது நன்மையும் கூட. பல கஷ்டங்களுக்கு மத்தியில் கேளிக்கை பார்க்கலாம் என்று சொல்லி அப்படிப் போகிறவர்களுக்கும் உற்சாகம் ஊட்டக் கூடியதாக இருக்கவேண்டும்.

அதே நோக்கிலே ஏற்கெனவே ஒரு 15 கோடி ரூபாய் நமக்கு வருவாயாக வந்தது. 25 கோடி ரூபாய் வருவாய் வராமல் இருக்கிறது. 10 கோடி ரூபாய் அளவிற்கு ஏமாற்றுகிறார்கள். ஏமாற்றுகிறவர்களை எப்படிக் கண்டு பிடிக்கவேண்டும் என்பது அரசு செய்ய வேண்டிய வேலை. மக்களும் ஒத்துழைக்க வேண்டிய நிலை உள்ளது. அப்படி வருகிறபோது இந்தத் தொழில் சம்பந்தமாக, இந்த ஃபிலிம் இண்டஸ்ட்ரீஸ் சம்பந்தமாக உருப்படியாகச் செய்த நல்ல காரியமாக இருக்கலாம். இந்தத் தொழில் சம்பந்தமாக, ஈடுபட்டிருக்கிறவர்கள் சம்பந்தமாக, டிஸ்ட்ரிப்யூட்டர்கள்



1975 அக்டோபர் 25] [திரு. கே. டி. கே. தங்கமணி]

சம்பந்தமாக, தியேட்டர்கள் சம்பந்தமாக, பஞ்சாயத்தில் இருக்கக் கூடிய பர்மனெண்ட், டூரிங் தியேட்டர்கள் சம்பந்தமாக விரிவான அளவிற்கு அவரவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கக் கூடிய முறையிலும்—நம் வருவாயை 15 கோடியை 25 கோடி என்ன, 30 கோடியாக்கக் கூடிய நிலைக்கு வருவாய் வரும் என்று நினைக்கிறேன்,—அப்படி ஒரு நல்ல முறையில் கொண்டு வரவும் செய்யலாம். ஆகவே இன்றைக்குக் கேட்டுக் கொள்வது, அரசாங்கம் இதை ஒரு பிரெஸ்டிஜ் பிரச்சனையாகப் பார்க்காமல் கொண்டு வந்திருக்கிற மசோதாவிலே புதுமை என்று கம்பவுண்டிங் சிலவற்றைச் சேர்க்கிறார்கள், சிலவற்றை விட்டிருக்கிறார்கள். ஸ்னேப் அமெண்ட்மெண்ட்ஸ் தேவையில்லை. கொண்டு வந்த ஆர்டினன்ஸோடு போகட்டும். இதை வாபஸ் வாங்கலாம். சபைக்கு அஷ்யூரன்ஸ் கொடுத்து இந்தச் சட்ட மன்றத் தொடரிலேயே வேறு ஒரு மசோதாவைக் கொண்டு வருகிறோம் என்று அப்படி கொண்டு வருகிற போது, இந்த ஃபிலிம் இண்டஸ்ட்ரீஸில் இருக்கிறவர்களை முன்னாலே கலந்து கொண்டு மசோதாவைக் கொண்டு வந்தார்களானால் உதவிகரமாக இருக்கும், உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தைக் கொடுத்திருக்கிற முறையில் சபையில் சொல்லப்பட்ட விவாதத்தை ஓரளவிற்கு மதிக்கிற அம்சத்திலே கொண்டு வந்தால் உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மன்றத்தின் முன்னுள்ள கேளிக்கை வரி பற்றிய இந்த மசோதா குறித்து பலதரப்பட்ட கருத்துக்கள் இங்கே கூறப் பெற்றிருக்கின்றன. அரசு இதிலே கௌரவம் பார்க்காமல் உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று இறுதியில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இதிலே கௌரவப் பிரச்சனை எதுவும் கிடையாது என்பதையும் நிலைமைக்கு ஏற்ப அரசு சில முடிவுகளை எடுக்கவேண்டியிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கேளிக்கை வரி குறைக்கப்படவேண்டும் என்பது பலருடைய கருத்தாக இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. ஆளும் கட்சித் தரப்பிலிருந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கண்ணல் ஆனாலும், எதிர்க் கட்சி தரப்பிலிருந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர் கோவை செழியன் அவர்கள் ஆனாலும் வரிகள் குறைக்கப்படவேண்டுமென்ற கருத்தில் ஒருமித்த எண்ணங்களை எடுத்துச் சொன்னார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 அக்டோபர் 25

ஆனால், திடீரென்று கேளிக்கை வரியைக் குறைத்து விடுகிற காரணத்தினால் படத் தொழிலில் ஒரு பெரிய வெற்றிகரமான ஏற்றம் ஏற்பட்டுவிடுமா என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும் அப்படிக் குறைப்பதன் வாயிலாக படம் காட்டுகிற திரையரங்கு உரிமையாளர்களும், மாவட்டங்களுக்குப் படங்களைப் பெற்று வினியோகிக்கிற வினியோகஸ்தர்களும் அதிக லாபம் அடைவார்களே தவிர, படங்களை உருவாக்கி வெளியிடுகிற படத் தயாரிப்பாளர்களுக்குப் பெரிய பயன் இதனால் வந்து விடப் போவதில்லை. எனினும், இது உடனடியாகச் சொன்னவுடன் புறக்கணித்து விடக் கூடிய ஒன்று அல்ல என்பதையும் இதைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டுமென்பதிலே அரசு அக்கறையோடு இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

படத்தொழில் நசித்துப்போகவேண்டுமென்று, பழிவாங்கும் மனப்பான்மையோடு இந்த அரசு நடந்துகொண்டிருப்பதாக திருமதி அனந்தநாயகி அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். அது எவ்வளவு தூரம் உண்மை என்பதை கலையுலகத்தில் இருப்பவர்கள் உணர்வார்கள். படத் தொழில் நசித்து விடுமானால் அரசுக்குக் கிடைக்கக்கூடிய கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் தான் குறையுமேயல்லாமல் வேறு எந்தவிதமான பயனும் ஏற்படாது. நான் ஒரு வேளை கலைக்கு விரோதி, கலைக்குப் பகைவன் என்று திருமதி அனந்தநாயகி அவர்கள் கருதினாலும் நிதியமைச்சராக இருக்கிற காரணத்தினால் நான் பணத்திற்கு விரோதியாக இருப்பேன், வருமானத்திற்கு விரோதியாக இருப்பேன் என்று கருதுவது தவறாகும். பழிவாங்கும் எண்ணம் கிடையாது. ஏதோ பழிவாங்கும் எண்ணம் இருப்பதாகச் சொல்லி, இதையும் அரசியலாக்கி, ஒரு சுமுகமான சூழ்நிலை உருவாவதை இடையிலுள்ளவர்கள் கெடுத்துவிடக்கூடாது என்று நான் சொல்லுகிறேன்—வரியைப் பொறுத்துத்தான் நான் சொல்லுகிறேன்—வேறு சூழ்நிலையை நான் குறிப்பிடவில்லை.

படத்தயாரிப்பாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதற்கு மிக முக்கியமான காரணம், திரு. அரங்கண்ணல் எடுத்துக் காட்டியதைப்போல, மத்திய அரசு படத் தயாரிப்பாளர்கள் அத்தனைபேரையும் பெரும் கோடீஸ்வரர்களாகக் கருதிக் கொண்டு—யாரோ ஒன்றிரண்டு பேர்கள் அவர்கள் கண்களில் தென்படு



1975 அக்டோபர் 25] [டாக்டர் மு. கருணாநிதி]

கிறார்கள்—அவர்களை மனதில் வைத்து—மிகச் சிறிய படத் தயாரிப்பாளர்களும்கூட தண்டனை அனுபவிக்க வேண்டுமென்ற நிலையில்—இந்த ரா ஸ்டாக் போன்ற படத் தயாரிப்புக்கு தேவையான பொருள்களுக்கு எந்த அளவுக்கு வரி விகிதத்தை உயர்த்தியிருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதோடு கச்சாப் படத்திற்கே—ப்ளாக் அண்டு ஒயிட்—முன்பு இருந்ததைவிட இப்போது போட்டிருக்கிற வரி இரண்டு மடங்கு அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது — இது கலர்ப் படங்கள் அல்லாதவைகளுக்கு. இன்னும் வண்ணப்படங்களுக்கு மேலும் அந்த வரி இரண்டு மடங்குக்கு மேலாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, படத்தயாரிப்பாளர்கள் உள்ளபடியே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒன்றிரண்டு படத்தயாரிப்பாளர்கள் பெரும் பணக்காரர்களாக இருக்கிறார்கள் என்பதை மாத்திரம் மனதில் கொள்ளாமல், ஏராளமான சிறிய படத்தயாரிப்பாளர்களும் நாட்டில் இருக்கிறார்கள். இவர்கள் பெரும் முதலீடு வைத்து அந்தப் படத்தைத் தயாரிக்க முன்வருவதில்லை. மிகச் சிறிய முதலீட்டோடு படத்தை ஆரம்பித்து, விநியோகஸ்தர்கள் தருகிற பணத்தை வைத்துக்கொண்டு படத்தைத் தயாரித்து எடுத்து முடிக்கிறார்கள். மத்திய அரசு ரா ஸ்டாக் போன்றவைகளுக்கு விதித்திருக்கிற கடுமையான வரியைக் குறைப்பதன் மூலமாகப் படத் தயாரிப்பாளர்களுக்கு உதவலாம்.

பொதுவாக இந்திப் படங்கள் லாபகரமாக இருக்கிறது என்ற கருத்து மன்றத்தில் பேசப்பட்டது. அதற்கு ஒரு காரணம் இந்திப் படத்தின் சந்தை இந்தியாவில் விரிவாக இருக்கிறது. மாநில மொழிப்படங்களுக்கு அத்தகைய விரிவான சந்தையில்லை. இந்திப் படங்களை எவ்வளவு செலவழித்து எடுத்தாலும் இந்தியாவில் பல்வேறு பகுதிகளுக்குச் செல்வதற்குத் தங்குதடையற்ற சூழ்நிலை இருப்பதால், அதிகமான தியேட்டர்களில் வெளியிட வாய்ப்பு இருப்பதனால்—இந்திப் படங்களை அதிகச் செலவிட்டு எடுத்தாலும் —பெரும்பாலானவர்கள் நஷ்டம் அடைகிற சூழ்நிலை கிடையாது.

இன்னொரு கருத்து—ஏதோ தமிழ்நாட்டில் திரைப்படத் தொழில் நசித்துவிட்டது என்று பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துக் கொண்டு சில உறுப்பினர்கள் இங்கே பேசியது வருந்தத்தக்கது. தமிழ்நாட்டில் எடுக்கப்பட்ட படங்கள் சரியாக ஓடவில்லை; நூற்றுக்குப் பத்து படங்கள்தான் நல்லமுறையில் ஓடின. வெகு

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 அக்டோபர் 25

நன்றாக ஓடின. பதினைந்து படங்கள் சுமாராக ஓடின. மற்றப் படங்கள் மிக மோசமாக ஓடின என்ற கணக்கைச் சொன்னால் நான் ஒத்துக்கொள்வேன்.

இங்கு படத்தொழில் நசித்துவிட்டது என்று கூறியது, படங்களே வெளிவராதது போல கற்பனை செய்துகொண்டு, இந்த அரசின் தலைமைப்பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற நான் கலைத் துறையில் இருக்கிறவன் என்ற காரணத்தினால் நானே அதை அழிக்க முற்பட்டேன் என்ற அவதூறான கற்பனை அரசியலுக்குப் பயன்படுமே தவிர புள்ளிவிவரங்கள் அப்படி எடுத்துக்காட்டவில்லை.

1970-ஆம் ஆண்டில் தென்னாட்டில் எடுக்கப்பட்ட மொத்த படங்கள்—தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய எல்லாம் சேர்ந்து—தென்னிந்தியாவில் தயாரிக்கப்பட்ட படங்கள் 241. அந்த 241 படங்களில் தமிழ்நாட்டில் மட்டும் தயாரிக்கப்பட்ட படங்கள் 199.

1971 ஆம் ஆண்டு தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய எல்லாவற்றையும் சேர்த்து தென்னாட்டில் தயாரிக்கப்பட்ட மொத்த படங்கள் 252 ஆகும். அவற்றில் தமிழ்நாட்டில் மட்டும் தயாரிக்கப்பட்டவை 205 படங்களாகும்.

1972 ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் தயாரிக்கப்பட்ட மொத்த படங்கள் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, இந்தி ஆகிய எல்லாம் சேர்ந்து 247 ஆகும். அவற்றில் தமிழ்நாட்டில் மட்டும் தயாரிக்கப்பட்டவை 216 படங்களாகும்.

1973 ஆம் ஆண்டு தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய எல்லாவற்றையும் சேர்த்து தென்னாட்டில் தயாரிக்கப்பட்ட மொத்த படங்கள் 257 ஆகும். அவற்றில் தமிழ்நாட்டில் மட்டும் தயாரிக்கப்பட்ட படங்கள் 226 ஆகும்.

1974 ஆம் ஆண்டில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் இந்தி ஆகிய எல்லாவற்றிலும் மொத்தமாக தென்னாட்டில் தயாரிக்கப்பட்ட படங்கள் 252 ஆகும். அதிலும் தமிழ்நாட்டில் மட்டும் தயாரிக்கப்பட்டவை 216 படங்களாகும்.

இந்த ஆண்டு சென்ற மாதம் வரையில் தென்னாட்டில் தயாரிக்கப் பட்டுள்ள மொத்த படங்கள் 224 ஆகும். அதில் தமிழ்நாட்டில் மட்டும் தயாரிக்கப்பட்டுள்ள படங்கள் 190 ஆகும். இவை கடந்த மாதம் வரையில் தயாரிக்கப்பட்டவை.



1975 அக்டோபர் 25] [டாக்டர் மு. கருணாநிதி]

தமிழ்ப் படங்களை மட்டும் கணக்கெடுத்துப் பார்த்தால் 1973-ல் 66 படங்கள் வெளிவந்திருக்கின்றன. 1974-ல் 78 படங்கள் வெளி வந்திருக்கின்றன. 1975 ஆம் ஆண்டில் இதுவரையில் 53 படங்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன.

இப்படி படத் தயாரிப்புகளோ, வெளியிடப்படுகிற படங்களோ எண்ணிக்கையில் குறைந்துவிடாமல் இருக்கிற நேரத்தில் தமிழ் நாட்டில் பிலிம் இண்டஸ்ட்ரி படத் தொழில் நசிந்துவிட்டது, பழிவாங்கப்பட்டு விட்டது என்று அரசியல் பிரச்சாரத்திற்காக, அரசியல் காரணத்திற்காகப் பயன்படுத்துவது நல்லது அல்ல என்று நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தக் கேளிக்கை வரி ஏமாற்றுவதைப்பற்றி பல உறுப்பி னர்கள் சுட்டிக்காட்டினார்கள். நண்பர் திரு. லத்தீப் அவர்களும், நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் அந்த ஏமாற்றுக் காரர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். இலாக்காவில் சில அதிகாரிகளின் நடத்தையை மேலும் உன்னிப்பாகக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

திரு. கிருஷ்ணமூர்த்தி மாற்று யோசனை ஒன்றையும் சொன் னார்கள். நாமே டிக்கெட்டுகளை அச்சடித்துக் கொடுத்து விடலாம் என்று. அந்த யோசனை—கடந்த மாதம் நானும், அந்தத் துறை அமைச்சரும், அதிகாரிகளும் நீண்ட நேரம் பேசி கைவிட்ட யோசனையாகும். அப்படி நாமே டிக்கெட்டுகளை அச்சிட்டுக் கொடுப்பதென்றால் ஒரு நாளைக்கு சுமார் 10 லட்சம் டிக்கெட்டுகள் அச்சிட்டாக வேண்டிய அவசியமிருக்கிறது. பத்து லட்சம் டிக்கெட்டுகளை ஒவ்வொரு நாளும் அச்சிட்டுத் தருவது இன்றுள்ள சூழ்நிலையில் இயலாத காரியம். என்றாலும் இதை அறவே விட்டு விடவில்லை, பிறகு சிந்திக்கலாம் என்று இந்தக் கருத்து ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

படங்கள் வரியினால் மாத்திரம் பாதிக்கப்படவில்லை. இன்றைக்கு திரையரங்கத்தை நடத்துகின்றவர்களினாலும் படங்கள் பாதிக்கப் பட்டிருக்கின்றன என்ற உண்மையை ஏனோ பேசியவர்கள் அவ்வளவு அழுத்தமாக, விவரமாக வெளியிடவில்லை என்பது புரிய வில்லை.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 அக்டோபர் 25

நான் ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். சென்னையில் ஒரு படத்தை—சிறிய படமாக இருந்தாலும், பெரிய படமாக இருந்தாலும்—சென்னையிலுள்ள ஒரு தியேட்டரில் வெளியிட்டால்தான் மற்ற மாவட்டங்களிலும் விநியோகஸ்தர்கள் அதனை வாங்குவார்கள். தயாரிக்கப்பட்ட ஒரு படம் சென்னையில் வெளியிடப்படவில்லை என்றால் அந்தப் படத்தின் மதிப்பு மிகக் குறைந்து போகும். இந்தத் துறையிலுள்ள நண்பர்களுக்கு இது வெகு நன்றாகப் புரியும்—சென்னையைப் பிடித்திருந்த இந்த நோய் இன்றைக்கு மதுரை, திருச்சி, கோவை, சேலம் போன்ற பெரிய நகரங்களிலும் பரவியிருக்கிறது. அந்த நோய் என்னவென்றால்—இதற்கு முன்பெல்லாம் ஒரு தியேட்டரில் ஒரு படத்தை வெளியிடுவது என்றால்—தியேட்டரில் படம் போடுவார்கள். முதல்வாரம் வெளியிடுபவர்களுக்கு 60 சதவிகிதம், தியேட்டர்காரர்களுக்கு 40 சத விகிதம். இரண்டாவது வாரம் வசூலில் வெளியிடுபவருக்கு 55 சத விகிதம், தியேட்டர்காரருக்கு 45 சத விகிதம். அதற்கு அடுத்த வாரம் வருகிறபோது—மூன்றாவது வாரத்தில் 50 சத விகிதம், 50 சத விகிதம் என்று பிரித்துக்கொள்வார்கள். ஐந்தாறு வாரம் ஆனபிறகுதான் வெளியிடுபவருக்கு 40 சத விகிதம் இருக்கும். தியேட்டர்காரருக்கு 60 சத விகிதம் ஆக அதிகமாக உயரும். படத்திற்கு நல்ல வசூல் இல்லாவிட்டால் தியேட்டர்களுக்கு பாதுகாப்பு வேண்டுமல்லவா? பத்து வாரத்திற்கு படம் போடுவதாக தியேட்டர்காரருடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தாலும் வசூல் குறைந்துவிடுமானால் தியேட்டர்காரர் அந்தப் படத்தை எடுத்துவிட்டு வேறு படம் போட்டுக் கொள்ளலாம், இந்தப் படத்தைத் தான் ஓட்ட வேண்டுமென்ற தேவையில்லை.

நாளடைவில் அந்தப் பழக்கம் மறைந்து இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். இது எழுத்துக்கு எழுத்து சரி என்று சொல்ல முடியாவிட்டாலும் தோராயமாக சென்னையில் ஒரு தியேட்டரில்—பெரிய தியேட்டர்—ஒரு படம் சுமாராக ஓடக்கூடிய படம் என்று வைத்துக் கொள்ளலாம்—போடப்படுகிறது. ஒரு காட்சிக்கு ஆயிரம் ரூபாய் வசூலாகிறது; க்ராஸ் கலெக்ஷன்—மொத்தத்தில் ஒரு நாளைக்கு 3 காட்சிக்கு மூவாயிரம் ரூபாய் வசூலாகிறது என்றால் வாரத்திற்கு 21 ஆயிரம் ரூபாய் வசூலாகிறது; க்ராஸ் கலெக்ஷன், மொத்த



1975 அக்டோபர் 25] [டாக்டர் மு. கருணாநிதி]

கலெக்ஷன். இந்த மொத்த கலெக்ஷன் 21 ஆயிரத்தில் சர்க்காருக்கு வருகிற கேளிக்கை வரி 10,500 ரூபாய்; கொஞ்சம் அதிகமாகவே 11 ஆயிரம் என்று வைத்துக்கொள்வோம். அல்லது ரூ. 10,000 என்று

(பிற்பகல் 12-30)

வைத்துக்கொள்வோம். அது போனால் மிச்சம் ரூ. 11,000. அந்தப் படத்தை எடுத்தவருக்கு அல்லது விநியோகம் செய்தவருக்கு ரூ. 11,000 வரவேண்டும். இந்த ரூ. 11,000-ல் தியேட்டருக்கு எவ்வளவு தரவேண்டும் தெரியுமா? சென்னையில் ரூ. 15,000 தர வேண்டும். ரூ. 21,000 ஒரு வாரத்திலே வசூலானால், ஒரு ஷோவுக்கு—ஒரு காட்சிக்கு—ரூ. 1,000 வீதம், 3 காட்சிக்கு வசூலானால்—ரூ. 21,000 ஒரு வாரத்திற்கு வசூலானால், ரூ. 10,000 வரி போக மிச்சம் உள்ள ரூ. 11,000 இல் தியேட்டர்காரர் ரூ. 5,000 எடுத்துக் கொள்ளலாம், படம் தயாரித்த அந்தப் பாவி மனுஷன் ரூ. 6,000 எடுத்துக் கொள்ளலாம் என்று இல்லாமல், இன்னும்கூடச் சொல்வேன், தியேட்டர்காரர் ரூ. 6,000 எடுத்துக்கொள்ளலாம் படம் எடுத்த பாவி ரூ. 5,000 எடுத்துக் கொள்ளலாம் என்றில்லாமல், படம் எடுத்த பாவி ரூ. 11,000 ஐயும் கொடுத்துவிட வேண்டும்; மேலும் ரூ. 4,000 கொடுத்துத் தீரவேண்டிய சூழ்நிலையிலிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையில் தியேட்டர் வாடகை என்னவென்று பார்த்தால், தேவி தியேட்டருக்கு ரூ. 17,000 வாரத்திற்கு; சத்தியத்திற்கு ரூ. 14,500; சாந்திக்கு ரூ. 13,000; ஆனந்துக்கு ரூ. 12,000; கெயிட்டி, அந்தத் தியேட்டருக்கு ரூ. 8,500. கெயிட்டி தியேட்டரிலே நான் சொன்ன அந்த ரூ. 1,000 கிராஸ் கலெக்ஷன்—வசூலாகாது. ரூ. 500 தான் ரூ. 600 தானாகும்—கப்பாசிட்டி அவ்வளவுதான். ஒரு வேளைக்கு ரூ. 500 கலெக்ஷனாகும் சுமாரான படம் என்றால். ஒரு வேளைக்கு ரூ. 500 என்று வைத்துக்கொண்டால், ரூ. 1,500; நாளைக்கு என்னவாயிற்று? அவர்களுக்கு வாடகைக் கொடுத்து விட்டு வந்துவிட வேண்டும்.

அது மாத்திரமல்ல, போலீஸ் பாதுகாப்புக்கு விநியோகஸ்தர் தான் கொடுக்க வேண்டும்; தியேட்டர் சொந்தக்காரர் கொடுப்பதில்லை.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 அக்டோபர் 25

விளம்பரம்—படத் தயாரிப்பாளர், விநியோகஸ்தருடையது. துப்புரவுத் தொழிலாளர்களுக்குத் தரவேண்டிய பணம் இவைகள் எல்லாம் படம் எடுத்தவருடையது.

ஆகவே, வரியினால் படத் தயாரிப்பாளர்கள் பாதிக்கப்படுகிறார்களா? அல்லது வாடகையினால் பாதிக்கப்படுகிறார்களா என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். சென்னையிலேயிருந்த நோய் எல்லா இடத்திற்கும் பரவிவிட்டது.

ஏதோ என்னிடத்திலே பேசப் போவதாகச் சொல்கிறார்கள். நான் பேசுவதற்கு முன்பு எச்சரிக்கையாகச் சொல்கிறேன், பயமுறுத்துவதற்காகச் சொல்லவில்லை. உண்மையிலே சொல்கிறேன், விரைவிலே தியேட்டர்காரர்கள் இந்த முறையை மாற்றிக்கொள்ளாவிட்டால், பழைய விகிதாசார முறைக்கு மாற்றிக்கொள்ள முன்வராவிட்டால், ஒரு குறிப்பிட்ட தொகையை முதலீடு செய்து கட்டப்பட்ட தியேட்டர்களையெல்லாம் அரசாங்கம் தேசியமயமாக்கத் தயாராக இருக்கிறது என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மிரட்டலுக்காகக் கூறவில்லை, இதை உண்மையிலே சிறிய தயாரிப்பாளர்களுக்கு அரசு செய்ய வேண்டிய உதவி என்ற அந்தச் சூழ்நிலையைக் கருதி இந்தக் கருத்தை நான் அறிவித்துள்ளேன். ஆகவே, நான் தியேட்டர்காரர்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன்—பழைய முறைக்குத் தங்களை உட்படுத்திக் கொள்வதற்கு முன்வரவேண்டுமென்று . . .

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவரவர்களே, நேற்றையதினம் தென்னிந்திய வர்த்தக சபையில் எக்ஸிபிட்டர்களை வைத்து நேரடியாகப் பேசினோம். நம்முடைய முதலமைச்சரவர்கள் விரும்பியபடி பர்சன்டேஜ் முறைக்கு வருவதாக எல்லாத் தியேட்டர்காரர்களும் நேற்றையதினம் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அநேகமாக முதலமைச்சரவர்களை வர்த்தக சபை சந்தித்து நேரில் தெரிவிக்கும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஏற்கனவே கூட ஒரு முறை ஒத்துக் கொண்டார்கள். ஆனால் நடைமுறைக்கு வரவில்லை.

**திரு. கோவை. செழியன்:** ஏற்கனவே, மவுண்ட் ரோடிலே உள்ள 2 தியேட்டர்காரர்கள் பர்சன்டேஜ் முறையிலே வரியைப் போடுவதற்கு ஒத்துக்கொண்டார்கள். குறிப்பாக, மிட்லண்ட் தியேட்டர்



1975 அக்டோபர் 25] [திரு. கோவை செழியன்]

பர்சன்டேஜ் முறையிலே வருகிறது. முதலமைச்சர் சொன்ன எச்சரிக்கை கூட நல்லதாக இருக்கும் என்றுதான் நினைக்கிறேன். அதையாவது பின்பற்றி எல்லா தியேட்டர்காரர்களும் பர்சன்டேஜ் முறைக்கு வரட்டும் என்று ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இன்னொன்று சொன்னார்கள். ஸ்டுடியோக்கள் மூடப்பட்டிருக்கின்றன என்று நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்கள், நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் எல்லாம் சொன்னார்கள். தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு முடிவு காண வேண்டுமென்று சொன்னார்கள். நான் ஏற்கெனவே சொன்னேன், கே.டி.கே. தங்கமணி அவர்கள் அப்பொழுது இல்லையென்று கருதுகிறேன். ஜெமினி ஸ்டுடியோ—அதுதான் பெரிய ஸ்டுடியோ என்று குறிப்பிட்டார்கள். அந்த ஸ்டுடியோவைப் பொறுத்தவரையில் அதன் அதிபரை அழைத்து நீண்ட நேரம் பேசினேன். பல இலட்சம் ரூபாய், 30, 40 இலட்சம் ரூபாய் படத் தயாரிப்பிலே தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லி, தொழிலாளர்கள் தங்களோடு கலந்து நின்று அவர்கள் தொழிற்சாலையை (ஸ்டுடியோவை) மூடுவதற்கு ஒத்துக்கொண்டு அதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்ள ஒத்துக்கொண்டார்கள். ஆகவே, எங்களிடத்திலே தகராறு கிடையாது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஸ்டுடியோக்கள் இன்றைக்கு அதிக வாடகை வாங்குகின்றன என்ற கருத்தை நான் சொன்னேன். ஸ்டுடியோக்கள் அதிக வாடகை வாங்கக் காரணங்கள் இருப்பதை செழியன் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அதை நான் மறுப்பதற்கில்லை. தொழிலாளர்களுக்கு அதிகமாகச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்பதால் அதிக வாடகை வாங்க வேண்டியிருக்கிறது. சில ஸ்டுடியோக்களுக்குப் படத் தயாரிப்பாளர்கள் ரூ. 10 இலட்சம், ரூ. 20 இலட்சம் என்று கடன் வைத்துவிட்டுப் போகிறார்கள். அந்தத் தொகையினைத் திரும்பப் பெற முடியாமல், வாடகையை உயர்த்தித்தான் அந்தக் கடனை அவர்கள் சரிக்கட்ட வேண்டியிருக்கிறது. இது இப்படி ஒரு சங்கிலித் தொடர்போல் ஒன்றையொன்று பின்னிக் கிடக்கிற சூழ்நிலையில் தமிழ்நாட்டில் படத் தொழில் இருக்கிறது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, படத் தொழில் வரலாறே அப்படித்தான் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. ஸ்டுடியோக்கள் இன்னும்

குறைத்து வாடகை பெறவேண்டுமானால், படத் தயாரிப்பாளர்கள், ஸ்டுடியோக்களுக்கு இன்னும் கொஞ்சம் உதவிகரமாக இருக்க வேண்டும்.

பல படங்கள் ஸ்டுடியோ தேவையில்லாமலேயே வருகின்றன. யாராவது புதிதாக ஓட்டல் கட்டினால், அங்கேயே படம் முழுவதையும் எடுத்து விடுகிறார்கள். ஸ்டுடியோக்களுக்கு வேலையே இல்லை. அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொல்வார்கள். இதைக்கூட கருணாநிதியா சொல்வான் ? அது மட்டுமல்ல, பெரிய வீடுகளாகப் பார்த்து, வீட்டுக்குள்ளேயே, சோபா செட்டுகளை வைத்துக்கொண்டு—இப்பொழுது நல்ல பிரகாசமான விளக்கு வசதிகள் விஞ்ஞானத்தின் மூலமாக வந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு, அந்த வீடுகளுக்குள்ளேயே படம் எடுக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு ஸ்டுடியோக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்றால், படப் பிடிப்புக்கு எந்த வீட்டையும் கொடுக்கக் கூடாது என்று உத்தரவு போட வேண்டும். அதைக் கூட அரசு கருத்தில் கொண்டிருக்கிறது, படத் தொழில் வளர்ச்சிக்கு.

ஆகவே, இவ்வளவு சுலபமாகப் படங்களை எடுக்கிற கலை இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருப்பதாலே ஸ்டுடியோக்கள் பெரும் அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் விரிவாக ஆராய வேண்டும். அதை ஆராயத்தான் இதை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்று திரு. மாரிமுத்து போன்றவர்கள்—பொன்னப்ப நாடார் அவர்கள், கே. டி. கே. தங்கமணி மற்றும் ஹாண்டே, செழியன் போன்றவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

பொறுக்குக் குழுவுக்கு அதை விடுவதால் ஏற்படுகிற சங்கடம்—இடையிலே நமக்கு வரவேண்டிய வருமானம்தான் குறையும் என்று கருதுகிறேன். இதை விரிவாக ஆராய வேண்டுமென்ற உங்கள் நல்ல கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதற்கேற்ப வெகு விரைவிலே இந்தத் துறையிலேயுள்ள நிபுணர்கள் அடங்கிய ஒரு குழுவை, அரசின் சார்பில் அமைத்து, இந்தத் துறையிலே நல்ல பயிற்சி பெற்றுள்ள இந்த அவையின் உறுப்பினர்களையும் பங்கு பெறச் செய்து, மற்றும் வெளியிலேயிருக்கிற திறமையாளர்கள், நிபுணர்கள் முதலியோரை அதிலே பங்கு பெறச் செய்து,





தியேட்டர் உரிமையாளர்கள், படம் எடுப்பவர்கள், விநியோகஸ்தர்கள், ஸ்டுடியோ தொழிலாளர்கள் இவர்கள் அத்தனை பேர்களுக்கும் உரிய பங்கைத் தந்து அந்தக் குழு விரிவாகத் தமிழ் நாட்டிலே படத் தொழிலைக் காப்பாற்றுவதற்கும், படத் தொழிலை மேலும் வளர்ப்பதற்கும், படத் தொழிலின் சுமையைக் குறைப்பதற்கும் கேளிக்கை வரியிலே எவ்வளவு சதவிகிதம் குறைக்கலாம் என்பதை ஆராய்வதற்கும் அந்தக் குழு ஏற்ற யோசனைகளைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தக் குழு அமைப்பதற்கிடையில் இந்தச் சட்டத்தை நாம் நிறைவேற்றிக் கொள்வதொன்றும் தவறாகி விடாது. இதிலே ஏற்பட்ட நிர்வாகச் சங்கடங்கள் 700 பேர் நம்முடைய முடிவை ஒத்துக் கொள்ளாமல், ஆப்ஷன் என்று சட்டத்திற்காக மட்டும் நாம் போட்ட நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு, தியேட்டர்கள் அதிகாரிகளைத் தொடர்புபடுத்திக்கொள்ள இது ஒரு சால்ஜாப்பு என்றுதான் சொல்வேனே தவிர, அது முழுவதும் உண்மையானது என்று நான் சொல்லமாட்டேன். அதிகாரிகள் தொல்லை கொடுத்தால், உடனடியாக என்னிடத்திலே தூது வந்து விளக்கிக் கூறியிருக்கலாம்.

ரூ. 10 கோடிக்கு வரி ஏய்ப்பு செய்யப்படுகிறது என்று நண்பர் ஓ. பி. இராமன் எடுத்துக் காட்டியதைப்பற்றி திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். எவ்வளவு வரி ஏய்ப்பு கண்டு பிடிக்கப்பட்டது என்ற விவரத்தைச் சொன்னால் உங்களுக்கே அதிர்ச்சியாக இருக்கும். ஒரே வாரத்தில் மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில், 47 இடங்களில் சோதனை செய்ததில், ஏற்கெனவே தரப்பட்ட ரூ. 28,307 வரிக்குப் பதிலாக, ரூ. 51,011 நமக்குக் கிடைத்திருக்கிறது—திடீரென்று ஏற்பட்ட சோதனையின் காரணமாக.

அதைப்போலவே, திருச்சி மாவட்டத்தில் ஒரே வாரத்தில், ஏற்கனவே ரூ. 93,000 கிடைத்ததற்குப் பதிலாக, ரூ. 1,48,000 ஒரே வாரத்தில் கிடைத்திருக்கிறது.

தென்னாற்காட்டில், ரூ. 65,292 க்குப் பதிலாக ரூ. 1,08,370 கிடைத்திருக்கிறது.

கோவை, தருமபுரியில் ஒரே வாரத்தில் ரூ. 43,291-க்கு பதிலாக, ரூ. 79,457 கிடைத்திருக்கிறது.

சென்னையில் ரூ. 92,173-க்கு பதிலாக, ரூ. 1,66,000 கிடைத்திருக்கிறது.

ஆகவே, இந்த ஒரு வாரத்திலே மாத்திரம் 233 தியேட்டர்களில்—மொத்தம் 1,400 சொச்சம் தியேட்டர்கள்; அதில் 233 தியேட்டர்களில்—நடத்திய சோதனையில் ஒரே வாரத்தில் மாத்திரம் ரூபாய் 2,27,300 அதிகமாகக் கிடைத்திருக்கிறது. ஆகவே, இந்தச் சோதனைகளை விரிவுபடுத்துவதற்காக, ஏற்கனவே நமக்கு 20 ஸ்குவாடுகள்தான் இருந்தன. அதிகாரிகள் உடனடியாகச் சென்று அங்கங்கு ஆராய்வதற்காக 20 ஸ்குவாடுகள் இருந்தன. அவைகளை, இப்பொழுது மேலும் 30 அதிகப்படுத்தி, 50 ஸ்குவாடாக மாற்றியிருக்கிறோம். இதன் மூலமாக இப்படி வரி ஏய்ப்பவர்களைக் கண்டுபிடித்து அதிக வரியைப் பெற முடியும். அப்படி வரி ஏய்ப்பைக் கண்டுபிடித்து அதிக வருமானம் பெறுகின்ற நேரத்தில் இருக்கிற வரியைக் கொஞ்சம் குறைக்கலாமா என்று தாராள மனதோடு சிந்திப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது. இந்த நல்ல அம்சங்களையெல்லாம் ஆராய்ந்து இன்றைக்கு — விரைவிலே ஒரு குழு — மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த ஆலோசனையின்படி — அமையும் என்று மட்டும் உறுதியைத் தெரிவித்து, நான் இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** ஒரு கிளாரிபிகேஷன். கம்பவுண்டிங் செய்துகொண்டவர்கள் வரியை ஏமாற்றினார்களா? செய்து கொள்ளாதவர்கள் ஏமாற்றினார்களா? கம்பவுண்டிங் செய்து கொள்ளாதவர்கள்தானே ஏமாற்றுவார்கள், அப்படியிருக்கும் போது கம்பவுண்டிங் செய்து கொண்டவர்களுக்கு ஏன் தண்டனை வழங்கவேண்டுமென்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரே யுனிபார்ம் புரஸிஜர் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இப்போது இப்படியே இருக்கட்டும், மொத்தமாகப் பார்க்கிறபோது வேண்டிய சலுகைகளைச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ஒரு குழு போடுவதாக யோசனை இருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் குழுவை செலக்ட் கமிட்டியாகப் போடுவதால் ஏதாவது நஷ்டம் இருக்கிறதா?





**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அப்படிச் செய்தால் வரி வசூலை அது பாதிக்கும், வருமானத்தைப் பாதிக்கிற அளவில் செய்ய வேண்டாம் என்றுதான் அரசு எண்ணியிருக்கிறது.

**திரு. ஆலடி அருணா :** தியேட்டர் உரிமையாளர்கள் எவ்வளவு மோசமாக நடந்துகொள்கிறார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையின்முன் தெரிவித்திருக்கிறார்கள். எதிர் காலத்திலே வழங்கப்படுகிற உரிமங்களைப் பொறுத்தவரையிலாவது தனியார்களுக்கு வழங்காமல், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றிற்கு வழங்கி அதன் மூலம் அரசினுடைய நிதி ஆதாரங்களைப் பெருக்க முடியும் என்று அரசு கொள்கையை உருவாக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தியேட்டர்களை உருவாக்க மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகளுக்கு நிதி வசதி தேவை. அவை நிதி வசதிக்காகக் காத்திருந்தால் அதனால் தியேட்டர்கள் உருவாவது குறையும். தியேட்டர்கள் அமைவது குறைவதால் அரசாங்கத்திற்கு வருமானம் குறையக்கூடும். நிதிவசதியின்மையால் தியேட்டர்கள் அமைவது நின்றுவிடக் கூடாது என்ற அடிப்படையில்தான் செமி-பர்மனன்ட் தியேட்டர்கள் கட்ட தனிப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்கு முன்வருகிறோம். நிதி ஆதாரங்கள் பெறுகிறபோது அதைப்பற்றிக் கவனிக்கலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** முதலமைச்சர் அவர்கள் ஏதோ வருவாய் பாதிக்கப்படுகிறது, அதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்வது புரியவில்லை. 900 பேர்களில் 200 பேர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள், 700 பேர்கள் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கிளாரிபிகேஷன் கேட்க வேண்டுமே தவிர உறுப்பினர் முழு உரை நிகழ்த்தக் கூடாது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I have moved the amendment.

MR. DEPUTY SPEAKER : May be.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The argument of the Hon. Chief Minister is not valid. I want to know. . . .

[1975 அக்டோபர் 25

MR. DEPUTY SPEAKER: I have not called upon the hon. Member to speak.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I want to seek only a clarification.

MR. DEPUTY SPEAKER: Very good. Is the hon. Member pressing her amendment?

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I am pressing my amendment because the argument put forth by the Hon. Chief Minister is not proper and valid.

கலெக்ஷன் பாதிக்கப்படும் என்று சொல்லி பின்னாடி ஒரு குழுவிற்கு விடப் போவதாகச் சொல்கிறார்கள், இப்போதே பொறுக்குக் குழுவிற்கு விட்டால் என்ன கெட்டுப்போச்சு? எதிர்க்கட்சிக் காரர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக விடமாட்டேன் என்று சொல்வது சரியல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இங்கே எத்தனையோ மசோதாக்கள் உறுப்பினர்கள், எதிர்க்கட்சிக்காரர்கள் முறையீட்டிற்கு இணங்க, கருதுக்கு இணங்க பொறுக்குக் குழுவிற்கு விடப்பட்டிருக்காமல் இருக்கிற பிடிவாதம் இந்த அரசுக்கு இல்லை. அவ்வளவு சர்வாதிகாரமாக நடந்து கொள்கிற அரசு தமிழ்நாட்டில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பின்னாடி போடுகிற குழுவை முன்னாலேயே இப்போதே போட்டால் என்ன? 900 பேர்களிலே 700 பேர்கள் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் வருமானத்தை மாத்திரம் சொல்லவில்லை. நிர்வாகச் சங்கடங்களைப் பற்றியும் சொல்கிறேன். 268 பேர்களுக்கு ஒரு மாதிரியாகவும் 700 பேர்களுக்கு ஒரு மாதிரியாகவும் பார்க்க வேண்டிய சங்கடம் இருக்கிறது. எல்லாவற்றையும் ஒரே மாதிரியாக் வைத்துவிடக்கூடிய முறையில் இந்தத் தொழிலுக்கே ஒரேவிதமான முறையை ஏற்படுத்த கமிட்டி போடுகிற நேரத்திலே பரிசீலிக்கலாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I have not finished my speech.



1975 அக்டோபர் 25]

MR. DEPUTY SPEAKER: No, No.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I want to speak on the amendment given notice of by me. I can speak on the Bill and on the amendments. That is the proper procedure. If I have given notice of half-a-dozen amendments, I can speak half-a-dozen times.

MR. DEPUTY SPEAKER: No. You have given only one amendment. The hon. Member was given two chances and spoken on two occasions. Still the hon. Member is persisting.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The answer for the amendment is not correct. The procedure adopted is not correct.

MR. DEPUTY SPEAKER: It is for the Chair and for the House to decide whether the procedure adopted is correct or not and not for the Member.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Members' privilege must be safeguard by the Chair.

திருமதி த. ந. அனந்தநாயகி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டுத் தோல்வியுற்றது.

திரு. கோவை செழியன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு கேளிக்கை வரி — உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு கேளிக்கை வரி — உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் 3 சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன, முக்கால் மணி நேரம்தான் இருக்கிறது, பேசுகின்ற உறுப்பினர்கள் குறைவாகப் பேசி அவைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**(ஐ) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து, அச்சட்ட முன்வடிவு * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கடந்த பல மாதங்களாக இந்த நகராட்சித் தேர்தல்களை அரசு தள்ளிப்போட்டுக் கொண்டே போகிறது. ஒவ்வொரு தடவையும் அதற்காகச் சொல்லப்படுகிற காரணம் உண்மையான காரணமாக

* 18—10—1975 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



இல்லாமல் ஏதோ ஒத்திப் போடவேண்டுமென்ற முறையிலே கற்பனையாக ஒரு காரணத்தைச் சொல்லி ஒத்திப் போடுவது சரியானதுதானா என்று அரசு யோசிக்க வேண்டும். நகராட்சித் தேர்தல்களை நடத்துவதில் என்ன சிரமம் இருக்கிறது, எவ்வளவு காலத்திற்கு ஒத்திப்போட முடியும்? நீங்கள் என்ன முடிவு செய்துகொண்டிருக்கிறீர்கள் என்றால் பொதுத் தேர்தல்களுக்குப் பிறகுதான் இதை வைக்க வேண்டுமென்ற ஒரே முடிவுக்கு வந்து விட்டது இந்த அரசாங்கம். இன்றைக்கு நாட்டிலேயுள்ள நிலைமைகளையெல்லாம் கருத்திலே கொண்டு பார்க்கிறபோது பொதுத் தேர்தலுக்கு முன்னால் நடத்தினால் இதிலே ஏற்படுகிற வீழ்ச்சி பொதுத் தேர்தலைப் பாதிக்கும். ஆகவே, தள்ளிப் போட்டுக்கொண்டே போக வேண்டுமென்று முடிவு செய்து நடத்தக் கூடாது என்று நீங்கள் கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கிறீர்கள். இந்தப் போக்கை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பொதுத் தேர்தல்கள் சட்ட மன்றங்களுக்கு வருமா? எப்போது வரும் என்பதை அவர்கள் சொல்வார்களா?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** பொதுத் தேர்தல்கள் நிச்சயமாக வரும். ஜனநாயகம் எங்கேயும் போகவில்லை. தேர்தல் வரும், எல்லாக் கட்சிகளும் பங்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரை முருகன் :** பொதுத் தேர்தல் வரும் என்று திரு. மாரிமுத்து அவர்கள் சொல்கிறார்கள். வரும் என்றால் எப்போது? விநாயகர் சனீஸ்வரனுக்கு எழுதிய மாதிரி நாளைக்கு என்றால் என்ன அர்த்தம்? வரும் என்றால் பிப்ரவரியில் வரும் என்கிறாரா? அல்லது எப்போது வரும் என்று சொல்கிறார்?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** உரிய காலத்திலே பொதுத் தேர்தல் நடக்கும் என்றுதான் சொல்ல முடியுமே தவிர வேறு ஒன்றுமில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : He is not here to give directions. It is somebody else who has to decide.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மத்திய அரசாங்கம் பொதுத் தேர்தலை ஒத்தி போட்டுக்கொள்கிறது, மாநில அரசாங்கம் நகராட்சித் தேர்தல்களை ஒத்தி போடுகிறது, மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் சேர்ந்து ஜனநாயகத்தை வைத்திருக்கிறார்கள்?

இதற்கும் அவர்கள் முழு விளக்கம் கொடுத்தால் நலமாக இருக்கும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** ஜனநாயகம் இருக்கின்றதால்தான் பாராளுமன்றம் நடந்தது, சட்டசபை நடந்துகொண்டிருக்கிறது, எதிர்க்கட்சிக்காரர்கள் கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்..

**திரு. துரைமுருகன் :** மத்திய சர்க்கார் ஜனநாயகத்தை வைத்துக்கொண்டு இருக்கவில்லை என்பதை அவர்கள் ஒத்துக் கொள்கிறார்களா ?

DR. H. V. HANDE : I am raising a point of order. நம்முடைய மதிப்பிற்குரிய ஜேம்ஸ் அவர்கள் கேள்வி கேட்கிறார்கள், ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் பதில் கொடுக்கிறார்கள். இந்தக் கேள்விகள் நியாயமானதா இல்லையா என்ற பிரச்னைக்குள் செல்ல விரும்பவில்லை. இதற்கு ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் பதில் கொடுக்கத் தேவையில்லை என்றுதான் நான் கருதுகிறேன். இதற்குப் பதில் கொடுக்க வேண்டியது மத்திய அரசாங்கத்தி லுள்ள பிரதம அமைச்சரவர்கள்தான், அவர்கள்தான் பதில் கொடுக்க முடியும். அவர்கள்தான் எப்பொழுது தேர்தல் வரும் என்று சொல்ல முடியும். அங்கேதான் முடிவு செய்யப்பட வேண்டும். எனவே, இந்தப் பிரச்னையை இங்கே எழுப்பியதற்கு எந்தவிதமான நியாயமும் இருக்காது என்றே நான் கருதுகிறேன். அது ஒழுங்கா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

MR. DEPUTY SPEAKER : No, No. The hon. Member wants to know out of curiosity only.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** பாராளுமன்றத்தில் பேசிய திலிருந்தும், பத்திரிகை நிருபர்கள் பிரதம அமைச்சரைப் பேட்டி கண்டு இந்தக் கேள்விகளைத் தொடுக்கும்பொழுது அவர்கள் சொல்லும் பதிலிலிருந்தும்தான் நான் இங்கே சொல்கிறேனே தவிர பாராளுமன்றத்தில் பிரதம மந்திரி சொன்ன பதிலுக்குமேல் என்றால் சொல்ல இயலாது. அது உறுப்பினர்களுக்கும் தெரியும். அவர்கள் சில கிளாரிபிகேஷன்கள் கேட்கிறார்கள், அதற்குத்தான் சொல்கிறேன். ஆகவே, இம்மாதிரித் தேர்தல்களை ஒத்தி வைத்துக் கொண்டே போவது சரியல்ல. ஆகவே, இந்த மசோதாவை . . .

**திரு. கு. காமாட்சி :** தலைவரவர்களே, ஒரு விளக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டரா ? கிளாரிபிகேஷனா ?

**திரு. கு. காமாட்சி :** கிளாரிபிகேஷன். நகராட்சித் தேர்தல்களை இந்த அரசு ஒத்தி போடுவதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகிறார்கள். கேரளாவிலே எத்தனை ஆண்டுகளுக்கு ஒத்தி போடப்பட்டது? அது ஏன் என்பதற்கான விளக்கத்தைத் தருவார்களா ?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** கேரள அரசாங்கம் ஒத்திவைத்த காரணத்தை நான் சொல்ல முடியாது. எங்கே ஒத்தி போட்டாலும் தவறுதான். ஆகவே, இப்பொழுது நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இதை ஒருமுறை மட்டும் ஒத்தி போடவில்லை, ஒவ்வொரு முறையும் ஒத்திப்போடும்போதும் ஒவ்வொரு காரணத்தைச் சொன்னார்கள். ஒருமுறை எலக்ட்டோரல் ரோல் தயார் செய்ய முடியவில்லை என்று கூறினார்கள். பிறகு ஒத்திவைத்தபொழுது வேறு ஏதோ ஒரு காரணத்தைச் சொன்னார்கள். பிறகு மூன்றாவது முறையாக ஒத்தி போட்டார்கள். இப்படி ஒவ்வொரு முறையும் ஒரு காரணத்தைக் கூறுகிறார்கள். இப்பொழுது 'டீ-லிமிடேஷன்' என்று சொல்வது, சரியான காரணம் அல்ல. ஆகவே, இந்த மசோதாவை நான் வன்மையாக எதிர்க்கிறேன் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை நான் எதிர்க்கிறேன். இதை எதற்காக எதிர்க்கிறேன் என்று சொன்னால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான மசோதாவில் 'ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ்' சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது தேர்தல் நடத்துவதற்குப் பாதகமாக நாட்டிலே எந்தவிதமான பசியும், பஞ்சமும் நடமாடவில்லை என்று கருதுகிறேன். ஒருவேளை கழிந்த வருஷம் வறட்சியினால் நாட்டிலே பெரிய கஷ்டங்கள், சங்கடங்கள், துன்பங்களெல்லாம் இருந்த ஆண்டாக இருந்திருக்கலாம். ஆனால் இன்றையதினம் நிலைமை மாறியிருக்கிறது. எலக்ட்டோரல் ரோல்ஸ் தயாராக வைத்திருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். எனவே, ஏன் உடனடியாக நகரசபைத் தேர்தல்களை நடத்தக்கூடாது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

குறிப்பாக, இப்படிப்பட்ட நகராட்சிகளின் தேர்தல்கள் நடந்தால் நாட்டிலே மக்கள் என்ன அரசியல் கருத்தினைக் கொண்டிருக்கிறார்கள் என்று கணிப்பதற்கு இதுவொரு கருவியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதிலும் குறிப்பாக ஜனநாயகத்தைப்பற்றி அதிகம் நம்புகின்றவர்கள், அதிகமாகப் பேசுகின்றவர்கள், சர்வாதிகாரத்தை எதிர்ப்பவர்கள் ஏன் இந்த ஜனநாயக முறைப்படித் தேர்தலை நடத்தக்கூடாது என்ற கேள்வியை நான் கேட்பதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். மத்திய ஆட்சியைப்பற்றியோ அல்லது மாநில ஆட்சியைப் பற்றியோ இந்த நேரத்தில் கண்டனக்குரல் எழுப்ப வேண்டுமென்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை.

இன்றைக்குத் தேர்தல் வருமா வராதா என்று மக்கள் அஞ்சுகின்ற ஒரு தன்மையைப் பல்வேறு இடங்களில் அவர்களோடு பேசுகிற நேரத்தில் உணரும் வகையில் அவர்கள் இந்தக் கருத்துக்களையெல்லாம் தெரிவிக்கிறார்கள். இப்பொழுது தமிழ் நாட்டிலே தேர்தல்களை நடத்துவதிலே எந்தவிதமான கஷ்டமும் இருக்காது. எந்த நெருக்கடி நிலைமையும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இருக்கிறது என்று நான் கருதவில்லை. மற்ற மாநிலங்களில் நெருக்கடி நிலைமையின் காரணமாக, பல்வேறு அரசியல் சூழ்நிலைகளின் காரணமாகத் தேர்தலைச் சந்திக்க அவர்கள் ஒருவேளை அஞ்சக்கூடும். ஆனால், அண்மையிலே நீங்கள் எல்லோரும் அறிந்திருப்பீர்கள், பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள், குஜராத் மாநிலத்தில் ராஜ்கோட்டில் தேர்தல் நடத்தியிருக்கிறார்கள். அங்கு அந்தக் கார்ப்பரேஷனுக்குத் தேர்தல் நடந்திருக்கிறது. அந்தத் தேர்தல் முடிவுகளெல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. எமர்ஜென்ஸி இருந்தும்கூட அந்த மாநிலத்திலே தேர்தல் நடத்த முடிந்திருக்கிறது. அதேமாதிரித் தமிழ்நாட்டிலே, மத்திய அரசால் இன்றைக்கு எமர்ஜன்ஸி பிறப்பிக்கப்பட்டிருந்தாலும்கூட எந்த விதமான பதட்டமான பீதிக்குரிய நிலைமைகள் இல்லை என்பதை உணர்ந்திருப்பார்களேயானால் இங்கேயும் தேர்தலை நடத்தலாம்.

அதிலும் குறிப்பாக மாநகராட்சி போன்றவைகள் கலைக்கப்பட்டு ஸ்பெஷல் ஆபீசர்களின் நிர்வாகத்தில் அவைகள் இருக்கின்றன. அவற்றிற்கு விரைவில் தேர்தல் நடத்துவோம் என்று வாக்குறுதி கூறப்பட்டது. ஆனால் அந்த வாக்குறுதியைக்





காற்றில் தூற்றிய நிலைமைதான் இருக்கிறது. மதுரை மாநகராட்சி, வேறு மாநகராட்சிகள் போன்ற ஸ்தல ஸ்தாபனங்களுக்குத் தேர்தல் நடத்தித் தீர வேண்டுமென்ற கருத்தினை நான் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

மற்ற மாநிலங்களில் தேர்தல் நடக்கிறதா என்று பார்க்கும் நேரத்திலே, கேரள மாநிலத்திலே பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடந்து 13 வருஷங்கள் ஆகின்றன. நாங்கள் கேரள மாநிலத்தோடு ஒட்டிக்கிடக்கின்ற பகுதியிலே இருப்பவர்கள் என்பதால் இதைக் கூறுகிறேன். ஆகவே, அவர்கள் அங்கு ஒரு தவறு செய்திருக்கிறார்கள். ஐந்து வருஷங்களுக்கு ஒருமுறை தேர்தலை நடத்துவது தான் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

உதாரணமாக, இலங்கை இராஜ்யத்திலே அண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை இந்த மன்றத்தின் கவனத்திற்குத் தங்கள் மூலமாகக் கொண்டுவருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். அங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் இராஜினாமா செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஏனென்றால் அங்கே பாராளுமன்றத்தின் ஆயுளை நீடித்து ஆளுங்கட்சியின் தரப்பிலே கொண்டு வரப்பட்டது. அதை எதிர்த்து, எங்களையெல்லாம் 5 வருஷங்களுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கிறார்கள், மறுபடியும் மக்கள் எங்கள்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்களா என்பதை அறிய ஜனநாயக முறைப்படித் தேர்தல் ஒரு கருவியாக இருக்கிறது என்பதால் அவர்கள் இராஜினாமா செய்துவிட்டு இடைத்தேர்தலைச் சந்தித்து அவர்கள் வெற்றிவாகை சூடியதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, ஜனநாயக முறைப்படித் தேர்தலை நடத்தியே ஆகவேண்டும். அதற்கு எந்தவிதமான கஷ்டங்களும், துன்பங்களும் தமிழ்நாட்டில் இல்லை. இவர்கள் கூறுகின்ற ஸ்கேர்சிட்டி, ட்ரௌட் என்ற வாதங்கள் நியாயமான வாதங்கள் அல்ல என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஜனநாயக அடிப்படையிலே தேர்தலை நடத்த வேண்டும். அது இந்த ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் வர வேண்டும், மற்றவிதமான ஸ்தாபனங்களுக்கும் வர வேண்டுமென்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. ஆலடி அருணா:** துணைத் தலைவரவர்களே, உள்ளாட்சித் தேர்தலை ஒத்திவைக்கும் வகையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு மசோதாவை இந்த மன்றத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தேர்தல்கள் ஏன் ஒத்திவைக்கப்பட வேண்டுமென்பதற்கு ஆளுங்கட்சியின் சார்பில் காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. நாட்டில் வறட்சி நிலவுகிறது, பற்றாக்குறை இன்னும் இருக்கிறது, எனவே, அந்த வறட்சியான கட்டத்தில் தேர்தலை நடத்த முடியாது என்று அரசாங்கம் தன் கருத்தைச் சொல்லியிருக்கிறது. இது நான்காவது முறையாக ஒத்திவைக்கப்படுகிறது. ஏற்கனவே உள்ளாட்சித் தேர்தல்கள் இரண்டாண்டுகளுக்கு முன்னால் வந்திருக்க வேண்டும். ஒவ்வொரு காலகட்டத்திலேயும் ஒவ்வொரு காரணத்தை இந்த அரசாங்கம் சொல்லிக்கொண்டே வருகிறது. அவர்களுடைய மனச்சாட்சிக்கே தெரியும், ஒரு தவறான கருத்தை, தமிழக மக்களின் விருப்பத்திற்கு மாறாகச் சொல்லிக்கொண்டே இருக்கிறோம் என்பது அரசில் உட்கார்ந்துகொண்டிருப்பவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் அவர்கள் அதைப்பற்றிக் கவலைப் படவில்லை.

இந்த நாட்டில் ஜனநாயகத்தை எவ்வளவு தூரத்திற்குக் கொல்ல முடியுமோ அந்த அளவுக்கு இயன்றவரையில் இப்பொழுது கொன்று கொண்டிருக்கிறார்கள். இவர்கள் சொல்லுகின்ற காரணங்களெல்லாம், கேரளாவைப் பார்த்தாயா, மத்திய சர்க்காரைப் பார்த்தாயா, கேட்டாயா அந்தத் தேர்தலைப்பற்றி உனக்குத் தெரியுமா என்று. மற்றவர்கள் செய்யும் தவறுகளைச் சுட்டிக் காட்டித் தாங்கள் செய்யும் தவறுகளுக்கு உரம் தேடிக் கொள்கிறார்கள் என்றால் அது நல்ல அரசியல் பாரம்பரியமாக இருக்க முடியாது, அல்லது அரசியலுக்கு ஆதாரமாக இருக்க முடியாது. இன்னொருவன் திருடுகிறான், இன்னொருவன் களவு செய்கிறான் என்பதற்காக நாமும் அந்தத் தவற்றைச் செய்ய முடியாது. இன்னொரு பகுதியிலே ஜனநாயகம் கொலை செய்யப்படுகிறது என்று சொல்லிக்கொண்டு, அண்ணாவின் தம்பி என்று சொல்லிக்கொள்ளும் நண்பர்கள் இங்கே ஜனநாயகத்தைக் கொலை செய்கிறார்கள்.

இங்கே இக்கட்டான சூழ்நிலை இல்லை என்று அவர்கள் தேர்தலை நடத்த முன்வரவேண்டுமே தவிர காரணங்களைச் சொல்வது நல்லது அல்ல என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



பொதுத்தேர்தல் வருமா என்று கேட்கிறார்கள். இதைவிட விசித்திரமான முறையில் மேடைகளிலே பேசுகிறார்கள். தேர்தலே வராது என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் தங்களுக்குப் பாதுகாப்பு தேடிக் கொள்ள முடியும் என்று நம்புகிறார்கள். அப்படிப்பட்ட தவறான பிரச்சாரத்தைக் கட்டுக்கோப்போடு செய்கிறார்கள். மற்றத் தேர்தலைப்பற்றிச் சொல்ல இவர்களுக்கு உரிமை இருக்கிறதா இல்லையா என்பது ஒருபுறம் இருக்கட்டும். இன்றைக்கு சர்வாதிகாரம் கொக்கரிப்பதாகவும், ஜனநாயகம் முடிந்துவிட்டதாகவும் மக்கள் மத்தியிலே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஜனநாயகத்திலே உண்மையிலேயே நம்பிக்கையிருந்தால், உண்மையிலேயே ஜனநாயகத்தை வாழவைக்க வேண்டுமென்று ஆசை அவர்களுக்கு இருக்குமேயானால் அவர்களுடைய அதிகாரத்திற்குட்பட்ட இந்த உள்ளாட்சித் தேர்தல்களையாவது நடத்திக் காட்டினால்தான் அவர்களுக்குரிய ஜனநாயகப் பண்பை உறுதிப் படுத்த முடியும். ஆனால், அவர்கள் அப்படிச் செய்வதற்குத் தயாராக இல்லை. மற்றவர்கள் செய்யும் தவறுகளைத் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டு இந்த மண்ணில் இருக்கிற அரை குறை ஜனநாயகத்தையும் இந்த அரசாங்கம் கெடுக்கிறது. அப்படிக் கெடுக்கின்ற பணி தொடர வேண்டாமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

(பிற்பகல் 1.00)

**திரு. கே. எ. வகாப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சித் தேர்தல்களை ஒத்தி வைக்க கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் நாட்டிலே இருக்கக்கூடிய வறட்சி அல்லது பற்றாக்குறை காரணமாக இந்தத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப் பட்டிருக்கின்றன. அந்த நிலைமை இன்று நாட்டில் இல்லை, தேர்தல்களை நடத்தியாக வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசினார்கள். ஓரளவுக்கு அது உண்மையாக இருந்தாலும் பொது மக்கள் இன்று தேர்தலுக்குத் தயாராக இல்லை என்பதுதான் நாட்டிலுள்ள உண்மை நிலவரம்.

[திரு. கே. எ. வகாப்] [1975 அக்டோபர் 25

தெற்கே, தஞ்சையிலே வறட்சி போயிருக்கிறதே தவிர், எங்களுடைய வட ஆற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களிலே வறட்சி இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. நீர்ப்பாசன ஏரிகளில் தண்ணீர் வரத்து இல்லை. அரிசி விலை இறங்குவது போல் இறங்கி மறுபடியும் ஏறிக் கொண்டிருக்கிறது. மக்களுடைய வாழ்க்கை வசதிகளில் எல்லா அம்சங்களிலும் சீர்நிலை ஏற்படாத நேரத்தில் மறுபடியும் தேர்தலைக் கொண்டு வந்து மக்களை அலைக்கழிப்பது நலமாக இருக்காது.

பொதுத் தேர்தல் நடக்குமா, நடக்காதா என்ற கேள்வி எழுப்பப்பட்டு மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் அவர்கள் பதிலளித்தார்கள். அதைச் சொல்ல வேண்டியவர்கள் எங்கோ இருக்கிறார்கள். நிச்சயமாக பொதுத் தேர்தல் வரும் என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பிரதமர் அவர்களிடம் பொதுத் தேர்தல் வருமா என்று கேட்டபோது எதிர்க்கட்சிகள் எப்படி நடந்து கொள்ளுகின்றன என்பதைப் பொறுத்துத்தான் முடிவு செய்ய வேண்டுமென்று அவர்கள் சொல்லுவதைப் பார்த்தால் பொதுத் தேர்தல் வரும் என்று அதற்கு அர்த்தம்? அது 1977-ல் வரலாம். 1978-ல் வரலாம். அதைப் பற்றிக் கவலைப்படாமல் முனிசிபாலிடித் தேர்தல்கள், உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடக்க வேண்டுமென்பதிலே கருத்து மாறுபாடு இல்லை, ஆனால், அதற்கு நேரமும் காலமும் சரியாக இருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசியல்வாதிகள் தேர்தல்களுக்குத் தயாராக இருக்கலாம். மக்கள் தயாராக இருக்கிறார்களா? எல்லாக் கட்சிகளும் இப்போது ஏதோ தங்களுக்குச் சாதகமான சூழ்நிலை இருப்பது போல் கற்பனை செய்துகொண்டு இப்போது தேர்தல் நடந்தால் நாம்தான் வெற்றி பெறுவோம். ஆளும் கட்சி படுதோல்வி அடையும் என்ற எண்ணத்தில் சொல்லுகிறார்கள். உண்மையிலேயே இப்போது பொதுத் தேர்தலாக இருந்தாலும், நகராட்சித் தேர்தலாக இருந்தாலும் நடந்தால் முடிவுகள் எப்படி இருக்கும் என்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

மற்ற மாநிலங்களை உதாரணம் காட்டிப் பேசினார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்கூட கேரளத்தில் 13 ஆண்டுகளாக நகராட்சித் தேர்தல்கள் நடக்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்டினார்கள்.



1975 அக்டோபர் 25] [திரு. கே. எ. வகாப்]

இன்று மக்கள் தேர்தலுக்குத் தயாராக இல்லை என்ற நிலையில் நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் தேர்தலை ஒத்தி வைத்து நல்ல சூழ்நிலை உருவான பிறகு நடத்த வேண்டுமென்று கூறி இந்த மசோதாவை வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM: Hon. Deputy Speaker, Sir, I entirely oppose this Bill. This Bill is against the most essential thing called the autonomy of the municipal administration. When we talk of self-government in this country, we think of Panchayat Raj and self-government. We do not want a centralised administration. The reason given in the Statement of Objects and Reasons appended to the Bill relates to drought conditions and scarcity in the State. To solve this problem people's representatives should be associated with the administration. Unless you have got elected representatives of the people, you cannot ameliorate the conditions of the people. Now, I find that for the last four years the administration is carried on by the officers and there is no association of people's representatives and only Ministers are associated with receiving garlands. For associating people's representatives with the administration, you must conduct elections and any party can come to power. . . .

THE HON. THIRU S. RAMACHANDRAN: I just want to clarify one point. This Bill seeks the extension of the term of office of councillors who are non-officials and who are associated with the local bodies and who are available for solving this problem.

THIRU K. M. SUBRAMANIAM: But who is the non-official? A Non-official is not the person who is chosen by the Minister. He should be elected by the people.

MR. DEPUTY SPEAKER: I want to say one thing. The next Bill deals with the Special Officer for Coimbatore Municipality and when it comes up for discussion you can put forth your argument.

THIRU K. M. SUBRAMANIAM: I am not referring to the Special Officer. I am talking of the association of the people's representatives with the ameliorative measures that are being

[Thiru K. M. Subramaniam] [1975 அக்டோபர் 25

carried out in the State. We talk of Ram Raj and Gram Raj. If we want Gram Raj, people in the Gram should be associated with such work. We also talk of Mahatma Gandhi but there is not even an iota of Gandhism in the working of the village administration.

Sir, the Hon. Thiru Jagjivan Ram stated a few days ago that elections to panchayats and other local bodies should be expedited so that people's representatives will be associated with the development work being carried out in the country. So, elections should be held to the local bodies.

Then, I come to a small matter. The most great intellectual whip of the Congress (O) Party has asked, whether the Government of India are postponing the elections or not. The question of election comes only in February 1976 and it does not come to-day. So, there is no use of asking such a question. . .

THIRU R. PONNAPPA NADAR: The hon. Member, Thiru K. M. Subramaniam is insinuating that our Party Whip is the greatest intellectual. The greatest intellectual faculties are possessed by the Members of the Ruling Party either at the Centre or in the State. We are only humble workers. We are followers of Mahatma Gandhi and Kamaraj. We do not possess such intellectual equipment as to outweigh the intellectual equipment of Thiru Subramaniam. In all humility, I appeal to him not to hit below the belt.

THIRU K. M. SUBRAMANIAM: I can never think of hitting anybody below the belt because I am incapable of hitting like that, and I am the oldest person in this House. That is beside the point. The Hon. the Leader of the Congress (O) Party knows that the election question comes in the month of February and what is the use of discussing it in the Tamil Nadu Legislative Assembly, in the month of October? This has to be decided by some other House in February 1976.

Now, I once again urge that elections should be held as soon as possible.

(Thirumathi T. N. Anandanayaki rose.)



1975 அக்டோபர் 25]

MR. DEPUTY SPEAKER: The next two Bills relate to more or less the same subject. When the discussion commences I will give the hon. Member an opportunity.

THIRU J. JAMES: On a point of Order, Sir. In the annexure given to us in the section embodying the amendment (40) (ii) it is stated that the term shall, extend up to the noon on the first day of July 1975. I am mentioning this in the beginning so that the mistake can be corrected. It should be first day of July 1976. I do not know how the mistake had been lost sight of.

MR. DEPUTY SPEAKER: That is only a printer's devil.

THIRU J. JAMES: It is also stated in the Statement of Objects and Reasons as follows: In view of the continuing condition of drought and scarcity in the State, it was decided not to hold elections to the municipal councils in the State. Does it mean not to hold elecions at all?

இதைப் பார்த்தால் எலக்ஷனே வராது போல் இருக்கிறது. எலக்ஷன் வருமா?

MR. DEPUTY SPEAKER: That is not a point of order. Your first point is that instead of 1975 it should be 1976. I have said that it is a printer's devil. The other thing is not a point of order.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The next Bill relates to the same subject. I may be allowed to speak on this Bill. Those who are anxious to speak may be allowed now. Then we can pass the other two Bills quickly without discussion.

MR. DEPUTY SPEAKER: On that assurance, I can give you a chance now.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I may be allowed to speak now.

MR. DEPUTY SPEAKER: I hope with the co-operation of hon. Members we can finish the discussion and pass the Bills before 1-30 p.m.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: On a point of order, Sir,. . . .

THE HON. THIRU S. RAMACHANDRAN: I should introduce the other two Bills for consideration of the House. Then only we can start discussion on it. First let the discussion on this Bill be completed. Let us pass this Bill first and then take up the other Bills.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I may be allowed to speak now.

THIRU P. SEENIVASAN: Don't confuse.

அமைச்சர் அவர்கள் பேசப் போகிறார்கள் என்று நினைத்தேன்.

MR. DEPUTY SPEAKER: I will clarify. The other two Bills relate to extension of terms of office of panchayat members and members of panchayat union councils and the appointment of special officer for Coimbatore Municipal Council. If some Members want to speak now and feel that we can pass the other similar Bills without discussion, I have no objection. Otherwise we can pass this Bill first and then take up the other Bills.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Next is a similar Bill. I do not want to speak on it. I shall speak and you can allow other Members also if they want to speak.

THIRU J. JAMES: No.

MR. DEPUTY SPEAKER: There seems to be no unanimity of opinion.

THIRU J. JAMES: This Bill relates to Corporation and so the Lady Member wants to talk on it. But we are not interested in it; we want to talk on the other two Bills. So, let us finish this Bill first. Let the Hon. Minister reply to the discussion on this Bill.

MR. DEPUTY SPEAKER: I only want to say that the next Bili also relates to the same subject.

**திரு. பெ. சீனிவாசன்:** அமைச்சர் அவர்கள் திரு. கே.எம்.எஸ். அவர்கள் பேசும்போது ஒரு குறிப்பு சொன்னார்கள். ஜனநாயக முறைப்படி இப்போதிருக்கிற, தேர்ந்தெடுக்கப்பட்ட முனிசிபல்





கவுன்சிலர்களின் டேர்மை எக்ஸ்டென்ட் செய்ய இந்த பில் வந்திருக்கிறது, மக்கள் பிரதிநிதிகளே இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மதுரை மக்கள் மத்தியில் ஒரு மனக்கவலை, சந்தேகம் இருக்கிறது. இதே பார்முலா ஏன் மதுரை கார்ப்பரேஷனுக்கும் அப்ளையாகவில்லை? மதுரை மேயர் முத்து அவர்களை அதிகாரத்திலிருந்து நீக்க வேண்டும் என்பதற்காகச் செய்தீர்களோ என்ற சந்தேகம் இருக்கிறது. கார்ப்பரேஷன் பில்டிங் திறப்பு விழாவில்கூட அவர்கள் கலந்துகொள்ளவில்லை. அதனால் மதுரை மக்கள் மத்தியில் ஒரு அருவருப்பான எண்ணம் உருவாகியிருக்கிறது என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I only want to speak on this; I am not interested in Panchayats.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசிவிட்டுச் சீக்கிரம் வீட்டுக்குப் போய்விடவேண்டும் என்று பார்க்காதீர்கள். விட மாட்டோம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது மாண்புமிகு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், உறுப்பினர்களும், குறிப்பாக ஜனநாயகத்தைப் பற்றிப் பேசினார்கள். ஜனநாயகத்தைச் சிந்திக்க வைக்கக்கூடிய அளவிற்கு இந்த ஒரு சிறிய மசோதா உதவி செய்திருக்கிறது என்று நினைக்கிறபோது நான் உண்மையிலேயே பெருமகிழ்ச்சியடைகிறேன். ஜனநாயகம் எப்படியெல்லாம் நடத்தப்படவேண்டும், அது எப்படிக் காப்பாற்றப்படவேண்டும். மக்களிடத்திலே நாம் வைத்திருக்கிற நம்பிக்கை வீண் போகாமல் மக்களிடத்தில் எப்படித் திரும்பி அந்த அதிகாரங்கள் எல்லாம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

ஜனநாயகத்தைப் பொறுத்தவரையில் மக்களிடத்திலிருந்து லிருந்து வாக்குகளைப் பெற்று, அது உள்ளாட்சி மன்றமானாலும் சரி அல்லது மாநில அரசுகளானாலும் சரி அல்லது இந்திய அரசானாலும் சரி ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறது. பதவிக் காலம் முடிவடைந்து விட்டால் பிறகு மறுபடியும் மக்களைச் சந்திக்க வேண்டும். நன்றாக ஆட்சி செய்தால் மக்கள் அதை நீட்டிக்கட்டும். நல்ல ஆட்சி இல்லை என்று மக்கள் கருதினால் அதை மாற்றியமைக்கட்டும். ஆக, அந்த

உரிமை மக்களுக்குத்தான் இருக்கவேண்டும் என்பதில் எந்த விதமான கருத்து வேற்றுமையும் இந்த அரசுக்குக் கிடையாது. இன்னும் சொல்லப்போனால் முழுக்க முழுக்க அந்த உணர்வோடு தான் பணியாற்றி வருகிறோம்.

இந்த அரசு இன்று நகர மன்றங்களில் நகரமன்ற கவுன்சிலர்களாக இருப்பவர்களுக்கு மேலும் ஒரு ஆண்டு நீட்டித்துத் தரவேண்டும் என்று கருதுகிறபோது இந்த ஜனநாயக உணர்வைவிட வேறு முக்கியமான காரணம் அதில் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. இன்னும் சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால் வாய்ப்புக் கிடைத்தவுடனே மக்களுக்கு அந்த வாய்ப்பை அளிப்பதில் இந்த அரசு எந்தவிதமான தயக்கமும் காட்டாது. உதாரணத்திற்கு, இதே சட்டமன்றத்தைக்கூட வேறு வகையில் நடத்தியிருக்கலாம், எங்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை என்றால். ஜனநாயகத்தில் சில கட்டுப்பாடுகளோடுதான் இதுபோன்ற மன்றங்களை எல்லாம் இயக்கவேண்டுமென்று விரும்பினால் இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் மக்கள் பிரதிநிதிகள் மதிக்கப்படவேண்டிய அவசியம் இல்லை என்ற உணர்வு இருக்குமானால் இதே சட்டமன்றத்தைக் கூட எப்படி வேண்டுமானாலும் நடத்துவதற்கான வாய்ப்புகள் இன்றைக்கு இருக்கின்றன. எதிர்க்கட்சிகள் கேள்விகளைக் கேட்கக்கூடாது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எந்தத் தீர்மானத்தையும் கொடுக்கக் கூடாது, எந்தவிதமான ஒத்திவைப்புப் பிரேரணைகளையும் கொடுக்கக்கூடாது, அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகள் மட்டும் தான் இந்த மன்றத்தில் நடைபெறவேண்டும் என்றெல்லாம்கூட இதே சட்டமன்றத்தில் நாம் நடத்தியிருக்கக்கூடும். இப்போது இச்சட்டமன்றத்திலே இன்றுள்ள சூழ்நிலையில் எல்லா உரிமைகளையும் தந்து இந்த அரசு இந்தச் சட்டமன்றத்தை நடத்துவதே ஜனநாயகத்தில் எவ்வளவு நம்பிக்கையை நாங்கள் வைத்திருக்கிறோம் என்பதற்கு ஒரு சிறந்த அடையாளம் என்பதை மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்கூட மறுக்க மாட்டார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் ஆல்டி அருணை அவர்கள் வேறுவழியில்லாமல் மறுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம். இவையெல்லாம் இன்று இருக்கக் கூடிய நிலைமைகள்.





**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் இவ்வளவு தாராளமான முறையில் இந்த அரசாங்கம் இந்த மன்றத்தை நடத்திக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதுதான் நம் குற்றச்சாட்டு கூட. அரசாங்கம் இந்த மன்றத்தை நடத்தக் கூடாது. சபாநாயகர் அவர்கள்தான், சபையில் தலைவராக அமர்ந்திருக்கக்கூடியவர்தான் இந்த மன்றத்தை நடத்த வேண்டும். இந்த மன்றத்தை நடத்தக்கூடிய உரிமை அவர்களிடம்தான் இருக்கவேண்டும். அரசாங்கத்திற்கு இருக்கக்கூடாது என்பதுதான் எங்கள் வாதம். அதை மறைமுகமாக அறிந்தோ அறியாமலோ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் வாதத்தை வலிவுபடுத்தியிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் அமைச்சர் அவர்கள் "நாங்கள் ஜனநாயக முறையில் எல்லா உரிமைகளையும் கொடுத்துச் சபையை நடத்தி வருகிறோம்" என்று சொல்வதைப் பார்க்கும் போது இங்கிருக்கக்கூடிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எவ்வளவு பொறுப்பாக நடந்து கொண்டிருக்கிறார்கள், அந்தப் பொறுப்பை உணர்ந்து நாங்கள் இங்கே எதிர்க்கட்சிக்காரர்களாக இருப்பதால் தான் இந்த ஜனநாயக உரிமைகளைக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல ஆசைப் படுகிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** அமைச்சர் அவர்கள் சொன்னதைப் பாராட்டுகிறேன். அதேநேரத்தில் நகராட்சித் தேர்தல்களை வைத்து அந்த நேரத்தில் இப்படி இந்த அரசாங்கம் சொன்னால் இன்னும் எவ்வளவோ அழகாக இருக்கும். நாங்கள் நகராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தியிருக்கிறோம், அப்படி மத்திய அரசு தேர்தல்களை நடத்துமா என்று கேட்டிருந்தால் அந்தக் கேள்வியில் நியாயம் அதிகமாக இருக்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, இந்த நாட்டிலே ஜனநாயகம் இருப்பதே எதிர்க்கட்சியின் பொறுப்பில் இருக்கிறது, ஆளும் கட்சியின் பொறுப்பில் இல்லை என்பதை அம்மையார் அவர்கள் ஒப்புக்கொண்டதற்கு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எதிர்க்கட்சிகள் எவ்வளவு பொறுப்போடு நடந்து கொள்கிறார்களோ அவ்வளவு பொறுப்போடு தான் ஜனநாயகம் இருக்கும். பொறுப்பில்லாமல் எதற்கு எடுத்தாலும் எதிர்ப்போம் என்று இருந்தால் கஷ்டம்தான்

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, நான் இந்த விளக்கத்தைச் சொல்வதற்குக் காரணம் எதிர்க்கட்சிகளிடத்தில் பொறுப்பு இல்லை என்பதால் அல்ல. எதிர்க்கட்சிகள் எவ்வளவு பொறுப்போடு இருப்பார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். உண்மையிலேயே இந்தச் சட்டத் திருத்தத்தை முழு மனதோடு பொறுப்போடு வரவேற்பார்கள் என்று தெரியும். வரவேற்காததற்கு ஒரே ஒரு காரணம், இது எந்தச் சூழ்நிலையில் தள்ளிப் போடப்பட்டது என்பதை ஒரு வேளை விளக்காமல் இருந்தது காரணமாக இருந்து இருக்கலாம்.

ஏற்கனவே நகர மன்றத் தேர்தல்கள் பல நேரங்களில் ஒத்தி வைக்கப்பட்டு இருக்கின்றன. சாதாரணமாக நகர மன்றத் தேர்தல்கள் நடைபெற்றால் 3 ஆண்டுகள் அவர்கள் பதவி வகிப்பார்கள் என்று இருந்தது. அதை 5 ஆண்டுக் காலம் என்று ஆக்கினோம். ஊராட்சி ஒன்றியத்தில் பதவி வகிப்பவர்கள் 5 ஆண்டுக் காலத்திற்குப் பதவி வகிக்கலாம் என்று இருந்ததால் இதை 5 ஆண்டுக் காலம் என்று மாற்றினோம். அந்த அடிப்படையில் திட்டம் கொண்டு வரப்பட்டு, 5 ஆண்டுக் காலம் அவர்களுக்குப் பதவியில் நீட்டிப்புச் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு ஒரு முறை தேர்தல் நடத்த வேண்டிய சூழ்நிலை வந்தது. இருந்தாலும் நகர மன்றங்களில் வாக்காளர் பட்டியல் தயாரிக்கவில்லை என்பதால் இதே சட்ட மன்றம் அதைத் தள்ளிப் போட்டு இருக்கிறது. 1—7—1975 வரை மறுபடியும் நீட்டிக்கப்பட்டது. மறுபடியும் நகர மன்றத் தேர்தல் வருகிற சமயத்தில் நம்முடைய நாட்டில் வறட்சி வந்தது என்பதை நாம் மறந்து விடுவதற்கு இல்லை. ஏற்கனவே அவர்கள் பதவிக் காலம் முடிகின்ற நேரத்தில் அவசரச் சட்டத்தின் மூலம் பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டது. அப்படிப் பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டது ஏனென்றால், நாம் தேர்தலை வறட்சிக் காலத்தில் நடத்த வேண்டியிருந்தது. இப்போது வறட்சி இல்லை. அரசு மேற்கொண்ட நல்ல பணிகளின் காரணமாகவும், உங்களைப் போன்ற உறுப்பினர்கள், மற்றவர்கள் கொடுத்த ஒத்துழைப்பினாலும் இன்றைய தினம் அந்த வறட்சி இல்லை, வறட்சியை ஒழித்து இருக்கிறோம். ஆகவே, அந்தச் சூழ்நிலையில் வேறு வழியில்லாமல் இந்த நிலைமையேற்றப்பட்டதே தவிர ஜனநாயகத்திற்கோ அல்லது மக்களாட்சிக்கோ அல்லது உள்ளாட்சி முறைகளுக்கோ எந்தவிதமான குந்தகத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்று நிச்சயமாக இந்த அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





எனக்குக் கூட, நண்பர் ஆலடி அருணா அவர்கள் சொன்னது போல் நகராட்சித் தேர்தல்களை நடத்தி இருக்கவேண்டும் என்பது தான். ஆனால் நேற்றையதினம் டெல்லியில் அகில இந்திய உள்ளாட்சித் துறை அமைச்சர்கள், மேயர்கள் மாநாடு நடைபெற்றது. மொத்தம் 34 மேயர்களில் 8 பேர் தான் வந்து இருந்தனர். மீதி 26 தனி அதிகாரிகள் வந்து இருந்தனர். அதற்கு மேயர்கள் மாநாடு என்று சொல்வதை விட தனி அதிகாரிகள் மாநாடு என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். இதை நான் சொல்வதற்குக் காரணம் நாமும் ஊரோடு ஒத்து வாழ வேண்டும் என்ற முறையில் எடுத்துச் சொன்னேனே அல்லாமல் வேறு அல்ல. இருந்தாலும். . .

THIRU K. M. SUBRAMANIAM : Are you following the bad precedent of not conducting elections?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** குஜராத் மாநிலத்தில் அண்மையில் ஸ்தல ஸ்தாபனங்கள் தேர்தல் நடத்தப்பட்டு இருக்கின்றன. அதே மாதிரித் தமிழகத்திலும் பின்பற்றக்கூடாதா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் கே.எம்.எஸ். சுட்டிக்காட்டியது போல் தவறான முன் மாதிரியை எடுத்துக் கொள்ளக்கூடாது. 34 மேயர்களுக்குப் பதிலாக 8 பேர் தான் வந்தார்கள், மீதி 26 பேர் எங்கே போனார்கள், யாரால் போனார்கள் என்பது தெரியாது. கே.எம்.எஸ். சொன்ன முன் மாதிரியை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அதை ஒரு ஆறுதலுக்காகச் சொன்னேன். வேறு அல்ல.

மாண்புமிகு உறுப்பினர் பொன்னப்ப நாடார் எடுத்துச் சொல்லியதைப்போல், இந்தத் தேர்தலைக் குறிப்பிட்ட காலத்தில் நடத்த வேண்டும் என்பதில் நாங்கள் மிகுந்த ஆர்வமாக இருக்கிறோம். குஜராத் மாநிலத்தில் அண்மையில் நடந்த நகராட்சி மன்றத் தேர்தல்கள் அதற்கான ரிசல்ட்களைப் பார்த்தேன். அந்த ரிசல்ட்களைப் பார்த்தபிறகு அங்கே இனிமேல் நகராட்சி மன்றத் தேர்தல்கள் நடக்குமா என்பது சந்தேகம். இருந்தாலும்கூட நம்மைப் பொறுத்தவரையில் ஒரு நல்ல சுமூகமான சூழ்நிலை ஏற்படுமானால் நகராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவோம் என்று கூறி, இதிலே எந்த விதமான கருத்து வேற்றுமைக்கும் எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும் இடம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** குஜராத் மாநிலத்தில் வந்த ரிசல்ட்டைப் பார்த்த பிறகு இனிமேல் அங்கே நகராட்சி மன்றத் தேர்தல்கள் நடக்குமா என்று சொன்னார்கள். ரிசல்ட்டை மனதில் வைத்துக் கொண்டுதான் நீங்கள் ஒத்தி போட்டுக்கொண்டு போகிறீர்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, குஜராத்திலே இருக்கின்ற தேர்தல் அடிப்படையின் காரணமாகத் தேர்தல்களை ஒத்திப் போடுவது நம்முடைய பழக்கம் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ் நாடு 1975-ம் ஆண்டு மாவட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே,

"தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, 1975 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன்வடிவு,



THIRU K. T. K. TANGAMANI : Both the two remaining Bills may be taken up on Monday. I do not think that we will be able to finish the first Bill itself within the five minutes left over. I request that both the Bills may be taken up on Monday.

MR. DEPUTY SPEAKER : I think that the Tamil Nadu Panchayats and Panchayat Union Councils (Extension of term of Office) Bill, 1975 may be finished now and the Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Bill, 1975 may be taken up on Monday. That was the specific understanding arrived at in your absence.

THIRU K. T. K. TANGAMANI : Does it mean that we are sitting after 1.30 p.m.?

MR. DEPUTY SPEAKER : Just for about 10 or 15 minutes.

THE HON. THIRU S. RAMACHANDRAN : I would suggest that the Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Bill, 1975 may be finished today and the other Bill may be postponed, if necessary, to Monday.

MR. DEPUTY SPEAKER : We will sit for 10 or 15 more minutes and finish it.

THIRU K. T. K. TANGAMANI : There are a good number of people from Coimbatore here who would like to speak on the Bill, that is about the functions of the Special Officer and other things.

MR. DEPUTY SPEAKER : We will take up the Tamil Nadu Panchayats and Panchayat Union Councils (Extension of term of Office) Bill, 1975 today. We will postpone consideration of the Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Bill, 1975 to Monday.

(7) அரசினர் தீர்மானம்.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை 21 (3) விதியின் கீழ்—

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டுள்ள 'அரசினர் சட்ட முன்வடிவுகள்' என்ற தலைப்பின் கீழுள்ள இனம் (4) 'தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு' என்பது இனம் (3)-க்கு முன்பாக எடுத்துக்கொள்ளப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(ஒ) தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து, அச் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"*

என்று முன்மொழிகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, இந்த மசோதாவை நான் மிக வன்மையாக எதிர்க்கிறேன். காரணம் என்னவென்றால், இந்த மசோதா கொண்டு வருவதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு இருக்கிறது. குறிப்பாக, பஞ்சாயத்து வார்டுகள் பிரிவினை செய்வதற்குப் போதிய நேரம் கிடைக்கவில்லை என்ற

* 18—10—1975-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



கருத்து கூறப்பட்டு இருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் மாவட்டத்தில் பஞ்சாயத்துப் பிரிவினைகளை அரசாங்கம் செய்வதாக இருந்தது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறந்து இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஒரே இரவோடு இரவாக 64 பஞ்சாயத்துக்களாக இருந்ததை, அங்கேயுள்ள பல்வேறு அரசியல் தலைவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 128 பஞ்சாயத்துகளாக மாற்றி அமைத்த நிகழ்ச்சிகளை இந்த மன்றத்தில் இதற்கு முன்பு பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறி இருக்கிறோம். அந்தப் பஞ்சாயத்துக்கள் எல்லாம் யார் யாருக்கு எந்த முறையில் தேவைப்பட்டதோ அந்த முறையில் மாற்றியமைக்கப்பட்டது. இன்னும் அந்த நிலை நடைபெறுகிறது. ஆனால் இப்போது குறிப்பிட்டிருக்கிற காரணத்தைப் பார்க்கிற போது. இந்த மாநிலத்தில் இருக்கும் பஞ்சாயத்துக்களை எல்லாம் 1971-ஆம் ஆண்டு ஜனத்தொகை கணக்கின் அடிப்படையில் மாற்றி யமைக்கப்படவேண்டுமென்று காரணம் எடுத்துக்காட்டப்பட்டு இருக்கிறது. 1971-ம் ஆண்டு முடிந்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த நான்காண்டுகளில் அந்த வேலையைச் செய்து இருக்கலாம். இந்த அரசு அதை இதுவரையில் செய்யாமல் இருந்ததற்குக் காரணம் என்ன? வார்டுகளைப் பிரிக்கவில்லை. அதனால் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தமுடியவில்லை என்று சொல்வதை நிச்சயமாக இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

அடுத்ததாக, இன்னும் ப்ரெலிமினெரி அரேன்ஜ்மெண்ட்ஸ் செய்வதற்காக ஒன்பது மாதங்கள் தேவைப்படுகின்றன என்று காரணம் காட்டியிருக்கின்றார்கள். ப்ரெலிமினெரி அரேன்ஜ் மெண்ட்ஸ் செய்வதற்குச் சில நாட்களே போதும். பொதுத் தேர்தலை நடத்துவதற்கே இப்போது தேசத்தில் அதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருக்கின்றன என்று பத்திரிகையில் வந்திருப்பதைப் பார்க்கிறோம். எந்த நேரத்தில் தேர்தல் என்று அறிவிக்கப்படுமோ என்ற ஐயப்பாடு எல்லோர் மனத்திலும் இருக்கின்றது. அதேபோல ஒத்தி வைக்கப்படுமோ என்ற ஐயப்பாடும் இருக்கின்றது. ஆனால் பொதுத் தேர்தல் என்று

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 அக்டோபர் 25

சொன்னால் அதற்கான எல்லா ஏற்பாடுகளும் தயாராகச் செய்திருக்கும்போது, பஞ்சாயத்துத் தேர்தலை மட்டும் நடத்துவதற்குத் தேவையான ப்ரெலிமினெரி அரேன்ஜ்மெண்ட்ஸ் செய்யவில்லை என்று சொன்னால் அதை நிச்சயம் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. பிப்ரவரி மாதம் தேசத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று சொன்னால் அதை நடத்தத் தயாராயிருக்கிறோம் என்றுதான் நான் எண்ணுகிறேன். அப்படிப்பட்ட பெரியதொரு வேலையைச் செய்யத் தயாராயிருக்கும்போது கேவலம் இந்தப் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்துவதற்குத் தயாராயில்லை என்றால் அதற்காகச் சொல்லப்படும் காரணங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடுத்து, அரசாங்க உத்தரவில்,

> " Further, the Government in the Public (Elections) Department had imposed a ban prohibiting changes in the administrative units of local bodies with effect from 1st January 1975. . . . . . "

என்று கூறப்பட்டிருக்கின்றது. அரசுக்கு நன்கு தெரியும், ஆகஸ்டு முதல் தேதியோடு இந்தப் பஞ்சாயத்துக்களின் ஆயுட்காலம் முடிவுறுகின்றது என்று. அதையொட்டி உடனடியாக இந்த அரசு தேர்தலை நடத்தக் கடமைப்பட்டு இருக்கின்றது. அது தெரிந்தும் ஜனவரி மாதத்தில் இந்த உத்திரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றது. எனவே நிச்சயமாகச் சொல்லுவேன், இந்த அரசு இந்தத் தேர்தலை நடத்துவதற்குத் தயாராக இல்லை என்று.

மேலும், வறட்சி நிலைமைகளை ஒரு காரணமாகக் காண்பித்திருக்கின்றார்கள். 1967-ல் இப்படி ஒரு வறட்சி நிலை இருந்த நேரத்தில் தான் அப்போது பொதுத் தேர்தலை தைரியமாக நடத்தியிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக் காண்பிக்க விரும்புகிறேன். அப்போது வறட்சி மட்டும் அல்ல, பண்டங்களின் பற்றாக்குறைகூட பெருமளவிற்கு இருந்தது. அப்படியும் அப்போது 1967-லே தேர்தலை நடத்தினோம். விளைவு என்னவாக இருந்தாலும் பரவாயில்லை; மக்களைச் சந்திக்கத் தயாராக இருக்கின்றோம் என்று தேர்தலை நடத்தினோம். ஆனால் இப்போது வறட்சியினை ஒரு காரணமாகக் கூறியிருப்பதானது மக்களை ஏமாற்றுவதாகும். வறட்சி இருக்கும்போதுதான், வறட்சி நிலைமைக்குக் காரணம் என்ன அல்லது காரணமானவர்கள் யார் என்று மக்கள்



1975 அக்டோபர் 25] [திரு. ஜே. ஜேம்ஸ்]

சிந்திக்கின்ற வேளையில்தான் அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் வாக்களிப்பதற்கு. மாநிலமாக இருந்தாலும் மத்திய அரசாக இருந்தாலும், இப்படிப்பட்ட காரணங்களைக் காண்பித்துத் தேர்தலைத் தள்ளி வைக்க எண்ணுவது விரும்பத்தக்கதல்ல என்று சுட்டிக்காண்பிக்க விரும்புகிறேன்.

இன்னும் ஒன்றைச் சுட்டிக்காண்பிக்க விரும்புகிறேன்.

> " It was also decided to restrict the term of office of the members and Presidents of newly constituted Panchayats also whose normal term would run beyond the 1st August 1976 "

என்று இருக்கின்றது. இப்படிச் செய்வது எவ்வளவு அநீதி என்பதை இந்த அரசு சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஏதேதோ காரணங்களைக் காண்பித்து இப்போதுள்ள பஞ்சாயத்து அங்கத்தினர் பதவிக்காலத்தினை நீட்டிப்பதற்கு சட்டம் கொண்டு வருகின்றார்கள். இப்படித் தேர்தலைத் தள்ளிப் போட்டுக்கொண்டு, உள்ள பஞ்சாயத்துக் கௌன்ஸில்களின் ஆயுட்காலத்தினை நீடிப்பதற்குச் சட்டம் கொண்டு வருகின்றீர்கள் என்றால், நிச்சயமாக உங்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை, முறைப்படி தேர்தலை நடத்துவதற்கு நீங்கள் தயாராக இல்லை என்பதைக் கூறி இந்த மசோதாவினை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்று கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மசோதாவினை எதிர்க்கும் முறையில் என் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதா நிறைவேறுகின்ற காரணத்தினால் நன்மை பெறுகின்றவர்களில் நானும் ஒருவன், விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவர் என்ற முறையில். ஆனாலுங்கூட, இது ஜனநாயகத்திற்கு முற்றிலும் முரணான ஒரு மசோதா என்ற வகையில் இதை எதிர்த்துப் பேசக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அமைச்சர் அவர்கள் ஒன்றை மறந்திருக்க மாட்டார்கள். இந்தக் கட்சி ஆளும் கட்சியாக வருவதற்கு முன்னதாக, ஊராட்சி ஒன்றிய நிர்வாகங்களிலே ஏராளமான சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று பல்வேறு கட்டங்களில் பேசியும், தீர்மானங்களாக

உத்திரவுகள் நீதி மன்றங்களிலே நிற்கின்றன. அதை விடுத்து, அவ்வளவையும் இணைத்து நல்லதொரு சட்டத்தினை அமைச்சர் அவர்கள் உருவாக்க வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதல்லாமல் இப்படிப்பட்ட வேலைகளில் அவரது திறமை வீணாகின்றது என்ற முறையில் இதை எதிர்க்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** துணைத் தலைவரவர்களே, இந்த மசோதா முழுக்க, முழுக்க ஜனநாயகத்திற்கு விரோதமான மசோதா. ஜனநாயகத்திற்கு முற்றிலும் முரணானது. மத்திய அரசு தேர்தலை நடத்தவில்லை என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும்? உங்களுக்கு பிப்ரவரி வரையில் டெர்ம் இருக்கின்றது. ஏன் அவசரப்படுகின்றீர்கள்? தைரியமிருந்தால் 1971-ல் கலைத்ததைப் போன்று கலைத்துவிட்டுக் கேட்பதுதானே? எனக்கு உள்ள பயம் எல்லாம், கேரளாவில் ஏற்கெனவே அந்த பீரியட் முடிந்து, அதற்கு மேலே எக்ஸ்டெண்டு பண்ணிக் கொடுத்தார்கள். அப்படிப்பட்ட எக்ஸ்டென்ஷன் வந்துவிடுமோ என்பதுதான். கேரளத்தில் எத்தனை முறை கவர்னர் ஆட்சி நடந்திருக்கிறது? அந்தமாதிரி இங்கே வந்ததா? அந்த நிலை இங்கே வராமல் இருக்கும்போது அதைப்பற்றி ஏன் இங்கே சொல்கிறீர்கள்? பிப்ரவரி-மார்ச் வரை உங்களுக்கு 'டெர்ம்' இருக்கிறது. அதற்குள் இப்போதே என்ன அவசரம்? வரும்போது . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போதே சொல்லி விட்டால் மெம்பர்களுக்கு நிம்மதியாக இருக்கும். அதற்குமேல் என்ன செய்யவேண்டுமென்று முடிவு செய்துகொள்வார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** முன் ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது. தொகுதியிலே போய் வேலை செய்ய வேண்டும். அதனால்தான் முன்னாலே தெரிந்துவிட்டால் நல்லது என்று கருதுகிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** முப்பது நாள் இருந்தாலே ஆளை ஆளாக விடமாட்டேன் என்கிறார்கள். அதற்கு மேலும் அவகாசம் இருந்தால் கேட்கவா வேண்டும்? நான் 6 தேர்தல்களில் நின்றிருக்கிறேன். முப்பது நாட்களுக்குமேல் நாமினேஷனுக்கும், எலெக்ஷனுக்கும் இடையில் இருக்கக்கூடாது. இருந்தால் சமாளிக்க முடியாது.



**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நானும் 5 தேர்தல்களில் நின்றிருக்கிறேன். அதிலே ஏற்பட்டிருக்கிற அனுபவத்தினால் சொல்கிறேன். எப்போது தேர்தல் வரும் என்று முன்கூட்டியே தெரிந்துவிட்டால் அதற்கேற்றபடி வேலை செய்துகொள்ளலாம்.

**திரு. பெ. சீனிவாசன் :** திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அனுபவத்தில் ஏற்பட்ட கருத்துக்களைச் சொல்கிறார்கள். துணைத் தலைவரவர்கள் சொன்னது ரொம்ப சரி. முன்னதாகத் தெரிந்து கொண்டால் மெம்பர்களுக்கு நிம்மதியாக இருக்கும். ஆனால் அம்மையார் அவர்கள் ஒன்றை யோசித்துப் பார்க்க வேண்டும். நாட்டு மக்கள் தேர்தல் வருமா, எப்போது வரும் என்று குழம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஏன் நகராட்சி, ஊராட்சி தேர்தல்களே, நடக்குமா என்பது சந்தேகம்தான்.

இங்கே முஸ்லீம் கட்சி உறுப்பினர் வகாப் அவர்கள் பேசினார்கள். ஓட்டுப் போடுவதற்கு மக்களுக்கு ஜீவன் இல்லை; கால் நடக்க முடியவில்லை. கை சோர்ந்துவிட்டது; நடக்க ஜீவன் இல்லை; எப்படி ஓட்டுப் போடுவார்கள் என்று கேட்டார்கள். நீங்களே இப்படிச் சொல்லும்போது மத்திய சர்க்கார் அதையும் ஒரு காரணமாக ஏன் சொல்ல முடியாது?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** 1971-லே அரசியல் பின்னணியை வைத்து அசெம்பிளியை டிசால்வ் செய்தீர்களே, அதேமாதிரி இப்போதும் செய்து காட்டுங்கள் — தேர்தல் நடக்கிறதா, இல்லையா என்று பார்ப்போம். உங்களுக்குத் தேர்தலை நடத்துவதில் ஆர்வம் இடையாது. அதனால்தான் பஞ்சாயத்துத் தேர்தலைக் கூட தள்ளிப் போடுகிறீர்கள். மூன்று வருஷங்களுக்கு முன்னாலே தேர்தலை நடத்தியிருக்க வேண்டும். நாங்கள் பிப்ரவரியில்தான் முடிவு செய்வோம். நீங்கள் நடத்த வேண்டியதையே தள்ளிப்போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அப்படி இருக்கும்போது உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது மத்திய அரசைச் சொல்ல? திண்டுக்கல் தேர்தலுக்குப் பின்னால் நீங்கள் தேர்தல் என்றாலே பயப்படுகிறீர்கள். ஆகையால்தான் ஒத்திப்போட்டுக்கொண்டே இருக்கிறீர்கள். ஜனநாயகத்திலே உங்களுக்கு நம்பிக்கை இல்லை. அப்படி நம்பிக்கை இருக்குமானால் பஞ்சாயத்துத் தேர்தல், முனிசிபாலிட்டி தேர்தல்களை நடத்திப் பார்க்கலாமே.

This is sheer abuse of power.

ஜனநாயகத்தை மறந்துவிட்டீர்கள். சர்வாதிகாரம் இங்கே தாண்டவமாடுகிறது. அதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. உங்களுக்கு வேண்டியவர்கள் இருக்கிற பஞ்சாயத்து என்றால் விட்டுவிடுகிறீர்கள், இல்லை என்றால் கலைத்துவிடுகிறீர்கள். பஞ்சாயத்து ஒழுங்காக நடக்கிறதா என்பதையாவது நீங்கள் கவனிக்கிறீர்களா ?

மேல்ப்பாளையம் நகராட்சியில் இரண்டு வருஷம் கூட்டமே நடத்தவில்லை என்று சொல்கிறார்கள். இப்படி நீண்டநாள் கூட்டம் கூடாத பல பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள் இருக்கின்றன. அதைப்பற்றி நீங்கள் ஆராய்ந்து பார்த்ததுண்டா ? எந்தெந்தப் பஞ்சாயத்தில் கூட்டம் நடத்தவில்லை என்று யோசித்துப் பார்த்தீர்களா ? இல்லையே. அப்படிப்பட்ட நீங்கள் இங்கே உட்கார்ந்து ஜனநாயகத்தைப்பற்றி பரக்க, பரக்கப் பேசுகிறீர்கள். அங்கே ஆழ ஆழக் குழி தோண்டி புதைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதற்கு இது தவிர வேறு என்ன சான்று வேண்டும் ? ஆகவே, இந்த மசோதாவை முழுக்க முழுக்க எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவரவர்களே, இந்த மசோதா ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், அவைகளின் உறுப்பினர்கள் ஆகியோர்களின் பதவிக் காலத்தை நீட்டிக்க வகை செய்கிறது. இப்போதுதான் முதல் தவணையாக நீட்டித்திருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் பாராட்டுரைகள் எல்லாம் வழங்கினார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி இப்படி ஒரு நல்ல அமைச்சர் இந்த மோசமான மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார் என்றார்கள். நான் கூட அப்படித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். ஆனால் இந்த மசோதாவினால் நண்பர் சீனிவாசனைப் போன்ற நல்லவர்கள் எல்லோரும் பயனடைகிறார்கள் என்று பார்க்கும்போது உண்மையிலேயே இந்த மசோதாவைக் கொண்டு வருவதிலே மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள் ஜனநாயகத்தைப் பற்றி மிகவும் அருமையான வாதத்தை எடுத்து வைத்தார்கள். உண்மையிலேயே அந்த விவாதம் மிகச் சிறந்தது தான். அது அப்படியே பத்திரிகைகளிலே வந்து நல்லதொரு





புகழை ஜனநாயகத்திற்குத் தேடித் தரவேண்டுமென்று எதிர் பார்க்கிறேன். சட்டம் இயற்றுகின்ற சட்டமன்றங்களின் கதியே என்ன என்று தெரியாது இருக்கின்றபோது ஜனநாயகத்தைப்பற்றி அருமையாக விளக்கம் கொடுத்ததற்காக இந்த மன்றம் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறது.

ஊராட்சி மன்றங்களின் தேர்தல்களை ஏன் ஒத்திப்போட்டிருக்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். ஒரு தகவலை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட பல கிராமங்கள் உள்ளன. சென்னையிலே உள்ளவர்களுக்கு அது தெரியாது. குடிக்கத் தண்ணீர் கூட கிடைக்காத நிலை இருந்தது. சாப்பிட உணவு இல்லை என்று அவர்கள் கேட்கவில்லை. குடிக்கத் தண்ணீர் கூட கிடைக்கவில்லை. அந்த நேரத்தில் போய் “எனக்கு ஓட்டுப் போடுங்கள், எனக்கு ஓட்டுப் போடுங்கள்” என்று எதிர்க்கட்சிக் காரர்கள் அவர்களிடம் கேட்டால் அப்போது அந்த மக்கள் நிலை எப்படி இருக்கும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். குடிக்கத் தண்ணீர் இல்லாத இந்த நேரத்தில் ஓட்டுக் கேட்கச் சென்றால், “ஏதோ வீடு பற்றி எரியும்போது புகை சுருட்டுக்கு நெருப்பு கொடு” என்பது போல இருக்காதா ? அவர்களிடம் போய் எப்படி ஓட்டுக் கேட்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்த வருஷம் கடுமையான வறட்சி. அதற்கு முன்னால் வறட்சி இல்லையே. ஆனால் 3 வருஷமாக ஒத்திப்போட்டுக்கொண்டிருக்கிறார்களே. அப்போது வறட்சியா இருந்தது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்த மசோதாவினால் இந்த வருஷம் ஒத்திப்போடுகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். சில ஊராட்சி மன்றங்கள் புதிதாகத் தொடங்கப் பட்டு, அவைகளைச் சீக்கிரமே மூடிவிடக்கூடிய நிலைமை இருக்கிறது ; ஐந்தாண்டு காலம் இருக்கலாமே என்று சொன்னார்கள். எல்லா ஊராட்சி மன்றங்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டுமென்ற அடிப்படையிலேதான் இந்தச் சட்டம் உருவாக்கப்

பட்டிருக்கிறதே தவிர, அவைகளின் ஆயுட்காலத்தைக் குறைக்க வேண்டுமென்பதற்காகவோ அல்லது வேறு அரசியல் காரணங்களுக்காகவோ இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மசோதாவின் மூலம் எந்தவிதத்திலும் மக்கள் உரிமை பறிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்து, இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** ஊராட்சி மன்றத் தேர்தலை நீட்டிப்பதினால் பலனடைபவர்கள் இருக்கலாம். அதற்காக ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்க வேண்டாமா? நாங்கள் கருத்துச் சொல்வதினால் இந்தச் சட்டம் நிற்கப்போவதில்லை. உங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது. அதனால் எப்படியும் பாஸ் செய்து விடுவீர்கள். ஆனால் ஒன்று. இந்த நேரத்தில் ஆளும் கட்சிக்காரர்களின் தலையீடு அதிகமாக இருக்கிறது. அதைத் தடுக்க வேண்டும். என்னுடைய பஞ்சாயத்து யூனியனில், எனக்கு பர்சனல் கிளார்க்காக இருந்தவரை ட்ரான்ஸ்ஃபர் செய்து, வேறு பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றியிருக்கிறார்கள். உங்களுடைய பி.ஏ.யை மத்திய சர்க்காரிலே இருந்து உத்தரவுபோட்டு, வேறொரு மாநிலத்திற்கு மாற்றினால் உங்களுக்கு எப்படி இருக்கும்? அதைக் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட தலையீடுகள் இருக்கக்கூடாது. இது அருவருப்பாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள **கேள்வி—**

"தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக் கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I press for a Division.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வாய்ஸ் ஓட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவித்துவிட்டேன்.



பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** துணைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்று சிறிது காலம் கடந்துவிட்டாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுமையுடன் அமர்ந்திருந்து, அவையின் அலுவல் நடைபெற ஒத்துழைத்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 27—10—1975 திங்கட்கிழமை அன்று காலை 9-00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-49 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## (8) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders*

190. Notification issued in G.O. Ms. No. 437, Housing, dated the 15th May 1975 in regard to certain amendments to the Tamil Nadu Slum Clearance Board Non-Technical Subordinate Service Rules, 1972. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act II of 1971).]

191. Notification issued in G.O. Ms. No. 265, Commercial Taxes and Religious Endowments, dated the 12th March 1975 in regard to an amendment to the framing of scheme rules published with Revenue Department Notification at pages 681–683 of Part V of the *Fort St George Gazette*, dated the 21st December 1960 [Laid on the table of the House under section 116(3) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959)].

192. Notification issued in G.O. Ms. No. 611, Agriculture, dated the 9th April 1975 in regard to regulation of trade in cholam, cumbu, ragi, coconut and corriander in Tiruchirappalli district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

B. *Reports, Notifications and Other Papers.*

83. Notification issued in G.O. Ms. No. 644, Industries dated the 31st May 1975 in regard to an amendment to the Tamil Nadu Cement Distribution (Licensing and Regulation) Order, 1973.

84. Notification issued in G.O. Ms. No. 284, Commercial Taxes and Religious Endowments, dated the 12th March 1975 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the gift deeds to be executed by Thirumathi E. V. R. Maniammai, wife of late E. V. Ramaswamy Naicker, Thanthai Periyar in favour of the Government of Tamil Nadu.

85. Notification issued in G.O. Ms. No. 847, Commercial Taxes and Religious Endowments, dated the 10th July 1975 in regard to withdrawal of two Revenue Department Notifications published at page 252 of Part II—Section 1 of the Tamil Nadu *Government Gazette*, dated the 1st March 1975 and at page 562 of Part II—Section 1 of the *Tamil Nadu Governent Gazette*, dated the 7th November 1973 respectively.





@ 86. The Tamil Nadu District Municipal Councillors (Extension of term of office) Bill, 1975 with Annexure.

@ 87. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which necessitated the promulgation of the Tamil Nadu District Municipal Councillors (Extension of term of Office) Ordinance, 1975 (Tamil Nadu Ordinance No. 3 of 1975).

@ 88. The Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Bill, 1975.

@ 89. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which necessitated the promulgation of the Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Ordinance, 1975 (Tamil Nadu Ordinance 4 of 1975).

@ 90. The Tamil Nadu Panchayats and Panchayat Union Councils (Extension of term of office) Bill, 1975.

@ 91. Statement under Rule 91-A of the Tamil Nadu Legislative Assembly Rules explaining the circumstances which necessitated the promulgation of the Tamil Nadu Panchayats and Panchayat U[illegible]
Ordinance 1[illegible]

@ Despatched to Members on 24th October 1975.

## இணைப்பு

[386ம் பக்கத்தில் *வெள்ளிக் குறியிட்ட வினா 63-க்கான விடையைக் காண்க].

### தமிழ்நாட்டில் நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் திருக்கோயில்களின் விவரம்

| வரிசை எண். | ஆலயத்தின் பெயர், விலாசம். | குறிப்பு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | அருள்மிகு நவநீதேஸ்வரஸ்வாமி ஆலயம், சிக்கல், நாகப்பட்டிணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். | மாலை 2 மணி முதல் 5 மணிவரை மட்டும். |
| 2. | அருள்மிகு பட்டிப்பெருமாள் ஆலயம், பேரூர், கோவை மாவட்டம். | அர்த்த மண்டபத்தில் தரிசனம் செய்வதற்கு மட்டும் (தினசரி). |
| 3. | அருள்மிகு நரசிம்மசாமி ஆலயம், நாமக்கல், சேலம் மாவட்டம். | வைகுண்ட ஏகாதசியன்று மட்டும். |
| 4. | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் ஆலயம், திருச்செங்கோடு, சேலம் மாவட்டம். | அமாவாசையன்று மட்டும். |
| 5. | அருள்மிகு தண்டுமாரியம்மன் ஆலயம், உப்பிலிபாளையம், கோவை நகர். | வெள்ளிக்கிழமை மட்டும். |
| 6. | அருள்மிகு மாரியம்மன் ஆலயம், சூலக்கல், பொள்ளாச்சி மாவட்டம். | எல்லா நாட்களிலும். |
| 7. | அருள்மிகு பன்னாரியம்மன் ஆலயம், பன்னாரி, கோபி வட்டம். | வருடகுண்டம், மறு பூசை நாட்களில் திங்கள், வெள்ளி மற்ற விசேட நாட்களில். |
| 8. | அருள்மிகு ரங்கநாதசாமி ஆலயம், காரமடை, அவினாசி வட்டம். | விசேஷ நாட்களில் மட்டும். |
| 9. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம், மருதமலை, கோவை மாவட்டம். | எல்லா நாட்களிலும் |
| 10. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம், மதுரை. | காலை தினசரி 7 மணி முதல் மாலை 7 மணி வரை மட்டும் |
| 11. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம், திருப்பரங்குன்றம். | ஷை |
| 12. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம், திருச்செந்தூர். | தினசரி. |



| வரிசை எண. | ஆலயத்தின் பெயர், விலாசம். | குறிப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 13. | அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் ஆலயம், திருநெல்வேலி. | தினசரி |
| 14. | அருள்மிகு சுவாமிநாதசுவாமி ஆலயம், சுவாமிமலை. | தனிப்பட்ட வழியாகச் செல்ல மட்டும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. |
| 15. | அருள்மிகு வேதாரன்யேஸ்வரர் ஆலயம், வேதாரண்யம். தஞ்சை மாவட்டம். | ஷை |
| 16. | அருள்மிகு வெங்கடாசலபதிசுவாமி ஆலயம், ஒப்பிலியப்பன் கோயில் கிராமம், கும்பகோணம் வட்டம். | ஷை |
| 17. | அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில், மணவாளநல்லூர், தென்னாற்காடு மாவட்டம். | அர்த்த மண்டபத்தில் தரிசனம் செய்யமட்டும் |
| 18. | அருள்மிகு ரங்கநாதர் ஆலயம், சீரங்கம் திருச்சி மாவட்டம். | தினசரி சேவா நேரங்களில் சிறப்பு வழியாகச் செல்ல. |
| 19. | அருள்மிகு அங்காளம்மன் ஆலயம், மேல் மலையனூர், தென்னாற்காடு மாவட்டம். | திருவிழாக் காலங்களில் மட்டும். |
| 20. | அருள்மிகு சத்யஞானசபை, வடலூர். | திருவிழாக் காலங்களில் மட்டும். |
| 21. | அருள்மிகு ஏகாம்பரஸ்வரர் ஆலயம், காஞ்சிபுரம். | எல்லா நாட்களிலும் |
| 22. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம், குமரகோட்டம், காஞ்சிபுரம். | ஷை |
| 23. | அருள்மிகு தேவராஜ்சுவாமி ஆலயம், காஞ்சிபுரம். | ஷை |
| 24. | அருள்மிகு ஸ்தலசயனப்பெருமாள் ஆலயம், மகாபலிபுரம். | ஷை |
| 25. | அருள்மிகு கந்தசாமி ஆலயம், திருப்போரூர். | ஷை |
| 26. | அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயம், திருவேற்காடு. | சிறப்பு வழியில் செல்ல மட்டும். |
| 27. | அருள்மிகு உலகளந்தபெருமாள் ஆலயம், காஞ்சிபுரம். | ஷை |

| வரிசை எண். | ஆலயத்தின் பெயர், விலாசம். | குறிப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 28. | அருள்மிகு தாழக்கோயில், திருக்கழுக்குன்றம். | சிறப்பு வழியில் செல்ல மட்டும். |
| 29. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம், குன்றத்தூர். | கார்த்திகை தினங்களில் மட்டும். |
| 30. | அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி ஆலயம், இளையனூர், வேலூர். | ஆடி, தைகிருத்திகை தினங்களில் மட்டும். |
| 31. | அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் மற்றும் அஷ்டபுஜபால மதனவேணுகோபாலசுவாமி ஆலயம், பேரூர், சேலம் மாவட்டம். | அமாவாசை தினங்களில் மட்டும். |
| 32. | அருள்மிகு ஞான சற்குரு பாலமுருகன் ஆலயம், கஞ்சமலை, சேலம் மாவட்டம். | |

**பின் குறிப்பு :**

தமிழ்நாடு சட்டப்பேரவையில் 17-3-1975 அன்று மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் நுழைவுக் கட்டணம் வசூலிப்பதை 1-4-1975 முதல் நிறுத்தப்படும் என்று அறிவித்துள்ளார்கள். இதைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருக்கோயில்களவற்றிலாவது விழாக்காலங்களில் அல்லாமலும், விசேஷ நுழைவாயில் வழியாகச் செல்வதன்றியும் சாதாரண நாட்களில் சுவாமி தரிசனம் செய்வதற்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்யப்படின் அதை உடனே நிறுத்துவதற்கு ஆணையிட்டுள்ளார்கள்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திங்கட்கிழமை, 1975 அக்டோபர் 27.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் 66, 67, 68 பிறகு எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது வினா 69 எடுத்துக் கொள்ளப்படுகிறது.

### அரசு மருத்துவ மனைகள்

* **69 வினா—திரு. வி. கே. இராஜாப்பிள்ளை :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலிலுள்ள தலைமை மருத்துவ மனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நாகர்கோவிலிலுள்ள தலைமை மருத்துவ மனையில் 60 படுக்கைகள் கொண்ட பகுதியும் இரட்டை அரங்கு அறுவைக்கூடமும் ரூ. 8.00 இலட்சம் செலவில் கட்ட அரசு ஏற்கெனவே ஒப்புதல் வழங்கியுள்ளது.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, இப்பொழுதிருக்கின்ற ஹெட்க்வார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி கட்டடம் இட நெருக்கடியுள்ளதாக இருக்கிறது. அதை கன்வீனியன்ட் ஸ்பேஸ் உள்ள இடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்ற ஒரு தவறான சிந்தனை ஏற்பட்டு, அந்த அடிப்படையில் நீண்ட நாட்களாக எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படாமல் தவக்கம் ஏற்பட்டுவிட்டது. நாகர் கோவிலில் நிலம் வாங்குவதென்றால், நிலம் வாங்குவதற்கே ஏழு, எட்டு இலட்ச ரூபாய் விலை தர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அங்கு பொது மக்கள் சார்பில் யாராவது இடம் வாங்கித் தருவதாக இருந்தாலும், தனிப்பட்டவர்கள் இடம் கொடுப்பதா யிருந்தாலும், அந்த யோசனையை சில நாட்களுக்கு முன்னால் ஏற்றுக்கொண்டிருக்க முடியும். அது முடியாத காரணத்தால், இந்த மருத்துவமனையை யொட்டி, ஏறத்தாழ ஒரு ஏக்கரா நிலம் தேவஸ்வம்—அல்லது வேறு ஏதோ அற நிலையத்தைச் சார்ந்த நிலம் கிடைக்கும் என்று, அதை அடிப்படையாக வைத்து பல மாடிக் கட்டடம் கட்டுவதன் மூலம் மருத்துவ மனையின் வளர்ச்சிக்கு ஆவன செய்ய முடியும் என்று ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்ன ஆலோசனையின் மீது இப்பொழுது இந்த வேலைகள் துவங்கப்பட்டிருக்கின்றன.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தேசிய விநாயகர் அற நிலையம் என்று அங்கே இருக்கிறது. அதற்குச் சொந்தமாக ஏறத்தாழ இரண்டு ஏக்கரா நிலம் இருக்கிறது. அது பாழடைந்த குளமாக இருக்கிறது. அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆதலால், அதை உடனடியாக வாங்கி அதில் அந்தக் கட்டடத்தைக் கட்ட அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்பொழுது கட்டுகிற கட்டடத்திற்காக இப்பொழுதுள்ள இடத்திலேயே ஒரு சிறு இடம் மட்டும் அதோடு சேர்க்கப்படக்கூடிய நிலை இருந்தது. ஆனால், அதுபற்றி இப்பொழுது விவரமாகத் தெரியவில்லை. அவர் சொல்கிற நிலம் ஒருவேளை மருத்துவ மனையோடு ஒட்டிய நிலமாக இருந்தால் ஏற்றுக்கொள்ள முயற்சிக்கலாம். ஆனால், குளம் ஏதாவது இருந்தால், அதைத் தூர்த்து அங்கே கட்டடம் கட்டுவதற்கு இரண்டு ஆண்டுக் காலம் ஆகும்.



* 70 வினா—**திரு. மே. சி. தூயமணி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் நகரிலுள்ள அரசினர் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) மேட்டுப்பாளையம் அரசு மருத்துவ மனையில் முன்னாள் இராணுவத்தினருக்காக 12 படுக்கைகள் கொண்ட ஒரு தனிப்பகுதி (இராணுவத்தினர் நிவாரண நிதியிலிருந்தும் அரசு நிதியிலிருந்தும்) கட்ட 1975-76 ஆம் ஆண்டிற்கான திட்டப் பணியாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் தனியார் மூலம் பிரசவ அறை ஒன்று நன்கொடையாகக் கட்டி அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது.

*71 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is a proposal under the consideration of the Government to put up additional building for the hospital at Denkanikotta in Dharmapuri district, and also to provide a maternity ward; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) இதுபற்றி நலத்துறை இயக்குநருடைய பரிசீலனையில் ஒரு ஆலோசனை ஏற்கெனவே இருந்து வருகிறது.

### கதிர்வீச்சு மருத்துவப் பயிற்சி

* 72 வினா—**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972–73, 1973–74 ஆம் ஆண்டுகளில் சென்னை அரசினர் பொது மருத்துவ மனையிலும், மதுரை அரசினர் பொது மருத்துவ மனையிலும் எக்ஸ்ரே டிபார்ட்மெண்டில் (Certified Radiological Assistant) பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை எவ்வளவு, ஆண்டுவாரியாக?

[1975 அக்டோபர் 27

(இ) சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையில் பணி புரியும் அனுபவமுடைய இருட்டறை உதவியாளர்கள் இப் பயிற்சிக்கு அனுப்பப்படுவதில்லை என்பது உண்மையா?

(உ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) சென்னை அரசினர் பொது மருத்துவ மனையிலும், மதுரை எர்ஸ்கின் பொது மருத்துவ மனையிலும் எக்ஸ்ட்ரே டிபார்ட்மெண்டில் C.R.A. பயிற்சி நடத்தப்படுவதில்லை. எனினும் அது சென்னை மருத்துவக் கல்லூரியிலும் மதுரை மருத்துவக் கல்லூரியிலும் நடைபெறுகிறது. பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை விவரம்:—

| | 1972-73. | 1973-74. |
|---|---|---|
| சென்னை மருத்துவக் கல்லூரி | 17 | 20 |
| மதுரை மருத்துவக் கல்லூரி | 17 | 20 |

(இ) ஆம்.

(உ) பயிற்சிக்கு அனுப்பப்படும் இருட்டறை உதவியாளர்களின் இடங்களுக்கு பதிலாள்-பயிற்சி பெற்றவர்கள்-இல்லாததினால், தேவையின் காரணமாக அவர்களைப் பயிற்சிக்கு அனுப்பவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** உதவி மானியத்தில் கூட மதுரை ஆஸ்பத்திரி எக்ஸ்-ரே டிபார்ட்மெண்ட் சம்பந்தமாக சில விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்கும் போது, ஏற்கெனவே பயிற்சி பெற்றவர்களுக்கு இந்த டார்க் ரூம் அஸிஸ்டெண்ட் வேலை செய்யக்கூடிய வசதிகளைச் செய்து கொடுக்க இனிமேலாவது அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** 'டார்க் ரூம் அஸிஸ்டெண்ட்' என்ற பணியில் உள்ளவர்கள் அந்தப் பணியிலிருந்து வேறு பயிற்சிக்கு அனுப்பப்படுகிறபோது அந்தப் பணியைச் செய்வதற்கு உரிய தகுதி பெற்றவர்கள் இல்லாததன் காரணமாக இதுவரை அனுப்பப்படவில்லை. அதற்குப் பதிலாக ஆட்கள் தேவையான அளவுக்கு நியமிக்கப்படுவதற்கு மருத்துவக் கல்வி இயக்குநர் ஒரு சிபார்சு செய்துள்ளார். அது எந்த அளவுக்கு முடிகிறதோ அந்த அளவுக்கு அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.



1975 அக்டோபர் 27]

**திரு. ஜே. ஜேம்ஸ்:** டார்க் ரூம் அஸிஸ்டெண்ட் பயிற்சி பெற்ற பலர் இப்பொழுது வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் எங்கெங்கே தேவைப்படுகிறதோ அங்கே அவர்களை நியமிக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தற்போது அந்த இடங்கள் காலியாக இருப்பதாகப் பொருள் அல்ல. அவர்கள் பயிற்சிக்குச் செல்கிற இடைக்காலத்தில்தான் அந்த நிலை ஏற்படும். அப்படி அவர்களைப் பயிற்சிக்கு எடுக்கும்போது தேவைக்கேற்ப மற்றவர்களை அந்தப் பணியில் ஈடுபடுத்தி அவர்களைப் பயிற்சிக்கு அனுப்பலாம்.

## பாரதியார், ரவீந்திரர் நினைவு அரங்கு

* 66 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் கவிபாரதி, ரவீந்திரநாத் தாகூர், நினைவு அரங்கு கலாச்சார நிலையம் அமைத்திட தமிழ்நாடு அரசு நிலம் ஒதுக்கியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) ஒரு விவர அறிக்கை * சபையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, ரவீந்திரநாத் தாகூர் நூற்றாண்டு விழாவையொட்டி 1961 ஆம் ஆண்டிலே மத்திய அரசு ரூ. 2.75 இலட்சம் மானியமாகத் தர முன்வந்து, அதற்காக 64 கிரௌண்டு நிலம் கூட மாநில அரசு ஒதுக்கியிருக்கிறது. பின்னர் முடியாத காரணத்தால், பாரதி நினைவுச் சங்கம் என்ற சங்கத்தினிடத்தில் ரவீந்திரநாத் தாகூர் அவர்களுடைய நினைவுச் சின்னத்தையும், பாரதியார் அவர்களுடைய நினைவுச் சின்னத்தையும் ஒன்றாகவே அமைத்துக்கொள்வதற்கேற்ற வகையில்

---

* 650-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தரப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது எப்பொழுது ஒப்படைக்கப்பட்டது, 64 கிரௌண்டு நிலத்தினுடைய பெறுமானம் எவ்வளவு என்பதையும், இப்பொழுது அந்தக் கட்டடங்களெல்லாம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டனவா என்பதையும் அறிய விரும்புகிறேன். 1961 ஆம் ஆண்டில் ரவீந்திரநாத் தாகூர் நூற்றாண்டு விழா என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது 1975 ஆம் ஆண்டிலாவது அந்த அரங்கங்கள் கட்டி முடிக்கப்பெற்று, அதனுடைய வேலைகளெல்லாம் சிறப்புற முடிவு அடைந்துவிடுமா என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 1961 ஆம் ஆண்டு ரவீந்திரநாத் தாகூர் நூற்றாண்டு விழாவையொட்டி ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு கலையரங்கம் கட்டுவது என்ற அடிப்படையில் மத்திய அரசு ஓரளவு நிதி உதவி செய்தது. மற்ற உதவிகள் எல்லாம் அந்தந்த மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில், ரூ. 2.75 இலட்சம் முதலில் தந்தார்கள். மத்திய அரசு மொத்தம் ரூ. 3.50 இலட்சம் அளித்தார்கள். மாநில அரசு மேற்கொண்டு ஒன்றரை இலட்சம், இரண்டு இலட்சம் அளித்து, பைல் பவுண்டேஷன் போட்டு, அந்த இடத்தில் நிறுவும்போது, சீனப்போர் ஏற்பட்டதன் காரணமாகவும், அதைத் தொடர்ந்து பாகிஸ்தான் போர் ஏற்பட்டதன் காரணமாகவும் அந்தக் கட்டடத்தைக் கட்டி முடிக்க முடியாத நிலையில் நின்றுவிட்டது. அதே கட்டடத்தைக் கட்டிமுடிப்பதற்கு 7 இலட்சம் ரூபாய் ஆகும் என்று முதலில் மதிப்பிடப்பட்டு, பிறகு, அதுவே 14 இலட்ச ரூபாய் ஆகும் என்று கணக்கிட்டு, பிறகு அதே அளவு அரங்கம் கட்ட 18 இலட்ச ரூபாய் ஆகும் என்று மதிப்பிட்டு, இப்பொழுது கிட்டத்தட்ட அதே ப்ளான்படி கட்டிமுடிக்க 25 இலட்ச ரூபாய் ஆகும் என்று சொல்லப்படுகிறது. அவ்வளவு பெரிய பைல் பவுண்டேஷன் போட்டு அந்த அளவு கட்டடம் எழுப்பாவிட்டால் நன்றாக இருக்காது என்ற கருத்தில் நிதி வசதி எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில் பாரதி கழகத்தினர் முன் வந்து அந்தப் பணியைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தாங்கள் தயாராயிருப்பதாகவும், பைல் பவுண்டேஷன் முறையில் அமைப்பதற்கு அந்த இடத்தை அவர்களிடம் ஒப்படைத்தால் மேற்கொண்டு 20-25 இலட்ச ரூபாய் திரட்டி அதைக் கட்டி முடித்து,



அந்தக் கட்டடத்திற்கு ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் பெயரை வைத்து, அரங்கத்திற்கு பாரதியார் பெயரை வைத்து நிறைவேற்றலாம் என்று சொன்னதன் பேரில், சென்ற ஆண்டு பாரதியார் சங்கத்தினிடம் அதை ஒப்படைத்தற்குப் பிறகு, அவர்கள் அதைக் கட்டுவதற்கான முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அது கட்டி முடிக்கப்படவில்லை.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, இப்படி அதிகத் தொகை ஆகிறதனாலே மாநில அரசு, மத்திய அரசை நிதி கோரிக்கை கேட்டிருக்கிறதா ? அப்படிக் கேட்டதற்கு மத்திய அரசிலிருந்து என்ன தகவல் கிடைத்தது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, எல்லா மாநிலங்களுக்கும் ஒரு குறிப்பிட்ட தொகையைத் தந்தார்கள். ஆகவே, எல்லா மாநிலங்களுக்கும் 3½ இலட்ச ரூபாய் தந்து, அதற்கு மேல் எவ்வளவு ஆனாலும் அந்தந்த மாநில அரசின் பொறுப்பு, மேற்கொண்டு தருவதற்கில்லை என்று கூறி விட்டார்கள். ஆகவே இதை நம் பொறுப்பில் நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

**Thiru K. M. SUBRAMANIAM :** Sir, has the public come forward with donations for the construction of Rabindranath Tagore Memorial building?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்போதுதான் இந்த பாரதி சங்கம் பொது மக்களிடத்திலிருந்து வசூலித்துக் கொள்கிற முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறது. 25 லட்ச ரூபாய் ஆகும் என்பதால் 5½ லட்ச ரூபாயில் போட்ட 'பைல்' பவுண்டேஷனை, 64 கிரவுண்டைக் கொடுத்திருக்கிறோம். மேற்கொண்டாகிற 20, 25 லட்ச ரூபாயை பொதுமக்களிடமிருந்து திரட்டி பாரதி சங்கம் நிறைவேற்றுவதாக இருக்கிறது. அதன் அடிப்படையில் அதனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, ரவீந்திரநாத் தாகூருடைய இந்த நூற்றாண்டு விழா தொடங்கி 15 வருஷம் ஆகிவிட்டதே, 15 வருஷம் ஆகியும்கூட இந்த முயற்சி முடிந்ததாகத் தெரியவில்லையே, பாரதியார் சங்கத்திடம் ஒப்படைத்

திருக்கிறது என்றார்கள். இந்த ஆண்டாவது பூர்த்தியாகுமா என்பதை அரசு கண்காணிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சென்ற ஆண்டுதான் அதாவது 7, 8 திங்களுக்கு முன்புதான் அவர்களிடத்தில் ஒப்படைத்தோம். அவர்கள் முயற்சிகளை எடுத்துக் கொள்வார்கள். இந்த ஆண்டில் முடியும் என்று சொல்வதற்கில்லை. அடுத்த ஆண்டில் முடிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, தேசிய கவிஞர் ரவீந்திரநாத் தாகூர், புதுமைக் கவிஞர் பாரதி இவர்களுக்கு அமைக்கப்படுகிற இந்த நினைவாலயத்தைப் போல தமிழகத்திலிருந்து புரட்சிகரமான கவிதைகளை உருவாக்கிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு தமிழக அரசு முயற்சி செய்து இப்படி ஒரு அரங்கை ஏற்படுத்த முன்வருமா, இதற்கு ஏதாவது மத்திய அரசிலிருந்து உதவி பெற முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. வி. ஆலடி அருணா :** தலைவரவர்களே, ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் நினைவாக அரங்கை தமிழகத்தில் அரசாங்கத்தினுடைய சார்பாக கட்ட எண்ணி, இப்போது இந்த அரங்கம் பாரதி சங்கத்தினிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி அரசாங்கத்தினிடமிருந்து பொது நிறுவனத்திற்கு 64 கிரவுண்டு கொடுக்கப்படுகிறது. இதனுடைய மதிப்பு என்ன? இந்த அரங்கம் அரசாங்கத்திடமே வருகிற அளவிற்கு மீண்டும் அரசாங்கம் இதைக் கட்ட முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அரசாங்கமே வகிக்க வேண்டுமென்று சொன்னால் அதிகத் தொகை செலவு ஏற்படும். அதற்கு நிதி வசதி ஏற்படாத காரணத்தினால் அவர்களிடம் கிரவுண்டை தந்திருப்பதன் காரணமாக, 5½ லட்ச ரூபாயில் கட்டிடத்தை தந்திருப்பதன் காரண



மாக, அந்தக் குழுவிலே அரசாங்கச் சார்பில் சிலர் இடம் பெறுவார்கள். ஆகவே, நிர்வாகப் பொறுப்புகளிலே அரசாங்கத்திற்கும் ஓரளவிற்குப் பங்கு இருக்கும்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, பிற மாநிலக் கவிஞர்களை நாமும், நம் மாநிலமும் மதிப்பதைப்போல நம் தமிழ் நாட்டுக் கவிஞர்களை, புலவர்களை பிற மாநிலங்கள் மதித்து அவர்களுக்குக் கௌரவம் செய்யும் வகையில் இப்படிப்பட்ட நினைவாலயங்களை எழுப்பியிருக்கின்றனவா ? அப்படிப்பட்ட முயற்சியில் நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ரவீந்தரநாத் தாகூர் அவர்களுக்கு நினைவாலயம் எழுப்ப, அகில இந்திய அரசே 1961 ஆம் ஆண்டு நூற்றாண்டு விழா நேரத்தில் முயற்சி எடுத்து, எல்லா மாநிலங்களுக்கும் இந்த உதவித் தொகையைத் தர முன் வந்ததன் காரணமாக நமக்கும் கிடைத்தது. இந்திய நாட்டைச் சேர்ந்த எந்த மொழி கவிஞரானாலும் அவரைப் போற்றி அவருக்கு நினைவுச் சின்னம் எழுப்புகிற பண்பாட்டை தமிழகம் தொடர்ந்து செய்கிறது. இதை மற்ற மாநிலங்கள் பின்பற்ற வேண்டுமென்பது நம்முடைய விருப்பம். மத்திய அரசு இதை வற்புறுத்த வேண்டுமென்பது நம் வேண்டுகோள்.

## ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்

* 67 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975-76 ஆம் கல்வி ஆண்டில், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களை அனுமதித்திட அரசு உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம். அதற்கான ஆணை 16—6—1975 நாளிலே அரசு பிறப்பித்துள்ளது.

* 68 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை, அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள 57 அரசு ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் 29 நிலையங்களை மூடிவிடும்படி இவ்வாண்டு ஜூன் திங்கள் வாக்கில் அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அற்கான காரணம் யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) பயிற்சி முடித்து, பணிவாய்ப்புக் கிடைக்காமல் இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், பயிற்சி பெறும் ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும், அரசிற்கு ஆகும் செலவினைக் கட்டுப்படுத்துவதற்காகவும், சில அரசினர் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை மூடுவதற்கு 16—5—1975 நாளிட்ட அரசு ஆணை (எண். 782, கல்வி) பிறப்பிக்கப்பட்டது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, நம்முடைய தமிழகத்தில் இது வரையில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் படித்து விட்டு தேர்ச்சி பெற்று, ஆசிரியர் பணிகளுக்குத் தகுதியாக உள்ளவர்கள் தொகை எவ்வளவு என்பதையும், இதில் பணியற்றவர்கள் எவ்வளவு பேர் என்பதையும், தமிழகத்திற்கு இன்றைய நிலையில் எவ்வளவு பேர் தேவைப்படுகிறார்கள் என்பதையும் அறிவிக்க இயலுமா? ஆசிரியர்களை மேலும் அதிகமாக உற்பத்தி செய்து கொண்டே போனால் இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பல தொல்லைகள் ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ள இனியாவது அரசு இதைக் குறித்து ஆவன செய்ய முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இந்தக் கருத்துக்களையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு ஓரளவிற்கு எண்ணிக்கையைக் குறைக்கிற முயற்சியில் ஈடுபட்டோம். இப்போது ஆசிரியர் பயிற்சி முடித்திருக்கிறவர்கள் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிய முடியாவிட்டாலும் கூட 12,000-க்கு மேற்பட்ட செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் தமிழகத்தில் இருக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு எப்படிப் பார்த்தாலும் 4 ஆயிரத்திலிருந்து 4,500 ஆசிரியர்களைத்தான் ஏற்றுக்கொள்கிற சூழ்நிலை ஏற்படக் கூடும். ஆகவேதான், சென்ற ஆண்டு மாணவர்களைச் சேர்க்கவில்லை. ஒரு ஆண்டு விட்டு ஒரு ஆண்டு சேர்க்கிற நிலைமையில் இருக்கிறோம். இந்த ஆண்டு 29 பயிற்சிப் பள்ளிகளை நீக்கிவிட்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆண்கள் பயிற்சிப் பள்ளி ஒன்று, பெண்கள் பயிற்சிப் பள்ளி ஒன்று என்று வைத்துக்கொண்டு மற்றவைகளை மூடிவிட்டோம். தனியார் துறையிலுள்ள பயிற்சிப்





பள்ளிகளையெல்லாம் அவர்கள் உயர் நிலைப் பள்ளிகளாக மாற்ற முன் வருவார்களானால் தனிச் சலுகை கொடுத்து அவர்களுக்கு அனுமதி அளிப்போம் என்று அவர்களிடம் சொல்லி இருக்கிறோம். வருகிற ஆண்டு உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கு அவர்களுக்கு வசதியை ஏற்படுத்துவதன் மூலம் இந்தப் பயிற்சிப் பள்ளி எண்ணிக்கையை மேலும் குறைக்கலாம் என்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, ஆசிரியர்கள் 12 ஆயிரம் பேர் வேலையற்று இருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பல இடங்களில் பள்ளிகளுடைய தேவை அதிகமாக இருக்கிறது. பல பள்ளிகளில் ஆசிரியர்கள் போதவில்லை. ஆகவே, அரசாங்கத்தினுடைய இந்த முடிவை மறு பரிசீலனை செய்வார்களா? அதோடு குறிப்பாக, பெண்களுக்கு பயிற்சிப் பள்ளிகளை அதிகப்படுத்த முன் வருவார்களா? இந்த ஆண்டு சர்வதேச பெண்கள் ஆண்டு, பெண்களில் வேலையற்றவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, இந்த வருஷத்திலாவது இதற்கு விதி விலக்கு அளித்து இந்தப் பள்ளிகளை மூடாமல் திறந்து மேலும் பள்ளிகளைத் துவக்கவும், அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தவும் அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, வேலை வாய்ப்பு அதிகமாக இல்லாத நிலைமையில் பயிற்சியினை அதிகமாகத் தந்து கொண்டு போனால் அது பொருத்தமாக இருக்காது. பயிற்சி பெற்றவர்கள் வேலை இல்லாமல் இருக்கிற எண்ணிக்கை 12 ஆயிரத்திற்கு மேல் இருக்கிற நிலையில் அவர்களை ஈர்த்துக் கொள்கிற வாய்ப்பை உருவாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம், அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும். அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்தால் புதிதாக வருகிற ஆசிரியர்களையும் 1 : 35 என்ற விகிதத்தை 1 : 25 என்று ஆக்கினால் அதிகமான ஆசிரியர்களை எடுத்துக் கொள்ள முடியும். இதற்கு வழி இல்லாமல் இல்லை. நமக்குக் கிடைக்காதது நிதி ஒன்று தான். ஆகவே தான், இருக்கிற நிலைமைகளில் பயிற்சிப் பள்ளிகளை திறந்து விட்டு வேலை வாய்ப்புத் தராமல் இருப்பது நல்லதல்ல என்று ஒரு ஆண்டு திறந்து, மறு ஆண்டு மூடி, அதற்கு மறு ஆண்டு திறக்கிற முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

[1975 அக்டோபர் 27

ஏற்கெனவே 50 மாணவர்கள், 40 மாணவர்கள் சேர்த்த இடத்தில் ஒவ்வொரு வகுப்பிலும் இப்போது 30 மாணவர்களைச் சேர்க்கிறோம். இந்த பயிற்சிப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கும் வேலை இழப்பு ஏற்படக் கூடாது என்பதற்காக முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். இந்த ஆசிரியர்களையெல்லாம் வேறு பல பள்ளிகளில் ஈர்த்துக் கொள்கிற முறையினை அரசு மேற்கொண்டிருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே,. அமைச்சரவர்கள் விடை சொல்லும்போது, தனியார் பயிற்சிப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறதென்று சொன்னார்கள். அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் தஞ்சை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றாகும். அது நீண்ட நெடு நாட்களாக இருந்த பள்ளியாகும். அதை உயர்நிலைப்பள்ளியாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உண்டாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, ஆசிரியர் பயிற்சி பெற்று, வேலை தேடித் தரும் ஸ்தாபனத்திலே தங்களுடைய பெயரைப் பதிவு செய்துகொள்கிற ஆசிரியர்கள் 30 வயது வரம்பைத் தாண்டிய காரணத்தால், அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதிலே சங்கடமிருக்கிறது. அதுவுமின்றி அரசு தேர்வு முறையிலே 30 வயதானவர்களுக்கு முதலிடம் கொடுக்காமல் 25 வயதானவர்களுக்கு முதலிடம் கொடுக்கிற காரணத்தினால், 30 வயதானவர்களுக்கு வேலை கிடைப்பதிலே சங்கடமிருக்கிறது. ஆகவே, வயதானவர்களுக்கு முன்னுரிமை கொடுத்தோ, அல்லது 30 வயதைத் தாண்டியவர்களுக்கு எக்சம்ஷன் கொடுத்தோ, அவர்களை வேலையிலமர்த்த, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, வயது வரம்பு வேலை வாய்ப்பைத் தடுக்காமலிருக்கிற அளவுக்கு வயது அதிகமானவர்களுக்கு முன் சலுகை தரவேண்டுமென்று



975 அக்டோபர் 27]

ஆலோசனை கூறியிருக்கிறோம். வயது பொதுவான அளவுக்கு சேர்த்துக்கொள்கிற சூழ் ரம்பு கடந்தவர்களைப் பள்ளிகளிலே விதிவிலக்கு லை ஏற்படுமானால், அப்படிப்பட்டவர்களுக்கு ரலாம் என்று அதிகாரிகளுக்கு நாம் தனியாகத் தெரிவித்திருக் றோம். அதோடு, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேர்வு பெற்ற ஆண்டையும் கணக்கில் வைத்து, 29 அல்லது 28 வயதிலே உள்ளவர்களுக்கு முதல் சலுகை தந்து, 23 வயதானவர்கள் சில ஆண்டுகள் பொறுத்து வேலைக்கு வரட்டும் என்ற முறையில் மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கும் கல்வித் துறை அதிகாரிகளுக்கும் ஆலோசனை கூறி இருக்கிறோம்.

திரு. அ. ஆறுமுகம்: தலைவரவர்களே, தனியார் பள்ளிகளில் நியமிக் ஆசிரியர்களை அவர்களுடைய விருப்பத்திற்கேற்ப கிறார்கள். அவர்கள் அரசாங்கத்தினுடைய அனுமதி பெற்று, அரசாங்கம் யாரை நியமிக்க வேண்டுமென்று சொல்கிறதோ, அவர்களை நியமிக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிக்கின்ற முழுப் பொறுப்பும் அவர்களைச் சார்ந்தது. அவர்களிடம், இன்னாரைத் தான் நியமிக்க வேண்டுமென்று அரசு தலையிட்டுச் சொல்ல முடியாது. ஆனால், அவர்கள் நியமிக்கின்றவர்களுக்குக் குறிப் பிட்ட தகுதி, திறமையிருக்கின்றனவா, சான்றுகள் இருக் கின்றனவா, என்று மேற்பார்வையிடவும் அதிலே குறைபாடு களிருந்தால் சுட்டிக்காட்டி, குறைபாடுகளை நீக்கவும் அரசுக்கு உரிமையிருக்கிறது. ஆனால், தனியார், தகுதி, திறமை பெற்ற வர்களை வேலையிலமர்த்த முழு உரிமை படைத்தவர்களாக இருக் கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் பல மூடப்பட்டுவிட்டதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அப்படி மூடிவிட்ட பள்ளிகளிலே, மேட்டூரிலே இருக்கிற ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று. அந்தப் பயிற்சிப் பள்ளி மூடப்பட்டிருந்ததிலிருந்து, அந்தப் பள்ளிக் கட்டிடமும், மாணவர் களுக்கு அறைகளாக இருந்த ஹாஸ்டலும் உபயோகமற்றுக்

கிடக்கிறதே, அவற்றை வேறு காரியங்களுக்கு உபயோகப் படுத்துகிற நடவடிக்கையை அரசு எடுக்குமா என அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அப்படிப்பட்ட பயிற்சிப் பள்ளிக் கூடங்கள் சிலவற்றை, நாம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளாகச் சில இடங்களிலே மாற்றி யிருக்கிறோம். மேட்டூரிலே இருக்கிற கட்டிடங்களைச் சிறந்த முறையில் பள்ளிக்குப் பயன்படுத்தலாம். அந்த ஊரிலே இருக்கிற உயர்நிலைப் பள்ளிக்கு வேண்டுமென்றாலும் பயன்படுத்தலாம், அல்லது அந்த ஊருக்கே இன்னொரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி அல்லது ஆண்கள் உயர்நிலைப் பள்ளி தேவைப்படுகிறதென்றால் அதற்கு அதனைப் பயன்படுத்துகிற முயற்சியிலே ஈடுபடலாம். அதுபற்றி தனியாக ஆராய்ந்து முடிவெடுக்கலாம்.

**திரு. சோ. கருணாநாதன்:** தலைவரவர்களே, தற்பொழுது நம்முடைய மாநிலத்தில் கல்வியின் தரத்தை உயர்த்தியிருக்கிற காரணத்தினால், ஏற்கெனவே ஆசிரியப் பயிற்சி பெற்றவர்களுக்கு மீண்டும் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறதா? அல்லது பயிற்சி அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஏற்கெனவே பயிற்சி பெற்றவர்களுக்கு மீண்டும் அளிக்கவேண்டு மென்ற அவசியமில்லை. ஆனால், அதோடு 'இன்-சர்வீஸ் டிரெய்னிங்' பணியிடைப் பயிற்சி என்ற முறையில் கணக்கியல், அறிவியல், மொழியியல் ஆகிய பாடத்திட்டங்களில் அவர் களுக்குப் பயிற்சி தருவதற்கான முயற்சி மேற்கொள்ளப் படுகிறது. பத்து, பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னால் பயிற்சி பெற்றவர்களுக்கு, அவர்களுக்குரிய பாடங்களில் மறு பயிற்சி அளிக்க, இரண்டு வாரம், ஒரு வாரம் கோடைக்கால பயிற்சி என்ற முறையில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**திரு. என். மருதாசலம்:** தலைவரவர்களே, இப்பொழுது நடைபெறும் பள்ளிகளிலே ஒவ்வொரு வகுப்பிலும் அறுபது, எழுபது குழந்தைகள் படிக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பிலும்



முப்பது குழந்தைகள் என்று வைத்தால், அதிகப்படியான வாத்தியார்களை நியமிக்கலாம் அல்லவா? ஆகவே அந்த மாதிரி உத்தரவிட அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இப்பொழுது நாம் வைத்திருக்கிற கணக்கைப் பார்க்கும்போது, ஒரு ஆசிரியருக்கு 35 மாணவ, மாணவிகள் என்ற விகிதம் இருக்கிறது. அதைக் குறைக்கலாம். ஆனால், நான் முதலிலே சொன்ன மாதிரி, நிதி வசதியைப் பொறுத்துத்தான் அதைச் செய்ய வேண்டும். நிதி வசதி ஏற்படுமானால், கூடுதலான ஆசிரியர்களை நியமிக்கலாம். கூடுதலான ஆசிரியர்களை நியமித் தால் 1 : 25 என்று ஆக்கலாம். நிதி வசதி கூடுதலாக இருந்தால், ஆசிரியர்களை அதிகமாக நியமிக்க வழியேற்படும். வரவு-செலவுத் திட்டத்தில் எவ்வளவு ஒதுக்கீடு செய்கிறோமோ அதைக்கொண்டு தான் ஆசிரியர்களை ஒதுக்கீடு செய்ய வேண்டியவர்களாக இருக் கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM: Since there is age exemption for Backward Communities up to 32 years for recruitment generally, will that exemption be extended to Tamil Pandits also in view of the fact that they had made serious representation requesting exemption up to 32 years?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி பயிற்சிப் பள்ளிகளில் சேர்ந்து தேறியிருக்கிற ஆசிரியர்களைப் பற்றியது. அதிலே, ஏஜ் எக்சம்ஷன் வந்தால், அதனை மற்றவற்றிற்கும் கேட்கக் கூடாது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, இன்னும் 12,000 பேர் ஆசிரியர் பயிற்சி பெற்று வேலையில்லாமலிருக்கிறார்கள் என்று கூறினார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்காத காரணத்தால், ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கானவர்கள் ஓவர்-ஏஜ் ஆகி, 30 வயதைத் தாண்டி, இன்னும் வேலை வாய்ப்பு கிடைக்காத நிலை அதிகமாகிறது. ஆகவே, இந்த நிலைமையைப் பார்த்து, அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிற முறையில் இதனைத் தனிப் பிரச்னையாக

[1975 அக்டோபர் 27

எடுத்து, இப்பொழுது ஆசிரியர் பயிற்சி பெற்று வேலையின்றி இருக்கிறவர்களுக்கு வேலையளிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான், ஏற்கனவே, இதற்குப் பதில் சொன்னேன். மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களுக்குப் பதில் கூறும்போது, வயதானவர்களுக்கு முதல் சலுகை தரவேண்டுமென்று கூறி இருக்கிறோம் என்று தெரிவித்தேன். எப்படியாவது, வயது வரம்பு மீறியவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்பட்டு அதனால் வயதானவர்களை நியமித்துக்கொள்ளலாமா என்று கேட்டுக் கொண்டால், அப்படிப்பட்டவர்களை வேலையில் அமர்த்திக்கொள்ள வழிவகை செய்யலாம் என்று கூறியிருக்கிறோம். அந்த வேலை வாய்ப்புகளை மேன்மேலும் உயர்த்திக்கொண்டு வரத்தான் முயற்சிகளை மேற்கொள்கிறோம். 9 ஆயிரத்துச் சில்லறை பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்கிக் கொண்டிருந்த நிலையிருந்ததை மாற்றி, 2,000, 2 ஆயிரத்துச் சில்லறை ஆசிரியர்களை உருவாக்குகிற நிலைமை வந்திருக்கிறது. அதோடு ஓர் ஆண்டு விட்டு ஓர் ஆண்டுதான் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதைக் கூட 2, 3 ஆண்டுகளுக்கு நிறுத்தலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 12,000-க்கு மேலிருப்பதால், ஓராண்டு விட்டு ஓராண்டு வகுப்பு நடத்துவதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஆண்கள் படித்துவிட்டால்கூட வேறு வேலையில் ஈடுபடலாம். பெண்கள் ஆசிரியர் பயிற்சி பெற்று ஊதியம் பெறலாம் என்று படித்து விடுவதனால் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, பெண்களுக்காவது ஆண்டுதோறும் ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஆண்டுதோறும் பயிற்சி தருவதன் மூலம் புதிதாக ஆசிரியர்களை உருவாக்குகிறோம் என்பது பொருள். ஏற்கனவே இருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்காத காரணத்தால் ஓர் ஆண்டு விட்டு ஓராண்டு வகுப்புகளை நடத்துகிறோம். வேறு சில



1975 அக்டோபர் 27]

மாநிலங்களில் பயிற்சியே தேவையில்லையென்று நிறுத்தியிருக்கிறார்கள். பக்கத்து மாநிலங்களில் 4 ஆண்டுக் காலத்திற்குப் பயிற்சியில்லை. இப்பொழுது இருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்புத் தந்துவிட்டு பிறகு பயிற்சி தரலாம் என்று 4 ஆண்டுக் காலத்திற்குத் தொடர்ந்து நிறுத்தியிருக்கிறார்கள்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு வேலை இழப்பு இல்லாமல் இருக்கத்தான் இந்த நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறோம். அதிலே சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்த வேண்டுமென்று கருதியிருக்கிறோம். பெண்களுக்கு அதிகமான வேலை வாய்ப்பை துவக்கப் பள்ளியில் தரவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் அறிவுரை கூறப்பட்டிருக்கிறது. அதிலும் விதவைகளாக இருப்பவர்கள், கணவனால் புறக்கணிக்கப் பட்டவர்கள், ஊனமுற்றவர்கள் ஆகியோருக்கு முதல் சலுகையளிக்க வேண்டுமென்ற கருத்துத்தான் கூறப்பட்டிருக்கிறது.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, 12,000 பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஏற்கனவே தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதோடு கூட, அவர்கள் வேறு வேலைக்குப் போக முடியவில்லை—அவர்கள் வேறு வேலை கிடைக்கும், கிடைக்கும் என்று கருதிக் கொண்டிருப்பதால்—தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, 5 ஆண்டுகளுக்கு அந்தப் பயிற்சிப் பள்ளிகளை மூடும் உத்தேசம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றி முதலிலேயே குறிப்பிட்டேன். அதுபற்றி யோசனை இருந்தாலும், அதிலே இருக்கிற ஆசிரியர்களுக்கு வேறு வழி செய்துவிட்டுத்தான் நாம் அப் பள்ளிகளை மூடவேண்டும்.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஆசிரியர் பயிற்சி பெற்ற 12,000 பேர்கள் வேலையில்லாமலிருப்பதாகவும் அந்தக் காரணத்தினாலே ஓராண்டு விட்டு ஓராண்டு பயிற்சிப் பள்ளிகளை நடத்துவதாகவும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதிலிருந்து திட்டமிட்ட முறையில் எங்கேயோ தவறு நிகழ்கிறது என்பது நமக்குத் தெரிகிறது. ஆகவே, இப்படிப்பட்ட மோசமான நிலைமை உருவானால் எதிர்காலம் பாழ்படும் என்ற வகையில், நிலைமைகளை ஆராய்ந்து திட்டமிட அமைச்சரவை முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : 10, 12 ஆண்டுக்கு முன்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அதிகம் தேவைப்பட்டார்கள். இப்பொழுது வேறு மாநிலங்களிலே ஒப்பிட்டால், அங்கெல்லாம், 45 சதவிகிதம், 55 சதவிகிதம், 65 சதவிகிதம், 75 சதவிகிதம் தான் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கிறார்கள் வட மாநிலங்களில். நம்முடைய மாநிலத்தில் 100 சதவிகிதம் ஆசிரியர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு அதிகமான அளவு பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு அவசியம் ஏற்பட்டது. அப்பொழுது பயிற்சி பெறுகின்ற மாணவர்களது எண்ணிக்கையை அதிகமாக்கிவிட்ட காரணத்தால், இப்பொழுது குறைவாகத் தேவைப்படுகிற பொழுது குறைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தேவையென்கிறபொழுது அதிகமாக்குவதும், குறைக்க வேண்டிய சூழ்நிலை என்கிறபோது, குறைப்பதும், எங்கும் ஏற்படுகிற சூழ்நிலைதான்.

(முற்பகல் 9.30)

**திரு. மு. சண்முகம்** : கல்வி அமைச்சர் அவர்களே, முதல் நிலை பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், தற்காலிகமாக நியமனம் செய்யப்படுகிறார்கள். அவர்கள் நீண்டகாலமாக தற்காலிகமாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு தற்காலிகமாக நியமிக்கப்படுகிறவர்கள் நிரந்தரமாக நியமனம் பெற ஒழுங்குமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படியென்றால் அதைப்பற்றி ஏதேனும் குறைகள் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றவர்கள் நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. நிலையான இடம் காலியாகும் வரையில் அவர்கள் தற்காலிகமாகத்தான் இருப்பார்கள். நிலையான இடம் காலியாகிறபோது தற்காலிகமாக பணியாற்றுகிறவர்கள் அந்த இடத்தில் நிரந்தரமாக நியமிக்கப்படுகிறார்கள் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள்ளாக. ஆகவே, அதற்கான விதிமுறைகள் இருக்கின்றன.



*Shops for distribution of food-grains.*

*73 Q.—THIRU K. M. SUBRAMANIAM AND THIRU GANESAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of shops run by the Tamil Nadu Civil Supplies Corporation in the Madras City; and

(b) the maximum number of ration cards attached to a shop?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : (அ) & (இ) சென்னை நகரில் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் 240 கடைகளைத் திறந்துள்ளது. ஒவ்வொரு கடைக்கும் 2,000 அட்டைகளுக்குள் ஒதுக்கப்பட்டுள்ளன.

THIRU K. M. SUBRAMANIAM: Does this Government consider that 2,000 cards per shop is very high and it is very difficult to be handled and a big queue is standing always before these shops? Can they think of extending the number of shops further?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : ஏற்கனவே இதைவிட அதிகமாக இருந்தது. இப்போது நாம் திட்டமிட்டு கொஞ்சம் குறைத்திருக்கிறோம். இதிலே நிர்வாகச் செலவு பிரச்னையாக இருக்கிறது. பொது மக்களுக்கு ரேஷன் பெறுவதில் கஷ்டங்கள் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போன்று இருக்கத்தான் செய்கின்றன.

**திரு. ஆ. பரந்தாமன்** : சென்னை நகரத்திலே உள்ளவர்களில் சிலர் அதிகாரிகள் வருகிறபோது சரியான தகவல் கொடுக்க முடியாதபடி—அவர்கள் ஊரில் இல்லாத காரணத்தினாலேயோ அல்லது வேறு காரணத்தினாலேயோ—இருந்த காரணத்தால் அவர்களுக்கு எல்லாம் நியாயமான முறையில் கார்டுகள் கிடைக்கவில்லை. இதிலே அதிகப்படியாக காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு எல்லாம் விரைவிலே கார்டுகள் கிடைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இந்தப் பிரச்னை இப்போது இருப்பதாகத் தெரியவில்லை. நாம் சென்சஸ் போட்டு இந்தப் பிரச்னையெல்லாம் தீர்த்து இருக்கிறோம். ஒன்றிரண்டு அப்படி இருக்குமானால் அதைப்பற்றித் தகவல் கொடுத்தால் பரிசீலனை செய்யலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த சிவில் சப்ளைஸ் கடைகளைப் பொறுத்தவரையில் அங்கே ஊழியர்களை நியமிக்கும் போது எம்ப்ளாயிமெண்ட் எக்சேஞ்ச் மூலமாக நியமிக்கப் படவில்லை என்று தெரிகிறது, என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேண்டாம், அது இதிலே வராது. அட்டைகள் பற்றி தான் கேள்வி.

திரு. கு. காமாட்சி: இப்போது ஒரு கடைக்கு 2,500 கார்டுகள் என்று இருப்பதால் பெரிய நீண்ட க்யூக்கள் இருக்கின்றன. 2,500 என்று இருப்பதை ஐந்தாகப் பிரித்து ஒரு நாளைக்கு இத்தனை கார்டுகளுக்கு வழங்கலாம் என்று உத்திரவு போட்டால் பிரச்னையை எளிதாக்கலாம் என்பதால் அரசு அதுபற்றி ஆலோசிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அது பொது மக்களுக்கு இடையூறாக இருக்கும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே இருக்கிறவர்கள் வேலைக்குப் போவதற்கு வெகு நேரத்திலேயே கிளம்ப வேண்டியிருக்கிறது அவர்களுக்குப் பல்வேறு தொல்லைகள் இருக்கின்றன, 2,500 கார்டுகள் என்பதை குறைவாக வைக்க அரசு முன்வருமா? இப்படி அதிகமாக இருப்பதால் அவர்கள் கடைகளுக்குச் சென்று சாமான்கள் வாங்க முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, அந்த எண்ணிக்கையைக் குறைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிப்பட்ட நிலை சென்னையிலே இல்லை.

திரு. என். கே. பழனிசாமி: இப்போது சமயத்திலே அறுவடை ஏற்பட்டதாலும் தானிய வரத்து இருப்பதாலும் ரேஷனில் போடக்கூடிய அளவை அதிகப்படுத்துவதற்கு உத்தேசமிருக்கிறதா? போகஸ் கார்டுகளைப் பிடிப்பதற்கு ஸ்லோ ஸ்டெப்ஸ் எடுக்கப்படுகின்றன, அதை வேகமாக எடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: போகஸ் கார்டுகளை வைத்து தவறு செய்தவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுத்ததை மக்கள் பாராட்டுகிறார்கள்.



திரு. கே. டி. கே. தங்கமணி: போகஸ் கார்டுகளைப் பயன்படுத்தக்கூடிய வகையிலே 240 கடைகளிலே ஒவ்வொரு கடையிலும் எத்தனை போகஸ் கார்டுகள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன என்று கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா? அவை பயன்படுத்தப்பட்டிருக்கிறதா? அல்லது பயன்படுத்தப் படாமல் வைத்திருக்கப்பட்டதா? இதையெல்லாம் செக் அப் செய்திருக்கிறார்களா? அப்படி செக் அப் செய்தால் பயன்படுத்தப் படாமல் இருக்கிற கார்டுகளையெல்லாம் வேறு இடங்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்வது பற்றி அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: போகஸ் கார்டு என்று சொல்கிறபோதே பயன்படுத்தியிருக்கிறார்கள் என்ற நிலைமை தான். ஒவ்வொரு கடையிலும் மொத்தம் இரண்டாயிரத்து சொச்சம் கார்டுகள் என்று இருக்கின்றன. போகஸ் கார்டுகள் ஆள் இல்லாமல் வாங்குவது என்ற முறையிலும் இரண்டு தவணை வாங்குவது என்ற முறையிலும் இருக்கின்றன. சில வியாபாரிகள் ஆர்கனைஸ்டாகச் செய்கிறார்கள். பலபேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சில பேர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

* 74 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the average number of family cards allotted to the distributing agencies in Kanyakumari district; and

(b) the number of the Co-operative Societies among the distributing agencies?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) 929.

(இ) 354.

திரு. என். டென்னிஸ்: சராசரி கணக்கு இவ்விதமாக இருந்தாலும் சில இடங்களிலே 2,500 வரை இருக்கிறது. அதனால் வீடுகள் பரவலாக இருப்பதால் மூன்று, நான்கு மைல் தூரம் கடந்து சென்று வாங்க வேண்டியிருக்கிறது. விநியோகம் சரியாக இல்லை. இதைத்தவிர ஒரு சொசைடியின்கீழ் சப் டிப்போக்கள் இருக்கின்றன. மார்க்கெட்டிங் சொசைடியின்கீழ் 50 கடைகள் வழங்கி வருகின்றன. அப்படி இருப்பதால் ஒரு மொனொபோலியாக நடக்கிறது. டிஸ்ட்ரிப்யூஷன் ஒழுங்காக இல்லை. இந்த

சொசைடியைத் தவிர பிஷர்மேன் சொசைடி, பாம். ஆர். சொசைடி இவைகள் இருக்கின்றன, அவைகளுக்கு அதிகாரங்கள் கொடுத்து ஆவன செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கிராமங்களைப் பொறுத்த அளவிலே பல கிராமங்கள் கூட்டுறவு சங்கங்களோடு இணைக்கப்பட்டிருக்கின்றன என்ற பிரச்னையைச் சொல்கிறார்கள், அது நியாயமான பிரச்னைதான். மார்க்கெட்டிங் சொசைடி அல்லது கிரடிட் சொசைடி இவைகளைத் தவிர வேறு சொசைடி அந்தக் கிராமத்திலே இருக்குமானால், அந்த சொசைடியோடு அந்த கிராமத்திலே உள்ள கார்டுகளை இணைக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்தால் அதைப்பற்றிக் கவனிக்கலாம்.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** ரேஷன் இருக்கிற பகுதிகள் மட்டுமல்ல, ஏனைய பகுதிகளிலும் கார்டுகள் வழங்கப்படுகின்றன. அந்தக் கார்டுகள் எல்லாம் வழங்கப்பட்டு நீண்ட நாளாகிறது. ஆகவே, பழுதடைந்து இருக்கின்றன, அதற்கு மாற்றுக் கார்டுகள் வழங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கிழிந்த கார்டை மனுவோடு வைத்து அதிகாரிகளிடத்திலே கொடுத்தால் அவர்கள் கொடுப்பார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்தக் கார்டுகளை பல்வேறு சங்கங்களுக்கு ஒதுக்கி, ஒவ்வொரு கிராமத்திற்கும் தக்கபடி விநியோகம் செய்யலாம் என்று கொள்கையளவில் இந்த அரசாங்கம் சில ஆண்டுகளாகவே ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் அது நடைமுறையில் வரவில்லை. இனிமேலாவது காலதாமதமின்றி ஒவ்வொரு கிராமத்திலேயும் இருக்கின்ற கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அந்தந்த கிராமத்திற்கு விநியோகிக்கின்ற உரிமையை வழங்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போது ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்திற்கும் அப்படி உரிமை வழங்கப்படுகிறது. டென்னில் அவர்கள் கேட்டது மார்க்கெட்டிங் சொசைடி, கிரடிட் சொசைடி இவைகளுக்குத்தான் கொடுக்கிறார்கள், வேறு சொசைடிகளுக்குக் கொடுக்கலாமல்லவா என்று கேட்டார்கள். அது நல்ல யோசனை, அரசாங்கம் பரிசீலிக்கும்.





**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பெல்ட் ஏரியா என்று சொல்லி ஒரு சில விநியோகங்கள் நடைபெற்று வருகின்றன. திரு. டென்னில் கூறியதுமாதிரி மொனொபொலியாக ஒரு சொசைடியில் 10, 12 கடைகள் என்ற முறையில் இருக்கின்றன. அதையெல்லாம் மாற்றுவதோடு இப்போது நிலைமை சீரடைந்து இருப்பதால், அளவை ஓரளவு அதிகமாக்கிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தை மாதம்தான் உணவு நிலைமை பற்றி முழுவதும் நாம் நம்பிக்கை தெரிவிக்க முடியும்.

### உணவுப்பொருள்களுக்குப் போக்குவரத்து ஏற்பாடு

***வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உணவு தானியப் போக்குவரத்திற்கு ரயில்வே வாகன் பற்றாக்குறையை மத்திய அரசின் கவனத்திற்கு மாநில அரசு கொண்டுவந்ததா?

(இ) ஆமெனில், மத்திய அரசு அளித்துள்ள பதில் பற்றிய விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) வாகன்கள் கிடைக்காதது குறித்து முறையீடுகள் வரும்போதெல்லாம் அவற்றை நாம் இந்திய அரசின் நாட்டத்திற்கு கொண்டு வருகிறோம்.

**திரு. என். கிட்டப்பா:** நம்முடைய தமிழகத்திலே குறிப்பாக உணவுதானியங்கள் ஒரு இடத்திலிருந்து தேவையான மற்ற இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு ரயில்வே போக்குவரத்தை நம்பிக்கொண்டிருக்கிறோம், அப்படியில்லாமல் லாரிகள் மூலமாக எல்லாப் போக்குவரத்தையும் செய்யக்கூடிய முறையில் ஏற்பாடு செய்வதன் மூலமாக இதை ஒரு பாலிசியாகவே உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போதே லாரிகள்தான் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

[1975 அக்டோபர் 27

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்திலே நெல் கொள்முதல் தாமதமாக இருக்கிறதாக விவசாயிகளிடமிருந்து தகவல் வந்திருக்கிறது, காரணம் மழை. ஆகவே, அரசாங்கம் துரித நடவடிக்கை எடுத்து கொள்முதலை வேகமாகச் செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த ஆண்டு ஏராளமான கடைகள் திறந்து நாமே லாரிகளில் கொண்டுவர ஏற்பாடு செய்கிறோம். ஆனால் துர்பாக்கியவசமாக தொடர்ந்து மழை பெய்வதால் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. உடனடியாக அவற்றைக் கொண்டுவர வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ரெயில்வேயில் எடுத்துப் போகாது, லாரிகளில் எடுத்துப் போவதற்குக் காரணம் ரெயில்வேக்களைப் பயன்படுத்தக்கூடாது என்ற கொள்கையை இந்த அரசு கடைப்பிடித்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ரெயில் வசதி குறைவானதால் லாரிகள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. எங்கெங்கு ரெயில் வசதி இருக்கிறதோ அங்கெல்லாம் அதைப் பயன்படுத்தலாம்.

**திரு. என். இட்டப்பா :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது ரெயில் வசதி இல்லாத இடங்களில் லாரிகள் பயன்படுத்தப்படுவதாகச் சொன்னார்கள். அண்மையில் லாரிகளில் கொண்டு செல்லக்கூடாது, ரெயில்கள் மூலமாகத்தான் கொண்டு செல்ல வேண்டுமென்று மத்திய அரசிடம் இருந்து தாக்கீது வந்திருப்பதாகக் கூறப்படுகிறதே, அதுபற்றி அரசு ஏதேனும் அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ரெயில் மூலமாகவும் கொண்டு செல்லலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 500 லாரிகள் பயன்படுத்தப்பட்டும் வருகின்றன.



1975 அக்டோபர் 27]

*Performance of Small Industries.*

* 76 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(a) whether the Government was represented at the conference of the Ministers of the States convened by the Union Minister for Industries and Civil Supplies at New Delhi from 6th November 1974 to review the performance of the Small Scale Industries; and

(b) if so, the decisions taken at the conference?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: (a) & (b) A statement @ is laid on the Tablle of the House.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவர் அவர்களே, மனுநீதி திட்டத்தின்கீழ் கோரிக்கைகளைப் பெறுகிறபோது மின்சாரம் ஒன்று பற்றித் தான் உடனடியாகச் செய்யப்படுகிறது. இன்னும் பிக் ஐயர்ன், டெக்னிகல் நோ ஹவ், மார்க்கெட்டிங் போன்றவைகளை ஆர்கனைஸ்டு லேபர் என்று இல்லாது ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரியில் கோடிக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்வதால் என்ன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் கொடுத்திருக்கிற பதில் 6—11—1974 இல் டெல்லியில் நடைபெற்ற முடிவுகள் பற்றி. இந்த ஆண்டு நடைபெற்ற மகாநாட்டில் உறுப்பினர் சொன்ன மார்க்கெட்டிங் பெஸிலிடீஸ் பற்றியும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள், அதுபற்றி நடவடிக்கை எடுக்கப் படுகிறது. ரா மெட்டீரியல்ஸ் பற்றி—நிலக்கரிபற்றி பிரச்சினை அதிகமாக இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. பரந்தாமன் :** 1974 ஆம் ஆண்டில் சிறுதொழில் மகாநாட்டில் முன்னாள் தொழில் அமைச்சர் கலந்துகொண்டதாகத் தெரிகிறது. அந்த மகாநாட்டில் 2 லட்சத்திற்குக் குறைவாக முதலீடு செய்யப்படுகின்ற சிறு தொழில்களுக்கு டைனி யூனிட்ஸ் களுக்கு விசேஷ சலுகை தருவதாக முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. என்னென்ன விசேஷ சலுகைகளைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை முன்னாள் தொழிலமைச்சராவது அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இரண்டு லட்சம் ரூபாய் முதலீட்டிற்குக் குறைவான சிறுதொழில்களுக்குத் தனிச் சலுகை அளிக்கப்பட வேண்டும் என்பது ஒரு சிபார்சு, It is a recommendation by the Board to the Government. அதுபற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

---

@ 650–652-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.

[1975 அக்டோபர் 27

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** I am rising on a point of order. இந்தக் கேள்விக்கு விவர அறிக்கை வைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என் மேசையில் அது இல்லை. என் அருகில் உள்ளவர் மேசையிலும் அது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பெரிய அறிக்கையாக இருந்தால் முன்கூட்டியே அவரவர்கள் இருப்பிடத்திற்கு அனுப்பப் படவேண்டும் என்று சொன்னதனால் நேற்றே அது அனுப்பப் பட்டிருக்கிறது. இதற்கு ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரா ?

**திரு. நா. வீராசாமி :** கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் நாடு பூராவும் சிறிய தொழில் பிரிவுகளைப் பதிவு செய்வதில் ஒரே சீரான நடைமுறை இருக்கவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அத்தகைய சீரான நடைமுறை பின்பற்றப் பட்டிருக்கிறதா ? சிறு தொழில்களுக்கு இயந்திர தளவாடங் களுக்காக 10 லட்சம் வரை ஒதுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக் கிறது. ஆனால், நாட்டில் ரிசர்வ் பாங்கு 7.5 லட்சம் வரைதான் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரிக்கு கொடுக்கப்படும் என்று சொல் கிறது. பத்து லட்சம் கொடுப்பதில்லை. ரிசர்வ் பாங்கோடு கலந்து பேசி 10 லட்சம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நாடு பூராவும் ஒரே கொள்கை பின்பற்றப்பட வேண்டும் என்பதைப்பற்றி
The Chairman of the Small-scale Industries Board felt that procedure for the registration and de-registration of small scale units should be uniform all over the country. The Government of India notified the revised procedure for registration and de-registration of small scale industries. Our Director of Industries and Commerce is following the same procedure to register and de-register Small Scale Industries. The Director of Industries and Commerce has been requested to take action on the lines indicated by the Government of India.

The Small Scale Industries Board has recommended that a small scale industry is one where the investment in plant and machinery is not exceeding 10 lakhs.

பத்து லட்சம்வரை சிறு தொழில்கள் என்ற கருத்துத்தான் தெரியப் படுத்தப்பட்டிருக்கிறது. இது சிபார்சு. மத்திய சர்க்கார் ஒப்புக் கொண்டால்தான் அதை அமலுக்குக் கொண்டுவர முடியும். இது மத்திய சர்க்கார் முடிவு செய்ய வேண்டிய விஷயம்.



1975 அக்டோபர் 27]

### கல்கரி, நிலக்கரி ஒதுக்கீடு

*77 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், தொழிற்சாலைகள் உபயோகத்திற்கான கல்கரி, நிலக்கரி ஆகியவைகள் பங்கு வீதத்தில் (Quota System) ஒதுக்கப்படுகின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) தமிழ்நாட்டில் சிறுதொழில் பிரிவுகளுக்குச் சட்டப்படிக்கான பங்களவு முறையின் கீழ் கல்கரியும், வணிகர்களிடமிருந்து ஒரு வாகனுக்குக் குறைவாக நிலக்கரி தேவைப்படுவோருக்கு மட்டும் தனி அடிப்படையிலான பங்களவு முறையின் கீழ் நிலக்கரியும் வழங்கப்படுகின்றன. இவ்விரு முறைகளும் தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ளன.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுத் தொழிற்சாலைக்கு உபயோகப்படுகிற கல்கரியும், நிலக்கரியும் தொழிற்சாலைகளுக்கு இன்ன இன்ன விகிதாசாரப்படி ஒதுக்குகிற முறையை மத்திய அரசு மேற்கொள்ளுகிறதா ? அல்லது நமது மாநில அரசே அத்தகைய அதிகாரத்தைப்பெற்று எந்த எந்த தொழிற்சாலைக்கு எவ்வளவு விகிதாசாரம் என்பதை முடிவு செய்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தக் கட்டுப் பாட்டைப் பொறுத்தவரையில்—ஸ்டாசுடரி கண்டிரோல், நான்-ஸ்டாச்சுடரி கண்டிரோல் என்று இரண்டு. Statutory control for the distribution of coke. என்ற வகையில் இருக்கிறது. இதுபற்றி மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு ஒதுக்கி யிருக்கிறது. அதை மாநில சர்க்கார் விநியோகம் செய்கிறது. ஸ்லம் கோல், லாப் கோல், சாப்டு கோல் ஆகியவற்றுக்கு கட்டுப்பாடு இல்லை.

### *Drinking water, electricity supply in slum areas*

* 78 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the slums in Madras City are provided with drinking water and electricity facilities; and

(*b*) if so, the details thereof?

The Hon. Thiru Mannai P. NARAYANASAMY :

(*a*) & (*b*) : A statement @ is placed on the table of the House.

**திரு. என். கே. பழனிசாமி :** இன்னும் பல சேரிகளில் மின்சார வசதியும், தண்ணீர் வசதியும் இல்லாமல் இருக்கிறது. இதற்குத் திட்டமிட்டு வருஷாவருஷம் இவ்வளவு என்ற அடிப்படையிலாவது இவற்றை வழங்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** குடிசைமாற்று வாரியத்தின் மூலம் எல்லாப் பகுதிகளிலும் இது திட்டமிட்டு செய்யப்பட்டு வருகின்றது. எந்தெந்த இடத்தில் குறை இருக்கிறது என்று சொன்னால் உடனடியாக நிவர்த்திக்கப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** என்னுடைய தொகுதி டொம்மிக் குப்பத்தில் குடிசைமாற்று வாரியத்தினால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளுக்கே மின்சார வசதி அளிக்கப்படவில்லை. குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்கப்படவில்லை. மின்சார ஒயர்கள் இழுக்கப் பட்டும், மின்வாரியம் மின்வசதி கொடுக்காததற்குக் காரணம் அவர்கள் 10 வருஷ காரண்டி கேட்கிறார்கள் என்கிறார்கள். இதை உடனடியாகக் கவனித்து அந்த வீடுகளுக்கு மின்வசதி, தண்ணீர் வசதி அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

**திரு. நா. வீராச்சாமி :** தலைவர் அவர்களே, இங்கு கொடுக்கப் பட்டிருக்கிற 96 திட்டங்களில் நான்கு திட்டங்களுக்கு இன்னும் தெருவிளக்கு, வீட்டு மின்சார விளக்கு வசதி கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்களுக்கு இருக்கிற கவலை யெல்லாம் இந்தத் திட்டத்தையே டாக்டர் கலைஞர்தான் தீட்டினார் அவர் பெயரால் அமைந்திருக்கிற கலைஞர் கருணாநிதி நகருக்கு தெருவிளக்குப் போடவில்லை என்றால் அப்படிப் போடாததற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தெருவிளக்குகள் போடுவதற்கு வேண்டிய உபகரணங்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால்தான் அந்த வேலைகள் முடியாமல் இருக்கின்றன.

---

@ 653–679-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பட்டுள்ளது.





**டிராக்டர்கள் வாங்கக் கடன் வசதி**

*19 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நில்வள வங்கிகள் மூலமாக டிராக்டர்கள் வாங்க விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்கென 1974-75-க்கு ஒதுக்கப் பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(இ) எத்தனை பேர்களுக்கு டிராக்டர்கள் வாங்க கடன் அளிக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) 1974-75-ம் ஆண்டுக்கு ரூ. 229.59 லட்சம்.

(இ) 1974-75-ம் ஆண்டில் 540 விவசாயிகள்.

**திரு. கே. எ. வகாப் :** விவசாயிகள் தங்களுடைய விவசாயத் தேவைக்கு சில குறிப்பிட்ட டிராக்டர்களையே—பெர்கூசான் போன்றவற்றையே கேட்கிற காரணத்தினால் அரசாங்கமே அவர்கள் விரும்புகிற டிராக்டரை வாங்கிக்கொடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** இந்த ஆண்டு 'ஐடா' வில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. எந்தெந்த இடங் களில், எந்தெந்த் கம்பெனி எந்தெந்த டிராக்டர்களைச் சப்ளை செய்ய முடியும் என்கிற விவரங்கள் பெறப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் எந்தெந்த டிராக்டர்கள் எந்தெந்தப் பகுதிக்குத் தேவை என்று கோருகிறார்களோ, அது பரிசீலிக்கப்பட்டு தேவையானவற்றை அங் கங்கே கொடுப்பார்கள்.

**திரு. கு. இராசமாணிக்கம் :** தலைவரவர்களே, நில்வள வங்கிகள் மூலமாகத் தனிப்பட்ட முறையிலே டிராக்டர்கள் வாங்கியவர்கள் வாடகைக்கு விடும்பொழுது அதிகப்படியான வாடகையை வசூலிக் கிறார்கள். இவ்வளவுதான் ஒரு ஏக்கருக்கு வாடகை வசூலிக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, அதற்கு வேறு கேள்வி போடவும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், இப்படி லேண்ட் டெவலெப் மெண்ட் மூலமாக டிராக்டர்கள் வாங்குவதற்குக் கடன் கொடுக்கும் பொழுது விவசாயிகள் எந்த டிராக்டரை வாங்க வேண்டுமென்று

கேட்கிறார்களோ அந்த டிராக்டரை வாங்குவதற்கு அனுமதி தரு கிறார்களா? அல்லது டெவலப்மெண்ட் பேங்க் இதைத்தான் வாங்க வேண்டுமென்று சொல்கிறதா?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இதைத்தான் வாங்க வேண்டுமென்று சொல்லவில்லை, விவசாயிகள் எதைக் கேட்கிறார்களோ அதைத் தருகிறார்கள்.

**திரு. மு. சண்முகம்:** தலைவரவர்களே, விவசாயிகளுக்கு டிராக்டர்கள் கடன் மூலமாக வழங்க அனுமதிக்கப்பட்டு, உலக வங்கி வெளிநாடுகளில் 1,500 டிராக்டர்களுக்கு மேல் தமிழ் நாட்டிற்கு வழங்க இருந்தது முழுவதும் அனுமதிக்கப்பட்டு, வழங்கப்பட்டுவிட்டதா?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, அதைப்பற்றி பேசியாகிவிட்டது. 1,500 டிராக்டர்கள் வரை யிலும் இந்த ஆண்டுக்கு—1975-76-ஆம் ஆண்டுக்கு—கொடுக்கப் படுவதாகப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றது. அநேகமாக இந்த மாத இறுதிக்குள் ஒப்பந்தமாகிவிடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

### சங்கராபுரம் ஒன்றியம் பள்ளிக் கட்டடங்கள்

* 80 வினா—திரு. ந. நாச்சியப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மண லூர், மேல் சிறுவளூர் ஊர்களில் பள்ளிகளுக்குச் கட்டடம் கட்டும் பணி இன்னும் பூர்த்தியாகவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) மணலூரில் பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. மேல் சிறுவளூரில் 31—3—1976-க்குள் பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) சிமெண்ட் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தடங்கலே மேல் சிறுவளூரில் பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்க தாமதத்திற்குக் காரணம்.



### *Bridge across river Vasista*

* 81 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any causeway across the River Vasista has been taken up for execution by the Attur Municipality during the calender years 1971 and 1972; and

(*b*) if so, the amount of loans given by the Government for the scheme?

THE HON. THIRU S. RAMACHANDRAN: (*a*) The Attur Municipal Council had a proposal for the construction of causeway bridge across River Vasista connecting Pudupet S.C. Road and Mullaivadi Perumal Naidu Street at an estimated cost of Rs. 2.00 lakhs. The estimate was sent to the Superintending Engineer (Highways and Rural Works), Coimbatore in March 1972. The Superintending Engineer (Highways and Rural Works), Coimbatore did not approve the estimate for the reason that the site is suitable only for the construction of high-level bridge and not causeway. Hence the work could not be taken up for execution.

(*b*) The Municipal Council had obtained a loan of Rs. 80,000 from Government during 1972-73. Since the Municipal Council could not take up the work for execution, the entire loan amount obtained from Government was remitted to the State Funds.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister whether the high-level bridge would be constructed in the interests of the local people so as to meet their traffic needs?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, the approximate estimate of the high-level bridge works out to Rs. 10 lakhs. It is for the Municipal Council to take a decision on this.

## கன்னியாகுமரி தேவசம் குழு [1975 அக்டோபர் 27

* 82 வினா—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்ட தேவசம் போர்டை மாற்றி யமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (மூன்றாவது திருத்தம்) சட்டம் செயலுக்கு வந்ததையொட்டி, கன்னியாகுமரி தேவசம் குழுவை மாற்றி அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏது மில்லை. ஆனால் மேற்சொன்ன திருத்தச் சட்டத்தின் விதித்துறை களின் கீழ் அறங்காவலர் குழுவை அமைப்பதற்கான விண்ணப் பங்கள் கேட்கப்பட்டு, அறங்காவலர்கள் ஆணையால் நியமிக்கப் பட்டுள்ளனர்.

திரு. வீ. கே. இராஜாப் பிள்ளை : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவிதாங்கூர்-கொச்சி சட்டத்தின்படி 'அட்டான மஸ் பாடி' என்ற முறையில் சுயாட்சி அதிகாரத்தோடு இருந்த தேவசம் போர்டை மாற்றியமைத்து, இப்பொழுது குறைந்த அதிகாரத்தோடு குழு மாவட்டம் முழுவதும் அமைக்கப்பட்டிருக் கிறது. அப்படியானால் ஏன் கன்னியாகுமரி மாவட்டத்தில், பல யிடங்களிலும் ஒவ்வொரு கோயிலுக்கும் இருப்பதைப்போல, இங்கும் ஒவ்வொரு கோயிலுக்கும் தனிக்குழு அமைக்காததன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இது அதிகாரம் குறைந்தது என்று சொல்ல முடியாது. ஏற்கனவே இருந்த தேவசம் குழுவில், குழு உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமை ஒரு காரணம். இரண்டாவது காரணம், நிர்வாகம் அந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்படாத காரணத்தால், ஏற்கனவே இருக்கின்ற இந்து சமய அறநிலையச் சட்டத்தினால் பல கோயில்களிலேயும் சிறந்த முறையில் நிர்வாகத்தை நடத்திக் கொண்டு வருவதால் கன்னியாகுமரி மாவட்டத்தில் தனிப்பட்ட அப்படியொரு சட்டம் தேவையில்லை என்று கருதி, மாநிலத்தின்



1975 அக்டோபர் 27]

மற்றப் பகுதிகளுக்கு உள்ள அந்தச் சட்டத்தையே கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் நீடித்திருக்கிறோமே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இப்பொழுது புதிதாக ஒரு கமிட்டி அமைந்திருப்பதாக அறிகிறேன். அதிலே யார்யாரெல்லாம் அங்கம் வகிக்கிறார்கள். அதிலே யார் சேர் மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் ? அதுமட்டுமின்றி, இந்த போர்டிலே முன்னாலே பணியாற்றி வந்த ஊழியர்களை அரசாங்க உத்தியோகஸ்தர்களாக எண்ணப்படுமா ? ஏனென்றால், நீண்டகால மாக அந்த இலாக்காவிலே அவர்கள் பணியாற்றி வந்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு வேறு இலாக்காக்களிலே மாற்றம் ஏற்படுத்த முடியாது. ஆகவே, இதைப் பரிவோடு கவனிக்க இந்த அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, யார் யார் என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. தலைவரைத் தேர்ந்தெடுக்க, ஐந்துபேர் கொண்ட குழு தேர்தலை நடத்தித் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த அறங்காவலர் குழுத் தலைவர் தேர்தல் இன்னும் நடைபெறவில்லை என்று கருதுகிறேன். ஊழியர்களைப் பொறுத்த வரையில் மற்றக் கோயில்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு என்னென்ன சலுகைகள், சம்பள விகிதங்கள் வழங்கப்பட்டு வரு கிறதோ அதே சம்பள விகிதங்கள் எதிர்காலத்தில், கன்னியாகுமரி தேவசம் குழுவில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் வழங்கப்படு வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, புதிய சட்டத்தை நிறை வேற்றியபொழுது அங்கே ஏற்கனவே தேவசம் போர்டில் பணி யாற்றிக் கொண்டிருந்த ஊழியர்கள் பாதிக்கப்படாத முறையில் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று அன்றைக்கு அமைச்சரவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். அந்த அடிப்படையில் இன்னும் பாது காக்கப்படக் கூடிய அளவிலே அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்கள் எந்த வகையிலேயும் பாதிக்கப் படாத வகையிலே அரசாங்கம் பாதுகாக்கும்.

*[1975 அக்டோபர் 27*

## *Television Training in Film Institute*

*83 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to introduce Television Training at the Film Institute at Adyar in Madras City; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) ஆம்.

(இ) இதுபற்றிய விவரங்கள் ஆய்வில் உள்ளன.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், டெலிவிஷன் வந்த பிறகும் இதுமாதிரி பயிற்சி கொடுப்பதற்கு பரிசிலிப்பதற்கு என்ன காரணம்? இன்னும் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்வதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, திரைப்பட இயல் நிறுவன வளர்ச்சிக்காக டெலிவிஷன் பாட முறை தொடங்குவதுபற்றி திட்டத்திலே நாம் ஏற்கனவே சேர்த்திருக்கிறோம். அதற்கு கல்வித்துறை ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதைப்பற்றி முடிவு செய்ய முதலமைச்சர் தலைமையிலுள்ள ஆலோசனைக் குழு முடிவெடுக்கவேண்டும். 11—10—1972 ஆம் நாளன்று நடந்த ஆலோசனைக் குழுவில், இந்தப் பாடத் திட்டத்தைத் தொடங்கலாமா என்பதுபற்றி ஆராய்ந்து முடிவெடுக்காமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. விரைவில் அந்தக் குழு கூடி இந்தப் பாடத்திட்டத்தைத் தொடங்குவதுபற்றி முடிவெடுக்கும்.

**திரு. எம். தேவராசன்:** தலைவரவர்களே, தொலைக்காட்சி சம்பந்தமான பயிற்சி வகுப்பு எப்பொழுது தொடங்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல சென்னையில் டெலிவிஷன் நிலையம் தற்பொழுது செயல்பட ஆரம்பித்துள்ளது. 1972 ஆம் ஆண்டில்தான் இந்தப் பாடத் திட்டம் சம்பந்தமாக ஏற்கனவே யோசிக்கப்பட்டு, டெலிவிஷன் எப்பொழுது சென்னைக்கு வரும் என்ற உறுதியான நிலைமை இல்லாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் இப்பொழுது டெலிவிஷன் நிலையம் சென்னையில் செயல்பட ஆரம்பித்திருப்பதால் வெகு சீக்கிரத்திலேயே



*1975 அக்டோபர் 27]*

ஆலோசனைக் குழுவில் அதைப்பற்றி முடிவெடுத்து திரைப்பட பிரிவுகளில் இந்த டெலிவிஷன் சம்பந்தமான பட்டப்படிப்பைத் தொடங்க ஒரு முடிவை மேற்கொள்ள வேண்டிய நிலைமையிலிருக்கிறோம்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவரவர்களே, திரைப்படக் கல்லூரியில் போதுமான மாணவர்கள் கலந்துகொள்ளவில்லை, சேரவில்லை என்ற குறைபாடு இருக்கிறதே, அது உண்மையா? அப்படியானால் அதை நிவர்த்திக்க அரசு ஏதாவது நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், இந்த பட ரேடியோக்கள் சம்பந்தமாகப் பயிற்சி கொடுப்பதற்கு முன்னாலே, பட ரேடியோக்கள் சென்னையிலே அதிகமாக வாங்கப்பட வேண்டுமென்பதற்காக அதன் விலைகளைக் குறைப்பதற்கு அரசு ஏதேனும் சிபார்சு செய்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, மத்திய அரசுதான் அதற்குக் கருணை காட்ட வேண்டும்.

## அரிசனங்களுக்கு வீடுகள்

*84 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் அரிசன வீட்டு வசதி வளர்ச்சி கழகத்தால் அரிசனங்களுக்கு 1974-75 ஆம் ஆண்டுக்கான திட்டத்தில் எத்தனை கிராமங்களில் வீடு கட்டும் திட்டம் உள்ளது?

(இ) அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** (அ) முதல் கட்டத்தில் 23 கிராமங்களும் இரண்டாவது கட்டத்தில் 22 கிராமங்களும் வீடுகள் கட்டுவதற்கு அரிசன வீட்டுவசதி மேம்பாட்டு கழகத்தால் திருநெல்வேலி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

(இ) முதல் கட்டத்தில் ரூ. 28 லட்சங்களும் இரண்டாவது கட்டத்தில் ரூ. 24 லட்சங்களும் செலவாகுமென உத்தேசமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-00)

**திரு. மு. முத்தையா :** அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிற எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுகிறது. அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய அரிசனங்களுடைய ஜனத்தொகை அடிப்படையில் வீடு கட்டிக் கொடுப்பது நிர்ணயம் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** அந்த எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டுத்தான் திரும். ஒவ்வொரு மாவட்டத்திலும் அரிசனங்கள் தொகை எந்த அளவுக்கு இருக்கிறது என்பது ஒன்று. இரண்டாவது, ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட மனைகள், எடுக்கப்பட்ட மனைகளில் அரசாங்கத் திட்டத்தின்கீழ் விதிகளின்படி குடியிருப்புக்கு இடம் முறையானபடி தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில்தான் வீடுகள் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகின்றன.

*** 85 வினா.—திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அச்சிறுபாக்கம் தொகுதியில் எண்டத்தூர் அரிசன காலனியில் அரிசன வீட்டு வசதி வளர்ச்சி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** ஆம்.

**திரு. வை. பாலசுந்தரம் :** தற்போது அச்சிறுபாக்கம் எண்டத்தூரில் கட்டப்பட்டுள்ள வீடுகள் ஏற்கனவே நல இலாகாவில் கட்டப்பட்ட இல்லங்கள் ஆகும். அதிலே 50 சதவிகிதம் அரிசன மக்களுக்குத்தான் வீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மீதியுள்ள 50 சதவிகிதத்தினருக்கு தமிழ்நாடு அரிசன வீடு கட்டும் வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் தொகுதியில் எண்டத்தூர் கிராமத்தில் இக் கழகம் வகுத்துள்ள திட்டத்தில் இரண்டாவது கட்டமாக 77 வீடுகள் கட்ட உத்தேசித்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]**



## (2) அறிவிப்புகள்.

### (அ) ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் மறுநாள் எடுத்துக் கொள்ளப் படுவது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, ஏ. ஆர். மாரிமுத்து. என். கே. பழனிசாமி, ஜேம்ஸ் ஆகியோர் மதுரையில் ஜனநெருக்கடியில் இறந்தவர்கள் நிகழ்ச்சி பற்றி விவாதிக்க வேண்டுமென்ற ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லாத காரணத்தால் அது நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அதே பொருள் பற்றித் திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (3) அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) 1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன்வடிவை * அறிமுகம் செய்து, அது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

*** திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, கோவை நகர் மன்றத்தைக் கலைத்து விட்டு தனி அதிகாரியைப் போடுகிற இந்த மசோதாவை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு மன்றத்தின் முன்னால் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் விவாதிக்கப்பட்ட மசோதாவின் மூலம் கோவையைத் தவிர மற்ற நகரசபைகளுடைய காலத்தை நீடிக்கின்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்திய அமைச்சர் அவர்கள் கோவையைப் பொறுத்தமட்டில் நகரசபையைக் கலைத்துவிட்டு தனி அதிகாரியைப் போடுகின்ற மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் ஜனநாயக அமைப்பான அந்த நகரசபையை ஏன் கலைத்து விட்டீர்கள் என்று கேட்பதற்கு

---

* 18—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

முன்னால் மற்ற மசோதாக்களில் பேசிய எதிர்க்கட்சி நண்பர்கள் மற்றைய நகராட்சிகளின் காலத்தை நீடிக்கின்ற மசோதாவை எதிர்த்துப் பேசுகின்றபோது உடனடியாகத் தேர்தல் வரவேண்டும், இருக்கின்ற நகரசபைகளின் காலத்தை நீடிப்பது ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று சொன்ன நேரத்தில் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்ற நேரத்தில் இந்த நிலைமை இங்கு மட்டுமல்ல, கேரளாவிலும் இருக்கிறது என்று சொன்னார்கள். அங்கிருக்கும் பஞ்சாயத்துக்கள், நகராட்சிகளின் காலத்தை நீடித்திருப்பதோடு மட்டுமல்லாமல் அங்கிருக்கும் மந்திரிசபையையும் நீடித்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அதை ஏனோ சுட்டிக்காட்டவில்லை. இன்றைக்கு இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கின்ற சூழ்நிலையில் நான் இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

காரணம், அங்கே, கோவை நகரசபை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகத்தில் எந்த அளவுக்கு ஊழல் நிறைந்த நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருந்தது என்று நாங்கள் மட்டுமல்ல, ஆளும் கட்சி நண்பர்களும் கவலையோடும் அக்கறையோடும் கவனித்து வந்தார்கள். ஆகவே, கார்ப்பரேஷனாக அமைக்கப் போகிறோம். ஆகவே, நகரசபையைக் கலைக்கப்போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி, கொண்டு வந்துள்ள மசோதாவை முழு மனதோடு ஆதரிக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. ஜே. ஜேம்ஸ் தலைமை)

கோவை நகரசபையைக் கார்ப்பரேஷனாக மாற்ற திட்டங்களைத் தீட்டிய பிறகு என்றைக்குத் தேர்தல் வரும் என்று சொல்வதற்கில்லை. ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய், ஒன்றரைக் கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய நிலையில் ஓராண்டுக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரசபை இல்லாத நிலைமையில் தனி அதிகாரியின்கீழ் செயல்பட வேண்டிய நிலைமை உருவாகியிருக்கிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது—தனி அதிகாரி அவர்களுக்கு நகரத்திலிருக்கும் பல்வேறு வட்டங்களுடைய மக்கள் தேவைகளைத் தெரிந்து கொள்ளக்கூடிய நிலைமை நிச்சயமாக இருக்க முடியாது. சிவிக் நீட்ஸ்—மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமானால் மக்கள் பிரதிநிதிகளைக் கலந்தாலோசிக்கக் கூடிய நிலைமை இருக்குமானால் தனி அதிகாரியின் நிர்வாகம் கொஞ்சம் சீராக நடக்க உதவியாக இருக்கும். தேர்ந்தெடுக்கப்





பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்களைக் கலந்து அங்கு பல்வேறு திட்டங்களை அமல் நடத்தும் நிலைமையில் அங்கு போடப்பட்டிருக்கும் தனி அதிகாரி செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தவறான முறையில் மூன்றாண்டுக் காலமாக நகரசபையே கூடாமல் இன்றையதினம் இருந்து வருகிற மேலப்பாளையம் நகரசபையைக் கூட கலைத்துவிட்டு தனி அதிகாரியைப் போடுவது நல்லது என்று கூறி இங்கு கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதாவை வரவேற்று அமர்கிறேன்.

**திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, கோவை நகரசபையைக் கலைத்துவிட்டு மாநகராட்சியாக்க இருக்கிறார்கள். தற்போது தனியதிகாரியைப் போடுகிறார்கள். அருகில் இருக்கும் பகுதிகளையும் இணைத்து மாநகராட்சியாக்க வேண்டும். அதற்காக ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. அந்தக் குழு இன்னும் செயல்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவருக்குள்ள வேறு வேலைகள் காரணமாக அந்தக் குழு செயல்படவில்லை. தற்போது தனி அதிகாரி இஷ்டம்போல் எது வேண்டுமென்றாலும் செய்யலாம் என்ற நிலை இருக்கிறது. அதற்குப்பதிலாக சர்வ கட்சியினர் கொண்ட ஆலோசனைக் குழு அமைத்து அந்தக் குழுவுடன் தனி அதிகாரி கலந்தாலோசித்துச் செயல்பட வேண்டுமென்று ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

அந்தப் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். பள்ளிக்கூடங்கள் சீர்கேடுற்றிருக்கின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு வகுப்பில் 60, 70 மாணவர்கள் படிக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள்கூட பதில் சொன்னார்கள். ஆகவே, பள்ளியின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்.

இது பற்றியெல்லாம் யோசனைகள் கூற சர்வ கட்சியினர் கொண்ட கமிட்டி அமைத்தால்தான் தனி அதிகாரி நல்ல முறையில் செயல்பட முடியும். அந்த முறையில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, கோவை நகரசபையைக் கார்ப்பரேஷனாக மாற்ற வேண்டும்; அதன் காரணமாக தனி அதிகாரியைப் போட வேண்டுமென்ற மசோதா

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 அக்டோபர் 27

சபைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எந்த அடிப்படையில் நகரசபைகளைக் கார்ப்பரேஷனாக மாற்றுகிறார்கள்? அதை உறுதியாக எல்லா நகரசபைகளுக்கும் கடைப்பிடிக்கிறார்களா என்ற கேள்விக்கு இந்த அரசு இந்தச் சபையில் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. அரசியல் காரணங்களுக்காகச் சில நகரசபைகளைக் கார்ப்பரேஷனாக மாற்றுகிறார்கள்.

மதுரையை எடுத்துக் கொண்டால் கார்ப்பரேஷனாக மாற்ற வேண்டுமென்ற துடிதுடிப்பில் மாற்றினார்கள், அதே துடிதுடிப்பில் கலைக்கிறார்கள். அது ஏன் என்பது எங்களுக்கெல்லாம் புரிந்திருக்கிறது. அரசியல் காரணங்களுக்காக இப்படிப்பட்ட மசோதாக்களைக் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறதா என்று புரியவில்லை. இப்படி ஒழுங்காக இல்லாத நகரசபைகளுக்கெல்லாம் அரசு தனி அதிகாரியைப் போடுகிறதா என்று பார்த்தால் அதிலும் அரசியல் புகுந்திருக்கிறது. குறிப்பாக, மேலப்பாளையம் நகரசபை கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கூட்டமே கூட்டவில்லை. இப்படி இரண்டு மூன்று ஆண்டுக் காலமாக ஒரு நகரசபை கூட்டமே கூட்டாமல் தூங்கிக் கொண்டிருந்தால் அந்த மக்களுக்கு அந்த நகரசபை என்ன நன்மையைச் செய்ய முடியும் என்பதை இந்த அரசு நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்க ஆசைப்படுகிறேன்.

எதற்காக ஸ்தல ஸ்தாபனங்களை ஏற்படுத்துகிறோம்? மக்களின் தேவைகளை மக்கள் பிரதிநிதிகளே உணர்ந்து உடனடியாக அவற்றைத் தீர்க்கவேண்டும் என்பதற்காக ஸ்தல ஸ்தாபனங்களை அமைக்கிறோம். அப்படிப்பட்ட ஸ்தல ஸ்தாபனங்கள் வேலை செய்யாமல், அவர்களும் வேலை செய்யாமல், மற்றவர்களையும் வேலை செய்யவிடாமல் முடக்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி முடக்கிக் கொண்டிருக்கிற நகரசபைகளைக் கலைத்துவிட்டு தனி அதிகாரிகளைப் போடுவோம் என்ற எண்ணம் இருக்கிறதா என்றால் இல்லை.

தனி அதிகாரிகளைப் போடுவதில் அக்கறை காட்டுகிறார்களே தவிர தேர்தல்களை நடத்துகிறார்களா என்றால் அதைக் கண்டு பயம். மூன்று நான்கு ஆண்டுகளாக தேர்தல்களை ஒத்திப் போட்டுக் கொண்டு வருகிறார்கள். என்றைக்கு திண்டுக்கல், கோவை இவ்விடங்களில் மக்களின் தீர்ப்புக்களைப் புரிந்து கொண்டார்களோ அன்றிலிருந்து இவர்களுக்கு தேர்தல் என்றாலே ஜுரமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது.



1975 அக்டோபர் 27] [திருமதி த. ந. அனந்தநாயகி]

நகரசபைத் தேர்தலாக இருந்தாலும் சரி அல்லது பஞ்சாயத்துத் தேர்தல்களாக இருந்தாலும் சரி எதுவாக இருந்தாலும் சரி, தேர்தல்களை ஒத்திபோட்டுவிட்டு பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் சிறந்த ஜனநாயக வாதிகளான இவர்கள் இருந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். உடனே எங்களைப் பார்த்து நீங்கள் பெரிய ஜனநாயக வாதிகளாக இருக்கிறீர்களே நீங்கள் தேர்தல்களை வைத்தீர்களா என்று கேட்பார்கள். நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். மூன்று மாதங்கள் இருக்கின்றன தேர்தலைப் பற்றிச் சிந்திப்பதற்கு என்று.

முதலில் நீங்கள் மூன்று நான்கு ஆண்டுகளாக தேர்தல்களை ஒத்திப்போட்டுக் கொண்டு வருகிறீர்களே அதைப் பற்றி மக்களிடம் முதலில் விளக்குங்கள், அப்படி விளக்கிவிட்டு பின்னால் நீங்கள் தேர்தல்களை எப்போது நடத்தப் போகிறீர்கள் என்று கேட்க வாய்ப்பாக இருக்கும். தனி அதிகாரிகளைப் போட்டுவிட்டு தேர்தல்களை ஒத்திவைத்து ஜனநாயகத்தை சாகடிக்கக் கூடிய நிலையில் நாங்கள் பெரிய ஜனநாயக வாதிகள், மற்ற மாநிலங்களை விட நாங்கள் சிறந்த ஜனநாயக வாதிகள் என்று பறைசாற்றிக் கொண்டிருக்கிறவர்கள் . . . (திரு. ஆர். பொன்னப்ப நாடார் குறுக்கீடு) நீங்கள் ஏன் ஆளும்கட்சியின் கருவியாக மாறி வருகிறீர்கள்? உட்காருங்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தேர்தலைப் பற்றிச் சிந்திக்க மூன்று மாத காலம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். பாண்டிச்சேரியில் இருக்கிறது, நம் ராஜ்யத்தில் இருக்கிறது—வேறு இடங்களிலும் உள்ளன—இவ்விடங்களில் தேர்தல் நடத்த எவ்வளவு காலமாகும்? இன்னும் எவ்வளவு நீண்ட காலமாகும் என்பதை அவர்கள் விளக்கினால் நலமாகயிருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கொஞ்ச நாட்களாக கனம் பொன்னப்ப நாடார் அவர்கள் ஆளும் கட்சியின் கருவியாக மாறி வருவதில் எனக்கு கொஞ்சம் கூட இஷ்டம் இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நான் யாருடைய கருவியாகவும் மாறமாட்டேன் என்பது அம்மையார் அவர்களுக்கு நன்கு தெரியும். நான் கட்சி விட்டு கட்சி மாறுவதோ, அல்லது வேறுவிதமாகச் செய்வதிலோ எனக்குப் பழக்கம் இல்லை. நான் ஒரே கட்சியில் ஒரே தலைமையின்கீழ் இருக்கக்கூடியவன் என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** திரு. பொன்னப்ப நாடார், அவர்கள் கட்சி விட்டு கட்சி மாறுவதில்லை என்று சொன்னார்கள். எனக்குத் தெரியும் அந்த வரலாறுகள் எல்லாம். அவர்கள் டி.டி.என்.ஸி. யிலிருந்து டி.என்.ஸி.-க்கு வந்தது எனக்குத் தெரியும் அவர்கள் காங்கிரஸிலிருந்து காங்கிரஸ் (ஓ)-க்கு வந்தவர், நான் காங்கிரஸ் (ஓ)-விலிருந்து காங்கிரஸ் (ஆர்)-க்கு வந்தவள். அவர்கள் அந்த வாசல்வழி போனார்கள், நான் இந்த வாசல் வழி வந்தேன். நமக்குள்ளே இந்தப் பரிமாறல்கள் எல்லாம் வேண்டாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கேட்டதால் எனக்கும் கூட கேட்கத் தோன்றுகிறது. பாண்டிச்சேரி தேர்தல் இரண்டு மூன்று தடவை தள்ளிப் போடப் பட்டிருக்கிறது. ஜனநாயக ரீதியில் எந்தக் கண்ணோட்டத்தோடு அம்மையார் அவர்கள் அதை நோக்குகிறார்கள்?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பாண்டிச்சேரி மத்திய அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் இருக்கக்கூடியது. ஜனநாயகத்திற்கே எடுத்துக்காட்டு என்று சொல்லும் நீங்கள் என்ன வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். கேவலம் பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்தக் கூட உங்களுக்குப் பயம், தைரியம் இல்லை. மூன்று வருடங்களாக ஒத்திப்போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அப்படியிருக்க நீங்கள் என்ன அடுத்தவர்களைப் பற்றிப் பேசுவதற்கு நியாயம் இருக்கிறது என்று தெரியவில்லை. நீங்கள் இங்கே தேர்தல்களை நடத்தியிருந்தால் தமிழ்நாட்டில்தான் ஜனநாயகம் பரந்து விரிந்து செயலாற்றிக்கொண்டிருக்கிறது என்று நாங்களே பெருமைப்படுவோம். அதற்கு இடம் தரமாட்டேன் என்கிறீர்களே.

முனிசிபல் தேர்தல்களை நடத்தக் கூட பயப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள். தனி அதிகாரிகளுக்கு அட்வைஸரிக் கமிட்டிகள் போடுங்களேன். சென்னை மாநகராட்சியில் கிட்டத்தட்ட முப்பது லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். தனி அதிகாரி எவ்வளவோ திறமையாக வேலை செய்கிறார்கள்; இல்லை என்று மறுக்கவில்லை. இருந்தாலும் அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு என்று ஒரு அட்வைசரிக் கமிட்டி போட்டு consisting of all the M.L.As. in the City ஸிட்டியில் 12 தொகுதிகள் இருக்கின்றன. 12 எம்.எல்.ஏ.-க்களையும் கொண்டதொரு அட்வைசரிக் கமிட்டி போட்டால் மக்களின் கஷ்டங்களை எடுத்துச்



சொல்ல வாய்ப்பிருக்கும், அதோடு பாதி அல்லது கால்வாசியாவது ஜனநாயகம் மிளிர வாய்ப்பிருக்கும். அப்படி கமிட்டி ஒன்று போட்டால் மக்களின் தேவைகள் உடனடியாக நிறைவேற்றப்படும்.

சென்னை நகரின் வீதிகளைப் பாருங்கள். மிக அவலநிலையில் இருக்கின்றன. மழை பெய்தால் இன்னும் அவல நிலைதான். அமைச்சர்களின் கார்கள் எந்தவழி வருகின்றனவோ, ஆனால் எங்கள் கார்கள், பஸ்கள் எல்லாம் குண்டுகுழிகளில் விழுந்து விழுந்து வெளிவரவேண்டியிருக்கிறது. தமிழ்நாட்டின் தலைநகராகிய சென்னை நகரத்திலேயே இப்படி இருந்தால் எப்படி என்று கேட்கிறேன்.

வரி வசூலிப்பு நன்கு நடந்துகொண்டிருக்கிறது, ஆனால் வசதிகளைக் காணோம். மக்களின் தேவைகளை உணர்ந்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அப்படி ஆராய்ந்து செய்ய மக்கள் பிரதிநிதிகள் இருக்கக்கூடிய அளவிற்கு தனி அதிகாரிகள் இருக்க நியாயம் இல்லை. இருக்கவும் முடியாது. வரிகள் வசூலிக்கப் பட்டு லாபம் வந்திருக்கிறது, கடன்கள் இல்லை என்றால் வசூலிப்பதை செலவு செய்யாமல் வைத்திருந்தால் ஏன் லாபம் வராது? little bit of democratic character ஜனநாயக பண்பு இருக்கவேண்டும். ஆகவே, தனி அதிகாரிகளுகக்கு உதவியாக அட்வைஸரிக் கமிட்டிகள் போட்டு—அதில் சட்டசபை அங்கத்தினர்களைப் போட்டு, அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, பாகுபாடு காட்ட வேண்டாம், எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி அல்லது ஆளும்கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, மக்கள் பிரதிநிதிகளை அட்வைஸரிக் கமிட்டிகளில் போட்டு தனி அதிகாரிகளுக்கு ஒத்தாசையாக இருக்க வசதி ஏற்படுத்தித் தருவது சிறப்பாக இருக்கும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் இதை வரவேற்பதில் எந்தவிதக் கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. ஒரு மாநகராட்சி உருவாகி ஒரு தனி அதிகாரி போடும்போது பல்வேறு காரியங்கள் ஒழுங்காகச் செய்யப்படுமா என்பது பற்றிய அச்சம் அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும் இருக்கும் என்று கருதுகிறேன்.

கோவையை எடுத்துக் கொண்டால் அது ஒரு முனிசிப்பாலிட்டியாக இவ்வளவு நாட்கள் இருந்தது. அது இப்போது கார்ப்பரேஷனாக மாற்றப்படும்போது பல புறநகர்ப் பகுதிகள், சிங்காநல்லூர் போன்ற இடங்கள் இணைக்கப்பட்டு ஒரு பெரிய விஸ்தீரணம் உள்ள இடமாக அது மாற்றியமைக்கப்படும் ஒரு நிலைமை ஏற்படும். அப்போது அப்படிப்பட்ட பெரிய இடத்திற்கு போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படுமா என்ற அச்சம் அங்குள்ள மக்கள் மத்தியில் இருக்கிறது.

கோவை முனிசிப்பாலிட்டியாக இருக்கும்போதே அங்கு பல்வேறு வார்டுகளில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. கோவை மேற்குப் பகுதியில் பல்வேறு இடங்களில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. லாரிகளில் தண்ணீர் எடுத்துச் செல்லவேண்டிய பயங்கரமான நிலை இருக்கிறது. அப்படியிருக்க அதைக் கார்ப்பரேஷனாக ஆக்கும்போது என்னென்ன திட்டங்களைப் போட்டிருக்கிறீர்கள்? அதற்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் கார்ப்பரேஷனாக இருந்தும்கூட இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு குடிப்பதற்கு தண்ணீர் கிடைப்பதற்கு எவ்வளவு கஷ்டங்கள் இருந்தன என்பதைப் பார்த்தோம். ஸ்பெஷல் ஆபீசரைப்பொறுத்து அவர்கள் முடிந்ததைச் செய்தார்கள். ஸ்பெஷல் ஆபீசரைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள பிரச்னைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள அவர்களுக்கு கம்யூனிகேஷன் சானல் கிடையாது. அவற்றைப் பற்றி ஸ்பெஷல் ஆபீசர் நன்கு தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை. இதை அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள். தேர்தல் எப்போது வரும் என்று தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் நேற்றுசொன்னார்கள், மேயர் மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் 75 சதவிகிதம் ஸ்பெஷல் ஆபீசர்கள்தான் வந்தார்கள் என்று சொன்னார்கள்.

மதுரை மாநகராட்சி மசோதா வந்தபோதே ஒரு அச்சம் தெரிவிக்கப்பட்டது.

we struck a note of warning

மதுரையை கார்ப்பரேஷனாக மாற்றும்போது சொன்னோம், போதிய வசதிகளைச் செய்து கொடுக்க திட்டங்கள் வகுக்காமல் மாநகராட்சியாக மாற்றுகிறீர்கள், உங்களால் போதிய வசதிகளைச்





செய்து கொடுக்கமுடியாது, கஷ்டப்படப் போகிறீர்கள் என்று அன்று சொன்னோம். இல்லை, நாங்கள் தயாராயிருக்கிறோம், ப்ளூ ப்ரிண்ட் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது மாநகராட்சியாக ஆக்கப்பட்ட பிறகு வரிகள் பெருக்கப் பட்டனவே தவிர வசதிகள் பெருக்கப்படவில்லை.

கோவையை மாநகராட்சியாக மாற்ற இருக்கும்போது நீங்கள் என்ன திட்டங்கள் போட்டிருக்கிறீர்கள்? எல்லா வரிகளையும் கூட்டப் போகிறீர்கள். மாநகராட்சி என்று பெயர்ப் பலகை இருக்குமே தவிர வேண்டிய வசதிகளை உங்களால் செய்து கொடுக்க முடியுமா? அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இருக்கின்றனவா என்று கேட்க விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில், தெரிந்த காரணத்தால் சொல்கிறேன், இல்லை என்று. கோவை மக்களுக்கு கோவை ஒரு மாநகராட்சி ஆகிறது என்ற பெருமை மட்டும் போதாது. பெயர்ப் பலகையை மாற்றினால் மட்டும்போதாது. அவர்களுக்கு எந்த வசதிகளும் செய்வது கிடையாது. இப்போது சிறுவாணி அணைத்திட்டம் இருக்கிறது. அதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய தண்ணீர் கோவை நகரத்திற்கே பற்றாக்குறையாக இருக்கிறது. அதற்குவேறு என்ன திட்டங்கள் வைத்து இருக்கிறீர்கள்?

Have you got any concrete programme up your sleeves?

அப்படி ஏதாவது இருக்கிறதா என்றால் இல்லை. ஆகவே, இந்த மாதிரியான பல்வேறு சிக்கலான பிரச்னைகளுக்குத் தீர்வு காணாமல், இதோ செய்து விட்டோம் என்று பொதுமக்கள் மத்தியில் காட்டுவதற்கான முறையில் இருக்கிறதே தவிர பாராட்டுவதற்கான முறையில் இல்லை என்பதை எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தேர்தலைப் பொறுத்தவரையில் இங்கே பேசப்பட்டது. பஞ்சாயத்துத் தேர்தல்களை 2 மாதங்கள் ஒத்திப்போட்டார்கள். ஆகஸ்ட் மாதத்தில் நடக்க வேண்டியதை ஒத்தி வைத்தார்கள். ஒரு தடவை மட்டுமே ஒத்தி வைப்போம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், ஊராட்சித் தேர்தலை, நகராட்சித் தேர்தல்களைப் பல்வேறு காரணங்களால் 6 மாதத்திற்கு ஒத்தி வைத்து விட்டோம். முழுக்க முழுக்க ஜனநாயகம் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறோம். பொதுக்கூட்டம் போட்டுப் பேசுகிறோம். இந்த மாநிலத்தில் இருக்கிற மாதிரி ஜனநாயகம் வேறு

எங்கும் இல்லை என்று சொல்கிறோம். ஆனால் பல்வேறு முனிசிபாலிடிகளில் தேர்தல் நடக்காமல் ஒத்தி வைக்கிறோம். இந்த ஒத்தி வைப்பதற்கான மசோதா வருகிற நேரத்தில் சொல்கிறார்கள், இதுதான் இறுதியாக நாங்கள் ஒத்திவைப்பது, தேர்தலை நடத்திவிடுவோம் என்று சொல்வது. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஏற்கனவே நகராட்சித் தேர்தலை ஒத்தி வைக்கவேண்டுமென்று அலுவல் ஆய்வுக் குழுவில் பேசும்போது, உங்களுடைய கட்சித் துணைத் தலைவர் எட்மண்ட் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். மறுபடியும் அதுபற்றி விவாதிக்கப்பட்டு இருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** எட்மண்ட் அவர்கள் குஜராத்தில் தேர்தல் நடந்தது பற்றியும் சொன்னார்கள். இங்கே அமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்தார்கள். நாங்கள் ஒத்தி வைப்பது இதுதான் கடைசித் தேவை. இனிமேல் ஒத்தி வைக்கமாட்டோம் என்று சொல்லி வாக்குறுதி தந்தார்கள். ஆனால் அரசாங்கம் ஒத்தி வைத்துக்கொண்டே வருகிறார்கள். ஒவ்வொரு தடவையும் ஒரு காரணம் கொடுக்கிறார்கள். ஒரு முறை பட்டியல் சரியாகச் செய்யவில்லை என்று சொன்னார்கள்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, இன்று நாட்டிலே அவசர காலச் சட்டம் இருக்கிறது. பல இடங்களில் பொதுக்கூட்டங்கள் போடக்கூடாது, அரசியல் மாநாடு போடக்கூடாது, ஊர்வலங்கள் நடத்தக்கூடாது என்று இருக்கிறது. தேர்தல் வைத்தால் சம்பந்தப்பட்ட நகரமன்றத் தலைவரைப் பற்றி எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும். இந்த ஊழல் செய்து இருக்கிறார், அந்த ஊழல் செய்து இருக்கிறார் என்று பிரசாரம் செய்ய முடியாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் எப்படித் தேர்தலை நடத்துவது என்பதைப் பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் விளக்குவார்களா?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அதிலே இரண்டு பாயின்ட்கள் இருக்கின்றன. முதலிலே, மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தேர்தலை நடத்தக் கூடாது என்று அவசர காலச் சட்டம் போடவில்லை. முனிசிபல் தேர்தலை நடத்தக்கூடாது என்று சொல்லவில்லை. குஜராத்தில் நடந்து இருக்கிறது. அதைக் கூட





நேற்றையதினம் மாண்புமிகு அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது சுட்டிக்காட்டினார்கள். ஆகவே, அந்த வாதம் நிச்சயம் அடிப்பட்டுப் போகும்.

இன்னொருவாதம், பொதுக்கூட்டங்கள் போடக்கூடாது, என்று சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரையில், இந்த மாகாணத்தில் கூட்டங்கள் போட்டுக்கொண்டு இருக்கிறோம். எல்லாவிதமான கடுமையான பிரசாரத்திலும் ஈடுபட்டு வருகிறோம். அதற்கு விளக்கங்களும் பேசிக்கொண்டு இருக்கிறோம். ஆகவே, அந்த வாதமும் அடிப்பட்டுப் போகும்.

அரசாங்கத்திற்கு திட்டவட்டமாக, கிளியர் திங்கிங் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அதுதான் இதற்குக் காரணமே தவிர வேறு அல்ல என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிற நேரத்தில், எந்தெந்தப் பகுதிகள் அதில் சேர்க்கப்படுகின்றன என்ற லிஸ்ட் இருக்கிறதா? கோவை மக்களுக்கு அதிகமான வசதிகள் செய்து கொடுக்க வாய்ப்பு இருக்கிறதா? அதையெல்லாம் இங்கே எடுத்துக் கூறி, அதைக் குறித்து நன்றாக ஆராய்ந்து பார்த்து, விவாதிக்க இந்த அவை முன்னால் இருக்கிற உறுப்பினர்களுக்குப் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறதா—ஏதோ செய்து விட்டோம் என்று சொல்லி, மசோதா கொண்டு வந்தால் மட்டும் போதாது. அது உங்களுடைய திறமையின்மையைக் காட்டுகிறது. ஒட்டுமொத்தமாக, மாநகராட்சியாக ஆக்கியதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதனால், ஏற்படுகிற சிக்கல்களுக்கு என்ன பரிகாரத்தை அரசு காண்பதற்கு இருக்கிறது என்பதைச் சொல்லாமல் இருப்பது சரியாக இருக்காது என்று கூறி, என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கோவை நகராட்சியைக் கலைத்து, தனி அதிகாரியைப் போட்டு இருக்கிறீர்கள். கோவை நகராட்சியின் நிர்வாகம் அண்மைக் காலத்தில் எவ்வளவு மோசமாக இருந்து வருகிறது என்பதை நகராட்சியின் வீதிகள், நகராட்சியின் தெரு விளக்குகள் ஆகியவையே சான்று பகர்ந்து கொண்டு இருந்தன. அதைக்

கலைத்து இருக்கிறீர்கள். இந்த நகராட்சிகளைக் கலைப்பதிலும், தனி அதிகாரிகளை நியமிப்பதிலும், தேர்தல்களை ஒத்திப்போடுவதிலும் இந்த அரசாங்கம் என்ன கொள்கையை வைத்து இருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒவ்வொரு இடத்திற்கு ஒரு கொள்கை வைத்திருக்கிறீர்கள். கோவை நகரத்திற்கு ஒரு கொள்கை, சிங்காநல்லூருக்கு ஒரு கொள்கை, மேலப்பாளையத்திற்கு ஒரு கொள்கை, மதுரைக்கு ஒரு கொள்கை என்று வைத்துக்கொண்டு இருக்கிறீர்கள். இந்தக் கொள்கையெல்லாம் சரியான கொள்கையாகத் தெரியவில்லை. சௌகர்யம் போல் செய்து கொண்டு இருக்கிறீர்கள். ஆகவே, உங்கள் கொள்கை என்ன என்பதைத் தெளிவாகச் சொல்லவேண்டும்.

ஏற்கனவே நகராட்சித் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு இரண்டு முறை மசோதா வந்தபோது, ஒரு முறை, அடுத்த முறை தேர்தல் நிச்சயம் வரும் என்று சொல்லப்பட்டது. அடுத்த முறை, இறுதியாக இது தான் ஒத்தி வைப்பது, நிச்சயம் தேர்தல் வரும் என்று அன்று இருந்த அமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்தார்கள். இன்று அவர்கள் டிரஷரி பெஞ்சில் இல்லை. இப்போது மறுபடியும் ஒத்திப்போட்டு இருக்கிறீர்கள். அப்போதே நான் சொன்னேன், பொதுத்தேர்தல் நடக்கிற வரையில் நகரசபைத் தேர்தல் நடத்தப் போவது இல்லை என்று. இப்படிச் செய்து கொண்டிருக்கிறபோது, அடுத்தவர்களைப் பார்த்து, ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள். மற்றவர்களைப் பார்த்து குறை சொல்கிறீர்கள். இப்படிச் செய்து கொண்டு ஜனநாயகத்தைப் பற்றி நீங்கள் பேசுவது எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அடுத்தவர்களைப் பற்றிப் பேசுவதற்கு எந்த விதமான தகுதியும் இல்லை என்று சொல்கிற அந்தக் காரணத்தால் கேட்கிறேன், யாரை அடுத்தவர்கள் என்று குறிப்பிடுகிறீர்கள்?

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அடுத்தவர்கள் யாராக இருந்தாலும் சரி, எல்லோரையும் தான் சொல்கிறேன். யாராக இருந்தாலும் சரியே.



திலும் தேர்தல் நடத்ாதவர்கள் ஜனநாயகவாதி அல்ல. நாங்களும் ஜனநாயகவாதி அல்ல, நீங்களும் ஜனநாயகவாதி அல்ல என்பது உங்களுடைய விளக்கமா?

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அல்ல. நீங்கள், கேவலம் நகராட்சி, ஊராட்சி மன்றத் தேர்தல்களைக் கூட ஒத்திப் போட்டுக் கொண்டே இருக்கிறீர்கள், அதற்கான நியாயமான காரணங்கள் இல்லாமல் ஒத்திப் போட்டுக்கொண்டே இருக்கிறீர்கள், வேறு யாரையும் குறை சொல்வதற்கு உங்களுக்குத் தகுதியில்லை என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எங்களைக் குறை சொல்ல உங்களுக்குத் தகுதி இருக்கிறதா?

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** யாரையும் குறை சொல்ல உங்களுக்குத் தகுதி இல்லை. எங்களைப் பொறுத்தவரையில், பாண்டிச்சேரியில் தேர்தல் நடத்தாமல் இருப்பதற்கான காரணங்களை திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள், அது மத்திய அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கேரளத்தில் நேரடி நிர்வாகம் நடக்கிறதா?

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** கேரளத்தில் நாங்கள் மட்டுமல்ல, இங்கே உங்களுடைய தோழமை கட்சியாக உள்ளவர்களும் அங்கே நிர்வாகத்தை நடத்துகிறார்கள். இன்னும் சொல்லப் போனால், உங்களுடைய தோழமைக் கட்சி அமைச்சர் இருந்த நேரத்தில்தான் தேர்தல் ஒத்திப் போடப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஒத்திப் போட்டது அச்சுதமேனனா, மத்திய அரசா?

**திரு. எம். ஏ. லத்தீப்:** தோழமைக் கட்சி என்று யாரைக் குறிப்பிடுகிறார்கள்? எந்த அமைச்சரைக் குறிப்பிடுகிறார்கள் என்று சொன்னால், அவருக்கு விளக்கம் சொல்ல முடியும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சுப்பிரமணியம் அவர்களை நான் கேட்கவிரும்புவது. தேர்தலை ஒத்திப் போட்டது மாண்புமிகு முதலமைச்சர் அச்சுதமேனனா, அல்லது, மத்திய அரசின் உத்தரவா?

[1975 அக்டோபர் 27

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** கேரளாவில் ஊராட்சித் தேர்தலை அந்த மாநில அரசுதான் ஒத்தி வைத்தது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கேரளா பொதுத் தேர்தலைக் கேட்கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** பொதுத்தேர்தலை மாநில அரசும், மத்திய அரசும் சேர்ந்து ஒத்தி வைத்தது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாநில அரசும், மத்திய அரசும் சேர்ந்து ஒரு பொதுத் தேர்தலை ஒத்திவைக்க இயலுமா?

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** இயலும். நீங்கள், மாநில சட்ட மன்றத்தை 1971-ல் கலைத்து விட்டு, ஓராண்டுக்கு முன்பே தேர்தலை வைத்துக் கொண்டதுபோல், மாநில அரசும், மத்திய அரசும் சேர்ந்து ஒத்தி வைக்க முடியும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நாம் இருவரும் சேர்ந்து குழப்பிக்கொண்டு இருக்கவேண்டாம். மற்றவர்களும் விளக்கம் பெறவேண்டும் என்பதற்காகக் கேட்கிறேன். மாநில அரசு சட்டசபையை முன்கூட்டியே கலைத்துவிட்டு தேர்தலை நடத்துவதற்கு இயலும். ஆனால் ஒரு மாநில அரசு சட்ட சபையை நீட்டித்துக் கொள்கிறேன் என்று சொல்வதற்கு, மாநில அரசுக்கு உரிமை இருக்கிறதா?

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** மாநில அரசுக்கு இருக்கிற உரிமை சிபார்சு செய்யலாம். எனக்குத் தெரிந்தவரையில் அதைத்தான் கேரளா அரசாங்கம் செய்தது என்று நினைக்கிறேன்.

சிங்காநல்லூரில் இருப்பதைவிட மோசமான நகராட்சி நிர்வாகம் வேறு எங்கும் நடைபெற முடியாது என்ற அளவுக்கு அங்கே நிர்வாகம் நடந்து கொண்டு இருக்கிறது. நான் இங்கே சட்டமன்றத்திற்கு முன்னாலே அதைப் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஒரு விளக்கம். ஒரு வேளை இந்த அரசாங்கத்தை நீட்டித்துக்கொள்ள வாய்ப்பு இருக்குமா, அதற்கு என்ன வழி என்று அறிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்களா?



1975 அக்டோபர் 27]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நாங்கள் எங்கே கிடைக்கும் என்று அலைந்து கொண்டு இருப்பவர்கள் அல்ல. கேரளா அரசு சிபார்சு செய்து, மத்திய அரசு ஒப்புக்கொண்டது என்று சொன்னால், அப்படியானால் சிபார்சு செய்தால் கிடைக்கும் போல் இருக்கிறது. அப்படிச் செய்தால் கிடைக்குமா இல்லையா என்பதைப் பற்றி நாங்கள் யோசிக்கவில்லை.

(முற்பகல் 10.30)

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இந்தப் பிரச்சனையில் கான்ஸ்டிட்யூஷனைக் குழப்ப வேண்டாம். ஒரு சட்ட சபையை நீடிக்கலாமா இல்லையா என்பதை பார்லிமெண்டு முடிவு செய்து, அதை பார்லிமெண்டில் பாஸ் செய்ய வேண்டும். ஆனால் அதற்கு முன்பு அந்த மாநிலத்தில் உள்ள ஆளும் கட்சி அதுபற்றி ஆராய்ந்து அங்குள்ள அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லி அவர்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்கின்றார்கள். அந்த மாநிலத்தில் உள்ள ஆளும் கட்சி எப்படிப்பட்ட முடிவினை எடுத்துக்கொள்ளுகின்றதோ அதைப் பொறுத்துத்தான் மத்திய அரசு, பார்லிமெண்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகின்றது.

Finally it is decided by the majority in the Parliament on the recommendation or without the recommendation of the State Chief Minister. Therefore, Honourable Thiru A. Subramaniam's point is also justified because it depends upon the recommendation of the Honourable Chief Minister. In this particular context in which the Honourable Chief Minister is speaking, it may look like as if the Honourable Chief Minister wants to extend the term of the House. It may look like that. Whether that is the objective or not, I do not know. That clarification the Honourable Chief Minister alone can given us.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கேரள மாநிலத்தின் முதலமைச்சர் அப்படிப்பட்டதொரு பரிந்துரையைச் செய்தாரா என்பது நமக்குத் தெரியாது. அப்படிச் செய்ததாகக் கற்பனை செய்துகொண்டு, நாமும் செய்வோமா, இந்த அரசு செய்யுமா என்று கேட்கத் தேவையில்லை. நாங்கள் தேர்தலைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.

[1975 அக்டோபர் 27

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் தேர்தலைச் சந்திக்கத் தயாராக இருப்பதாகச் சொல்லுகின்றார்கள். மெத்த மகிழ்ச்சி. ஆனால் அதற்கு முன்பு நகராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு முன்வந்தால் நன்றாக இருக்கும். இதில் அரசியல் பிரச்சனை ஒன்றும் அதிகமாக இல்லை. சுலபமாக நடத்தலாம். இவற்றை முதலிலே நடத்தினால் ஜனநாயகத்திற்கு அவர் சிறந்த தொண்டு செய்ததாக அமையும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

சிங்காநல்லூர் நகராட்சியினைப் பொறுத்தவரையில் ஏராளமான புகார்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் வந்திருக்கின்றன, இன்ஸ்பெக்டர் ஆஃப் முனிஸிபாலிடீஸ் அவர்களுக்கும் வந்திருக்கின்றன. அமைச்சர் அவர்களுக்கே வந்திருக்கின்றன. அப்படியிருந்தும் அதுபற்றி இந்த அரசு ஒன்றும் செய்யவில்லை. மாறாக அதற்கு மீண்டும் நீட்டிப்பு கொடுத்திருக்கின்றார்கள். ஒன்று தேர்தலை இப்போது நடத்தவேண்டும். தேர்தல் வைத்துக்கொள்ள முடியவில்லை என்றால், அதைக் கலைத்துவிட்டு ஒரு தனி அதிகாரியினைப் போடலாம். இப்படியெல்லாம் செய்யாமல் நீட்டிப்பதற்கு அரசியல் காரணங்கள் ஏராளமாக இருக்கின்றன என்பது எல்லாருக்கும் தெரிந்தது தான்.

அமைச்சர் அவர்கள் இல்லை இல்லை என்று தலையை ஆட்டுகின்றார்கள். ஆனால் தனியாகக் கேட்டால், 'ஆமாம்' என்றுதான் சொல்லுவார்கள். ஒன்று நிர்வாகத்தினை ஒழுங்குபடுத்த வேண்டும், அல்லது தேர்தலை வைக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில், அந்த நகரத்தில் வாழ்கின்றவன் என்று சொல்லிக்கொள்ளவே வெட்கப்படுகிறேன். அவ்வளவு மோசமாக இருக்கின்றது அந்த நகரத்தில் உள்ள நிலைமைகள்.

இப்போது கோவை நகராட்சியை ஒரு மாநகராட்சி என்ற நிலைக்கு உயர்த்துவதற்கான செயற்குறிப்பு இருக்கின்றது. அது பற்றி இன்னும் முடிவெடுக்கவில்லை என்று நினைக்கின்றேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இது அந்த நகரத்தின் அந்தஸ்தினை உயர்த்துவதுதான். வேறு ஒன்றும்



1975 அக்டோபர் 27] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

இல்லை. இப்படி ஒரு மாநகராட்சியினை அமைக்கும்போது சுற்றிலும் உள்ள சில பகுதிகளை அத்துடன் இணைப்பதனை யாரும் எதிர்க்கவில்லை.

ஆனால், மாநகராட்சி என்ற நிலைக்கு வந்த பிறகு மக்களுக்கு அதிக வசதிகள் ஏற்பட வேண்டாமா? சிங்காநல்லூர் பஞ்சாயத்தாக இருந்ததிலிருந்து நகராட்சியாக உயர்த்தப்பட்டவுடன் அதற்கு முன்பிருந்த வசதிகள்கூட மக்களுக்குக் கிடைக்கவில்லை நகராட்சியானவுடன். வரிகள் உயர்ந்தன, ஆனால் வசதிகள் குறைந்தன. அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றார்கள், வரி கொடுக்கப்படவில்லை என்று. அது தவறு. வரிகள் உயர்த்தப்பட்டன. அப்போது அதை மக்கள் எதிர்த்தார்கள். பிறகு, வரிகள் குறைக்கப்பட்டபோது வரி கட்ட ஒப்புக் கொண்டார்கள். ஆனால் வசதிகள் பற்றி யாருமே அக்கறை காண்பிக்கவில்லை. நகராட்சித் தலைவர் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. மக்களைப் பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை. தங்கள் கட்சி பற்றிதான் கவனம் செலுத்துகின்றார்கள்.

இங்கே சென்னையில் மேற்கு மாம்பலம் பகுதிகள் இணைக்கப்பட்டபோது, வரிகள் உயர்ந்தன. ஆனால் வசதிகள் பிற பகுதிகளில் உள்ளதைப்போலச் செய்துதரப்படவில்லை என்ற புகார்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. எனவே அதே நிலைமை சிங்காநல்லூரைக் கோவையுடன் இணைக்கும்போது ஏற்படக்கூடும். இணைக்கும்போது அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளைக் கலந்து முடிவெடுக்க வேண்டும். அரசியல் கணக்கை மட்டும் போடாமல் மக்கள் பிரதிநிதிகளையும் கலந்து இது பற்றி முடிவெடுக்க வேண்டும். இது பற்றி சென்ற மாதம் 27-ம் தேதி கூடுவதாக இருந்த மாநகராட்சித் தலைவர் கூட்டம் ஒத்திப்போடப்பட்டது. ஆக, மக்கள் பிரதிநிதிகளைக் கலந்துபேசி, இதிலே அரசியலைக் கலக்காமல், எந்தெந்தப் பகுதிகளைக் கோவையுடன் இணைத்தால் அந்தப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அதிக நன்மைகள் ஏற்படும் என்பது பற்றி முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1975 அக்டோபர் 27

அடுத்து, எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் குறிப்பிட்டதைப் போல, கலைக்கப்பட்ட நகராட்சிகளிலே இப்போது தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் எவ்வளவு திறம்பட செயலாற்றினாலும் மக்கள் பிரதிநிதிகளுடைய ஆலோசனைகள் அவருக்கு அவசியம் தேவை என்பதை மறுப்பதற்கு இல்லை. கோவையில் மிகச் சிறந்த தனி அதிகாரி இருக்கின்றார். அப்படியிருந்தாலும் மக்கள் பிரதிநிதிகளின் ஆலோசனை இல்லை என்றால் நகரத்தின் பல பகுதிகள் முறையாகக் கவனிக்கப்படாமல் விடப்படும். எனவே இப்படிக் கலைக்கப்பட்ட நகராட்சி, மாநகராட்சி மன்றங்களிலே தனி அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறத்தக்க அளவிற்கு அட்வைஸரி கமிட்டிகள் அங்கெல்லாம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

அடுத்து, கோவை சிறுவாணி நீரைப் பொறுத்தவரையில் நமது முதலமைச்சர் அவர்களும் கேரள முதலமைச்சர் அவர்களும் சேர்ந்து இரண்டாவது அணைக்கட்டிற்கான இரண்டாவது அடிக்கல்நாட்டு விழாவில் குறிப்பிட்டபோது. . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஜே. ஜேம்ஸ்):** மசோதாவினை ஒட்டிப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அதையொட்டித்தான் பேசுகிறேன். ஸ்பெஷல் அதிகாரிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது இதுவும் வரவேண்டியிருக்கின்றது. மூன்று ஆண்டு காலத்திற்குள் இந்தத் திட்டம் முடிவு பெறவேண்டும் என்று அந்த விழாவில் சொல்லப்பட்டது. ஆனால் இப்போது மூன்று ஆண்டுகளுக்கு அப்பாலும் அதுபோகக்கூடும் என்ற நிலை இருப்பதைப் பார்க்கிறோம்.

இன்னும் ஒன்றைக் கேள்விப் பட்டேன். கேரளப் பகுதியைப் பொறுத்தவரையில் அவர்கள் மூன்று ஆண்டுகாலத்திற்குள் முடித்துக்கொடுத்துவிடுவார்கள் போல இருக்கின்றது, ஆனால் அந்த மூன்று ஆண்டு காலத்திற்குள் நாம் அதை வாங்கிக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை என்று மிகப் பொறுப்புள்ள



1975 அக்டோபர் 27] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

இடத்தில் கேள்விப்பட்டேன். இந்த நிலைமை நீடிக்கக்கூடாது. அது துரிதப்படுத்தப்பட வேண்டும். சிறுவாணி திட்டமானது விரைவில் முடிவுபெறுவதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். காரணம், கோவை மட்டுமில்லை சிங்காநல்லூர், பல்லடம் போன்ற நகரங்கள்கூட இந்தத் திட்டத்தினை வெகுவாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. எனவே, இந்தத் திட்டத்தின் இரண்டாவது கட்டம் மிகத் துரிதமாக, அடிக்கல் நாட்டுவிழாவில் சொன்னதைப்போல, மூன்று ஆண்டு காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று கோரி அமருகின்றேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Chairman, Sir, although I am not going to politicalise this issue of appointment of Special Officer for the proposed Corporation of Coimbatore about which I am fairly ignorant, I would like to point out the consequences of such an appointment from the experience we have had in Madras City.

So far as Madras City is concerned, we have a Special Officer. Special Officer means a substitute for the Mayor and the Councillors. He is the authority above the Commissioner. He is occupying two authorities. So far as Madras City is concerned, I would like to congratulate the Special Officer for the excellent work done during the days of water shortage. But after that we find that any Special Officer who himself is very efficient is not able to cope up with the organisation and the civic works in the City of Madras. His responsibilities are tremendous. He has got only the same old type of office and administration with him.

If one, goes round the City of Madras after the solution of water shortage, I think he is sure to find that almost all the streets are so bad and badly managed. Unlicensed buildings are cropping up. Unless there is a Committee—Democratic Committee to help such a Special Officer, I do not think he can discharge his duties well. I find that corruption is increasing. If there is a proposal to repair a street in the City of Madras the Overseer prepares the estimate. It goes to the Assistant Engineer. Then it goes to the Executive Engineer. Then generally the Executive Engineer sanctions these things. Now it goes to the Chief Engineer and he himself has to go and find out whether that particular street is bad or not.

[Thiru K. M. Subramaniam] [1975 அக்டோபர் 27

Now, the Government is spending two crores of rupees for repairing roads. What happens is this. The amount is sanctioned. Now it will take years and years to execute the work because there is no faith on any body and red tape is increasing. The administration has lost faith in its officers. I have been there in the Madras Corporation for the last 22 years as Councillor. There has been accumulation of work connected with amelioration or the work directly connected with the citizens of Madras. For the execution of various works connected with the citizens, I hope and trust that the Special Officer will have a Committee consisting of at least Assembly Members and some others to help him in such matters. Otherwise, it becomes simply an officialdom, which is very corrupt.

To-day corruption is bigger than it was before. This is the way in which the things are taking place at the Corporation. One may ask 'why don't you go to the Vigilance Section and prove this?' I cannot do this because I do not belong to the Crime Department or Vigilance Cell. I cannot do this. Definitely, many such things are taking place. Every day we see statements in the Press.

Recently, we have seen in the Press with regard to stray cattle. In my street, namely, Ramanujam Street and in the adjoining areas there are five schools. Every day in my street 30 cattle are going this side and that side and they are causing nuisance to the public. They are not able to control this. What the Special Officer means is correct and well. Unfortunately, he is not able to do with the existing staff because there is no democratic set up at all to help him. In this context, it is a fact that democracy has failed. A lot of things have to be improved. I hope and trust that whenever a Special Officer is appointed to a Corporation, a Committee will also be constituted consisting of at least members of the Legislature and a few others to help him so that it will enable him to understand the needs of the citizens of that place.

Thank you, Sir.



1975 அக்டோபர் 27]

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்: தலைவரவர்களே, இந்த மாநகராட்சிகளிலே, நகராட்சிகளிலே ஸ்பெஷல் ஆபீசர்கள் இடம் பெறுவதில் சில சமயங்களில் நல்ல பலன் ஏற்படுகிறது. சில சமயங்களில் சில சங்கடங்களும் ஏற்படுகின்றன. மதுரையைப் பொறுத்தவரையில் ஸ்பெஷல் ஆபீசர் வந்த பின்னால். . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஜே. ஜேம்ஸ்): இது கோயம்புத்தூர் பற்றியது; அதைப்பற்றிப் பேசுங்கள்.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்: இந்த மசோதா கோயம்புத்தூரைப் பற்றியது என்றாலும் பொதுவாக ஏற்படுகிற நிலைமைகளை உத்தேசித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். கோயம்புத்தூரிலே ஸ்பெஷல் ஆபீசர் நியமித்ததை பலர் வரவேற்றிருக்கிறார்கள். ஆனால், சில சமயங்களில் தனி ஆபீசர் நியமனத்தினால் சில சங்கடங்களும் ஏற்படுகின்றன.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் ஸ்பெஷல் ஆபீசர் ஒரு முடிவை மேற்கொண்டு, குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு என்ன செய்ய வேண்டுமென்று செயல்பட தீர்மானம் போடுகிறார்கள். அது அந்தப் பகுதி மக்களுக்குத் தெரிய வருவதில்லை. என்ன செய்யப்போகிறார்கள் என்ற விவரம் அவர்களுக்குத் தெரிவிக்கப் படுமானால் நல்லகாரியமாக இருந்தால் மகிழ்ச்சியடைவார்கள்; இல்லை என்றால் இப்படிச் செய்தால் இன்னின்ன பாதகங்கள் ஏற்படும், இந்த வகையிலே செய்தால் நன்மை இருக்கும் என்று எடுத்துச் சொல்வார்கள். அந்தப் பகுதி மக்கள் பிரதிநிதி கவுன்சிலில் இடம் பெற்றிருந்தால் அவர் அந்த மக்களுக்கு கவுன்சில் எடுத்த முடிவைத் தெரிவிப்பார். மக்கள் பிரதிநிதி இல்லாவிட்டால் என்ன செய்யப் போகிறார்கள் என்பது மக்களுக்குத் தெரிவதில்லை. அந்த வகையில் மதுரை மக்கள் சில கஷ்டங்களை அனுபவித்தார்கள். அத்தகைய கஷ்டங்கள் ஸ்பெஷல் ஆபீசர் இருக்கும் இடங்களில் எல்லாம் இருக்கும். ஆகையால், மக்களுடைய குறைகளை எடுத்துச்சொல்ல மக்கள் பிரதிநிதிகள் இருக்கவேண்டும். அதிகாரம் இல்லாவிட்டாலும் மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய அட்வைசரி கமிட்டி இருக்கவேண்டும். அந்த கமிட்டி அமைக்கப்பட்டால் அது மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

[திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்] [1975 அக்டோபர் 27

தவிர, ஸ்பெஷல் ஆபீசர் நிர்வாகத்தை ஒழுங்காக நடத்த வேண்டும் என்பதில்தான் அக்கறை காட்டுவார். அவருக்கு மக்களுடைய தேவைகளை உணர்ந்து கொள்ள வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. இதை ஏன் சொல்கிறேன் என்றால் மதுரையில் ஏற்பட்ட அனுபவம்தான். மதுரையில் தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாத சமயங்களில் தண்ணீர் விநியோகத்திற்கு ஷிப்ட் முறை கிடையாது. ஆனால் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும்போது தேவையை அறிந்து ஷிப்ட் மூலம் வழங்கப்படும். சமீபத்தில் தண்ணீர்க் கஷ்டம் வந்தபோது ஷிப்ட் முறையில் தண்ணீர் கொடுத்தார்கள். ஆனால் எல்லா இடங்களிலும் உரிய நேரத்தில் தண்ணீர் கிடைக்கவில்லை. காலையில் தண்ணீர் கிடைக்காவிட்டால் ஏழை எளிய மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை நேரில் பார்த்தால்தான் தெரியும். ஏனென்றால் தண்ணீர் வரும்போது தேவையான அளவு பிடித்து வைத்துக்கொள்ள அவர்களிடம் பாத்திரங்கள் கிடையாது. ஆகவே, மக்கள் இருக்கின்ற ஏரியாவைப் பொறுத்து ஏற்ற சமயத்தில் தண்ணீர் விநியோகிக்க வேண்டும். அது ஸ்பெஷல் ஆபீசருக்கு தெரியாது. ஏனென்றால் அதுபற்றி அங்கே எடுத்துச் சொல்ல மக்கள் பிரதிநிதிகள் யாரும் இல்லை. மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் அங்குள்ள சூழ்நிலைகளை எடுத்துச்சொல்லி, அதற்கேற்ற பரிகாரம் தேடிக் கொள்ள வாய்ப்பு இருக்கும். ஆகவே, மக்கள் பிரதிநிதிகள் ஆலோசனை அவசியம் வேண்டியிருக்கிறது.

நகராட்சிகளைக் கார்ப்பரேஷன்களாக ஆக்கும்போது அருகில் இருக்கின்ற பல ஊர்களை சேர்த்துக்கொள்கிறார்கள். அப்படிச் சேர்த்துக்கொள்ளும்போது நகரத்தின் மத்தியிலே இருக்கிறவர்கள் என்ன சௌகரியங்களை அனுபவிக்கிறார்களோ அதே சௌகரியங்கள் இணைக்கப்பட்ட பகுதி மக்களுக்கும் கிடைக்க வேண்டும். நகரத்தின் மத்தியிலே இருப்பதைப்போல அவர்களுக்கும் மெர்குரி லைட் வேண்டும்; தார் ரோடு வேண்டும்; குழாய்த் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க வேண்டும். இல்லை என்றால், விஸ்தரிக்கப்பட்ட பகுதி மக்களுக்குக் கஷ்டமாக இருக்கும். விஸ்தரிக்கப்பட்ட பகுதிகளுக்கும் எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க அதிக நிதி தேவைப்படும். அந்தத் தொகையை சர்க்கார் கொடுக்க வேண்டும். அவைகளை எல்லாம் எடுத்துக்கூற மக்கள் பிரதிநிதிகள் வேண்டும் என்று கூறி, இந்த மசோதாவை வரவேற்று, அமைகிறேன்



1975 அக்டோபர் 27]

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இந்த கோவை தனி அதிகாரி மசோதாவைப்பற்றி எங்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, எந்த ஒரு அமைப்பாக இருந்தாலும் அதிலே ஓட்டெடுப்பு, மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையிலே வரையறைகள் செய்யப்பட்டிருக்குமானால் போதுமான அளவுக்கு, முடிந்த அளவுக்கு அந்த ஜனநாயக அமைப்புகளைக் காப்பாற்றுவது என்பது ஒரு சிறப்பான செயலாகும். ஆனால் இதிலே ' other things being equal. ' என்று சொல்கிறார்கள். மற்றக் காரியங்கள் எல்லாம், அங்கே சிறப்பாக நடந்திருக்குமானால் ஜனநாயகத்தைக் காப்பது முறை என்ற வகையிலே இன்றைக்குக் கலைக்கப்பட்டிருக்கிற கோவை நகராட்சி மன்றத்தை நடத்தியிருக்க வேண்டுமென்று நான் கூட சொல்லிக்கொள்ள ஆசைப்பட்டிருப்பேன். ஆனால், இன்றைக்கு ஜனநாயகம் கொலை செய்யப்பட்டிருக்கிறது. ஜனநாயகம் உதாசீனப்படுத்தப்பட்டிருக்கிறது என்ற வாதத்தை இங்கே எடுத்துவைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

பொதுவாக, ஜனநாயகம், தேர்தல்கள், தேர்தல்கள் அடிப்படையிலே ஆட்சி மாற்றங்கள் என்றிருக்க வேண்டும். தேர்தல்கள் அடிப்படையிலே ஆட்சி மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று பார்க்கும்போது, கொள்கை அடிப்படையில் பல கட்சிகள் இயங்குகின்றன; பல கொள்கைகளை ஏற்று நடைபோடுகின்ற கட்சிகள் ஜனநாயக அடிப்படையில் இயங்குகின்றன என்று பொருள். ஆனால் நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள்—இவைகளைப் பொறுத்தவரையில் அதிலே அரசியல் கலப்பு என்பது சாதாரணமாக இன்றைக்கு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு தத்துவமாக இல்லை. பொதுவாக, இன்றைக்கு நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்கள் எல்லாம் மக்களுடைய அன்றாடத் தேவைகளைக் கவனிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்புகளாகும். அப்படிப்பட்ட மன்றங்கள் மக்களுடைய சார்பையும், மக்களுடைய தொடர்பையும் ஏற்படுத்துவதற்குத்தான் அந்த அமைப்புகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றனவே தவிர அங்கே அரசியல் விளையாட

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 அக்டோபர் 27

வேண்டும், அரசியல் கொள்கைகள் விளையாட வேண்டும் என்று கருதி அல்ல. ஆனால் இன்றைக்கு அங்கே அரசியல் விளையாட வேண்டும், அரசியல் கட்சிகளின் கொள்கை இடம்பெற வேண்டும், அந்த வகையிலே தேர்தல் நடைபெற வேண்டும் என்ற பிணி நம்முடைய நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல வேண்டும். ஆகையால் இன்றைக்கு நகராட்சி மன்றங்களுக்குக் கொள்கைகள் வகுக்கப் பட வேண்டும். நகராட்சி மன்றங்கள் கலைக்கப்படக் கூடாது; அவைகள் நீடித்து இருக்கவேண்டும்; ஜனநாயகம் காக்கப்பட வேண்டும் என்று சொல்வது ஒரு விசித்திரமான வாதமாக இருக்கிறது. கட்சிக் கொள்கைகளின் அடிப்படையிலே நகராட்சி, ஊராட்சி மன்றத் தேர்தல்கள் நடக்குமானால் நம்முடைய நாட்டிலே அவை எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப் பட்டனவோ அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையிலே இயங்க முடியாமல் போய்விடும். குறிப்பிட்ட நோக்கம் நிறை வேறாத நிலையில், அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் தனி அதிகாரியை நியமித்து செயல்படச் செய்ததால் ஜனநாயகம் அழிந்துவிட்டது என்று கூறுவது ஒரு விசித்திரமான வாதமாக எனக்குப் படுகிறது.

பொதுவாக,
There should be a distinction between a statutory body and Constitutional body.
'ஸ்டாச்சுட்டரி பாடி' என்று சொல்லக்கூடியது 'கான்ஸ்டிட்யூஷனல் பாடி' யால் உருவாக்கப்படுகிறது. கான்ஸ்டிட்யூஷனல் பாடி என்று சொல்லக்கூடியது அரசியல் சட்டத்தினால் உருவாக்கப்படுகிற சட்டப்பேரவை, சட்ட மேலவை, நாடாளு மன்றம் ஆகியவை. அவைகள்தான் ஜனநாயகத்திற்கு விளக்கம் தருகின்ற வகையில் பல்வேறு கட்சிகள் கொள்கைகளின் அடிப் படையிலே தேர்தல்களில் நின்று, தேர்தல்களின் அடிப்படையிலே பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஆளும் கட்சி யாக இருந்து, மற்றவர்கள் எதிர்வரிசையிலே அமர்ந்து, கொள்கைகளை விமரிசனம் செய்வதாக அமைந்திருக்கின்றன. ஆகையினாலே இங்கே தான் உண்மையான ஜனநாயகம் இருக் கிறதே தவிர நகராட்சி மன்றங்களில், உள்ளாட்சி மன்றங்களில் ஜனநாயகம் என்பதற்கு அதிகமான விளக்கம் இல்லை என்பதை



1975 அக்டோபர் 27] [திரு. எம். ஏ. லத்தீப்]

இந்த நேரத்தில் சொல்லிக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக் கிறேன். இந்த ஸ்டாச்சுடரி பாடி கலைக்கப்பட்ட காரணத்தினால் ஜனநாயகம் கொலை செய்யப்பட்டது என்று பேசக் கூடியவர்கள் கான்ஸ்ட்டிட்யூஷனல் பாடி என்று சொல்லக்கூடிய சட்டப் பேரவைகள் ஆயுளை நீடிப்பதும், குறைப்பதும், முறையாக நடக்கிற தேர்தலை நடத்துவதா, நடத்தக் கூடாதா என்ற ஐயப்பாட்டோடு இருக்கிற நிலைமைகளை உருவாக்குவதும், நடக்க முடியாது என்று சொல்வதும், நடக்கிறதோ, நடக்கவில்லையோ இன்னும் கொஞ்சம் காலம் பொறுத்துப் பாருங்கள் என்று அரசியல் சட்டத்திற்கு விரோதமாக, அதனுடைய தத்துவத்திற்கு விரோதமாக விளக்கம் தருவதும் ஜனநாயகத்திற்கு விரோதமானதா, அல்லது சாதாரண ஒரு ஸ்டாச்சுடரி பாடியை நிர்வாகக் காரணத்திற்காக கலைத்து விடுவது ஜனநாயக விரோதமானதா என்பதைப் பற்றி நல்லவர்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருக் கிறார்கள் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்

என்னுடைய அருமை நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் கேரளாவைப் பற்றிச் சொன்னார்கள். தோழமைக் கட்சி தான், இத்தகைய ஒரு காரியத்தைச் செய்து விட்டது. இதற்குக் கூட அவர்கள் துணை போனார்கள் என்று சொன்னார்கள். மறைமுகமாக திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஏற்றுக் கொண்டதற்கு நன்றி. அச்சுதமேனன் தலைமையில் கேரளாவில் இருக்கிற அரசு ஆட்சி நடத்துகிறது. மற்றக் கட்சிகள் தவறான காரியம் செய்து விட்டன. இந்தத் தவறான காரியத்தை இங்கே இருக்கிற தோழமை கட்சி யினுடைய கேரளக் கிளை தவறு செய்திருக்கிறார்கள் என்று திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொல்வார்களானால்—அப்படித் தான் அந்தத் தொனியிலேதான் அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்—அவர் என்ன விளக்கம் கூறுகிறார்களோ எனக்குத் தெரியவில்லை—அவர் பேச்சிலிருந்து கேரள முஸ்லீம் லீக் தவறு செய்து விட்டது, கேரளக் கட்சி தவறு செய்து விட்டது என்று தான் அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்று சொன்னால் நான் என்னுடைய இங்கே இருக்கிற அமைப்பின் சார்பாக கேரளாவில் இருக்கிற திரு. அச்சுதமேனன் அவர்கள் கவனத்திற்கும், கேரளாவில் இருக்கிற கருணாகரன் அவர்கள் கவனத்திற்கும், முஸ்லீம் லீக் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கும்

முஸ்லீம் லீக் அமைப்பின் கவனத்திற்கும், புது தேசிய காங்கிரசைச் சேர்ந்த நம்முடைய திரு. சுப்பிரமணியம் அவர்களுடைய குற்றச்சாட்டை வைக்கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் வழக்கறிஞர் என்பதை நான் அறிவேன். அதற்காக அவர் நான் பேசாததைப் பேசியதாகச் சொல்ல வேண்டாம். பேசித்தான் வலுவூட்ட வேண்டுமென்று அவர் எண்ணினால் நான் பரிதாபப்படுகிறேன். அப்படி நான் சொல்லவில்லை. கேரளாவில் நடந்ததைப்பற்றிச் சொன்னபோது கேரளாவில் உங்கள் கட்சி சேர்ந்திருக்கிறது, அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள், அதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம், நமக்குத் தெரியாது, அதைப் பற்றி நான் கருத்துக் கூறுகிற நிலையில் இல்லை, அவர்களும் சேர்ந்து தான் செய்திருக்கிறார்கள், இது உண்மை என்று சொன்னேனே தவிர . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, கேரளாவில் செய்தீர்களாவென்றால், ஆமாம் செய்தோம் என்று தோழமைக் கட்சிகளுக்குப் பாதுகாப்பு அளித்துப் பேசியிருக்க வேண்டுமே தவிர உங்களுடைய தோழமைக் கட்சியாக உள்ள கட்சியைக் குற்றம் சாட்டியது பொருத்தமாக இல்லை. ஆமாம் செய்தோம் என்று தைரியமாக ஒத்துக் கொண்டிருக்க வேண்டும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் திரு. லத்தீப் அவர்களுக்குப் பரிந்து பேசுவது பற்றி எனக்கு வியப்பு இல்லை. செய்து தீரவேண்டும். அது உங்களுடைய அரசியல், அதைப் பற்றி நான் ஒன்றும் குற்றம் சாட்டவில்லை. அந்த நிலைமை பற்றி தெரியாது. உண்மையைத் தான் சொல்கிறேன். அங்கிருக்கிற அரசு, இந்திய தேசிய காங்கிரஸ், கம்யூனிஸ்டு கட்சி, முஸ்லீம் லீக், மற்றக் கட்சிகள் சேர்ந்து அமைச்சரவையில் இருக்கின்றன. முதலில் ஒத்தி வைத்த போது இந்த போர்ட்ஃபோலியோவை வைத்திருந்தவர் முஸ்லீம் லீக் அமைச்சரவர்கள், அது எனக்குத் தெரியும். தவறு செய்து விட்டார்கள் என்று குறிப்பிடவில்லை. என்ன காரணத்திற்காகச்



செய்தார்கள் என்று தெரியவில்லை. அரசியல் லாபம் தேடுகிற வீண் முயற்சியில் முதலமைச்சரவர்கள், அருமை நண்பர் திரு. லத்தீப் அவர்கள் ஈடுபடவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நாங்கள் அரசியல் லாபம் தேடுகிற முயற்சியில் என்றைக்கும் ஈடுபடுவதில்லை, திரு. சுப்பிரமணியம் அவர்களைப் போல.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, எங்களுக்கு அரசியல் லாபம் தேட வேண்டிய அவசியமும் கட்டாயமும் இல்லை. நான் சொன்னதற்குப் பிறகு இப்போது திருத்திக் கொண்டு கேரளாவில் அப்படிச் செய்யவில்லையென்று சொல்கிறார்கள். ஆகவே நான் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேரளாவில் எடுத்த நடவடிக்கை நியாயமான நடவடிக்கை, நியாயத்தின் அடிப்படையில் எடுத்திருக்கிறார்கள் என்று திரு. சுப்பிரமணியம் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னது வேறு. திரு. லத்தீப் அவர்களுடைய நிலைமையைக் கண்டு பரிதாபப்படுகிறேன். நான் சொன்னதைத் திரித்துச் சொல்லி வாதம் பண்ண வேண்டாம். அப்படிப் பரிதாபமான நிலைமையில் இருந்தால் அவர் ஏன் பேசவேண்டும். நான் அவர்களுடைய செயலை ஆதரிக்கவும் இல்லை, கண்டிக்கவும் இல்லை. அந்த நிலைமையிலும் நான் இல்லை. அவர்கள் என்ன காரணத்திற்காகச் செய்தார்கள் என்ற விவரம் தெரியாதபோது, விவரம் தெரியாது கண்டிக்கிற பழக்கமும், ஆதரிக்கிற பழக்கமும் எனக்குக் கிடையாது. உண்மையை மட்டும் தான் சொன்னேனே தவிர விமரிசனம் செய்யவில்லை. அதைப் பற்றி அபிப்பிராயம் கூறுகிற நிலையில் நான் இல்லை.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, இரண்டுமில்லாத இரண்டான் கெட்டான் நிலைமையில் திரு சுப்பிரமணியம் அவர்கள் இருக்கிறார்கள்.

**THIRU A. SUBRAMANIAM:** Sir, I take strong objection to this remark.

இப்படிப் பேசுவதாக இருந்தால் நானும் பேச முடியும். பக்கத்தில் இருக்கிற நண்பரைப்பற்றி நான் அப்படிப் பேச விரும்பவில்லை.

I have only stated a fact of history, you can verify it. I am not atributing any motive. I am not criticising anybody. I am neither supporting that action nor criticising that action. This I have made plain.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஜே. ஜேம்ஸ்): கொஞ்சம் இருங்கள். திரு. லத்தீப், திரு. சுப்பிரமணியம் இரண்டு பேர்களும் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் இருக்கிறவர்கள். அதை மறந்துவிட்டு கேரள சட்டமன்றத்தில் இருப்பதாக நினைத்துக் கொண்டு பேசுவதை விட்டு விட்டு. . .

THIRU M. A. LATHEEF: Unnecessarily the hon. Member is. . . .

MR. CHAIRMAN (THIRU J. JAMES): Please sit down. நாம் இப்போது தமிழ் நாடு சட்டமன்றத்திலிருந்து கோவை கார்ப்பரேஷன் ஸ்பெஷல் ஆபீசர் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நினைவு கூர்ந்து தொடர்ந்து உரையாற்றுமாறு திரு. லத்தீப் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF: Sir, I am not travelling in the field which is not provided in the Bill which is before the House for our consideration. The hon. Member has taken us to some other land and their Ministers were unnecessarily criticised.

He says that he does not know the reasons why the civic elections were postponed and that too this has come from the mouth of the hon. Member who belongs to the Ruling Party which is a partner of the Coalition Government in Kerala. So far as Kerala politics is concerned, here is a Member belonging to the Ruling Party who criticised the Ministers there.

Now I am here just to say a few words. I am not the first person who raised this question. The credit goes to my hon. friend, Thiru Subramaniam. He has used the expression



'parithapam' with reference to me. Don't worry. The expression 'parithapam' is only reserved for him. I am not a person who requires 'parithapam'. . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஜே. ஜேம்ஸ்): ஒரு நிமிஷத்தில் முடித்து விடுங்கள்.

THIRU M. A. LATHEEF: Sir, my time was taken up by the hon. Member.

ஆகையினாலே இந்தப் பிரச்சனை என்பது எல்லா மாநிலங்களிலும் உள்ள நிலை. ஜனநாயகம் என்பது இந்த அமைப்புத்தான். இந்த அமைப்பே இன்றைக்கு சந்தேகத்திற்குரிய அமைப்பாக மாறி விட்ட நிலையில் ஏதோ பல்வேறு நிர்வாக காரணங்களுக்காக சில அமைப்புகள், இந்த மன்றத்தால் ஏற்படுத்தப்பட்ட சில அமைப்புகளுடைய தேர்தல்களை ஒத்தி வைப்பதும் அதற்குத் தனி அதிகாரிகளை நியமிப்பதும் ஒரு நிர்வாகத்திற்கு உட்பட்ட விஷயமாகும்.

எனக்குக் கூடத் தெரியும். பஞ்சாயத்து துறை, முனிசிபல் துறை, எங்களுடைய கட்சியைச் சேர்ந்த அமைச்சரவர்களிடத்தில் கேரள மாநிலத்தில் இருக்கிறது. 10 ஆண்டுகளுக்கு பஞ்சாயத்து தேர்தல் நடத்தப்படவில்லையென்றால் குற்றஞ் சொல்ல மாட்டேன். பல காரணங்களால் நடத்தப்படாமல் இருக்கிறது.

இங்கே தனி அதிகாரியைக் கோவைக்கு நியமித்து இருக்கிறார்கள். இதிலே என்னுடைய கருத்தை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மதுரை நகராட்சி. மாநகராட்சியாக மாற்றப்பட வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்ட போது, அங்கே ஏற்கெனவே இருந்த நகராட்சி தொடர்ந்து நடத்தப்பட்டு, அந்த நகராட்சித் தலைவர் மாநகராட்சியினுடைய மேயராக அந்த மதிப்பைப் பெறுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால் கோவையிலே ஏனோ அந்த முறை கடைபிடிக்கப்படவில்லை. நான் கோவைக்குச் சென்ற போது நேற்றைய தினம் மக்கள் என்னிடத்தில் கேட்டார்கள். ஆகையினாலே இதில் நிர்வாகச் சிக்கல்கள் இருக்குமானால் அரசு அதற்கு விளக்கம் தரலாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I am very happy that at least now Thiru Latheef has found out the truth.

THIRU M. A. LATHEEF: Don't have undue happiness.

(முற்பகல் 11-00)

அதற்குக் காரணங்களை இந்த அரசு விளக்க வேண்டும். பலவித மான தப்பு அபிப்பிராயங்கள் அங்கே நிலவுகின்றன. ஏன் இப்படி நடந்தது, சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர் அங்கே நகராண்மைக் கழகத் தலைவராக இருந்து கொண்டிருக்கிறபோது,

மதுரையில் அண்ணன் முத்து தலைவராக இருந்தபோது, அவரை நகராட்சி மேயராக ஆக்கியதுபோல இங்கே இந்தச் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த நகராண்மைக் கழகத் தலைவராக இருந்த வரை, ஏன் மாநகராட்சி மேயராக ஆக்கவில்லை? இவருக்கும் அண்ணன் முத்துவுக்குக் கொடுத்த வாய்ப்பைத் தந்திருக்க லாமே என்று கேட்கப்படுகிறது. அப்படித் தராததற்கு ஏதாவது காரணம் இருக்கலாம். இருந்தால் அது என்ன காரணம் என்பதை இங்கே விளக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆட்சியில் இருக்கக் கூடியவர்கள் நகராட்சி, மாநகராட்சி நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டும். மக்களுக்குத் தேவையான வசதிகள் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும் என்கிற நிலைமை ஏற்படுகிறபோது இத்தகைய சட்டத்தைக் கொண்டு வருவதற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். ஆகவே, நான் இந்தச் சட்டத்தை ஆதரித்து அமர்கிறேன், வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. எம். சுரேந்திரன்: ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரி பிகேஷன். நண்பர் லத்தீப் அவர்கள் பேசும்போது அரசியல் லாபம் பெறுவது எங்களுக்கு நோக்கம் இல்லை என்று சொன்னார்கள். எமர்ஜன்ஸி அறிவிக்கப்பட்டவுடன் அதை வரவேற்று, அவரது கட்சியில் தீர்மானமே போட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படி இருக்கிறபோது எமர்ஜன்ஸியை ஆதரிக்காத இந்த அரசின்மீது தீர்மானம் வந்தபோது எதிராக வோட்டுப் போட்டார்களே.

MR. DEPUTY SPEAKER: That does not arise now.



திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திலே சுருக்கமாக சிறப்பு அதிகாரி போடப்படுவதுபற்றி மட்டும் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். சிறப்பு அதிகாரி நியமனத்தைப் பற்றிமட்டும் பேசி, அரசியலுக்குள் போகாமல் இருந்திருந்தால், இந்த விவாதம் நீண்டு நடந்திருக்காது. சிறப்பு அதிகாரியை நியமனம் செய்வதற்கு அதிகாரம் கோரி அரசாங்கம் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறது. நிச்சயமாக சிறப்பு அதிகாரியை நியமனம் செய்வதில் எந்தவிதமான ஆட்சேபனையும் இருக்க முடியாது என்ற கருத்தினைக் கூற விரும்புகிறேன். சில இடங்களில் சிறப்பு அதிகாரி நியமனம் செய்யப்பட்ட பிறகு நிர்வாகம் எவ்வளவு சீராக நடந்து கொண் டிருக்கிறது. பல்வகையிலும் சிக்கனம் செய்யப்பட்டு, வருமானம் அந்த மாநகராட்சிகளுக்குப் பெருகியிருக்கிறது என்பதை நாம் கணித்துப் பார்த்து பேசுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். பல்வேறு இடங்களில் தேங்கியிருந்த பணங்களை வசூல் செய்வதில் சிறப்பதிகாரிகள் எவ்வளவு முனைப்பாகச் செயலாற்றினார்கள் என்பதை எல்லாம் நாம் அறிவோம். ஆகவே, சிறப்பதிகாரி நியமனம்பற்றி ஆட்சேபனை இருக்க முடியாது.

அது ஒருபுறம் இருக்கட்டும். சிறப்பு அதிகாரிகளை என்ன என்ன காரணங்களுக்காக நியமிக்கிறோமோ அந்தக் காரணங்களை, அவர்களுக்கு அளிக்கப்பட்ட பணியினை சீக்கிர மாக முடிக்க வேண்டுமென்ற தாக்கீதை அனுப்ப வேண்டும். அந்தப் பணிகளை அவர்கள் முடித்தவுடன் அந்த மாநகராட்சி தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு இந்த அரசாங்கம் முன் வரவேண்டும் என்று தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள் கிறேன்.

யார் ஜனநாயகவாதி, எந்தமுறையில் யார் யார் இருக்கிறார்கள் என்பதை எல்லாம் திருமதி அனந்தநாயகி அம்மையார் குறிப் பிட்டார்கள். அவர்கள் சொன்ன ஒரு குற்றச்சாட்டுக்கு நான் விளக்கம் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகி றேன். ஜனநாயகத்தைப் பற்றி ஆளும் காங்கிரசும் சரி, மத்தியில் இருந்தும் சரி பல்வேறு கருத்துக்களைக் கூறிக்கொண்டிருக் கிறார்கள். இப்போது தேர்தலையே ஒத்திப்போட்டுவிடுவார்களோ என்கிற ஐயம் எங்களுக்கு எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. நாங்கள் இங்குள்ள ஆளும்கட்சிக்கு கைப்பாவையாக இருக்கிறோம் என்று

அம்மையார் குற்றச்சாட்டைக் கூறினார்கள். நான் தங்கள் மூலமாக 71 இல் என்ன நடந்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 11 பாராளுமன்ற சீட்டுகளுக்காக அவர்கள் எப்படி நமது மாநிலத்திலுள்ள ஆளுங்கட்சிக்குக் கைப்பாவையாக இருந்தார்கள் என்பதை நாடு அறியும். அதை திருமதி அனந்த நாயகி அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள். மத்திய நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் இடைத்தேர்தலில் நின்றபோது அவர்களை இங்குள்ள ஆளுங்கட்சியினர் எப்படி ஆதரித்தார்கள் என்பதும் எல்லோருக்கும் தெரியும். கண்ணாடி மாளிகையில் இருந்துகொண்டு கல்லை வீசவேண்டாம் என்று வினயபூர்வமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஜனநாயகத்திற்கு யார் காவலர் என்ற பிரச்சினையை இந்த நேரத்தில் சொல்வது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். அண்மையில் இந்தியப் பிரதமர் அவர்கள் Discipline should be self-imposed and not State-imposed. என்கிற அழகான கருத்தினைச் சொல்லியிருக்கிறார்கள். இதை யார் கூறியிருக்கிறார்கள் என்பதை எல்லாம் படித்தவர்கள் புரிந்துகொள்வார்கள். ஜனநாயகத்தைப்பற்றி பேசுகிற நேரத்தில் இன்றைக்குத் தேர்தலே வருமா வராதா என்பது சந்தேகமாக இருந்துகொண்டிருக்கிறது. மறைந்த எங்களது பெருந்தலைவர் காமராஜர் நான்கு மாதங்களுக்கு முன்பாகவே தேர்தலை எதிர்நோக்கி அந்தச் சவாலை சமாளிக்கத் தயாராய்த்தான் இருந்தார்கள். அவர்கள் எங்கெங்கெல்லாம் சென்று பிரச்சாரம் செய்தார்கள் என்பதை நாடு அறியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் மசோதாவின் மீது பேசுகிறாரா? மசோதா அரசாங்கத் தரப்பில் இருந்து கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்களைப் பார்த்துப் பேசுகிறாரா? அல்லது எங்கள் கட்சியைப் பார்த்தே பேசுகின்றாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நீங்கள் வீண் வம்புக்கு வந்த காரணத்தினால்தான் இப்படிப் பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனக்கும் சட்டம் தெரியும். சிறப்பதிகாரி நியமனத்தைப்பற்றி மட்டுமே எல்லோரும் பேசியிருந்தால் நானும் இந்தப் பிரச்சினைகளுக்குள் எல்லாம் புகுந்திருக்கமாட்டேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



நாட்டில் இருக்கிற நிலைமைகளை எல்லாம் நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோம். சட்டசபையில் நாங்கள் பேசுவது எதுவும் பத்திரிகையில் கூட வரவில்லை. சட்டசபையில் பேசுவதில் ஒருசில துண்டு துண்டாக வருகிறது. ப்ரீ சென்சார்ஷிப் இருக்கிறது. நம்முடைய நாட்டில் எந்தவிதமான குழப்பமும் ஏற்படவில்லை. எந்தவிதமான கொந்தளிப்பும் ஏற்படவில்லை. நாட்டில் எந்த விதமான கொந்தளிப்பும், குழப்பமும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் இப்படிச் செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு . . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே: மிஸ்டர் பொன்னப்ப நாடார்—ஒன் மினிட் ப்ளீஸ்.

மாநில சட்டசபையில் பேசுகிற விஷயங்கள் வெளியில் எல்லாப் பத்திரிகைகளிலும் வந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் கூட ரூபகமாக பத்திரிகையில் பாருங்கள் என்று சொன்னார். முன்பு எப்படி இங்கு நடக்கும் நிகழ்ச்சிகள் வந்தனவோ, அப்படித்தான் இப்போதும் வந்து கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாநில அரசை விமர்சித்தால் கட்டாயம் வரும். மத்திய அரசை விமர்சித்தால் கட்டாயம் வராது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நான் ஒவ்வொரு பத்திரிகையையும் பார்க்கிறேன். ஒரு பத்திரிகையிலும் இங்கு பேசிய பேச்சுக்கள் அப்படியே முழுமையாக வரவில்லை. அது மத்திய அரசாங்கத்தின் விவகாரம். சட்டசபையில் நாம் அதை விமர்சிப்பது பொருத்தமானது அல்ல.

தேர்தலைப்பற்றி திட்டவட்டமான முடிவு ஏற்பட்டாக வேண்டும். யார் யாருடைய கைப்பாவையாக இருக்கிறார்கள் என்பதை நான் சொல்ல வேண்டிய தேவையில்லை. குறிப்பாக திருவிதாங்கூரைச் சேர்ந்த நான் தமிழ்நாடு காங்கிரசைச் சேராத நான் இப்படிச் சொல்லலாமா என்றெல்லாம் பேசினார்கள். மொழிவழி மாநிலங்கள் அமைந்தபோது அந்தப் பகுதி தமிழ்த் தாயகத்தோடு சேரவேண்டும் என்பதற்காக நாங்கள் போராடிய

நேரத்தில் நீங்கள் எல்லாம் எங்களுக்கு எதிராக அங்கே வந்து பிரச்சாரம் செய்தீர்கள். கட்டின பணம் கூட உங்களுக்குக் கிடைக்கவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான் மாத்திரம் அல்ல. தலைவர் காமராஜரும் வந்தார். நாங்கள் எல்லோரும் வந்து உங்களுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தோம் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** காமராஜரும் வந்தார், உங்களுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தோம் என்றால் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டோடு சேரவேண்டும் என்பதற்கு எதிராகப் பிரச்சாரம் செய்தீர்களா? பொன்னப்ப நாடாருக்கு எதிராகவா? . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அன்று தலைவர் காமராஜர் அவர்கள் வந்தார்கள், எங்களுக்கு எதிராகப் பேசினார்கள் என்றெல்லாம் அம்மையார் அவர்கள் கூறுகிறார்கள். இந்த நேரத்திலே, தலைவர் காமராஜரைப்பற்றி யாரும் குறைத்துப் பேசவில்லை. ஆனால், மொழிவழி மாநிலம் வருகிற நேரத்திலே நாங்கள் குமரி தமிழகத்தோடு சேர வேண்டுமென்று குமுறிக் கொண்டிருந்தோம். அந்தக் குமுறலைத் தமிழகத்திலேயிருந்த எல்லா கட்சிகளும் ஆதரித்தன, இல்லையென்று சொல்லவில்லை.

அதற்காக எங்களுக்குத் தண்டனையும் தந்தார்கள். கேரளத்திலே துப்பாக்கிப் பிரயோகம் நடந்தபொழுது எங்களையெல்லாம் அடித்துத் துன்புறுத்தியதை மறக்கமுடியாது. சகோதரிகளை, தாய்மார்களை பல்வேறு கஷ்டங்களுக்கு ஆளாக்கினார்கள். பல்வேறு இன்னல்களை எல்லாம் அனுபவித்தோம். நான் இந்தப் பிரச்னையை மறுமுறையும் விவாதிப்பது பொருத்தமில்லையென்ற காரணத்தினால், இங்கு கூற முன் வரவில்லை.

இங்கிருக்கிற பிரச்னையே தேர்தலைக் கொண்டு வரவேண்டும். மத்தியிலானாலும் சரி, மாநிலத்திலானாலும் சரி, தேர்தலை உடனடியாக அறிவிக்கவேண்டும். அதற்கு 2 மாதமும் தேவையில்லை. 3 மாதமும் தேவையில்லை. நிச்சயமாக மார்ச் மாதம் தேர்தல் வரும் என்று ஆளுங்கட்சித் தரப்பிலே. இந்த மாநிலத்தைப் பொறுத்த அளவிலேயாவது சொல்கின்ற அளவுக்கு



திருமதி அனந்தநாயகி அவர்கள் அவர்களுக்கிருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்தி நிச்சயமாக அறிவிப்பார்கள் என்று நாங்கள் எல்லோரும் கருதுகிறோம். அந்த நல்ல எண்ணத்தோடு யார், யாருடைய கைப்பாவையாக இருக்கிறார்கள் என்று அரசியல் வண்ணம் பூசிட வேண்டியத் தேவையில்லை. பெருந்தலைவர் நாட்டிலேயிருந்து மறைந்த துக்கத்திலேயிருந்து நாங்கள் மீளவில்லை. அவர் மறைந்ததிலிருந்து நாங்களெல்லோரும் தவித்துக் கொண்டிருக்கிறோம். எங்கள் அரசியல் தந்தை காலமாகிவிட்ட காரணத்தினால் நாங்கள் அலைந்துகொண்டு தடுமாறிக் கொண்டிருக்கிறோம். எங்களுடைய உள்ளத்தைப் புண்படுத்துகிற அளவில் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் எங்களைப் பார்த்து, இங்கிருக்கிற ஆளுங்கட்சிக்குக் கைப்பாவையாக இருக்கிறோம், கருவியாக இருக்கிறோம் என்று சொல்லத் தேவையில்லை. நாங்கள் யாருடைய கைப்பாவையாகவும் இருக்கத் தேவையில்லை. நாங்கள் நல்ல முறையில் செயல்படுவோம், அரசியல் பாரம்பரியத்திற்கேற்றவாறு காந்தீய வழியிலே, அன்புத் தலைவர் காமராஜர் உருவாக்கிய வழியில் நாணயமாகச் செயல்படுவோம், நன்றியோடு செயல்படுவோம். ஒருவேளை, இவையெல்லாம் இந்தச் சட்டத்திற்குப் புறம்பாக இருந்தாலும் தாங்கள் மன்னிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அவர்களுடைய உள்ளத்தைப் புண்படுத்துகிற எண்ணம் என்றைக்கும் இருந்ததில்லை, இருக்காது. அவர் என்னைப் புண்படுத்துவதனால், எத்தனை நாளைக்குத் தான் பொறுத்துக்கொண்டிருப்பது என்பதற்காகத்தான் அதைச் சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் அல்ல. அதனைத் தயவு செய்து மறந்து விடுங்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நிச்சயமாக மறந்துவிடுகிறேன். ஆனால், வேறு கட்சிக்குப் போகாதீர்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான் போகமாட்டேன். நீங்கள் திரும்பவும் புண்படுத்தினால், நான் திரும்பவும் புண்படுத்த வேண்டிவரும்.

[1975 அக்டோபர் 27

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மசோதாவில் பல்வேறு நல்ல கருத்துக்களை இங்கே எடுத்து வழங்கி, இந்த மசோதாவை நல்லவகையில் நிறைவேற்றித் தருகின்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்ததற்காக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நகரசபைத் தேர்தல்களைப் பற்றி குறிப்பாக இன்றையதினமும் எல்லோரும் பேசினார்கள். நகரசபைத் தேர்தல்கள் சம்பந்தமான மசோதா நேற்றையதினமே இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் நேற்றைய தினம் கலந்து கொள்கின்ற வாய்ப்பு இல்லாத காரணத்தாலோ அல்லது நேற்றையதினம் வரமுடியாத காரணத்தாலோ, மீண்டும் அதே விவாதத்தை இன்றையதினமும் தொடங்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் நல்ல அளவுக்கு அவற்றுக்கெல்லாம் நல்ல விளக்கத்தையும் அவர்களே இன்றையதினம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் நகரசபைத் தேர்தல்களுக்கென ஒரு விதியும் இல்லையென்ற காரணத்தினாலே நான் அதைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லையென தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோயம்புத்தூர், மாநகராட்சி மன்றமாக உருவாக்கப்படுவதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள். அதற்காக, அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அரங்கநாயகம் அவர்கள் பேசும்பொழுது அந்த நகரசபை ஏதோ சில ஊழல் காரணங்களாலே கலைக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். இந்த மசோதாவில் அப்படியில்லை. இந்த மசோதாவிலே இருப்பது, அவர்களுடைய பதவிக்காலம் முடிந்தபிறகு அந்த நகரமன்றம் முடிவு செய்யப்பட்டு மாநகராட்சியாகின்ற காரணத்தினாலே இவ்வாறு முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதுதான் சரியே தவிர, வேறு பலவித காரணங்களாலே அந்த நகராட்சி மன்றம் கலைக்கப்பட்டது என்று சொல்வது சரியானதாகாது என்பதையும் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுது நான் பேசியதைக் குறிப்பிட்டுச் சொன்ன அமைச்சரவர்கள், வேறு காரணங்கள் இல்லையென்று



1975 அக்டோபர் 27] [திரு. ச. இராமச்சந்திரன்]

சொன்னார்கள். அப்படியென்றால் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்ல இருக்கிறீர்கள் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஆத்திரம் அறிவுக்குச் சத்துரு. ஆகவே, அவசரப்பட வேண்டாமென்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் எழுப்பிய பிரச்னை நியாயமான பிரச்னை. அந்த நகரமன்றத்திலே இருக்கக்கூடியவர்களை அப்படியே ஏன் நீடிக்கக் கூடாது என்று அவர்கள் கேட்டார்கள். மதுரை நகராட்சி மன்றம் மாநகராட்சி மன்றமாக ஆக்கப்பட்டபொழுது அந்த நகரமன்றத்திலே இருந்தவர்கள்—உறுப்பினர்கள், துணைத் தலைவர், தலைவர் ஆகிய அத்தனை பேரும் அப்படியே நீட்டிக்கப்பட்டதைப் போல், ஏன் கோவை நகராட்சியிலே நீட்டிக்கப்படவில்லையென்று அவர்கள் கேட்டார்கள். அதிலே என்ன உண்மையான சிக்கல் ஏற்பட்டது என்றால், மதுரையை மாநகராட்சியாக்க வேண்டுமென்று 1971-ம் ஆண்டே முடிவெடுக்கப்பட்டு, அதற்கான மசோதா எந்தெந்தப் பகுதிகளை அந்த மாநகராட்சியிலே சேர்க்கலாம், எப்படி வார்டுகளைப் பிரிக்கலாம் என்பன போன்றவைகளை ஆய்ந்து மசோதா கொண்டு வருவதற்கு, அந்த நகராட்சிமன்ற உறுப்பினர்கள் பதவிக்காலம் நமக்குப் போதிய அவகாசத்தைத்தந்தது. ஆனால், கோவை நகராட்சியை நாம் மாநகராட்சி மன்றமாக்கவேண்டுமென்று முடிவெடுத்தவுடனே மாநகராட்சிக்கு எந்தெந்த பகுதிகளைச் சேர்க்க வேண்டும், எப்படி வார்டுகளைப் பிரிக்க வேண்டும் என்றெல்லாம் ஆய்ந்து அதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு நமக்கு அவகாசமில்லை. அதற்குள் நகரசபை உறுப்பினர்களுடைய பதவிக்காலம் முடிவடைந்தது. ஆகவே, இந்தச் சூழ்நிலையிலே நாம் தனி அதிகாரியைப் போட்டு, அதை நடத்த வேண்டியதாயிற்று. உண்மையிலே சிறுபான்மையிலிருப்பவர் மேயராக வந்திருந்தால், அது ஜனநாயகத்திற்கே ஒரு வெற்றியாக இருந்திருக்கும் என்பதையும் அந்த வாய்ப்பு நாம் முடிவெடுக்க வேண்டிய காலம் அத்தகைய சூழ்நிலையை உருவாக்காமல் போய்விட்டதால்தான் இல்லாமல் போய்விட்டது என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு நகரமன்றங்களையெல்லாம் அரசியல் காரணங்களாலே கலைக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொல்வதற்கு அடிப்படையான ஒரு காரணம் உண்டு. ஏனென்றால், அவர்கள் அப்படி செய்தவர்கள், ஆட்சியிலே இருந்த காலத்தில். ஆகவே, அப்படிச் சொல்கிறார்களே தவிர உண்மையான காரணம் அரசியல் அல்ல. இவர்கள், திருநெல்வேலியை எப்படி கலைத்தார்கள், அது ஹைகோர்ட் வரைக்கும் சென்றது, ஹைகோர்ட்டிலே என்ன தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதையெல்லாம் மறந்திருக்க மாட்டார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த பொழுது கொண்டு வந்த சட்டத்திலே அவர்கள் திருநெல்வேலி நகராட்சிக்கு எப்படி உயிரூட்டினார்கள் என்பதெல்லாம் நாம் சட்டமன்றத்திலே பார்த்த வரலாறு. ஆகவே, அவர்களுக்கு அப்படி தோன்றியதிலே ஆச்சரியமில்லை. அதற்கென்று வைக்கப் பட்டுள்ள விதிகளின் அடிப்படையிலேதான் செய்யப்படுகிறதே தவிர வேறு அல்ல என்பதையும் நான் எடுத்துக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஹாண்டே அவர்களும் மாண்புமிகு மருதாசலம் அவர்களும் இன்னும் மற்ற அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் பேசும்பொழுது ஒரு கருத்தைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார்கள். மாநகராட்சி என்று ஆக்குகிறபொழுது, அதற்கென என்ன திட்டங்களை வகுத்திருக் கிறீர்கள்? மாநகராட்சியாக்குவதால் வரிகள்தான் உயருமே தவிர, வசதிகள் பெருகாது எந்தெந்தப் பகுதிகளெல்லாம் சேரும் என்பனவற்றையெல்லாம் அவர்கள் எடுத்து விளக்கி னார்கள். அவற்றையெல்லாம் ஆராய்வதற்காகவும் எந்தெந்தப் பகுதிகளைச் சேர்க்கவேண்டும், எவ்வளவு பரப்பளவை உள்ளடக்க வேண்டும், என்ன வருமானம் வரும், என்ன திட்டங்களை அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்பன போன்றவற்றையெல்லாம் ஆராய்வதற்காக, பரிந்துரை செய்வதற்காக ஏற்கனவே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய அறிக்கை விரைவிலே கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் பேசியபொழுது அந்தக் குழு எத்தனை பேரைச் சந்தித்து என்னென்ன செய்தது என்றார். அக்குழு கூட 27-ந் தேதி அறிக்கை வழங்குவதாக அறிவித்தார்கள். ஆனால், அந்தக் கூட்டம் நடைபெறவில்லையென்று தெரிவித்தார்கள். அவர்



களால் தயாரிக்கப்படும் அந்த அறிக்கையிலே எந்தெந்தப் பகுதி களைச் சேர்ப்பது, என்ன வருமானத்தின் அடிப்படையில் அதை இயங்க வைப்பது, என்ன மக்கள் தொகை அடிப்படையிலே இயங்க வைப்பது என்பதையெல்லாம் ஆராய்ந்து அறிக்கை தர இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் மாநகராட்சி இயங்கும். ஆகவே, வரிகள் பெருகும், வசதிகள் குறையும் என்ற அச்சத்திற்கு இடமில்லாமல் நாங்கள் பார்த்துக்கொள்வோம் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்த படியாக தனி அதிகாரியை போடலாமா, தனி அதிகாரியைப் போட்டால் அவர் இஷ்டம்போல் நடத்துவாரே என்றெல்லாம் சிலர் அச்சத்தை இங்கே தெரிவித்தார்கள். குறிப்பாக, திரு. மருதாசலம் அவர்கள் தனி அதிகாரி இஷ்டம்போல் நடத்து வார்கள் என்று சொன்னார்கள், இஷ்டப்படி செய்ய முடியாது, சட்டப்படி தான் செய்ய முடியும்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போது தனி அதிகாரி போடுவதால் சில நேரங்களிலே சிறப்பாக அமைந்துவிடு கிறது என்ற கருத்தையும் சொன்னார்கள். தனி அதிகாரியோடு விட்டுவிடக்கூடாது என்பதுதான் அரசாங்கத்தினுடைய எண்ணம். அதே நேரத்திலே ஆலோசனைக் குழு போடலாமென்ற கருத்தை பல்வேறு தரப்பினர் எடுத்துக் கூறினார்கள். ஆலோசனைக் குழு அமைப்பதுபற்றி ஆட்சேபணையில்லை, ஆனால் ஆலோசனைக் குழு போட்டுவிட்டால் அதோடு முடிந்துவிட்டது ..என்ற எண்ணம் ஆளுங்கட்சிக்கு வந்தாலும் வரலாம், எதிர்க்கட்சிக்காரர்களுக்கு வரக்கூடாது. தேர்தல் வரவேண்டும், தேர்தல் நடத்த வேண்டும், தனி அதிகாரி இருக்கக்கூடாது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட் டவர்கள் இருக்கவேண்டுமென்ற முறையிலே எண்ணவேண்டுமே தவிர, ஆலோசனைக் குழுவோடு விட்டுவிடலாமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கூடுமானவரையில் தனி அதிகாரி இல்லாமல் இருக்கவேண்டும், அதுதான் மக்களாட்சியினுடைய நல்ல இலக்கணம் ஆகும்.

சில நேரங்களில் தனி அதிகாரி வைத்து நடத்தக் கூடிய சூழ் நிலை ஏற்படுகிறது. நான் ஏற்கனவே சொன்னதுபோல் மாநகராட் சிகளின் தேர்தல்களை நடத்துவதற்கு, தொகுதிகளைப் பிரிப்ப தற்கு தடையிருக்கிறது, பொதுத்தேர்தல்கள் வருகிறவரைக்கும் தொகுதிகளைப் பிரித்து வார்டுகளைப் பிரித்து வாக்காளர் பட்டியல் தயாரிக்க முடியாது, பொதுத் தேர்தல் சம்பந்தமாக இப்போது

வாக்காளர் பட்டியலைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். தேர்தல் கமிஷனிலிருந்து இப்போது எந்தவிதமான டீலிமிட்டேஷனும் செய்யக் கூடாது என்று உத்தரவு வந்திருக்கிறது. கோயம்புத்தூர் மாநகராட்சியாக இருந்தாலும் மதுரை மாநகராட்சியாக இருந்தாலும், சென்னை மாநகராட்சியாக இருந்தாலும் வார்டுகளைப் பிரித்து அமைத்து தேர்தல்கள் நடத்தக் கூடிய சூழ்நிலைகள் இல்லை. பொதுத் தேர்தல் எப்போது வருமோ அதுவரையிலே இந்தத் தடை இருந்தாலும் இருக்கலாம், பொதுத் தேர்தல் எப்போது வருமோ என்ற நிலைமை இருக்கிறது. அதுவரை தனி அதிகாரி இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது, பொதுத் தேர்தல் வரும் வரையில் ஒன்றும் செய்யக் கூடாது என்ற தடையுத்தரவு இருக்கிறது, ஆகவே பொதுத் தேர்தல் வரும் வரை இந்த நிலைமை நீடிக்கும், அதுவும் விரைவிலே வந்தால் இதுவும் விரைவிலே வரும்.

ஆலோசனைக் குழு அமைத்தால் எப்படிப்பட்ட பலனுள்ளதாக இருக்கும் என்பதை ஆலோசிக்க வேண்டும். அங்கே செய்ய வேண்டிய பல்வேறு திட்டங்களைப்பற்றியெல்லாம் சொன்னார்கள், அவற்றையெல்லாம் கோவை மாநகராட்சியின் தனி அதிகாரிக்கு அனுப்பி, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று கூறி, பொதுவாக எல்லோரும் இதை வரவேற்றிருக்கிறார்கள் என்பதால் இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி: "1975-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, "1975 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும்."





தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (2) அறிவிப்புகள் — தொடர்ச்சி.

### (ஆ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/75) இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## (3) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு* எண் 31/1975) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன்.

சட்ட மன்ற உறுப்பினர்கள் ஏற்கெனவே பெற உரிமையுள்ள வழக்கமான பயணப்படி தவிர, ஒரு நிதியாண்டில் இந்திய ரயில்வேக்கள் அதிலும் மொத்தம் 10,000 கிலோ மீட்டர் தொலைவிற்கு முதல் வகுப்பில் பயணம் செய்ய அவர்களுக்கு இரயில்வே பயணச் சீட்டுகள் கொடுக்கப்படலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது. இது குறித்து இம்மாமன்ற முதல்வர் 10—4—1975 அன்று அறிவிப்பு ஒன்றைச் செய்தார்.

சட்ட மன்ற உறுப்பினர்கள் தாங்கள் தொலைபேசி வசதிகள் பெற்றிருந்தாலும் அல்லது பெற்றிராவிட்டாலும் அவர்களுக்கு 1975 ஏப்ரல் 1 ஆம் நாளிலிருந்து மாதமொன்றுக்கு ரூ. 100

* 24—10—1975 ஆம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

தொலைபேசி படி வழங்கப்படலாம் என்றும் அரசு முடிவு செய்துள்ளது. இது குறித்து இம்மாமன்ற முதல்வர் 10-4-1975 அன்று பேரவையில் அறிவிப்பு ஒன்றைச் செய்தார்.

1968 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் நாளுக்கு முன்னரல்லாத ஒரு நாளிலிருந்து செயல் வடிவம் கொடுக்க இயலும் வகையில், தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் கீழ் விதி ஒன்று இயற்றப்படலாம். அமைச்சர்கள், பேரவைத் தலைவர் முதலியோருக்குக் கொடுக்கப்பட்ட அரசு மோட்டார் வண்டிகளைப் பயன்படுத்துவதற்கும் பராமரிப்பதற்குமான விதிகளில் சில திருத்தங்கள் வெளியிடப்பட்டன. இவற்றிற்கு 1—11—1967-லிருந்தே செயல் வடிவம் கொடுக்கப்பட்டது.

மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்கும் பொருட்டு, 1967 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாளிலிருந்தே செயல் வடிவம் பெறும் வகையில் விதிகள் இயற்றுவதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் அளித்து மேற்சொன்ன 14-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவைத் திருத்த வேண்டியுள்ளது.

அவையின் முன் வைக்கப்பட்டுள்ள இச்சட்ட முன்வடிவில் மேற்கூறியதற்கான விதித்துறைகள் உள்ளன. இந்த முன்மொழிவை நிறைவேற்றித் தருமாறு இம் மாமன்றத்தை வேண்டுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை எம்.எல்.ஏ. என்ற முறையில் வரவேற்கிறேன். ரயில்வே டிக்கட் இதுவரையில் கொடுக்கப்படாததற்குக் காரணம் என்ன, மார்ச் மாதத்திலே அனவுன்ஸ் செய்து இப்போது அக்டோபர் மாதத்திலேதான் சட்டமாகக் கொண்டுவருகிறீர்கள். இன்னும் 3 மாதம்தான் ஆயுசு இருக்கிறது, இப்போது ஏதோகோலத்திலே அள்ளித் தெளித்தாளாம் என்கிற மாதிரிக் கொண்டு வருகிறீர்கள். 10 ஆயிரம் கிலோ மீட்டர் என்று கொடுக்கப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கது, இனி மேலாவது காலதாமதம் செய்யாமல் உடனடியாகக் கொடுக்க வேண்டும். எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. அன்றைக்கு நான் சட்டசபையில் இல்லை. அன்றைக்கு மூன்று முறை தொடர்ச்சியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுக்கு





பென்ஷன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலேயும் சுயநலமா? யாராக இருந்தால் என்ன? ஏன் சுயநலம்? மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டால்தான் உண்டு என்றால் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு இடையிலே பிரேக்கா?

திருமதி த. ந. அனந்தநாயகி: இடையிலே பிரேக் இருக்கிறவர்கள்தான் நிறைய இருக்கும். ஒரு தொகுதியிலேயே இரண்டு முறை தொடர்ந்து ஜெயித்துக் கொண்டு வருகிறவர்கள், அவர்களுக்கு இல்லை, ஒவ்வொரு தேர்தலுக்கும் ஒவ்வொரு தொகுதியாக மூன்று முறை வருகிறவர்கள் இருக்கிறார்கள் . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அம்மையார் பதறத் தேவையில்லை, யோசித்துக் கொண்டிருக்கிறோம், 12 ஆண்டுகள் என்று இருக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம், ஆகவே அதை விட்டுவிட்டு வேறு பேசலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் பதறாவிட்டால் இந்த விளக்கம் வராது. நான் பதறியதால்தான் இந்த விளக்கம் வந்தது. இந்த விளக்கம் தந்ததற்காக நன்றி.

திரு. கே. டி. கே. தங்கமணி: உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவானது ரொம்பவும் காலம் தாழ்ந்து வந்திருக்கிறது என்பதை நான் முதன் முதலிலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். உறுப்பினர்களுக்குச் சில வாய்ப்புக்களும் வசதிகளும் கொடுக்கப்படும் என்று அறிவித்து எல்லா பத்திரிகைகளிலும் வந்தது. ஏப்ரல் மாதத்திற்குப் பின்னால் மே, ஜூன், ஜூலை என்றாகி இப்போது அக்டோபரில்தான் கொண்டுவரப்படுகிறது. கிட்டத்தட்ட ஒரு வருஷம் முடியக்கூடிய நிலையில் பத்திரிகையில் அறிவித்ததற்கும் இதை அமல் செய்யக்கூடிய நிலைமைக்கும் இருக்கிறது என்றால் நான் இந்த அரசாங்கத்தினுடைய நடவடிக்கையைக் குறை சொல்வதாக நினைக்கவேண்டாம், முதலில் அறிவித்தபடி அமல்நடத்துவதற்காக அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் சரியாக ஆலோசனை சொல்லவில்லை என்ற அளவிற்கு

(முற்பகல் 11-30)

மட்டும் சொல்லிக்கொள்கிறேன். காரணம், இப்போது இரயில்வே பாஸ் கொடுக்க வேண்டுமென்று முடிவெடுத்தார்கள். மற்ற

மாநிலங்களிலேயெல்லாம் இரயில்வே பாஸ் கொடுத்திருக்கிறார்கள். அந்த இரயில்வே பாஸைக் கொடுக்கும்பொழுது ஏற்கனவே அரசாங்கத்திலோ அல்லது சட்டமன்றத்திலோ அறிவித்தபிறகு அதை அமல் நடத்த உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நான் இன்றைக்கு அறிய விரும்புவது, அறிவித்த பிறகு ஐந்து அல்லது ஆறு மாதங்களுக்குப் பிறகு அதை அமல் நடத்துவதற்கான நடவடிக்கை வேறு எந்த மாநிலத்திலேயாவது எடுக்கப்பட்டிருக்கிறதா? அந்தமாதிரியிருந்தால் அது முன்மாதிரியாக இருக்கும்.

எங்களுக்கு, அதாவது உறுப்பினர்களாக இருக்கின்ற எங்களுக்கு என்ன சிரமம் இருக்கிறது என்றால், சாதாரணமாக ஜனங்கள் மத்தியிலே என்ன கருத்து இருக்கிறது என்றால், இவர்களுக்கு ஃப்ரீ இரயில்வே பாஸ் இருக்கிறது என்ற ஒரு கருத்து உருவாகியிருக்கிறது. ஆனால் எங்களுக்கு ஃப்ரீ, இரயில்வே பாஸ் இன்னும் கிடைக்கவில்லை; ஒன்று, இரயில்வே பாஸ் இல்லை என்றாவது சொல்லிவிடலாம். அப்படியில்லாமல் இந்தமாதிரி நிலையைச் செய்தது ரொம்பத் தவறு. இதற்கிடையிலே உண்மையிலேயே இதற்கு அவசரச் சட்டம்தான் போட வேண்டியிருக்கிறது என்ற நிலைமை ஏற்பட்டால் அவசரச் சட்டம் போட்டுத்தான் இதைச் செய்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்த இரயில்வே போர்டு ஏற்றுக் கொள்ளும் என்ற நிலையிலிருந்தால் அதற்காக அவசரமாக இரண்டு நாட்கள் சட்டசபையைக் கூட்டியிருக்கலாம். மே மாதம் இரண்டாம் தேதி சென்ற கூட்டம் நடந்தது. இரயில்வே போர்டிலிருந்து இதற்கு ஆட்சேபனை இருக்கிறது என்றால் ஜூன் மாதத்திலேயோ அல்லது ஜூலை மாதத்திலேயோ ஏன் சட்டசபையைக் கூட்டவில்லை? அவசரச் சட்டம் போட்டாலும், ஜனங்கள் மத்தியிலே, ஜனங்களுக்கு நன்மை பயக்காமல் உறுப்பினர்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கிறது என்ற குறை வரலாம். ஆனால் சட்டமன்றத்தைக் கூட்டுவதில் என்ன தயக்கம் ஏற்பட்டது? உறுப்பினர்களின் உரிமையைப்பற்றி எடுத்துக் கொண்டால், அதுவும் இந்த அவசர காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிக உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் தொகுதிகளுக்குப் போயிருக்கும் நேரத்திலே பணம் அதிகமாகக் கொடுக்கப்படும் என்று பார்லிமென்ட் உறுப்பினர்களுக்கு இப்பொழுது நிறைவேற்றியிருக்கிறார்கள். இவ்வாறு உறுப்பினர்கள் தங்கள் தொகுதி-





களில் அதிகமாகச் செயல்பட வேண்டுமென்று உரிமைகள் தந்திருக்கும் இந்த நேரத்தில் இப்படி காலதாமதமாகச் செய்வது வருந்தத் தக்கது.

ஏன் இப்படிக் காலதாமதமாக வந்தது? வேறுவிதத்திலே உத்தரவு போட்டிருக்க முடியாதா? அப்படிப் போடுவதற்கு யார் ஆட்சேபனை செய்தார்கள்? அப்படி ஆட்சேபனை செய்திருப்பார்கள் என்று தெரிந்திருந்தால் இங்கேயுள்ள அதிகாரிகளில் யார் என்ன மாதிரி ஆலோசனை சொன்னார்கள் என்று சொன்னால் இதை அமலாக்குவதிலுள்ள கஷ்டங்கள் தெரியும். அறிவிப்பு அறிவிப்பாகவே இருக்கிறது, அமலுக்கு வரவில்லை. ஆனால் ஜனங்கள் இது அமலாகிவிட்டது என்றே நினைக்கிறார்கள். அறிவிப்7க்கும், அமலுக்கும் எவ்வளவு பெரிய இடைவெளி இருக்கிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டாக இருக்கிறது. பொதுவாக இது ஏற்கனவே அறிவித்த விஷயம்தான். அப்படி அறிவித்த காலத்தில் உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்ட விஷயமாக இருப்பதால் இந்த மசோதாவை எதிர்க்கவில்லை. ஆனால் தாமதமானதற்கு சரியான முறையில் எங்களுக்கு அல்லது இந்த மன்றத்திற்கு திருப்தியளிக்கும் காரணங்களைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள இந்த மசோதாவை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் மாதம் ஒன்றுக்கு டெலிபோன் செலவுக்காக 100 ரூபாய் அளிக்கும் இந்த மசோதாவை எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கட்சி வேறுபாடில்லாமல் வரவேற்றிருக்கிறார்கள். அதேநேரத்தில் நம்முடைய 'விப்'-ஆக இருப்பவருக்கும், 'அப்போசிஷன் பார்ட்டி லீடருக்கும்' நம்முடைய கலைஞர் அவர்கள் எவ்வளவோ வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள், கார் வசதி போன்றவைகளையெல்லாம் செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த பில்லிலே டெலிபோன் பில்லுக்காகக் கொடுக்கப்படும் கட்டணம் அப்போசிஷன் லீடருக்கும், விப்புக்கும் கிடையாது, அவர்களுக்கு இல்லை என்ற முறையிலே அமைந்திருக்கிறது. அதற்குக் காரணம் அவர்கள் அலுவலகத்திலே டெலிபோன் இருக்கிறது, ஆகவே அவர்களுக்கு இந்த அலவன்ஸ் தேவையில்லை என்று அதிகாரிகள் முடிவு

செய்திருக்கக் கூடும். ஆனால் அவர்களது வீடுகளிலே டெலிபோன் இருப்பதை மறுக்க முடியாது. ஆகவே, அவர்களுக்கும் டெலிபோன் அலவன்ஸ் கிடைக்கும் வகையில். மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களும் கலந்து விப்புக்கும், டெப்டி லீடருக்கும் இந்த டெலிபோன் அலவன்ஸ் கிடைக்கும் வகையில் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல டெப்டி ஸ்பீக்கராக இருப்பவர்களுக்கு நாம் மற்ற வசதிகளைச் செய்து கொடுத்திருந்தாலும் அவர்களுக்கு 'ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ்' என்று 100 ரூபாய்தான் கொடுக்கிறோம். ஆனால் பொதுவாக அவர்களுக்கு சென்னை போன்ற நகரங்களில் 100 ரூபாயில் எப்படிப்பட்ட வீடு கிடைக்கும் என்பதை ஓரளவு எண்ணிப் பார்த்து, 'அக்காமடேஷன் கண்ட்ரோலர்' மூலம் வீடு கிடைத்திருந்தால் அதற்கு எவ்வளவு ரெண்ட் கொடுக்கிறார்களோ அந்த ரெண்டையாவது அரசாங்கம் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அம்மையார் அவர்கள் அவர்களுக்காக மட்டும் வாதாடிக்கொண்டார்கள். மூன்று தடவைகள் தொடர்ந்து இல்லாமல் விட்டுவிட்டு இருந்தால் எங்களுக்குப் பென்ஷன் கிடையாதா என்று கேட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் மூன்று முறை தொடர்ந்து இருந்தால் 'ஃபுல் பென்ஷன்' என்று இருக்கிறது, அவ்வாறு சென்ற கூட்டத்தொடரிலே முடிவு செய்தோம். அதை வரவேற்கிறோம். ஆனால் என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், அரசாங்க ஊழியர்களுக்கு ஒரு சட்டம் இருக்கிறது, 25 ஆண்டுகள் கடைசிவரையில் பணி செய்தால் ஃபுல் பென்ஷன், ஆனால் 20 ஆண்டுகள் பணிபுரிந்து விட்டு ஓய்வு பெற்றால் 'ப்ரப்போர்ஷனேட் பென்ஷன்' என்று இருக்கிறது. அதைப் போல மாண்புமிகு உறுப்பினர்கள் 'ப்ரப்போர்ஷனேட் பென்ஷன்' என்று . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அரசாங்க ஊழியர்களுக்கு 25 வருஷ சர்வீஸ் அல்லது 50 வயது ஆகியிருந்தால் கட்டாய ஓய்வும் இருக்கிறது. அதையும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அமல்படுத்தலாமா?





**திரு. நா. வீராசாமி:** அந்தச் சட்டம் இப்பொழுதுதான் வந்திருக்கிறது. அதற்குமுன்பே சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி முடிவெடுத்து இருக்கிறோம். ஆகவே அதுமாதிரி ப்ரப்போர்ஷனேட் பென்ஷன் கொடுக்க முடியுமா என்பதைப்பற்றி ஆராய்ந்து இந்தச் சட்டத்தில் இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பை அளித்தமைக்கு நன்றிகூறி விடைபெற்றுக் கொள்கிறேன்.

**திரு. மு. முனு ஆதி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சம்பளத் திருத்த மசோதாவை வரவேற்று நான் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய டெலிபோன் அலவன்ஸை 100 ரூபாய் என்று ஆக்கியது ஆறு மாத காலம் பொறுத்து வந்திருப்பதைப் பார்க்கும் பொழுது இந்த பத்தாயிரம் கிலோ மீட்டர் இரயில்வே பிரயாணம் எப்பொழுது வருமோ என்ற ஐயப்பாடு தோன்றுகிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இரயில் லேட்டாகத்தான் வரும்.

**திரு. மு. முனு ஆதி:** முதலமைச்சரவர்கள் எல்லாத் துறைகளிலேயும் விவரம் புரிந்திருப்பார்கள். இன்னும் 3 மாதங்கள் இருக்கப் போகிறோமோ போய்விடப் போகிறோமோ, அதற்குள் மத்திய அரசாங்கத்திற்கு எழுதி, எப்பொழுது உத்தரவு வந்து நாங்கள் பயன்படுத்தப் போகிறோம் என்று புரியவில்லை. எனவே, அதற்கு முன்கூட்டியே ஏதாவது டெம்பரரி டோக்கன் சிஸ்டம் மாதிரி நாங்கள் பிரயாணம் செய்வதற்குப் பணம் கொடுத்தாலும் சரிதான். 10,000 கிலோ மீட்டர்கள் கொடுக்கும் அந்தகைய மனப்பான்மையை வரவேற்கிறோம்.

மத்திய அரசாங்கத்திலிருந்து அனுமதி வருவதற்கு எத்தனை ஆண்டுக் காலம் ஆகுமோ? நாமே நம்முடைய அதிகாரத்திலே உள்ள இந்த டெலிபோன் அலவன்ஸைக் கொடுப்பதற்கே ஆறு மாதங்கள் ஆகியிருக்கின்றன. இது போய் என்ன ஆகுமோ? இதிலேயும் மத்திய அரசு, மாநில அரசு என்ற நிலைமையும் வருமோ என்னவோ தெரியவில்லை. இதுவரையில் ஆறு மாதங்கள் ஆகியிருக்கின்றன. இதற்குள் எத்தனையோ தடவைகள் நாங்கள் சுற்றி விட்டு வந்திருக்கலாம். எனவே, இனிமேலாவது இன்னும் மூன்று மாதம் வருவதற்குள், ஏதோ டெம்பரரி டோக்கன் சிஸ்டம் என்று

வைத்து, நம்முடைய மாநில அரசு எத்தனை கிலோ மீட்டர் என்று வரையறுத்து முதலிலே பணம் தருகிறோம், சுற்றிவிட்டு வாருங்கள் என்ற நிலையைச் செய்தால் நல்லது.

இந்த டெலிபோன் அலவன்ஸ் கொடுத்ததில் எவ்வளவோ திருப்தி. சில எம்.எல்.ஏக்கள் கேட்பதற்குப் பயப்படுகிறார்கள்.

முதலமைச்சரவர்கள் இந்த ஸ்கூட்டரை மூன்று மாதங்களுக்குள் தந்தால் நல்லது. தங்கமணி அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுற்றிப் பார்ப்பதற்கு வசதி செய்து கொடுக்கப் பட்டிருப்பதாகச் சொன்னார்கள். நமது உறுப்பினர்களுக்கு ஸ்கூட்டர் கொடுத்தால் நல்லது. பெருவாரியான உறுப்பினர்கள் பெட்ரோல் போட்டுக்கொண்டு காரில் சுற்ற முடியவில்லை. இதைச் சொல்வதற்கே சிலபேர் பயப்படுகிறார்கள். எனவே அந்த ஸ்கூட்டர்கள் 15 நாட்கள் அல்லது ஒரு மாதத்திற்குள் எல்லோருக்கும் கிடைக்கும்படி உத்தரவு போட்டால் நீங்கள் ஏற்கனவே எங்களுக்குக் கொடுத்த வாக்குறுதி உண்மையாக இருக்கும், பயன் படக் கூடியதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உடனடியாக ஸ்கூட்டர் கிடைக்க ஆவன செய்ய **வேண்டும்.**

10,000 கிலோ மீட்டர் இரயிலில் பயணம் செய்யும் முறை அமலுக்கு வருவதற்கு எத்தனை மாத காலம் ஆகுமோ என்ற நிலையிருப்பதால் முன்கூட்டியே சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து உறுப்பினர்கள் அதைப் பயன்படுத்தும் வகையில் ஏதாவது செய்தால் நல்லதாக இருக்கும். முதலில் 5,000 கிலோ மீட்டருக்காவது பணத்தைக் கொடுத்து சுற்றிப் பார்த்துவிட்டு வாருங்கள் என்று சொன்னாலும் ஏற்றுக்கொள்ளலாம். எனவே, உடனடியாக டெம்பரரி டோக்கன் சிஸ்டம் என்ற முறையில் செய்தால் நாங்கள் பயன்படுத்துவதற்கு வசதியாக இருக்கும். அதற்கு ஆலோசனை செய்து உத்தரவு இயற்றுமாறு செய்தால் மெத்த நன்றாக இருக்கும் என்று தெரிவித்து, இந்த உயர்வை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Hon'ble Deputy Speaker, Sir, I would like to represent the case of the poor City M.L.As. Unfortunately, the City M.L.As. have to pay for local calls also. The mofussil M.L.As. who come and stay in the hostel do not



have to pay for the City calls, whereas we have to pay for the same, as we are staying in our own houses in the City. Our telephone bills are mounting up like anything because of the fact that we are Assembly Members. We are not only using the telephone for Assembly work, but we have to allow the entire Constituency people to come and telephone there. If we do not do it, they will say.

'ஒரு டெலிபோன் கூடவா உங்கள் வீட்டில் நாங்கள் போன் பண்ணக் கூடாது?'

They used to say that. May I, therefore, request the Hon. Chief Minister, through you, Sir, to give at least Rs. 200 to the City Members and give Rs. 100 to the mofussil members (interruption) because City Members have to spend much more for telephone, than anybody else. That is our representation. (Interruption by Thiru Kovai Chezhian).

MR. DEPUTY SPEAKER: You have to bear your own charges.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்த அளவில் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லாமல் எல்லோரும் ஆதரிக்கிற காட்சியைப் பார்த்தோம். இது கொள்கையளவில் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பொருத்தமான முறையிலே மதிப்புக் கொடுக்க வேண்டுமென்றும், அவர்கள் பணிகள் தொடர்ந்து நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்றும் கருதி இந்த அரசாங்கத்தைப் போல் வேறு எந்த அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை இந்த மன்றத்திலுள்ள அனைவரும் அறிவோம். பல சலுகைகளை நாம் தந்திருக்கிறோம்.

இந்த நன்மைகள் ஏன் உடனடியாக வரவில்லை என்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கேட்டார்கள். அவர்களே பதிலையும் சொன்னார்கள். ஆகவே, அவர்களே பதிலையும் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

100 ரூபாய் கொடுப்பதைப் பொறுத்த அளவில் எந்த விதமான கஷ்டமும் கிடையாது. சில மாதங்களுக்கு முன்னால்தான் உத்தரவு போடப்பட்டது என்றாலும் என்றைக்கு அறிவித்தோமோ அன்றிலிருந்து தரப்படுகிறது.

[திரு. செ. மாதவன்] [1975 அக்டோபர் 27

ரயில்வே பாசைப் பொறுத்தவரை சட்டப்படி அனுமதியைத் தராமல் கொடுக்க முனைந்தால் ஏ.ஜி. அப்ஜக்ஷன் வரும். ஆகவே, அதை ரயில்வே துறையினர் ஏற்றுக்கொள்ள வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. சட்டப்படி திருத்த வேண்டுமென்று திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

நூறு ரூபாய் அலவன்சைப் பொறுத்தவரை அறிவித்த நாளிலிருந்து கிடைக்கும்.

வேறுபல நல்ல நன்மைகளும் வேண்டுமென்று கேட்டார்கள். அந்தச் சிரமங்களை எல்லாம் அரசு உணருகிறது என்றாலும் படிப்படியாகத்தான் அளிக்க முடியும். ஒரேடியாகக் கொடுத்தால் மக்களுக்குச் சந்தேகம் அல்லது வெறுப்பு ஏற்படும் நிலையும் ஏற்பட்டுவிடும். இப்போது கொடுத்திருக்கும் பல நன்மைகள் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பயன்படும் என்று கருதி இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. முனு ஆதி: ஏ. ஜி. ஆபிசுக்குச் சென்று உத்தரவாகி வரவேண்டுமென்று சொன்னார்கள். அந்தச் சங்கடம் இருக்கிறது என்றார்கள். ஆகவே, உடனடியாகப் பயன் கிடைக்கக்கூடிய முறையில் டோக்கன் சிஸ்டத்திலாவது கொடுக்க முன்வருவார்களா? மாநில அரசு பணத்தைக் கொடுக்க ஏ.ஜி. என்ன கூற முடியும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஏ.ஜி.க்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. சட்டம் போட்டு விட்டால் ஆட்சேபிக்க முடியாது. சட்டம் போடாமல் செய்தால் ஆட்சேபிக்கலாம். இடையில் சட்ட மன்றம் இல்லாத காரணத்தால் இப்போது சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அவர்கள் சொன்ன முறை நடைமுறையில் இயலாது. சட்டம் வந்ததற்குப் பின்னால் 10,000 கிலோ வரை பயணம் செய்யலாம். அட்வான்சாகக் கேட்டால் பயணம் செய்யாமலே காசு வாங்குவதாகப் பொருள் வந்துவிடும். அது முடியாது.

திரு. மு. முனு ஆதி: போன பட்ஜட்டிலேயே முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். ஸ்கூட்டர் வருமா, வராதா?



1975 அக்டோபர் 27]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** திரு. முனு ஆதி அவர்கள் இந்த வயதுக்கு மேல் ஸ்கூட்டரில் போவது நன்றாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி —

"தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5 ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, "தமிழ் நாடு, 1975-ம் ஆண்டு, சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1975) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(இ) 1975 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு மூன்றும் மற்றும் தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் —வழக்குகளை மதிப்பிடுதல் (திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1975-ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு மூன்றும் திருத்த) மற்றும் தமிழ் நாடு நீதிமன்றக் கட்டணங்கள்—வழக்குகளை மதிப்பிடுதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1975) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என நான் முன்மொழிகிறேன்.

முத்திரைத்தாள் விற்பனையாளருக்கு அனுமதிக்கப்படும் கழிவுத் தொகையை திருத்தி அமைத்தும், கழிவுத் தொகையின் புதிய வீதங்களைத் தமிழ்நாடு அரசிதழ் வெளியிடுமாறு வருவாய்

வாரியத்தை கேட்டுக்கொண்டும் — 1965 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அரசு ஆணை பிறப்பித்தது. அதற்கிணங்க, வருவாய் வாரியம், தமிழ்நாடு அரசிதழில் அறிவிப்பு வெளியிட்டது. புதிய வீதங்கள் 15-9-1965 ஆம் நாளன்று செயலுக்கு வந்தன. முத்திரைத்தாள் விற்கும் இருவர் உயர் நீதிமன்றத்தில் திருத்த வீதங்களுக்கு எதிராக ரிட் மனுக்களைத் தாக்கல் செய்தனர். வருவாய் வாரியத்தால் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிப்பு ஒரு நிர்வாகக் கட்டளை அல்லவென்றும், இது விதியில் செய்த ஒரு திருத்தமேயாகும் என்றும், திருத்திய விதி சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் வைக்கப்படவில்லை என்பதோடு இது போன்ற இத்துணை முக்கியமான ஒரு விதி சட்டமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படவில்லை என்றும் காரணம் காட்டி மேற்கண்ட ரிட் மனுக்களை சென்னை உயர்நீதிமன்றம் அனுமதித்தது.

கழிவுத் தொகை ஊதியங்களை திருத்தி அமைப்பது விதி ஒன்றால் மட்டும் செய்யப்பட வேண்டும். நிர்வாக கட்டளைகளால் செய்யப்பட கூடாது என்றும் அதுபோன்று விதிகள் சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்து, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆயம் இந்த அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தது.

திருத்த கழிவுத்தொகை ஊதிய வீதங்களை 15--9--1965 ஆம் நாளிலிருந்தே வரையறுத்தும், அரசால், 1965 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் வெளியிடப்பட்ட ஆணைகளுக்கும் வருவாய் வாரியத்தால் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கும், செல்திறன் அளித்தும் 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் சட்டத்தின் கீழும் தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு நீதி மன்றக் கட்டணங்களை வழக்கு மதிப்பீட்டுச் சட்டத்தின் கீழும் விதிகளை இயற்றி அதிகாரம் எடுத்துக் கொள்ளுவதென்று அரசு தற்போது கருதியுள்ளது. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைகிறது.

இதனை ஏற்று நிறைவேற்றித் தருமாறு நான் இம் மாமன்றத்தை கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

* 24—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.





திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, ரெவின்யூ போர்டு உத்தரவுக்கு 1954-ம் ஆண்டிலே தீர்ப்பு வந்தது. அதன் அடிப்படையில் இயங்கி வந்திருக்கிறது. 21 வருஷம் ஆகி விட்டது. அதற்குப் பிறகு இரண்டு பேர் இது செல்லாது என்று ஹைகோர்ட்டில் வழக்குப் போட்டார்கள். அந்த வழக்கு நமக்குப் பாதகமாக முடிந்தது. சர்க்கார் ஹைகோர்ட்டில் டிவிஷனல் பெஞ்சுக்கு அப்பீல் செய்தார்கள். அந்த அப்பீலும் தோல்வியாகிவிட்டது. அதற்குப் பின்னால் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

சட்டசபைக்கு வைக்காமல் சர்க்கார் ஏன் ஒரு உத்தரவைப் போட வேண்டும்? அப்படிப் போடும்போது காரியதரிசிகள் சரியாகப் பார்க்கவில்லையா? 1954-ம் வருஷத்தில் போடப்பட்ட உத்தரவு என்ன என்பதைப் பற்றிச் சட்டசபையில் வைக்காததற்குக் காரணம் என்ன? சர்க்கார் கொடுக்கும் கமிஷனில் ஸ்டாம்ப் வெண்டார்களுக்குச் சாதகமும் இருக்கிறது, பாதகமும் இருக்கிறது. பாதகம் ஏற்பட்டதால் அவர்கள் ஹைகோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். என்னென்ன விஷயங்கள் என்று தெரிவிக்காமல் பொதுவாகத் திருத்தம் மட்டும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஸ்டாம்ப் ஆக்டில் இரண்டு வருஷத்திற்கு முன்னால் 6¾ ரூபாய் என்று இருந்தது இப்போது 8 ரூபாய் என்று ஆகியிருக்கிறது. பங்களா தேஷ் போராட்டத்தின்போது சர்சார்ஜ் 2½ பர்சன்ட் போட்டார்கள். மத்திய சர்க்கார் அப்போது போட்ட வரிகளை வாபஸ் வாங்கியும் நம்முடைய சர்க்கார் வைத்துக் கொண்டே இருக்கிறது.

ஜுடிசியல். 'நான்-ஜுடிசியல்' என்று இருக்கிறது. ஜுடிசியலை எடுத்துக் கொண்டால் ஜனங்கள் கோர்ட்டுக்குப் போக முடியாத நிலைமை வந்துவிடும் போல் இருக்கிறது. நியாயம் கோரிப் போனால் அதிகப்படியாக செலவாகும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 'நான்ஜுடிசியலை' எடுத்துக் கொண்டாலும் அதிகந்தான். சர்க்கார் வேண்டுமென்றே ஏற்றிக் கொண்டு போகிறது. மத்திய தர வர்க்கத்தினர் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தைப் பற்றி ஒருசில கருத்துக்களைக் கூறுவது என் கடமை என்று கருதுகிறேன்.

1963 செப்டம்பர் 15-ம் தேதியிலிருந்து இந்தச் சட்டம் அமலுக்கு வரும் என்று ஒரு திருத்தம் இதில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. உயர் நீதிமன்றத்தில் இரண்டு பேர்கள் தங்களுக்குக் கொடுக்கிற டிஸ்கவுண்ட் தொகை குறைவாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக போர்டிலிருந்து பிறப்பித்திருக்கிற ஆணை செல்லுபடியாகாது என்ற அடிப்படையில் அவர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அவர்களுடைய ரிட் அனுமதிக்கப்பெற்று அதன்மீது அரசாங்கம் உச்சநீதிமன்றத்திற்கு வழக்குத் தொடர அனுமதி கேட்டார்கள். அதுவும் பலன் அளிக்கவில்லை. கடைசியாக இந்தச் சட்டமன்றத்தை அணுகி வாலிடேஷன் என்ற முறையில் இந்தச் சட்டத்தைத் திருத்தி அமைப்பதற்காக வந்திருக்கிறார்கள். உண்மையிலேயே ஸ்டாம்ப் கட்டணத்தைப் பொறுத்தவரையில் இன்று இது ஒரு டாக்ஸா அல்லது பீஸா என்ற பிரச்சினை எழுகிற ஒரு நிலை இருக்கிறது. சாதாரணமாக சர்வீஸ் சார்ஜ் என்று சொல்வார்கள். எந்தளவிற்குத் தேவையோ அந்த அளவிற்குக் கட்டணம் வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். அதல்லாமல் இந்த மாதிரி இத்துறையில் வருவாயைப் பெருக்கிக் கொள்ளக் கூடிய முறையில் அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது சரியல்ல.

உதாரணமாக, நீதிமன்றங்களில் நாம் கொடுக்கிற மௌண்ட் தொகையைப் பற்றிச் சிந்திக்கிறவர்களாக இருந்தால் தமிழ் நாட்டில்தான் அது மிகவும் அதிகமாக இருக்கிறது என்று லா கமிஷன் கூட பல சந்தர்ப்பங்களில் தங்கள் கருத்தை எடுத்துக் கூற வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. இன்றைய கட்டணம் அதிகமாக இருக்கிறது என்று பல்வேறு வழக்கறிஞர்கள் சங்கங்கள் குறிப்பாக சென்னை நகரிலுள்ள வழக்கறிஞர் சங்கம் பல தடவை இதற்குத் தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள்.

இந்தமாதிரிச் சட்டங்கள் வருகின்றபோது ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்டுக்கு சீர்செய்கிறோம். இதில் ஸ்டாம்ப் வெண்டர்கள் ஒழுங்காக நடக்கிறார்களா என்றால் பல இடங்களில் அதிகமாகத் தொகை கொடுத்து முத்திரைத்தாள்கள் வாங்க வேண்டியதொரு நிலைமை இருக்கிறது. இந்தச் சங்கடங்களைத் தவிர்க்க முன்பு ரெஜிஸ்தர் கச்சேரிகளில் இந்தப் பத்திரங்களை வைக்க ஒரு பிரிவு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற ஒரு யோசனையை இந்த



மன்றத்தில் கூறியபோது கொள்கை ரீதியில் அது ஏற்றுக்கொள்ளப் பட்டது. அந்தத் திட்டம் இன்று கைவிடப்பட்டு ஸ்டாம்ப் வெண்டர்கள் கையில் இது சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிற ஒரு நிலையைப் பார்க்கிறோம்.

சிறிய தொகைக்கான பத்திரங்களுக்கு அதிகமாகத் தேடிக் கொண்டிருக்கிற ஒரு நிலை இருக்கிறது. குறைந்த கட்டண முத்திரைத்தாள்கள் கிடைப்பது பல இடங்களில் கஷ்டமாக இருக்கிறது. தாள்கள் கிடைக்காத காரணத்தால் அச்சிட முன்பு கஷ்டமிருந்தது. அது இப்போது நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. அரசாங்கமே அவற்றை விநியோகம் செய்வதற்கான ஏற்பாட்டினைச் செய்தால் நலமாக இருக்கும். இந்தச் சட்டத்திற்கு முன்பு போர்டிலிருந்து பிறப்பித்த விதிமுறைகள் எல்லாம் சட்ட மன்றத்தில் வைக்கப்படவில்லை. ஆகவே, அது செல்லுபடியாகாது என்ற கருத்துக்கள் எல்லாம் கூறப்பட்டிருக்கின்றன. நான் இப்போது அந்த விவரங்களுக்குள் செல்ல விரும்பவில்லை.

எவ்வளவு டிஸ்கௌண்ட் இருக்க வேண்டும் என்றெல்லாம் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. என்னைக் கேட்டால் அரசாங்கமே இந்த இலாகா மூலம் ரெஜிஸ்தர் கச்சேரியிலானாலும் சரி அல்லது தாலூகா ஆபீஸ்களிலானாலும் சரி உயர்ந்த கட்டண மௌண்ட் தொகைக்குள்ள பத்திரங்கள் எல்லாம் எப்படி விற்கப்படுகின்றனவோ அதேமாதிரி விற்பது பொருத்தமாக இருக்கும். இடைத் தரகர்கள் தேவை இல்லை என்ற கருத்து பல இடங்களில் இருந்து கொண்டிருக்கிறது. அதையும் இதை அமல்படுத்துகிற நேரத்தில் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த கோர்ட் பீஸைப் பொறுத்தவரையில் ஒரு கருத்தை இப்போது கூறவேண்டுமென்று நினைக்கிறேன். கோர்ட் பீஸ்க்கு ஒருமித்த சட்டம் நமக்கு ஏற்படவில்லை. குறிப்பாக, எங்கள் கன்னியாகுமரி பகுதி பொறுத்து ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கு ரயத்துவாரி செட்டில்மெண்ட் இல்லாததால் சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. இப்போது மார்க்கெட் வால்யு நிர்ணயிக்க வேண்டுமென்றால் இன்றிருக்கிற முறையில் ஸ்டாம்ப் ஆக்டில் சில திருத்தங்களை முன்பு செய்திருக்கிறார்கள். அந்தத் திருத்தத்தை இப்போது ரத்து செய்ய வேண்டுமென்று கடிதம் மூலம் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டேன்.

அதை ஆய்வு செய்வதாகக் கூறினார்கள். இப்போது அங்கு ரயத்துவாரி செட்டில்மெண்ட் வந்திருக்கிறது. ஆகவே மற்றப் பகுதிகளில் உள்ளதுமாதிரி அந்த அஸெஸ்மெண்ட் முப்பது மடங்கு என்ற முறையில் அந்தச் சட்டத்தை மறுமுறையும் திருத்தியமைத்து ரீப்பீல் செய்தால் இம்மாதிரியான கஷ்டங்கள் இருக்காது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போது முத்திரைத்தாள்கள் கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது. இப்போது பல்வேறு பத்திரங்களை எல்லாம் எங்கள் பகுதியில் உள்ள சிலர் கேரள மாநிலத்திற்குச் சென்று, திருவனந்தபுரத்திற்குச் சென்று பதிவு செய்கிறார்கள் அதனால் நமக்கு வரி இழப்பு ஏற்படுகிறது. அங்கு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் ஒரு சொத்தை, மரம் அல்லது பிறுமி சொத்தை கேரளா மாநில எல்லையில் இருக்கிறதை அடமானமாகவோ அல்லது ஜாமீனாகவோ வைத்துவிட்டு இந்தப் பத்திரங்களை எல்லாம் அங்கு பதிவு செய்கிற ஒரு நிலைமை ஏற்படுகிறது. அண்மையில் உயர்நீதிமன்றத்தில் இந்தமாதிரிப் பத்திரங்கள் எல்லாம், மற்ற மாநிலங்களில் பதிவு செய்திருக்கும் சொத்துக்கள் நம் மாநிலத்தில் இருந்தால் அந்தப் பத்திரங்கள் செல்லுபடியாகாது என்ற தீர்ப்பு தரப்பட்டிருக்கிறது. காம்ப்ட்ரோலர் ஆண்ட் ஆடிட்டர்ஜெனரல் அறிக்கையில் இந்த விவரங்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்தமாதிரி வரி ஏய்க்க வேண்டும் என்று மற்றப் பகுதிகளில் குறைவாக முத்திரைத்தாள் கட்டணம் இருப்பதால் அவர்கள் அங்கு செல்கிறார்கள். அப்படி வரி ஏய்ப்பைத் தடுக்கக்கூடிய வகையில் சட்டத்திருத்தங்கள் செய்ய வேண்டும். ஒருவேளை இது ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டில் செல்லுபடியாகும் என்றிருந்தாலும் அதிலுள்ள சங்கடங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 28 ஆவது செக்ஷன்படி எந்த மாநிலத்தின் தலைநகரானாலும் ரெஜிஸ்தர் செய்ய இடம் கொடுக்கிறது. ஆனால் இந்தமாதிரி வரி ஏய்க்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் செய்கிற பத்திரங்கள் எல்லாம் செல்லுபடியாகாது என்று உயர்நீதிமன்றம் கூறிய பிறகு தேவையான சட்டத்திருத்தத்தை கொண்டுவர இலாகா கவனிக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.





* திரு. வி. ஆலடி அருணா: தலைவர் அவர்களே, முத்திரைக் தாள்களை விநியோகிக்கிற முறையில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

இன்றைய தினம் இந்த முத்திரைத் தாள்களை நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் தனிப்பட்டவர்கள் விநியோகித்து வருகிறார்கள். இதை எந்த அளவிற்கு அவர்கள் தங்கள் சுயநலத்திற்கு, சூதாட்டத்திற்கு, கொள்ளை லாபத்திற்குப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது அரசுக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இன்று ரூ. 500, ரூ. 1000 பெறுமான ஸ்டாம்புகள் வாங்க வேண்டுமென்றால் அதிகமான விலை கொடுக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை இந்த விநியோகஸ்தர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அரசாங்க ட்ரெஷரிகளில் முத்திரைத் தாள்கள் வாங்கும்போது போதுமான அளவிற்கு அதிகமாக வாங்கி அதை விற்பனைக்கு வைக்காமல் தேக்கி வைக்கிறார்கள். வேண்டிய காலத்தில் அவை கிடைப்பதில்லை. அவர்களாகவே ஒரு ஆர்டிபிஷியல் ஸ்கேர்ஸிட்டியை உருவாக்கி அதிக விலைக்கு விற்கிறார்கள். இவற்றையெல்லாம், இந்தக் குறைபாடுகளை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் கூட எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும்போது சொன்னதாக எனக்கு நினைவிருக்கிறது. அந்த அளவிற்கு கொள்ளை லாபம் அடிக்கத் தனிப்பட்டவர்கள் இந்தத் முத்திரைத் தாள்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எந்த அரசு பொறுப்பிலேயிருந்தாலும் இந்தக் குறைபாடுகள் நீடித்துக்கொண்டுதான் போகும். எனவே, இந்தக் குறைபாட்டினை அறவே களைந்தெறிய முத்திரைத் தாள்கள் விற்பனை செய்வது அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்க வேண்டும். அரசாங்கம் ஒவ்வொரு பதிவு நிலையத்திலும் ஒரு தனி அதிகாரியை அல்லது தனி அலுவலரை நியமித்து அவர்கள் மூலம் இந்த முத்திரைத் தாள்களை விற்பனை செய்யலாம். அப்படி விற்பனை செய்வதன் மூலம் சுமார் 5,000 பேர்களுக்குத் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்புக் கொடுக்கிற ஒரு சூழ்நிலையும் ஏற்படும் என்று கருதுகிறேன். எனவே, இதை அரசு தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*[திரு. வி. ஆலடி அருணா] [1975 அக்டோபர் 27*

இன்னொன்று, எல்லாப் பத்திரங்களுக்கும் முத்திரைத் தாள்களை முழுமையாகப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் தேவை இல்லை. பணத்தைக் கட்ட அனுமதிக்கலாம். இன்று துணைப் பதிவு நிலையங்களில் ரூ. 500-க்கு மேல் புணம் கட்ட முடியாது. அதற்கு மேல் டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸ்திரார் ஆபீஸுக்கு போக வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருக்கிறது.. டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸுக்குப் போனால் அங்கு பலபல முறைகள் சொல்லப்படுகின்றன. இதனால் பத்திரங்கள் வாங்கித் தீர வேண்டும் என்ற நிர்ப்பந்தம் பழையபடி தலை தூக்குகிறது. இந்த நிலையைத் தவிர்க்க ஒவ்வொரு பத்திரப் பதிவு நிலையத்திலும் ஒரு தாள் போதும். மீதி தேவையான அளவு பணத்தை அங்கேயே கட்டலாம், அது ரூ. 500 என்ற உச்சநிலை இல்லாமல் எவ்வளவு ரூபாயாக இருந்தாலும் பரவாயில்லை, பதிவுக் கட்டணம் எவ்வள்வாக இருந்தாலும்சரி பரவாயில்லை பணத்தை, பதிவு நிலையத்திலேயே கொடுக்கலாம் என்ற முறையை அரசு கொண்டு வந்தால் இந்த ஊழல்களுக்கு இடம் இல்லாமல் போய்விடும். ரூ. 500-க்கு மேல் பதிவுக் கட்டணம் வருமானால் அந்தப் பத்திரங்களை அதே பத்திரப் பதிவு நிலையத்தில் பதிவு செய்ய முடியாது என்ற விதி வைத்திருப்பதால் இந்த ஊழல் பரவலாகி யிருக்கிறது, அதிகமாகியிருக்கிறது.

*(நண்பகல் 12.00)*

எனவே, இந்த ஊழலைக் களைய, கொள்ளை லாபம் அடிக்கும் தனிப்பட்டவர்களிடமிருந்து இந்தப் பத்திரம் விற்கும் உரிமை பறிக்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக, போதுமான அளவுக்குப் பத்திரம் கிடைக்கவில்லை என்றால், போதுமான பணம் கட்டினால் போதும் என்று முறை இருக்க வேண்டும். அரசாங்கத்திற்குப் பணம்தான் முக்கியமே தவிர பத்திரம் அல்ல; மக்கள் பத்திரத்தைப் பெரிதாக நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அரசாங்கத்திற்குப் பணம் தான் தேவை. அந்தப் பணத்தை ஒவ்வொரு பத்திரப் பதிவு அலுவலகத்திலும் பெற்றுப் பதிவு செய்வதற்கு வாய்ப்பு அளிக்கலாம். அதை இந்த அரசு பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



***1975 அக்டோபர் 27]***

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் முத்திரைத்தாள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல முன்வருகிறேன்.

இன்றைய தினம் முத்திரைத்தாள் கிடைப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. இதற்குக் காரணம், முத்திரைத்தாள் விற்கும் தனிப்பட்டவர்கள் அதிகம் பணம் செலுத்தி, அதை வாங்கி வைத்துக் கொண்டு வெளியில் வராமல் செய்கிறார்கள். இந்த நாட்டிலே இது ஒரு உண்மையான பிரச்னையாக இருக்கிறது. அது மட்டுமல்ல, அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள சில சட்டங்கள் கூட பலன் அற்றுப் போய்விடுகிற நிலை இருக்கிறது இதனால். முன்தேதியிட்டு முத்திரைத்தாள்களை வாங்கி வைத்துக்கொண்டு விடுகிறார்கள். அதில் சில தஸ்தாவேஜுகளைத் தயாரித்துக்கொண்டு விடுகிறார்கள். அந்தப் பத்திரங்களை முன்தேதியிட்டுக் கொடுப்பதால், அரசாங்கம் போட்ட சட்டங்கள் சில நேரங்களில் செயலற்றுப் போய்விடும் நிலைமையைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலைமையில்லாமல் இந்த முத்திரைத்தாள் வினியோகத்தை அரசாங்கமே—மாண்புமிகு ஆலடி அருணா கூறியது போல்—எடுத்துக் கொள்ளவேண்டும். அரசாங்கம் ஒவ்வொரு பத்திரப் பதிவு நிலையத்திலும், விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தி விற்பதற்கு ஏற்பாடு செய்யலாம். தாலுக்கா ஆபீசில் தனிப் பிரிவு வைத்து,

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

டிரஷரியில் பணம் கட்டி விட்டு அதைப் பெறுகிற வழியைச் செய்யலாம். அப்படி வாங்குகிறபோது, அதில் இன்ன தேதிக்கு வாஙகப் பட்டது என்று தேதி குறித்துத் தரவேண்டும். அப்படி தேதியிட்டுக் கொடுக்கப்படுமானால், அந்தத் தேதிக்கு முன்னால் முன்தேதியிட்ட பத்திரங்களைத் தயார் செய்ய முடியாது. தனிப்பட்டவர்கள் விற்பனை செய்வதால் அந்த வாய்ப்பு இருக்கிறது. அதை ஒரு சூதாட்டம் போலவே இன்றைய தினம் நடத்தி வருகிறார்கள். பத்திரங்கள் தேவையானபோது கிடைப்பது இல்லை. இரண்டு மடங்கு ரூபாய் கொடுத்தால் இரண்டு வருஷத்திற்கு முன்தேதியிட்ட பத்திரங்கள்கூட கிடைக்கின்றன. ஆகவே, அரசாங்கம் தானே விநியோகம் செய்யும் பொறுப்பை எடுத்துக் கொள்வது உதவியாக இருக்கும் என்று தெரிவித்து, ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

[திரு. கே. எ. வகாப்] [1975 அக்டோபர் 27

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இந்தத் திருத்தத்திற்கும், இங்கே பேசிய கருத்துக்களுக்கும் சம்பந்தம் இல்லை. பல்வேறு குறைகளைச் சொன்னார்கள். 1965 ஆம் ஆண்டு போட்ட உத்தரவின்மீது நீதிமன்றத்தின் தீர்ப்பு நமக்கு விரோதமாக இருந்ததன் விளைவாக அரசுக்கு இழப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்ற கருத்தில் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. பெரும்பாலும் இந்த மசோதாவை எல்லோரும் ஆதரித்தபோதிலும், பத்திர வினியோக முறையில் பல்வேறு குறைகளைச் சொன்னார்கள். அது ஓரளவிற்கு உண்மை என்பதை யாரும் மறுக்க முடியாது. அதற்காகத்தான் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பின்னாலே அப்படிப்பட்ட தட்டுப்பாடு வரும்போது, ஆங்காங்குள்ள பத்திரப் பதிவு அலுவலகங்களில் பணத்தை வாங்கிக்கொண்டு ரிஜிஸ்டர் செய்யலாம் என்று உத்தரவு போட்டு இருக்கிறோம். தட்டுப்பாடு ஏற்படுகிறது என்பது மத்திய அரசு பொறுத்த பிரச்னையாக இருக்கிறது. நாம் இடைக்கால நிவாரணம் அளிக்கும் வகையில் பணத்தை வாங்கிக் கொண்டு, ஸ்டாம்ப் பேப்பர் இல்லாமல் பதிவு செய்யலாம் என்று செய்து இருக்கிறோம்.

திரு. வி. ஆலடி அருணா: பணத்தை வாங்கிக்கொண்டு பதிவு செய்யலாம் என்று சொன்னோம். ஆனால் சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகத்தில் ரூ. 500-க்கு மேல் கட்ட வேண்டுமானால் டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்டிரார் அலுவலகத்திற்குப் போக வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படி சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகத்திற்கு சீலிங் வைத்து இருக்கிறீர்கள். அந்த சீலிங்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதைத்தான் சொல்ல வந்தேன். அந்த உரிமை இருக்க வேண்டுமானால் பணப் பாதுகாப்பு என்ற முறையில் இலாகாவிலே எதிர்ப்பு இருக்கிறது. ஆகவே, அது குறித்து ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. டிரஷரி பக்கத்தில் இருந்தால் பரவாயில்லை. டிரஷரி இல்லாத இடங்களில் ரொம்ப அதிகமான பணம் வரக்கூடிய நிலைமை இருக்குமானால், பணப் பாதுகாப்பு என்ற முறையில் ஆட்சேபணை இருக்கிறது. ஆகவே, கொள்கை அளவில் நாம் அதை ஏற்றுக் கொண்டாலும், அமல்படுத்துவதில் சில பிரச்னைகள் இருக்கின்றன. ஸ்டாம்ப் பேப்பர் கிடைக்காத காரணத்தால் அதிக விலைக்கு



1975 அக்டோபர் 27] [திரு. செ. மாதவன்]

**விற்கும் சூழ்நிலை ஏற்பட்டு மக்களுக்குத் தொல்லை இருக்கிறது என்பது கவனிக்கப்பட வேண்டிய பிரச்னை என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.**

**மற்றபடி ஸ்டாம்ப் டியூடியைப் பொறுத்தவரையில் மற்ற** மாநிலங்களுக்குச் செல்கிற பிரச்னை பற்றிச் சொன்னார்கள். மத்திய **அரசாங்கத்தின் சட்டம் ஏமாற்றப்படுகிற முறையில் வேறு மாநிலத்தில் சொத்து இல்லாவிட்டாலும், சொத்து இருப்பதாகக் காண்பித்து அங்கே பதிவு செய்வது என்பது குறித்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது.**

கோர்ட் பீஸ் பொறுத்தவரையில் நீதிமன்றத்தில் இருக்கும் பிரச்னை அது. அதை உண்மையிலேயே மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கம். அதற்காகச் சட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. நம்முடைய கட்டணத்தை எப்படி ஒரு ஸ்லாப் சிஸ்டம் முறையில் கொண்டு வரலாம் என்பது குறித்து ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். அதுதான் உயர்நீதிமன்றத்தின் கருத்தாகும். இப்போது எவ்வளவு ரிஜிஸ்டர் செய்தாலும், ஒரே காரியத்திற்கு ஒரே கட்டணமாக இருப்பதால் அவர்கள் அதிகமாகக் கட்டணம் வசூலிக்கிறீர்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, ஸ்லாப் சிஸ்டம் முறையில் அதிகமான தொகைக்கு அதிகிதம் குறைவு என்ற முறையில் சட்டம் கொண்டு வர இருக்கிறோம் என்று தெரிவித்து, இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—"1975 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு மூன்றும் திருத்த) மற்றும், தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள்-வழக்குகளை மதிப்பிடுதல் (திருத்த) சட்ட முன்வடிவு 'சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, "1975 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு மூன்றாம் திருத்த) மற்றும் தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் வழக்குகளை மதிப்பிடுதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1975) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.**

### (4) அரசினர் தீர்மானம்.

### பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை 21 (3) விதியின் கீழ் "இன்றைய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டுள்ள '2. அரசினர் சட்ட முன்வடிவுகள்' என்ற தலைப்பின் கீழுள்ள இனம் 4-ஐ, இனம் 6-க்குப் பிறகு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.**

### (2) அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(இ) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, இனாம் எஸ்டேட்டுகள், குத்தகை உடைமைகள், சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள், குத்தகை உடைமைகள், சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1975) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



### (3) அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி).

(ஈ) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, இனாம் எஸ்டேட்டுகள், குத்தகை உடைமைகள், சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் : பேரவைத் தலைவரவர்களே,** "தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, இனாம் எஸ்டேட்டுகள், குத்தகை உடைமைகள், சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 26/1963) 3 ஆவது பிரிவைச் சேர்ந்த b) பகுதியின் கீழும், தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1963) 3 ஆவது பிரிவைச் சேர்ந்த (b) பகுதியின் கீழும், தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு குத்தகை கிராமங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1963) 4 ஆவது பிரிவைச் சேர்ந்த (b) பகுதியின் கீழும் ஏனையவற்றுடன் ஏரிகள், பாசனப் பணிகள் உள்பட இனாம் எஸ்டேட் முழுவதும் ஒவ்வொரு சிறு இனாமும் அரசுக்கு மாற்றப்பட்டு எந்தவிதமான வில்லங்கமும் இன்றி அரசிடம் நிலைபெற வேண்டும்.

எஸ்டேட் ஒழிப்பு குறித்த வழக்கு ஒன்றில் நில உடைமையாளர் ஒருவரின் தனிப்பட்ட உடைமையாக உள்ள ஏரி ஒன்று தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1948) 3 (b) பிரிவின்கீழ் அரசுக்குச் சேராது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து உள்ளது. எனவே (தனியார் ஏரிகள், ஊருணிகள் உள்பட) ஏரிகள், ஊருணிகள் அனைத்தும் அரசுக்குச் சேர வேண்டியது அவசியம் என்று கருதப்பட்டது. அப்போதுதான்

---

* 24—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

பக்களின் பயனுக்காக அவற்றை அரசு பேணி வரமுடியும். அதற்கிணங்க மேற்சொன்ன காரியத்திற்காக தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு 49 ஆவது சட்டத்தின் மூலம் தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1948) விதித் துறை இயற்றப்பட்டுள்ளது.

இனாம் எஸ்டேட்டுகள், சிறு இனாம்கள், குத்தகைக் கிராமங்கள் ஆகியவற்றில் உள்ள (தனியார் ஏரிகள், ஊருணிகள் உள்பட) ஏரிகள், ஊருணிகள் அனைத்தும் நேர்விற்கேற்ப, அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அல்லது நியமிக்கப்பட்ட நாளிலிருந்து அரசிடம் நிலைபெற்றுள்ளதாகக் கருதப்பட வேண்டும் என்றும் அத்தகைய தனியார் ஏரி அல்லது ஊருணி குறித்து ரயத்துவாரி பட்டா எதுவும் வழங்கப்படக் கூடாது என்றும், அத்தகைய தனியார் ஏரி அல்லது ஊருணி குறித்து ஏற்கனவே வழங்கப்பட்ட ரயத்துவாரி பட்டா எதுவும் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் அத்தகைய இனாம் எஸ்டேட், சிறு இனாம், அல்லது குத்தகை கிராமம் குறித்து கொடுக்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை மீண்டும் முடிவு செய்யப்பட வேண்டும் என்றும் தற்போது முடிவு செய்யப் பட்டுள்ளது. மேற்கண்ட முடிவினைச் செயலாக்க இச்சட்ட முன்வடிவு முனைகிறது. இச்சட்ட முன்வடிவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு நான் இப்பேரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. சீ. சங்குமுத்து தேவர்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட சட்டம் கொண்டுவருவது வரவேற்கத்தக்கதுதான். நீண்ட காலத்திற்குப் பிறகு இந்தமாதிரிச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. பல கிராமங்களில் உள்ள குளங்கள் தனியாருக்கும் குளத்தின் ஆயக்கட்டு பலபேர்களுக்குமாக இனாம் இருந்தன. அப்படிப்பட்ட குளங்களிலே தண்ணீர் பெருக்குவது யார் என்று இதுவரையில் கவனிக்கப்படாமல் இருந்ததால், அதன் காரணமாக ஏற்பட்ட சிக்கலை நிவர்த்திக்கும் வகையிலே அரசுடமையாக்கப்பட்டதன் காரணமாக அது விவசாயிகளுக்கு மிகவும் பயன் அளிக்கத் தக்கதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இன்னும் இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழே பல்வேறு வழக்குகள் கடந்த பத்தாண்டு காலமாக பல்வேறு கோர்ட்டுகளில் இருந்து வருகின்றன. சென்ற தடவை இந்தமாதிரி இனாம் ஒழிப்புச்





சட்டத்தின்கீழ், அரசுடைமையாக்கப்பட்ட பிறகு, ரிஸிவர் போடக் கூடாது என்ற ஒரு சட்டத் திருத்தத்தினைக் கொண்டு வந்தோம். அதிலேகூட ட்ரைப்யூனலில் ரிசிவர் போடக் கூடாது என்று இருப்பதினால் சிவில் கோர்ட்டுக்குப் போயிருக்கின்றார்கள். நான் சொல்ல விரும்புவது, இந்தச் சட்டத்தின் கீழே உள்ள குறைபாடுகளையெல்லாம் மொத்தத்தில் ஆராய்ந்து பார்த்து, இப்படிப்பட்டப் பிரச்சனைகள் சிவில் கோர்ட்டுகளுக்கு போகக்கூடாது என்ற அளவிலே ஒரு சட்டத்தினைக் கொண்டுவந்தால் உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் வலியுறுத்தி அதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இனாம் கிராமங்கள் பற்றிய பிரச்சனைகளைக் குறிப்பிட்ட போது அவர் தமது பகுதியில் உள்ள பிரச்சனைகளைக் குறிப்பிட்டார் என்றே கருதுகிறேன். அப்படிப்பட்ட பிரச்சனைகள் பற்றிக் கவனித்து, அவை எல்லாம் திறம்பட விரைவாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்ற முயற்சிகளை அரசு எடுத்து வருகின்றது. உயர்நீதி மன்றம், உச்ச நீதி மன்றத்தில் இப்போதுள்ள இந்த வழக்குகள் பற்றி முழுமையாக ஒரு தீர்வு காண வேண்டுமானால், அதற்கான ஒரு யோசனையை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம்.

இன்றுள்ள நிலையில் இதுபோன்ற முற்போக்கான கொள்கைகளை நிறைவேற்ற விழையும்போது, நிலப் பிரச்சனைகள், நிலச் சீர்திருத்தம், தேசிய உடமையாக்குதல் போன்ற பிரச்சனைகளில் நாம் நடவடிக்கை எடுக்க வரும்போது, அரசியல் அமைப்புச் சட்டத்தினைக் காட்டி அவற்றினைத் தடுத்துவிடும் போக்கைத் தவிர்ப்பதற்காக ஒரு நல்ல முறையினை அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழேயே உருவாக்க வேண்டும் என்ற கருத்தினைச் சொல்லியிருக்கிறோம். 1948-ல் போடப்பட்டுள்ள இந்தச் சட்டத்தினைக் குறித்து இன்றைக்கும் உயர் நீதி மன்றமோ உச்ச நீதி மன்றமோ விளக்கம் கொடுக்கலாம் என்று இருக்கிறது. இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. நாம் கொண்டுள்ள நோக்கத்திற்குப் பாதகம் ஏற்படுகின்றது என்று அங்கத்தினர் குறிப்பிடுகின்றார் என்றே கருதுகிறேன். அது உண்மை.

எனவேதான், இதுபற்றி மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். எந்தெந்தக் காரணங்களுக்காகவோ அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்படுகின்றது. ஆனால் இது போன்ற நிலைமைகளில்,

பிரச்சனைகளிலே ஏதோ நீதி மன்றங்களுக்கும் நிர்வாகத்திற்கும் சண்டை இருப்பதைப் போன்ற ஒரு தோற்றம், பிரமை இருப்பதை மாற்ற வேண்டுமானால், இந்தக் கொள்கையை ஏற்று, இதுபோன்ற சட்டங்களை உருவாக்க வேண்டும். இதற்கு ஒரு முறையை அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழே கொண்டு வந்து, இந்தச் சட்டம் முழுவதுமே பரிசீலிக்கப்பட்டு, இந்தச் சட்டம் நீதிமன்றங்களிலே செல்லுமா செல்லாதா என்பதையெல்லாம் முன்கூட்டியே பரிசீலித்து, பின்னர் அச்சட்டத்திலுள்ள வார்த்தைக்கு வார்த்தை நீதி மன்றத்திடம் விளக்கம் கேட்கும் உரிமையை ரத்து செய்யலாமா என்று முன்கூட்டியே சொல்லவேண்டும் என்ற முறை தான் பொருத்தமாக இருக்கும் என்று எழுதியிருக்கிறோம்.

அந்த முறையில் அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட்டாலொழிய இப்போதுள்ள முறையில், அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் நீதி மன்றத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகார வரம்பிற்கு உட்பட்ட முறையில், இது போன்ற காலதாமதங்கள் தவிர்க்கப்படும் என்று நினைக்கவில்லை. நமது அரசினைப் பொறுத்த வரையில், இதை வேகமாகச் செயல்படுத்த இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள், குத்தகை உடைமைகள், சிறு இனும்கள் (ஒழிப்பு--ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, இனும் எஸ்டேட்டுகள், குத்தகை உடைமைகள், சிறு இனும்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த





சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1975) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

### 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(ஈ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது வளவுகள் (அனுமதி யின்றி குடியிருப்போர்களை வெளியேற்றல்) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது வளவுகள் (அனுமதியின்றி குடியிருப்போர்களை வெளியேற்றல்) சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1975) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

**(உ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது வளவுகள் (அனுமதி யின்றி குடியிருப்போர்களை வெளியேற்றல்) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது வளவுகள் (அனுமதி யின்றி குடியிருப்போர்களை வெளியேற்றல்) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழி கிறேன்.

தமிழ்நாடு பொது வளாகங்கள் (அனுமதியற்ற அனுபோக தாரர்கள் வெளியேற்றுதல்) சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 7/1960) பொதுவளாகங்களிலிருந்து அனுமதியற்ற அனுபோக தாரர்கள் தற்போது வெளியேற்றப்படுகின்றார்கள். இச்சட்டத்தின் கீழ் உள்ள அமைப்பின் வாயிலாக பொது வளாகங்களில் அனுமதியற்ற அனுபோகதாரர்களை மாநில அரசால் நிறம்பட

* 24—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

அகற்ற முடியவில்லை. மத்திய அரசுக்குச் சொந்தமான பொது வளாகங்களிலிருந்து அனுமதியற்ற அனுபோகதாரர்களை வெளியேற்றுவதற்கு 1971 ஆம் ஆண்டு பொது வளாகங்கள் (அனுமதியற்ற அனுபோகதாரர்களை வெளியேற்றுதல்) சட்டத்தில் (மத்தியச் சட்டம் 40/1971) விரைந்தும் திறம்படவும் செயலாற்றக்கூடிய அமைப்பிற்கு வகை செய்யப்பட்டுள்ளது. மாநில அரசுக்குச் சொந்தமான அல்லது மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொது வளாகங்களிலிருந்து அனுமதியற்ற அனுபோகதாரர்களை வெளியேற்றுவதற்கு 1971 ஆம் ஆண்டு 40-வது மத்தியச் சட்டத்தில் உள்ளது போல விரைந்தும் திறம்படவும் செயலாற்றக்கூடிய அமைப்பிற்கு வகை செய்யும் சட்டம் இயற்றுவதற்கும் தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு பொது வ்ளாகங்கள் (அனுமதியற்ற அனுபோகதாரர்களை வெளியேற்றுதல்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 27/1960) ரத்து செய்வதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க இச்சட்ட வரைவு விழைகிறது.

இப்பிரேரணையை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவினைக் கொண்டுவந்திருக்கும் நோக்கம் என்ன என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லுவார் என்று நான் கருதியிருந்தேன். நான் கேள்விப்பட்டது, இந்த அரசாங்கத்தின் கீழே, குடிசை மாற்றுவாரியத்தின் கீழே ஆயிரக்கணக்கான வீடுகள், சென்னை மற்றும் பல நகரங்களிலே இருக்கின்றன. இவற்றில் குடியிருப்பவர்கள் சாதாரண ஜனங்கள்தான், ஏழைகள்தான். இந்தப் பகுதிகளிலே சரியானபடி மின்சார வசதி, சாக்கடை வசதிகள் எதுவும் கிடையாது. இன்னும் எவ்வளவோ குறைபாடுகள் இருக்கின்றன. அவ்வளவுக்கும் இடையில்தான் அவர்கள் அங்கெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களிலே பலர் ஒரு மாத வாடகை அல்லது இரண்டுமாத வாடகையைக் கொடுக்க முடியாமல் உள்ள சூழ்நிலையையும் பார்க்கிறோம். ஒரு பக்கத்தில் இப்படி ஏராளமான விடுகளைக் குடிசை மாற்று வாரியங்களின் கீழே கட்டிக்கொண்டு, ஏழை மக்களுக்கு நன்மை செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, அதே நேரத்தில் இப்படி ஒரு மாதம் இரண்டு மாதம் வாடகை கட்ட



முடியாதவர்களை வெகு துரிதமாக வெளியேற்றும் நிலைமையில் இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது வருந்தத்தக்கது என்று கருதுகிறேன்.

இதைக் கொண்டுவருவதற்காக என்னென்ன காரணங்கள் என்பதை, மூல காரணத்தை, 'ஸ்டேட்மெண்ட் ஆஃப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீஸன்ஸ்' என்று பார்க்கும் போது பழைய சட்டம் சரியான முறையில் இல்லை. ஆகவே, புதிய சட்டம் என்று இருக்கிறதே தவிர எந்த அளவிற்கு பழைய சட்டத்தின் கீழ் நீங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றீர்கள், அதாவது அரசாங்கம் பாதிக்கப்பட்டு இருக்கின்றது, பழைய சட்டத்தைக் கொண்டு எந்த முறையில் அரசாங்கம் செயலாற்ற முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன், ஆனால் அந்த விளக்கம் தரப்படவில்லை.

நான் வருத்தப்படுவதெல்லாம், குடிசை மாற்று வாரியத்தின் கீழே உள்ள வீடுகளிலே உள்ளவர்கள் ஒரு மாதம் வாடகை தரவில்லை என்றால் உடனே நோட்டீஸ் வருகின்றது, காலி செய்ய வேண்டும் என்று. எங்கே போவார்கள், ஏழை எளியவர்கள், அவர்களுக்கு நிரந்தரமான வருமானம் இருக்கிறதா என்றால் கிடையாது. ஐந்து ரூபாய் பத்து ரூபாய் கூட மாத வாடகை கொடுக்க முடியாதவர்கள், இப்போது முப்பது நாற்பது ரூபாய் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் அங்கே இருக்கின்றார்கள். குறிப்பாக என் டிஸ்பென்ஸரிக்கு அருகிலுள்ள தாண்டவராயன் தெருவில் கேள்விப்பட்டேன், ஏறத்தாழ 100, 200 பேருக்கு, அவர்கள் ஒரு மாத வாடகை கொடுக்கவில்லை என்ற காரணத்தினால், அவர்களை வெளியேற்றும் சூழ்நிலை இருக்கின்றது. உடனடியாக அதிகாரிகள் வந்து விடுகின்றார்கள் காலி செய்ய வேண்டும் என்று. ஆனால் சரியான முறையில் அவர்களில் முக்கியமானவரைக் கவனித்து விட்டால், இன்னும் ஒரு மாதம் அல்லது இரண்டு மாத காலத்திற்கு மேலும் அங்கேயே இருக்கலாம் என்ற நிலைமையும் இருக்கின்றது. They become victims of one or two self-styled officials.

அதுமட்டுமில்லாமல், கட்சிகளின் போக்கு காரணமாக, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்று இருந்தால் அவருக்கு ஒரு சட்டம், எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர் என்று இருந்தால் அவருக்கு ஒரு சட்டம் என்ற நிலைமை இருப்பதையும் பார்க்கிறோம். இந்த நிலை இல்லாமல் சட்டத்தின் முன்பு எல்லோரும் சமம் என்ற நிலைமை வரவேண்டும். குறிப்பாக, ஆயிரக்கணக்கான வீடுகளில், குடிசை

மாற்று வாரியத்தின் வீடுகளில் வாழ்கின்றவர்களின் நிலைமை இந்தச் சட்டத்தினால் மோசமாகிவிடும் என்பதை ஆலோசனை செய்யாமல், இப்படி ஒரு திருத்தத்தினைக் கொண்டு வந்து துரித மாக அவர்களை வெளியேற்றுவதற்கு வழி செய்து கொண்டால் அது வேதனையைத்தான் தருகின்றது. அதுதான் இந்தச் சட்டத்தின் நோக்கமாக இருக்கின்றது. இப்படி வெளியேற்றப் படுவதா குறித்து ஏராளமான கம்ப்ளெய்ண்ட்கள் குடிசை மாற்று வாரியத்திற்குப் போயிருக்கின்றன என்று கேள்விப்பட்டேன். அந்த கம்ப்ளெய்ண்ட் அடிப்படையிலே இந்தச் சட்டம் வந்திருக் கிறது என்று கூடச் சொன்னார்கள்; அதுபற்றி எனக்குத் தெரியாது. இதை எல்லாம் பார்க்கும்போது குடிசைமாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளிலே இருக்கக்கூடியவர் களுக்காவது பாதுகாப்புக் கொடுக்கும் வகையிலே ஒரு திருத்தம் கொண்டுவந்து, நிறைவேற்ற வேண்டும். முதலமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு இடங்களிலே குடிசை மாற்று வாரிய வீடுகளைத் திறந்து வைத்திருக்கிறார்கள். இந்த வீட்டில் இருக்கக்கூடியவர்களைக்கூட இந்தச் சட்டம் பாதிக்கும் என்று நான் அச்சப்படுகிறேன். அவர்களுடைய நிலைமைகளை நேரடியாகக் கண்டறிந்த காரணத்தினால் நான் இதை இங்கே குறிப்பிடுகிறேன். அவர்கள் பிரச்சனையில் இருக்கின்ற சிக்கல் களுக்குத் தீர்வுகாணும் வகையில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. என். கே. பழனிசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். இந்த மசோதா மத்திய சர்க்காரால் 1971 ஆம் ஆண்டு 'ஸ்பீடி எவிக்ஷன்' என்ற முறையிலே கொண்டுவரப்பட்டது. இது சர்க்காரைச் சேர்ந்த அல்லது பஞ்சாயத்து, நகராட்சியைச் சேர்ந்த இடங்களை ஆக்கிர மிப்புச் செய்திருந்தால் உடனடியாக அவர்களை வெளியேற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு கொண்டுவரப்பட்டது.

ஏற்கெனவே நகராட்சிகளுக்கு 1960 ஆம் ஆண்டு சட்டம் இருக்கிறது. எந்தபோதிலும் அடிக்கடி கோர்ட்டுக்குப் போய் தடைப்பட்டுவிடுகிறது. அந்த வகையில் மாற்றம் கொண்டுவரத் தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. 1971-லே கொண்டுவரப் பட்டச் சட்டத்தை நான்கு வருஷம் தாமதமாக்கியதற்கு என்ன காரணம் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.





இதிலே ஒரு சிறு திருத்தம் செய்யப்பட வேண்டும். ஸ்டாச்சுட்டரி பீரியடு இருக்கிறது. அதாவது 50, 60 ஆண்டுக் காலம் ஒரு இடத்தில் இருந்து, சர்க்காருக்கு வாடகையோ அல்லது வரியோ கொடுத்துக்கொண்டிருந்தால் அங்கே இருந்து அவர்களை வெளியேற்றக் கூடாது. 50, 60 வருஷம் சர்க்காருக்கோ அல்லது பஞ்சாயத்துக்கோ வரி கொடுத்து, ஆக்கிரமிப்புச் செய்திருந்தால் அவர்களுக்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் 50, 60 வருஷமாக இடையூறு இல்லாமல் இருந்து இன்றைக்குத் திடீரென்று இடையூறு வந்துவிடாது. ஆகவே, அவர்களை வெளியேற்றக் கூடாது. பாக்கியுள்ளவர்களை வெளியேற்றலாம்.

இன்னொன்று. செக்ஷன் 15-ல் கோர்ட்டுக்குப் போவது தடை செய்யப்பட்டிருக்கிறது. அதிகாரியே ஜட்ஜாக இருக்கிறார். இருக்கின்ற இடத்தின் ஒரு பாகம் அல்லது மொத்தமும் யாரைச் சேர்ந்தது, யாரைச் சேரவில்லை என்ற தகராறு ஏற்படுமானால் அதைத் தீர்த்துக்கொள்ள கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று சொல்வது சரியல்ல. கோர்ட்டுக்குப் போக அனுமதிக்க வேண்டும். இந்தத் திருத்தங்களை ஏற்று, சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டு வந்து, நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பப்ளிக் பிரிமிசஸ் ஆக்ட்டிலே எனக்கு முன்னால் பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதைப்போல குடிசைமாற்று வாரிய வீடுகளில் குடியிருப்பவர்களுக்குப் பல புதிய சங்கடங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். குடிசைகளில் இருந்தவர்களுக்கு வீடு கட்டித் தருகிறேன் என்று சொல்லி, வீட்டைக் கட்டிக் கொடுத்து, 10 ரூபாய், 15 ரூபாய் வாடகை கொடுக்க வேண்டும் என்றார்கள்.

குடிசைகளில் இருந்தவர்கள் பலர் வேலைக்குச் சென்றுகொண் டிருந்தார்கள்; அவர்கள் இப்போதும் போகிறார்கள். குடிசைக்கு வந்த பிறகு சிலர் புதிதாக வேலைக்குப் போய்க்கொண்டிருக் கிறார்கள். வேலைக்குப் போனாலும் போதவில்லை என்ற காரணத்தால் தானே குடிசைகளில் குடியிருந்தார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அவர்கள் குடிசைமாற்று வாரிய வீட்டுக்குப் போன பின்னால் திடீ ரென்று வீட்டு வாடகை ப்ளஸ் 10 சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்று சொல்வது என்ன நியாயம்? 15 ரூபாய் கொடுத்துக்கொண் டிருந்தவர்களை திடீரென்று 45 ரூபாய் கொடு என்றால் என்ன செய் வார்கள்? இது நியாயம்தானா?

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 அக்டோபர் 27

வாடகை என்று சொல்லும்போது வேலைக்குப் போகிறவர்களுக்கு எச்.ஆர்.ஏ. கொடுக்கிறீர்கள்; அதை எடுத்துக்கொள்ளுங்கள். அதற்கு மேல் 10 சதவிகிதம் ஏன் வாங்க வேண்டும்? அதற்குமேல் வாங்குவது அநியாயம்தான்.

பத்து, பதினைந்து ரூபாய் கொடுத்துக்கொண்டிருந்தவர்களிடம் திடீரென்று போய் எச்.ஆர்.ஏ. பிளஸ் 10 சதவிகிதம் என்ற விதத்தில் 40, 50 ரூபாய் என்ற விதத்தில் கொடுங்கள்; இல்லை என்றால் வெளியேறுங்கள் என்று சொல்வது என்ன நியாயம்? இதுவா குடிசையிலே இருந்தவர்களுக்குச் செய்கிற சலுகை?

அது மட்டுமல்ல; இப்போது வாடகையை 7-ந் தேதி அல்லது 10-ந் தேதி கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஏன் இப்படி 7-ந் தேதி, 10-ந் தேதி என்று கட்டாயப்படுத்த வேண்டும்? வீட்டிலே குடியிருப்பவர்கள் இரண்டு மாத அட்வான்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது அவர்கள் அந்த மாதத்தில் என்று வேண்டுமானாலும் கட்டிக்கொண்டால் என்ன? ஓடியா போய்விடுவார்கள்? இரண்டு மாத அட்வான்ஸ்தான் இருக்கிறதே. 30-ந் தேதிக்குள் எப்போது வேண்டுமானாலும் கட்டிக்கொள்ளட்டுமே.

ஏழாம் தேதி அல்லது 10-ம் தேதி கட்டிவிட வேண்டும் என்று சொல்வதற்கு எல்லோரும் உத்தியோகத்திற்குப் போய் மாதச் சம்பளமா வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்? அவர்கள் எல்லாம் தினசரிக் கூலிகளாக இருக்கிறார்கள். தினக் கூலி வாங்கி சாப்பாட்டுக்கே கஷ்டப்படுகிறார்கள். காரணம், உங்கள் ஆட்சியிலே விலைவாசி அந்த அளவுக்கு இருக்கிறது. கிலோ மிளகாய் 20 ரூபாய் விற்கிறது. அரிசி படி 5 ரூபாய்க்கு மேல் விற்கிறது. தினக் கூலி வாங்குபவன் என்ன செய்வான்?

மாதச் சம்பளம் வாங்குபவர்களாக இருந்தால் நீங்கள் சொல்வது நியாயம். அந்த அளவுக்கு எல்லோருக்கும் வேலை வாய்ப்புக் கொடுத்திருக்கிறீர்களா? இல்லையே. வேலையில்லாத் திண்டாட்டமே இங்கே இல்லை என்ற அளவுக்குப் படித்து பட்டம் பெற்ற எல்லோருக்கும் வேலை கொடுத்திருந்தால் அப்படிச் சொல்லலாம். வேலை தேடி, எம்பிளாய்மெண்ட் ஆபிசில் 3 லட்சம் பேர் பதிவு செய்திருந்தார்கள்; இப்போது அது 6 லட்சமாக உயர்ந்திருக்கிறது. 25 வயது ஆனவர்கள் இனி வேலை கிடைக்குமா என்று



1975 அக்டோபர் 27] [திருமதி த. ந. அனந்தநாயகி]

ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். வேலை கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தில் 'ஹார்ட் அட்டாக்' ஆகிச் செத்துவிடுவார்கள் போலிருக்கிறது.

'After 25 years I would not get a Government Job. What my fate is going to be?'

என்ற ஏக்கத்தில் படித்த இளைஞர்களுக்கு ஹார்ட் அட்டாக் வருகின்ற நிலை இருக்கிறது. வேலை கொடுத்துவிட்டு, 7-ந் தேதி கட்டு, 10-ந் தேதி கட்டு என்று சொல்லி, கட்டா விட்டால் வெளியேற்றலாம்.

அதோடு பப்ளிக் பிரிமிசஸ் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள் இந்த மசோதாவில். எனக்கு ஒரு சந்தேகம். பப்ளிக் பிரிமிசஸ் என்குரோச்மெண்ட் என்று சொல்லும்போது ஆங்காங்கே சிறு சிறு கோயில்களைக் கட்டியிருக்கிறார்கள். அதையும் அகற்றிவிடுவார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆங்காங்கே இருக்கின்ற பிள்ளையார் கோயில், மாரியம்மன் கோயில் (குறுக்கீடு) முண்டக்கண்ணியம்மன் கோயில் போன்ற கோயில்களைப் பொதுமக்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது என்று சொல்லி இடித்துத் தள்ளிவிடக் கூடாது. பொதுமக்களுக்கு இடையூறாக இருந்தாலும் ஆங்காங்கே சிலைகளை வைக்கிறோம். அதையெல்லாம் எடுக்கவில்லை. அந்த மாதிரி, you must understand the sentiments of the Hindus. உடனே கடப்பாறையைக் கொண்டு வரச்சொல்லி, இடித்துத் தள்ளிவிடக் கூடாது. செக்ஷன் 19-ல் எக்சம்ஷன் இருக்கிறது. Please exempt all temples on the platforms. Do not go near them.

என்கிற ஒரு சிறிய வேண்டுகோளை விடுத்து, முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மத்திய அரசு 1971 ஆம் ஆண்டிலேயே இதுபோன்ற சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

'Public Premises (Eviction of unauthorised occupants) Act, 1971' என்று ஏற்கெனவே கொண்டுவந்த சட்டம் இருக்கிறது. அதைப் போலவேதான் ஒரு சட்டத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இது ஒரு புதிய சட்டம் அல்ல.

அரசாங்கச் சொத்துக்களில் வாடகைக்கு இருப்பவர்கள் வாடகை கட்டுவதில் கால தாமதம் ஏற்படுகிறது. ஆண்டுக் கணக்கில் வாடகை கட்டாமல் இருக்கிறார்கள். ஏற்கெனவே இருக்

இன்ற சட்டத்தின்படி அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. சிலர் 'கிரானிக் டிஃபால்டர்'களாக இருக்கிறார்கள். வாடகை கொடுப்பதுமில்லை; காலி செய்வதுமில்லை. அதைத் தவிர்ப்பதற்கு இதைப்போன்றதொரு சட்டம் தேவைப்படுகிறது என்ற காரணத்தால் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்.

(பிற்பகல் 12-30)

இந்தச் சட்டத்தை நிறைவேற்றினாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியாது. அதிகாரத்தில் இருப்பவர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு நோட்டீஸ் கொடுப்பார்கள். நோட்டீஸ் கொடுத்து செக்‌ஷன் 4-ல் .

'*Issue of notice to show cause against order of eviction.*—(1) If the estate officer is of opinion that any persons are in unauthorised occupation of any public premises and that they should be evicted, the estate officer shall issue, in the manner hereinafter provided, a notice in writing calling upon all persons concerned to show cause why an order of eviction should not be made . . .' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி நோட்டீஸ் கொடுக்கும்போது வாடகை கட்ட 15 நாள் தவணை வேண்டுமென்று கேட்டால் தராமல் இல்லை; தவணை கொடுக்கிறார்கள். வாடகையே கொடுப்பதில்லை; தொடர்ந்து கொடுக்காமல் இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது.

"(2) The Notice shall—

(*a*) specify the grounds on which the order of eviction is proposed to be made; and

(*b*) require all persons concerned, that is to say, all persons who are, or may be, in occupation of, or claim interest in, the public premises, to show cause, if any, against the proposed order on or before such date as is specified in the notice, being a date not earlier than ten days from the date of issue thereof.

(3) The estate officer shall cause the notice to be served by having it affixed on the outer door or some other conspicuous part of the public premises and in such other manner as may be prescribed, whereupon the notice shall be deemed to have been duly given to all persons concerned.



(4) Where the estate officer knows or has reasons to believe that any persons are in occupation of the public premises, then, without prejudice to the provisions of sub-section (3), he shall cause a copy of the notice to be served on every such person by post or by delivering or tendering it to that person or in such other manner as may be prescribed."

எனவே, நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, விளக்கங்கள் கேட்ட பிறகுதான் உத்திரவு போடுவதாகச் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் 60 ஆண்டுகள் ஸ்டாசுடரி பீரியடாக என்ஜாய் செய்திருந்தால் கோர்ட்டிற்குப் போகத் தடை இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். ஸ்டாசுடரியாக இருந்தால் ஜெனரல் லாவில் தடை இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: When a person occupies Government property for 50 years, he gets easement right.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட நோக்கமே அரசாங்கம் இன்றைக்கு இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டைக் கட்டி வைத்திருக்கிறது. அதில் வாடகை பாக்கியும் வைத்துக்கொண்டு, வாடகையும் கட்டாமல், கட்டடத்தையும் ஒப்படைக்காமல் ஏமாற்றப் பார்க்கிறார்கள். இதை என்க்ரோச்மெண்டுக்குக் கீழே எடுக்கலாமா என்று பரிசீலனை செய்தோம். உயர்நீதி மன்றம் கூடாது என்று சொல்லிவிட்டது. மத்திய சர்க்காரிலே எப்படி அவர்களுடைய சொந்தக் கட்டடங்களுக்கென்று தனி முறையில் புரொசிஜர் வைத்திருக்கிறார்களோ அப்படி நம் அரசாங்கத்திற்குச் சொந்தமான, கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான கட்டடங்களுக்குப் புரொசிஜர் ஏற்படுத்துகிறோம். ஆகவே, இதற்காக சாதாரண காமன் லா பிரகாரம் நடவடிக்கை எடுத்தால் முன்சீப் கோர்ட்டிலிருந்து சுப்ரீம் கோர்ட் வரை போக வேண்டும், அரசாங்கத்திற்குப் பணம் விரயமாகும். உதாரணத்திற்கு இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் உள்ள வாடகை பாக்கியைப் பார்த்தால் லட்சக்கணக்கான ரூபாய் இருக்கிறது. இதற்கெல்லாம் கோர்ட்டிற்குப் போய்க் கொண்டிருந்தால் கட்டடத்தை அடுத்தவனுக்குக் கொடுக்க முடியாது. ஆகவே பொதுக் கட்டடத்திற்கென்று இந்த முறையில் கொண்டுவந்தோம்.

குடிசை மாற்று வாரியத்தைப் பற்றி விவாதிக்கப்பட்டது. அப்படி அவைகளுக்குப் பயங்கரமான வாடகை இருப்பதாகத் தெரியவில்லை. புள்ளி விவரப்படிப் பார்த்தால் சாதாரண வீடு 10 ரூபாய் வாடகைக்குக் கொடுக்கப்படுகிறது. தண்ணீர் வசதி இருந்தால் 12 ரூபாய், மின்சார வசதியும் இருந்தால் 15 ரூபாய். அவ்வளவுதான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, குடிசையில் இருக்கிறவர்கள் எங்கேயாவது வேலை செய்தால் 15 ரூபாய் என்பது இல்லை, எச்.ஆர்.ஏ. பிளஸ் டென் பர்செண்ட்; அவர்கள் இஷ்டப்பட்டால் இருக்கலாமே.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, இவர்கள் குடிசைகளில் இருந்தவர்கள்தானே. வசதியைப் பயன்படுத்திக் கொள்ளமுடியாமல் கஷ்டத்தினால் வேலையிலிருந்தும், குடிசையில் இருக்கின்றனர் என்று அவர்களைப் போட்டோ எடுத்துக் கொடுக்கப்பட்டது. இப்படி வாடகை வாங்கினால் எப்படி?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, எச்.ஆர்.ஏ. போன்ற விவரங்கள் அரசின் பரிசிலனையில் இருக்கின்றன. 10 ரூபாய் வாடகை வீடு வெளியே 70 ரூபாய் வாடகை கொடுத்தால்கூட கிடைக்காது. இப்படி எதற்கும் கோணல்டையாக பதில் சொல்வதில் அர்த்தம் இருக்க முடியாது. 10 ரூபாய் வாடகைக்குக் கொடுக்கிறோம். இந்த 10 ரூபாய் வீடு 70 ரூபாய்க்கு வெளியில் வாடகைக்குக் கிடைக்கவில்லை. நாம் 15 ரூபாய்க்குக் கொடுக்கிற வீடு 100 ரூபாய்க்கு வேறு இடத்தில் கிடைக்காது. இப்பேர்ப்பட்ட இடங்களில் குடிசை மாற்று வாரியக் கட்டடங்களில் வாடகைக்கு விட்டு சம்பாதித்துக் கொண்டிருக்கிறவர்கள்கூட வாடகை கொடுப்பதில்லை. எச்.ஆர்.ஏ. பொறுத்தவரை அரசு பரிசிலனையில் இருந்து வருகிறது.

**THIRU R. PONNAPPA NADAR:** I would l'ke to have a clarification. If the original possession is to be permissive, there is no question of prescriptive right or statutory right arising. So, what is the protection that has been given under this Act may kindly be explained because if it is permissive protection, they cannot prescribe any title as against Government or any other person. How the question of statutory right or any other right can get itself enlarged will have to be clarified by the Hon. Minister who pilots this Bill.



**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் இந்த எச்.ஆர்.ஏ. போன்ற விஷயங்கள் அரசாங்கத்தினுடைய பரிசிலனையில் இருக்கிறதென்று சொன்னார்கள். நான் பேசும்போது குறிப்பிட்டேன். நடைமுறையில் எப்படியென்றால், 25 ரூபாயிலிருந்து 35 ரூபாய்வரை வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. வேறு இடத்தில் சம்பாதனை செய்து கொண்டிருந்தால் இப்படிக் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த நேரத்தில் அப்படி வாடகை கொடுக்காமல் இருக்கக் காரணம் என்ன என்றால் இந்தக் கட்டடங்களைப் பழுது பார்ப்பது கிடையாது. எலெக்ட்ரிசிடி கிடையாது. பல இடங்களில் இப்படி நிலைமை. காட்டத் தயாராக இருக்கிறேன். இதை மாசு கற்பிக்கச் சொல்லவில்லை. இதை செம்மையாக நடத்த வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். பல இடங்களில் பழுது பார்க்கவில்லை. எலெக்ட்ரிசிடி கிடையாது. தண்ணீர் வசதி கிடையாது. இப்படிப் பிரச்சனைகள் இருக்கும்போது, இவைகள் கிடைக்கவில்லையே, ஏன் கொடுக்க வேண்டுமென்று ப்ரொடெஸ்ட் செய்கிறார்கள். அவர்கள் செய்ய வேண்டுமென்று ஊக்குவிக்கச் சொல்லவில்லை. அரசாங்கமும் தன் கடமையைச் செய்ய வேண்டும். அங்கு இருக்கிறவர்களும் செய்யவேண்டும். இப்படிச் சிக்கல்கள் இருக்கிற நேரத்தில் இந்த மாதிரிச் சட்டங்கள் கொண்டு வந்தால் பாதிக்கப்படுகிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, அவர்கள் எல்லாம் லோ இன்கம் க்ரூப்காரர்கள். குடிசை மாற்று வாரியக் கட்டடங்களில் இருப்பவர்கள். அவர்களுக்குப் போய் நடுத்தர குடும்பங்களுக்குப் போடுகிற மாதிரி எச்.ஆர்.ஏ. பிளஸ் டென் பர்செண்ட் என்று சொல்வது நியாயமில்லை. சம்பளத்தில் 5 பர்செண்ட், 10 பர்செண்ட் போடு என்று சொன்னால் நியாயம். மற்றவர்களுக்கு இருக்கிற மாதிரி அமல் நடத்துவது என்றால் எப்படி நியாயமாக இருக்கும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, குடிசை மாற்று வாரிய விவாதம் நடைபெறுவதுபோல் தோன்றுகிறது. இந்தச் சட்டத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. இந்திய நாட்டின் பல மாநிலங்களிலிருந்து இங்கே வந்து பார்த்தவர்கள் நம் தமிழ் நாடு குடிசை மாற்று வாரியத்தைப் பாராட்டுகிற காட்சியைப் பார்க்கிறோம். ஆகவே, நம்முடைய மாநிலத்தில் உள்ள நண்பர்கள் மிகைப்படுத்திச் சொல்லக் கூடாது. எங்கெங்கே இப்படி

[திரு. செ. மாதவன்] [1975 அக்டோபர் 27

அசௌகரியங்கள், வசதிக் குறைவுகள் இருக்கிறதென்று சொன்னால் பரிசிலனை செய்யலாம். எச்.ஆர்.ஏ. அரசாங்கத்தின் உத்தியோகத்தில் இருக்கிறவர்களுக்கு என்று சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்திற்கு உட்படுகிறவர்கள் கொடுக்கப் போகிறார்களே தவிர நாம் வாடகைக்கு கொடுத்தால் கிடைக்கிற எகனாமிக் ரெண்டை விட குறைத்துக் கொடுக்கிறோம். ஆகவே, இது நஷ்டத்தை ஏற்றுக் கொள்கிற திட்டம்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிற்கு இதன் விவாதத்தில் இதில் கோர்ட் உரிமையை எடுத்து விட்டதாகச் சொன்னார்கள். அப்படி. சொல்லக் கூடாது. ஒரு ஸ்பெஷல் ப்ரொசீஜர் போட்டோம். இதிலே அப்பீல் கோர்ட்டிற்குப் போக உரிமை கொடுத்திருக்கிறோம். மாவட்ட நீதிபதிக்கு அப்பீல் செய்யலாம், அதற்கு வாய்ப்பு வசதி இருக்கிறது. இந்த உரிமையை எடுக்கவில்லை. இதைப்போல ஸ்டாச்சுடரி ரைட். உரிமை என்றால் பாதிக்காது. அன்னுகுபைட் என்பதற்கு டெஃபனிஷன் இருக்கிறது. நாம் அதிகாரம் கொடுக்கிறோம், உரிமைகள் கொடுக்கிறோம். இதையெல்லாம் மீறிவிட்டதாக முடிவு செய்ததற்குப் பின்னால் இந்த ப்ரொசீஜர் வருகிறது. இப்படி முடிவு செய்ததற்குப் பின்னாலே இப்போதிருக்கிற நிலைமையில் நீதி மன்றங்களுக்குச் செல்வது என்று நாங்களும் காமன் லா பிரகாரம் சூட் போட்டு, அரியர்ஸுக்கு அமௌண்ட் கட்டி ரெகவரி பண்ணவேண்டுமென்று சொல்கிற முறை தேவையில்லை என்ற நிலையில் இந்த முறை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முறைப்படி எவிக்ஷன் செய்யலாம். வேறு ஒன்றும் இல்லை.

குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்த அளவிற்கு அங்குள்ள சாதாரண மக்களை வெளியேற்றவேண்டுமென்று சொல்வதெல்லாம் தவறாகும். அங்கே இருக்கிற அதிகாரிகளிடம் மேல் முறையீடு செய்து தவணை கேட்டுக் கொள்ளலாம். இந்த நடவடிக்கைகள் எல்லாம் முடிந்ததற்குப் பிறகு வெளியேற்றத்தான் வேண்டுமென்ற முடிவிற்கு வந்தால் இந்த முறையை பின்பற்றவேண்டுமென்று செய்திருக்கிறோம். கோர்ட்டிற்குப் போய் சூட் போடுகிற அந்த முறையை மாற்றி இதற்கென்று ஒரு தனி ப்ரொசீஜரைச் செய்கிறோம். இதிலே கோர்ட்டில் மேல் முறையீடு—அப்பீல்—செய்வதற்கு வாய்ப்பு கொடுக்கிற முறை இருக்கிறது. சட்டப்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட முறை. இதில் தவறு இல்லை. மத்திய



1975 அக்டோபர் 27] [திரு. செ. மாதவன்]

அரசாங்கமும் ஏற்றுக்கொண்டு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப் பின்பற்றி செய்கிறோம். ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி —

"தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு. பொது வளவுகள் (அனுமதியின்றி குடியிருப்போர்களை வெளியேற்றல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 22 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை. நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,

"தமிழ் நாடு 1975-ம் ஆண்டு, பொது வளவுகள் (அனுமதியின்றி குடியிருப்போர்களை வெளியேற்றல்) சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1975) சட்டமாக்கப்பட வேண்டும்"

என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஊ) தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (உற்பத்தி, பகிர்ந்தளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு :*

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே,

"தமிழ் நாடு 1974-ம் ஆண்டு, கைத்தறித் துணிகள் (உற்பத்தி, பகிர்ந்தளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1974) (கூட்டாய்வுக் குழு

* 25—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. செ. மாதவன்] [1975 அக்டோபர் 27

திருத்தியமைத்தவாறு) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என்று கோருகிறேன்.

தற்போது இருக்கும் சட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு விசைத்தறிகள் மற்றும் நூற்பு நெசவாலைகளினால் ஏற்படும் போட்டியிலிருந்து போதுமான பாதுகாப்பு அளிக்கவும், மேலும் நெசவாளர்களுக்குப் போதுமான அளவு நூலை நியாயமான விலைகளில் அளிக்கவும் இயலாமல் உள்ளது. ஆகவே, நூல் உற்பத்தி, பகிர்ந்தளிப்பு மற்றும் விற்பனையை கட்டுப்படுத்தவும், மேலும் கைத்தறித் தொழிலை பாதுகாக்கும் பொருட்டு சில ரக துணிகளை அத்துறைக்கென ஒதுக்கவும் மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

1958 ஆம் ஆண்டின் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் அமுலில் தொடர்ந்து இருந்து வரும் பருத்தித் துணிகள் (கட்டுப்பாடு) ஆணை 1948-ன் விதிகள் மேற்கண்ட குறிக்கோள்களை அடைவதற்குப் போதுமானதாக இல்லை.

இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ள இச் சட்ட முன்வடிவில் மேற்கூறிய குறிக்கோள்களுக்கான விதி முறைகள் கூட்டாய்வுக் குழுவின் ஆய்விற்கு விடப்பட்டு அக்குழுவின் திருத்தங்களுக்குட்பட்டு உள்ளன.

இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: சார் ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்திருக்கிற அறிக்கையைப் பார்க்கிறபோது முதல் அமைச்சர் அவர்களும் தொழில் அமைச்சர் அவர்களும் டெல்லி சென்று இந்த மசோதா சம்பந்தமாக விவாதம் நடத்தியபோது அவர்கள் இந்த மசோதாவிற்கு அங்கீகாரம் அளிப்பார்களா என்பது சந்தேகமாக இருக்கிறதே, அவர்களே இது சம்பந்தமாக ஒரு மசோதாவைக் கொண்டு வந்தாலும் வரலாம் என்கிறபோது நாம், இந்த மசோதாவை இங்கே நிறைவேற்றி என்ன பயன்? நாம் இதைச் சட்டமாக இங்கே கொண்டுவந்தாலும் இதனால் ஒரு பயனும்



1975 அக்டோபர் 27] [திரு. ஜே. ஜேம்ஸ்]

இருப்பதாகத் தெரியவில்லையே? இதைப்பற்றி இந்த மசோதாவை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு முன் தெளிவுபடுத்தினால் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மசோதாவை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு பேசுகிறபோதே இதை நீங்கள் சொல்லலாம். இதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ன இருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகிறபோதே இதைச் சொல்லலாம். உறுப்பினர் எழுப்பிய பிரச்சினை கூட்டுக்குழுவிலும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இதுபோன்ற மசோதாவைக் கொண்டுவர நமக்கு உரிமை உண்டு. இதை நாம் நிறைவேற்றலாம். இதை மத்திய சர்க்காரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றுதான் நாம் வலியுறுத்தி வருகிறோம். இந்தச் சட்டம் மத்திய அரசு கொண்டுவருகிற சட்டத்திற்கு இடையூறாக இருக்கிறது என்கிற நிலையே இல்லை.

இதுபற்றி அவர்களே ஒரு சட்டம் கொண்டுவர இருப்பதாக ஒரு அறிவிப்பு இப்போதுதான் வந்திருக்கிறது. அந்த அறிவிப்பைப் பார்த்தவுடன் நாம் இங்கிருந்து பிரதமருக்கு ஒரு கடிதம் கூட எழுதியிருக்கிறோம். நீண்ட நாட்களுக்கு முன்பே நாங்கள் இந்தச் சட்டத்தை தயாரித்து உங்களுக்கு அனுப்பியிருக்கிறோம், நீங்கள் இதுசம்பந்தமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வர இருப்பதான அறிவிப்பு இப்போதுதான் வந்துள்ளது. ஆகவே எங்கள் சட்டத்தை நீங்கள் பரிசீலிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பொறுத்த வரையில்—மத்திய அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தாலும், அதுசம்பந்தமாக மாநில அரசாங்கம் போட்டிருக்கிற சட்டம் மிக நன்றாக, உயர்ந்த நல்ல நோக்கத்தோடு அமைந்திருந்தால் அந்த மாநிலத்தைப் பொறுத்தவரை மாநில அரசு போட்டிருக்கிற சட்டமே அமல்படுத்தப்படவேண்டும் என்கிற நிலையை ஏற்படுத்துவதில் எந்தவிதமான இடையூறும் இல்லை. ஆகவே, நாம் இந்தச் சட்டத்தை இங்கே விவாதித்து நிறைவேற்றலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சபாநாயகர் அவர்களே, நமது சட்டமன்றத்தில் கொண்டு வந்திருக்கக்கூடிய முக்கியமான மசோதாக்களில் இது ஒன்று என்று நான் கருதுகிறேன். இந்த

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 27

மசோதா எப்படி கொண்டு வரப்பட்டது. அது சம்பந்தமாக எத்தகைய வாதப்பிரதிவாதங்கள் எல்லாம் எழுந்து ஓராவுக்கு இந்த நிலையில் மசோதா வந்திருக்கிறது என்பதை இந்த மசோதாவை அறிமுகப்படுத்தக்கூடிய நேரத்தில் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருந்தால் சற்று உதவிகரமாக இருந்திருக்கும். இது சம்பந்தமாக பரிசீலனை செய்வதற்கு அமைக்கப்பட்ட பொறுக்குக் குழுவில் நான் உறுப்பினராக இருந்தேன் என்பதையும், அங்கே நான் சில விவரங்களை எடுத்துச் சொல்லி, அங்கு நடந்த விவாதத்திற்குப் பின்னால் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிற நிலையில்—

I have alsq appended a minute of dissent

என்பதையும் முதன்முதலில் எடுத்துச்சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்:

இந்த மசோதா முதலில் வந்தநேரத்தில்—அப்போது கைத்தறியாளர்களுக்கு நூல் நியாயமான விலையில் கிடைக்காத அம்சம் இருந்தது. அந்தக் காலத்தில் சென்ற வருஷம் ஏப்ரல் மாதம் இந்த மசோதா கொண்டுவரப்பட்டது. இந்த மசோதா காலதாமதம் ஆனதற்கு நான் யாரையும் காரணம் சொல்ல விரும்பவில்லை. இந்த நேரத்தில் இந்த மசோதாவின் உள்ளே இருக்கக்கூடிய விஷயங்கள் அநேகமாக மத்திய சர்க்காரால் ஒப்புக்கொள்ள முடியாத விஷயங்கள்—தடைகள் என்பனவற்றை எங்கள் பொறுக்குக் குழுத் தலைவரே டெல்லி சென்று விவாதித்து வந்ததையும் சொன்னார்கள். இங்குள்ள ரிப்போர்ட்டுக்கு அதிகமாக பொறுக்குக் குழுவில் என்ன நடந்தது என்பதைப்பற்றி அதிகமாகச் சொல்வது முறையாக இருக்காது என்கிற காரணத்தினால் நான் அந்த விவாதத்திற்குள் போக விரும்பவில்லை.

கைத்தறியைப் பொறுத்தவரையில் நாம் கைத்தறிக்குப் பாதுகாப்பு தரவேண்டும். கைத்தறிகளை எடுத்துக்கொண்டால் தமிழகம், ஆந்திரம் ஆகிய இரண்டில்தான் அதிகமாக இருக்கும். கேரளத்தைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட டிசைன்—கண்ணனூரில் உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு எல்லாம் அனுப்பப்பட்டு வருகின்றன.

Subject to correction, I can say that the Tamil Nadu production of handloom products is at least 20 per cent of the total production. மொத்த உற்பத்தியில் கால்வாசிக்குக் குறைவாக இங்கே நடைபெறுகிறது. நம் மாநிலத்தில் அதிகமான தொழிலாளர்கள் அதில்



1975 அக்டோபர் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு அவர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் அதிக அக்கறை இருக்கிறது.

இப்போது மத்திய சர்க்காரைப் பொறுத்தும் கைத்தறித் தொழில் பாதுகாக்கப்படவேண்டும் என்கிற அக்கறை காட்டியிருப்பதோடு சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக 60 சதவிகிதம் தறிகள் கூட்டுறவில் வரவேண்டும் என்பதை இப்போது கொள்கையாக அறிவித்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக எந்தமுறையில் அவற்றைக் கூட்டுறவில் கொண்டு வருவது, எப்படிப் பாதுகாப்பு கொடுப்பது என்பதுபற்றி தென் மாநில அமைச்சர்கள் மகாநாடு திருவனந்தபுரத்தில் நடந்திருக்கிறது. பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்த்தால் அந்த மகாநாட்டில் எந்தவிதமான முடிவும் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அப்படி ஏதாவது முடிவு எடுக்கப்பட்டிருந்தால் அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் சொல்வது உதவிகரமாக இருக்கும்.

அந்த மகாநாட்டில் பங்கெடுத்துக்கொண்ட திரு. அச்சுதமேனன் அவர்கள் கூட 60 சதவிகிதம் தறியாளர்களைக் கூட்டுறவில் கொண்டு வரலாம், ஆனால் ஏற்கனவே கூட்டுறவில் வந்தவர்கள் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல், கூட்டுறவில் வந்த தறிகள் கூட செயல் படாமல் இருக்கிற நிலை இருக்கிறதே, இதைப் போக்க என்ன வழி என்று பேசியிருப்பதான குறிப்பைப் பத்திரிகையில் பார்த்தேன்.

தென்மாநிலங்களைப் பொறுத்தவரையில் அதிகமான துணிகள் தேங்கியிருக்கின்றன என்று சொல்லி மத்திய சர்க்கார் 4 கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள். அதில் தமிழ்நாட்டிற்கு 2 கோடி. இது போதாது. 20 கோடியாவது வேண்டும் என்று திரு. டி. வி. தாமஸ் சொன்னதாகப் பத்திரிகையில் படித்தேன்.

ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் தென்மாநிலங்களில் உள்ளவர்களுக்குத்தான் கைத்தறியில் அதிகமான அக்கறை இருக்கிறது. கைத்தறியைப் பற்றி என் கருத்து என்னவென்றால் இது வளரத்தான் வேண்டும். இந்தத் தொழில் நசிந்துவிடக்கூடாது. உலகத்தின் பல நாடுகளின் அனுபவத்தை வைத்துக்கொண்டு பார்த்தாலும் பழைய காலத்தில் இருந்த குடிசைத்தொழில்கள் அழிந்துவிடும் என்ற நிலைமை இல்லை. ஜனங்களின் தேவை அதிகரித்துக்கொண்டே

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 27

போகிறது. அதற்குத் தக்க உற்பத்தியாகவில்லை என்ற நிலைமை இந்த நாட்டில் இருக்கிறது. ஆகவே, கைத்தறித் துணிகளுக்கு—இந்தத் தொழிலுக்கு—நல்ல ஒரு வருங்காலம் உண்டு என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இப்போது சமீபத்தில் பிரதமர் அறிவித்த விஷயங்களில் இரண்டுமூன்று கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று கைத்தறிக்காக விசேஷ கவனம் செலுத்தக்கூடிய அதிகாரிகளைப் போடவேண்டும் என்பது. உடனடியாக இங்கே அதிகாரிகள் இல்லையா என்று சொல்லலாம். இப்போது இருக்கக்கூடிய பின்னணியில் இதை அமல் நடத்தக்கூடிய அதிகாரம் படைத்தவர்கள் இருக்கவேண்டுமென்பதுதான் அதனுடைய நோக்கம். ஏற்கனவே செய்து வந்திருக்கிறோம் என்று சொல்வது இன்றைய சூழ்நிலை புரியாது; புரிந்துகொள்ள தயக்கம் காட்டுவதாக இருக்கும். இதை அமல்படுத்தக்கூடிய அதிகாரியை இங்கு நாம் ஏற்படுத்த இந்தச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

இரண்டாவது, சில குறிப்பிட்ட ரகங்கள் கைத்தறிக்காக ஒதுக்கப்பட வேண்டுமென்பதும் பிரதமர் அவர்களுடைய அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது புதிதல்ல. இன்றைக்குச் சில துணிகளை கைத்தறிக்காக ஒதுக்கவேண்டுமென்று சொல்வது இப்பொழுது ஏற்பட்ட விஷயமல்ல. 1948-ம் வருஷத்திலேயே மத்திய சர்க்கார் சில குறிப்பிட்ட ரகங்களைக் கைத்தறிக்காக ஒதுக்கவேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால்—நான் என்னுடைய மினிட் ஆஃப் டிசன்டிலே குறிப்பிட்டிருக்கிறேன்—1950, 1958, 1960, ஆகிய வருஷங்களில் தொடர்ச்சியாக இது மத்திய சர்க்காருடைய அறிவிப்பாக இருக்கிறது. இதிலே இருக்கிற நல்ல அம்சமே, மத்திய சர்க்கார் எந்தெந்தத் துணி ரகங்களைத் தனியாக ஒதுக்கவேண்டுமென்று சொன்னார்களோ, அந்த ரகங்களையெல்லாம், அதே வார்த்தைகளைப் போட்டு, கைத்தறிக்கு என்று குறிப்பிட்டு துணிகளை ஒதுக்க வேண்டுமென்ற அந்த நல்ல அம்சத்தை அமுல்நடத்துகிற முறை இந்த மசோதாவிலே இருக்கிறது. அதனைப் பொறுத்தவரையிலே நாம் வற்புறுத்தலாம்.

ஆனால், இரண்டுமூன்று இடங்களிலே கஷ்டம் வருகிறது. நான் மறுப்பிலே அவற்றைக் குறிப்பிடவில்லை. இன்றைக்கு அகில இந்தியாவிலே இருக்கக்கூடிய பஞ்சாலைகளைப் பொறுத்தவரையிலே



1975 அக்டோபர் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

சில அதிகாரங்களை மத்திய சர்க்கார் வைத்திருக்கிறது. அந்த அதிகாரத்திலே தலையிடுகிற அம்சங்கள் இதிலே வருகின்றன. அந்த அம்சங்கள், நேரடியாக மோதக் கூடிய அம்சங்களாக இல்லாமல், நம்முடைய கைத்தறிக்குப் பாதுகாப்பு தரக்கூடிய அம்சங்களாக இருக்கின்ற வகையில் மாற்றுவதற்கு முயற்சி ஏற்படவேண்டும். அப்படி மாற்றுவதற்கான அபிப்பிராயம் மத்தியிலே இருக்குமானால் அதை மாற்றிடத் தயாராக இருக்கவேண்டும்.

நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, தமிழ் நாட்டிலே மட்டுமல்ல, ஆந்திராவிலேதான் அதிகமான விசைத் தறியை வரவிடாமல் தடுக்கிறார்கள். தமிழ்நாட்டிலே 40,000 விசைத் தறிகள் வந்துவிட்டன. அந்த 40,000-ல் பாதி விசைத்தறிகளுக்கு லைசென்ஸ் பெற்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பாதியளவுக்கு எந்தவிதமான உரிமமுமில்லாமல் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பொறுக்குக் குழுவில் நடந்த விவாதத்தின் அடிப்படையிலே செப்டம்பர் மாதம் 1972 ஆம் ஆண்டு யார் யாருக்கு இந்த விசைத்தறிகள் இருந்தனவோ, அவர்களையெல்லாம் ரெகுலரைஸ் பண்ணவேண்டும். அவர்களுக்கெல்லாம் லைசென்ஸ் கொடுத்து, நடத்தும்படியாகச் செய்யவேண்டும். அதற்கு அப்பாற்பட்டு, யாராவது விசைத்தறிகள் வைத்திருப்பார்களானால் அந்த விசைத்தறிகளை ஓடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும், மின்சார இணைப்புகள் கொடுக்காமலிருக்கலாம் என்ற அந்தக் கருத்தைச் சொன்னோம். ஆகவே, 40,000 விசைத் தறிகள் இன்றைக்குத் தமிழ் நாட்டிலேயிருக்கின்றன.

கைத்தறியைப் பொறுத்தவரையிலே எத்தனைக் கைத்தறிகள் இருக்கின்றன என்பதைப் பற்றி இன்றைக்கும் சரியான கணக்கு கிடைக்கவில்லை. அரசாங்கத்தை நான் குறை கூறவில்லை. 1944 ஆம் வருஷத்திலே, 1948 ஆம் வருஷத்திலே ஓரளவுக்கு நல்ல சென்சஸ் இருந்தது. 1952-க்குப் பிறகு ஒவ்வொரு வருஷமும் எடுக்கக்கூடிய சென்சஸிலே பலவிதமான மாறுதல்கள் இருக்கின்றன. ஆகவே, இந்த மசோதாவிலே இருக்கிற நல்ல அம்சம், கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாக்கிற முறையிலே ஒருவர் 10 தறிகள் வைத்திருக்கலாம், மாஸ்டர் வீவராக இருக்கலாம், அல்லது ஒரு தறி வைத்திருக்கலாம்; எப்படி இருந்தாலும் அந்தத் தறிகளைப் பதிவு செய்ய வேண்டும். அப்படி இருக்கிற நேரத்திலே இரண்டு நல்ல அம்சங்கள் வருகின்றன. இரண்டாவதைத்தான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். முதல் அம்சம் என்னவென்றால் 1975-வது

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 27

வருடம் அக்டோபர் மாதமோ, டிசம்பர் மாதமோ, இங்குள்ள கைத்தறிகளின் எண்ணிக்கையை கரெக்டாக நாம் கொடுக்க முடியும்.

இன்னொரு நல்ல அம்சம், தறியிலே பணியாற்றுகிறவர்கள் யாராகவும் இருக்கலாம், மாஸ்டர் வீவர்களாக இருக்கலாம், ஒன்றிரண்டு தனியாக வைத்திருக்கிறவர்களாகவும் இருக்கலாம். அந்த யார் யார் என்ற விவரத்தைத் தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. இன்று தறி எத்தனை என்று கணக்கெடுத்துவிடுவோம். ஆனால், அவர்களுக்கு என்ன பாதுகாப்பு கொடுக்கிறோம்? அது இந்த மசோதாவிலே கொண்டு வரப்படவில்லை. மசோதாவினுடைய தலைப்பிலே பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற அம்சமிருக்கிறது. மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலேயிருந்து கைத்தறியிலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்களையும் சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு ஆகிய பகுதிகளிலேயுள்ள கைத்தறியில் ஈடுபட்டிருக்கக்கூடிய பலருடைய கருத்துக்களையும் கேட்டோம். அவர்கள், அதிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும், அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய துணியினுடைய விற்பனைக்கு உத்தரவாதம் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அந்த இரண்டு அம்சங்களும் இந்த மசோதாவிலே கொண்டு வரப்படவில்லை.

மற்ற மாநிலங்களிலேயுள்ள சட்டங்களிலேயுள்ளதைவிட அதிகமாக இந்த மசோதாவிலே சொல்லியிருந்தால், இது உருப்படியான மசோதாவாக இருந்திருக்கும். கைத்தறி தொழிலாளர்களைப் பாதுகாக்க உதவிகரமாக இருந்திருக்கும். அதிலே சில ஊனங்கள் ஏற்பட்டுவிட்டன.

நான் ஏற்கனவே விசைத்தறியைப் பற்றி சொன்னேன். தமிழ் நாட்டிற்கும் மகாராஷ்டிராவிற்கும் வித்தியாசமிருக்கிறது. மகாராஷ்டிராவிலே கைத்தறி என்று சொன்னால் விசைத்தறிகள் தான். அங்கு பெரிய பல்க் விசைத்தறியாளர்கள் இருக்கிறார்கள். அங்கு விசைத்தறி வைத்திருப்பவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்திருக்கிறார்கள். அப்படி வருகிறபோது 4 விசைத்தறிகளுக்குக் குறைவாக இருக்கின்றவர்களுக்கு, கைத்தறி தொழிலாளர்களுக்கு என்னென்ன பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அந்தப் பாதுகாப்புகளையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே 40,000 விசைத்தறிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. சில நல்ல



1975 அக்டோபர் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அம்சங்கள் சர்க்கார் நடவடிக்கையிலே வந்திருக்கின்றன. கூட்டுறவின் மூலமாக ஏற்கனவே 10 தறி, 5 தறி கொடுப்பது என்ற நல்லமுறையை அனுசரித்திருக்கிறோம்.
So, there is a co-ordinated plan integrating both the powerlooms and the handlooms.
அப்படி ஒரு நிலையை நாம் எடுத்திருக்கிறோம். இது, இந்தக் காலப்போக்கை ஏற்றுக்கொண்டு செய்திருக்கக்கூடிய நல்ல காரியம்.

ஆகவே, இந்தச் சட்டத்திலே, இந்தத் தமிழ்நாட்டிலேயிருந்து விசைத்தறிகளிலே உற்பத்தி செய்கிறார்களென்றால், நாம் தெளிவாக பவர்லூம் புராடக்ட் என்றால் என்ன, கைத்தறி துணி என்றால் என்ன என்று விளக்கமாக இன்னின்ன துணிகளை கைத்தறியிலே உற்பத்தி செய்யலாம் என்று சொல்லியிருக்கிறோம். அதற்கு அப்பாற்பட்டு, கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட துணிகளை மற்ற மில்களிலோ, அல்லது விசைத்தறிகளிலோ உற்பத்தி செய்யக் கூடாது என்று சொல்லிவிட்டு, அப்படி விசைத்தறிகள் உற்பத்தி செய்தால், உற்பத்திகளை வெளி மாநிலங்களுக்கோ, அல்லது வெளி நாட்டிற்கோ ஏற்றுமதி செய்ய அனுமதிக்கலாம். அதற்குச் சர்க்காருடைய அங்கீகாரம் இல்லாமலே, சர்க்காருடைய ஏஜன்ஸி இல்லாமல் போகவேண்டுமென்று விவாதத்திற்குப் பிறகு இந்த ஷரத்தைச் சேர்த்திருக்கிறோம். ஆகவே, இங்கிருந்து உற்பத்தி செய்யக்கூடிய வேறு துணிகள் இருக்குமானால், வெளி மாநிலத்திற்கோ அல்லது வெளிநாட்டிற்கோ ஏற்றுமதி செய்ய உற்பத்தி செய்யலாம்.

சாதாரணமாக அவர்களுக்கு ஒதுக்கப்படாத துணிகளை அவர்கள் உற்பத்தி செய்வதிலே நமக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. ஆனால், கைத்தறிக்கு சேஃப் கார்ட் வைத்திருக்கிறோம். எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. இதை மற்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யவும், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் நாம் உத்தரவாதம் கொடுத்திருக்கிறோம். தமிழ்நாட்டில் 40,000 விசைத்தறிகளும் 5 இலட்சம் கைத்தறிகளும் இருப்பதாகத் தெரிகிறது. அந்த விசைத்தறிகளின் மொத்த உற்பத்தியில் கிட்டத்தட்ட பாதியாவது வருமென்று நினைக்கிறேன்.

ஆகவே, விசைத்தறி வைத்திருக்கிற சிறுசிறு தறியாளர்களைப் பாதுகாப்பதற்கு வழி செய்யவேண்டும். மற்ற மாநிலங்களிலிருந்து பெரிய மில்களிலே உற்பத்தியாகிற துணிகளைத் தடைசெய்யலாம்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 27

ஆனால், விசைத்தறிகளிலே உற்பத்தியாகிற கைத்தறி துணிகளுக் கென்று ஒதுக்கப்பட்ட துணிகள் முழுவதையும் தடை செய்தால் அது அரசியல் சட்டப்படி பாகுபாடு என்ற சந்தேகத்திற்கு இடம் கொடுக்கும். என்னுடைய டிசென்டிங் நோட்டிலே இதைக் குறிப்பிட்டிருக்கிறேன். எப்படி இந்த மாநிலத்திலே உற்பத்தி யாவதை ஏற்றுமதி செய்யச் சில பாதுகாப்புகள் கொடுத்திருக் கிறோமோ, உத்தரவாதம் கொடுத்திருக்கிறோமோ அதேமாதிரி உத்தரவாதம் இல்லாவிட்டாலும் பாதுகாப்பு கொடுத்து, சர்க்கார் ஏஜன்ஸி மூலமாக வேண்டுமானால் அனுமதிக்கிறோம் என்ற நிலை வந்தால் இது தனித் தன்மை வாய்ந்த மசோதா என்ற நிலை ஏற்படும். அரசாங்கம் நல்ல முறையிலே இதனைச் சிந்திப்பார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்து, இன்னொரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். இந்த மசோதாவிலே சில மாறுதல்களை நாம் செய்யவேண்டியிருக்கிறது. நம்முடைய விதிகளைப் பொறுத்தவரையில் நாம் விவாதிக்கிற நேரத்திலே சில மாறுதல்களைச் செய்யவேண்டி நேரிட்டால் மாறுதல் செய்யலாம் என்றிருக்கிறது. சில நேரங்களிலே, தலைப்பையே மாற்றுகிற அம்சங்களையெல்லாம் விதி முறைகளிலே வைத்திருக்கிறோம். சில நேரங்களிலே மாற்றியிருக்கிறோம். நாம் சேல் என்று போட்டிருக்கிறோம். கைத்தறி விற்பனையைப் பற்றி எந்த அம்சமும் இதிலே வரவில்லை. விற்பனைக்காக என்ன செய்கிறோம் என்பதுபற்றி கொஞ்சம்கூட இதிலே வரவில்லை. ஆகவே, நான் திருத்தங்கள் கொடுத்திருக்கிறேன். நாம் தறிகள் எவ்வளவு என்று பார்த்துவிட்டோம், விசைத்தறிகள் எவ்வளவு என்று பார்த்துவிட்டோம்.

(பிற்பகல் 1-00)

கைத்தறியிலே உற்பத்தியாகக்கூடிய சாத்தியம் ஒன்று கூட்டுறவிலே இருக்கிறது. இன்னொன்று தனியார் துறையிலே இருக்கிறது. கூட்டுறவுத் துறையிலே இருப்பதற்கு இன்றைக்கு நம்மிடத்திலே கணக்கு இருக்கிறது. அது மேலும் மேலும் வளரக் கூடிய தன்மை இதிலே இருக்கிறது. ஆனால் கூட்டுறவுத் துறையிலே தேங்கிக்கிடக்கிற ஸ்டாக்கை எப்படி விற்பனை செய்யலாம் என்ற நிலைமையையும் பார்க்கவேண்டும்.



1975 அக்டோபர் 27] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ரிபேட் என்ற முறையிலே 1 கோடியே 30 லட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள். இந்த சப்ளிமெண்டரி பட்ஜட்டிலே கூட மேற்கொண்டு 70 லட்சம் ரூபாய்—1 கோடி அல்ல—அளவிற்கு ரிபேட் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம். இப்படி ஒருவிதமான பாதுகாப்பு செய்கிறோம்.

கைத்தறி துணிகளையெல்லாம் கூட்டுறவுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ இருக்கக்கூடிய துணிகளையெல்லாம் விற்பதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும். சென்னையைச் சுற்றி யிருக்கக்கூடிய வட ஆற்காடு, தென் ஆற்காடு இன்னும் சில மாவட்டங்களிலேயெல்லாம் ஸ்டாக் அதிகமில்லை, ஓரளவிற்கு விற்பனையாகிறது, ஆனால் தெற்கு ஜில்லாக்களில் அப்படி இல்லை. ஏதோ கைத்தறித் தொழிலே நசித்துப் போய்விட்டதாக ஒரு டிஸ்மல் பிக்சர் கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன், ஆனால் தெற்கு ஜில்லாக்களிலே அதிகமாகத் தேங்கிக் கிடக்கிறது, ஸ்டேட் சொஸைடிதான் அவர்களிடமிருந்து வாங்குகிறார்கள். அந்த நேரத்தில் ஸ்டேட் சொஸைடி வாங்க மறுத்துவிட்டால் துணி தேங்கிவிடுகிறது. நாற்பது லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள துணி தேங்கிக் கிடக்கிறது. ஸ்டேட் சொஸைடி 85 சதவிகிதம், 90 சதவிகிதம் வாங்கியது இன்றைக்கு 45 சதவிகிதம் கூட வாங்கவில்லையென்ற நிலைமை இருப்பதால்தான் தேக்கம் ஏற்படுகிறது. சட்டப்படி இதற்கு ஒரு உத்திரவாதம் கொடுத்து சட்டத்திலே இடம் இருக்குமானால் அந்த இடத்தைப் பயன் படுத்திக்கொண்டு—புதிய அதிகாரி வருகிறார், வருகிறார் என்றால் செல்வாக்கு உள்ள அதிகாரியாக இருப்பதால், கைத்தறி நெசவாளர் களுக்கு நூல் வாங்கிக்கொடுக்க ஏற்பாடு செய்கிறார், அதோடு— ஸ்டாக்கை எப்படி விற்பனை செய்வது என்று கவனிக்கக்கூடிய அம்சமும் இருக்கிறது. இந்த மசோதாவினுடைய நோக்கம் நல்ல நோக்கம்.

But in the way the Bill has emerged, the development has become so lopsided.
இதிலே அதிகமான கவனம் கைத்தறிக்கும், கைத்தறி நெசவாளர் களுக்கும் பாதுகாப்பு என்பதைவிட எப்படி நூல் கிடைக்கச் செய்வது, பஞ்சாலைகளின் அதிகாரத்தை எப்படி எடுப்பது என்பதிலேதான் அதிகமாக கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லாமல் இருக்கமுடியாது. தயங்கித்தான் சொல்கிறேன். நீங்கள் கேட்கலாம், நீ மாற்றியிருக்கலாமே என்று. அதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். இந்த அளவிற்காவது

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 அக்டோபர் 27

வந்திருக்கிறதே, வந்திருப்பதில் இன்றைக்கு இருக்கக்கூடிய உறுப்பினர்கள் சொல்கிற ஆலோசனைகளை வைத்து சில திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும். ஒன்று சட்டத்தின்படி மறுப்பு சொல்லமுடியாத நிலை. இந்த நாட்டிலே உள்ள கைத்தறி வளம்பெறவேண்டும், கைத்தறி நெசவாளர்கள் வாழ்க்கை வளம் பெறவேண்டுமென்ற நோக்கத்துடன் துணி தேங்கியிருக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்ற முறையிலே கேட்டுக்கொண்டு இந்த அளவுடன் முடித்துக்கொண்டு கிளாஸ் பை கிளாஸ் டிஸ்கஷன் வரும்போது பாக்கிக் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* சுருக்கமாகப் பேசவேண்டும், இந்த பில்லை இன்றைக்கு முடித்தாகவேண்டும்.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* முடியாமல் போய்விட்டால் தொடர்ந்து நான்காம் தேதி வைத்துக்கொள்ளலாம்.

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* செலக்ட் கமிட்டியிலே விவாதிக்கப்பட்ட ஒன்றுதான், இப்போதே முடிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* நான்காம் தேதி சப்ளிமெண்ட்ரி டிமாண்ட் எடுத்துக்கொள்ளப்படும். 5 ஆம் தேதி 6 ஆம் தேதி எலக்ட்ரிசிடி போர்டு பட்ஜெட் அதன்மீது பேசுவதைக் குறைக்க வேண்டியிருக்கும்.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* 5 ஆம் தேதி எடுத்துக்கொள்ளலாம். இட் ஷுட் நாட் பி ஹஸ்ல்டு த்ரூ. மசோதாக்கள் பொறுத்த அளவிலே ஏற்கனவே திரு. சுப்பிரமணியம் உங்களிடத்திலே சொன்னார்கள். எனக்குச் சந்தர்ப்பம் இல்லை. படித்துவிட்டு ஆலோசனை சொல்ல வாய்ப்பு இல்லை. ஒரு நாளைக்கு 7, 8 மசோதாக்கள் நிறைவேற்றப்படுகின்றன. பத்திரிகைகளிலே கூட வேகமாக மசோதாக்கள் நிறைவேற்றப்படுகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* எந்த வேகமும் இல்லை, அமைச்சர் மூவ் பண்ணியவுடனே இரண்டுபக்கமும் பார்த்து யாரும் பேசுகிறார்களா என்று பார்த்துவிட்டுத்தான் மேற்கொண்டு போகிறோம்.



1975 அக்டோபர் 27]

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* நாங்களும் எதிர்க்கட்சியிலே இருந்திருக்கிறோம். மசோதாக்களில் இவ்வளவு விரிவாகப் போனது கிடையாது. முனிசிபாலிடி பற்றி ஒரு மசோதா என்றால் முனிசிபல் அட்மினிஸ்டிரேஷனைப் பற்றிப் பேசுவது, இண்டஸ்ட்ரி பற்றி ஒரு மசோதா என்றால் இண்டஸ்ட்ரீஸ் அட்மினிஸ்ட்ரேஷன் பற்றிப் பேசுவது என்றால் மசோதாக்களை எப்படி முடிக்கமுடியும் என்பதைப் பார்க்கவேண்டும். பத்திரிகை எழுதியதாகச் சொன்னார்கள். அதை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. அவர்கள் பணக்காரர்களுக்காகச் சொல்கிறார்கள், அதை நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது, அவர்கள் சொல்வதற்காக நாம் பயந்துவிட முடியாது.

THIRU K. T. K. TANGAMANI : I am not supporting the stand of the paper. What I am saying is that sufficient opportunity has not been given. Opportunity means, that is not opportunity for discussion. Opportunity for discussion in the House is one thing. Opportunity for going through the Bill carefully is another matter.

நான் சொல்லமுடியும், என்னுடைய வழக்கம் எப்படியென்றால் மூல மசோதாக்களைப் படித்து கருத்துக்களைச் சேகரித்துத் நான் விளக்கமாகப் பேசமுடியும் அதையெல்லாம் என்றால் இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் செய்யமுடியவில்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* ஆர்டினன்ஸ் வந்து ரொம்ப நாளாகிறது. எனவே அப்போதே கருத்துக்களைப் பார்த்திருக்கலாம். ஹவுஸிலே உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டுத்தான் வோட்டுக்கு விடுகிறோம்.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* ஆர்டினன்ஸ் வந்தபிறகு மசோதா வந்திருக்கிறது. ஆனால் அதை அவசரம் அவசரமாக நிறைவேற்ற வேண்டுமென்று நினைக்கிறார்கள் என்ற கருத்து மக்கள் மத்தியிலே இருக்கிறது. அது இல்லாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டுமென்றுதான் சொன்னேன்.

That is no reflection on the Chair. I can say that when the Bill was taken into consideration all opportunities were given. But because the Members have not applied their mind to the various aspects of the Bill, extraneous things are discussed. Almost

[திரு. கே. டி. கே. தங்கமணி]

all irrelevant extraneous things are discussed and more time is taken on that and not on the Bill under consideration. That shows that the Members have not applied their minds to the Bill because they have not been given that opportunity. Opportunity is one thing and sufficient time is another thing. Certain facilities must be given to the Members. That is what I meant by opportunity.

In the Lok Sabha and other Houses Members devote more time for the Bill. More time is given to them for studying the Bills. Even before the Bill is actually introduced, the Bill is circulated. Sometimes, what happens is, an Ordinance is issued and the Ordinance comes in the form of a Bill. The Bill is introduced and then it is taken into consideration. A Bill must be introduced first and at least two days' time must be given for taking the Bill into consideration. These are all the things that I meant. Otherwise, there is no reflection on the Chair.

THIRU R. PONNAPPA NADAR: So far as the Bills are concerned, we would very much wish that all the Lawyer Members, both in the Ruling Party as well as in the opposition, contribute their learned views. But, in spite of all our best efforts, many of the Members do not put forth their best. That is what we find. It is true that we sometimes depart from the original Bill because incidently, collaterally certain things happen and we have to reply to those collateral proceedings which arise incidentally. I may in this connection request that the Bills need not be hustled through. This being an important Bill and the handloom industry is the major industry and which affects the welfare of Tamil Nadu, it would be proper that sufficient time is given to the Hon. Members who wish to speak. We should also realise that Lawyers as a community or as a class, unless they are paid, they do not bestow sufficient attention. But an exception can be taken by the Lawyer Members who are here and who have more or less abdicated their practice. They can bestow sufficient attention on the Bills and they can contribute their best, so far as the Bills are concerned. With these observations, I conclude, Sir.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, ஒரு பத்திரிகையில் எடிட்டோரியல் வந்ததையொட்டி வந்துவிட்ட விவாதம் இது. என்னைப் பொறுத்தவரையில் அதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. இங்கே பேசும் அங்கத்தினர்கள் பெரும்பாலும்





1975 அக்டோபர் 27] [திரு. செ. மாதவன்]

மசோதாவைப் பற்றி விளக்கம் கூறிப் பேசுவதைப் பார்த்திருக்கிறேன். அந்தந்தப் பிரச்னைகள் வரும்பொழுது மற்றப் பிரச்னைகளைப் பற்றியும் அதிகமாகப் பேசுவார்கள், சிலர் இன்னும் அதிகமாகப் பேசுவார்கள். அவ்வாறு இயற்கையாக நடக்கும். ஆனால் மசோதாவைப் பார்க்காமல், படிக்காமல் பேசினார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த எடிட்டோரியலைப் படித்துப் பார்த்தால் அந்தக் கருத்தே வாதிடப்படவில்லை என்பதைப் போல எழுதியிருக்கிறார்கள். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களேகூட வலியுறுத்திப் பேசினார்கள். அப்படியிருந்தும் எப்படி அந்த ஆசிரியர் அவ்வாறு எழுதினார் என்று புரியவில்லை. வரி போடக்கூடாது, வரிச்சுமை வரும் என்று அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசினார்கள். அப்படியிருந்தும் அங்கத்தினர்கள் படிக்காமல் இருந்துவிட்டார்கள், இந்தக் கருத்தையே எடுக்காமல் பேசிவிட்டார்கள் என்று அந்த ஆசிரியருக்கு எப்படிப் புரிந்தது என்று தெரியவில்லை.

ஆனால் இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் அந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டு, அதற்குப் பதிலும் சொல்லப்பட்டது. இது முற்போக்கான திட்டம், பணக்காரர்கள் அதிகச் சொத்தை வைத்திருக்கும்பொழுது அதில் ஒரு பகுதி அரசுக்கு வர வேண்டுமென்று பதிலும் கூறப்பட்டது. அப்படியிருக்கும்பொழுது அந்த ஆசிரியர் இங்கேயுள்ள அங்கத்தினர்கள் பேசாமலிருப்பதைப்போல எழுதியிருப்பது வேடிக்கையாக இருக்கிறது. இருந்தாலும் நம்முடைய மன்றத்தைப் பற்றி விமர்சிப்பதில் அந்த ஆசிரியருக்கு ஒரு ஆசை. அதற்காக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மத்திய அரசாங்கம் போடும் சட்டத்தைப் பற்றியெல்லாம் எழுதுவதற்கு அச்சப்படும் ஆசிரியர் நம்முடைய மன்றத்திலே பேசப்பட்ட அந்தக் கருத்தைக்கூடப் பேசாததைப்போல கற்பனை செய்து கொண்டு எடிட்டோரியல் எழுதியிருப்பது விசித்திரமான ஒன்றாக இருக்கிறது. நம்முடைய மன்றத்தைப் பொறுத்தவரையில் மன்ற அங்கத்தினர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கருத்து இங்கே பேசப்பட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, ஒரு எக்ஸ்பிளனேஷன். கனம் அமைச்சரவர்கள் மிகவும் சாமர்த்தியமாக எங்களைச் சிக்கலுக்கு ஆளாக்கிவிடுகிறார்கள். ஏதோ முற்போக்குக் கருத்துக்களை நாங்கள் எதிர்த்துக் கொண்டிருப்பது மாதிரி. நாங்கள் முற்போக்குக் கருத்துக்களை எதிர்க்கவில்லை. திட்டவட்ட

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 அக்டோபர் 27

மாகச் சொன்னேன், வரியை அதிகமாகப் பெற வேண்டுமென்று ஆசைப்படுகிறீர்களே தவிர அதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதில்லை. பம்பாய்க்கு ஒரு ரூல் இருக்கிறது என்றால் அது நியாயமான முறையில் இருப்பது என்றால் அதை காப்பி அடிப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் பம்பாயில் இருக்கிற சூழ்நிலை மெட்ராசில் இருக்கிறதா என்று பார்த்துச் செய்ய வேண்டுமென்று சொன்னேனே தவிர, ஏதோ இவர்கள்தான் முற்போக்குக் கருத்துக்களுக்கு ஆதரவு தருகின்றவர்கள் மாதிரியும் நாங்கள் அதற்கு முட்டுக்கட்டை போடுவது மாதிரியும் சொல்லக் கூடாது. சில சமயங்களில் விரிவாகப் பேசுகிறேன் என்று சொல்கிறார்கள். இன்டஸ்ட்ரீஸ்களைப் பற்றிப் பேசும்பொழுது அக்ரிகல்சரைப் பற்றிப் பேசினால் நீங்கள் அப்படிச் சொல்லலாம், ஆனால் இண்டஸ்ட்ரீஸ்களைப் பற்றிப் பேசும்பொழுது இண்டஸ்ட்ரீஸ்களைப் பற்றிப் பேசுகிறோம் என்றால் அது 'இர்ரெலவண்ட்' ஆகாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஒரேயொரு உதாரணத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். காலையிலே கோயம்புத்தூர் ஸ்பெஷல் அதிகாரியைப்பற்றிப் பேச ஆரம்பித்து மத்திய அரசாங்கம் வரையிலே போய், அண்டை மாநிலமான கேரள சர்க்கார் வரை போய் பாண்டிச்சேரி சர்க்கார் வரை சென்று விவாதித்திருக்கிறோம். ஆகவே, இதை நான் அங்கத்தினர்களைக் குறை சொல்ல வேண்டுமென்ற நோக்கத்தில் சொல்லவில்லை. நீண்ட விவாதங்கள் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் பத்திரிகையில் அங்கத்தினர்களுக்கு விவாதிக்கவே தெரியாது என்பதுபோல எழுதியிருப்பதைப் பற்றித்தான் மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** சார், மசோதாவைப்பற்றி நானும் பேசியிருக்கிறேன். விரிவாக, தெளிவாகக் குறிப்பிட்டுப் பேசிய தற்குப் பிறகு அப்படியொரு எடிட்டோரியல் வந்தது எனக்கே ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இந்த விஷயத்தைப் பற்றிக் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் மசோதாவில் கருத்து வேறுபாடு இருக்கலாமே தவிர இதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. குறிப்பிட்ட மசோதாவைப்பற்றி விரிவாகவும், வேகமாகவும் பேசி, எல்லாவற்றிற்கும் பதிலும் கொடுக்கப்பட்டு, கருத்து பரிமாறிக் கொண்டதற்குப் பிறகு அந்த முடிவிற்கு வந்தோம். அப்படியிருக்க இம்மாதிரி எடிட்டோரியல் வந்தது



[டாக்டர் எச். வி. ஹாண்டே]

எனக்கும் வருத்தத்தைக் கொடுக்கும் முறையில்தான் இருக்கிறது. அது எப்படி வந்தது என்று தெரியவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எல்லோரும் ஏகோபித்த முறையில் வருத்தம் தெரிவித்திருக்கிறோம். அந்தப் பத்திரிகையும் தனது வருத்தத்தைத் தெரிவித்து தங்கள் மரபைக் காப்பாற்றிக் கொள்ளும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, இங்கே வந்திருக்கின்ற இந்த மசோதாவைக் குறித்து, கைத்தறி நெசவாளர்களின் பிரச்னையிலே ஈடுபாடு கொண்டவன் என்ற முறையிலே சில கருத்துக்களை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். கைத்தறித் துறைக்குப் பாதுகாப்பு தர வேண்டும் என்பது நெடுகாலமாக இருந்து வருகின்ற கோரிக்கை. அதிலேயும் குறிப்பாக எப்பொழுது பிரதம மந்திரியவர்கள் தமது இருபது அம்சத் திட்டத்திலே கைத்தறி நெசவாளர்களுக்கு . . .

**திரு. என். கே. பழனிசாமி:** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். செலெக்ட் கமிட்டி மெம்பர்கள் பில்லில் பேசக்கூடாது என்று விதியிருக்கிறது. அதை மீறி எல்லோரும் பேசினால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தங்கமணி அவர்கள் பேசும்பொழுது நண்பர் அவர்கள் இதைச் சொல்லியிருக்க வேண்டும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: That position is different. He give a Dissenting note.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியொன்றும் விதியில்லை; செலக்ட் கமிட்டி மெம்பர்கள் பில்லில் பேசக்கூடாது என்று விதி இல்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள், சுப்பிரமணியம் பேச வேண்டாமென்று நண்பர் பழனிசாமி சொன்னதை ஆதரிக்கிறார்களா?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். நம்முடைய விதிமுறையிலே எப்படியிருக்கிறது என்றால் யாராவது ஒருவர் டிசென்டிங் நோட் கொடுத்துவிட்டால் அதை ஆதரித்தோ எதிர்த்தோ அந்த அங்கத்தினரே கூட, அந்த கமிட்டி மெம்பர்கூட பேசலாம். டிசென்டிங் நோட்டே கொடுக்காவிட்டால் சம்பிரதாயப்படி ஜாஸ்தியாகப் பேசுவது கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேசுவது கூடாது என்பதல்ல; ஜாஸ்தியாகப் பேசுவது கூடாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நியாயமான கருத்துக்களை எடுத்துச் சொல்லும்பொழுது அதற்கு உள்நோக்கம் கற்பிக்கும் அளவில் ஆளுங்கட்சி இருப்பது ரொம்ப வருந்தத் தக்கது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** செலக்ட் கமிட்டியில் மெம்பர்களாக இருப்பவர்கள் பேசக்கூடாது என்பதற்கு விதி இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இந்த மசோதா, குறிப்பாக பிரதம மந்திரி அவர்கள் 20 அம்சப் பொருளாதார திட்டத்திலே கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு தருகின்ற ஒரு திட்டத்தைச் சேர்த்திருக்கின்ற வேளையில் வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு விளக்கம் சொல்கிறேன். ஒரு பில் செலக்ட் கமிட்டிக்குப் போகும் நேரத்திலே செலக்ட் கமிட்டியில் யார் யார் உறுப்பினர்களாக இருக்கிறார்களோ அவர்கள் அது செலக்ட் கமிட்டிக்குப் போவதற்கு முன்பே பேசக்கூடாது. அவ்வளவுதான் மரபே தவிர செலக்ட் கமிட்டிக்குப் போன பிறகு பேசக்கூடாது என்ற முறை இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** மெத்த நன்றி. இந்த மசோதாவிலே இரண்டு அம்சங்கள் குறிப்பாக அடங்கியுள்ளன. ஒன்று, கைத்தறித் துறைக்கு என்று சில ரகங்களை ஒதுக்கி, விசைத்தறிகளோ ஆலைகளோ அவற்றை உற்பத்தி செய்யக்கூடாது; கைத்தறியில் மட்டும்தான் உற்பத்தி செய்யலாம் என்ற ஒரு பாதுகாப்பு. இன்னொன்று, ஆலைகளின் நூல் உற்பத்தி, விநியோகம் இவைகளைப் பற்றிய கட்டுப்பாடுகள். இந்த இரண்டு அம்சங்கள் இதிலே இருக்கின்றன. இந்த இரண்டு அம்சங்களும் வரவேற்கத் தக்கவை தான் என்றாலும் கைத்தறித் துறைக்குப் பாதுகாப்பு கொடுப்பது என்பதைவிட அந்த ஆலைகளுக்குக் கட்டுப்பாடு என்பது அகில இந்தியப் பிரச்னையாக வருவதற்கு இடமுண்டு. திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல.

என்னைப் பொறுத்த வரையில் எந்தக் காரணத்தைக் கொண்டும் சில ரகங்களைக் கைத்தறித் துறைக்கு மட்டுமே ஒதுக்க வேண்டும் என்பது எந்தக் காரணத்தினாலும் ஒத்திப்போட முடியாத ஒன்று.



ஆகவே, வேறு எந்தச் சிக்கலும் இதிலே இடையூறு செய்து இதைத் தாமதப்படுத்த அனுமதித்துவிடக் கூடாது என்பதுதான் எனக்கிருக்கிற அக்கறை. ஏற்கெனவே, ஒரு கருத்து சொல்லப் பட்டது. இதை இரண்டாகப் பிரித்து தனித்தனியே வந்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும், ஒன்றாலே இன்னொன்று தடைப் பட்டு விட்டது. தாமதப்பட்டுவிட்டது என்று இல்லாமல் மெய்யாகவே கைத்தறித் துறைக்கு பாதுகாப்பு கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். இருந்தாலும் இரண்டும் சேர்ந்து ஒன்றாக வந்திருப்பதால் நான் ஒன்றை அரசிடம் கேட்டுக் கொள்வேன். இந்த மசோதா சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் வந்தது, இங்கே சமர்ப்பிக்கப்பட்டது. பிறகு சிலகாலம் விவாதிக்கப்பட்டு பிறகு சிலகாலம் நின்று மீண்டும் வந்திருக்கிறது. இது மத்திய அரசின் ஒப்புதலுக்குச் செல்ல வேண்டும். நான் அரசைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், எந்தக் காரணத்தைக் கொண்டும் இதிலே அரசியலைப் புகுத்தக் கூடாது என்று மெத்தப் பணிவன் போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் அரசியலைப் புகுத்தும் ஆர்வம் வரும் நேரம். எனவே, அரசியலை எந்தக் காரணத்தைக் கொண்டும் புகுத்தாமல் எப்படியும் கைத்தறி நெசவாளர்களுக்கு, கைத்தறி தொழிலுக்கு ரகங்களைப் பொறுத்து பாதுகாப்பு விரைவில் கிடைக்க முயற்சிக்க வேண்டும். அதற்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அந்த வகையிலே செய்து எந்தக் காரணத்தைக் கொண்டும் இதிலே மத்திய அரசாங்கத்தோடு மோதுவதைப்போல, மத்திய அரசாங் கத்திற்கு எதிராகப் பேசுவதற்கான வாய்ப்பைப்போல பயன் படுத்தக்கூடாது. அந்த எண்ணம், அந்த டென்டென்சி வந்து விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். காரணம், 5 லட்சம் கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்வு இதிலே பொதிந்திருக்கிறது. இதை அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது.

கைத்தறிக்கு என்று பல ரகங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசு ஒதுக்கக் கருதியுள்ள ரகங்களைக் கூட புதிதாகச் சேர்த்திருக்கிறார்கள். 'லோ பிக்; லோ ரீட்' துணி போன்ற வற்றைச் சேர்த்திருக்கிறார்கள்.

இதற்கிடையில் விசைத்தறிகள் தமிழ் நாட்டில் அதிகரித் திருக்கின்றன. 23,000 விசைத்தறிகள் அன்-ஆதரைஸ்டாக இருக்கின்றன. ஏற்கனவே கொஞ்சம் காலம் தாழ்த்திவிட்டோம். முன்பே மத்திய அரசு உத்தரவை வைத்து நடவடிக்கை எடுத்திருக்கலாம். கேரள அரசு அவசரச் சட்டம் போட்டு

'கிரேப்' துணிக்குச் சில பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அதையும் மீறி சில காரியங்கள் நடந்தன. ஈரோடு, திருப்பூரில் விசைத்தறிகளில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை கேரளத்திற்கு எடுத்துச் சென்று விற்கும் நிலைமை வந்தது. கேரள அரசினர் உடனடியாக என்ன செய்தார்கள்? சில வியாபாரிகள் வைத்திருந்த விசைத்தறித் துணி ஸ்டாக்கைப் பறிமுதல் செய்தார்கள். இதனால் இங்கிருந்து விசைத்தறித் துணி அங்கு போவது நின்று விட்டது. அந்த மாதிரி நாமும் நடவடிக்கை எடுத்திருக்கலாம். இங்கும் வெளியே இருந்து விசைத்தறித் துணிகள் வருகின்றன. இப்போது காலம் கடந்து விட்டது.

இந்த மசோதா விரிவான மசோதாவாக வந்திருக்கிறது. இதன் பயன் முழுமையாகக் கிடைக்கும் அளவுக்குப் பார்த்துக் கொள்ள வேண்டும். மத்திய அரசு கூட சமீபத்தில் விசைத் தறியில் உற்பத்தி செய்யப்படும் துணிகளுக்கு எக்ஸைஸ் வரி போட்டார்கள். விசைத்தறித் துணியின் போட்டி ஓரளவு குறைய வழி செய்தார்கள். கைத்தறிப் பாதுகாப்புக்கும் சில ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது ஒரு மாற்றம்; தமிழ் நாட்டில் மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. வேளாண்மைக்கு அடுத்தபடியாக கைத்தறி முக்கியமான தொழில். ஆகவே, இதற்குப் பாதுகாப்பு வேண்டும். அதற்கு உறுதியான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஒரு சிக்கல் இருக்கிறது. கைத்தறி என்று சொல்லும்போது அதன் நிலை நம்முடைய மாநிலத்திற்கும், வேறு மாநிலங்களுக்கும் இடையில் பெருத்த அளவு வேறுபடும். மகாராஷ்டிராவில் பவர் லூம்ஸ் அதிகமாக இருக்கின்றன. அதிலே பல தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களும் பாதுகாக்கப்பட வேண்டும். பவர் லூம் உற்பத்தியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தால் அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே, மற்ற மாநிலங்களோடு பாராது நம்முடைய மாநிலத்தில் எப்படி இதை நிறைவேற்றுவது என்று பார்க்க வேண்டும்.

